பதினொராந் திருமுறைத்திறன்

டாக்டர்
வெ. சு. அழகப்பன்

பதினொராந் திருமுறைத் திறன்

தமிழாகரர். டாக்டர். வெ. சு. அழகப்பன்
எம். ஓ. எல், எம். லிட், பி. எச் டி,
அழகப்பா பல்கலைக் கழகம், காரைக்குடி.

❋


வெளியீடு:
கண்ணம்மை பதிப்பகம்,
8-ப. அ. லெ. தெரு,
காரைக்குடி - 623 001.

BIBLIOGRAPHICAL DATA

Title of the book	:	"PATHINORAM THIRUMURAI THERAN"
Author	:	Dr. V. S. ALAGAPPAN, M. O. L. M. Litt., PhD., Alagappa University, KARAIKUDI - 3.
Publisher	:	KANNAMMAI PATHIPPAGAM, 8 P. A. L. Street, KARAIKUDI-1.
Language	:	Tamil
Edition	:	First
Date of Publication	:	March, 1987
Paper used	:	Grean Wave 56 GMS
Size of the book	:	21 x 14 cms.
Printing Types used	:	10 Pt.
Number of Copies	:	700
Number of Pages	:	352 + 14
Binding	:	Card Board
Printer		Madras Ripon Press, Pudukkottai.
Subject	:	LITERARY CRITICISM.
Price	:	Rs. 40/-

காணிக்கை

அண்ணாமலைப் பல்கலைக்கழக நிகழ்நிலைத் துணைவேந்தர்
பண்டிதமணி-தமிழ்ச்செம்மல்-பேராசிரியர்
உயர்திரு லெ, ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்களுக்கு



"அண்ணா மலையின்" தூணாய்
அவர்தம் குடிக்கும் பூணாய்,
தன்னலம் துறந்த சீலர்
தகைசால் இராம நாதர்
பன்னலம் அன்பர் கட்கே
பரிவுடன் செய்யும் ஆசான்
நன்னல ஆட்சி வல்லார்
நற்றாள் வைப்பாம் இந்நூல்.

பொருளடக்கம்

நன்றியுரை

"பதினொராந் திருமுறைத்திறன்" - என்ற இந்த ஆய்வேடு "டாக்டர்" பட்டத்திற்காக மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்கு யான் உய்த்ததாகும். இதனை ஏற்றுப் பட்டம் நல்கி நூலாக வெளியிட இசைந்த பல்கலைக் கழகத்தாருக்கு எனது நன்றியைப் புலப்படுத்திக் கொள்ளுகிறேன்.

இத்தலைப்பை நல்கி, ஆய்வு செய்யப் பெரிதும் தூண்டியும் கட்டுரைகளைப் பார்த்து நெறிப்படுத்தியும் மிகவும் உதவிய முதுபெரும் புலமைச் சான்றோரான செம்மல், டாக்டர். வ. சுப, மாணிக்கனாருக்கு எனது இதய நன்றி. ஏட்டை உய்க்கும் நேரத்து நவ்லுதவிகள் செய்து, ஆதரித்த அறிஞர் முனைவர் ச. வே. சுப்பிரமணியனாருக்கும் என் நன்றி.

நான் மாணவனாக இருந்தபோதும், ஆசிரியனாக வளர்ந்த போதும் ஆய்வு நூல்கள் வெளியிட்டபோதும் என்னைத் தாங்கி 'அன்னையிலும் சாலப்பரிந்து' பற்பல உதவிகள் செய்த என் நெஞ்சு நிறைந்த பேராசிரியர் உயர்திரு. லெ ப. கரு. இராம நாதன் செட்டியார் அவர்களுக்கு இந்நூலைக் காணிக்கையாக்க எண்ணி, வேண்டிய போது, இசைந்து வாழ்த்தினார்கள். அன்னாருக்கு எனது நன்றி உரியது.

இந்நூலுக்கு ஓர் அணிந்துரை வேண்டி எங்கள் அழகப்பா பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர். (திருமதி) இராதா தியாகராசன் அவர்களைக் கேட்டபோது, அவர்கள் உவந்து ஓராய்வு 'நூன்முகம், தந்துதவினர். கல்விப் பணியில் நேரிதாகத் தலைநிற்கும் அவர்கட்கு எனது மனமார்ந்த நன்றி

மு. வ அவர்கட்குப் பின் முனைந்து பைந்தமிழ் வளர்க்கும் சான்றோர் டாக்டர். சி பாலசுப்பிரமணியனார் ஆவர். சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்துறைத் தலைவரான அவரது அணிந்துரை இந்நூலுக்கு அணியாகிறது. "ஆய்வுக்கு ஆய்வுரை" தந்த அப்புலவர் பெருமகனாருக்கு எனது நன்றி உரியது.

எனது கல்விப் பணிகளையெல்லாம் கோவைப் படுத்திய எனது பேராசிரியர். திரு. கா. முருகப்பனார் எம். ஏ, எம்ஃபில் அவர்களுக்கும் என் நன்றி. இவ்வேடு தட்டச்சில் இருந்தபோது அதனை ஒப்பு நோக்கி, சிற்சில உதவிகள் செய்த எனது இளைய நண்பர் பலரையும் இந்த வேளையில் நினைந்து நன்றி பாராட்டுகிறேன்.

இந்நூல் தட்டச்சாக இருந்தபோதும், அச்சில் நூலாக உருவானபோதும் எழுத்தெழுத்தாகப் பார்த்து அச்சுத் திருத்தியும் மற்றும் வேண்டும் உதவிகள் செய்தும் என் உள்ளத்தில் இடம் கொண்டிருப்பவர் இராமசாமி தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் திரு. நா. சுப்பிரமணியன் ஆவார். அவரது புலமை, அடக்கம், உதவும் உள்ளம் இவை எவராலும் பாராட்டத்தகும், அன்னாருக்கும் எனது உள்ளத்து நன்றி உரியது.

இந்நூலை நல்ல முறையில் அச்சிட்டுள்ள புதுக்கோட்டை மதராசு ரிப்பன் பிரசு மேலாளர் திரு காசிவிசுவநாதன் அவர்களைப் பாராட்டி நன்றி கூறுகிறேன். எனது முந்திய நூல்களை வெளியிட்ட கண்ணம்மை பதிப்பக வெளியீடாக, இந்நூலும் மலர்கிறது.

தமிழ்த்துறை ஆய்வாளர்களுக்கும், சமய ஆர்வலர்களுக்கும் பயன்தரும் இந்நூல், எனது ஏனைய நூல்களைப் போல தமிழ் மக்களிடம் நல்ல வரவேற்பினைப் பெறும் என நம்புகிறேன்.

காரைக்குடி
30—3—87

அன்பன்
வெ. சு. அழகப்பன்

நூன் முகம்

டாக்டர் (திருமதி) ராதா தியாகராாசன், எம். ஏ., பி எச். டி.,
துணை வேந்தர், அழகப்பா பல்கலைக் கழகம்,
காரைக்குடி - 4.

மெய்வகை காட்டி உய்வகை நல்கும் சைவ நன்னெறிக்குக் கண்ணெனச் சிறந்த திருமுறைகள் பன்னிரண்டனுள் பதினொன்றைப் பாங்குறத் தொகுத்து, மறை நான்கும் தொகுத்த வான்புகழ் வியாசமா முனியே போலப் புகழுற்று விளங்குபவர் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பிகள். அவர் செவ்விதின் யாத்த செந்தமிழ்ப் பனுவல்களையும், மற்றும் பன்னீராசிரியர் யாத்த பாநலஞ்சேர் சிற்றிலக்கியங்களையும், சேரமான் பெருமானுக்குத் திருவாலவாயுடையார் விடுத்த திருமுகப் பாசுரத்தையும் கொண்டிலங்குவது பதினொராந் திருமுறை.

இத்திருமுறை சிவபரம் பொருளின் திருவருட்டிறத்தைத் தோத்திர முறையிலன்றிப் பிரபந்த நெறியில் பேணிப் பரவும் பெருந்தமிழாகும். பண்ணாரின்றமிழால் பரமனைப் பாடிப் பரவுவது தேவாரத் திருமுறைகளின் பண்பென்றால், அப்பரம் பொருளின்பாற் பெறும் சிவானுபவப் பெரும்பேற்றை உள்ளம் நெக்குருக, ஊனெலாம் குழைய உவந்துவந்து பாடுவது திருவாசகத் திருக்கோவைத் திருமுறைகளின் சீர்மை யென்றால், யாப்பு வண்ணம் பற்பலவும் கோப்புற வமைத்து, அணிநல முறுத்தி, அகப்பொருள் புறப்பொருட்டுறைகள் அமைய, நூலமைப்பிற் சிறந்து, சைவப் பேரிலக்கியங்களாகப் பொலிவன, பதினொராந் திருமுறையில் இலங்கும் நலங்கொள் பனுவல்கள் ஆகும்.

பன்னிரு திருமுறையினுள்ளும் ஒவ்வோர் ஆசிரியர் யாத்த தீந்தமிழ்ப் பாடல்கள் மும்மூன்று திருமுறைகளாகத் தொகை பெற்றனவும் உண்டு; பற்பல ஆசிரியர் யாத்த அரும்பெறற் பாக்கள் ஒரு திருமுறையாகத் தொகை பெற்றனவும் உண்டு ஒன்பதாந் திருமுறையும் பதினொராந் திருமுறையும் இவ் விரண்டாம் வகையின. அவற்றுள், ஒன்பதாந் திருமுறை திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் என இசைத் தமிழ்த் தொகையாக அமைய, பதினொராந் திருமுறை யொன்றே இசைத் தமிழும் இயற்றமிழுமான பனுவல்களைக் கொண்டு விளங்கு கின்றது. முதற்பதிகம் பாடிய முழுதுணர் ஞானத்துக் காரைக் காலம்மையார் பாடிய பதிகமிரண்டும் இசைத்தமிழ்; ஏனைய இயற்றமிழ்.

இத்தகு சிறப்பு வாய்ந்த திருமுறையை ஓதி மகிழ்வார் பலராயினும், உய்த்துணர்ந்து ஆய்ந்து திளைப்பார் சிலரே யாவர். அச்சிலருள்ளும், டாக்டர் வெ. சு. அழகப்பன் அவர்கள் அத்திருமுறை முழுவதையும் ஒரு முறையாக உற்று நோக்கி, அதன் கவிதை நலன்களைப் புலப்படுத்துரைக்கும் ஆய்வு நூல் ஒன்றைத் தமிழுலகிற்குத் தருகின்றார். இந்நூல் ஏழியலாக நடந்து இத்திருமுறையின் அரும் பொருள்களைத் தெரிந்துரைக்கின்றது.

பதினொராந் திருமுறைக்கண் உள்ள பாடல்கள் ஒரு தொகையாயினமைக்கு, அவை பதிகங்களாக வன்றிப் பனுவல்களாக அமைந்தவையே ஏதுவென்று இத்திறனாய்வாளர் கண்டுரைத்தல் சிறப்புடைத்து. மற்றும் அவர், முதற் பதினொரு திருமுறைகளையும் தொகுத்தோர் நம்பியாண்டார் நம்பிகளே என்று சான்று காட்டி வலியுறுத்தலும், இத்திருமுறையின் ஆசிரியர்கள் வாழ்ந்த காலங்களை ஆய்ந்து தெளிவுபடுத்தியிருத்தலும் போற்றத்தக்கன.

இத்திருமுறை யாசிரியர்கள் காலத்திற்கு முன் இல்லாத பதினெண் வகைச் சிற்றிலக்கியங்கள் இவர் தம்மாற் பாடப் பெற்றன என்பதால், இத்திறனாய்வாளர் அச்சிற்றிலக்கியங்களின் அமைப்பு, யாப்பு, பொருள், போக்கு, நடை முதலியவற்றை ஆய்ந்து, இந்நூல்களின் ஆசிரியர்கள் புது நூல் பாடினும், பழந் தமிழ் நூற் கருத்துக்களை ஒரோவழித் தழுவிப் பின்னூலாசிரியரும் பின்பற்றுமாறு வழிகாட்டி, இலக்கியத் தொடர்ச்சி என்னும் இழையறாது, தொடையறாப் பெரும் பனுவல் யாத்துள்ளமையைக் கண்டு காட்டியுள்ளமை பாராட்டற் பாலதாகும்.

சங்க காலத்திற் பயிலாத கட்டளைக் கலித்துறை இத்திருமுறையில் மிகுதியும் பயிலுதலையும், தேவபாணி என்பது கலிப்பாவான் அமைந்து, பண்ணும் தாளமும் பெற வேண்டியிருப்ப, இத்திருமுறையில் நக்கீர தேவர் பாடும் பெருந்தேவபாணி ஆசிரியப் பாவான் அமைந்து இயற்றமிழ்ப் பாவாகவே உள்ள புதுமையையும், சங்க காலத்திற் பயிலாத அகத்துறைகள் திருக்கோவையாரை ஒட்டி இத்திருமுறையில் பாடப் பெறுதலையும் இவ்வாய்வாளர் எடுத்துக்காட்டுதல், அவரது நுழை நோக்கைத் தெரிவிப்பதாகும்.

தமிழ்நூற் பரப்பில் சிற்றிலக்கியக் காலம் தோன்றுதற்கு முன்னே, சமய குரவர்க்கு முன்னும் பின்னுமாக வாழ்ந்திருந்து, சங்க காலத்திற்கும் இடைக் காலத்திற்கும் பாலமிட்டதே போல், சிற்றிலக்கியச் செல்வமாக, சைவ சமய நெறியின் கருவூலமாக, சேக்கிழாருக்கு முன்னே, சிவனடியார்களின் வரலறுகளைத் தெரிந்துரைத்த வரலாற்றுப் பேழையாக நூல்களை அருளிய பதினொராந் திருமுறை ஆசிரியர்தம் இலக்கியக் கொடையின் அருமை பெருமைகளை இத்திறனாய்வின் வாயிலாக அறியத் தந்த டாக்டர் வெ. சு. அழகப்பன் அவர்களைப் பாராட்டி மகிழ்கின்றேன்.

ராதா தியாகராசன்.

[illegible]

டாக்டர். சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ. எம் லிட், பிஎச். டி,
பேராசிரியர் - தலைவர் - தமிழ் மொழித் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை - 5.

அணிந்துரை

ஏழு இயல்களும் முந்நூற்று ஐம்பத்திரண்டு பக்கங்களும் கொண்ட இவ் ஆய்வு நூல், இது காறும் ஆராய்ச்சி செய்யப் பெறாத ஒரு புதிய பொருளில் அமைந்துள்ளது. முன்னுரையில் ஆசிரியர் நூற்பொருள் குறித்து முன்னூல் ஆய்வுகளைப் புலப் படுத்தியுள்ளார். ஆய்வின் நோக்கத்தினையும் ஆய்வுப் பாகு பாட்டினையும் குறிப்பிட்டு, பதினோராம் திருமுறையின் அமைப் பினையும், சிறப்பினையும் பற்றி விளங்கக் கூறுகின்றார். ஆசிரியர் வரிசையினைப் புதுமுறையாகக் கொண்டுள்ளதற்குக் காரணத் தையும் இவ் ஆசிரியர் காட்டியுள்ளார்.

"பதினோராந் திருமுறையின்" ஆசிரியர் வரலாறும் காலமும், என்பது இரண்டாவது இயலாகும். ஆசிரியர்களுள் நக்கீரர், கல்லாடர், கபிலர், பரணர் எனச் சங்கப் புலவர் பெயர் கொண்ட. திருமுறையாளர்கள் அச்சங்கப் புலவர்களினின்றும் வேறானவர் கள் என்று கூறி, அதற்குரிய காரணங்களையும் புலப்படுத்தி, அவர்தம் வரலாறுகளையும் காலங்களையும் ஆய்ந்து காட்டி யுள்ளார். பட்டினத்தார் மூவர் எனக்கூறித் திருமுறைப் பட்டினத்தார் வரலாற்றை விளங்கக் கூறியுள்ளார்.

மூன்றாம் இயலில் திருமுருகாற்றுப் படையைச் சங்ககால நக்கீரரே இயற்றினார் என்பதற்கான காரணங்கள் தரப் பட்டுள்ளன. யாப்பு முறையில் அமைந்துள்ள வேறுபாடுகள் எல்லாம் விளங்கக் கூறப்பட்டுள்ளன.

நான்காம் இயலில், திருமுறை ஆசிரியர்களில் எந்தெந்த ஆசிரியர் யார் யாரைப் பின்பற்றிப் பாடுகின்றார் எனவும், இவர்கள் கருத்தைப் பின்வந்த பெருமக்களுள் எவரெவர் எக்கருத்தை எவ்வெவ் வகையில் ஆளுகின்றனர் என்றும் காட்டியுள்ளார்.

ஐந்தாவது இயல் அகத்திணை, துறை, பற்றிய செய்தி களைக் கொண்டு அமைந்து இந்நூலுக்கு அழகு சேர்க்கிறது எனலாம்.

டாக்டர். சி. பாலசுப்பிரமணியன், எம். ஏ. எம். லிட். பி. எச். டி,
பேராசிரியர் - தலைவர் - தமிழ் மொழித் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை - 5.

அணிந்துரை

ஏழு இயல்களும் முந்நூற்று ஐம்பத்திரண்டு பக்கங்களும் கொண்ட இவ் ஆய்வு நூல், இது காறும் ஆராய்ச்சி செய்யப் பெறாத ஒரு புதிய பொருளில் அமைந்துள்ளது. முன்னுரையில் ஆசிரியர் நூற்பொருள் குறித்து முன்னூல் ஆய்வுகளைப் புலப் படுத்தியுள்ளார். ஆய்வின் நோக்கத்தினையும் ஆய்வுப் பாகு பாட்டினையும் குறிப்பிட்டு, பதினோராம் திருமுறையின் அமைப் பினையும், சிறப்பினையும் பற்றி விளங்கக் கூறுகின்றார். ஆசிரியர் வரிசையினைப் புதுமுறையாகக் கொண்டுள்ளதற்குக் காரணத் தையும் இவ் ஆசிரியர் காட்டியுள்ளார்.

''பதினோராந் திருமுறையின்'' ஆசிரியர் வரலாறும் காலமும், என்பது இரண்டாவது இயலாகும். ஆசிரியர்களுள் நக்கீரர், கல்லாடர், கபிலர், பரணர் எனச் சங்கப் புலவர் பெயர் கொண்ட. திருமுறையாளர்கள் அச்சங்கப் புலவர்களினின்றும் வேறானவர் கள் என்று கூறி, அதற்குரிய காரணங்களையும் புலப்படுத்தி, அவர்தம் வரலாறுகளையும் காலங்களையும் ஆய்ந்து காட்டி யுள்ளார். பட்டினத்தார் மூவர் எனக்கூறித் திருமுறைப் பட்டினத்தார் வரலாற்றை விளங்கக் கூறியுள்ளார்.

மூன்றாம் இயலில் திருமுருகாற்றுப் படையைச் சங்ககால நக்கீரரே இயற்றினார் என்பதற்கான காரணங்கள் தரப் பட்டுள்ளன. யாப்பு முறையில் அமைந்துள்ள வேறுபாடுகள் எல்லாம் விளங்கக் கூறப்பட்டுள்ளன.

நான்காம் இயலில், திருமுறை ஆசிரியர்களில் எந்தெந்த ஆசிரியர் யார் யாரைப் பின்பற்றிப் பாடுகின்றார் எனவும், இவர்கள் கருத்தைப் பின்வந்த பெருமக்களுள் எவரெவர் எக்கருத்தை எவ்வெவ் வகையில் ஆளுகின்றனர் என்றும் காட்டியுள்ளார்.

ஐந்தாவது இயல் அகத்திணை, துறை, பற்றிய செய்தி களைக் கொண்டு அமைந்து இந்நூலுக்கு அழகு சேர்க்கிறது எனலாம்.


'சமயக் கருத்துகள்' என்னும் ஆறாவது இயல், பெரும்பயன் நல்கும் பகுதியாகும். இவ்வியலில் தெய்வங்களைப் பற்றியும் புராணங்களைப் பற்றியும் வரும் கருத்துகள் தொகுத்துரைக்கப் பட்டுள்ளன. மேலும் இவ்வியலில் இறைத்தத்துவம், அடியார் தத்துவம், உலகியல் தத்துவம் முதலியன விளக்கப்பட்டுள்ளன.

முடிவுரைப் பகுதி ஆறு இயல்களிற் கண்ட ஆராய்ச்சி முடிவு களைத் தொகுத்துச் சுருங்கக் கூறுகின்றது.

புதிய பொருள் பற்றிச் சிறந்த முறையில் ஆய்வு செய்து நூலாக வெளியிடும் பேராசிரியர் டாக்டர் வெ. சு. அழகப்பனாரின் அறிவுத்திறனும், நன்முயற்சியும், பாராட்டத்தக்கன. இது போலும் பயனுள்ள நூல்கள் பலவற்றை ஆசிரியர் வருங்காலத்தில் உருவாக்கித் தமிழ்கூறு நல்லுலகிற்கு அளிப்பாராக! இவரது நன் முயற்சிக்கு எனது வாழ்த்துக்கள்!

சி. பாலசுப்பிரமணியன்

21—3—87



திருநாரையூர் நம்பியாண்டார் நம்பிகள்

குறுக்க விளக்கம்

திருவிர. ம. மாலை	திருவிரட்டைமணிமாலை
அற்பு	அற்புதத்திருவந்தாதி
பொன் வண்ணம்	பொன்வண்ணத்தந்தாதி
திருவாரூர். மு. கோவை	திருவாரூர் மும்மணிக் கோவை
ஞான உலா	திருக்கைலாய ஞான உலா
கயி, கயிலை	கயிலை பாதி காளத்திபாதி அந்தாதி
திரு ஈங்கோய்	திரு ஈங்கோய்மலை எழுபது
திரு வ. மு. கோவை	திருவலஞ்சுழி மும்மணிக் கோவை
திருவெழு	திருவெழு கூற்றிருக்கை
பெருந்தேவ	பெருந்தேவபாணி
கோ. பிர., கோபப்பிர	கோபப்பிரசாதம்
முரு, முருகு	திருமுருகாற்றுப்படை
கோயில்	கோயில் நான் மணிமாலை
திருக்கழு. மு. கோவை	திருக்கழுமலமும்மணிக்கோவை
திருவிடை. ம. கோவை	திருவிடைமருதூர் மும்மணிக்கோவை
திருவேகம்	திருவேகம்பமுடையார் திருவந்தாதி
திருவொற்றி	திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது
திருநாரை வி. திரு ம. மாலை	திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை
கோயில். திரு. ப. வி.	கோயில் திருப்பண்ணியர் விருத்தம்
திரு. திரு. அ.	திருத்தொண்டர் திருவந்தாதி
ஆ. பி. திரு. அ.	ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி
ஆ. பி. திரு. கோவை	ஆளுடைய பிள்ளையார் திருமும் மணிக் கோவை
ஆ. பி. திருஉலா	ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை
ஆ. பி. கலம்பகம்	ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்
திருவேகா	திருவேகாதசமாலை
பதி	பதிற்றுப்பத்து
நெடுநல்	நெடுநல் வாடை
பு	புறநானூறு
அகம்	அகநானூறு
சிவ. திரு. அந்தாதி	சிவபெருமான் திருவந்தாதி
சிவ. திரு. இர. மாலை	சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை
கலம்பகம்	ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்

முன்னுரை

சைவத் திருமுறைகள் சமய நூலாக இருப்பினும் இலக்கிய அன்பர்கட்கு நல்விருந்தளிக்கும் நலஞ்சான்றவை. தமிழ்க் காப்பியங்கள் பலவும் சமயச் சார்பின. சிற்றிலக்கியங்கள் பல வற்றின் தலைமகன் இறைவனாகவே இருக்கக் காணலாம். தல புராணங்கள் பல இறைமையைப் பேசுவன. ஆகவே, சமய இலக்கியங்கள் தமிழைப் பொறுத்தமட்டில் பெரு அளவின எனலாம்.

முன்னாய்வுகள் :

பதினொராந்திருமுறை பல பாடல்களைக் கொண்ட நூல்கள் பலவற்றால் ஆன தொகை நூல். ஆகவே, தனித்தனி நூல் களையே பலர் எடுத்து ஆய்ந்தனர்.

இத்தொகை நூலில் திருமுருகாற்றுப்படை தலைமை இடம் பெற்றுள்ளதனை அறிவோம். எனவே, அதனைப் பற்றிய ஆய்வுகளே பெரும்பாலும் வெளிவந்துள்ளன.

உ. வே. சாமிநாதையர். தாம் பதிப்பித்த பத்துப் பாட்டின் ஆசிரியர் வரலாற்றில் நக்கீரர் பற்றிக் கூறியுள்ள கருத்துக்களில் சில ஆய்வுக் குறிப்புண்டு. வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் பதிப்பித்த பத்துப் பாட்டு ஆசிரியர் வரலாற்றில் நக்கீரர் பற்றிய செய்திகள் உண்டு. ''பத்துப் பாட்டு ஆராய்ச்சி'' என்ற நூலில் டாக்டர் இராசமாணிக்கனார், நக்கீரர் இலக்கியச் செவ்வி, காலம் பற்றி மொழிந்துள்ளார். ''வழி காட்டி'' என்ற நூலில் கி. வா. ச. சில கருத்துக்களை வழங்குவர். எஸ். வையாபுரிப் பிள்ளை, ''இலக்கிய தீபம்'' என்ற நூலில் நக்கீரர் காலம், வரலாறு பற்றி அறுதியிடுவர். அவர் கருத்துப்படி திருமுருகாற்றுப்படை சங்க காலமில்லை என்பதாம்.

''பெறலரும் பரிசில்'' என்ற நூலில் வேங்கடராமச் செட்டியார் இலக்கியச் செவ்வியையும் நக்கீரர் திறமையையும் காட்டியுள்ளார். டாக்டர் துரையரங்கனார், ''அன்பு நெறியே தமிழர் நெறி'' என்ற நூலில், நக்கீரரின் இலக்கிய இயல்புகளைக் காட்டிச் செல்வர். ச. தண்டபாணி தேசிகர், ''நக்கீரர்'' என்ற தம் நூலில் திருமுருகாற்றுப்படை சங்ககாலம் என்று வையாபுரிப் பிள்ளையின் கருத்தை மறுத்துள்ளார். நக்கீரர் பற்றி, வேங்கட

சாமிநாட்டார்எழுதிய நூல், நக்கீரரின் இலக்கியத் திறனைக்காட்ட வல்லது. அவர் பத்திக் கண்ணோடு பார்த்து, எல்லா நக்கீரரும் ஒருவரே என்ற கருத்தில் வரைகிறுர். கு. கோதண்டபாணியார் "திருமுருகாற்றுப்படைத் திறன்" என்ற நூலில் நக்கீரர் திறனை ஆய்வதோடு மேலைநாட்டார் கருத்துக்களைத் தந்து பொருத்திப் பார்த்து ஒப்பீடு செய்கிறுர். நக்கீர தேவநாயனாரின் "திருவீங் கோய்மலை எழுபதுக்குப்" பாலூர் கண்ணப்ப முதலியார் உரை செய்தனர்.

கபிலர், பரணர் என்ற புலவர்களைப் பற்றி வேங்கடராசுலு' ரெட்டியார் முழுமையாகப் பார்த்திருக்கிறுர். ஆயின், அதிக அளவு அவை சங்கப் புலவர்களைப் பற்றிய செய்திகளைத் தருவது; திருமுறைக் கவிஞராக வரும் கபிலர், பரணர் வேறான வர்கள் என்றும் அவர் காட்டியுள்ளார். 'கபிலர்' பற்றி வேங்கடசாமி நாட்டாரும் எழுதியுள்ளனர். சங்கக் கபிலரும் திருமுறைக்கபிலரும் ஒருவர் என்பது அவர் கருத்து.

காரைக்காலம்மையார் பற்றிப் பலர் வரலாறு வரைதல் என்ற அளவில் எழுதினர். சி. கே. சுப்பிரமணிய முதலியாரின், "காரைக் காலம்மையார் புராணம்" என்ற நூல், தனியாகவும், "சேக்கிழார் பெரிய புராணத்"தில ஒரு பகுதியாகவும் வெளி வந்தது. இஃது, அம்மையாரின் வரலாற்றைச் சுட்டி இலக்கிய நிலையை உரைப் போக்கிலும் காட்டுவது. அம்மையாரின் சில நூல்கட்குக் கவியரசு வேங்கடாசலம்பிள்ளை, திரு. வி. க. ஆகியோர் செய்த உரைகள் குறிப்புரையாயினும் சிற்சில ஆய்வுக் குறிப்புக்கள் உண்டு.

பட்டினத்தாரின் வரலாற்றையும் பலர் எழுதினர். "தமிழ்ப் பெருமக்கள்" என்ற நூலில் அனவரத விநாயகம்பிள்ளை குறிக்கும் "அடிகள்" வரலாறு கற்கத்தகும். கா. சு. பிள்ளையின், "பட்டினத்தடிகள் வரலாறும் நூலாராய்ச்சியும்" என்ற நூலில் "அடிகளின்" வரலாறு இலக்கியக் கட்டமைப்பு ஆகியவை சுருங்கிய அளவில் சுட்டப் பெற்றுள்ளன.

ஔவை துரைசாமி பிள்ளையவர்கள் தமது "சைவ இலக்கிய வரலாற்"றில் ஐயடிகள், சேரமான் பெருமாள், பட்டினத்தார், நம்பியாண்டார் ஆகிய நால்வரைப் பற்றிக் கண்டுரைத்த செய்திகள் எற்குச் சிந்தனையைத் தந்தன. அவர்கள் காலம் பற்றியும், இலக்கிய நிலையைப் பற்றியும் கூறியுள்ளனர்.

கா. சு. பிள்ளையின், "இலக்கிய வரலாறு", ந. சி. கந்தையா பிள்ளை எழுதிய "தமிழ் இலக்கிய அகராதி", "டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் "சைவ சமய வளர்ச்சி" ஆகிய நூல்கள் பதினொராந்திருமுறை நூலாசிரியர்களின் காலத்தைக் கணிக்கப் பெரிதும் உதவின. புலவர் கா. கோவிந்தனார் செய்த "சங்கப் புலவர் வரிசை" என்ற நூலும், காலக் கணிப்புக்குதவுவதாகும்.

"சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள்" (முதலாவது மகாநாடு—1958) என்ற நூலில் பதினொராந்திருமுறை நூல்களுள் சில பற்றிச் சிலர் சொற்பொழிவு செய்துள்ளனர். அவையும் இவ்வாய்வுக் காகப் படிக்கப் பெற்றன.

பதினொராந்திருமுறையாசிரியர்களைப் பற்றிய பற்பல கட்டுரைகள் பல மலர்களிலும், ஆய்வுக் கோவைகளிலும் வெளி வந்துள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்க கட்டுரைகளின் பட்டியல் வருமாறு:

1. அனவரத விநாயகம்பிள்ளை, "கண்ணப்பர் இந்து முனிவர்," Siddhantha Depika, Vol. VI.
2. கஸ்தூரி தயாநிதி, "பதினொராந்திருமுறையில் எண்கள்," இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்ற 10-ஆவது கருத்தரங்கக் கோவை.
3. கெல்லர், சி. ஏ., (லாசேன் பல்கலைக் கழகம்), "நக்கீரர் திருமுருகாற்றுப்படை. "இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர்".
4. கோலட்கைலாட் (பாரிஸ்) "இந்தோ சைனாவில் காரைக் காலம்மையார்," தினமணி சுடர், 4—1—81இல் சுட்டுதல்.
5. தெட்சிணாமூர்த்தி, அ., "காரைக்காலரும் கழறிற்றறி வாரும்," இ. ப. க. த. ம. 7-ஆவது கருத்தரங்கக் கோவை.
6. தெட்சிணாமூர்த்தி, அ., திருமுறைகளும் திருநாரையூர் நம்பியும்," இ. ப. க. த. ம. 4ஆவது கருத்தரங்கக்கோவை.
7. பரிமணம், அ மா,, "பத்திப்பனுவலில் அகப்பாடற் கூறுகள்," இ. ப. க. த. ம. 5ஆவது கருத்தரங்கக்கோவை.
8. பிலியோசா, "திருமுருகாற்றுப்படை (பிரெஞ்சு மொழி பெயர்ப்பு)," உலகத்தமிழ்.

9. மீனாட்சிசுந்தரனார், தெ. பொ., ''நக்கீரர், ''Tamil Culture–4

10. லியோ செயின்ட் ஜீன் (பு. பெ. காரவேலன்). ''காரைக் காலம்மையார் பாடல்கள்'' (பிரெஞ்சு மொழிபெயர்ப்பு,.) உலகத்தமிழ்.

11. வேங்கடராமச் செட்டியார், ''பதினொராந்திருமுறையில் காரைக்காலம்மையார் பிரபந்தங்கள்,'' பன்னிருதிருமுறை மன்ற வெள்ளிவிழா மலர்.

12. வேங்கடராமையா, கே.எம் , ''9, 10, 11-ஆம் திருமுறைகள்'' தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி–1.

பதினொராந்திருமுறையாசிரியர்கள் பன்னிருவர் பற்றியும் பற்பல ஆய்வுக்குறிப்புக்களைத் தந்தவர்கள் இருவராவர். ''பன்னிரு திருமுறை வரலாறு'' என்ற நூலின் இரண்டாம் பகுதியில் க. வெள்ளைவாரணனார் திறமுற ஆய்கிருர். இவர்தம் நூல் என் ஆய்விற்குப் பெரிதும் பயன்பட்டது. அடுத்து, இவ்வாசிரியர்கள் அனைவரையும்பற்றி எழுதியவர் மு. அருணாசலம்ஆவர். அவரது ''தமிழ் இலக்கியவரலாறு'' 10ஆம் நூற்றாண்டு 11ஆம் நூற்றாண்டு, 14ஆம் நூற்றாண்டு நூல்களில் கண்ட செய்திகள் என் ஆய்வுக்கு ஒளி காட்டின.

இவர்கள் வழங்கிய கருத்துக்கள் ஒவ்வொரு வகையில் எழுந்தவை. இங்கெல்லாம் நுணுக்கச் செய்திகள் உண்டு. அவர்கள் விடுத்த இடங்களை எடுத்தும் சுருக்கிய இடங்களை விரித்தும் சொன்ன இடங்களிலேயே மாறுதல் இருப்பின் அதனைச் சொல்லியும் சென்றிருக்கிறேன். முன்னவர்கள் சொன்ன நல்லசெய்திகளை மேற்கோள் காட்டியுள்ளேன். சிற்சில இடங்களில் ஆய்வின் காரணமாக மாறுபட நேரின் அதனைச் சுட்டியுள்ளேன்.

ஆய்வின் நோக்கு :

பதினொராந்திருமுறை நூல்கள் அனைத்தையும் பார்த்து நூல் வடித்தோர் இருவர் என முன்னர் சுட்டினேன். கட்டுரைகளாகத் தந்தோர் பலர். அவரெல்லாம் ஒவ்வொரு வகையாகப் பார்த்துள்ளனர். எல்லா வகையாகவும் கண்டார் அல்லர். முழுமையாகவும் பார்த்தார் அல்லர். ஒவ்வொரு கூறுகள் சிறந்துள்ளன.

காலமுறைப்படி பார்ப்பதே இலக்கிய வளர்ச்சியை முழுமையாகக் காட்ட இயலும். ஆகவே கால நிலையை முக்கியமாகக் கருதி, வரிசைப்படுத்திப் பார்த்தமையை இவ்வாய்வில் காணலாம் பட்டினத்தார், திருஞானசம்பந்தர் போன்றோரின் வரலாறும் இவ்வாய்வில் தெளிவுபடுத்தப்பெற்று இருத்தலைக் காணலாம். அனைத்து ஆசிரியர்களின் வரலாற்றையும் அகச்சான்றுகொண்டு விளக்கியுள்ளேன். புனைந்துரைகளைக்கண்டுகாட்டியுள்ளேன்.

இலக்கிய வகைகள் எத்துணை இத்தொகை நூலில் உள்ளன, எவை புதியன, எவற்றில் இருந்து வளர்ந்தவை என்றும், யாப்பியலில் என்ன வளர்ச்சி காணப்படுகிறதென்றும் முழுமையாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. கால ஆய்வின்படி பார்ப்பதால் இலக்கியப்போக்கில் ஆசிரியர் யார்யார் எவரெவரிடம் இருந்து கற்பனை, சொல்லாட்சிகளைப் பெற்றுள்ளனர் என்பதையும் புலப்படுத்தியிருப்பதோடு ஆசிரியர்களின் தனிக்கூறுகளையும் காட்டியுள்ளேன். ஆதலின், பதினொராந்திருமுறை ஆசிரியர்கள், நூல்கள் பற்றி ஒரு முழுப்பார்வை கிட்டும் என்று கருதலாம்

ஆராய்ச்சிப்பகுப்பு :

1. முதல் இயல் முன்னுரையாம். இதில் முன்னூல் ஆய்வுகள்—ஆய்வின் நோக்கம்—ஆய்வுப்பாகுபாடு — பதினொராந்திருமுறை அமைப்பும் சிறப்பும்-புதுமுறை ஆசிரியர் வரிசையும் காரணமும் காட்டப்பெறும்.

2. இரண்டாவது இயல், ''பதினொராந்திருமுறையின் ஆசிரியர் வரலாறும் காலமும்'' என்பதாம். ஆசிரியர்கள் வாழ்ந்த காலங்கள் பற்றிய பல அறிஞர்களின் காலங்களைத் தொகுத்துக்கண்டு, காலவரிசைப்படி ஆசிரியர்களை வைத்திருத்தல். ஆதலின் பழைய முறையில் இருந்து வரிசை மாறுதலை நோக்கலாம். ஆசிரியர்களுள் நக்கீரர், கல்லாடர், கபிலர், பரணர் எனச் சங்கப் புலவர் பெயரைச் சிலர் பெற்றிருந்தாலும் இத்திருமுறைக் கவிஞர்கள் வேறானவர்கள் என்றும் அதற்கான காரணங்களும் அவர்பற்றிய வரலாறுகளும் கூறிக் காலங்களைக்காட்டியிருத்தல். காரைக்காலம்மையார், ஐயடிகள், சேரமான் பெருமாள் ஆகியோர் வரலாற்றைச் சேக்கிழார் புராணத்துடனும் அகப்புறச் சான்றுகளுடனும் ஒப்பாய்வு. பட்டினத்தார் மூவரெனக் கூறித் திருமுறைப் பட்டினத்தார் வரலாற்றைத் தெளிவுபடுத்தல்.

3. மூன்றும் இயல் ''பதினொராந்திருமுறையின் இலக்கிய வகைகளும், யாப்பும்'' என்பதாம். இதில் திருமுருகாற்றுப் படையைச் சங்க நக்கீரரே செய்தார் என அக்ச்சான்றால் விளக்குதல். அந்தாதி இரட்டைமணிமாலை, மும்மணிக் கோவை, நான்மணிமாலை, உலா ஆகிய இத்தொகை நூலில் கண்ட சிற்றிலக்கியங்களை ஒப்பாய்வு செய்திருத்தல், கலம்பக உறுப்புக்கள்–பாவகை பிற பற்றிய ஒப்பாய்வு, யாப்பு முறையில் உள்ள புதிய கூறுகளை ஆங்காங்கே காட்டியமை.

4. நான்காவது இயல், 'பதினொராந்திருமுறை ஆசிரியர்களின் இலக்கியப் போக்கும் புலமைக்கூறுகளும்'' என்பதாம். இத்தொகை நூலாசிரியரில் நக்கீரர், சேரமான் பெருமாள் பட்டினத்தார், நம்பியாண்டார் ஆகியோர் சங்க நூற்பயிற்சியும் திருக்குறள் பயிற்சியும் உள்ளவர்கள், எனக் காட்டுதல். எந்தெந்த ஆசிரியர் யார் யாரைப் பின்பற்றிப் பாடுகின்றனர் எனவும், இத்தொகை நூலாசிரியர்களின் கருத்தைப் பின்னீடு வந்த ஆசிரியர்களுள் எவரெவர் எக் கருத்தை ஆளுகின்றனர் எனவும் காட்டியிருத்தல். பட்டினத்தாரும், நம்பியாண்டாரும், திருவாசகத்தையும் திருக் கோவையாரையும் வாங்கிப் பாடியதால் அவற்றின் செல்வாக்கு அறியப்பெறும். நம்பியாண்டாரின் தமிழ்ப்பத்தியைக் காட்டல். அந்தந்தப் புலவரின் தனிக்கூறுகளைச் சுட்டிக்காட்டல்

5. பதினொராந்திருமுறையில் அகத்திணை என்பது ஐந்தாம் இயலாகும். இத்தொகைநூலில்யார்யார் அகத்திணையாசிரியர்கள் எந்தெந்த நூல்களில் அகத்திணைப் பாடல்கள் வருப? எத்துணை வருப? பழைய - புதிய துறைகள் யாவை? என்பன விளக்கப்படுதல். எத்துறையில் இருந்து எது விரிந்தது? அல்லது திரிந்தது என்று காட்டுதல். 33 பாடல்கட்குத் துறை காட்ட வாய்ப்பிருந்தும் அச்சு நூல்களில் இவை இல்லை என்று கூறிப் பின் இணைப்பில் அவற்றைக் காட்டல்.

6. ஆறாவது இயல் ''சமயக்கருத்துக்களைப்பற்றிவிளக்குவது'' தெய்வங்களைப்பற்றியும் புராணங்களைப் பற்றியும் வரும் கருத்துக்களைத் தொகுத்துரைத்தல். புராணங்களில் புதிதாக வருவதைச் சுட்டல். அடியார்களைப்பற்றிய செய்திகளையும் திரட்டித்தருதல், கண்ணப்பர் வரலாற்றை நக்கீர தேவர், கல்லாட தேவர், சேக்கிழார் கூறியவற்றை ஒப்பாய்வு செய்து

விரிக்கு மாற்றைக் காட்டல். திருஞானசம்பந்தர் வரலாற்றை நம்பியாண்டார் மொழிவதையும், அது சேக்கிழாருக்கு அடித்தளம் ஆதலையும் காட்டுதல். சுந்தரர்–திருநாவுக்கரசர் வரலாறுகளும் இங்ஙனம் விளக்கப்படல்.

இறைத்தத்துவம், அடியார் தத்துவம், உலகியல் தத்துவம் இவற்றை விளக்கல் அடியாரை இறைவனாகக்கருதும் தத்துவத்தை மெய்கண்டார் எடுத்தமை கூறுதல் குருவின் சிறப்பை பட்டினத்தார் நம்பியாண்டார் ஆகியோர் பேசுவர். சரியை கிரியை முதலான நான்கு வழிகளைப் பட்டினத்தார் கூறுதல். அஞ்செழுத்துச் சிறப்பு, திருநீற்றுப்பலன், முத்திப் பேறு பற்றி நம்பியாண்டார் கூறுதல்.

7. ஏழாவது இயல், முடிவுரை. இதில் இயல்களில் கூறிய முடிவுகளைக்காட்டியும் தொடரத்தகும் ஆய்வுகளைக் கூறியுமிருத்தல்.

பதினொராந் திருமுறையின் அமைப்பு :

சைவத்திருமுறைகள் பன்னிரண்டாகும். இவற்றின் ஆசிரியர்கள் 27 பேர்கள். மொத்தம் இவர்கள் பாடிய பாடல்கள் 18349.

சேக்கிழார் பாடல்கள் பன்னிருதிருமுறையில் பிற்காலத்தே நம்பியாண்டார் நம்பிக்கும் பின்னர் இடம் பெற்றன அவரை விடுத்துப்பார்த்தால்.

1. திருஞான சம்பந்தர், 2. திருநாவுக்கரசர், 3. சுந்தரர், 4. மாணிக்கவாசகர், 5. திருமூலர் என்ற இந்த ஐவரும் பாடிய பாடல்களைத் தனித்தனியே தொகுத்தனர். இவர்களின் பாடற்றொகுப்பு, காலமுறையில் இல்லை. பாடற்பொருள் வகையாலும் இல்லை. அவர்கள் செய்த அடைவிற்குக் காரணம் அவர்கள் முத்தி அடைந்த வரிசை எனச் சிலரும், சரியை, கிரியை முதலான வழிபாட்டுமுறை எனச் சிலரும் கூறுவர். தேவாரப் பாடல்களைத தலமுறைப்படி தொகுத்திருத்தலைக் காணலாம். சமயகுரவர்களின் நோக்கம் தலங்களைக் கண்டு வணங்கி இன்னிசையால் பாடிப்பரவுவது. ஆதலின் அந்தப்படி தொகுத்தனர். திருமூலர் பாடல்கள் சாத்திர நூல் என்பதால் இடையீடு பட்டும் நின்றது. சுருங்கச் சொன்னால் முதல் 8 தொகுதிகளும் இசைத்தமிழ் பற்றியவை. பத்தாவது தொகுதி திருமந்திரம் சாத்திரம் பற்றிய இயற்றமிழ் நூல். அதை அடுத்து மற்றொரு இயற்றமிழ் நூலான பதினொராந்திருமுறை வைக்கப்பட்டது.

பன்னிரு திருமுறைகளில் 9, 11 இரண்டு தொகுதிகள் மட்டுமே பல கவிஞர்கள் எழுதிய நூல்களைக் கொண்டவை. மற்றவை ஒரே கவிஞரால் எழுதப்பெற்றவை.

ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பா. இத்தலைப்பு இதன் நோக்கை நமக்குணர்த்தவில்லையா? இதன் ஆசிரியாகள் 9 பேர் ஆவர். அனைத்தும் இசைப்பாக்களாகும். இதன் ஆசிரியர்கள் நம்பியாண்டார்வாழ்ந்த காலத்தை ஒட்டிவாழ்ந்தவராவர். ஆயின், பதினொராந்திருமுறை ஆசிரியர்கள் நிலை அப்படி இல்லை. ''திருமுறை'' என்ற சொல் பதினொராந்திருமுறையில் மட்டுமே உண்டு. பிற நூற்பெயரில் அது இல்லை. ''முறை'' என்ற சொல்லுக்கு வரிசை என்ற பொருள் வரும். ஆகவே, இத் தொகை நூலில் பலநூல் வரிசை உண்டு என்பது போதரும்.

பதினொராந்திருமுறையின் நூலாசிரியர்கள் பழைய முறைப்படி பன்னிருவராவர். இதில் உள்ள நூல்களின் எண்ணிக்கை 41. பாடல்களின் தொகை, பதிப்புக்கள் தோறும் வேறுபடினும் காசிமடத்துப் பதிப்புப்படி 1420 பாடல்கள். இதில் வரும் பாவகைகள் வருமாறு :

1.	ஆசிரியப்பா	91
2.	ஆசிரிய விருத்தப்பா	78
3.	கட்டளைக்கலித்துறை	593
4.	வெண்பா	642
5.	கலிப்பா	4
6.	பல்வகைப்பா	12

ஆக 1420 பாடல்கள். இதில் பிற்காலத்தோர் பாடிச்சேர்த்தவை 36 பாடல்கள். ஆகவே, பழம் பாடல்கள் 1384 எனலாம். இதில் அகத்திணைப் பாடல்கள் 382. 41 நூல்களில் 17 நூல்களுள் அகத்திணை வரும்.

ஆசிரியர்கள் :

1. திருவாலவாயுடையார், 2. காரைக்காலம்மையார்,
3. ஐயடிகள்காடவர்கோன், 4. சேரமான் பெருமாள்நாயனார்,

5. நக்கீர தேவநாயனார், 6. கல்லாட தேவநாயனார், 7. கபில தேவநாயனார். 8. பரணதேவநாயனார்,9. இளம்பெருமானடிகள், 10. அதிராவடிகள், 11. பட்டினத்துப் பிள்ளையார், 12. நம்பி யாண்டார் என்போராவர்.

இவ்வரிசைக்கு என்ன காரணம்? ''திருத்தொண்டர் தொகையில்'' சுந்தரர் கூறிய முறையை நம்பியாண்டார் பின்பற்றி இவ்வாசிரியர்களை அடைவு செய்கிறுர். சுந்தரரும் நம்பியாண்டாரும் கூறும் முறையை மனத்துள் கொண்டு சேக்கிழார் அடியார்களை வரிசைப் படுத்துகிறார். ஆகவே, சைவ உலகில் அடியார்களை முறைப்படுத்தும் போது முன்னோர் மொழிந்தவற்றிற்கு முன்னுரிமை வழங்கும் மரபு உண்டு என்பதாம்.

இவ்வரிசையைக் கால முறைப்படி மாற்றி வகைப்படுத்த இடமுண்டு.

1.	நக்கீரர் (திருமுருகாற்றுப்படையாசிரியர்)	கி. பி. 2ஆம் நூற்றாண்டு
2.	காரைக்காலம்மையார்	கி. பி. 5-6ஆம் நூற்றாண்டு
3.	நக்கீரதேவநாயனார் (பிரபந்தங்கள் பாடியவர்)	கி. பி. 6ஆம் நூற்றாண்டு
4.	ஐயடிகள் காடவர்கோன்	கி பி. 8ஆம் நூற்றாண்டு
5.	இறையனார் (திருவாலவாயுடையார்)	"
6.	சேரமான் பெருமாள் நாயனார்	"
7.	இளம்பெருமானடிகள்	கி. பி. 9ஆம் நூற்றாண்டு
8.	அதிராவடிகள்	"
9.	கபிலதேவநாயனார்	கி. பி. 10ஆம் நூற்றாண்டு
10.	பரணதேவநாயனார்	"
11.	கல்லாட தேவநாயனார்	"
12.	பட்டினத்தார்	" (இறுதி)
13.	நம்பியாண்டார் நம்பி	கி. பி. 11ஆம் நூற்றாண்டு (முற்பகுதி)

இம்முறை, இலக்கிய ஆய்வுக்கு நற்பயன் தரும் என்பதால் இவ்வண்ணம் அமைக்கலானேன். ஆசிரியர் எண்ணிக்கையில் ஒருவர் கூடுகிறார். இவர்கள் வாழ்ந்த காலம் சங்க நக்கீரரை விடுத்துப் பார்த்தால் கி. பி. 6 முதல் கி. பி. 11ஆம் நூற்றாண்டு முற்பகுதி வரை எனலாம். ஆகவே, 600 ஆண்டு இலக்கிய வகை பற்றிய செய்தி நமக்குக்கிட்டும் என்பதாம்.

இத்தொகை நூலை என்ன வகையில் தொகுத்தனர்? ஆசிரியர் வைப்பு முறைக்குச் சுந்தரர்தம் பாடல் காரணம் என்று கண்டோம். பாடற்றொகைக்கு எது காரணம்? சிவபெருமானைப் பற்றிய பாடல்களைத் தொகுத்தல் காரணம் என்று கூறின் அஃது இசையாது. முருகனைப் பற்றிய நூல் ஒன்றும், விநாயகரைப் பற்றிய நூல் மூன்றும் உள்ளனவே? ஆகவே முரண் இல்லையா? காலத்தை வைத்துத் தொகுத்ததாகக் கூறின், கி. பி. 6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த காரைக்காலம்மையாரும் அதற்கும் முன்னர் வாழ்ந்த சங்க நக்கீரர் பாடலும் இத்தொகுப்பில் எப்படி இடம்பெறுதல் தகும்? இவற்றில் வருபவை இயற்பாடல் என்று கொண்டாலும் இயற்பாடலான மணிவாசகர் பாடலைத்தொகுத்து முடித்ததும் அதன் அருகே வைத்திருக்கலாமே? இப்படிச் சிக்கல்கள் வ கின்றன. இதற்கு ஒரே விடை உண்டு

இப்பாடல்களைத் தொகுக்கக் காரணம் இயற்பாடல்கள் என்பது மட்டுமன்று.

இலக்கிய நயம் கொண்டவை என்பதாலும் இல்லை.

விநாயகர், முருகன், சிவன் அடியார்கள் இவர்களைப் பற்றித் தனியாகத் தொகுத்தார்கள் என்று கருதுவதும் தக்கதாகாது.

இத்தொகைக்குக் காரணம் இதில் வரும் பல பாடல்கள் நூல்களாக உள்ளமையே! மேலும், அவை தமிழ் இலக்கியத்தில் சிற்றிலக்கியங்களின் முதன் நூல்களாக உள்ளமையே காரணம். ஆகவே முழு நூல்களாக உள்ள பிரபந்த வகைகள் விடுபடுதல் கூடாது என்ற எணணத்தால் தொகுத்தனர். இதில் 21 வகைச் சிற்றிலக்கியங்கள் உண்டு. அவற்றில் 18 முதன் முதலில் பிறந்த இலக்கியங்கள் (பின் இணைப்பில் காண்க). இதில் விநாயகரைப் பற்றிய நூல்கள் 3 முருகனைப் பற்றிய நூல் 1 சிவபெருமானைப் பற்றிய நூல்கள் 26 அடியாரைப் பற்றியவை 11 என்றவாறு 41 நூல்கள் உள.

கோபப்பிரசாதம், காரெட்டு, உலாமாலை, ஏகாதசமாலை எழுபது என்ற இலக்கியவகை பற்றிப் பாட்டியல் நூல்களில் எக்குறிப்பும் இல்லை.

ஏகாதசமாலை 1, இரட்டை மணிமாலை 4, மும்மணிக் கோவை 7, நான்மணி மாலை 1, அந்தாதி 8, பிற சிற்றிலக்கியம் 20 என்றவாறு இத்தொகை நூல் உள்ளது.

தொல்காப்பியர் பேசும் உலா இலக்கியத்துக்கு மாதிரி இலக்கியம்-கைலாய ஞான உலா, இதில் உள்ளது. திருமுருகாற்றுப்படை இதில் உள்ளது. பதிகங்களின் தொடக்கத்தை இதில் காணலாம். திருவெழுகூற்றிருக்கை இங்கே முதலில் உண்டு. தேவபாணி, இதில் வருகின்றது. ஆகவே இத்தொகை நூல் எத்தனை முதன்மை வாய்ந்தது என்பதும் தொகுக்க இவை காரணம் என்பதும் அறியவரும்.

சிறப்பு :

1. பதினொராந்திருமுறை எனப் பெயரிலேயே ''திரு முறை' என்ற அடை இதில் மட்டும் இருத்தல்.

2 பெண்பாற்புலவர் இத்தொகை நூலில் மட்டும் வருதல்.

3. திருமுருகாற்றுப்படையாகிய சங்க நூல் இதில் இருத்தல்.

4. 21 வகை பிரபந்தங்கள் உள்ளமை.

5 இத்தொகை நூலைத்தொகுத்தவரே தாமும் பாடியிருத்தல்

6. விநாயகருக்குத் தனியாக நூல் உள்ளமை.

7. முருகனுக்குத் தனியாக நூல் உள்ளமை.

8. இறையடியார்கட்குத் தனியாக நூல்கள் இதன்கண் உள்ளமை.

9 அகத்திணைப் பாடல்கள் பெருமளவு வருதல்-புதிய துறைகள் காணப்படுதல்.

10. சேக்கிழாருக்குப் புராணம் பாடக் கரு வழங்கிய கருவூலம் இந்நூல் இவை இத்தொகை நூலின் தனித்தவியல்பும் சிறப்புமாகும். இந்நூலைப்பற்றி ஆராய்தல் பலனும் நலனும் நல்குமாகையால் பலவகையாக இதனைப் பார்க்கலாம்.

பதினொராந் திருமுறையின் ஆசிரியர்கள் வரலாறும் காலமும்

திருமுருகாற்றுப்படை தந்த நக்கீரர்

(வரலாறு)

சங்கப்புலவர்களிடையே சில அடைப்பெயர்களுடன் கவிஞர்கள் காணப்படுவர். அங்ஙனம் அடைப்பெயர் பெற்றவருள் "கீரரும்" ஒருவர். கீரர் என்ற பெயரில் சங்க காலத்தே 24 புலவர்கள் உளர். இவர்களை இனம்பிரித்துக்கான அடைச்சொற்கள் பயன்பட்டன. "ந" என்பது சிறப்புப்பொருளைத் தரும் அடை. நக்கீரர் என்ற பெயரில் சங்க காலத்தே ஒருவர் மட்டும் இருந்தார்,

இப்பெருமகனார் - திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை என்ற இரு நீண்ட பாடல்களைப் பாடியவர். அவை "பத்துப் பாட்டில்" சேர்க்கப்பட்டன. இவர் சங்க நூல்களில் மொத்தம் பாடிய பாடல்கள் 37.

இவர் நற்றிணையில் 7 பாடல்களும், குறுந்தொகையில் 8 பாடல்களும், அகநானூற்றில் 17 பாடல்களும், புறநானூற்றில் 3 பாடல்களும் பாடியவர்.[1] இவர், மதுரைக் கணக்காயனாரின் மகனாவார்.

பத்துப்பாட்டுக்குப் பாடினோர் வரலாறு எழுதிய உ, வே. சாமிநாத ஐயர் "பதினொராந் திருமுறையில் திருமுருகாற்றுப் படையேயன்றி ஒன்பது பிரபந்தங்களும் இவர் இயற்றியனவாகக் காணப்படுகின்றன." என்று கூறுவர்,[2] உ. வே. வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியாரும் இக்கருத்துப்படத் தம் பதிப்பிலும் மொழிகிறார்.[3]

காலம் :

"பதினொராந் திருமுறை நக்கீர தேவநாயனாருக்கும் சங்க கால நக்கீரருக்கும் தொடர்பில்லை. திருமுருகாற்றுப்படை நக்கீரர் கி. பி. 3-ஆம் நூற்றாண்டினர்" என்ற கருத்தை டி.ஜி. ஆராவமுத ஐயங்கார் தெரிவிக்கிறார்.[4] சங்க கால நக்கீரர் கி. பி. 250 இல் இருந்தவர். திருமுருகாற்றுப்படை தந்த நக்கீரர் கி. பி. 1000 இல் இருந்தவர்" என்ற கருத்தை எஸ். வையாபுரிப்பிள்ளை கூறுவர்.[5]

"திருமுருகாற்றுப்படை, சங்க காலத்திற்குப் பின்பு (கி, பி. 300க்குப் பின்பு) அப்பர், சம்பந்தருக்கு முன்பு (கி. பி. 600க்கு முன்பு) பாடப்பட்டிருக்கலாம்" என்பார் டாக்டர் இராசமாணிக்கனார்.[6]

நெடுநல்வாடை, அகம் முதலிய பாடல்களைப் பாடிய நக்கீரரே திருமுருகாற்றுப்படையையும் பாடியவராவர் என்ற கருத்தை வேங்கடராம செட்டியார், ச. தண்டபாணி தேசிகர், துரை. அரங்கனார் ஆகியோர் நவின்றனர்.[7]

திருமுருகாற்றுப்படையைப் பாடிய நக்கீரர் சங்க காலத்தில் வாழ்ந்தவராவர் என்ற செய்தியை டாக்டர் மு. வ. வெள்ளை வாரணனார், மு. அருணாசலம், ந. சி. க. ஆகியோர் வரைந் துள்ளனர்.[8]

இதுவே பொருந்தும் என்பது காரணங்களுடன் அடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.[9]

காரைக்காலம்மையார்

(வரலாறு)

புனிதவதியார், காரைக்காலம்மையார். அம்மையார், காரைக்காற் பேய், என்ற பெயர்களால் இவர் அழைக்கப்படுவர். இவர் வரலாற்றைச் சேக்கிழார் அறுபத்தாறு பாடல்களில் பேசுவார். அம்மையார் எழுதிய நூல்களால் நாம் தெரியும் குறிப்புக்கள் குறைவே.

சேக்கிழார் மொழியும் வரலாற்றைக் காண்போம். சோழ நாட்டுக் காரைக்கால் என்னும் பகுதியில், தனதத்தன் என்னும் வணிகனுக்குத் திருமகளாய்ப் பிறந்தார், புனிதவதியார், நடை பயிலும் காலத்திலேயே நறுங்கொன்றைச் சிவனார் திருவடியைச் சிந்தை செய்துவந்தார். மணப்பருவம் எய்தியபோது நாகப் பட்டினத்து வணிகன் நீதிபதியின் புதல்வன் பரமதத்தனை மணந்தார். இருவரும் நாகையில் இல்லறம் நிகழ்த்தியபோது வணிகத்தின்பொருட்டு வந்தோர் இருமாங்கனியினைப் பரம தத்தனுக்கு வழங்கினர். அவற்றை அவன் மனைவியர்பால் சேர்த்தான். அவன் உணவு உண்ண வருமுன் சிவனடியார் ஒருவர் பசியால் வருந்திப் புனிதவதியார்பால் உணவு கேட்க, அவர் உணவோடு மாங்கனியையும் படைத்தார் பின்னர் கணவன் தான் உணவு உண்ணவந்த காலை அம்மாங்கனியைக் கொணருமாறு ஆணையிட்டான். அம்மையார் கொணர கனியின் சுவையில் ஈடுபட்டான், பரமதத்தன். மற்றுமோர் கனியையும் தருக என, அம்மையார் சிவனடியார்க்குப் படைத்ததைப் பகரா மல், திருவருளால் ஒன்று பெற்று அளித்தார். அந்தப் பழம் முன்னினும் சுவைபட இருந்ததால், கணவன் ஐயுற்றுக் கேட் டான். அம்மையார் நிகழ்ந்தவற்றை மொழிந்தார். அவன் அதனைச் சோதிக்கவேண்டி மற்றுமோர் தீங்கனி தருகவென, சிவனருளால் மேலும் ஒன்று பெற்றார், அக்கனியைப் பெற்ற கணவன் அது மறையவுங் கண்டான். அச்சமுற்ற அவன், அம்மையாரைப் பிரியக்கருதித் தன் உளக்கருத்தை உரையாமல் ஒளித்து, வணிகத்தின் பொருட்டு செல்வான்போல் அம்மையாரைப்பிரிந்து பாண்டி நாடு சென்றான். ஆண்டு ஒரு வணிகன் மகளை மணந்தான். அவள்பால் ஒரு பெண் மகவும் பெற்று நன்னர் வாழ்ந்திருந்தான். இச்செய்தியை அறிந்த அம்மையாரின் உறவினர்கள், அவரைப்பாண்டி நாட்டுக்கு அழைத்துக்கொண்டு சென்றபோது பரமதத்தன் தன் மனையாளோடும் மகளோடும் எதிர்கொண்டு வணங்கித் தன்னிலை கூறினன். தன்னடி வீழ்ந்து

கணவன் வணங்கியதைக் கண்டதும் அம்மையார் நானினி இல்லறம் இனித் தனக்கொவ்வாதென நினைந்து துறந்து சிவபெருமானை வேண்டிப் பேய் வடிவம் பெற்றுக் கயிலைக்குத் தலையால் நடந்து சென்றார். செஞ்சடைக் கடவுளிடம் உமை யம்மையார் ''யாரிவர்?'' எனலும், அப்பன் ''நம் அன்னை'', எனப், பேயார் ''அப்பாவே''ா என அழைத்து மகிழ்ந்தார். ''நினக்குவேண்டுவது யாது'' என இறைவன் கேட்க, அம்மையார் ''பிறவாமை வேண்டும், பிறப்புண்டேல் என்றும் உன்னை மற வாமை வேண்டும்'' என்றார். சிவபெருமான் ''நீ விரும்பியாங்கு எய்துக'' என இயம்பி, ''திருவாலங்காட்டில் யாம் ஆடும் திருக் கூத்தைக் கண்டு இன்புறுக'' என விடைதந்தார். அம்மையார் திருவாலங்காட்டிற்குத் தலையால் நடந்துவந்து ஐயன் கூத்தைக் கண்டு களித்தார் என்பது சேக்கிழார் கூறும் வரலாறு.[1]

அம்மையார் பாடிய திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம் இரண்டின் கடைக் காப்புச் செய்யுட்களிலும் ''காரைக்காற் பேய்'' என்ற தொடர் வருகின்றது.[2] அற்புதத்திருவந்தாதியின் இறுதிப்பாடலிலும் ''காரைக்காற்பேய்'' என்று வருதல் காணலாம்.[3]

மற்றும் இவரது அற்புதத் திருவந்தாதியில் ''பேயாய நற் கணத்திலொன்றாய நாம்'' (பா. 86) எனக் கூறுவர். ஆதலின் இவர் வரலாற்றோடு பேய்க்கணம் பற்றி வருதல் காணலாம். இரண்டு பதிகங்களிலும் பேய்களைப் புனைகிறார். ஆகவே முதன் முதல் சுந்தரர் இவரை ''பேயார்க்கு மடியேன்'' என்றார்.[4] இச்செய்தியை நம்பியாண்டார் நம்பி கூறவில்லை. அவர் ''காரைக்காலின் மேய குலதனமே'' என்றார்.

அம்மையார் கயிலைக்குத் தலையால் சென்றார் எனவும் உமை நகலும் செம்பொன் உருவன் அம்மையே என அழைத்தார். 'அத்தகைய செழுந்தேன்' என்றார், நம்பியாண்டார்[5].

''இவ்வம்மையார், பேய்வடிவு பெற்றவர் என்பது உடலின் தசை மிகவுங் குறைந்துபோகவே எற்புச் சட்டமாக நிலவினர் என்பதை உணர்த்தும்'' என்பார் சதாசிவ பண்டாரத்தார்.[6] பேயார் என்பது இவர் விரும்பிப் பெற்ற காரணப் பெயர் என்பார் வெள்ளைவாரணனார்.[7]

அகச்சான்று :

இளமை முதல், அம்மையார் அப்பனிடம் ஆராக்காதல், கொண்டவர் என்பது

"பிறந்து மொழிபயின்ற பின்னெலாங்காதல்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்" (அற்பு. 1)

என்ற பகுதியால் தெரியலாம். ஆகவே இவர்தம் செய்யுளால், சிவகணத்தில் இவர் பேய்க்கணமாய் இருக்கவிழைந்தார் என்ற செய்தி தெரிகிறதே தவிர, பிறவற்றிற்கு அகச்சான்றில்லை எனினும். சுந்தரரே "பேயார்க்கும அடியேன்" என்பதால், அவர் காலத்திலேயே இவர்க்கு அப்பெயர் வந்துவிட்டது என்ப தாம். பிறசெய்திகளைச் சேக்கிழார் விரித்தெழுதினார் என்ப தாம். கீழ்வரும் பாட்டும் வரலாற்றைச் சுருங்கத் தரும்.

"தங்குபுகழ்க் காரைக்கால் வணிகன் மிக்க
தனதத்தன் தரும்புனித வதியார் மாவின்
செங்கனிகள் திருவருளா லழைப்பக் கண்டு
திகழ்கணவ னதிசயித்துத் தேச நீங்க
அங்கவட லிழந்துமுடி நடையா லேறி
அம்மையே யெனநாதன்தன் அப்பா வென்று
பொங்குவட கயிலைபணிந் தாலங் காட்டிற்
புனிதநடம் அனவரதம் போற்றி னாரே"
(திருத்தொண்டர் புராணசாரம்)

காலம் :

இவர் வாழ்ந்த காலம் கி. பி 4 அல்லது 5 அல்லது 6ஆம் நூற்றாண்டில் ஒருகாலம் என அறிஞர் அறைவர். "கி பி. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞான சம்பந்தர் இவ்வம்மையார் தலையால் நடந்து சென்று வழிபட்ட திருவாலங்காட்டில் தாம் அடி வைத்து நடத்தற்கு அஞ்சி புறத்தேயுள்ள ஒரு பதியில் தங்கியிருந்தார் எனச் சேக்கிழார் கூறுவர்[8]. ஆகவே சம்பந்தர்க்கு முற்பட்டவர் அம்மையார் கி. பி. 5 அல்லது கி. பி. 6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தாராதல் ஒருதலை என்பார் சதாசிவ பண்டாரத்தார்.[9]

கி. பி. நான்கு அல்லது ஐந்தாம் நூற்றாண்டு என்பர் திரு. வெள்ளைவாரணனார்.[10]

கா. சு. பிள்ளை, மு. அருணாசலம், டாக்டர் மு. கோவிந்தசாமி, டாக்டர் மு. வ. ந சி க. ஆகிய அறிஞர்கள், அம்மையார் கி. பி. 6ஆம் நூற்றாண்டினர் என்பர்.[11]

நக்கீர தேவ நாயனார்

(வரலாறு)

தமிழ் இலக்கிய உலகில் நக்கீரர், ஓர் ஒளிஞாயிறாவர். இறையனார் களவியல் உரை, கல்லாடம், நம்பி திருவிளையாடல், பரஞ்சோதியார் திருவிளையாடல், காளத்திபுராணம், திருப்பரங்குன்றப் புராணம் ஆகியவை நக்கீரர் வரலாற்றைப் பேசுவன. குறுந்தொகை (பா. 2.) அப்பர் தேவாரம் ஆகியவையும் இவர் வரலாற்றோடு ஒருபுடைத் தொடர்புடையன.

தமிழ் வரலாற்றில் நான்கிற்கும் குறையாத நக்கீரர்கள் பற்றி அறிகிறோம்.

1) நெடுநல்வாடை முதலிய சங்கத்தொகை நூல்செய்த நக்கீரர்.

2) அடிநூல் என்னும் இலக்கணம் செய்த நக்கீரர்.

3) நக்கீர தேவ நாயனார். (11ஆம் திருமுறையில் பிரபந்தம் பாடியவர்).

4) களவியல் உரை செய்த நக்கீரர்.

5) தமிழ் நாவலர் சரிதையில் சில பாடல்கள் பாடியதாய்க் கூறப்படும் நக்கீரர்.

அ) "ஆரியம் நன்று தமிழ்தீ தெனவுரைத்த"...

ஆ) "முரணில் பொதியில் முதற்புத்தேள் வாழி"...

இ) "தானே முந்துணர்ந்து" என வரும் திருவள்ளுவ மாலைப்பாடல்......

ஈ) "சங்கறுப்பது எங்கள் குலம்"...

என்றாங்கு வரும் மேற்கண்ட பாடல்களைப் பாடியவர் நக்கீரர் எனத் தமிழ் நாவலர் சரிதம் கூறும்.[1]

இவரெல்லாம் ஒருவரா வேறானவரா? என்பது அடுத்த வினா. எஸ். வையாபுரியார் கருத்துப்படி, இவர்கள் அனைவரும் ஒருவர் அல்லர்.

1. சங்க நக்கீரர் கி. பி. 250இல் இருந்தவர்.

2. அடிநூல் இலக்கணம் செய்த நக்கீரர் கி. பி. 8இல் இருந்தவர்.

3. பிரபந்த நக்கீரர் கி. பி. 10ல் இருந்தவர்.

4) களவியல் உரைசெய்த நக்கீரர் கி. பி. 12 இல் இருந்தவர் என்பது எஸ். வையாபுரியார் விளக்கம்.[2] தமிழ் நாவலர் சரிதம் கூறும் பாடல்களைச் செய்தவர் வேறு ஒரு நக்கீரர் அல்லது அப்பெயரில் யாரோ ஒருவர் செய்தார் எனக் கருதலாம்.

நக்கீரர் வரலாறாக நாம் தெரிவன யாவை ?

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் இருந்த திருநாவுக்கரசர் தம் தேவாரத்தில் தருமிக்காக இறைவன் நன்பாட்டுப்புலவனாய்ச் சங்கம் ஏறி நற்கனகக் கிழிபெறச் செய்த செய்தியைக் கூறுவர்.[3] இதில் இறைவன்–நக்கீரர் வாதம் பற்றிய செய்தி எதுவும் இல்லை. எனினும் இதை அவ்வரலாறாகவே கொண்டு கல்லாடம் விரித்துப் பேசத் தொடங்கியது.

இறைவர்க்கும், நக்கீரர்க்கும் நடந்த வாதம், "கொங்குதேர் வாழ்க்கை" என்ற குறுந்தொகைப் பாடலை இறைவன் பாடியது, பொற்குவை தருமிக்கு அற்புடன் அருளியது ஆகியவற்றைக் கல்லாடம் கூறுகிறது[4] கயிலைபாதி–காளத்திபாதி என்ற நூலை நக்கீரர் பாடிய செய்தியையும் கல்லாடம் பேசுகிறது.[5] கல்லாடம் கி. பி. 13ஆம் நூற்றாண்டினது என அறிதல் வேண்டும்.[6]

பெரும்பற்றப்புலியூர் நம்பியும் 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவர், தமது திருவாலவாயுடையார் திருவிளையாடல் புராணத்தில் மேலும் சில செய்திகளைச் சேர்த்து மொழிந்தார். அதில் நான்கு முக்கிய வரலாறு உண்டு. அவை வருமாறு;

அ) இறைவனிடம் புலவர்கள் சங்கப்பலகை வேண்டியமை இறைவன் அகப்பொருள் இலக்கணம் செய்தமை. அந்நூலுக்கு நக்கீரர் குற்றம் கூறியமை–இறைவன் அசரீராக உண்மையை உணர்த்தியமை.

ஆ) பாண்டிய மன்னன், மகளிர் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டா என வினவி, ஐயம் களைவார்க்குப் பொற்கிழி பரிசளிப்பதாய் அறிவித்தமை "கொங்குதேர் வாழ்க்கை" என்ற

பாடலைப்பாடிஇறைவன் தருமிக்கு அளித்தமை-நக்கீரர் பொருட்குற்றம் கூறியமை-இறைவன் நக்கீரரை நெற்றிக் கண்ணால் வெதுப்பியமை-நக்கீரர் கயிலை பாதி காளத்தி பாதி பாடி இறையருளைப் பெற்றமை.

(இ) அகத்தியர் நக்கீரர்க்குத் தமிழ் உணர்த்திய செய்தி.

(ஈ) இறையனார் அகப்பொருளுக்கு நக்கீரர் முதலானோர் உரை கூறியபோது, உப்பூரிகிழான் மெய்சிலிர்த்தமை.

இக்கதைகள் விரிவாய் நம்பி திருவிளையாடலில் வருகின்றன.[7]

கி. பி. 16இல் தோன்றிய பரஞ்சோதியார் திருவிளையாடலிலும் இக்கதைகளில் சில வருப. இறைவன்-நக்கீரர் வாதம் பற்றியும், நக்கீரர் இறைவன் நெற்றிக் கண்ணால் வெதுப் புற்றுக் கோபப்பிரசாதம் பாடியது பற்றியும் பரஞ்சோதியார் கூறுவர்.[8]

சீகாளத்தி புராணம் செய்த சிவப்பிரகாச சுவாமிகளும் கி. பி. 16இல் வாழ்ந்தவர். இவர், திருமுருகாற்றுப்படை பாடிய சூழலை விரித்துப் புதிதாய்ப் பாடுகிறார்.

நக்கீரர், சிவ பூசை இயற்றிக் கொண்டிருந்த காலை, ஒரு மரத்தில் இருந்து ஓர் இலை உதிர்ந்தது அதன் பகுதியில் ஒன்று நீரிலும் மற்றொருபாதி நிலத்திலும் வீழ்ந்தது. நீரில் வீழ்ந்த இலை, மீனாகவும் நிலத்தில் வீழ்ந்த பகுதி. பறவையாகவும் மாறி ஒன்றையொன்று ஈர்த்தன. நக்கீரர் இதனைக் கண்டு வியந்தார். பூசை தடைப்பட்டது. தண்டிக்க விரும்பிய பூதமொன்று, நக்கீரரை முழையொன்றில் அடைத்தது. அங்கு முன்னரே 999 பேர் பூதத்தால் அடைபட்டு, உணவாக ஆகும் நிலையில் இருந்ததால், அவர்கள் வருந்தி நக்கீரரைப் பழித்தனர். நக்கீரர், அவர்களின் துயர் தீரத் திருமுருகாற்றுப்படை பாட, முருகன் அருளால் உய்தி பெற்றனர் என்ற புதிய வரலாறு படைத்தார், சிவப்பிரகாசர்.[9]

இதே நூற்றாண்டில் இருந்த நிரம்பிய அழகிய தேசிகர், திருப்பரங்கிரிப் புராணத்தில் மேற்கூறிய கதையையே சிறு மாற்றத்துடன் கூறுவர். கதைக் கருவில் மாற்றம் இல்லை.[10]

சங்க நக்கீரர், (திருமுருகாற்றுப்படை பாடியவர்) 11ஆம் திருமுறை பிரபந்தம் பாடிய நக்கீரர், களவியல் உரை செய்த

நக்கீரர், ஆகிய இவர்களை ஒருவராகக் கருதியே மேற்கண்ட புராணங்கள் கதை பின்னின, அதுவே மயக்கத்திற்குக் காரணம். மொழி நூல் அறிவும் ஆய்வுக் கண்ணும் பெருகிய இந்நாளில், பகுத்துணருங்கால் இவரெல்லாம் வெவ்வேறானவர் என்ற வேறு பாடு தெரியும்.

11ஆம் திருமுறையில் பிரபந்தங்கள் செய்த நக்கீர தேவ நாயனாரின் காலம் யாது?

காலம் :

சொல் வழக்குகள், இலக்கண வழக்குகள், யாப்பு முறைகள் இவற்றைக் கொண்டு காணுங்கால், நக்கீர தேவநாயனார் சங்க காலத்தவர் அல்லர் எனலாம். இது குறித்துப் பிற்பகுதியில் விளக்கியிருக்கிறது.[11]

டாக்டர் மா. இராசமாணிக்கனார், திருமுருகாற்றுப்படை நக்கீரரையும் பதினொராந்திருமுறை நக்கீர தேவநாயனாரையும் ஒருவர் எனக் கொண்டு கி. பி. 300-கி. பி. 600க்குள் ஒரு காலம் என்றார்.[12]

கீரர் கி. பி. 9ஆம் நூற்றாண்டினர் என வெள்ளைவாரணனார் கூறுவர்.[13] கி. பி. 10ஆம் நூற்றாண்டினர் என மு. அருணாலம் அவர்களும்,[14] ஔவை சு. துரைசாமி பிள்ளையவர்கள் கி. பி. 13ஆம் நூற்றாண்டினர் என்று கூறுவர்.[15]

நக்கீர தேவநாயனாரின் திருவெழு கூற்றிருக்கையை யாப் பருங்கல விருத்தியுரையில் உரையாசிரியர் உதாரணமாகக் காட்டுவதால்,[16] அவர்க்கு முந்தியவர் என்பது போதரும். உரை யாசிரியர் கி. பி. 11ஆம் நூற்றாண்டினர்.

7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர், திருவெழு கூற்றிருக்கை என்ற யாப்பைச் செய்தனர். கீரர் செய்த திருவெழு கூற்றிருக்கையின் போக்கும் சம்பந்தர் பாடலின் போக்கும் ஒத்துள்ளன.

காரைக்காலம்மையார், முதலாழ்வார்கள் ஆகியோரின் பாடற் பொருளும் கற்பனையும் கீரர் பாடல்களில் காணப்படுகின்றன முதலாழ்வார்கள் கி. பி. 6ஆம் நூற்றாண்டை ஒட்டி வாழ்ந்தவர் கள் என்பார் கே. எஸ். சீனிவாசபிள்ளை, இ. எஸ். வரதரா அய்யரும் இங்ஙனம் மொழிவர்.[17]

முத்தொள்ளாயிரப் பாடல்களின் சாயல்கள் 'கீரர்' பாடல் களில் அப்படியே உள்ளன. இந்நூல் கி. பி. 6ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்பர் டி. வி. சதாசிவ பண்டாரத்தார்.[18]

கா. சுப்பிரமணியபிள்ளை அவர்களும் நக்கீர தேவநாயனார் கி. பி. 6ஆம் நூற்றாண்டினர் என்று கருதுகிறார்.[19]

வெண்பாவில் அந்தாதி பாடுதலும், இருதலங்களை ஒரே நூலில் இணைத்துப் பாடுதலும், பெருந்தேவபாணி, திருவெழு கூற்றிருக்கை என்ற யாப்புக்களும் காலப் பழமை உடையன.

மற்றுமோர் இன்றியமையாச் செய்தியையும் கருதுதல் வேண்டும். சிவபெருமான் அடியார்கட்கு அருள் செய்த திறத்தை-பெருந்தேவபாணி, கோபப்பிரசாதம், போற்றிக் கலிவெண்பா ஆகிய நூல்களில் 'கீரர்' கூறுகிறார். சமயகுரவர் நால்வரைப் பற்றி அந்தப் பகுதிகளில் கூற வாய்ப்பிருந்தும். ஒருவர் பற்றியும் கூற வில்லை. ஆகவே, கீரர் அவர்கட்கு முன்பிருந்தனர் எனலாம்.

பிரம்மா, திருமால், முருகன், காளி, காமன், நாமகள் ஆகிய தெய்வங்களைப் பற்றிக் கீரர் குறிக்கிறார். தமது ஒன்பது நூல் களில் எவ்விடத்தும் பிள்ளையாரைக் கீரர் குறிப்பிடவில்லை. ஆகவே, இவர் கி. பி. 7ஆம் நூற்றாண்டிற்கும் முற்பட்டவர் என்பதும் காரைக்காலம்மையார். முதலாழ்வார்கள் வாழ்ந்த காலத்தில் கீரர் இருந்தவர் என்பதுமாம்.

ஆகவே, நக்கீர தேவநாயனார் வாழ்ந்த காலம் கி. பி. 6ஆம் நூற்றாண்டு என்று கருத இடமுண்டு.

ஐயடிகள் காடவர்கோன்

(வரலாறு)

ஐயடிகள் காடவர்கோனை, பல்லவர் என்றும்,[1] காஞ்சிக் காடவர் என்றும்[2] சேக்கிழார் அழைப்பர். ஐயடிகள் என்ற பெயரையும் சுட்டுவர். "வடநூல் தென்றமிழ் முதலாம் அண்டர் பிரான் ஆலயங்களை வண்டமிழால்" பாடியவர் என்றும்[3] பன்னு கலை தெரிந்தவர் என்றும் சேக்கிழார் பாடுகிறார்.[4] இவர் வரலாற்றை எட்டுப் பாடல்களில் கூறுவர் சேக்கிழார்.

சுந்தரர், "ஐயடிகள் காடவர்கோனடியார்க்கும் அடியேன்"[5] என்று மட்டும் மொழிந்தார்.

நம்பியாண்டார் நம்பி, "ஐயடிகள் அரசு துறந்து, ஐயம் ஏற்று, முத்தித் திருப்பதிகளை வெண்பாவால் ஏத்திய பத்திக் கடல்" என்றார்.[6]

இவர் மன்னராய் இருந்து, துறவியாகி, அரனடி பரவியவர் என்பதை இவர் பாடிய மூன்று வெண்பாக்களில் குறிப்பாய்க் காணலாம். (பா. எண். 10, 22, 23) இப்பாக்களைக் கொண்டே நம்பியாண்டாரும், சேக்கிழாரும் இச்செய்தியை விரித்தோதினர்.

திருஞானசம்பந்தர், திருச்சேத்திரக்கோவை என்றும், அப்பர் சேத்திரக்கோவைத் திருத்தாண்டகம்-அடைவுத்திருத்தாண்டகம் என்றும் பாடியதைப் போல ஐயடிகளும் 22 பதிகளை வைத்துப் பாடிய 24 வெண்பாக்கள் இன்று நமக்குக் கிட்டியுள்ளன. 'கூரம்' செப்பேடு கூறும் முதற்பரமேச்சுவரனாகிய பல்லவன் (கி. பி 670-685) ஐயடிகளே என்பார் ஔவை சு. துரைசாமிபிள்ளை.[7] இக் கருத்தையே திரு க. வெள்ளைவாரணன் அவர்களும் ஆதரிப்பர்.[8]

இவ்வடிகளின் பெருமை கருதி, பிற்கால மக்கள் "ஐயடிகள்" என்ற திருப்பெயரைத் தம் மக்களுக்கிட்டு வழங்கி மகிழ்ந்த செய்தி, கல்வெட்டால் அறியப்பெறும் என்பார் ஔவை சு துரைசாமிபிள்ளை[9]

ஐயடிகள் காலம் கி. பி. 6 முதல் கி. பி. 9 வரை பலவாறாகக் கூறுவர்[10] கி. பி. 6 ஆம் நூற்றாண்டென கா. சு. பிள்ளை டாக்டர் இராசமாணிக்கனார், டாக்டர் மு. கோவிந்தசாமி ஆகியோர் நினைக்கின்றனர்,

கி.பி. 7 ஆம் நூற்றாண்டென வெள்ளைவாரணனாரும் ஔவை சு. துரைசாமிபிள்ளையும் கருதுப.

கி.பி, 8ஆம் நூற்றாண்டென மு. அருணாசலமும் கி. பி. 9 என ந. சி. கவும் கூறுப.

கி.பி. 8 ஆம் நூற்றாண்டென்பது பொருந்துவதாம்.

இறையனார்

(வரலாறு)

சங்க இலக்கியத்தில், 'இறையனார்' என்ற பெயரில் ஒரு புலவர் மட்டுமே காணப்படுகிறார். இவர் குறுந்தொகையில் "கொங்கு தேர் வாழ்க்கை" எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர்.[1] இவர் இறையனார் களவியலில், அகப் பொருள் சூத்திரம் 60 செய்தார் என்றும், சங்கப் புலவரில் ஒருவராய் விளங்கினார் என்றும், களவியலில் கதை பிறந்தது. இவ் விரண்டையும் வைத்துக் கல்லாடம், இவ்விரு செய்திகளையும் கூறியது.[2] மேலும் "சேரமான் பெருமாள் நாயனாருக்கு இறைவன் பாணபத்திரன் பொருட்டு "மதிமலி புரிசை" எனத்தொடங்கும் திருமுகம் வரைந்தார் என்ற செய்தியையும் கல்லாடம் பேசியது.[3]

கல்லாடர், இங்ஙனம் மொழிந்ததற்குச் சேக்கிழார், காரணம் ஆகலாம். இறைவன் சேரலருக்குத் திருமுகம் விடுத்த செய்தியை மூன்று செய்யுட்களில் செப்புகிறார்.

> "மன்னும் மதுரைத் திருவால வாயில் இறைவர்"[4]
>
> "மதிமலி புரிசை என்னும் வாசகம் வரைந்த வாய்மைக்
> கதிரொளி விரிந்த தோட்டுத் திருமுகங் கொடுத்து"[5]
>
> "சங்கப் புலவர் திருமுகத்தைத் தலைமேற்கொண்டு
> பத்திரனார்"[6]

எனப் பரக்கப்பேசுகிறார். இங்கெல்லாம் இறையனார் சங்கப் புலவர் என்றும், "மதிமலி புரிசை" என்ற பதினொராந்திரு-முறையில் வரும் முதற் செய்யுளை, இறையனார் செய்தார் என்றும், அவர் மதுரையில் ஆலவாயிலில் கோயில்கொண்ட இறையனாரே என்றும், சேரருக்குப் பாணபத்திரர் பொருட்டுத் திருமுகம் விடுத்தார் என்றும் சேக்கிழார் உரைக்கிறார்.

உமாபதி சிவாசாரியார் திருமுறைகண்ட புராணத்தில் "திருமுகப்பாசுரம் முதலாம்" என்று கூறுகிறார்.[7]

ஆகவே களவியல் தோன்றிய காலந்தொட்டு இக்கதைகள் வேரூன்றின எனத் தெரியலாம். களவியல் கி. பி. 9ஆம் நூற்றாண்டிற்குப்பின்னர் வந்தது. சேக்கிழாரும், உமாபதி சிவாசாரியாரும் கி. பி 12ஆம் நூற்றாண்டினர் கல்லாடம் கி. பி. 13ஆம் நூற்றாண்டில் தோன்றியது. இவற்றின் பின்னர் தோன்றிய புராணங்கள் இக்கதையை அப்படியே பேசின. நம்பி திருவிளை யாடல், திருமுகங்கொடுத்த திருவிளையாடல் படலத்திலும், பரஞ்

சோதியார் திருவிளையாடல் திருமுகங்கொடுத்த படலத்திலும் இச்செய்தியைக் கூறின. நம்பி திருவிளையாடல் கி பி. 13ஆம் நூற்றாண்டிலும், பரஞ்சோதி திருவிளையாடல் கி. பி. 16ஆம் நூற்றாண்டிலும் தோன்றியவை.

ஆதலின் அடுத்தடுத்து இக் கதையை வலியுறுத்தும்வண்ணம் புராணங்கள் பிறந்ததால் இறையனாரே "மதிமலிபுரிசை' என்ற பாடலைச் செய்தார் என ஆயிற்று.

தமிழ்ப்புலவர்களுக்கு ஏற்றம் சேர்க்கக் கருதி, சங்கப்புலவரில் இறைவனே வந்திருந்தார் என்றும் வற்புறுத்தினார்.

இறைவன், சேரமான் பெருமாளுக்கு மடல் தந்தார் என்பதால், அவரது காலமே இப்பாடல் தோன்றிய காலமுமாம், சேரர் காலம் கி. பி. 8ஆம் நூற்றாண்டு எனப் பின்னர் காட்டியிருக்கிறது.

இறையனார் சங்ககாலத்தவரா?

"மதிமலி புரிசை" என்ற பாடலைப்பாடியவர் சங்கப்புலவரா? எனின் இல்லை என்றே கருதவேண்டியதிருக்கிறது.

ஆலவாய் என்ற சொல், அக்காலத்தே இல்லை. 'சிவன்யான்' என்று இப்பாடலில் வருகிறது இச்சொல்லும் சங்ககாலத்தே இல்லை பாணபத்திரன். பத்திரன் என்ற சொல்லை நோக்குக "தன்பால்" "தற்பான் ' காண்பது கருதி" என்ற இடங்களைக் காண்க. அக்காலத்தே மு- னிலையில் நின், நின்பால் என்றே வரும். 'தன்டால்' எனத் தன்மையில் வருவது சங்க வழக்கில்லை ' காண்பது கருதி" வரவிடுப்பது" என்ற நடையும் சங்க நடையில்லை. இப்பாடல் "திருமுகப்பாசுரம்" என்று அழைக்கப்படுகிறது. "பாசுரம்" என்ற சொல் சமயகாலத்தில் வழக்கில் வந்தது. ஆகவே "மதிமலிபுரிசை" என்ற பாடலைச் சங்ககால இறையனார் எழுதவில்லை.

திருமுகம் என்பது பெரியோர் மற்றையோருக்கு விடுக்கும் நறுக்கோலை. அஃது இன்று 'சீட்டுக்கவி' என்று பெயர்பெறும். ஆகவே, சீட்டுக்கவிக்கு மூலம் இச்செய்யுள் என அறிக. பிற்காலத்தே சுப்பிரமணிய பாரதியார் எட்டயபுர மன்னர் வெங்கடேசு ரெட்டப்ப பூபதிக்கு இரு சீட்டுக்கவி விடுத்தார்.[8]

திருமுகப்பாசுரம் என்பது சில ஏடுகளில் திருமுகப்பாயிரம் என்று காணப்படுவதாய்த் தெரிகிறது. இது பொருந்தாது. உமாபதிசிவாசாரியார் காலத்திலேயே "திருமுகப்பாசுரம்முதலாம்" என்று[9] (செ. 27) வருதலால் அதுவே சிறந்த பாடமாம்.

சேரமான் பெருமாள் நாயனார்

(வரலாறு)

சேரமான் பெருமாள் நாயனாரைச் சுந்தரரும் சேக்கிழாரும் பாடியிருக்கின்றனர். இவர், சேர நாட்டு வஞ்சியை ஆண்டவர். திருவஞ்சைக் களத்தில் அரசர் குடியில் பிறந்து, சிவநெறியில் நின்றனர். பெருமாக்கோதை என்பது இவர் பிள்ளைத் திருநாமம். எந்த உயிரின் பேச்சையும் உணரும் ஆற்றல் பெற்றிருந்தமையால் கழறிற்றறிவார் என்ற பெயரும் உண்டு. "கார்கொண்ட கொடைக் கழறிற்றறிவார்க்கு மடியேன்," என்பர் சுந்தரர்.[1] நம்பியாண்டார் நம்பியும் இப்பெயரைக் குறிக்கிறார்.[2] வண்ணானைக் கும்பிட்டார் என்ற பட்டமும்,[3] இவர்க்கு உண்டு.

செங்கோற் பொறையனுக்குப்பின் சேரநாட்டை, அடியார்கள் வேண்டிக் கொண்டபடி இவர் ஏற்று ஆண்டார். சேரர் உலாப் போந்தபோது, உவர் மண்ணூறி எதிர்வந்த வண்ணானைக் கண்டு, அவனை வெண்ணீறு அணியும் அடியராய் நினைத்து அடிவீழ்ந்து "அடிச்சேரன்" என வணங்கினார். அவ்வண்ணானும் அஞ்சி, எதிர் வணங்கி. "யான் வண்ணான்" என விளக்கச் சேரர் நீர் திருநீறுபூசும் அடியாரை நினைப்பித்தீர் வருந்தாது போம்" என விடை கொடுத்தனுப்பினார். இச் செய்தியினை நம்பியாண்டார் நம்பி, தம் திருத்தொண்டர் திருவந்தாதியில் கூறுகிறார்[4]. இவ்வரலாற்றின் அடிப்படையில் இச்சேரர்க்கு வண்ணானைக் கும்பிட்டார் என்ற பட்டப்பெயர் வந்தது.

சேரமான், நாள்தோறும் நடராசப் பெருமானின் குஞ்சித பாதத்தைக் கும்பிட்டு அப்பிரானின் சிலம்பொலியைச் செவியாரக் கேட்டுச் சிந்தையுருகும் வழக்கினர் எனச் சேக்கிழார் கூறுவர்[5]. இவருக்குப் பின்வந்த கல்லாடரும்[6] திருவாரூருலா ஆசிரியரும் இச் செய்தியினை இயம்புவர்.

மாட மதுரை ஆலவாய் அண்ணல், பாணபத்திரன் என்ற இசைப்புலவர் வறுமையை நீக்குவான் வேண்டி, பாணபத்திரர் கனவில் தோன்றி, சேரமான் பெருமாளைப் பற்றிக் கூறி, 'மதிமலி புரிசை மாடக் கூடல்'' எனத் தொடங்கும்[7] திருமுகம் நல்கிப் பரிசு பெற்றுக் கொள்ளுமாறு கூறினர். பாணர், சேரமான் பெருமாளைக் கண்டு விண்ணப்பித்து மடலையும் கொடுத்தார். சேரர் அதனை முடிமிசைசூட்டிக் கொண்டாடிக் கருவூலத்தையே திறந்து விடுத்துத் தம் ஆட்சியையும் ஏற்க வேண்டினார். பாண

பத்திரர் மறுத்துத் தமக்கு வாழ்க்கைக்குத் தேவையான பொருளை மட்டும் ஏற்று, மதுரைக்கு விடை கொண்டார். இதனைச் சேக்கிழார் பத்தியால் உருகி 13 பாடல்களில் பாடுகிறார்[8]. கல்லாடம் பாடிய கல்லாடர், சிவபிரான் மூலம் சேரர்க்குத் திருமுகம் பெற்ற பாணபத்திரர் வரலாற்றைக் கூறுகிறார்[9].

நித்திய பூசையில் இறுதியில் நிகழ்த்தப் பெறும் செஞ்சிலம் போசையைச் சேரர் ஒருநாள் கேட்டாரில்லை. ஆதலின் வாளைத் தன் மார்பில் பாய்ச்சப்புக்கார். அவ்வேளையில் சிலம்பொலி கேட்டது சிவபிரானின் நன்மொழியும் கேட்டது. "சுந்தரன் ஒன்றிய உணர்வுடன் செந்தமிழ் பாடினான். அக்கவிச்சுவையில் ஆழ்ந்ததால் நினக்குச் சிலம்பொலி கேட்கக் காலத்தாழ்ச்சி ஏற்பட்டது," என்ற வொலி கேட்டார். சேரர், சிதம்பரத்தில் இருந்த சுந்தரரைக் காண உடன் விழைந்தார்; புறப்பட்டார். தில்லைக் கூத்தன் திரு நடனத்தைக் கண்மணி குளிர்ப்பக் கண்டார். தான்பெற்ற இன்பத்தைப் பொன் வண்ணத்தந்தாதியாகப் பாடிப் பரவினார். பொன்வண்ணத் தண்ணலார் தம் புகழ்த் திருவடியின் பொன்னார் சிலம்பொலி யைக் கேட்கச் செய்தார். சேரர் மெய்ம்மலியுவகை பூண்டார்; தில்லையில் சில நாள் தங்கினார்.

பின்னர், பல தலங்களை வணங்கியபின் திருவாரூர் அடைந்து சுந்தரரால் எதிர்கொள்ளப் பெற்றார். இருவரும் உளம் ஒத்த கேண்மையராய் இலங்கினர். அடியார்கள், சுந்தரரைச் "சேரமான் தோழர்" என்றே கூறத் தொடங்கினர். இவ்விருவரின் நட்பாழத்தை இது காட்டும். சுந்தரரை இங்ஙனம் அழைத்தமை பற்றிச் சேக்கிழார் குறிப்பிடுகிறார்[10] இருவரும் புற்றிடங் கொண்ட பிரானைப் போற்றினர். அப்போது சேரமான், 'திருவாரூர் மும்மணிக்கோவை' பாடினார்.

சுந்தரரும் சேரமான் பெருமாள் நாயனாரும் பாண்டித் தலங்களை வணங்க விழைந்து, மதுரை அடைந்தனர். பாண்டி வேந்தனும், அவன் மருகன் சோழனும் இவர்களை எதிர் கொண்டழைத்துத் திருக்கோயிலுக்கு இட்டுச் சென்றனர்.[11] சேர, சோழ, பாண்டிய வேந்தர் மூவரும், சுந்தரரும், பாண்டித் தலங்களை வணங்கி மகிழ்ந்தனர்.[12] பிறகு சேரமானும் சுந்தரரும் திருவாரூர் திரும்பினர். அங்கிருந்த காலைச் சேரமான், தம் தோழராகிய சுந்தரரைத் தம் நாட்டிற்கு எழுந்தருளுமாறு வேண்டித் தம் நாடுவரச் செய்தார். சேரநாட்டில் சுந்தரர் சில

காலம் தங்கிப் பின் திருவாரூர் வந்தடைந்தார். சில காலம் கழித்துச் சுந்தரர் கொடுங்கோளூருக்கு வந்து நண்பர் சேரமான் பெருமாளைக் கண்டு அளவளாவினார். ஒருநாள், சேரமான் பெருமாள் திருமஞ்சனச் சாலையில் நீராடிக் கொண்டிருந்த போது, சுந்தரர் திருவஞ்சைக்களத் திருக்கோயிலையடைந்து இறைவனை வழிபட்டார்.

அவரது பாசத் தளையகற்றி அருள் புரிய விரும்பிய சிவபிரான், சுந்தரரை அழைத்து வருமாறு திருக்கயிலாயத்திலிருந்து வெள்ளையானையையும் தேவர்களையும் அனுப்பினார். இறைவன் ஆணையைத் தேவர்கள் கூறச் சுந்தரர், தம் தோழராகிய சேரமான் பெருமாளைச் சிந்தித்துக் கொண்டு, கயிலை செல்வாராயினார். உணர்ச்சியால், நட்பாம் கிழமை உற்ற சுந்தரர் நிலையைச் சேரர் அறிந்தார். விண்வழியில் சுந்தரர் செல்லுவதைக் கண்டு, தம் குதிரையின் செவியில் சேரர் திருவைந்தெழுத்தோதினார். குதிரை விண்ணில் பாய்ந்து சுந்தரரின் யானையையும் வலம் வந்து அதற்கு முன்னே செல்லத் தொடங்கியது. இருவரும் திருக்கயிலையின் தெற்கு வாயிலில் இறங்கினர். திருவணுக்கன் வாயிலில் சேரமான் பெருமாள் அனுமதியின்றித் தடைப்பட்டார். உட்புகுந்த சுந்தரர், சிவபிரானிடம், சேரமான் பெருமாள் வரவை விண்ணப்பித்தார், சிவபிரான், நந்தியாம் தேவரை விளித்துக் "கொணர்க!"; என்றார். உள்வந்த சேரர், பணிந்தேத்தி நிற்கச் செஞ்சடைக் கடவுள், "யாம் அழையாதிருக்க, நீ ஏன் வந்தாய்?" என்றார். "உமது கருணை வெள்ளம் அடியேனை ஈர்த்து முன்கொண்டு புகுந்தது" என்றார். சேரர், மேலும் 'அடியேன் விண்ணப்பம் ஒன்றுண்டு, நின்னையே பாட்டுத் தலைவனாய்க் கொண்டு திருவுலாப் புறம்பாடினேன். தேவரீர் திருச்செவி சாத்தியருள்க!" என வேண்டினார். இறைவன் கூறுமாறு பணித்தார். கயிலையில் திருவுலா அரங்கேறியது. கேட்டருளிய இறைவன், மனம் மகிழ்ந்து "நீ நம் சிவகணங்கட்குத் தலைவனாய் வீற்றிருப்பாய்" என அருள் செய்தார் என்பது வரலாறு. ஒந் நூலைக் கயிலையில் அன்று கேட்ட மாசாத்தர் அதனைத் தரித்துத் தமிழ் நாட்டில் திருப்பிடவூரில் வெளிப்படுத்தினார். இங்குக் கண்ட செய்திகளைச் சேக்கிழார், கழறிற்றறிவார் புராணத்திலும், சுந்தரர் வரலாறு கூறும் வெள்ளானைச் சருக்கத்திலும் மொத்தம் 200 பாடல்களில் பாடியருளினார்.[13] இவர் வரலாற்றைச் சுருக்கமாகத் திருத்தொண்டர் புராணசார ஆசிரியர் உமாபதி சிவாச்சாரியார் உரைப்பர்.

"காவலர்ம கோதையார் கொடுங்கோ ளூர்க்கோக்
கழறியவை யறிந்தகோச் சிலம்போசைக் கருதார்
நாவலஞ்சேர னண்பரடிச் சேர வென்றே
நவின்றுவரும் வண்ணானை நயந்த கோநற்
பாவலர்கோப் பாணபத் திரனால் வாய்ந்த
பரமர்திரு முகம்வாங்கிப் பணிகோ வெற்பின்
மேவியகோ வானைக்குக் குதிரை வைத்த
வீரர்கோ வெனையாளுஞ் சேரர் கோவே".[14]

வரலாற்றின் புறச் சான்றுகள்

(அ) சிலம்போசை கேட்டது :

ஆலவாய் இறைவன் பாணபத்திரன் பொருட்டு "மதிமலிபுரிசை" எனத்தொடங்கும் திருமுகம் ஒன்றைச் சேரமான் பெருமாள் நாயனாருக்குப் பெருநிதி பெறுவான் வேண்டி வழங்கினார் என்ற செய்தி 13ஆம் நூற்றாண்டின் பின் தோன்றிய கல்லாடத்தில் வருகிறது.[15] இது சேக்கிழார் கூறியதை உள்ளடக்கிக் கூறியது.

(ஆ) கயிலை சென்றது :

10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பி, அவர்-தம் திருத்தொண்டர் திருவந்தாதியில் கீழ்வரும் செய்தியைப் பகர்வார்.

1) சுந்தரருக்குச் சிவனார், வீரகடகரி அளித்தார்.

2) சேரர் (சேரமான் பெருமாள்) வீரகடகரிக்கு முன்பு தன் குதிரையை (விண்ணில்) செலுத்தினார்.

3) சேரமானும் அவர் தோழர் சுந்தரரும் மக்கள் யாக்கை-யோடு கயிலைக்குச் சென்று சிவனருளைத் துய்த்தனர். பிறர் யாருமில்லை.[16]

இதே செய்தியினை 10ஆம் நூற்றாண்டு இறுதியில் வாழ்ந்த திருவிசைப்பா ஆசிரியர் பூந்துருத்தி நம்பி காட நம்பி,

"களையா உடலோடு சேரமான் ஆரூரன் விளையா மதமாரூர வெள்ளானை மேல்கொள்ள.......... ......" என்று மொழிவர்.[17]

சுந்தரரின் திருநொடித்தான்மலைப் பதிகங்களிலும் கயிலை சென்ற இவ்வரலாற்றுக் குறிப்புண்டு என்பர். அதனைக் கீழே காண்க.

'வானெனைவந் தெதிர்கொண் மத்தயானை யருள்புரிந்
தூனுயிர் வேறுசெய்தா னொடித்தான்மலை யுத்தமனே''
(பா. 1)

''வானை மதித்தமரர் வலஞ்செய்தெனை யேறவைக்க
ஆனையருள் புரிந்தான் நொடித்தான்மலை யுத்தமனே''
(பா. 2)

''விண்ணுலகத்தவர்கள் விரும்ப வெள்ளையானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித்தான்மலை
யுத்தமனே!'' (பா. 5)

'இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளஎன்னைமத்த யானை யருள்புரிந்து
மந்திர மாமுனிவரர் இவனாரென எம்பெருமான்
நந்தமரூ ரனென்றான் நொடித்தானமலை யுத்தமனே!
(பா. 9)

என்னும் இப்பதிகத்தில் சுந்தரரைப் பற்றிய குறிப்புவரினும் சேரரைப் பற்றிய குறிப்புமில்லை.

(இ) சுந்தரர் திருப்பரங்குன்றப்பதிகம் பாடியபோது,சேரமான் பெருமாள் நாயனார், பாண்டிய சோழர்கள் உடனிருந்தனர் என்பது அப்பதிக வரலாறு. இப்பதிகக் கடைக்காப்புச் செய்யுளில் "முடியால் உலகாண்ட மூவேந்தர் முன்னே மொழிந்தாறுமோர் நான்கு மோறொன் றினையும் படியா இவை கற்று வல்ல அடியார் என்றவரியால் அறியலாம். இங்கு "மூவேந்தர்'' என்றே பாவில் உள்ளது. சேரமான் உடனிருந்தார் என நாம் உய்த்துணர வேண்டியதிருக்கிறது. "முறைபுரியும் முதல்வேந்தர் மூவர்களும் கேட்டஞ்சி'' என்பது பெரியபுராணம்[16] ஆகவே, திருப்பரங்குன்றம் பதிக வரலாற்றில் சேரமானைப் பற்றிய குறிப்பு உளதென்பதாம்.

ஈ) திருமுருகன்பூண்டித் திருப்பதிக வரலாற்றில் சேரமான் பெருமாள் நாயன்மார் வரலாற்றோடு தொடர்புடையவோர்

செய்தியுண்டு. சுந்தரர், திருவாரூர் திரும்புங்கால் சேரமான் அளித்த பொருட்களை ஆட்களின் தலையில் ஏற்றி வந்தனர், முருகன் பூண்டிக்கருகில் வரும்போது, சிவபிரான் ஏவலால் பூதங்கள் வேடுவராகிப் பொருள்களைப் பறித்தனர். சுந்தரர் இத் தலத்து இறைவரிடம் இப்பதிகப் பாடல்களைப் பாடி இழந்த பொருள்களை மீண்டும் பெற்றார் என்பது வரலாறு.[19] பதிகத்தில் சேரமான் பொருள் தந்த குறிப்பேதும் இல்லை. ஆயின் சேக்கிழார் பாடுவர்.[20]

உ) சுந்தரர் பாடிய திருவையாறுப் பதிக வரலாறு, சேர மான் பெருமாள் நாயனார் வரலாற்றோடு தொடர்புடையது. சேரர் வேண்டுகோளை ஏற்று மலைநாட்டுக்குப் புறப்பட்ட போது, இருவரும் திருக்கண்டியூர் வந்தனர். காவிரியின் வடகரை யில் திருவையாறு தோன்றச் சேரமான் அத்தலத்தில் இறைவனை இறைஞ்ச விழைவதாய்ச் சுந்தரர்பால் மொழிந்தார். காவிரிப் பெருக்கைக் கண்டு, வழி வேண்டிச் சுந்தரர் இப்பதிகம் பாடி னார். என்பது பதிக வரலாறு. பாட்டில் சேரர் உடன் இருந்தது பற்றியோ, சுந்தரரை வேண்டியது பற்றியோ பிற செய்தியோ இல்லை. வெள்ளப் பெருக்குப் பற்றியும், ஐயாறப்பனை வணங்க விரும்பியது பற்றியும் குறிப்பு உண்டு. ஆயின் சேக்கிழார் சேரமான் வரலாற்றை இங்கு விரித்துப் பேசுகிறார்.[21]

ஆக, தேவாரம் முதலான திருமுறைகளை நம்பியாண்டார் நம்பி தொகுத்த பின்னரும், சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் பாடிய பின்னரும் பதிக வரலாறுகள் எழுதி விளக்கம் செய்து சேர்த்திருக்கின்றனர். இப்பணிகள் நடந்தேறிய காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டின் முற்பகுதி எனலாம். இவர் வரலாற்றில் அகச் சான்றினும் புறச்சான்றுகளே மிகுதி.

சேரர் அரசர்குடியில் பிறந்து, அரன்பற்றால் துறவியானார், என்பதற்கான குறிப்பே அகச்சான்றாய்க் கிடைக்கிறது.

"மேவின வாழ்க்கை வெறுத்தேன்
வெறுத்துவிட்டேன் வினையும்
ஓவின துன்னந் தெளிந்தது".

(பொன்வண்ணம். பா. 18)

"தனக்குன்றம் மாவையம் சங்கரன்
தன்னருள் அன்றிப்பெற்றால்
மனக்கென்றும் நஞ்சிற் கடையா
நினைவன்" (பொன்வண்ணம். பா. 43)

"..............................நானிலம்
ஆனினும் நான்மறைசேர்
மையார்மிடற்றான் அடிமற
வா வரம்வேண்டுவனே!" (பொன்வண்ணம் பா. 98)

என்பது காண்க.

பிற செய்திகட்கு அகச்சான்றில்லை. ஆயினும் நம்பியாண்டாரும், சேக்கிழாரும் மேற்கண்ட செய்திகளை விரித்துரைப்பர்.

காலம் :

இனி அவர் வாழ்ந்த காலம் யாதெனக் காண்போம். சுந்தரரின் காலத்தை வைத்துத்தான், சேரமான் பெருமாள் நாயனாரின் காலத்தை நிறுவுகின்றனர். சுந்தரர் கி. பி. 9ஆம் நூற்றாண்டினரா? கி. பி. 8ஆம் நூற்றாண்டினரா என்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறு பாடுகள் உண்டு.

(1) சுந்தரர் கி. பி. 9ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் என்பர் தமிழ் வரலாற்றாசிரியர் கே எஸ். சீனிவாசப் பிள்ளை.[22] கயப்பாக்கம் சதாசிவச் செட்டியாரும் இக்கருத்தினர்.[23]

(2) 9ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்பார் டி. ஏ. கோபிநாதராயர்.[24] சி. வி. நாராயண அய்யரவர்களும்[25] டாக்டர் மீனாட்சியும் இக்கொள்கையினரே.

ந. சி. கந்தையா அவர்களும் கி. பி. 9ஆம் நூற்றாண்டு என்பர்.[26]

(3) தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் (கி. பி. 830-854) காலத்தவர் என்பது டாக்டர் மா. இராசமாணிக்கனார் கருத்து.[27]

இக்கருத்துக்கள் பொருந்துமாறில்லை என்று டி. வி. சதாசிவப் பண்டாரத்தார், மு. இராகவையங்கார் ஆகியோர் நிறுவியுள்ளனர். இவர்கள் கருத்தை உட்கொண்டே, ஔவை சு. துரைசாமி பிள்ளை அவர்களும்[28] க. வெள்ளைவாரணனாரும் சுந்தரர் வாழ்ந்த காலம் "கி. பி. 7ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் எட்டாம் நூற்றாண்டின் தொடக்கமுமாம்" என்றனர்.[29]

கி. பி. 690-720இல் சுந்தரர் வாழ்ந்தார் என்பதும் ஆதலின் இவர் காலமும் சேரமான் பெருமாள் காலமும் கி. பி. 7ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் எட்டாம் நூற்றாண்டின் தொடக்க காலமும் ஆம் என்று தெளியலாம்" என்பர் வெள்ளைவாரணன்.[30]

பேராசிரியர் கா சு. பிள்ளை[31] டாக்டர் மு. வ.[32] மு. அருணாசலம்[33] ஆகியோரும், சுந்தரர் கி. பி. 8ஆம் நூற்றாண்டினர் என்பர். ஆகவே, சேரமான் பெருமாள் நாயனார் காலம், கி. பி. 8ஆம் நூற்றாண்டு என்பது போதரும்.

இளம்பெருமானடிகள்

(வரலாறு)

இளம்பெருமான் அடிகள் என்ற இத்தொடர், இறைவனைக் குறிக்கும் என்பர்.[1] திருஞானசம்பந்தர் ''அவரெம் பெருமானடி களே'' என்று கூறுதலால் இதனை உணரலாம். ''இளம் பெருமான்'' என்பது திருமுருகனைக் குறித்தலுமாம். பெருமான் என்றும் அடிகள் என்றும் அழைக்கப்படுதலால், இவர் ஒரு துறவியாக இருந்திருக்கலாம். சைவக் கடவுளரின் பெயரைத் தாங்குதலாலும் சிவபெருமானுக்குத் 'திருமும்மணிக்கோவை, பாடுதலாலும் சைவத் திருவடியார் என்பது ஒருதலை. இளம் பெருமான் என்பதால் இவருக்கு மூத்தவர் ஒருவர் இருந்திருப்பார் எனவும் கருதுவர்''.[2]

இவரது ''பிறந்தநாடு ஊர், குலம் முதலியன இவையெனத் தெரிந்து கொள்ளுதற்குரிய சான்றுகள் யாதொன்றும் கிடைக்க வில்லை'' என்று திரு வெள்ளைவாரணனாரும்,[3] திரு சு. அ. இராமசாமிப் புலவரும்[4] குறித்துள்ளனர். ஸ்ரீகாசி மடத்துப் பதிப்பில் ஆசிரியர் வரலாறு எழுதியிருக்கும் திரு கே. எம். வேங்கடராமையா இவ்வாசிரியர் குறித்து யாதொன்றும் எழுத வில்லை. இவர் சிவபெருமான் மும்மணிக்கோவை தவிர வேறு நூல் எதுவும் செய்யவில்லை.

திருமாளிகைத் தேவர் ''நீறணி பவளக்குன்றம்'' என்று பாடுகிறார்.[5] இக்கருத்தையும் சொல்லையும் இளம் பெருமானடிகள் வாங்கி 'வண்ணம்–ஐஞ்சுதலை கவைஇப் பவள மால் வரை'' என்று பாடுகிறார். (பா. 7) வீட்டுநெறி என்று பிற ஆசிரியர்கள் தெளிவாகக் குறிக்காதிருப்பவும் இவ்வாசிரியர் ''வீட்டு நெறி'' (பா. 13) என்று கூறுகிறார். ஆதலின் இவர் கி. பி. 9ஆம் நூற்றாண்டிற்கும் பிற்பட்டவர். இன்றைய ஆசிரியர் வைப்பு முறையில் பட்டினத்தாருக்கு முன்னர் இவர் வைக்கப் பெற்றமையையும் உன்னுக.

கா. சு. பிள்ளை இவரது காலத்தை கி. பி. 6 எனவும் மு. அருணாசலம் கி. பி. 8 எனவும், வெள்ளைவாரணனார் கி. பி. 9 இறுதி எனவும் கருதுகிறார்கள். வெள்ளைவாரணனார் கருத்துப் பொருந்தும்.

அதிராவடிகள்

(வரலாறு)

"மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை" என்ற ஒரு நூல் மட்டும் செய்தவர். அதிராவடிகள் எனின், கலக்கமடையாத உள்ளமுடையவர் என்பது பொருள். இவரது "ஊர் குலம் வரலாறுகள் யாதொன்றும் அறிந்து கொள்ளுதற்கில்லை......... இவ்வாசிரியருடைய காலம் ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியாக இருக்கலாம்" என்று சு. அ. இராமசாமிப் புலவர் கூறுகிறார்.[1]

"வள்ளற் கிங்கென் மனம்கனிந் திடுமே" என ஆனை முகக் கடவுளை வணங்குகிறார். கணபதியின் திருவடியில் மிகப்பற்றினர். பிள்ளையாருக்கே இவர் முதன்மை தந்து பேசுவதாகப் பாடல்கள் உள. (8, 9) பிள்ளையார், பாரதம் வரை மேல் வரைந்தது, (பா. 7) முருகன் மாங்கனி பெற உலகை வலம் வந்தது (பா. 13), கணபதி அவுணரை வென்றது (பா. 10, 20) ஆகிய செய்திகளை இவர் மட்டுமே குறிக்கிறார். இவரைப் பற்றி வேறு செய்திகளை நாம் அறிய இயலவில்லை.

இவர் காலம் கி. பி. 6 என கா. சு. பிள்ளையும் கி. பி. 8 என மு. அருணாசலம் அவர்களும், கி. பி. 9 இறுதி 10 முற்பகுதி என வெள்ளைவாரணனாரும் கூறுகிறார்கள்.[2] கி. பி. 9 எனக் கொள்ளலாம்.

கபில தேவநாயனார்

(வரலாறு)

தமிழகத்தில் கபிலர் என்ற பெயரில் ஐவர் இருந்தனர்.

1. குறிஞ்சிப் பாட்டு அகம்—புறம் முதலான சங்க நூல்கள் செய்த கபிலர்.

2. இன்னாநாற்பது செய்த கபிலர்.

3 11ஆம் திருமுறையில் பிரபந்தம் செய்த கபிலர்.

4. பன்னிருபாட்டியலில் நூற்பா செய்த கபிலர்.

5. கபிலர் அகவல் செய்த கபிலர்.

6. திருவள்ளுவர் மாலையில் ''நெட்டிலை யிருப்பை'' என்ற பாடலைப் பாடியவர்.

என்றாங்குப் பல கபிலரைப் பற்றித் தெரிகிறோம். இவரெல்லாம் ஒருவரா? வெவ்வேறு புலவரா? ஒருவரே பல நூல் செய்தனரா?

இவரெல்லாம் ஒரே கபிலர் என்ற கருத்துப்பட வேங்கடசாமி நாட்டார் எழுதினார்.[1] இன்னாநாற்பதும் 11ஆம் திருமுறையும் செய்தவர் ஒருவரே என்ற கருத்தைக் கலைக்களஞ்சியக் கட்டுரை ஆசிரியர் மொழிந்தார்.[2] இன்னாநாற்பதும், பன்னிருபடலமும் செய்தவர் ஒருவராம் என்ற கருத்தை மர்ரே அன் கோ பதினெண் கீழ்க்கணக்குப் பதிப்புரையில் காணலாம்.[3]

திருவள்ளுவர் மாலையில் காணலாகும் பாட்டு, மிகப் பிற்காலத்தில் கபிலர் பெயரில் யாரோ ஒருவர் செய்தது, அல்லது அவர் பெயரும் கபிலராகவே இருந்திருக்கலாம்.

அங்ஙனமாயின் குறைந்தது ஐந்து கபிலர் வாழ்ந்தனர் என்று ஆகும். இவரெல்லாம் தனித்தனிப் புலவரே. இவர்கள் வாழ்ந்த காலமும் வெவ்வேறான காலமேயாம். அவை வருமாறு:-

1. சங்கக் கபிலர் காலம் கி. பி. 2

2. இன்னாநாற்பது இயற்றிய கபிலர் கி. பி. 8க்குப் பின்.[4]

3. 11ஆம் திருமுறைக் கபிலர் கி. பி. 10

4. பன்னிரு பாட்டியலில் நூற்பா செய்தவர் கி. பி. 12

5. கபிலர் அகவல் என்னும் நூல் செய்தவர் கி. பி.15[5]

கபிலரைப் பற்றிய புராணக் கதைகள் - நான்கு பெரு வழக்கின.[6]

(அ) இறைவன் புலவர்களின் திறம் தெரியச் சங்கப் பலகை தந்தபோது நக்கீரர் போன்ற தேர்ந்த புலவர்கள் அமர வந்தகாலைச் சங்கப் பலகை நீண்டு இடந்தந்தது. கபிலர் அமர்ந்தபோதும், சங்கப் பலகை இடந்தந்தது. இது, திருவாலவாயுடையார் புராணத்திலும், பரஞ்சோதியார் புராணத்திலும் கூறப்பட்டது.

(ஆ) இறையனார் செய்த களவியலுக்குக் கபிலர் உரை கூறும் போது, உண்மையான உரையை உருத்திரசன்மன் கேட்டு மெய்சிலிர்த்துக் கண்ணீர் வார்த்தார் என்ற கதை மேற்கூறிய இரு திருவிளையாடல்களிலும் இயம்பியதே!

(இ) திருவள்ளுவர் சரித்திரம், வேறு ஒரு கதை தருகிறது. பகவன்-ஆதி என்போருக்குக் கபிலர் திருவாரூரில் பிறந்தார் என அது பேசும்.

(ஈ) கபிலர் அகவல், இக்கதையை உள்ளடக்கிக் கூறுவதோடு, இளவயதில் கபிலருக்கு உபநயனம் செய்ய வளர்ப்புத் தந்தை முயன்றார்; பார்ப்பார் மறுத்தார்கள் எனவும் அப்போது கபிலர் மனம் வருந்திப் பிறப்பில் ஏற்றத்தாழ் வில்லை. சீலத்தில் தான் உயர்வு தாழ்வு உண்டு என்றும் கூறித் தன் வரலாற்றையும் நீளப் பகர்ந்தார்.

இக்கதைகள் யாவும் 11ஆம் திருமுறையாசிரியரான கபில தேவநாயனாரோடு இயைபில்லாதவை. 12ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் எழுந்த நூல்களில் இவை கண்டவை. ஆகவே இவற்றைத் திருமுறைக் கவிஞரோடு இணைப்பது பயனில்லை.

11ஆம் திருமுறைக் கவிஞரான கபிலதேவநாயனார் வேறானவரா?

(1) திருமுறைக் கபிலதேவநாயனாரைத் திருமுறையில் "தேவ நாயனார்" என அழைத்திருத்தல் காண்க.

(2) இவர் திருவிரட்டை மணிமாலை, அந்தாதி என்ற பிற்கால யாப்புக்களை ஆள்வதால் சங்க காலத்தவர் அல்லர்.

(3) சிவபெருமான்—முத்தநாயனார் என்ற பெயர்களும் சங்கப் புலவர்கள் காலத்து இல்லை.

(4) சோழநாட்டுப் பதிகள் 38, இவர் நூல்களில் வருகின்றன. இவை, தேவார ஆசிரியர்கள் காலத்துப் புகழ்பெற்று, இவர் நூல் செய்தபோது இடம்பெற்றன. ஆகவே, இவர் காலம் சங்ககாலமில்லை.

(5) பிள்ளையார் வழிபாடே, சங்ககாலத்து இல்லை, இவரோ பிள்ளையாருக்கு 40 பாடல்கள் பாடினார்.

(6) ஏகதந்தம், (மூத்த 10) நாகபந்தம் (மூத்த 10) சிங்கம் (மூத்த 12) முதலான வடசொற் கிளவி வருதல் நோக்குக.

(7) அ. சண்டீசுவரர் கதை. (சிவ. இர. 2)

ஆ. மார்க்கண்டேயர் கதை (சிவ. அந். 4) ஆகியவை வருகின்றன. இவை சங்ககாலத்தில் வழக்கில் இல்லை.

(8) அடியோமை ...'ஓம்' சாரியை—வருதல்- (சிவ. இர. 15) நட்டமாகின்றன. "கின்று" நிகழ்கால இடைநிலை வருதல் (சிவ. அந். 60) இவ்விலக்கண வழக்குச் சங்ககாலத்தில் இல்லை.

முன்சுட்டிய மற்றைய புலவர்கள் நடையும் இக்கவிஞர் நடையும் வேறுபடும். ஆதலின் இவர், வேறானவரே.

காலம்:

கி. பி. 6லிருந்து கி. பி. 10 வரை இவர் காலத்தைக் கூறுவர்.

உரையாசிரியர் இளம்பூரணர் மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலையில் இருந்து எடுத்துக்காட்டுத் தருகிறார்.[7] அவர் காலம் கி. பி. 12 என்ப. ஆதலின் அதற்கு முந்தியவர் இப்புலவர்.

இவர் காலம் கி. பி. 10 என மு. அருணாசலம் அவர்கள் நிறுவுவது காண்க.[8]

பரண தேவநாயனார்

(வரலாறு)

தண்டமிழகத்தே பரணர் என்ற பெயரில் சங்க காலத்திலேயே பலர் வாழ்ந்தனர். அவர்களை அடையாளம் தெரிய அடைச் சொற்களால் பிரித்தோதினர். தொல்பரணர், வன்பரணர், நெடுங்கழுத்துப்பரணர், பரணர் என்றாங்கு அழைத்தனர். இடைக்காலத்திலும் பரணர் பெயரில் நால்வர் வாழ்ந்தனர்.

1. அகம்-புறம் போன்ற நூல்களில் தொகைப்படுத்திய பாடல்களை இயற்றிய பரணர்.

2. பதினொராந்திருமுறையில் பிரபந்தம் செய்த பரண தேவநாயனார்.

3. பன்னிரு பாட்டியலில் சூத்திரஞ்செய்த பரணர்.

4. ''மாலுங் குறளாய்'' எனத் தொடங்கும் திருவள்ளுவ மாலையில் (பா. 6) பாடலைச்செய்த பரணர்.

இந்நால்வரும் வெவ்வேறு புலவர்களே; ஒருவரல்லர்.[1]

பரண தேவநாயனார் இவரிலும் வேறானவர் என்பதைக் கீழ்வரும் காரணங்களால் அறியலாம்.

பாட்டியல் இலக்கணம் இடைக்காலத்தே தோன்றியது. அதில் எழுத்துக்களையே அரசசாதி, மறையவர் சாதி என்றாங்குப் பேசுவதும், விட எழுத்துக்கள் என்று காட்டுவதும் வடமொழி மரபாம். பரணர் பெயரில் சூ. 5, 6, 7-24 என்று வருபவை, இச்செய்திகளைக் கூறும். இவை சங்கப்புலவர் கட்கோ, பிரபந்தப் புலவர்களுக்கோ ஒவ்வா. ஆகவே. இச் சூத்திரத்தைச் செய்த பரணர், பிற்பட்டவர். இந்நூல் கி. பி 12ஆம் நூற்றாண்டினது [1]

'மாலும் குறளாய்'' என்ற திருவள்ளுவமாலைப் பாடலைப் பாடியவரும் பிற்காலத்தவரே, திருவள்ளுவரிடம் பற்றுடைய ஒருவரோ பலரோ திருவள்ளுவ மாலையை யாத்துச் சங்கப்புலவர் பெயர்களை இட்டனர். அது பிற்பட்ட நூல் என்பார் கா. கோவிந்தன்.[2] திருவள்ளுவமாலை கி. பி. 12ஆம் நூற்றாண்டினது என்பது டாக்டர் தெ. பொ மீனாட்சிசுந்தரனார் கருத்து.[3] ஆகவே, இந்தப் பாடலை எழுதியவருக்கும் பிரபந்தம் செய்த பரண தேவநாயனார்க்கும் தொடர்பில்லை.

சங்கப்புலவரினும் பிரபந்தப்பரண தேவநாயனார் வேறான வர் என்பதற்கான காரணங்களைக் காணலாம்.

(அ) இலக்கணவகையால் பார்த்தாலும் பிரபந்தப்பரணர் வேறு பட்டவரே·

1. பதினொராந்திருமுறையில் பரணர் பாடிய நூல், வெண்பா அந்தாதியமைப்பில் உள்ளது, யமகமும் காணப்படு கிறது.

2. ஊர்ப் பெயர்கள் தேவார காலத்துப் பெயர்களாக உள்ளன. மேலும் அப்பெயர்களைச் சிலேடையாக இவர் கையாளுகிறார். (பா. 13. 15).

3. நானுடைய மாடு (பா. 47), காணீர்கள் (பா 67) என்ற இலக்கண அமைப்பைக் காண்க.

(ஆ) சொல்வகையாகப் பார்த்தாலும் வேறுபாடு தெரியும். பற்பல வடசொற்களைச் சங்க காலத்தில் வழக்கில் இல்லாதவைகளைக் காணலாம்.

அர்ச்சித்து (11) ஆதிவிடங்கா (57), வீதிவிடங்கா (97), சிவலோகம் (77), ஞானச்சுடர் (47). கங்காளன் (21), தத்துவம் (7) இங்ஙனம் வருப.

(இ) தேவாரகாலத்துப் பதிகள் 35ஐ இவர் கூறியுள்ளார். பின்னிணைப்புக் காண்க.

(ஈ) திரு ஐந்தெழுத்தைப் பற்றி இவர் குறிப்பிட்டுள்ளார் (பா, 100)

(உ) சண்டீசுவரர் வரலாற்றையும் (பா. 11). கண்ணப்பர் வரலாற்றையும் (பா. 28) சுட்டியுள்ளார்.

மேற்சொன்ன காரணங்களால் பிரபந்தம் செய்த பரண தேவநாயனார் சங்க காலத்தவர் அல்லர் என்பதாம், சங்கப் பலகை கொடுத்த வரலாறு. உருத்திரசன்மன் உரை கேட்டு உவந்த வரலாறு ஆகிய இவ்விரு வரலாற்றோடும் பரணர் தொடர்புபடுத்தப்படுவார். இவைபற்றி நம்பி திருவிளையாடல் பரஞ்சோதி திருவிளையாடல், கடம்பவன புராணம், ஹலாஸ்ய மஹாத்மியம் ஆகிய நான்கும் பேசும். இவை கி. பி. 12க்கும் பிற்பட்ட புராணங்கள், இவற்றோடு பிரபந்தம் செய்த பரணர் தொடர்பில்லாதவர். இதனை, கா. கோவிந்தன் அவர்கள் விளக்கி விவரிப்பது அறியத்தகும்.[4]

இவர்காலத்தை கி. பி. 7, கி. பி. 9, கி. பி. 10, கி. பி. 13 எனப் பலவாறு கூறுவர். கி. பி. 10ஆம் நூற்றாண்டு என திரு மு. அருணாசலம் ந. சி. க. வும் கூறுவது கருதத்தகும்.[5]

கல்லாட தேவநாயனார்

(வரலாறு)

ஒரே பெயருடைய புலவர் பலர் இருந்ததாகக் கூறுதல் தமிழ் இலக்கிய வரலாற்றில் மிகுந்து காணப்படும் ஒரு வழக்கம். இதனால், புகழ்வாய்ந்த புலவர்கள் பெயர், மீண்டும் மக்களுக்கு வைக்கப்பட்டதாகக் கருதினாலும் அப்பெயரில் வேறு புலவர்கள் நிலைபேறு கருதிச் செய்யுள் செய்தனர் என்பதும் ஒரு கருத்தாம். இந்த விதி கல்லாடருக்கும் பொருந்தும். தமிழ் வரலாற்றில் ஆறு கல்லாடர்களைப் பற்றிக் கேட்கிறோம்,

1) சங்க நூல்களான அகம்–புறம் முதலான நூல்களில் செய்யுள் செய்த கல்லாடர். (கி.பி.2)

2) 11ஆம் திருமுறையில் 'திருக்கண்ணப்ப தேவர் திருமறம்' செய்த கல்லாட தேவநாயனார். (கி.பி.10)

3) திருவள்ளுவ மாலையில் ''ஒன்றே பொருளெனின் வேறென்ப''–என்ற பாடலைச் செய்த கல்லாடர் (கி.பி. 12)

4) பன்னிருபாட்டியலில் சூத்திரம் செய்த கல்லாடர் (கி.பி.12)

5) கல்லாடம் என்னும் அகப்பொருள் நூல்செய்த கல்லாடர் (கி. பி. 13)

6) தொல்காப்பியத்திற்குக் கல்லாடம் என்னும் உரை செய்த கல்லாடர் (கி. பி. 15)

இவர்கள் யாவரும் ஒருவர் அல்லர். வெவ்வேறு காலங்களில் வாழ்ந்தவர்களே!

திருவள்ளுவர் மாலையும் பன்னிருபாட்டியலும் பிற்காலத்தவை. கல்லாடம் என்ற அகப்பொருள் செய்தவர் இருந்த காலம் கி பி. 13 என டாக்டர் இராசமாணிக்கனார் கருதுவர்.[1] சதாசிவபண்டாரத்தாரும் இக்கருத்தினர்.[2] சிவனது திருவிளையாடல்களைக் கூறுதலாலும், அதன் நடை வேறுபடுதலாலும் இவ்வாசிரியர், பிறரின் வேறானவர்.

கல்லாடர் என்பவர் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரை வகுத்தோரில் ஒருவர். இவரது காலம் கி.பி. 15 அல்லது 16 ஆம் நூற்றாண்டாக இருக்கும் என்பார் திரு மு, வை. அரவிந்தன்.[3]

சங்கக்கல்லாடரினும் திருமுறைக் கல்லாட தேவநாயனார் வேறானவர் என்பதைக் காணலாம்.

அ) "திருக்கண்ணப்ப தேவர் திரு மறம்" என்ற தலைப்பைக் காண்க. திருமுறையில் இது ஒன்றே கல்லாடர் செய்தது. கண்ணப்பர் வரலாறு சங்க காலத்தில் அறியப்படாதது, திருமறம் என்ற பிரபந்தமும் புதிது.

ஆ) உத்திரியன் (வரி.8) சங்கரன் (13) போனகம் (18) கலசம் (20) கோசரி (25) நயனம் (30) என்றாங்குச் சொற்கள் பயின்று வருப. இவை சங்க நாளில் கேட்கப் படாதன.

இ) புலவர் பெயரில், கல்லாட தேவ நாயனார் என்று இருத்தலை நோக்குக.

ஆதலின் இக்கவிஞர்கள் வெவ்வேறு புலவர்கள் என்பது ஒருதலை.

இவர் காலத்தைப் பலவாறு மொழிவர், கா. சு. பிள்ளை கி.பி. 6 எனவும், டாக்டர் இராசமாணிக்கனார் கி.பி. 9க்கும் முன்பு எனவும் க. வெள்ளைவாரணனார் கி.பி. 9க்குப்பின் எனவும் மு. அருணாசலம் கி.பி. 10 எனவும் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை கி.பி. 13 எனவும் கருதுகிறார்கள்.[4]

இக்கவிமுழுதும் ஓதி உணரின் கி. பி. 10ஆம் நூற்றாண்டு என்று கருதலாம்.

பட்டினத்தார்

(வரலாறு)

பட்டினத்துப்பிள்ளையார், பட்டினத்துப்பிள்ளை, பட்டினத்து அடிகள், பட்டினத்தார், பட்டணசாமி, திருவெண்காடர், திருவெண்காட்டடிகள், என்ற பெயர்களால் இவர் அழைக்கப்படுகிறார். பதினொராந் திருமுறையில் இவரது நூல்களாக ஐந்து பனுவல்கள் உள.

'பட்டினத்தார்' என்ற பெயரில் இவண் ஆராயலாம். இவரது வரலாற்றை அறிய மூன்று நூல்கள் உதவுகின்றன. 1) பட்டணத்துப்பிள்ளையார் புராணம் 2. திருவெண்காட்டடிகள் சரிதம், 3. புலவர் புராணம். 'பட்டினத்தாரின் பிரபந்தம்' வெளி வந்த போதெல்லாம் ஒவ்வொரு சரிதம் அவற்றுடன் வெளி வந்திருப்பினும் அவை இம்மூன்று நூல்களின் அடிப்படையில் எழுதப்பட்டவையே!

"திருவெண்காட்டடிகள் புராணம் என்னும் பட்டணத்துப் பிள்ளையார் புராண மூலமும், தி. வடிவேலு முதலியாரவர்கள் இயற்றிய விசேடண உதாரணங்களோடு கூடிய பொழிப் புரையும்" என்று நூல் காணப்படுகிறது ஆகவே, அந்நூல் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. அவர் வாழ்ந்த காலமும் தெரிய வில்லை. இது பாயிரம்-பூம்புகார்ச் சருக்கம்-ஆட்கொண்ட சருக்கம்-துறவறச் சருக்கம், ஆகிய மூன்று சருக்கங்களாக 336 விருத்தப்பாச் செய்யுட்களைக் கொண்டிருக்கிறது. தாம் கேட்டறிந்தவற்றைக் கொண்டும், பெரியோர்கள் தொடர்ந்து கூறும் செய்திகளைக் கொண்டும் வடநூல் ஆதாரங்களைத் தாம் நோக்காமலும் நூல்செய்ததாக இந்நூலாசிரியர் கூறுகிறார்.[1]

'திருவெண்காட்டடிகள் சரித்திரம்' என்பது 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தொழுவூர் வேலாயுத முதலியார் எழுதிய உரைநடைநூல்; கி பி. 1886ல் வெளிவந்தது. இது புராண ஒழுங்கையொட்டி பௌராணிக முறைப்படி எழுதப் பட்டிருக் கிறது. இதற்கு மூலநூல், பவிஷ்யோத்தர புராணத்துள் திருவிடை-மருதூர் மான்மியமென்று கூறுவர். ''பூர்வத்தில் நைமிசாரணி-யத்திலே ஸ்ரீ உபமன்னிய பகவான் தம் மாணாக்கர்களாகிய பல முனிவர்கட்குக் கூறிய 'பவிஷ்யோத்தர புராணத்தில்' இக்கதை வருவதாகத் தொடங்குகிறது.

19ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் வாழ்ந்த தண்டபாணி சுவாமிகள் என்ற முருகதாசர் தாமியற்றிய "புலவர் புராணம்" என்ற நூலைச் செய்யுள் வடிவில் செய்தார். இதில் சில புதுமைகளைப் புகுத்திப் பட்டினத்தார் வரலாற்றைச் செய்தார். இதில் சிற்சில கதைவேறுபாடு காணப்படினும் பொதுவான கூறுகள் மாறவில்லை.

இம்மூன்று வரலாறுகள் பற்றியும் எஸ், அனவரத விநாயகம் பிள்ளை ஒரு சிற்றாய்வு செய்திருக்கிறார்.[2] பல அச்சுப் புத்தகங்-களில் இன்று வெளிவந்திருக்கும் பட்டினத்தார் கதை, தொழுவூர் வேலாயுத முதலியார் எழுதிய கதையைத் தழுவியதாகும். ஆகவே இக்கதை செல்வாக்கோடு பரவியது எனலாம். இதிற்கண்ட முக்கிய கதைகள்-கூறுகள் மற்ற இரு நூல்களிலும் அப்படியே வருகின்றன. ஆகவே, வேலாயுத முதலியார் கூறும் கதையை நம் நடையில் கீழே காணலாம்

குபேரன் சகமார்க்கத்தின் மூலம் சிவபிரானின் தோழனாய் விளங்கினான். சிவனோடு குபேரன் கேதாரம், காசி, காளத்தி ஆகிய தலங்கட்கு வந்தனன். காவிரிப்பூம்பட்டினத்து அழகும் அமைப்பும் குபேரனைக் கவர்ந்தன. குபேரன் ஆண்டுத் தங்க விழைந்தனன். சிவபெருமான் அவன் வினைப்பயனை எண்ணி, 'நீ மக்களுள் பிறந்து இங்கு வாழ்க!" என்றார். மானிடயாக்கை எய்தல் வேண்டும் என்றதும் குபேரன் மயங்கி, தான் செல்வம் முதலியவற்றால் தருக்குற்ற போது தம்மைக் காத்தருள வேண்டு மென வேண்டினன். சிவபிரான், அங்ஙனமே அருள் சுரந்து கயிலை மீண்டார்.

குபேரன் காவிரிப் பூம்பட்டினத்தில் வணிகர் குலத்தில் சிவநேசருக்கும், ஞான கலையம்மையார்க்கும் ஒரு பெண்மக விற்குப் பின், மகனாகப் பிறந்தனன். பெற்றோர், திருவெண் காடர்' என்று பெயரிட்டனர். இவரது ஐந்தாவது அகவையில் சிவநேசர் இறைவன் திருவடியடைந்தார். தாயின் பொறுப்பில் வளர்ந்து ஆயகலைகளில் தேர்ந்து சிவபூசை விருப்பினராய் விளங்கினார். உற்றகுருவைப் பெற்றுச் சிவபூசையைச் சிறப்புற இயற்றச் சிவனே-வேதியர் வடிவில் தோன்றி, 'நாளை திருவெண் காட்டுக் கோயிலில் இறைவழிபாடு இயற்றிக் காத்திரு; அங்கொரு வேதியர், உன் பூசைக்குரிய சிவலிங்கம் தந்து உபதேச நன் மொழியும் பகர்வார் என்றார். மறுநாள் தாயும் மகனும் கனவில் கேட்ட மொழிப்படி நடந்தனர். திருவெண்காட்டில், கோவிலில் குரு வருகைக்காகத் திருவெண்காடர் காத்திருந்தார். கண்ணுதற்

கடவுளே குருவடிவில் வந்து, பஞ்சாட்சரத்தை மொழிந்து ஒரு சிறு சிமிழையும் கொடுத்தார். "இதில் நீ முற்பிறவியில் பூசித்த ஆன்ம நாயகர் - சிவலிங்கம் உள்ளது. விதிப்படி பூசனை இயற்றுக" என்றார். பிறரால் திறக்கவியலாதிருந்த அச்சிமிழ் திருவெண்காடர் கைப்பட்ட அளவில் திறந்தது. அதில் அரு உருவப் பெருமானாகிய சிவலிங்கமொன்றும், விநாயகர் ஒன்றும் காணப்பட்டன. அன்று முதல் ஆண்டவர் பூசையும் அடியார் பூசையும் திருவெண்காடர் வழுவின்றிச் செய்துவந்தனர்.

ஆசானுக்குக் குரு காணிக்கை கொடுக்க விரும்பிய திருவெண் காடர், தாயிடம் கூறினார். தக்க பொருளின்மையை எண்ணித் தாம் வருந்தினார். மெய்யடியாராதலின் வருதுயர் தீர்க்கும் வாலறிவன் சிவபெருமான், திருவெண்காடருக்குச் செல்வம் உண்டாகும்படி செய்தார். குருவிற்கும் கொடுத்துச் சிவனடியார் களையும் மனம் களிக்கச் செய்தார். ஆசான் ஒரு மண்டலம் இருந்து பின் போயினர்.

திருவெண்காடர் காளைப் பருவம் எய்தினார். அவ்வூர்ச் சிவசிதம்பரச் செட்டியார் மகள் சிவகலையை மணந்தார். இல்லறத்தில் முப்பதாண்டு கழிந்த பின்னும் மகப்பேறு வாய்க்கப் பெறவில்லை. திருவிடைமருதூர் இறைவனிடம் விண்ணப் பித்தனர்.

திருவிடைமருதூரில் சிவசருமர் என்ற அந்தணர் ஒருவர் இருந்தார். அவர் மகாலிங்கரை முப்போதும் வணங்குபவர். சிவனடியார்க்குச் செல்வத்தைச் செலவிட்டவர். ஆகவே வறுமையில் உழன்றார். அவர் மனைவி சுசிலையார், அவரும் அடியாரைப் பேணும் இயல்பினர். இருவரும் மகாலிங்கரைப் பூசித்து வந்தனர். இறைவன் இவர்களின் பக்திக்கு மெச்சி வறுமையை நீக்க விரும்பி அவர்கள் தம் கனவில் தோன்றி "வேதியரே" நம் தோழன் குபேரன் மானுடப் பிறப்பெய்தி காவிரிப் பூம்பட்டினத்தில் உள்ளான். அவனுக்கு அருள் செய்யும் காலம் வந்துற்றது. அவனுக்குப் புதல்வனாய் நாமே வருவோம். நீர் குபேரனான திருவெண்காடனிடம் நம்மை விற்றுப் பொருள்பெற்று மகிழ்க" என மொழிந்து மறைந்தார். மறையவர் மகிழ்ந்து, வியந்து விதிர்விதிர்த்தார். கனவில் கேட்ட மொழிப்படி, குழந்தையைக் கோயில் வில்வமரத்தடியில் கண்டெடுத்தார். மறையவர் எடுத்துக் கொண்டுவந்து, திருவெண் காடரிடம் சேர்த்தார். அவர் பிள்ளையின் எடைக்கெடைப்

பொன் கொடுத்துக் குழவியை ஏற்றார். அந்தணர், பிள்ளைப் பிரிவால் வருந்த, வெண்காடர் தேற்றி அனுப்பினார். பிள்ளைக்கு விழா எடுத்து மருதவாணர் என்று பெயரிட்டார்கள். தெய்வக் குழவி பருவம் எய்திப் பிள்ளை விளையாட்டுக்களை இயற்றியது.

ஒருநாள், படகில் கடலில் செல்லுங்கால், இவர்கள் படகில் இருந்த சிறுவன் ஒருவனைப் பெரு மீனொன்று விழுங்க வந்தது. மருதவாணர் எட்டி உதைத்தார். மீன் பருவுடல் நீத்தது. தெய்வ மகன் வெளிப்பட்டுத் தான் 'மணிக்கிரீவன்' என்றும், முனிவர் கடுமொழியில் இங்ஙனம் ஆனதாகவும்கூறி மருதவாணரின் கால்பட்ட உதவியால் பழம்பிறவி எய்திய மாட்சியைக்கூறி நன்றி பாராட்டி நீங்கினான். மற்றொருநாள் பிறநாட்டானொருவன் பருமணியொன்றைத் திருவெண்காடரிடம் கொடுத்து விலைக்குக் கொள்க என வேண்டினன். மருதவாணர் இதனைக் கண்டு அந்த மணி குற்றம் உடையது என்று கூறி உடைத்துக்காட்டித் தம் அறிவு தோற்றினார் தமது பதினாறாவது அகவையில் கடல் வணிகம் புரிய விரும்பி, விடைகொண்டு பிறதீவு சென்றார். நல் வணிகம் இயற்றினார். ஊர் திரும்புங்கால் தம்முடன் வரட்டி மூட்டையும், அவல் கடலை மூட்டையுமே கொண்டுவந்தார். உடன் வந்தவர்கள் இவர் செயலைக் கண்டு எள்ளினர். ஊர் திரும்பும்போது, காற்று மழை வந்தது. கப்பல் திசை தப்பின. குளிரால் தோழர் வருந்தினர். மருதவாணரிடம் வரட்டியும் அவலும் கடனாகக் கேட்டனர். ஊர் திரும்பியதும் தம் வரட்டியை ஒத்தவரட்டியை அல்லது எடைக்கெடை கொடுத்தால் போதும் எனச் சொல்லிச் சீட்டும் எழுதி வாங்கிக்கொண்டு வரட்டிகளை நிறுத்துக் கொடுத்தார். ஊர் திரும்பியதும் தோழர் கள் வழி திருவெண்காடர் செய்தியறிந்தார் மரக்கலத்தில் வெறும் வரட்டியும் அவல் கடலை மூட்டையும் கண்டு திகைத்தார் முழுதும் உசாவுதல் வேண்டும் என்று மனம்கொண்டு மைந்தரை மற்றுமோர் மாளிகையில் காவலில் வைத்தார். கலத்தில் இருந்த பெட்டியில் ஒரு வரட்டியும் நறுக்கோலையும் கண்டார். சோதித்தார். வரட்டியைப் பிட்டுப் பார்த்தபோது அதனுள் மாணிக்கம் இருந்தது. எல்லா வரட்டிகளையும் பார்த்தார். எல்லாவற்றிலும் அவ்வாறே இருந்தன. அவல் மூட்டையில் பொன் மணல் கலந்திருந்தது. ஓலையைப் பார்த்தார் அது பிறர் எழுதிக்கொடுத்த கடன் சீட்டு. திருவெண்காடர் உண்மையை யறிந்து மைந்தரைத் தழுவக் காவல் மனைக்கோடினார். மனை யில் மருதவாணரில்லை; எங்கும் தேடியும் காணவில்லை,

திருவெண்காடரின் மனைவி, ஒரு சிறு பெட்டியை அவரிடம் கொடுத்துத் "தங்கள் மைந்தர் கொடுக்கச் சொன்னார்" என்றார். பெட்டியினுள் ஒரு காதற்ற ஊசியும், ஓர் ஓலை நறுக்கும் இருக்கக் கண்டார். ஓலையில், 'காதற்ற ஊசியும் வாராது காணுங் கடை வழிக்கே' என்றிருந்தது. நிலையாமையை உணர்ந்தார். துறவி யானார். திருவெண்காடரின் தாய் தன் முதுமை பற்றிக் கூறித் தடுத்தார். தாய்க்கு இறுதிக் கடன் இறுக்கும்வரை அவ்வூர் எல்லையில் இருப்பதற்கு இசைந்தார்.

தம் நண்பரும் கணக்கருமான சேந்தனாரை அழைத்தார். "பண்டாரத்தைத் திறந்து விடுக யாவரும் பொருள் கொள்ள விடுக" என்றார். மனைவி, சுற்றத்தாரைப் பிரிந்து ஊர் அம்பலம் அடைந்தார். அரசன் இவர் செயலை அறிந்தான் - சேந்தனாரை அழைத்துத் திருவெண்காடர் செல்வம் பற்றிக் கேட்க, அவர் விடையில் நிறைவு கொள்ளாத அரசன் சேந்தனாரைச் சிறைப் படுத்தினான். திருவெண்காடர் இருந்த இடத்திற்கு அரசன் வந்து "இதனால் நீர் பெற்ற பயன் என்னை?' என வினவ "நீர் நிற்க; நாமிருக்க" என அடிகள் விடைபகர்ந்தார்.

தாய் இறந்தபோது, விறகிட்டு எரிக்காமல் வாழைப்பட்டை யால் எரித்து இறுதிக் கடன் செய்தார் திருவிடைமருதூர் சென்று 'திருவிடைமருதூர் மும்மணிக்கோவை' பாடினார். பின் திருவாரூர் சென்றார். தம் சீடன் ஒருவனுக்கு மணம் நிறைவேறும்படி செய்தார். அவன் இறந்துபட்டபோது, மீண்டும் உயிர் பெறுமாறு செய்தார். பின்பு பாண்டித் தலங்களைப் பார்த்த பிறகு, கொங்கு நாடு சென்றார். அங்கு ஒரு முரடனால் அடியுண்டார். பின் துளுவநாடு சென்று உஞ்சேனை மாகாளம் அடைந்து மாகாளேசுவரரை வணங்கினார்.

அந்நகரை ஆண்டவர், பத்திரிகிரியார். அவரது அரண் மனையில் நிதியங்களைக் கள்வர் களவாடிக்கொண்டு திரும்புங் கால், அந்நகர்க் கணபதிக்கு நன்றி காட்டும் முகமாகத் திருடர்கள் ஓர் ஆரத்தை கணபதி கழுத்தில் எறிந்தனர். அக் கோவிலில் நிட்டை கூடியிருந்த அடிகள் கழுத்தில் ஆரம் விழுந்தது. களவு போனதை அறிந்த அரண்மனைக் காவலர் நகர்முழுதும் தேடினர். அடிகள்பால் ஆரமிருக்கக் கண்டு காவலர் அடிகளை அரசரிடம் உய்த்தனர். அரசர் கழுவில் ஏற்ற ஆணையிட்டார். கழுமுன் நின்ற அடிகள், "என்செயலாவது யாதொன்று மில்லை" என்ற பாடலைப் பாடிய அளவில் கழுமரம்

தீப்பற்றியது யாவரும் வியந்து அடிமையாயினர். பத்திரகிரியார் அடிமையாகிச் சீடரானார். அவரைத் திருவிடைமருதூருக்குச் செல்ல ஆணையிட்டார். அடிகள் வடநாட்டில் பல தலங்களைக் கண்ட பின் திருவிடைமருதூர் மீண்டார். அடிகள் அங்குக் கீழக்கோபுர வாயிலிலும், பத்திரகிரியார் மேலக்கோபுர வாயிலிலும் தங்கினர். பத்திரகிரியார் இரந்துவந்த உணவைக் குரு நிவேதனமானபின் மிச்சிலைத் தாமுண்டு வாழ்ந்தார். ஒருநாள் மிச்சிலை உண்ணப் புகுங்கால் பசியால் வாடிய பெட்டை ஞமலியொன்று அவர் முன் நின்றது. அவர் கருணை விழியை நோக்கியது. அவர் அந் நாய்க்கும் சிறிது மிச்சிலை வழங்கினார். அன்று தொட்டு அது அவரைப் பிரியாதாயிற்று. ஒருநாள் தவசி ஒருவர் (திருவிடை மருதூரார்) பட்டினத்தடிகளிடம், 'என்பசிகளைக' எனக் கேட்ட போது, 'யான் கோவணமேபாரம் என்று உள்ளேன். மேலைக் கோபுரவாயிலில் ஒரு குடும்பி உளன். அவன் பால் செல்க எனக் கூறி விடுத்தார். செய்தி அறிந்த பத்திரகிரியார், "இரந்துண்ணும் ஓடும், எச்சில் உண்ணும் நாயுமோ என்னைக் குடும்பியாக்கின" என வருந்தி ஓட்டினை எறிய, அது நாய் மேல் பட்டு, நாய் இறந்தது. பிச்சைபுக்க துறவியும் உடன் மறைந்தார். பத்திர கிரியார் 'மெய்ஞ்ஞானப் புலம்பல்' முதலிய பாடல்களை அருளினார்.

நாய், புண்ணிய வரத்தால், காசியில் அரசன் மகளாய்ப் பிறந்து தக்க பருவம் எய்தி மணம் கொள்ளும் காலத்தில், அப் பெண் முற்பிறவிக் கதையை உணர்ந்து பத்திரகிரியாரிடம் தன்னைச் சேர்ப்பிக்குமாறு வேண்ட, அவ்வரசன் அங்ஙனம் செய்தான். பத்திரகிரியர் "பெருமான் மிச்சிலை உண்ட நாய்க்குப் பிறவித்துயர் வரலாமா" என விண்ணப்பிக்க, ஆண்டுச் சிவசோதி தோன்றியது. சிவபெருமான் ஆணைப்படி பத்திரகிரியாரும் அவ்வரசன் மகளும் சோதியிற் கலந்தனர்.

அடிகள், தமக்குத் திருவடிப்பேறு கிட்டாமை கருதி வருந்தினார். இறைவன் "நம் ஒற்றியூர்க்கு வா!" என ஆணை யிட்டார். அடிகள் வணங்கி விடை பெற்று மீண்டும் திருவெண் காட்டிற்கு வந்தார். அங்குத் திருவிசைப்பா பாடினார்.

திருவெண்காட்டில் தங்கியபோது அடிகளிடம் சேந்தனா ரின் மனைவியும் மகனும் வந்து சேந்தனார் சிறைப்பட்ட செய்தியைக் கூறி வருந்தினர். அடிகள் 'மத்தளை தயிருண்டா னாம்' என்ற பாடலைப் பாட, கணேசர் சேந்தனார் தளையை

நீக்கி, அடிகள்முன் அவரை நிறுத்தினார். சேந்தனார் துறவு விரும்பியபோது, அடிகள் தடுத்து, "நீ காட்டுவிறகின் சிறு பொருள் கொண்டு சிவனடியாரைப் பேணித் தில்லையில் வாழுதி" எனப் பணித்தார். பின் அடிகள் சீகாழி நோக்கிச் சென்றார். தில்லையில் ஒருநாள் மழையால் திருத்தேர் ஓட வில்லை சேந்தனார் பல்லாண்டு பாடினார்; தேர் ஓடியது. சேந்தனார் களியமுதை நடராசர்க்குத் தினமும் நிவேதனம் செய்து இறைஞ்சும் மாட்சியும் சோழ அரசனால் அறியப்பட்டது.

சீகாழி வந்த அடிகள் திருக்கழுமல மும்மணிக்கோவை பாடினார். சிதம்பரத்தில் கோயில்நான்மணிமாலை பாடினார் பின் 'பாற்கடல் கடைய' என்னும் அடைக்கலத் திருவருள் பாடிச் சபாநாயகரிடம் விடைகொண்டு திருப்பாதிரிப்புலியூர் திருவந்தாதி, திருவேகம்பமாலை கச்சித்திருவகவல் முதலிய பாடல்களை அருளினார். இங்கு அடிகள் பசியால் வருந்தியபோது, காமாட்சி யம்மை அந்தணர் மாதாக வந்து அமுதளித்தார். பின்னர்காளத்தி கண்டு, ஒற்றியூர் அடைந்தார். அங்குத் திருவொற்றியூர்த்தொகை பாடினார். திருவொற்றியூரில் ஆடு மாடு மேய்க்கும் பிள்ளை களுடன் விளையாடினார். அவர்கட்கும் விளங்கும் வகையில் முதல்வன் முறையீடு, புலம்பல், பூரணமாலை, நெஞ்சோடு மகிழ்தல், உடற்கூற்றுவண்ணம் ஆகியவற்றை அருளினார். ஒருநாள் அச்சிறார்களை அழைத்து ஓரிடத்து மறைந்தும் மற்று மோர் இடத்துத் தோன்றியும் விளையாடினார். அவர்களிடம் ஒருமுறை வெளிப்படாமல் சிவலிங்க வடிவாக முளைத்தார் என்பது திருவெங்காடர் சரிதம்.

மேலே கூறிய சரித்திரச் செய்திகளின் முக்கிய கூறுகள் பட்டினத்துப் பிள்ளையார் புராணத்திலும் புலவர் புராணத்திலும் வருகின்றன, ஆகவே அவற்றை மீண்டும் விவரிக்கத் தேவை யில்லை. ஆயினும் இம்மூன்று நூல்களில் சிற்சிலவேறுபாடுகளும் உள. அவ்வேறுபாடுகளைக் கண்டால் புராணப் புனைவில் உள்ள வளர்ச்சி – மெய்ம்மை விளங்கும். ஆதலின் மூன்றி லும் காணப்படும் வேறுபாடுகளை மட்டும் கீழே காண்போம்.

1. பட்டினத்துப்பிள்ளையார் புராணத்தில் மட்டும் காணப்படும் செய்திகள்:

1) இந்நூலில் திருவெண்காடரின் பெற்றோர் பெயரில்லை. மாமாவின் பெயரும், மனைவியின் பெயரும் இல்லை.

2) சிவசருமராகிய வேதியர், மறுமணம் செய்துகொள்வதற்காகப் பிள்ளையை விற்ற தாய்க் கூறல்.

3) சிவபெருமான் வயது வந்த பாலகனாக வந்து தம்மை விலை கொள்ளுமாறு கூறினார் என்று இந்நூல் மொழிகிறது. சிவசருமர், சிறுபிள்ளையை வில்வ மரத்தடியில் கண்டதாய்ப் பிற நூல்கள் கூறும்.

4) மருதவாணர் தீவொன்றில் வணிகத்தின் பொருட்டுத் தங்கிய போது மலையைப் பிளந்து கோயில் கட்டியது.

5) மருதவாணர், தம் தந்தைக்கு நேரே உலக நிலையாமை முதலியன கூறி உபதேசம் செய்ததாய்க் கூறல் குரு வரவு பற்றிக் குறிப்பில்லை.

6) மருதவாணர் தாய்மூலம் கொடுத்தனுப்பிய பெட்டியில் சாடு ஊசி மட்டும் வைத்தல். மொழியேதும் இல்லை.

7) "காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே!" என்ற அடி இந்நூலில் கூறப்படவில்லை.

8) பட்டினத்தார் துறவு ஏற்றபின் திருவெண்காட்டில் இறைவனைப் பணிந்தேத்தச் சென்றபோது, மாணிக்க ஆடையொன்றை அந்தணர் வழங்க, இவர் உதறிப் பீற்றல் ஆடையாக்கித் தாம் ஆசை அறுத்த திறம் காட்டினார்.

9) இவ்வூரில் புறத்திண்ணையில் நோயால் வருந்திப்படுத்திருந்த போது சிவபெருமான் ஊர்க்காவலர்போல் வந்து உதைத் தெழுப்பி மறைதல். இறைவன் காற்சுவடு பெற்றமைக்கு மகிழ்தல்.

10) இந்நூல் திருக்குடந்தையில் சீடனுக்கு மணம் முடித்ததாகக் கூறும் (தி.வெ கா. சரிதம் திருவாரூர் என்று பேசும்).

11) சேந்தனார் படைத்த களியயின்ற காரணத்தால், தில்லைக் கோயில் மணியோசை கேட்பிக்கத் தாமதமெனச் சிவன் சோழனார்க்குக் கூறியது

12) சிதம்பரத்தில் சிவகாமசுந்தரி அடிகட்கு உணவிடுதல்.

13) கச்சியில் அடிகள் முரடனால் அடிபடுதல்

மேலே கண்ட செய்திகள், பட்டினத்துப்பிள்ளையார் புராணத்தில் மட்டும் காணப்படும்.

2. இனி, திருவெண்காட்டடிகள் சரித்திரமாகிய உரைநடை நூலில் மட்டும் காணப்படும் செய்திகளைக் காண்போம்.

1) குபேரனே, வேளாளருள் வேளாண் செட்டியாராகப் பிறந்தார் எனல். திருவெண்காடரின் பெற்றோர் பெயர் சிவநேசர்-ஞானகலை-மாமா பெயர் சிவசிதம்பரஞ் செட்டியார். அவர் மகள் சிவகலை எனப் பெயர்களைக் குறித்தல்.

2) திருவெண்காடரின் ஐந்தாம் அகவையில் தந்தையிறப்பு-தாய் பொறுப்பு.

3) திருவெண்காடர் ஆசானை எதிர்பார்த்திருத்தல் - சிவன் கனவில் கூறுதல். குருவின் சிறப்பு-குருதட்சணைக்கு ஏங்கல், சிவன் அருள்-இவை பற்றி விரித்தல்.

4) திருவெண்காடருக்கு 30 வயது வரையில் ஆண் மகவு இல்லை.

5) சிவசருமரின் கதை மிக விரிவு. சிவன் வில்வமரத்தடியில் குழவியாய் வருதல்.

6) துலையில் எடைக்கெடை பொன்னிட்டு மகவைப் பெறுதல் (முன்னூல் ஆயிரம் பொன் கொடுத்து வாங்கியதாகக் கூறல்) சிவசருமர் பாலனின் பிரிவிற்கு ஆற்றாமை. திருவெண்காடர் மகவின் படமும் ஒரு மடலும் பின்னர் அனுப்புதல்.

7) மருதவாணரின் பிள்ளை விளையாட்டு (அ) மீனுக்குச் சாப விடை (ஆ) விலை மதிப்பில்லா மணியின் குற்றம் இதுவென இளம் வயதில் காட்டல்.

8) 12ஆம் ஆண்டில் வணிகத்திற்குத் தீவுகட்குப் போதல். வரட்டியுடன் அவல் முட்டை கொண்டு வந்ததாய்க் கூறுதல்.

9) எல்லாவரட்டியிலும் மாணிக்கம் இருந்ததாகக் கூறல். (முன்னூலில் இது இல்லை).

10) "காதற்ற ஊசியும் வாராது காணும் கடை வழிக்கே" என்ற தொடர் இருத்தல்.

11) திருவாரூரில் சீடனுக்கு மணம் முடித்ததாய்க் காட்டல் (ஊர்ப் பெயரில் மாற்றம்) (அங்கு, குடந்தை).

12) கொங்கு நாட்டில் முரடரால் அடிகள் ஆடிபடல் (முன்னூலில் கச்சி).

13) உஞ்சேனை மாகாளம் போதல்-கள்ளரால் சிக்கல்-பத்திர கிரியார் சீடராதல்-பெட்டைநாய் முத்தி பெறல், ஆகிய கதை (பட்டினத்துப் பிள்ளையார் புராணத்தில் இல்லை) புலவர் புராணத்தில் பத்திரகிரியார் சீடராதல் மட்டும் உண்டு.

14) கச்சியில் காமாட்சியம்மை உணவூட்டல் (மற்ற இரு நூல் களில் இல்லை).

15) முதல்வன் முறையீடு. அருட்புலம்பல் முதலான செய்யுட்கள் பற்றிய குறிப்பு முன்னூலில் இல்லை.

16) சீகாழியில் திருக்கழுமல மும்மணிக்கோவை பாடியதை முன்னூல் கூறவில்லை. இது கூறுதல், அடிகளின் தமக்கை யார் விடஅப்பம் கொடுத்த செய்தியும் 'ஓட்டப்பம் வீட்டைச் சுடும்' என்ற தொடரும் இதில் இல்லை. இத்தகு வேறுபாடுகளைக் காண்கிறோம்.

8. புலவர் புராணத்தில் கண்ட சிறப்புச் செய்திகள் வருமாறு:

1) பெற்றோர் பெயரில்லை. குபேரன் காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்ததாய்க் கூறல். திருவெண்காடருக்குப் பட்டினத்தார் என்ற பெயருண்டு என்று முதன் முறையாக மொழிதல்.

2) பட்டினத்தாருக்குப் பரணர் குலத்தையுற்றாரர் நட்பினர் அவரே, அடிகட்குக் குருவாகி உபதேசித்தார் என்ற புதிய செய்தி கூறல்.

3) சிவதருமர் பெயரில்லை ஆதிசைவர் எனல். இவரின் வறுமை போக்க வளர்ந்த பாலகனாகச் சிவன் வந்ததாய்க் கூறல்.

4) விலைக்குப் பிள்ளையை வாங்கும் முன்பு பிள்ளையின் தகுதியை அறிய விரும்பல். பிள்ளை, ஒரு மணியைச் சரியாக விலைமதித்தல்.

5) கடல் வணிகத்திற்குச் சென்ற பிள்ளை, கடன் வாங்கியதாகக் கூறுதல். இது புதிய செய்தி.

6) காவல் மனையில் பிள்ளையைப் பார்க்கத் தாய் போன போது அவள் கைபட்டுப் பூட்டுத் தானேயுந் திறத்தல்.

7) பிள்ளை மறைந்ததும் பட்டினத்தார் தாமே கடல் வணிகம் சென்று நட்டப்படுதல்.

8) அரசன், கோடீசுவரர்கள் தம் மனை மீது கோடிக்கொரு கலசம் வைக்கலாம் என அறிவித்தமை.

9) பட்டினத்தார், அரசனிடம் மணியொன்றைக் காட்டி மதிக்குமாறு கேட்டல்.

10) நாடு திரும்பியபின், பட்டினத்தார் பாணபத்திரரின் மனைவியார் தந்த முடிச்சை அவிழ்த்துப் பார்க்க அதில் சில ஊசிகளும் சீட்டும் இருத்தல்—இது முற்றும் புதிய செய்தி. இதைக் கண்டு அடிகள் துறவு பூணல்.

11) சேந்தனார் தளைநீக்கம் பற்றிக் கூறினார், களிநிவேதனம், தேரோட்டம் சோழன் கதையில்லை.

12) 'சிவன் குருவடிவாய் வந்து பேய்க்கரும்பு தந்து இக்கரும்பு எத்தலத்தில் தித்திக்குமோ அதுவே உனக்கு முத்தித்தலம்' என மொழிதல்-இதுவும் புதிய செய்திகளில் முக்கியமானது. இது பிறவற்றில் இல்லை

13) அடிகட்கு நாகைக் காரோணத்தில் (நாகப்பட்டினம்) அம்பிகை பொற்கிண்ணத்தில் சோறு தருதல். அரசனின் காவலர் பிடித்து வரல். அரசன் கழுவேற்றக் கூறல். கழுமரம் எரிதல். அரசனுக்கும் அம்மை உண்மையை உணர்த்தல். (இங்குக் கதை மாற்றியிருத்தலை நோக்குக)

14) மதுரையில் கற்பரசி ஒருத்தி அடிகட்குச் சோறிட்டுப் புரத்தல். அடிகள் மதுரையில் அடிபடல் (இவை புதிய செய்தி).

15) பத்திரகிரியார் கதை சுருங்கிய அளவில் வரல். சீடரானார் என்று மட்டும் கூறுதல். கள்ளர் கதையோ நாய்-முத்தி பெற்ற கதையோ இல்லை.

16) திருவிடைமருதூரில் அடிகள் நீர் வேட்கையால் துயர்ப்பட்ட போது, ஈசனே நீர்கொடுத்தல்.

17 வடதிசைப் பயணம். வழியில் இறைவனும் இறைவியும் வந்து, வீடும், பந்தலும் உண்டாக்கி, அடிகளைப் பேணிப் பின்னர் யாவும் மறைதல்.

மேலே கண்ட செய்திகள், புலவர் புராணத்துள் மட்டும் காணப்படுபவை ஈண்டுக் கண்ட வேறுபாடுகள் புராண ஆசிரியர் கருத்துகட்கு ஏற்ப மாறுபடுகின்றன. பத்திரகிரியார் கதை, சேந்தனார் கதை, ஒவ்வொன்றிலும் விரிந்தும் சுருங்கியும் வருகின்றன

பட்டினத்தடிகள் கதையில் வேறு ஒரு கதை இணைந்து வழங்குகின்றது.

தலப்பயணத்தின் பொருட்டுத் திருவண்ணாமலைக்கு அடிகள் சென்றிருந்தபோது அங்கு ஓர் உருத்திரகணிகையைக் கண்டு காமுற்று அவளைக் கூட விரும்பி அழைத்தார் என்றும் அவள் மறுத்து ஒதுங்கிச் சென்றுவிடவே, சுக்கிலத்தை ஓர் இலையில் பெய்து வைத்திருந்தார் என்றும் மீண்டும் அக்கணிகை தானாக வந்தபோது, அதை உட்கொள்ளச் செய்தார் என்றும் அவளுக்குப் பிறந்தவரே அருணகிரிநாதர் என்றும் ஒரு கதை வழங்குகிறது.[3] இக்கதை "புலவர் புராணத்தில் வேறிடத்திலும், திருவெண்காட்டடிகள் சரித்திர முகவுரையிலும் சுட்டப்பட்டது." என அனவரத விநாயகம் பிள்ளை குறிக்கிறார்[4] இது காலக் கணிப்பாலும் பிற காரணங்களாலும் பொருந்துமாறில்லை என்பதை அனவரத விநாயகம் பிள்ளையவர்களும், கா. சு. பிள்ளையவர்களும், க. வெள்ளைவாரணன் அவர்களும் மறுத்துள்ளனர்[5]

இந்நூல்களுள் திருவெண்காட்டடிகள் சரிதமும் புலவர் புராணமும் 19ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்டவை. உண்மை சிறிதும் புராணக்கூறு மிகுந்தும் இருத்தல் இயல்பே. பட்டினத்துப் பிள்ளையார் புராணம் "இற்றைக்குச் சற்றேறக்குறைய ஐந்நூறு வருடங்கட்கு முன்னரே சிதம்பரத்தில் வசித்திருந்த சைவாதீனத் தம்பிரானொருவர் அத்தலவாசிகளாகிய பல பெரியோர்களின் வேண்டுகோட்கிணங்கி [கர்ண பரம்பரையாகத் தாமுமுணர்ந் துள்ள வரையில் ஞாபகப்படுத்தி ஒருவாறு செய்திருப்பதாக" இந்நூலின் பொழிப்புரைகாரர் தி. வடிவேலு முதலியார் முகவுரையில் குறிக்கிறார்.[6] ஆகவே, அடிகள் தோன்றிய சில நூற்றாண்டு கட்குப்பின், இவை எழுந்தன என்பதாம். இங்கு மற்றுமோர் தெளிவு வேண்டும். பட்டினத்தார் ஒருவரா? பலரா?, பலராயின் எத்துணை பேர்? மேலே கண்ட வரலாறு ஒருவருக்குரியதா? இல்லை பலரின் வரலாறும் கலந்திருக்கிறதா? எனக் காணுதல் வேண்டும்.

கபிலர், பரணர், நக்கீரர் என்ற பெயரில் பலர் இருந்ததாக முன்பு சுட்டியதுபோல, பட்டினத்தாரிலும் பலர் இருந்திருக்கிறார்கள்.

1. பதினோராம் திருமுறையில் ஐந்து பிரபந்தங்களைப் பாடிய பட்டினத்தார் ஒருவர். இவரே நம் ஆய்வுக்கு உரியவர்.

2. 'பட்டினத்தடிகள் திருப்பாடற்றிரட்டு' என்ற தொகை நூலில் முதலாவது கோயிற்றிருவகவல் முதல் பொதுத் தலப் பாடல்கள் ஈறாக 195 பாடல்களைப் பாடியவர் இவர் சித்தர் வகையில் எண்ணப்பட்டு சித்தர்கள் நூலிலும் இவர் பாடல்கள் வைக்கப்பட்டுள்ளன. இவர் இரண்டாம் பட்டினத்தார்'.[7]

இவ்விருவரும் ஒருவர் அல்லர் என்பது கா. சு. பிள்ளையவர்கள் கருத்து. அவர் கூற்று வருமாறு –

"பதினொராந் திருமுறையிலே பட்டினத்தடிகள் திருவருட் பாடலாகச் சேர்க்கப்பட்டவை......ஐந்து பிரபந்தங்களே. அவற்றின் பாடல்கள் உயர்ந்த செவ்விய நற்றமிழ்ப் பெருமித நடையில் அமைந்துள்ளன. அவற்றின் சொல்நடை ஆயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட செந்தமிழ்ச் சிறுகாப்பியங்களின் மொழியமைப்பினை ஒத்திருக்கின்றது. சிறுபான்மையே வடசொற்கள் விரவியுள்ளன" ....இன்றமிழ் நல்லிசைப் பேரருட் புலவர் ஒருவரது அமுதச் செழும் பாடற்றொகுதிகளாக அடிகளுடைய சிறு காப்பியங்கள் காணப்படுகின்றன."

"அவற்றோடு இற்றைக்கு இருநூறு அல்லது முந்நூறு ஆண்டுகட்கு முன் பட்டினத்துப்பிள்ளையார் என்ற பெயர் வாய்ந்த எளிய துறவி யொருவரால் உலக வழக்கு மொழிகளைக் கொண்டு இயற்றப்பட்ட பாட்டுக்களையும் உடன் சேர்த்துப் பட்டினத்தடிகள் பாடலென்று பேசும் தப்பு வழக்கம் ஏற்பட்டு விட்டது"[8] என்பார் கா. சு, பிள்ளை.

வித்துவான் மு. அருணாசலம் பிள்ளையவர்களும் இவ்விரு பட்டினத்தாருக்கும் உள்ள வேறுபாடுகளை நன்கு விளக்கினர். "பெயர் ஒற்றுமைகொண்டு ஒருவரேயெனக் கூறல் இயலாது. இதனை இவ்விருதிறத்தாரும் இயற்றியுள்ள பாடல்களின் சொல்நடை, பொருள் அமைதி முதவியவற்றால் நன்கு அறியலாம். இவ்வாறே பதினொராந்திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ள

கோயில் நான்மணிமாலை முதலிய ஐந்து நூல்களை இயற்றிய பட்டினத்துப்பிள்ளையாரும், கோயில் திரு அகவல் கச்சித்திரு அகவல், திருவேகம்பமாலை, திருத்தில்லைமாலை, பொது, பூரணமாலை, நெஞ்சொடு புலம்பல் நெஞ்சொடு மகிழ்தல், உடற்கூற்று வண்ணம் என்பவற்றையும் பிற தனிப்பாடல்களை யும் இயற்றிய பட்டினத்தாரும் ஒருவராயிருத்தல் ஒல்லாது'' என்றார்.[9]

'' பட்டினத்துப் பிள்ளையார் பாடல்களில் அமைந்துள்ள உயர்ந்த சொல்நடையும் கருத்தாழமும் பின்னவராகிய பட்டினத்தார் பாடல்களில் இல்லை.'' என்ற மு. அருணாசலம் பிள்ளை கூற்றால் தெரியலாம்.[10]

திரு க. வெள்ளைவாரணர் இருவேறு பட்டினத்தார் இருந்த னர் என்று கருதுவர்.

'' பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடற்றிரட்டில் ஏகரித்து, ஒப்பாரி, ஒய்யாரம், கலங்கிறண்டா, சவ்வாது, சலவை, சொகுசு, தாவாரம், பல்லாக்கு, பொக்கசம், பொம்மலாட்டம், போச்சுதடி, மாய்கை, மாங்கிஷம்' முழித்திருந்து, வங்கிஷம். வேட்டி, வேலை மினக்கிட்டு முதலிய பிற்காலச் சொற்களும் பிழைப்பட்ட சொல்லுருவங்களாகிய இழிசினர் வழக்குச் சொற்களும் இடம் பெற்றுள்ளன.'' ....பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடற் றிரட்டு என்ற பெயருடன் வழங்கும் பாடற்றொகுதி, பதினொ ராந்திருமுறை ஆசிரியருள் ஒருவராகிய திருவெண்காட்டடிகள் வாக்கல்ல'' என்று குறிப்பர்[11] வெள்ளைவாரணனார்.

ஔவை சு. துரைசாமி பிள்ளையவர்களும் இருவேறு பட்டினத்தார் இருந்தனர் எனவும் பிரபந்தத் திரட்டாசிரியரான பட்டினத்தார் அருளியவை திருமுறைப் பட்டினத்தார் வாக்கல்ல என்றும் கூறுவர்.[12]

1972-இல் விரிந்த அளவில் தமிழ் இலக்கிய வரலாறு வரைந்த மு. அருணாசலம் அவர்கள் மட்டும் பட்டினத்தார் மூவர் என்று விளக்கினார். மேலே கூறிய இருவரோடன்றி முறையீடு, இரங்கல், ஞானம் ஆகியவற்றின் ஆசிரியரான பிற்காலப் பட்டினத்தார் ஒருவரும் உண்டு என விளம்பினார்.

(1) திருமுறைப் பட்டினத்தார் -

ஐந்து பிரபந்தம்- 11-ஆம் திருமுறை யில் உள்ளவற்றைச் செய்தனர்.	10ஆம் நூற்றாண்டு	196 பாடல்கள்

(2) சித்தர் பட்டினத்தார் -

பாடல் திரட்டில் கண்ட அகவல், திருவேகம்பமாலை, தலப்பாடல்கள், தனிப்பாடல்கள், உடற்கூற்று வண்ணம்.	14ஆம் நூற்றாண்டு	195 பாடல்கள்

(3) பிற்காலப் பட்டினத்தார் -

முறையீடு, இரங்கல் ஞானம்,	17ஆம் நூற்றாண்டு	246 பாடல்கள்

என்று அவர் தெளிவுபடுத்துகிறார்.[13] இது நமக்கு ஒரு புதிய ஒளியைத் தருகிறது. மூவர் பாடல்களையும் படித்தால் இவ் வுண்மையும் புலனாகிறது

இம் மூன்று பட்டினத்தாருக்கும் இன்று ஒரே வரலாறுதான் வழங்குகிறது. எல்லாப் பாடல்களையும் ஒருவரே பாடியதாக திருவெண்காட்டடிகள் சரித்திரம் பேசுகிறது. ஆ. சிங்காரவேலு முதலியார் பதிப்பித்த பட்டினத்துப் பிள்ளையார் பிரபந்தத் திரட்டு' என்ற நூலிலும் எல்லாப் பாடல்களும் (திருமுறைப் பாடல்கள் உட்பட) ஒன்றாகவே பதிப்பிக்கப்பட்டன. ஈக்காடு இரத்தின முதலியார் இந்நூலின் முற்பகுதியில் எழுதியிருக்கும் பட்டினத்தார் வரலாற்றிலும், முதல்வன் முறையீடு, அருட் புலம்பல் ஆகியவற்றை எழுதியவரும், திருக்கழுமல மும்மணிக் கோவை எழுதிய திருமுறைப் பட்டினத்தாரும் ஒருவரே என்ற கருத்தில் எழுதுகிறார்.[14]

இதற்குக் காரணம் என்ன?

(1) பெயர் ஒற்றுமை (2) இவ்விருவருமே உலக நிலை யாமை, மக்கள் ஒழுக்கம், அறநெறிகளை வற்புறுத்தும் முறை (3) ஒரே பதிகளைப் பற்றி இருவரும் பாடியமை. இவை ஒரே படித்தாய் உள்ளமை; மூன்றாமவர் பெயரும் ஒன்றாய்

இருந்தமை. ஆயினும் இவர்களின் மொழிநடையும், கற்பனை யும் வேறுபடுகின்றன. ஆராய்ச்சி மனநிலை பெருகாமையாலும், மொழிநூல் ஆய்வு வளராமையாலும், பத்திக்கண் ஒன்று மட்டுமே கொண்டு அந்நாளை அறிஞர் பதிப்பித்தமையாலும், குழப்பம் ஏற்பட்டது. இலக்கிய நோக்கிலும், மொழி நூல் அறிவோடும் இன்று பார்ப்பதால் சிக்கல்கள் அவிழ்கின்றன.

வரலாறு - அகச்சான்றுகள்:

11ஆம் திருமுறையில் உள்ள நூல்களைக்கொண்டு பார்க்குங்கால் பட்டினத்தார் வரலாறாகக் கீழ்க்காணும் உண்மை களை ஒப்புக்கொள்ளலாம். (1) இறைவன் உறையும் பகுதி களை அடுக்கிக் கூறும்போது வெண்காடு என்ற பதியைக் குறிக்கிறார். (திருவேக. திருவந்தாதி 61) மற்றுமோர் இடத்தில் ''என்றன் சிந்தையுளாகிவெண் காடனென்னும் தலத்திலுமாயது நின்னடியாம். தெய்வத் தாமரையே'' - (திரு வி ம. மும்மணிக் கோவை, பா. 30) என்றும் கூறுவதால் இவர் வாழ்ந்தபதி திருவெண்காடென்பதும், இவர் பெயர் அக்காரணம் பற்றித் திருவெண்காடர் என வழங்கிற்று என்பதுமாம்.

2) திரைகடல் ஓடிப் பொருள் திரட்டிய வணிகர் குலத்தில் பிறந்து, இவர் இருநிதிக் கிழவராய் விளங்கியிருக்க வேண்டும். கடல் வணிகம் பற்றி 3 இடங்களில் அடிகள் உருவகமாகக் கூறுகிறார். அடிகள், உலக வாழ்வைத் துறந்தபோது உடலைக் கலமாகவும், தீயொழுக்கம் பொய், பிணி துயரம் இவற்றைச் சரக்காகவும், வினையைக் கப்பலோட்டியாகவும் கரு நிலையைக் கடற்றுறையாகவும், புலன்களைச் சுறாமீனாகவும், பிறவியைக் கடலாகவும் துயரங்களை அலையாகவும் குடும்பத்தை நங்கூர மாகவும். நிறையைக் கூம்பாகவும், உணர்வைப் பாயாகவும், உருவகம் செய்து இக்கலம் கவிழும் முன்பு, இறைவன் திருவடி யாகிய நெடுங்கரையை எய்த வேண்டும் என்று உரைக்கிறார். (கோயில். நா. மாலை 16) மற்றுமோர் இடத்தில்,

இருளுறு பவ்வத் தெத்திரங் கடாஅய்த்
துன்றுதிரைப் பரப்பிற் குன்றுபார்த் தியங்கியும்

(கோயில் நா. மணி. 20 : 7-8), என்று பகர்கிறார். பிறிதோர் இடத்தில்

" நாவா யாகிய நாதநின் பாதம்
முந்திச் சென்று முறைமையின் வணங்கிச்
சிந்தைக் கூம்பினைச் செவ்விதின் நிறுத்தி
உருகிய ஆர்வப் பாய்விரித் தார்த்துப்
பெருகிய நிறையெனும் கயிற்றிடைப் பிணித்துத்
துன்னிய சுற்றத் தொடர்க்கயி றறுத்து
மன்னிய ஒருமைப் பொறியினை முறுக்கிக்
காமப் பாரெனும் கடுவளி அற்ற
தூமச் சோதிச் சுடர்க்கூற நிறுத்திச்
சுருங்கா உணர்ச்சித் துடுப்பினைத் துழாவி
நெருங்கா அளவில் நீள்இரை ஏற்ற
வாங்க யாத்திரை போக்குதி போலும் "

(திருவொற்றியூர் ஒரு பா. 8)

என்றும் இயம்புவதால் இவர் வணிகக் குடியில் பிறந்தவர் என்றறியலாம். மிகச் சிறந்த செல்வக் குடியில் பிறந்து இன்ப வாழ்க்கை வாழ்ந்தவர் என்பது திருவிடைமருதூர் மும்மணிக் கோவைப் பாடலால் தெரிகிறது. இவ்வின்பியல் வாழ்வு திருவிடை மருதூர் மும்மணிக்கோவைப் பாடல் 19ல் வரி 30 முதல் 81ம் வரி வரை 51 வரிகளில் விரிவாக விளக்கப்படுகிறது.

" இரண்டு நாட்டமும் புரண்டுகடை மிளிர்தர
மதியென மாசறு வதனம் விளங்கப்
புதுவிரை அலங்கல் குழல்மிசைப் பொலியும்
அஞ்சொல் மடந்தையர் ஆகம் தோய்ந்தும்
சின்னம் பரப்பிய பொன்னின் கலத்தில்
அறுசுவை அடிசில் வறிதினி தருத்தாது
ஆடினர்க் கென்றும் பாடினர்க் கென்றும்
வாடினர்க் கென்றும் வரையாது கொடுத்தும்
பூசுவன பூசியும் புனைவன புனைந்தும்
தூசின் நல்லன தொடையிற் சேர்த்தியும்
ஐந்து புலன்களும் ஆர ஆர்ந்தும்
மைந்தரும் ஒக்கலும் மகிழ மனமகிழ்ந்து
இவ்வகை இருந்தோம், ஆயினும் அவ்வகை
மந்திர எழுத்தைந்தும் வாயிடை மறவாது
சிந்தை நின்வழி செலுத்தலின் அந்த
முத்தியும் இழந்திலம். "

(திருவிடை. ம. பா - 19 : 61-76 மடத்துப்பதிப்பு)

இஃது இவரது செல்வ வாழ்க்கையையும் துறவு வேட்கையையும் காட்டுவதாகும்.

3) இவர் நாளும் சிவபூசை மறவா நல்லன்பர். "என்றும் ஒருத்தனையே நோக்குவார் உள்ளத் திருக்கும் மருதன்" (திருவிடை. ம. 17) என்பர். ஒரு பாடலில் பிள்ளையார் முதல் முனிவர்கள் ஈறாக உள்ள பலரைச் சுருங்கிக் காட்டுவது, சிவபூசை முறையை நினைப்பிக்கிறது. (திருவிடை. ம. பா. 28 : 13–28) சிவபூசையில் பரிவாரத் தெய்வங்களை எழுந்தருளப் பண்ணும் முறை இதுவேயாம். ஆகவே இவர் சிவபூசைச் செல்வராய் விளங்கியிருக்கிறார்.

4) செல்வராக இருந்த இவர், பிறகு துறவறம் பூண்டிருக்க வேண்டும். துறவு வாழ்க்கையையும் விளக்கமாக விளம்புகிறார்.

" மக்களும் மனைவியும் ஒக்கலும் திருவும்
பொருளென நினையா துன்அரு ளினை நினைந்து
இந்திரச் செல்வமும் எட்டுச் சித்தியும்
வந்துழி வந்துழி மறுத்தனர் ஒதுங்கிச்
சின்னச் சீரை துன்னல் கோவணம்
அறுதற் கீளொடு பெறுவது புனைந்து
சிதவல் ஓடொன் றுதவுழி எடுத்தாங்கு
இடுவோர் உளரெனின் நிலையினின் றயின்று
படுதிரைப் பாயலிற் பனிமேவி ஒவாத்
தகவெனும் அரிவையைத் தழீஇ மகிவெனப்
பல்லுயிர் அனைத்தையும் ஒக்கப் பார்க்கும் நின்
செல்வக் கடவுள் தொண்டர் வாழ்வும் "

(திருவிடை. ம. 7 : 44-55)

என்ற அடிகளால் இவரது துறவு மனம் தெரியவரும். யாக்கையது இழிவைக் கூறும் பகுதியிலும் (திருவிடை ம. 13 : 5-13) இவரது துறவு மனம் தெரிகிறது.

" உண்டிப் பொருட்டாற் கண்டன வெஃகி
அவியடு நர்க்குச் சுவைபகர்ந் தேவி
ஆரா உண்டி அயின்றன ராகித்
தூராக் குழியைத் தூரத்து "

(திருவிடை. ம. 7 : 3–6)

என்ற இடங்களில் உண்டியால் வரும் கேட்டினையும் புலனடக்கத்திற்கு அது தடை என்பதையும் கூறுவதால் துறவு உள்ளம் அறியவரும். ஆகவே அடிகள் ஒருபோது துறவு ஏற்றார் என்று நினைக்கலாம். ஆயின் திடீர்த் துறவு கொண்டவர் அல்லர். அவர் மனம் சிறுகச் சிறுகச் செம்மைப்பட்டிருக்கிறது. செல்வ வாழ்க்கையில் ஈடுபட் டிருந்தபோதே இவர் சிவனை மறவாச் சிந்தையினராய் விளங்கினார்.

> "மைந்தரும் ஒக்கலும் மகிழ மனமகிழ்ந்து
> இவ்வகை இருந்தோம் ஆயினும் அவ்வகை
> மந்திர எழுத்தைந்தும் வாயிடை மறவாது
> சிந்தை நின்வழி செலுத்தலின்"
>
> (திருவிடை. ம. 19 : 72-75)

என்பது அவர் திருமொழி.

5) சைவ சமய அடியார்களின் வரலாறறிந்தவர். சைவ சித்தாந்த உண்மைகளைத் தெரிந்தவர். தேவாரத் திருவாசகத் திருக்கோவையார் நூல்களைப் பயின்றவர். தேவாரப் பதிகள் பலவற்றைத் தம் பாடல்களில் கூறியிருக்கிறார். திருவேகம்ப முடையார் திருவந்தாதியில் மட்டும் 54 தேவாரத் தலங்களைச் சுட்டுவர்.[15]

6) 11ஆம் திருமுறையில், 'திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது' என்ற பிரபந்தமும் ஒன்று. பட்டினத்தார் பாடல்களுள் இஃது இறுதியில் வைக்கப்பட்டுள்ளது.

திருவொற்றியூரில் அடிகள் பரமுத்தி அடைந்தார் என்ற நம்பிக்கையில் இஃது இறுதியில் வைக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறாயின் இந்நம்பிக்கை இந்நூல் தொகுத்த நம்பியாண்டார் காலத்திலேயே இருந்திருக்கிறது என்பதாம். பட்டினத்தாரின் திருவேகம்பமுடையார் திருவந்தாதியில் பதிகளைத் தொகுத்துக் கூறும் இடத்திலும் திருவான்மியூர் (பா. 65) ஒற்றியூர் (பா. 63) ஆகிய ஊர்களைக் குறிப்பிடுகிறார். ஆகவே அடிகள் வரலாற்றோடு ஒற்றியூர் தொடர்புடையதாகும். பின்னர் அடிகள் திருவொற்றியூரில் சமாதி அடைந்ததாய்க் கூறுதலை ஏற்றுக் கொள்ளலாம். இவை தவிர பிற வரலாற்றுக் குறிப்புகட்கு 11ஆம் திருமுறை நூலில் சான்றுகள் இல்லை.

குபேரன் என்பதற்கோ, காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்தார் என்பதற்கோ சான்றில்லை. சிவ சருமர் கதை, சேந்தனார்

வரலாறு, பத்திரகிரியார் கதை, நாய்முத்தியடைந்த கதை, சிவபிரானால் பேய்க்கரும்பு அருளப்பெற்ற கதை, கழுமரம் எரிந்த கதை ஆங்காங்கே இறைவனோ இறைவியோ தோன்றி நீரும், உணவும் உதவிய கதை-அடிகள் அடியுண்ட கதை ஆகியவற்றிற்கு 11ஆம் திருமுறையில் தக்க சான்றில்லை. இவை பௌராணிக நிலையில் பேசப்பட்டவையே.

வரலாற்றில் இரண்டாம் பட்டினத்தார் :

பிள்ளையை விலைக்குக் கொண்டது. 'காதற்ற ஊசியும் வாராது காணுங் கடை வழிக்கே' என்று தொடரைக் கண்டு உடன் துறவு பூண்டது, தாயாருக்கு இறுதிக் கடன் இயற்றியது, தமக்கையார் நஞ்சு பெய்த அப்பத்தை அடிகட்கு அளித்தது ஆகிய செய்திகள் இரண்டாம் பட்டினத்தாருக்கு உரியன ஆகலாம். இவரே நகரத்தார் மரபினராக இருத்தலும் சாலும். இது குறித்து திரு சோம லெ. அவர்கள் கூறும் கருத்துக் காணத் தரும்:–

1) பிள்ளையில்லாதவர்கள் பிள்ளையை விலை கொடுத்து வாங்கி வளரவந்த பிள்ளையாக வைத்துக் கொள்ளும் மரபு இவர்கள் பால் இன்றும் உண்டு.

2) சிவநேசச் செட்டியார் என்ற பெயரும் சிவசிதம்பரஞ் செட்டியார் என்ற பெயரும் இவர்களிடம் உண்டு.

3) கடல்வணிகமும், கணக்கு, கைப்பெட்டி வைத்திருத்தலும் இன்றும் இவர்களிடம் காணலாம்.

4) தாயார் (பா: 2) வட்டில் (பா: 3) ஆத்தாள் (பா: 5) கொள்ளி (பா 6) என்ற சொற்களை இச்சமூகத்தாரிடம் மிகுந்து கேட்கலாம் இச்சொற்களைப் பட்டினத்தாரின் தாயார் தகனக் கிரியைப் பாடலில் பார்க்கிறோம்.

5) 'அயல்வளவில்' என்ற சொல் திரு ஏகம்பமாலையில் (பா: 3) வருகிறது. "வளவு" என்ற சொல் இவர்களிடம் மட்டுமேயுண்டு. வளைத்து வளைத்துப் பெரிய இல்லங்களாகக் கட்டுகிறவர்கள் இவர்கள். 'தேட்டு' என்ற சொல்லும் இச் சமூகத்தாரிடம் மிகுதியும் உண்டு.

6) கடன் சீட்டுப் பெறாமல் தொகை வழங்கல் இச் சமூகத்தாரிடம் இல்லை,

7) நகரக்கோயில் 9இல் இளையாற்றங்குடிக்கோவில் பிரிவில்-பட்டினசாமியார் என்ற பிரிவு இன்றும் வழங்கிவருகிறது.

8) காவிரிப்பூம்பட்டினத்தில் இன்றும் நிகழும் பட்டினத்தார் விழாவும், சத்திர நிர்வாகமும் கண்டனூர் நகரத்தார்கள் நடத்துகிறார்கள்.

9) பிரான்மலை, நகரத்தார் வாழும் பகுதியில் உள்ள மலை. திருப்பத்தூருக்கருகில் உள்ளது. பிரான்மலைக் கல்வெட்டொன்றில் ''பட்டினசுவாமிகள் வணிகர் மாதாக்கள்'' என்று காணப்படுகின்றது.[16]

10) ''இங்குள்ள (காவிரிப்பூம்பட்டினத்தில்) கோவில்களில் பட்டினத்தடிகளின் பரம்பரையினர் என்ற காரணத்தால் செட்டியார் சமூகத்தில் பட்டினசாமி வகுப்பைச் சேர்ந்த ஒருவர் இன்றளவும் தருமகர்த்தாக்களுள் ஒருவராக இருந்து வருவது இங்கே குறிப்பிடத் தகுந்தவை'' என்று திரு சோமலெ கூறியிருப்பது கருதத்தகும்.[17]

மேலே கண்ட காரணங்கள், இரண்டாம் பட்டினத்தார், நகரத்தார் என்பதைக் காட்டும். இவர் காலம் கி. பி. 14ஆம் நூற்றாண்டு.

பட்டினத்தார் பாடல் திரட்டில் இன்று காணப்படும் முதல்வன் முறையீடு, இறந்த காலத்து இரங்கல், பட்டினத்தார் ஞானம் என்ற வெண்பா ஆகியவற்றை இயற்றியவர் மூன்றாம் பட்டினத்தார். இவர்காலம் கி. பி. 17 என முன்னர்க் கண்டோம்.

காலம்:

இனி 11ஆம் திருமுறையில் காணும் கோயில் நான்மணி மாலை முதலிய நூல்களைச் செய்த பட்டினத்தார் காலம் யாது? என்றாய்தல் வேண்டும்.

நம்பியாண்டார் நம்பி தாம்தொகுத்த தொகை! நூலில் பட்டினத்தார் பாடல்களைச் சேர்த்திருத்தலால் அவர் காலத்திற்கு முந்தியவராவர். நம்பியாண்டார் நம்பியின் காலம் கி. பி. 11ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். ஆகவே இதற்கு முந்தியவர் பட்டினத்தார் என்பதாம்.

பட்டினத்தார், திருக்கழுமல மும்மணிக்கோவையின் முதற் பாட்டில் "தோஓ டுடைய செவியன்" என்றும் பீடுடைய பெம் மான் என்றும்" கையில் சுட்டிக் காட்டிய திருஞானசம்பந்தர்க்கு இறைவன் தோன்றியதைக் கூறி ஞானத்திரளான திருஞான சம்பந்தன் என்றார். ஆகவே கி. பி. 7 ஆம் நூற்றாண்டுக்குப் பிந்தியவர் என்பதாம்.

திருவிடை மருதூர் மும்மணிக்கோவையில்—

"வித்தகப் பாடல் முத்திறத் தடியரும்
திருந்திய அன்பின் பெருந்துறைப் பிள்ளையும்"

(திருவிடை. ம. 28: 30–31)

என்ற அடியில் மணிவாசகரைக் கூறுவதால் அவர் காலமாகிய கி. பி. 9ஆம் நூற்றாண்டிற்குப்பின் வாழ்ந்தவர் என்பதாம். மேலும் அதே பாடலில் வரி 35 முதல் வரி 56 வரை 21 அடிகளில் பாண்டிய மன்னன் வரகுண தேவர் வரலாற்றைப் பற்றிக் கூறு கிறார். இவ்வரகுணன் முதலாம் வரகுணன் என்றும் இவர் காலம் கி. பி. 9ஆம் நூற்றாண்டு என்றும் இதுவே அடிகள் காலம் என்றும், கா. சு. பிள்ளை கருதுகிறார்.[18] இக்கருத்தையே வெள்ளைவாரணனாரும், ஔவை சு. துரைசாமி பிள்ளையவர் களும் கூறுவர்.[19]

பட்டினத்தார் முதல் வரகுணன் காலத்தவர் அல்லர். இரண் டாம் வரகுண பாண்டியன் அஃதாவது கி. பி. 10ஆம் நூற்றாண் டில் வாழ்ந்தவர் என்பதை அரசியல் வரலாற்று ஆராய்ச்சிகளோடு கண்டு காட்டி நிறுவுகிறார் மு. அருணாசலம் அவர்கள்.[20]

மற்றும் டாக்டர் மு. கோவிந்தசாமி, எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை, ந. சி. கந்தையாபிள்ளை, கலைக்களஞ்சியக் கட்டுரையாசிரியர், ஆகியோர் கி. பி. 10ஆம் நூற்றாண்டினர் என்பர். விவரம் பட்டியலில் காண்க.[21]

டாக்டர் மு. வ. கி. பி. 10 அல்லது 11ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று கருதுகிறார்.

நம்பியாண்டார் நம்பி

(வரலாறு)

முன்னுரை :

வடமொழி வியாசரின் பெரும் புகழுக்குக் காரணம் வேதத்தைத் தொகுத்தார் என்பதாம். தமிழில் அவர்க்கு நிகரான புகழைப்பெற்றவர், நம்பியாண்டார் நம்பியாவார். தமிழகத்தின் பத்தி இயக்க வரலாற்றையும் ஞானப் பனுவல்களின் ஏற்றத்தையும், அடியார்களின் தவ வாழ்க்கையையும் நாம் நன்கு அறியவும், உணரவும், உதவியவர், நம்பியாண்டார் நம்பியாவார். இவர் திருமுறைகளைத் தொகுத்தும், அடியார்கள் வரலாற்றை அந்தாதியாக விரித்தும் திருஞான சம்பந்தர்க்கு அரிய செந்தமிழ்ப் பாமாலைகள் புனைந்தும் சைவ உலகிற்கு ஞான ஞாயிறாக விளங்கினார் இவரது நன்முயற்சி தமிழ்த் தாயின் பொலிவிற்கு மேலும் காரணமாயிற்று. சைவ ஞான நூல்களை இவர் தொகுத்தார் என்பதால், வைணவ உலகிலும் புதுவேகமும் ஒளியும் பரவின இவர் காலத்தில் வாழ்ந்த நாதமுனிகளும் வைணவ இலக்கியங்களைத் தொகுத்தார்.[1] ஆகவே, பல்லாயிரம் பாடல்கள் மாலையாகித் தமிழ்த்தாயின் கழுத்தில் அணியாகி அழகூட்டின. தமிழ் உலகில் வாழையடி வாழையென வழங்கிவரும் இலக்கிய மரபும் செவ்வியும் பத்திச் சுவையால் மேலும் மெருகேறின யாப்பு வகையில் புதியன புகுந்த திருத்தடமும் தமிழ்த்திடமும் தெரியலாயின. ஆகவே, தமிழ் இலக்கிய வரலாற்றில் இம்முயற்சி, ஒரு குறிக்கத்தக்க மைல்கல் எனலாம்.

சங்க இலக்கியங்களைத் தொகுத்தமை முதல் முயற்சியாம். அதை ஒட்டி நிகழ்ந்த தொகை முயற்சி; கீழ்க்கணக்கு நூல்களே! இவைபோலத் தொகுக்கும் முயற்சி ஞானப்பனுவல்கட்கே அடுத்து நிகழ்ந்தது. இது மூன்றாம் முயற்சி, ஆகவே, முற்கூறிய இரண்டும்கூட, நம்பியாண்டார் நம்பிக்கு ஒருவாறு வழிகாட்டியிருக்கும். புறச் சமயத் தாக்குதல் முடிந்து ஓய்ந்து, தமிழகச் சமயங்கள் யாண்டும் விளக்கம் பெற்ற காலத்தில், இவர் இத் தொண்டில் ஈடுபட்டார் இதற்கு என்ன காரணம்? மீண்டும் தமிழ்ப் பனுவல்கள் குற்றுயிரும் குலையுயிருமாய்ச் சீரழிந்து போகாமல் உயிர்த்துடிப்புடன் வாழ்வாங்கு வாழ வைக்க வேண்டும் என்ற எண்ணம்தான்; அதற்குத் தொகைப்பணி தேவைப்பட்டது. பத்திப் பணியாகவும் தமிழ்ப் பணியாகவும்

கருதியே நம்பியாண்டார் நம்பி இத்திருப்பணியில் ஈடுபட்டார். அரசனின் ஆதரவும் வாய்த்தது. நல்ல பயிருக்கு, நீரும், உரமும் கிட்டினால் ஊட்டமாய் வளர்தல் போல, இப்பணிபயனும் நயனும் உடையதாயிற்று.

வரலாறு :

இவர் வரலாற்றை அறிய உதவுவன மூன்று நூல்கள். 1. திருமுறை கண்ட புராணம், 2. திருநாரையூர்த் தலபுராணம், 3. புலவர் புராணம். இவை தம்முள் சிற்சில வேறுபாடுகள் உள. இவற்றுள் தொகுப்பு முறையை விரிவாகப் பேசுவது, திருமுறை கண்ட புராணமாகும். அப்புராணம் கூறும் செய்திகளைக் கீழே காண்போம்.

திருநாரையூரில் ஆதிசைவர் ஒருவர் பொல்லாப் பிள்ளை யாருக்குப் பூசை செய்து வந்தார். இவர்க்கு நற்புதல்வர் ஒருவர் தோன்றினார். இவர் வளர்ந்து கல்வி பயிலும் சிறுவராய் இருந்த போது ஒருநாள் அப்பெரியவர் அயலூர் செல்ல நேர்ந்தது தன் பிள்ளையைப் பிள்ளையாருக்குப் பூசை செய்யுமாறு கூறி விட்டு அவர் சென்றார். பிள்ளை, தந்தையார் சொற்படி, பொல்லாப் பிள்ளையாரை வழுத்தி வணங்கிப் பூசை செய்து நிவேதனம் வைத்துப் பிள்ளையாரைத் திருவமுது செய்ய வேண்டினார். சுவாமி, உண்ணாமையால், நம்பி மனம் வருந்தித் தம் தலையைக் கல்லில் மோத முயன்றபோது இவரது மனவுறுதியையும், பத்தியையும் கண்டு, விநாயகர் "பொறு" என்று கூறித் திருவ முதை மிசைந்தார். மகிழ்ந்த நம்பி, 'இனிப்பள்ளி சென்றால் ஆசான் அடிப்பார்; ஆதலால் நீரே கல்விக் கலைகளைக் கற்பியும் என்று வேண்ட, விநாயகரும் அவ்வாறே அருளினார். நம்பியின் புகழ்எங்கும் பரவியது. விநாயகர்துதியாக திருநாரையூர்விநாயகர் இரட்டை மணிமாலை பாடினார். இஃது இங்ஙனம் நிகழ்ந்த காலை, திருவாரூரில் இருந்து ஆட்சி புரிந்த இராசராச மன்னன் இதனை அறிந்து பழவகை முதலியன பலவாகக் கொணர்ந்து, அவற்றை விநாயகருக்கு நிவேதனம் செய்யுமாறு வேண்ட, நம்பியாண்டாரும் பிள்ளையாரைத் துதிக்க, பிள்ளையார் அவற்றை உண்டார். அரசன் மகிழ்ந்து தன் மனக்கவலை ஒன்றை மாற்றுமாறு வேண்டினான். தேவார மூவர் பாடல்களில் சிலவற்றைத் தான் ஓதக் கேட்டதாகவும் அனைத்தையும் பெற விரும்புவதாயும், கூறினான். "தில்லைக் கூத்தன் திருச்சபையின் பக்கலில் மூவர் முதலிகளின் கைச்சாத்துடன் பாடல்கள்

அறையில் உள்ளன'' என்று பிள்ளையார் அருளினார்; திருத்தொண்டர் சரிதமும் அறிவித்தார். அரசன், தில்லைவாழ் அந்தணரை வேண்ட, அவர்கள் 'மூவர் வந்தாலன்றி அறைக் கதவம் திறவாது' என்றனர். அரசன் மூவர்க்கும் சிலை எடுப்பித்து, விழா நடத்தி, உலாவரச் செய்து திருமுறை உள்ள அறை எதிரில் நிறுத்தி அறையைத் திறப்பித்தான். அறையில் திருமுறை ஏடுகளைக் கறையான் முழுதும் மூடியிருந்தது. எண்ணெய் சொரிந்து மண்ணகற்றிப் பார்த்தான். ஏடுகள் பெரும்பகுதி சீர்குலைந்து இருந்தன. வருந்திய அரசன் கேட்குமாறு, ''மூவர் பாடலில் ஈண்டு வேண்டுவன மட்டும் வைத்தோம்'' என்று வானொலி எழுந்தது.

பின்னர், அரசன் தேவாரங்களைத் திருமுறைகளாக வகுக்குமாறு நம்பியாண்டாரை வேண்டினான். அவர், சம்பந்தர் பாடல்களை முதல் மூன்று திருமுறைகளாகவும், அப்பர் பாடல்களை நான்கு ஐந்து ஆறாகவும், சுந்தரர் பாடல்களை ஏழாவதாகவும் வகுத்தார். மேலும் திருவாசகம், திருவிசைப்பா மாலை, திருமந்திரம் இவற்றையும் சேர்த்துப் பத்துத் திருமுறைகள் ஆக்கினார். பின்னர், அரசன் 'திருமுகப் பாசுரம்' முதலாகப் பிற பதிகங்களையும் முறை செய்க என வேண்டினான். அவர் பதினொராந் திருமுறையைத் தொகுத்தார். பின்னர் நம்பியாண்டார், திருத்தொண்டர் திருத்தொகையை ஒட்டித் திருத்தொண்டர் அந்தாதி பாடினார். பண்ணடைவு வேண்டித் திருநீலகண்ட யாழ்ப்பாணர் அவதாரத் தலமாகிய எருக்கத்தம் புலியூர் அடைந்து, இறைவனிடம் குறையிரந்தார். அப்பொழுது ''பாணர் மரபில் வந்த பெண்ணொருத்திக்குப் பண்களை அருளிச் செய்தோம்'' என்று ஓர் ஒலி எழுந்தது. அரசனும் நம்பியும் அவளைத் தில்லையம்பலத்தில் சபாநாயகர் முன் நிறுத்திப் பண்ணடைவு அறிந்து இசை வகுத்துக் கொண்டனர். இவையே திருமுறை புராணத்தில் கண்ட செய்திகள்.

இப்புராணத்தில் நம்பியாண்டாரின் பெற்றோர் பெயரோ, மற்றைய இளம்பருவச் செய்திகளோ இல்லை. நம்பியாண்டார் செய்த திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை, திருத்தொண்டர் அந்தாதி என்னும் இரு நூல்களை மட்டும் சுட்டுகிறதே தவிர' அவரது பிற நூல்களைப் பற்றிக் கூறவில்லை.

12ஆம் திருமுறையாக உள்ள சேக்கிழாரின் பெரியபுராணம் பற்றிக் கூற இவ்வரலாறு இடந்தராதாகையால் அது பற்றிக் கூறவில்லை.

"திருநாரையூர்த் தல புராணம்" சிறு வேறுபாடுடையது நம்பி இளம் சிறாராயிருந்தபோது மண்ணால் சோறு அட்டுப் படைத்தார் என்றும் பிள்ளையார் ஏற்றார் என்றும் கூறும். மற்றும் 'சர்வசார நிர்ணயம்' என்ற வடமொழி நூலைச் செய்தார் என்று இந்நூல் கூறுவது 'புதிய செய்தி' என்பர் மு. அருணாசலம்.[2] திருநாரையூர்த் தலபுராணம் திருமுறைச் செய்திகளை நன்கு விளக்கவில்லை. புலவர் புராணமுடையார் கூற்று முக்கிய செய்தி களை உடையதில்லையாதலின் அதனை விடுக்கலாம்.

ஔவை சு. துரைசாமிபிள்ளையவர்கள், இவ்வரலாறுகளை யும் இவற்றில் காணப்படும் சிறுசிறு வேறுபாடுகளையும் தம் நூல்களில் காட்டியுள்ளார்.[3] க. வெள்ளைவரணனார், உமாபதி சிவாச்சாரியார் கூறிய மேலே சுட்டிய வரலாற்றை விரித்து எழுதியுள்ளார்.[4] இச் செய்திகளை ஆறுமுக நாவலர் தமது திருத்தொண்டர் பெரியபுராண முன்னுரையில் தருகிறார்.[5]

நம்பியாண்டார் எப்போது வாழ்ந்தார்? என்ன தொழிலில் ஈடுபட்டார்? திருமணம் ஆனவரா? துறவியா? என்ற விவரங்கள் நமக்கு இந்நூல்களால் கிட்டவில்லை. இவற்றைப் புராணம் என்ற அளவில் பார்க்க வேண்டும். திருமுறை கண்ட புராணத்தில் உண்மையும் உண்டு; புனைவும் உண்டு.

திருமுறை கண்ட சோழ அரசன் யார்?

திருமுறை கண்ட அரசன், யார்? என்பதில் அறிஞர் களிடையே நான்கு கருத்து வேறுபாடுகள் உள.

1. முதல் ஆதித்த சோழன் (கி. பி. 871–907) ஆவான் என்பது ஒரு கருத்து[6]

2. இராசராசனுக்கு மூத்தவனான ஆதித்த கரிகாலனாவான். (கி. பி. 966–969) என்பது சோமசுந்தர தேசிகர் கருத்து.[7]

3. முதலாம் இராசராசன் ஆவான் (கி. பி. 985–1014) என்பது ஒரு கருத்து[8]

4. முதலாம் குலோத்துங்கள் (கி, பி. 1070-1129) என்பது ஒரு கருத்து.[9]

முதலாம் ஆதித்த சோழனாவான் என்ற கருத்தை முதல் முதலில் தெரிவித்தவர் டி. வி. சதாசிவ பண்டாரத்தாராவர். இவர் கூறும் காரணங்கள் வருமாறு:

"நம்பியாண்டார் நம்பி பாடலால் மூன்று செய்திகள் தெரிய வரும்:

1. சிங்களநாடு பொடி படுத்தியது.

2. கொங்கில் இருந்து கனகம் கொண்டு வந்தது.

3. சிற்றம்பலத்தில் பொன்வேய்ந்தது.

ஆதித்த கரிகாலனுக்கு இவை பொருந்தா. இராசராசன் செய்தான் என்பதில் தடை உண்டு. கொங்கில் பொன் கொணர்ந்ததோ, சிற்றம்பலம் பொன்வேய்ந்ததோ இராச ராசனுக்குப் பொருந்தாது. சிங்களநாடு வென்ற ஒன்றே பொருந்தும் ஆகவே இவற்றைச் செய்தவன் முதல் ஆதித்தன்" என்ற கருத்துப்படப் பண்டாரத்தார் மொழிகுவர்.[10]

இக்கருத்தினையே சைவ இலக்கிய வரலாறு எழுதிய ஔவை சு. துரைசாமி பிள்ளையவர்களும் வழி மொழிவர்[11] பன்னிரு திருமுறை வரலாற்றுசிரியர் க. வெள்ளைவாரணனாரும் இக் கருத்தினரே.[12] டாக்டர் கே. கே. பிள்ளையும் இக்கருத்துக்கு முதன்மை தருகிறார்.[13]

இனி, இக்கருத்து வேறுபாடுகட்கு யாது காரணம் என்று காணுதல் வேண்டும். நம்பியாண்டார் நம்பி, தமது திருத் தொண்டர் திருவந்தாதியில் சோழர் பெருமையை மூன்று இடங் களில் கூறுகிறார்: (1) புகழ்ச் சோழர் (பா. 50) (2) இடங்கழி நாயனார் (பா. 65) (3) கோச் செங்கட் சோழர் (பா. 82), இதில் இடங்கழி நாயனாரைப் பற்றிப் பேசும் பாவில்

"சிங்கத் துருவனைச் செற்றவன் சிற்றம் பலமுகடு
கொங்கிற் கனகம் அணிந்த ஆதித்தன் குலமுதலோன்
திங்கட் சடையர் தமரதென் செல்வம் எனப்பறைபோக்
கெங்கட் கிறைவன் இருக்குவே ளூர்மன் இடங்கழியே
(பா. 65)

இரண்டாம் அடியில் "ஆதித்தன் குலமுதலோன்" என்று வருகிறது. இது கொண்டும் வடமொழி சுலோகம் கொண்டும் ஆதித்த கரிகாலன் என்றார் சோமசுந்தர தேசிகர்.[14] இவ்வரசன் மூன்றாண்டே அரசாண்டான். இளமையில் பாண்டியநாட்டும்

போரில் ஈடுபட்டான். பிறகு 969இல் அரசியல் சூழ்ச்சியாளரால் கொல்லப்பட்டான்.[15] ஆகவே இவன் காலத்தில் நம்பியார் தொகுப்புப் பணியைச் செய்திருக்க இயலாது.

முதலாம் குலோத்துங்கன் என்ற கருத்து உண்டு என சீனிவாசபிள்ளை தமது தமிழ் வரலாற்றில் குறிக்கிறார்.[16] இக் கருத்து பிழையானது என்பதை இவரே மறுத்திருக்கிறார். 'அபயகுலசேகரன்' என்று திருமுறை கண்ட புராணம் முதற் செய்யுள் கூறும். 'அபயன்' என்ற பெயர் முதற் குலோத்துங் கனுக்கு மட்டுமே வழங்கியது. இதற்கும் கலிங்கத்துப்பரணி சான்று என்று அவர்கள் கூறுவர். இது பொருந்தாது. அது பொதுப் பெயர் என்ற இராகவையங்கார் கூற்றைக் காட்டி மறுப்பார் மற்றும் "ராஜராஜனுக்கு முன்னும் குலோத்துங்கனுக்கு முன்னும் ஆட்சி புரிந்த சோழர்களில் பலர் திருப்பதிகம் பாடுவதற்கு ஏற்பாடுகள் செய்திருந்ததைச் சிலாசாஸனங்களால் அறியலாம். குலோத்துங்கன் காலத்தில் (திருமுறைப்பகுப்பு) இது நடந் திருந்தால், மேற்சொல்லிய ஏற்பாடு எப்படி நடைபெறும்?[17] ஆகவே இக்கருத்து பொருந்தாது" என்று சீனிவாசப்பிள்ளை மறுக்கிறார்.

இனி இராசராசனாவான் என்பார் கருத்தைக் காண்போம்.

1. (அ) திருமுறை கண்ட புராணத்தில், "அலகில் புகழ் பெறுராசராச மன்னன் அபயகுல சேகரன்பால் எய்தும் அன்பர் இலகுமொரு மூவரருள் பதிகமொன்றொன் றேஇனிதின் உரை செய்ய-(பா. 1) என்றும்

   (ஆ) "மல்லல் மிகு சேனையுடன் இராச ராச மன்னவனும் அந்நகரில் வந்து சேர்ந்தான்"–(பா 6) என்றும் வருகின்றன.

2. சேக்கிழார் புராணத்தில் திருமுறை கண்டவன் இராசராசன் என்பது நன்கு விளக்கம் செய்யப்படுகிறது.

   "ஆயுமறை மொழி நம்பியாண்டார் நம்பிஅருள் செய்த கலித் துறை அந்தாதி சேயதிரு முறைகண்ட ராச ராச தேவர் சிவாலய தேவர்" (பா. 24) என்று விளக்கமாக வருகிறது.

3. 'அபயகுலசேகரன்' என்று திருமுறைகண்ட புராணம் கூறுவது பொதுப் பெயர். 'குலசேகரன்' என்பது சூரிய குலத்தவன் என்றபடி; அபயன் என்பது பயமற்றவன் என்ற பொருளில் வரலாம்.

4. நம்பியாண்டார் நம்பி பாடலில் வரும் "ஆதித்த குல முதலோன்" (பா. 65) என்ற சொற்களும் பொதுப் பெயரால் வருவதாய்க் கொள்ளவேண்டும். சூரிய குலத்தான் என்பது பொருள்.

5. நம்பியாண்டார் நம்பி கூறும் 'சிங்களநாடு பொடி படுத்த (பா. 50) என்ற அடை, இராசராசனுக்கு நன்கு பொருந்தும். "இராசராசனுக்குச் சிங்களாந்தகன்" என்ற சிறப்புப் பட்டமும் உண்டு.

6. குடகநாடு, கங்கபாடி, நுளம்பபாடி ஆகிய நாடுகளை இராச ராசன் வென்றவன். "ஈழத்தையும் பாண்டி நாட்டையும் புறங்கண்டவன். ஆதலால் இவன் கொங்கிற் கனகம் கொணர்ந்தது, தில்லையைப் பொன்வேய்ந்திருத்தல் நடந் திருக்கக் கூடியதே"-என்று மு. அருணாசலம் விளக்கு கிறார்.[18]

ஆகவே திருமுறை கண்ட புராணத்திலும், நம்பியாண்டார் நம்பி திருவந்தாதியிலும் சுட்டப்பட்ட அரசன், முதலாம் இராச ராசனே என்பது போதரும். இராசராசனே நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு திருமுறை வகுத்தான் என்பது பல வாலாற்றறிஞர்களின் கருத்தாகும்.

கே. எஸ். சீனிவாசப்பிள்ளை, கா. சு. பிள்ளை, டாக்டர் மா. இராசமாணிக்கம், ஏ. வி. சுப்பிரமணிய ஐயர், மு. அருணாசலம், எல். உலகநாதப்பிள்ளை, சா. கணேசன், டாக்டர் மு. வ. க. த. திருநாவுக்கரசு. ஆகியோர் தம் ஆய்வு நூல் களில் இக்கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.[19] கலைக்களஞ்சி யத்தாலும் இச்செய்தி தெரியவரும்.[20] ஆகவே முதலாம் இராசராசன் காலத்தில் நம்பியாண்டார் நம்பி திருமுறையை வகுத்தார் என்பதே ஏற்புடைக் கருத்தாம். இவ்வரசன் காலத்திலும் எப்போது இது நிகழ்ந்திருக்கும்?

'இராசராசன் ஆட்சிக்கு வந்த கி. பி. 985 முதல் எட்டு ஆண்டுகள் இவன் ஆட்சியில் போர் இல்லை. பிறகு தொடர்ந்து போர் இருந்தது. ஆகவே கி. பி. 994ஐ ஒட்டி அஃதாவது பத்தாம் நூற்றாண்டின் இறுதியாகும்.[21] என்பார் கே. எஸ். சீனிவாசப் பிள்ளை.

நம்பியாண்டார் தொகுத்த திருமுறை ஏழா? பதினொன்றா?

நம்பியாண்டார் தொகுத்த திருமுறைகள் ஏழா? பதினொன்றா? என்பது அடுத்து எழும் வினா, டாக்டர் இராச மாணிக்கனார், க. வெள்ளைவாரணனார் ஆகியோர் ஏழு திருமுறைகளையே நம்பியாண்டார் தொகுத்தார் என்பார்.[21அ]

நம்பியாண்டார் தொகுத்த நோக்கத்தை நன்கு நினைந்து பார்த்தாலன்றி இதற்கு விடை காண்டல் அரிது. மூவர் முதலிகள் ஆகம வழிபாட்டை, இசை கூடிய பாடல்கள் வழியாய் நடத்திக் காட்டியவர்கள், கூட்டு வழிபாட்டை உவக்குவித்தவர்கள் சடங்குகளைவிட மெய்ம்மை பத்தியே-பதம் தரும் என்பதைக் காட்டியவர்கள் ஆகவே இசைத் தமிழுக்கு முதன்மை நல்கினார் கள். திருஞானசம்பந்தர், தம்முடன் திருநீலகண்ட யாழ்ப்பாணரை யாண்டும் அழைத்துச் சென்று தம் பாடலுக்கு இசை வகுத்துப் பாடிவந்தார் என்பது வரலாறு. திருஞானசம்பந்தரே தமது பாடலை "ஏழின்னிசை மாலை (2-37-11) பண்பொலி செந்தமிழ் மாலை (2-48-41) எனவும் தண்டமிழில் இன்னிசையெனப் பரவு பாடல்"-(3-76-11) எனவும் கூறுவர். 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்த னுக்குல கவர்முன்" (7-62-8) என்று சுந்தரரும் பகர்வர். ஏழிசை யின்றமிழால் இசைந்தேத்திய (7-100-10) என்பது சுந்தரர் மொழி. 'தமிழோடிசைப் பாடல் மறந்தறியேன் (4-1-6) என்பது அப்பர் வாக்கும். இவற்றால் இசையின் வழி, வழி பாடியற்றிய சமயச் சூழல் விளங்குகிறது. அஃது இயக்கம் போல் (Movement) இயங்கியது. தேவார ஆசிரியர்களே தம் பாடல்கட்குப் பண் வகுத்திருந்தனர்.[22] ஆகவே இம்முறைகளை அறிந்து தொகுக்கும் கடன் நம்பியாண்டாருக்கு ஏற்பட்டது. அவர் பண்ணடைவில் பாடல்களைத் தொகுத்தார். அவை முதல் ஏழு திருமுறையாக அமைந்தன, தொகுப்பு முறையில் இது முதற்கட்டம். நம்பியாண்டார்க்கும், அரசனுக்கும் சில முன் அனுபவங்கள் புது எண்ணங்களை உண்டாக்கி-யிருக்க வேண்டும். பண்ணடைவு இல்லாத பத்தி நூல்கள் உண்டே? அவற்றை என்ன செய்வது? இசைப்பாத்தொகுப்புப் போல இயற்பாத் தொகுப்புத் தொடர்ந்தது. ஒரே தொகையாக இருந்ததாலும் தேவார ஆசிரியரை ஒட்டி மணிவாசகர் வாழ்ந்த-தாலும் திருவாசகம் 8ஆம் திருமுறையாயிற்று. இவர்க்குப்பின் அடுத்துத் தோன்றியவர்கள் பாடிய இசைப்பாக்கள் திருவிசைப் பாவென 9ஆம் திருமுறையாகத் தொகுக்கப்பெற்றன. திருவாசகம் போல் முழு நூலாக இருந்த சாத்திர இயற்பாவாகிய திருமந்திரம்

பத்தாம் திருமுறையாயிற்று. தொகுப்பில் இது இரண்டாவது கட்டம். இத்தொகுப்பில் அடங்காத எஞ்சிய அனைத்தையும் ஒன்றாக்கித் தம் நூல்களையும் ஒரு தொகுதியாக்கி 11ஆம் திருமுறையாக்கினார். இது மூன்றாவது கட்டம். 12 ஆம் திருமுறையை நம்பி சேர்க்கவில்லை. யார் சேர்த்தார் என்பது இதுகாறும் அறியப் படவுமில்லை.

கே. எஸ். சீனிவாசபிள்ளை,[23] கா. சு. பிள்ளை,[24] ஏ. வி. சுப்பிரமணிய ஐயர்,[25] மு. அருணாசலம்.[26] ஆகியோரும் நம்பி 11 திருமுறைகளையும் வகுத்தார் என்றே கருதுகிறார்கள். இதற்கான அகச்சான்றுகளைக் காண்போம்.

எட்டாம் திருமுறை, திருவாசகமாகும். இதன் ஆசிரியர் திருவாதவூரராகிய மணிவாசகர். இவரே திருக்கோவையாரையும் புனைந்தார். இவர் வரகுணன் என்ற பாண்டியன் காலத்தில் வாழ்ந்தவர். இச்செய்திகளை நம்பியாண்டார் அறிந்து கோயில் திருப்பண்ணியர் விருத்தத்தில் குறிப்பிடுகிறார்.

'திருப்பண்ணியர் விருத்தம்' என்ற பாடலில் 'கோயில்' எனச் சைவர் கொண்டாடும் சிதம்பரம் பற்றிய குறிப்பு உண்டு 'திருவாசகத்தில் தில்லைபாதி' என்பது பழமொழி திருவாசகத்தின் பொருள் யாது என்று மணிவாசகரைக் கேட்டபோது, தில்லை நாயகரைக் காட்டி ஒளியிற் கலந்தார் என்பது வரலாறு. ஆகவே இச் செய்திகளை அறிந்தும் தெரிந்தும் இருந்த நம்பியாண்டார் தில்லைச் சிறப்பைக் கூறும் தமது கோயில் திருப்பண்ணியர் விருத்தத்தில் இச்செய்தியைக் குறித்தார்.

வருவா சகத்தினில் முற்றுணர்ந்
தோனைவண் தில்லைமன்னைத்
திருவாத வூர்ச்சிவ பாத்தியன்
செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவைகண்
டேயுமற்றப் பொருளைத்
தெருளாத உள்ளத் தகவர்கவி
பாடிச் சிரிப்பிப்பரே! (பா : 58)

இங்குத் திருவாசகத்தை 'வாசகம்' என்றும் மணிவாசகரைத் திருவாதவூர்ச் சிவபாத்தியன் என்றும் கூறித் திருக்கோவை பற்றியும் கூறுகிறார். மேலும், மணிவாசகர் கவிதையைப் படித்த

பின் பிறர் கவிதைகள் எள்ளத்தக்கன என்று கவிமாண்பையும் சுட்டுகிறார். மணிவாசகர் தம் பாவில் கொண்டாடிக் கூறும் வரகுணனைப் பற்றியும், நம்பியாண்டார் குறிப்பிடுகிறார்.

''வடியே படஅமை யும்கணை
என்ற வரகுணன்தன்
முடியே தருகழல் அம்பலத்
தாடிதன் மொய்கழலே

(பா-62) என்பதையும் காண்க

மேலும் திருவாசக யாப்பையும் சொல் நடையையும் கருத்தையும் நம்பியாண்டார் அப்படியே எடுத்துக்கொள்கிறார்.

''ஏழைஎன் புன்மை கருதா திடையறா அன்பெனக்கு
வாழிநின் பாத மலர்க்கே மருவ அருளுகண்டாய்
மாழைமென் நோக்கிதன் பங்க வளர்தில்லை அம்பலத்துப்
பொழிளந் திங்கள் சடைமுடி மேல்வைத்த புண்ணியனே''
(கோயில் திரு. ப. வி. 37)

''சேண்தில்லை மாநகர்த் திப்பியக் கூத்தனைக் கண்டும் அன்பு
பூண்டிலை; நின்னை மறந்திலை; ஆங்கவன் பூங்கழற்கே
மாண்டிலை; இன்னம் புலன்வழி யேவந்து வாழ்ந்திடுவான்
மீண்டனை; என்னைஎன் செய்திட வோசிந்தை! நீ விளம்பே'
(கோயில் திரு. ப. வி. 48.

என்ற இவ்விரு பாடல்களும் திருவாசகச் சொல்-நடையை ஒத்தவை. மேலும், கோயில் திரு. ப. வி. 2, 12, 22, 23 எண் உள்ள பிற பாடல்களும் திருவாசக நடையின. ஆதலின், நம்பியாண்டார் திருவாசகத்தை ஊன்றிப் படித்து அச்சுவையில் ஈடுபட்டவர் என்பது அறியப்படும். வாசகர் பாடலைப் படித்தோர், பிற பாடலை எள்ளுவர் என்று கூறுவதாலும் நம்பியாண்டாருக்குள்ள திருவாசக ஈடுபாடு தெரியவரும்.

சுந்தரரின் திருத்தொண்டர் தொகையை, அப்படியே நம்பியாண்டார் திருத்தொண்டர் திருவந்தாதியாக விரிக்கிறார்.

"மணித்திகழ் சொற்பத்தர் மன்னிய சீர்மறை நாவனொடே" (திரு. திரு. அ. 88) என்று அவரே கூறுகிறார். ஆகவே மணிவாசகரைப்பற்றித் திருத்தொண்டர் திருவந்தாதியில் கூற நம்பியாண்டாருக்கு வாய்ப்பில்லை; அந்த அமைப்பும் இடந்தராது.

ஆயினும் கோயில் திருப்பண்ணியர் விருத்தத்தில் மணிவாசகரைப்பற்றிக் கூறிப் பாராட்டுகிறார். ஆகவே, நம்பியாண்டார் நம்பியே திருவாசகத்தை 8ஆம் திருமுறையில் வைத்திருப்பர் என்று கருத இடமுண்டு. வைக்கவில்லை என்பதற்கு வேறு ஆதாரமில்லை.

9ஆம் திருமுறையும் இவர் தொகுத்ததா? என்பது அடுத்த கேள்வி.

திருவீழிமிழலை, திருவாவடுதுறை திருவிடைக்கழி ஆகிய மூன்று பதிகளைப் பற்றி 34 பாடல்களைப் 'பஞ்சமம்' என்ற பண்ணில் சேந்தனார் பாடியிருக்கிறார். 'திருவிசைப்பாவில்' இரண்டாவது ஆசிரியராக இவர் வைக்கப்பட்டுள்ளார்.

சேந்தனாரைப்பற்றி நம்பியாண்டார் நம்பி கோயில் திருப்பண்ணியர் விருத்தத்தில் கூறுகிறார்.

'பூந்தண பொழில்சூழ் புலியூர்ப் பொலிசெம்பொன் அம்பலத்து
வேந்தன் தனக்கன்றி ஆட்செய்வ தென்னே! வரிதுணிமேல்
ஆந்தான பழைய அவிழை அன் பாகிய பண்டைப்பறைச்
சேந்தன் கொடுக்க அதுவும் திருவமிர் தாகியதே! (பா. 26)

என்பதால் சேந்தன் வரலாற்றை அறியலாம். இவ்வரலாற்றைக் கூறுவதால் இவர் பாடல்களையும் கண்டும் கேட்டும் நுகர்ந்தும் திருவிசைப்பாவில் சேர்த்திருப்பார் எனலாம். திருவிசைப்பாவில் சேந்தனார் பாடல் இரண்டாம் இடம் என்பதால் முதலிடம் பெறும் திருமாளிகைத் தேவர் பாடலையும் நம்பி தொகுத்தார் என்பதாம். திருமாளிகைத் தேவர் 'கோயில்' என வழங்கும் தில்லைக்கு நான்கு பதிகங்களில் 43 பாடல்களைப் பாடியவர். மற்றும், திருவிசைப்பாவில், 'திருப்பல்லாண்டு' உட்பட 30 பதிகங்கள் உள. இவற்றில் தில்லை நகராகிய 'கோயில்' என்ற தலைப்புப் பதிகங்களாக 16 இருத்தலைக் காணலாம்.

தில்லையம்பதியில் ஈடுபாடு காட்டும் நம்பியாண்டார் இவர் பாடல்களையும், மற்றை எண்மர் பாடல்களையும் திரட்டித் 'திருவிசைப்பா' என்று வகுத்திருப்பார்.

10ஆம் திருமுறை, திருமூலரின் திருமந்திரமாம். இவர் பாடலை நம்பியாண்டார் நம்பி கற்றிருக்கிறார். திருமூலரின் சொற்கள் வேதத்தின் முடிபு என்றும், அதனை முழுத்தமிழின்படி மன்னுமாறு செய்தவர் மூலர் என்றும், அப்பணியால் அவர் திருவடிகளை நம்பியாண்டார் தம் முடிமிசை சூடிக் கொண்டாகவும் கூறுவர். இவர் காலத்தால் முன்னவராவர். சைவசித்தாந்தக் கருத்துக்களை வழங்கிய மூலவர். ஆகவே திருமூலர் எனக் காரணப்பெயரால் அழைக்கப்பட்டார்.

''முடிமன்னு கூனற் பிறையாளன் தன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டென்உச்சி
அடிமன்ன வைத்த பிரான்மூல னாகின்ற அங்கணனே.''

(திரு. திரு. அ. 36)

எனப் பகர்வர். ஆகவே, முழுத்தமிழின்படி செய்த அந்நூலை, முடிமிசை தாங்கிய மூலர் நூலை, இவர் 10ஆம் திருமுறையாக வைத்தல் முறையே! மூலக் கருத்துக்களைத் தந்ததால் ''மூல னாகின்ற அங்கணன்'' என்றார். இக்கருத்துக்களை விடுத்துத் தொகுப்பதில் பயனில்லை. கி. பி. 6ம் நூற்றாண்டுக்கும் முந்திய இவர் நூலை, முன் வைக்கவில்லையே எனின் நம்பியாண்டார், கால வரிசைப்படி நூல்களைத் தொகுக்கவில்லை. வழிபாட்டிற் குரிய இசைத்தமிழாம் ஞானப்பவல்களையே அந்நாள் மக்கள் விரும்பியாங்கு முதலில் திரட்டினார். பின்னர், இயற்றமிழ் நூல்களைப் பாதுகாக்கும் உணர்வும் வந்தது. திருவிசைப் பாவிற்குப்பின் இயற்பாவாகவும் சாத்திர நூலாகவும் உள்ள திருமூலர் நூலை நம்பியாண்டார் நம்பியே பத்தாம் திருமுறை யாக வைத்தார்,

11ஆம் திருமுறையை, இவரே தொகுத்தாரா? பிறர் தொகுத் தனரா? என்பது அடுத்த வினா.

பதினோராம் திருமுறை ஆசிரியர்களில், ஐயடிகள் காடவர் கோன். சேரமான் பெருமாள் நாயனார், கபிலர், பரணர், நக்கீரர் ஆகியோரும் உளர். இவர்களைப் பற்றிய செய்திகளும் நம்பியாண்டார் நூல்களில் காணப்படுகின்றன.

நம்பியாண்டார் நம்பி ஐயடிகளின் தமிழ்ப் பணியையும் வரலாற்றையும் சுட்டுகிறார். ஐயடிகள் பல்லவர் குலம், இளவரசர் இறைவழிபாட்டிற்காக அரசு துறந்து, பிச்சை ஏற்று ஒவ்வொரு தலமாகச் சென்று ஒவ்வொரு வெண்பாப் பாடியவர். அரசுக் கட்டிலும் நீத்த பாலினராகத் துறவியாக இவர் விளங்கிய தால் பக்திக் கடலாவர்.

"சக்தித் தடகைக் குமரன்நல் தாதைதன் தானமெல்லாம்
முத்திப் பதமொரோர் வெண்பா மொழிந்து முடியரசா
மத்திற்கு மும்மைநன் தாள்அரற் காயஐயம் ஏற்றலென்னும்
பத்திக் கடல் ஐயடிகளாகின்றநம் பல்லவனே"

(திரு. திரு. அ. 56)

என்ற பாடலில், நம்பியாண்டாரின் பத்தி உணர்வைக் காணலாம். 'நம் பல்லவன்' என்கிறார் நம்பியாண்டார். ஒவ்வொரு பதிக்கும் ஒவ்வொரு வெண்பா பாடியமையைக் குறிக்கிறார். ஆகவே பாடல்களைக் கண்டுபடித்துத் தோய்ந்த அவர், அப்பாடல் களைப் பதினொராம் திருமுறையில் சேர்த்திருப்பார் என்று நினைக்கலாமல்லவா? மாறாகக் கருத வேறு சான்று என்னவுண்டு?

நம்பியாண்ட நம்பியார், சேரமான் பெருமாள் நாயனாரைப் பற்றித் தம் நூலில் மூன்று இடங்களில் சுட்டுகிறார். சுந்தரருக்கும் சேரமானுக்கும் இருந்த நட்பு, இருவரும் முறையே கரிமேலும் பரிமேலும் இம்மானிட உடலோடும் கயிலாயம்போன வியத்தகு செயல், சேரமான் கழறிற்றறிவாராக விளங்கிய செய்தி ஆகிய வற்றைக் குறிக்கிறார். கோயில் பண்ணியர் விருத்தம் (பா, 31) திருத்தொண்டர் திருவந்தாதியில் இரு பாடல்கள் (பா. 45; பா 86) இவற்றால் இதனையறிலாம். உவர் ஊறிய வண்ணானைச் சிவனடியாராகக் கருதிச் சேரர் 'அடிச் சேரன்' என வணங்கிய செய்தியும் பேசப்படுகிறது. (திரு திரு. அ. 44) சேரர் கயிலாயத் திற்குப் பரிமேல் சென்ற வரலாறு மூன்று பாடல்களிலும் வருகிறது. அங்ஙனம் சென்றபோது பாடிய ஞானவுலா பற்றியும் வேறுகாலத்தில் பாடிய நூல்களையும் நம்பியாண்டார் அறிந் திருப்பார். 'திருக்கைலாய ஞானஉலா பொன் வண்ணத்தந்தாதி திருவாரூர் மும்மணிக்கோவை ஆகியவற்றை நம்பியாண்டார் சேர்த்திருக்க வாய்ப்பிருக்கிறது. இவற்றையும் இவை போன்ற பிறவற்றையும் பயின்ற காரணத்தால் சேரமான் பொன்வண்ணத்

தந்தாதி செய்ததுபோல நம்பியாண்டாரும் அதே கட்டளைக் கலித்துறையில், ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி அதே அளவில் செய்கிறார். சேரமான் திருவாரூர் மும்மணிக்கோவை செய்ததுபோல நம்பியாண்டாரும் ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவையை அதேயாப்பில்-அளவில் புனைகிறார். சேரமான் ஞானஉலா செய்தார். நம்பியாண்டாரும்-ஆளுடைப் பிள்ளையார் திருவுலாமாலை செய்தார்.

"பொய்யடிமை யில்லாத புலவர்" - என்று மட்டுமே சுந்தரர் திருத்தொண்டர் தொகையில் கூறுகிறார். ஆனால் நம்பியாண்டார் நம்பி தம் திருத்தொண்டர் திருவந்தாதியில் இதைப் பெரிதும் விரிக்கிறார்.

"தரணியில் பொய்ம்மை இல்லாத்தமிழ்ச் சங்கம அதில்கபிலர்
பரணர்நக் கீரர் முதல்நாற்பத் தொன்பது பல்புலவோர்
அருள்நமக் கீயும் திருவால வாய்அரன் சேவடிக்கே
பொருளமைத் தின்பக் கவிபல பாடும் புலவர்களே."

(பா. 49)

என்று விளம்புகிறார்.

இங்குப் பொய்யடிமையில்லாதவர்கள் - சங்கப் புலவர்கள். அவர்கள் கபிலர், பரணர். நக்கீரர் முதலான 49 பல்புலவோர். இவர்கள் அரன் சேவடியைப் பொருளாக இன்பக் கவியில் பாடுவோராவர் என்று ஏன் விவரித்தார்? கபில, பரணர், நக்கீரர் பாடல்களைக் கண்டு, தாமே தொகுத்திருக்கிறார். இம் மூவர் மட்டும் பாடிய பாடல்கள் பல. கபிலர் 2 தலைப்புக்களில் மூன்று நூல்களில் 157 செய்யுள் செய்கிறார், பரணர் ஒரு நூல் செய்தாலும் பாட்டெண் 100 ஆக உள்ளது. நக்கீரரோ 11ஆம் திருமுறைத் தொகையிலேயே அதிக அளவில் 10 நூல்கள் இயற்றி 198 பாடல்களை யாத்தவர், கல்லாடர் பெயரைக் குறிக்காவிடிலும் "பல்புலவர்" என்ற இத்தொடரில் அவர் அடங்குவார். அவர் செய்த நூல் 1. பா ஒன்று. ஆக இவர்கள் செய்த நூல்கள் 15 ஆகவும் பாடல்கள் 456 ஆகவும் உள்ளன. 11ஆம் திருமுறையில் 1420ல் மூன்றில் ஒருபங்கு இப்புலவர்கள் செய்தவை என்று அறிகிறோம்.

இவற்றையெல்லாம் கண்டு, தொகுத்துப் பத்தி செய்தவர் நம்பியாண்டார். ஆதலின் சுந்தரர் சொல்லாத சங்கப்புலவர் பெயர்களை இவர் விவரிக்கிறார். 'கபில பரணர்' என்ற பழம்

வழக்குப்படிப் புலவரை வரிசைப்படுத்துகிறார். சங்கம் பற்றியும் சங்கப்புலவர்களின் தொகை எண் பற்றியும் கூறுகிறார். ஆதலின் அரன் சேவடிக்கே பதித்த நெஞ்சினராய் விளங்கிப் பல பாடல்கள் பாடிய கபிலர், பரணர், நக்கீரர், கல்லாடர் பாடல் களைப் பதினொராம் திருமுறையில் நம்பியாண்டாரே சேர்த்தார் எனக் கருதலாம்.

மேலேகண்ட காரணங்களால், நம்பியாண்டார் நம்பியே, பதினொரு திருமுறைகளையும் தொகுத்தார் என்பதாம்.

தம் நூலைத்தாமே சேர்த்தாரா?

நம்பியாண்டார், தாம் யாத்த 10 நூல்களையும் தாமே பதினொராம் திருமுறையில் சேர்த்தாரா? என்ற எண்ணம் எழுதல் இயற்கை.

திருமுறை கண்ட புராணம், பதினொன்றாகத் திருமுறைகள் விளங்குவதற்கு ஒரு காரணம் கற்பிக்கிறது.

"மந்திரங்கள் எழுகோடி ஆதலினால் மன்னுமவர்
இந்தவகை திருமுறைகள் ஏழாக எடுத்தமைத்து
பந்தமுறு மந்திரங்கள் பதினொன்றும் ஆதலினால்
அந்தமுறை நான்கினொடு முறைபதினொன்றாக்கினார்.
(பா. 28)

மகாமந்திரம் ஏழுகோடி. ஆகவே திருமுறை ஏழாக்கப்பட்டது. சங்கிதா மந்திரம் பதினொன்று. ஆகவே பதினொரு திருமுறை யாகத் தொகுக்கப்பெற்றது; செய்தவர் நம்பியாண்டார் என்பது உமாபதி சிவாச்சாரியாரின் கருத்து. 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அவர், வடமொழித்தாக்கத்தினால் அம்மரபை ஒட்டிப் பேசுகிறார். மேலும், ஒரு காரணம் அவராகக் கற்பித்துக் கொண்டார். இங்கு உமாபதி சிவாச்சாரியார், பதினொரு திருமுறையாக ஆக்கினார் என்று குறிக்கிறார்.

"சித்திதரும் இறைமொழிந்த திருமுகப்பா சுரம் முதலாம்
உய்த்தபதி கங்களையும் ஒருமுறையாச் செய்களனப்
பத்திதருந் திருமுறைகள் பதினொன்றாப் பண்ணினார்."

என்பர்.[27] ஆகவே 11ஆம் திருமுறையின் முதற்பாடல், திருமுகப் பாசுரம் என்று தெரிகிறது. அந்நூலின் இறுதிப்பாடல் யாது? விளக்கம் உண்டா?

"பாக்கியத்தால் இபமுகத்தோன் அருள்செய்த பகுதியினால்
வாக்கியல்சேர் அந்தாதி நம்பி அடைவே வகுத்தார்"

என்பதால் 11ஆம் திருமுறையில் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி உமாபதி சிவாச்சாரியார் காலத்தில் இருந்தது என்பதும் 'நம்பி அடைவே வகுத்தார்' என்பதால் இவர் கருத்துப் படி, நம்பியாண்டார் நம்பியே தம் நூல்களையும் பதினொராம் திருமுறையில் சேர்த்திருந்தார் என்பதுமாம்[28] நம்பியாண்டாரின் நூலை நன்கு பயின்றே சேக்கிழார், திருத்தொண்டர் புராணம் செய்கிறார். அவர்க்கு ஆதாரமான நூல்களை 11ஆம் திருமுறை யில் தொகுத்து வைத்தமையால் அவற்றைச் சேக்கிழார் விரிக் கிறார். ஆகவே, நம்பியாண்டார் நூல்கள் தொகையாக இருந் திருக்கவேண்டும். அதை அவரே அரசன் வேண்டுதற்படி 11ஆம் திருமுறையில் சேர்ந்திருக்கிறார்.

தஞ்சையில் இராசராசேச்சுரம் எடுத்த இராசராசன் தன் படிமத்தை அங்கு எழுப்பவில்லையா? திருமலைநாயக்கன், மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் தன் உருவை வைக்கவில்லையா? இவை போல் அரசன் வேண்ட, நம்பியாண்டார் நம்பி தம் நூல்களையும் 11 ஆம் திருமுறையில் சேர்த்தார் எனலாம். திரு முறைகண்ட புராணம், திருத்தொண்டர் திருவந்தாதியைப் பற்றிக் குறிக்கிறதே தவிர, நம்பியாண்டாரின் மற்றைய நூல்களை குறிக்கவில்லை. இன்று தொகுப்பின் இறுதியில் திருநாவுக்கரசு தேவர் திருவேகாதசமாலை உள்ளது. இதிற்கண்ட வரலாறு களை சேக்கிழார் வாங்கிப் போற்றி மேலும் பெருக்கி எழுதுகிறார். ஆகவே, நம்பியார் பாடல்கள் யாவும் 11ஆம் திருமுறையில் இருந்திருக்கவேண்டும்.

காலம்:

நம்பியாண்டாரின் காலத்தை கி.பி. 9ஆம் நூற்றாண்டில் இருந்து 11ஆம் நூற்றாண்டுவரை பலவாறு கூறுவர். நம்பியாண்டார் நம்பி, முதல் ஆதித்த, சோழன் அவன் மகன் முதற்பராந்தகன் காலம் வரை வாழ்ந்தார் என்று பண்டாரத்தார் கருதுகிறார். "அஃதாவது 9ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் கி பி. 10 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இருந்தார் என்பது." அரசனைப் பொறுத்தமட்டில் இதே கருத்து க. வெள்ளை வாரணனாருக்கும் உண்டு. ஆயின், அவர் கி. பி, 9 ஆம் நூற்றாண்டு இறுதி என்பர்.

கா. சு. பிள்ளை ந. சி. கந்தையாபிள்ளை, ஒளவை சு. துரைசாமிபிள்ளை, டாக்டர் மு கோவிந்தசாமி, டாக்டர் இராசமாணிக்கனார் ஆகியோர் கி. பி. 10ஆம் நூற்றாண்டு என்பர்[30]

மு அருணாசலம், எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை டாக்டர் மு.வ. கலைக்களஞ்சியக் கட்டுரை ஆசிரியர் ஆகியோர் கி பி 11ஆம் நூற்றாண்டு என்பர்.[31] இக்கொள்கை பொருத்த முடைத்தே!

பதினொராந்திருமுறையின் ஆசிரியர்கள் வரலாறும் காலமும்

அடிக்குறிப்புக்கள்

திருமுருகாற்றுப்படை நந்த நக்கீரர்

1 அகம்: 36. 57, 78. 93, 120, 126. 141, 205, 227; 249, 253, 290, 310, 340, 346, 369, 389, ஆக 17.

குறுந்தொகை: 75, 105, 131, 147, 161, 266, 280, 368, ஆக 8

நற்றிணை: 31, 86, 197, 258, 340, 358, 367 ஆக 7

புறம். 56, 189, 395 ஆக 3.

2 பத்துப்பாட்டு, உ. வே. சா. பதிப்பு, 1956, ப. 46.

3 பத்துப்பாட்டு வை மு கோ 1961: ப. 2

4 ,, ,, ப. 3

5 இலக்கிய தீபம். 1955. ப. 41

6 தமிழ்மொழி இலக்கிய வரலாறு. ப. 257.

7 பெறலரும் பரிசில். ப. 11.
நக்கீரர். ப 137.
அன்பு நெறியே தமிழர் நெறி. ப. 71.

8 கால வேறுபாடு-அட்டவணை.

9 பதினொராந்திருமுறையில் உள்ள இலக்கிய வகைகளும் யாப்பும்

காரைக்காலம்மையார்:

1 பெரியபுராணம் 24: 1-66.

2 திருவாலங்காட்டுத் திருப்பதிகம். 1 11 & 2 : 11,

3 அற்புதத்திருவந்தாதி 101.

4 சுந்தரர், திருத்தொண்டர் தொகை 4 · 4.

5 திரு. திரு. அந்தாதி பா. 28.

6 தமிழ் இலக்கிய வரலாறு கி. பி 250-கி பி. 600 சதாசிவ பண்டாரத்தார் ப. 76.

7 பன்னிருதிருமுறை வரலாறு ப. 526

7 அ. பெரியபுராணம் 28 : 1008,

8 தமிழ் இலக்கிய வரலாறு கி. பி- 250; கி. பி. 600 ப - 76.

9 பன்னிருதிருமுறை வரலாறு ப 529.

10 பின்னிணைப்பு - கால வேறுபாடு அட்டவணை.

நக்கீர தேவநாயனார் :

1 தமிழ்நாவலர் சரிதை. கழகம்–1949. பக்-5-11 ஔவை சு. துரைசாமிபிள்ளை பதிப்பு.

2 இலக்கியம் தீபம். ப-41 எஸ். வையாபுரிப்பிள்ளை.

3 சுந்தரர் தேவாரம். திருப்புத்தூர் திருத்தாண்டகம். பா-3

4 கல்லாடம். பா-1.

5 ஷ்ஷ பா-52.

6 சைவசமய வளர்ச்சி. ப-242. டாக்டர் இராசமாணிக்கனார்.

7 பன்னிருதிருமுறை வரலாறு. பக்-614-618

8 ஷ்ஷ ஷ்ஷ ப-618

9 ஷ்ஷ ஷ்ஷ பக்-620 21

10 ஷ்ஷ ஷ்ஷ பக்-621-624

11 இலக்கியப்போக்கு-க.

12 தமிழ்மொழி வரலாறு. 1969. ப-257. டாக்டர் இராச மாணிக்கனார்.

13 பன்னிருதிருமுறை வரலாறு. 1969. ப-629 க. வெள்ளை வாரணம்.

14 தமிழ் இலக்கிய வரலாறு. 10ஆம் நூற்றாண்டு. 1972 ப-293 மு. அருணாசலம்.

15 சைவ இலக்கிய வரலாறு. 1958 ப-34 ஔவை சு. துரைசாமி பிள்ளை.

16 யாப்பருங்கலவிருத்தி Government Oriental Manuscript Library Madras 1960. p 412.

17 தமிழ் வரலாறு. 1953. ப-212. கே. எஸ். ஸ்ரீநிவாசபிள்ளை. தமிழ் இலக்கிய வரலாறு. 1957. ப-254. இ. எஸ். வரதராஜ அய்யர்.

18 தமிழ் இலக்கிய வரலாறு. கி. பி. 250-கி. பி. 600. 1955 ப-87. டி. வி. சதாசிவ பண்டாரத்தார்.

19 இலக்கிய வரலாறு. 1953. ப-342. கா. சுப்பிரமணியபிள்ளை.

ஐயடிகள் காடவர்கோன் :

1 பெரியபுராணம். 47:-1

2 ஷை 47:-7

3 ஷை 47:-4

4 ஷை 47:-3

5 திருத்தொண்டர் திருத்தொகை 7.-7

6 திருத்தொண்டர் திருவந்தாதி. 56

7 சைவ இலக்கிய வரலாறு. ப-181

8 பன்னிருதிருமுறை வரலாறு ப-546

9 சைவ இலக்கிய வரலாறு. ப-186

10 பின்னிணைப்பு. கால வேறுபாடுகள்-அட்டவணை.

இறையனார் :

1 குறுந்தொகை. ப-2.

2 கல்லாடம். பா-1

3 ஷை பா-12

4 பெரியபுராணம் கழறிற்றறிவார். செ.26

5 ஷை ஷை செ. 28

6 ஷை ஷை செ 29

7 திருமுறை கண்டபுராணம். செ. 27

8 பாரதி நூல்கள்-1940. பக்-572-575

9 திருமுறை கண்டபுராணம். செ 27

சேரமான் பெருமாள் நாயனார் :

1 திருத்தொண்டர் தொகை. 6:5

2 திருத்தொண்டர் திருவந்தாதி. 44

3 பெரியபுராணம். 37:66

3அ திருத்தொண்டர் திருவந்தாதி. பா-44

4 சைவ இலக்கிய வரலாறு. 1958. பக்-254-255. ஔவை சு. துரைசாமிபிள்ளை.

5 பெரியபுராணம். 37:24

6 கல்லாடம் 12:25-26. மர்ரே & கோ. 1957

7 பதினொராந்திருமுறை-முதற்பாடல்

8 பெரியபுராணம். 37:26-38

9 கல்லாடம். பா-12

10 பெரியபுராணம் 37:66

11 ஷை 37:92

12 ஷை 37:95

13 ஷை வெள்ளானைச் சருக்கம். 28-52

14 திருத்தொண்டர் புராண சாரம்-உமாபதி சிவாச்சாரியார்.

15 கல்லாடம். 12
சைவசமய வளர்ச்சி 1972-ப. 242 டாக்டர் இராச மாணிக்கம்.

16 திருத்தொண்டர் திருவந்தாதி. 44:25

17 திருவிசைப்பா. 5 ப. 22. ஸ்ரீகாசிமடத்துப் பதிப்பு. 1974

18 பெரியபுராணம். 37,104

19 சுந்தரர் தேவாரம். ப. 210. ஸ்ரீகாசிமடத்துப் பதிப்பு 1978

20 பெரியபுராணம். 37:162-171

21 பெரியபுராணம். 36:131-39

22 தமிழ் வரலாறு. 1953. பாகம்-2 ப. 87. கே. எஸ். ஸ்ரீனிவாச பிள்ளை.

23 திருக்கைலாய ஞானவுலா. ப. 2. கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார். 1925

24 செந்தமிழ்த் தொகுதி 3. டி ஏ. கோபிநாதராயர்.

25 Origin and Early History of Saivism in South Inia P. 445 C V. Narayana Iyer.

26 தமிழ் இலக்கிய அகராதி 1952 ப. 78 ந சி. கந்தையா பிள்ளை

27 பெரியபுராணம் ஆராய்ச்சி. பக். 54-56 டாக்டர். இராச மாணிக்கனார்.

28 சைவ இலக்கிய வரலாறு. 1956 பக். 256-257

29 பன்னிருதிருமுறை வரலாறு. முற்பகுதி, ப. 295

30 ஷை ஷை ப. 299-300

31 ஆழ்வார்கள் காலநிலை. பக். 135-36 மு. இராகவையங்கார்

32 பன்னிருதிருமுறை வரலாறு. முற்பகுதி. ப. 309.

33 தமிழ் இலக்கிய வரலாறு. 1953 ப. 343. கா. சு. பிள்ளை

34 தமிழ் இலக்கிய வரலாறு. 1972. ப. 103. டாக்டர் மு. வரதராசனார்

35 தமிழ் இலக்கிய வரலாறு 10ஆம் நூற்றாண்டு. 1972. பக் 289 & 359. மு. அருணாசலம்

இளம்பெருமானடிகள் :

1 பன்னிருதிருமுறை வரலாறு. 2ஆம் தொகுதி, ப. 708

2 ஷை ஷை ப, 708

3 ஷை ஷை ப. 709

4 பதினொராந்திருமுறை. கழகம். குறிப்புரை. ப. 216

5 திருவிசைப்பா. கோயில் 1. பா. 5

அதிராவடிகள் :

1 பதினொராந்திருமுறை. கழகம். ப. 223

2 பின்னிணைப்பு. காலவேறுபாடு

கபில தேவநாயனார் :

1 கபிலர். (வேங்கடசாமி நாட்டார்) பக். 82, 83, 174-76

2 கலைக்களஞ்சியம்-தொகுதி. 3. ப - 213

3 பதினெண்கீழ்க்கணக்கு. மர்ரே பதிப்பு. 2ஆம் தொகுதி ப - 302

3அ கபிலர் - வேங்கடராஜுலு ரெட்டியார் ப-51

4 இலக்கியமணிமாலை, ப-108

5 தமிழ் இலக்கிய வரலாறு. 15ஆம் நூற்றாண்டு ப-310

6 சங்கத்தமிழ்ப் புலவர் வரிசை. பகுதி. 1. பக்-101-114

7 கபிலர்-வே. வேங்கடராஜுலு ரெட்டியார். ப-48

7அ தொல்காப்பியம். இளம்பூரணர். உரை. சூ-484

8 தமிழ் இலக்கிய வரலாறு. 10ஆம் நூற்றாண்டு. ப-349

பரணதேவநாயனார் :

1 இலக்கண வரலாறு ப-159

2 சங்கத்தமிழ்ப் புலவர் வரிசை. 1. (பரணர்) 1954. ப-57

3 கலைக்களஞ்சியம். தொகுதி. 6 ப-34-35

4 சங்கத்தமிழ்ப் புலவர். வரிசை 1 பக்-51-55

5 பின்னிணைப்பு-காலவேறுபாடுகள்.

கல்லாடதேவநாயனார் :

1 சைவசமய வளர்ச்சி. 1972. ப-242

2 செந்தமிழ்-தொகுதி 15, ப-114

3 உரையாசிரியர்கள். 1968. பக்-155-156

4 பின் இணைப்பு-காலவேறுபாடுகள். அட்டவணை

பட்டினத்தார் வரலாறு :

1 பட்டினத்துப்பிள்ளையார் புராணம் - 1915 (பதி. ஆ.) எஸ் ஆர். மாணிக்கவேலு முதலியார்-பாயிரம்-23-25

2 தமிழ்ப்பெருமக்கள் - 1921. எஸ். அனவரத விநாயகம் பிள்ளை

3 பன்னிருதிருமுறை வரலாறு. ப-728

4 தமிழ்ப்பெருமக்கள் ப-179

5 தமிழ்ப்பெருமக்கள். ப-179
பட்டினத்தடிகள் வரலாறும் நூலாராய்ச்சியும், 1973. பக்-3-4
பன்னிருதிருமுறை வரலாறு. ப-728

6 பட்டினத்துப்பிள்ளையார் புராணம்-முகவுரை. ப 1 (பொழி. உரை) தி. வடிவேலு முதலியார்

7 சித்தர் பாடல்கள் - 1968. அரு. இராமநாதன்

8 பட்டினத்தடிகள் - வரலாறும் நூலாராய்ச்சியும். பக்-98-99

9 ஸ்ரீகாசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் நூற்றாண்டுவிழா மலர்-1963-ப-236

10 மேற்படி மேற்படி ப - 237

11 பன்னிருதிருமுறை வரலாறு. ப-718

12 சைவ இலக்கிய வரலாறு. ப. 376

13 தமிழ் இலக்கிய வரலாறு. 10ஆம் நூற்றாண்டு ப-364

14 பட்டினத்துப்பிள்ளையார் பிரபந்தத்திரட்டு-1921. பக்-30-3
ஆ. சிங்காரவேலு முதலியார்

15 தமிழ் இலக்கிய வரலாறு-10ஆம் நூற்றாண்டு. ப-403-
மு. அருணாசலம்.

16 செட்டிநாடும் தமிழும். 1960. ப.59

17 மேற்படி மேற்படி ப - 60

18 பட்டினத்தடிகள் வரலாறும் நூலாராய்ச்சியும். ப – 3

19 பன்னிருதிருமுறை வராலாறு. ப - 735

20 சைவ இலக்கிய வரலாறு. பக்-375-76

20அ தமிழ் இலக்கிய வரலாறு. 10ஆம் நூற்றாண்டு. பக்.412-415

21 பின் இணைப்பு – கால வேறுபாடு அட்டவணை

நம்பியாண்டார் - நம்பி அடிக்குறிப்புக்கள் :

1 தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி. 1977. ப-169

2 தமிழ் இலக்கிய வரலாறு. 11 ஆம் நூற்றாண்டு. 1971. ப-291

3 சைவ இலக்கிய வரலாறு. 1958. ப - 431

4 பன்னிருதிருமுறை வரலாறு முதற்பகுதி. பக்-15-20

5 திருத்தொண்டர் பெரியபுராணம் – உரைநடை - ஆறுமுக நாவலர்

6 இலக்கிய ஆராய்ச்சியும் கல்வெட்டுக்களும். 1961. ப 30
பிற்கால சோழர் சரித்திரம். பகுதி - 1 ப - 30

7 சைவசிகாமணிகள் இருவர். 1930. ப-42

8 முதல் இராசராசசோழன். 1918

9 தமிழ் வரலாறு. 1953. ப-214

10 இலக்கிய ஆராய்ச்சியும் கல்வெட்டுக்களும்-பக்-30-32

11 சைவ இலக்கிய வரலாறு. 1958. ப-441

12 பன்னிருதிருமுறைவரலாறு. முதற்தொகுதி. ப-20

13 தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும். 1972. ப-344

14 சைவசிகாமணிகள் இருவர். ப–42

15 பிற்கால சோழர் சரித்திரம். முற்பகுதி. 1949. ப-76

16 தமிழ் வரலாறு. ப–214

17 ஷை ப-215 - 222

18 தமிழ் இலக்கிய வரலாறு. 11ஆம் நூற்றாண்டு. ப-304 - 306

19 பின் இணைப்பு - காலவேறுபாடு அட்டவணை

20 கலைக்களஞ்சியம். தொகுதி - 6 ப-292

21 தமிழ் வரலாறு. ப-230

21அ சைவசமய வளர்ச்சி. ப-166
பன்னிருதிருமுறை வரலாறு. ப-25

22 பன்னிருதிருமுறை வரலாறு. தொகுதி - 2. ப-454

23 தமிழ் வரலாறு ப-214

24 இலக்கிய வரலாறு. ப-345

25 தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி. ப - 135

26 தமிழ் இலக்கிய வரலாறு. 11ஆம் நூற்றாண்டு. ப-297

27 திருமுறைகண்ட புராணம். பா - 27

28 ஷை ஷை பா - 29

29 பன்னிருதிருமுறை வரலாறு. ப - 766

30 பின் இணைப்பு - காலவேறுபாடு.

31 ஷை ஷை

பதினொராந் திருமுறையின் இலக்கிய வகைகளும் யாப்பும்.

சங்க நக்கீரர்

(யாப்பு)

சங்க நக்கீரர், சங்கத் தொகை நூலில் 37 பாடல்களைப் பாடியவர். 11ஆம் திருமுறையில் முருகனைப் பாடுபொருளாகக் கொண்டு வரும் பாடல் இதுவொன்றே.

இது சீரிய ஓசை கெழுமிய ஆசிரியப்பாவாம். 317 வரிகளையுடையது. நேரிசை யாசிரியமாக முடிகிறது. இடையே இணைக் குறள் ஆசிரியத் தன்மையும் வருகின்றது.

இது, சங்க காலத்தே செய்யப்பட்ட பாடல் என்பதற்கான காரணங்கள் வருமாறு :

(1) சங்க காலச் செஞ்சொற்கள் பயின்றுள்ளன :

ஓவறவிமைக்கும், வள்ளுறை, கமஞ்சூல், வயின், எய்யா நல்லிசை, சேவடி, சமம், மேவலர், கச்சினன், கழலினன், கடுப்ப நரல, இயவுள், வலனேர்பு, மனநேர்பு, இன்னே பெறுதி, முடிமார், ஓர்க்கும்மே, காண்வர, உரியன், கிள்ளுபு, தெறியா, செவிநேர்பு, இடையிடுபு, நகைதாழ்வு.

(2) அடைச்சொற்கள் - ஒட்டுச் சொற்கள் சங்க இலக்கியத்தில் மிகுதி :

அவிரொளி, நோன்றாள், செல்லுறழ்தடக்கை, பெருந்தண் சண்பகம், தேங்கமழ்மருதிணர், வாடாமாலை, படுமணியிரட்டும், கறுவுகொள் நெஞ்சம் ..

(3) சங்க இலக்கியங்களில் அளபெடைச் சொற்கள் மிகுந்து வரும் :

தலைஇய, பராஅரை, மராஅத்து, கலைஇய தைஇய, செரீஇ, வளைஇ, சேஎய், அதாஅன்று வருஉம், நிலைஇய பெறீஇயர், உடீஇ, வளைஇய, வெரீஇ என்றவாறு முப்பதினுக்கும் குறையாத இடங்களில் வரும்.

(4) நக்கீரர் தொல்காப்பிய இலக்கண நெறிகளைக் கையாண்டுள்ளார் :

(அ) 'சேயோன் மேயமைவரை உலகமும்' (சூ. 5) என்பது தொல்காப்பியம். 'செறுநர்த் தேய்த்த செல் உறழ் தடக்கை

மறுவில் கற்பின் வாணுதல் கணவன்' சீர்திகழ் மலையில் இருப்பதாய் நக்கீரர் காட்டுகிறார். வீரர் வெற்றி பெற்ற பின்னர் கூத்து நிகழும். இங்கு நக்கீரர், பேய்மகளின் துணங்கையைக் குறிக்கிறார்.

(ஆ) ஆற்றுப் படையைப் பற்றித் தொல்காப்பியம் பேசும். நக்கீரர் சற்றுப் புதிய முறையில் ஆற்றுப்படையை யாக்கிறார்.

(இ) குறிஞ்சி பாடுதல், குரவை ஆடுதல் பற்றித் தொல் காப்பியத்தில் கேட்கிறோம். அவை இந்நூலிலும் உண்டு. "மகர ஈற்றுப் பெயர்ச் சொல், ஒடு என்னும் வேற்றுமை உருபை ஏற்குமிடத்து, இடையில் சந்தி முதலிய சாரியை பெறாது வருதல் மிக்க பழமையைக் காட்டும் சான்றாகும், உள்ளமொடு (62), நெஞ்சோடு (100). ஊகமொடு" (309)[1].

(ஈ) "பலவுடன் என்ற தொடர் பலவும் ஒருங்கு சேர என்ற ஒருவகை மரபு பற்றிய பொருளில் வருதல் தொன்மையைக் குறிக்கும் மற்றொரு சான்றாகும்." என்று இந்நூலின் பழமையை டாக்டர் துரையரங்கனார் கூறுவது நோக்கத்தகும்.[2]

5. சங்க நூற் சாயல் :

(1) "பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு" என்பது (முரு-2)
"முந்நீர் மீமிசை ஏமுற விளங்கிய சுடர்" என்பது நற்றிணை (283 : 6—7)

(2) செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை (முரு. 5)
'நல்லமர்க் கடந்த நின் செல்லுறழ் தடக்கை' (பதி 52:10)

(3) 'திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து' (முரு. 70)
'திருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பின்' (நெடுநல். 89)
(இதுவும் நக்கீரர் பாடலே)

(4) 'படுமணி யிரட்டும் மருங்கின்' (முரு. 80)
'படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள் (பு 72 ; 3.4)

(5) பல் பொறி மஞ்ஞை வெல்கொடியாக (முரு. 122)
பல் பொறி மஞ்ஞை வெல்கொடியுயரிய (அகம். 149:15)

ஆகவே திருமுருகாற்றுப் படையைச் சங்க காலத்து நக்கீரர் பாடினார் என்பதாம். இச்சங்கச் சான்றோர் 11ஆம் திருமுறை யில் வேறு நூல் எதுவும் செய்தவரல்லர்.

காரணங்கள் வருமாறு :

(1) சங்க காலத்தில் கண்ணப்ப நாயனாரைப் பற்றி எப்பேச்சும் இல்லை. 11ஆம் திருமுறையிலோ, நக்கீரதேவ நாயனார் திருக்கண்ணப்ப தேவர் திருமறம் செய்கிறார்.

(2) கயிலை, காளத்தி, திருவலஞ்சுழி, திருஈங்கோய்மலை என்ற தலங்கள் பிற்காலச் சோழர்கள் காலத்தில் போற்றப் படுவன. இவை சங்க காலத்தில் இப்பெயரில் இல்லை. இவற்றிற்கு நக்கீரதேவநாயனார் நூல் செய்கிறார்.

(3) மும்மணிக் கோவை, மறம் என்ற சிற்றிலக்கிய வகைகள் சங்க காலத்தில் இல்லை. ஆயின் நக்கீரதேவ நாயனார் இந்த யாப்புக்களை ஆள்கிறார்.

(4) திருஎழு கூற்றிருக்கை என்ற சித்திரக் கவி யாப்பும் அக்காலத்தில் இல்லை.

(5) கோபப்பிரசாதம் என்ற தலைப்பே, பிற்கால வழக்கைக் காட்டும்;

(6) நக்கீர தேவநாயனார் என்ற பெயரே சங்க நக்கீரரை விலக்குமன்றோ? தேவர்-நாயனார் என்பன சமய காலமாகிய கி. பி. 7-10ஆம் நூற்றாண்டு வழக்கல்லவா?

(7) கயிலைபாதி – காளத்திபாதி – என்று இரு தலங்களை ஒரே நூலில் பாடுதல் புதிய முறையாம்.

(8) கீழ்வரும் வடசொல்லும், சில புராணக் கதைகளும் சங்க காலத்தில் இல்லாதவை.

(அ) வடசொற்கள் :

சரணம் (கயிலை 4) தேவாதி தேவன் (ஷெ 5) தயாவுண்டோ (ஷெ 14) சீலம் (ஷெ 20) பருப்பதம் (ஷெ 33) ஓரஞ்செழுத்து (ஷெ 39) முக்தி (ஷெ 60) பாதாரவிந்தம் (ஷெ 99) கீதம் (ஷெ 22) சிவலிங்கம் (வரி 160) சிவகதி (வரி 158) (திரு. க. தே. மறம்).

(ஆ) புராணக் கதைகள் :

1. கண்ணப்பர் கதை (கயி. 12)

கண்ணப்பருக்கு மறம் பாடியமை

2 மார்க்கண்டேயர் கதை (கயி 31)

3. சாக்கியர்க்கருள் சுரந்தமை (கோ. பிர. 17)

4. சிலந்திக்கருளியது (கயி 32)

5. உபமன்யுவிற்காகப் பாற்கடல் வரவழைத்தமை (கயி.81)

இவை தேவார ஆசிரியர்கள் காலத்தில் கேட்கப்படும் செய்திகள். ஆகவே, 11ஆம் திருமுறையில் உள்ள பிற நூல்களைச் செய்த நக்கீர தேவநாயனார், சங்க காலத்தவர் அல்லர்.

நூற்பெயர் :

சங்க நக்கீரர், தம் நூலுக்கு என்ன பெயரிட்டார்? திருமுருகாற்றுப்படையா? முருகாற்றுப்படையா? புலவராற்றுப் படையா? என்பது வினா.

தொல்காப்பியர் ஆற்றுப்படை இலக்கணம் கூறிய இடத்தில்[3] புலவராற்றுப் படையைப் பற்றிக் கூறாமையால், இளம்பூரணரும் யாதும் கூறிற்றிலர். நச்சினார்க்கினியர் இச் சூத்திர உரையில் புலவராற்றுப்படை என்ற பெயரை சூட்டுவர்[4]. இளம்பூரணரும் "அமரர்கண் முடியும்" என்ற சூத்திரத்திற்கு உரை கூறுங்கால் புலவராற்றுப்படை என்ற தொடரை ஆள்கிறார்.[5] ஆகவே, உரையாசிரியர்கள் காலத்தில் (கி.பி.12-14) இப்பெயர் வழங்கியமை அறியலாம். ஆயின், நச்சினார்க் கினியரே 'புலவராற்றுப்படை' என்ற பெயரை மறுக்கிறார். முருகாற்றுப்படை என்பதே பொருந்தும் என்பது அவர் கருத்து. இப்படிக் கருத நூலிலேயே இடமுண்டு. "முருகு இயம் நிறுத்து முரணினர் உட்க முருகாற்றுப் படுத்த உருகெழு வியல்நகர்" (முரு. 243—44) என்ற அடிகள் அரண் செய்கின்றன. ஆகவே, திரு என்ற சிறப்பு அடை, பிற்காலத்தே வந்தது என்பதாம். புலவராற்றுப்படை என்ற பெயரை நச்சினார்க்கினியர் ஒப்பவில்லை. தொல்காப்பிய விதிப்படி முருகனை ஆற்றுப்படுத்த இயலாது. பாணனை ஆற்றுப் படுத்தினால் பாணாற்றுப்படை. முருகனை ஆற்றுப்படுத்தினால் முருகாற்றுப்படை என்றால், முருகனை யாரிடம் ஆற்றுப்-படுத்துவது? "முருகன் பெறவேண்டிய இன்றியமையாமை உண்டா? இப்படிப் பொருள் செய்தால், முருகன் பெருமைக்கு இழுக்கல்லவா? இதுவும் பொருந்துவது அரிது." என்பார் டாக்டர் மொ. அ. துரையரங்கனார்.[6]

நச்சினார்க்கினியரே முருகாற்றுப்படை என்பதற்கு ‘முருகன் பால் வீடுபெறுதற்குச் சமைந்தான் ஓரிரவலனை ஆற்றுப்படுத்தல் என்பது பொருளாகக் கொள்க'' என்றார்.[7] இவரே திருமுருகாற்றுப் படையுரையில் ''வீடுபெறுதற்குச் சமைந்தானோரிரவலனை வீடு பெற்றானொருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்த தென்று பொருள் கூறுக'' என்றார்.[8] பொருளதிகார உரையில் கண்ட முன்விளக்கம் பொருந்தும். அப்படியானால் புலவராற்றுப்படை என்ற பெயரே இடவேண்டிவரும். நக்கீரர் இப்படி ஒரு புதுவிதி செய்தபின், புறப்பொருள் வெண்பாமாலைக் காரரும், புறநானூற்றுக்குத் துறைவகுத்தவர்களும் ‘புலவராற்றுப்படை' என்ற துறையை அமைப்பாராயினர். ஆகவே முருகாற்றுப் படையே, பின்வந்த இலக்கணிகட்கு ஒரு துறை வகுக்கவும் காரணமாயிற்று பன்னிரு பாட்டியலார், எடுத்த எடுப்பிலேயே ''வறுமையுடன் வரூஉம் புலவர் பாணர் பொருநர் விறலியர், கூத்தர் ... பராய் அங்கு நீ செல்கென விடுப்பதாற்றுப்படை" என்று தொல்காப்பியர் கூறாத புலவராற்றுப்படையைச் சேர்த்துக் கூறுவர்.[9]

நக்கீரர் இந்நூலுக்கு என்ன பெயர்தந்தார்? பத்துப்பாட்டைத் தொகுத்தவர்கள் எல்லாப் பாடல்கட்கும் பெயர் தந்திருகிறார்கள் மலைபடுகடாமு கூத்தராற்றுப்படைதானே? அது பொருநரைப் பற்றிப் பேசுகிறது! ஆயினும் வேறு பெயர் எப்படி வந்தது? பாட்டில் ''மலைபடுகடாஅ மாதிரத்து இயம்ப" என அதில் வருகிறது.[10] அப்பாட்டில் வரும் பெயரையே அமைத்தனர். அது போல் முருகாற்றுப்படை என்ற பெயரும் நூலுள் வரும் பெயராம்.

தொகுத்தவர் காலத்தில் இதற்கு முருகாற்றுப்படை எனவும், உரையாசிரியர்கள் காலத்திற்கு முன்பு புலவராற்றுப்படை என்ற பெயரும் வழங்கியிருக்கும்.

முருகனைப் பத்தனிடம் ஆற்றுப்படுத்தல் என்பது அமையும் முருகாற்றுப்படை' என்பது பெயராம்.

பொருளால் புகழ் வாய்ந்ததாக இந்நூல் இருந்ததாலும் ஆசிரியர் பெயரில் ஒற்றுமையிருந்ததாலும், ஆற்றுப்படை என்ற சிற்றிலக்கியமாக இருந்ததாலும் பதினொராந்திருமுறையில் இஃது இடம்பெற்றது.

காரைக்கால் அம்மையார்

(யாப்பு)

சைவ இலக்கிய உலகில், காரைக்காலம்மையார் புண்ணியத்தின் கண்கள் எனக் கூறத்தக்கவராவார். சைவ அடியார்களில் இலக்கியம் செய்த ஒரே பெண்மணி இவரே. இவரது பனுவல்கள் பதினொராந்திருமுறையில் மூன்று உள.

1. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள்.
2. திருவிரட்டைமணிமாலை
3. அற்புதத்திருவந்தாதி

இவர் பாடிய பாடல்கள்:

ஆசிரிய விருத்தம்	22
கட்டளைக்கலித்துறை	10
வெண்பா	111
ஆகப் பாடல்கள்	143

பதிகங்கள் :

புறத்துறையில் பப்பத்துப்பாடல்களைக் கொண்டு விளங்கிய பதிற்றுப்பத்து என்ற நூல்பற்றிச் சங்க இலக்கியத்தில் கேட்கிறோம். திருக்குறள், பத்துப்பாடல்களைக் கொண்ட அதிகாரங்களை உடையது. இவைபோல பத்துப்பாடல்களைக்கொண்டு தெய்வத்தைப் பொருளாகப்பாடியதனைப் பதிகம் என்றனர் பிற்காலத்தே நீதி நூல்களில் நாலடியார் பத்துப்பாடல்களைக் கொண்டு விளங்கியமையும் கருதலாம். ஆகவே, சங்க காலத்தில் பப்பத்தாக இருந்த முறையே பின்னர் பதிகமாயிற்று என்பதாம்

இதன் இலக்கணத்தைப் பன்னிருபாட்டியல் பேசும்

"ஆசிரியத்துறை அதனது விருத்தம்
கலியின் விருத்தம் அவற்றின் நான்கடி
எட்டின் காறும் உயர்ந்த வெண்பா
மிசைவைத் திரைந்து நாலைந் தென்னப்
பாட்டுவரத் தொடுப்பது பதிகம் ஆகும்"

என்றது காண்க.[1]

ஆசிரிய விருத்தம் 11 வரை திருவாலங்காட்டுப் பதிகங்களை அம்மையார் தொடுத்தார். இதில் கடைக்காப்புச் செய்யுளான இறுதிப்பாடலை நீக்கின், பத்துப்பாடல் என்ற கணக்கு அமையும். திருவாலங்காட்டைப்பற்றிச் சமய குரவரில் மூவர் பாடியுள்ளனர் ஆயினும் காலத்தால் முந்திய காரைக்கால் அம்மையாரே முதன் முதலில் இரு பதிகம் செய்தார். இப் பதிகங்களுக்குப் பண்வகுத்து வைத்த அருமையும் பெருமையும் அம்மையாரைச் சாரும். இவ்விரு காரணங்களாலும் இப்பதிகங்கள் "திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள என்ற பெயரைத்தாங்கின; இவ்விரு பதிகங்களிலுமே பேய்க்கணங்களைப் பற்றிய வருணனை சிறப்பாக வருகின்றன. பரணி ஆசிரியர்கள் பேய்களைத் திறம்பட புனைந்ததற்கு இவரே முன்னோடி. ஆதலின் இப்பனுவல் மூல இலக்கியம் எனலாம்.

திருவிரட்டை மணிமாலை :

காரைக்காலம்மையார் சிவபெருமானைக் குறித்துத் "திருவிரட்டை மணிமாலை" என்ற நூல் செய்தார்; யாப்பால் இந்நூல் பெயர் பெற்றது. பாடப் பெற்றோரின் பெயர் நூற்பெயருடன், பிறர் செய்த நூல்களில் இருப்பவும். இங்கு அப்பெயர் இல்லை. இவ்வகை நூலை முதன் முதலில் செய்தவர் அம்மையாரே.

'வெண்பா முதலாகக் கலித்துறை பின்வரும்
இந்த இருப திரட்டைமணி மாலை"

என்பது பன்னிருபாட்டியல்.[2] இதில் ஒரு மாறுதலுடன் அம்மையாரின் பனுவல் உள்ளது. முதலில் வெண்பா வராமல் கட்டளைக் கலித்துறையும் அடுத்து வெண்பாவுமாக வருவது வேறுபாடு. இதுவே இந்நூல் பழமையைக் காட்டும். பின்னர் வந்த புலவர்கள் முதலில் வெண்பாவும், அடுத்துக் கட்டளையும் வைத்துப்பாடியிருப்பர் அதனைக் கண்ட பன்னிருபாட்டியலார் வெண்பாவை முன்வைத்துப் பாடினர். இதற்குச் சான்று பதினொராந்திருமுறையிலேயே உண்டு; கபில தேவநாயனாரும் நம்பியாண்டார் நம்பியும் செய்திருக்கும் நூல்களில், வெண்பாவை முதலிலும் கட்டளைக் கலித்துறையை அடுத்தும் வைத்தமையை நோக்குக.

வச்சணந்திமாலை ஆசிரியர் இரட்டைமணிமாலையின் இலக்கணத்தை மாற்றிப் பேசுகிறார். ஆசிரிய விருத்தமும் நேரிசை வெண்பாவும் தம்முள் மாறி அந்தாதியாய் இருபது வருவது இரட்டைமணிமாலை என்றார்[3]. ஆனால் இந்த வகையில் வரும் இரட்டைமணிமாலை பதினொராந்திருமுறையில், இல்லை. பன்னிரு பாட்டியலில் கண்டவாறு வருவனவேமிகுதி. பதினொராந் திருமுறையில் நான்கு இரட்டைமணிமாலை நூல்கள் உள. அம்மையாரின் நூல்தவிர கபிலதேவநாயானார் செய்த மூத்த நாயனார் திருவிரட்டைமணிமாலை சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை என இருநூல்கள், நம்பியாண்டார் நம்பியின் விநாயகர் திருவிரட்டைமணிமாலை என ஒன்று இவை, வெண்பா முன்னும் கட்டளைக் கலித்துறை பின்னுமாக ஒவ்வொரு நூலும் 20 பாடல்களை அந்தாதியாகக் கொண்டு முடியும். சிவபெருமான் திருவந்தாதி மட்டும், 40 பாடல்களைக் கொண்டு முடிவதாக இயற்றப்பட்டிருக்க வேண்டும்; ஆயினும் இன்று 37 பாடல்களே உள. மூன்று இறந்தன

கட்டளைக் கலித்துறை :

இங்கோர் இன்றியமையாச் செய்தியையும் நாம் நினைவு கூர்தல் தக்கதே. காரைக்கால் அம்மையாரின் திருவிரட்டைமணி மாலையில் முதன் முதலில் கட்டளைக் கலித்துறை பயிலப் பார்க்கிறோம். சங்க காலத்தில் கட்டளைக் கலித்துறைப்பா நூல் இல்லை. தொல்காப்பியர் கலிப்பாவின் வகைகளைச் சொல்லும்போது இதனைக் கூறவில்லை. அவர் காலத்தில் எல்லாப் பார்க்களுமே எழுத்து எண்ணிப்பாடும் முறை இருந்தது. ஆகவே, தொல்காப்பியர் கட்டளைக் கலித்துறையை எந்தப் பாவில் அடக்கினார் என்று அறுதியிட முடியவில்லை ஆனால் தேவார ஆசிரியருள் திருநாவுக்கரசர் இவ்வியாப்பைச் செய்தாலும், பெயர் மாறிவருகிறது; அவர் காலத்து, இதனைத் "திருவிருத்தம்" என அழைத்தனர். திருநாவுக்கரசரின் 80 முதல் 113 வரை உள்ள பதிகங்கள் இவ்வகையாப்பின.

"கட்டளைக் கலித்துறையின் இலக்கணம், முதன் முதல் வீரசோழியத்தில் அமைகிறது. தொன்னூல் விளக்கம் சீர்நிலையையும் வகுத்துக் கட்டளைக் கலித்துறையைத்தருகிறது. சிதம்பரப் பாட்டியல் பின்பற்றுகிறது" என்பார் டாக்டர் ச. வே. சுப்பிரமணியம் அவர்கள் [4]

இலக்கண நூல்கள் பிற்காலத்தே இந்த யாப்பைத் தெளிவுறப் பேசும். முதன் முதலில் காரைக்கால் அம்மையார் நூலில் கட்டளைக் கலித்துறையைக் காண்கிறோம்; அடுத்துத் திருநாவுக்கரசர் நூலில் பார்க்கிறோம். முழு நூலாக மாணிக்க வாசகரின் திருக்கோவையாரில் தொடுக்கப்படுகிறது.

அந்தாதி:

அந்தாதி பற்றித் தொல்காப்பியர் யாதொன்றும் கூறினாரல்லர். ஆயினும் சங்க நூல்களில் அந்தாதி அமைப்புக் காணப்படுகிறது. ஐங்குறுநூற்றில் அம்மூவனார் இயற்றிய நெய்தல் திணையில் தொண்டிப்பத்து முழுதும் அடி, சீர் அந்தாதியாக வருகிறது. பதிற்றுப்பத்தில் காப்பியாற்றுக் காப்பியனாரின் நான்காம்பத்து முழுதும் அடி, சீர் அந்தாதியாக உள்ளது. ஆயினும், இவை மண்டலித்து முடியவில்லை. இந்த அமைப்பே, பின்னர் அந்தாதி நூல்களாக வளர்ந்தன. பின்னீடு வந்த அந்தாதி நூல்கள் வெண்பா அல்லது கட்டளைக் கலித்துறைப் பாக்களால் ஆகி மண்டலித்து முடியும். அவையே அந்தாதி இலக்கியம் எனப் பெயர் பெற்றன. இதன் இலக்கணத்தை,

> "பத்தாதி நூறந்தம் பல்சந்த மாலையாம்
> ஒத்தாய வெண்பா வொருநூறா...ஒத்தசீர்
> அந்தாதி யாகுங் கலித்துறையு மவ்வகையே
> வந்தா லதன்பே ரவை"

என்று வச்சணந்திமாலை கூறும்.[5] பன்னிருபாட்டியலும் இது குறித்துக் கூறுகிறது.[6]

எழுத்து, சொல், சீர், அடி என்ற நான்கு வகையாலும் இவ்வந்தாதிகள் தொடுக்கப்பெறும். அற்புதத்திருவந்தாதி நூற்றியொரு நேரிசை வெண்பாக்களால் வந்து மண்டலித்து முடிகிறது. 101ஆம் பாட்டு கடைக்காப்புச் செய்யுள். பாட்லின் பொருள் 100ஆம் பாட்டுடன் முடிந்து விடுகிறது.

பதினொராந்திருமுறையில் எட்டு அந்தாதிகள் உள்ளன. அவை வருமாறு:

1. அற்புதத்திருவந்தாதி-காரைக்காலம்மையார் (வெண்பா) பாடல்கள் 101
2. பொன்வண்ணத்தந்தாதி-சேரமான்பெருமாள்நாயனார் (கட்டளைக்கலி) 101

3. கயிலைபாதி-காளத்திபாதி-நக்கீரதேவநாயனார்
(வெண்பா) 100

4. சிவபெருமான் திருவந்தாதி - கபிலதேவநாயனார்
வெண்பா 100

5. சிவபெருமான் திருவந்தாதி - பரணதேவநாயனார்
(வெண்பா) 101

6. திருவேகம்பமுடையார் திருவந்தாதி-பட்டினத்தார்
(கட்டளைக்கலி) 100

7. திருத்தொண்டர் திருவந்தாதி-நம்பியாண்டார்
(கட்டளைக்கலி) 89

8. ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி - ஷ
(கட்டளைக்கலி) 100

இவற்றுள் நான்கு, வெண்பாவில் இயன்ற அந்தாதியாகவும், நான்கு கட்டளைக் கலித்துறையில் வந்த அந்தாதியாகவும் உள்ளன. மூன்று நூல்களில் 101 பாடல்கள் உள. இவற்றில் 101ஆவது பாடல் பலன் சொல்லும் பாடல். நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி மட்டும் 89 பாக்களில் முடிந்திருக்கிறது. அங்கு அடியார்களின் வரலாற்றைச் சுந்தரரின் திருத்தொண்டர் திருத்தொகையின்படி கூறுகிறார். செய்திகள் 89ஆவது பாடலுடன் முடிந்துவிடுகிறது பொருள் முற்றியபின் எண்ணிக்கைக்காக வறிதே பாட அவர் விரும்பவில்லை. இவ்வளவில் அந்தாதி நிறைவெய்துகிறது.

காரைக்காலம்மையாரே வெண்பாவில் முதலில் அந்தாதி இலக்கியம் செய்தவர். கட்டளைக் கலித்துறையில் முதலில் அந்தாதி யாத்தவர் சேரமான் பெருமாள்.

அற்புதத்திருவந்தாதி :

அம்மையார் செய்த அந்தாதி "அற்புதத்திருவந்தாதி" என்ற பெயரினது: ஒரு பெண்மணி அற்புதமாகச் செய்தார் என்பதாலும், தத்துவக்கருத்தை ஒருமகள் மொழிந்தார் என்பதாலும், வெண்பா யாப்பில் புதிய முறையில் முதலில் அந்தாதி என்னும் நூல் செய்தார் என்பதாலும் "அற்புதத்திருவந்தாதி" என்ற பெயர் வந்தது. இதிற்கண்ட அனைத்து வெண்பாவும் இருவிகற்ப நேரிசை வெண்பாவாம்.

பா. 46இல் "ஒளிகொள்மிடற்'' என்ற தனிச்சொல் கனிச் சீராக இருத்தல் ஏன் என விளங்கவில்லை. இதே சீர் "வெளி கொள்மிடற்'' என்ற பாடபேதமும் இருக்கிறது. ஆயின் கனிச் சீரில் வேறுபாடில்லை. இதனை நேரிசை வெண்பாவாகக் கொள்ளாமல்,...........

''அளியீர் அறிவிலியீர் ஆவெளி-கொள்மிடற்'' என இசை கூட்டின் செப்பலோசை சரியாகி விடும் ஆயின் இப்படிப் பதிப்பிக்கவில்லை

பா. 94இல் தனிச்சொல் ''பொருப்பன்மகள்'' என்றிருப்பதும் கனிச்சீராம். இதற்கு சி. கே சுப்பிரமணிய முதலியார், "னகர வொற்று நீக்கிக் காய்ச்சீராக்கி வகையுளி செய்து கொள்வது புறனடையாம்" என்று அமைதி எழுதினார்.[7] இவை ஆய்வாளர் காணவேண்டும் இடங்கள்.

'வ்வந்தாதியில் முற்றுகர ஈற்றில் முடியும் வெண்பாக்கள் உள. அவையாவன பா. எண். 12, 19 26, 40, 62, ஆக ஐந்து பாடல்கள்.

நக்கீர தேவநாயனார்

(யாப்பு)

பதினொராந்திருமுறையில் நக்கீரர் பத்து நூல்களும், நம்பியாண்டார் நம்பி பத்துப் பனுவல்களும் செய்த பெருங் கவிஞர்கள், இவருள் திருமுருகாற்றுப்படையைச் சங்க நக்கீரர் செய்தார் ஆதலின். அது நீங்கலாக ஏனைய ஒன்பது நூல்களை நக்கீர தேவநாயனார் இயற்றினார். அவை வருமாறு:

1. கயிலை பாதி-காளத்தி பாதி அந்தாதி
2. திருவீங்கோய்மலை எழுபது
3. திருவலஞ்சுழி மும்மணிக்கோவை
4. திருவெழு கூற்றிருக்கை
5. பெருந்தேவபாணி
6. கோபப்பிரசாதம்
7. காரெட்டு
8. போற்றித்திருக்கலிவெண்பா
9. திருக்கண்ணப்ப தேவர் திருமறம்

இவர் ஏழு மூல இலக்கியங்களைச் செய்தவர். (1) கயிலை பாதி காளத்திபாதி என இரு பதிகளைப் பாடியது. (2) திரு வலஞ்சுழி மும்மணிக்கோவை முதலில் பாடியது. (3) திருவெழு கூற்றிருக்கை முதலில் செய்தமை. (4) பெருந்தேவபாணி பாடியது. (5) போற்றிக்கலிவெண்பா இயற்றியமை. (6) திருவீங் கோய்மலையாகிய ஒருபதிக்கு மட்டும் எழுபது பாடல்கள் பாடியது. (7) திருக்கண்ணப்ப தேவர் திருமறம் என அடியா ருக்கு முதலில் நூல் பாடியது; இவை புதுமை. இவர் ஒருமுறை செய்த இலக்கிய வகையை மறுமுறை திரும்பச் செய்யாமை ஒரு புதுமை.

நூற்பெயர்க்காரணம்:

மேற்சுட்டிய எண். 1, 2, 3 ஆகிய நூல்கள், தலத்தால் பெயர் பெற்றன. திருவெழுகூற்றிருக்கை - சித்திரக்கவியாம். போற்றிக்கலிவெண்பா - பொருளாலும் யாப்பாலும் பெயர் பெற்றது. ''கோபப்பிரசாதம் என்ற சொல்-அந்நூலிலுள்ளே வரும் ஒரு தொடர். அதனால் பெயர்கொண்டது. பதிற்றுப்பத்தில் ''சான்றோர் மெய்ம்மறை'' என்ற தொடரே (2 : 4) பாவின்

பெயராதல் போல இதுவுமாம், கண்ணப்பதேவர் திருமறம் என்பது பாடப்படுவோரின் பெயர்-இயல்புகள் இவற்றால் ஆனது. சிவனடியாரையும் சிவனாகக்கருதும் மரபு நக்கீரதேவ நாயனார் காலத்தே உருவாகிவிட்டதால், கண்ணப்பதேவருக்கும் நூல் பாடினார்.

யாப்பு வகைகள் :

நக்கீர தேவநாயனார் பாடிய வெண்பா	......	183
ஆசிரியம்	....	9
கட்டளைக்கலித்துறை	....	5
கலிவெண்பா	....	1

ஆக 198 பாடல்களைப் பாடினார்.

திருவெழுகூற்றிருக்கை, பெருந்தேவபாணி, கோபப் பிரசாதம். திருக்கண்ணப்பதேவர் திருமறம் ஆகிய நான்கும் ஆசிரியப்பா கயிலைபாதி-காளத்திபாதி அந்தாதி-திருவீங் கோய்மலை எழுபது, காரெட்டு இம்மூன்றும் வெண்பா யாப்பின. போற்றித்திருக்கலிவெண்பா–கலிப்பாட்டு.

திருவெழு கூற்றிருக்கை :

இது மிறைக்கவி-சித்திரக்கவி என்பதாம். ஒன்றுமுதல், ஏழூறாக எண்கள் வர ஏற்றியும் பின் அம்முறையிலேயே ஒவ்வொன்றாக ஒன்று முடியக் குறைத்தும் பாடுதலாம். இது, இரத பந்த அமைப்புக்கு உரியது. இது குறித்து யாப்பருங்கல விருத்தி உரையாசிரியர். மாறனலங்கார உரையாசிரியர் தொல் காப்பிய உரையாசிரியராகிய பேராசிரியர் ஆகியோர் குறித் துள்ளனர்.

மிறைக்கவிகளை மந்திர வகை என்று கூறி, எழுகூற்றிருக் கையையும் அவற்றுள் ஒன்று என்றார் பேராசிரியர்.[1] நக்கீர தேவநாயனாரைப் பின்பற்றிச் சம்பந்தர் இத்தகு கவி செய்தார். எண்களை அடுக்கிப் பாடுதலைப் பரிபாடலில் காணலாம். இப்போக்கினைப் பின்வந்த தேவார ஆசிரியர்களிடமும் காணலாம். இதனையே, சித்திர நிலையில் ஏற்றியும் இறக்கியும் நக்கீர தேவநாயனார் பாடித் திருவெழுகூற்றிருக்கையாக வளர்த்தனர் எனலாம். நக்கீர தேவநாயனாரின் திருவெழு கூற்றிருக்கைச் செய்யுளை யாப்பருங்கலவிருத்தி உரைகாரர் எடுத்துக்காட்டாகக் காட்டுவர்.[2] ஆயின் அதில் 60க்கு மேற்பட்ட பாடவேறுபாடுகள் காணப்படுகின்றன.[3]

பெருந்தேவபாணி:

தெய்வத்தை முன்னிலைப்படுத்திப் பரவிப்பாடுவது தேவ பாணி, "பாணி" ஒத்தறுத்துப்பாடுதலாம் என்பது கலித் தொகையால் தெரியலாம். "சீர்பாணி கொட்டாளோ" என்பது காண்க.[4] ஆகவே, தேவபாணி தெய்வப்பாடல் என்பதும், இதற்குப் பண்ணும் தாளவகையும் வகுக்கப்படும் என்பதுமாம். இஃது ஒத்தாழிசைக்கலியின் வகை என்பது தொல்காப்பியர் கருத்து. கொச்சக ஒருபோகாய் நீண்டு வந்தால் பெருந்தேவ பாணி. குறுகிய அடிகளில் வந்தால் சிறு தேவபாணி. இதன் இலக்கணத்தை இசைநுணுக்க ஆசிரியர் சிகண்டியாரும், பஞ்ச மரபு ஆசிரியர் அறிவனாரும் சிலப்பதிகார உரைகாரர் அடியார்க்கு நல்லாரும் தம் நூலில் ஓதினர். நக்கீர தேவநாயனார் பாடிய பெருந்தேவபாணி முன்னிலையில் தேவரைப்பரவுதல் என்ற அளவில் பொருந்துகிறது. கலிப்பாவில் வரவில்லை. பண்ணும் தாளமும் காணப்படவில்லை. ஆசிரியப்பாவில் 67 அடிகளில் வருகிறது. ஆகவே, இவர் காலத்தில் இதன் இலக்கணம் மாறியது என்பதாம். அல்லது பண்ணும் தாளமும் வகுக்கப்பெற்றிருந்து, ஏடு எழுதுவோரால் விடுபட்டிருக்கலாம்; அல்லது அவர்கட்கும் அது கிடைக்காது போயிருக்கலாம்.

தேவபாணிக்குப் பண் கவுசிகம், தாளம்–இரண்டு ஒத்துடைத் தடாரம் என்று பஞ்ச மரபு உரை காட்டுகிறது.[5]

இப்பாடலில் "அறியா அருந்தமிழ் பழித்தனன்" (வரி. 65) என்று ஒரு வரி வருகிறது. நம்பி திருவிளையாடல், திருஆலவா யுடையார் திருவிளையாடல் ஆகிய பிற்காலப் புராணங்களை நினைவில் கொண்டு நக்கீரதேவர் இறைவனோடு வாதிட்டபோது தமிழைப் பழித்ததாகப் பாடபேதம் செய்தனர், பிற்காலத்தார் என்பர் திரு க. வெள்ளைவாரணனார்.[6] இது கருத்தில் கொள்ளத் தகும்.

திருமறம்:

மறம் என்பது மாவீரம், தொல்காப்பியர் காஞ்சித்திணையில் "நிகர்த்துமேல் வந்த வேந்தனொடு முதுகுடி மகட்பாடு அஞ்சிய மகட்பால்"[7] என்று ஒரு துறை காட்டுவர். இதன் வளர்ச்சியே கலம்பகங்களில்வரும் மறத்துறை, ஈண்டு "மறம்" என்றது அது போன்றதில்லை. மாற்றானின் ஊற்றத்திற்கு ஆற்றாமல் புண்பட்ட வீரன் தானே தன் மார்புண்ணைக் கிழித்துக்கொண்டு

தான் முடிதல் போல இறைவனுக்கு ஏற்பட்ட ஊறு (குடுமித் தேவர்) தீரும்வண்ணம் கண்ணப்பர் தம் கண்ணை இடந்து குருதி ஒழுகிய இறைவனின் கண்ணில் அப்பிய அரும் மறத்தை ஆசிரியர் சிறப்பிக்கிறார். ஆதலின் இதுவும் மறமாயிற்று' என விளக்குவர்.[8]

கயிலைபாதி - காளத்தி பாதி அந்தாதி:

100 வெண்பாவாலான அந்தாதி, அகநானூற்றில் ஒரு குறிப்பிட்ட எண் உள்ள பாடல். ஒரு குறித்த திணையைக்காட்டுதல் போல் இந்நூலில் ஒற்றைப்படை எண்ணுடைய பாடல் கயிலையையும், இரட்டைப்படை எண்ணுடைய பாடல்காளத்தியையும் குறிப்பதாக உள்ளது. பாடல் 19, 93 ஆகிய இவ்விரண்டு மட்டும் ஒரு விகற்ப வெண்பா. மற்றவை யாவும் இருவிகற்ப வெண்பா. இதில் அகப்பாடல்கள் உண்டு. (அ) தன்னுணர்ச்சிப் பாடல்கள் (பா 2, 5, 6, 9, 37, 100) (ஆ) உலகோரை நோக்கி உரைத்தவை. (பா. 3, 10, 11, 12, 32) (இ) முன்னிலைப்படுத்திக் கூறியவை. (பா. 14, 15, 17, 51) என்றவாறு வருதலைக் காணலாம்.

திருவீங்கோய் மலை எழுபது :

இவ்வொரு தலத்திற்குமட்டுமே இந்நூல் எழுபது வெண்பாக்களைக் கொண்டது. ஆறுமுக நாவலர் பதிப்பிலும், சுப்பராயச் செட்டியார் பதிப்பிலும், 1950 இல் வெளிவந்த ஸ்ரீ காசி மடத்துப் பதிப்பிலும் இந்நூலில் பாடல் 48 முதல் 62 வரை 15 பாடல்கள் இல்லை. ஸ்ரீகாசிமடத்தின் 1963 வருடத்துப் பதிப்பிலும் 1971 கழகப்பதிப்பிலும் 15 பாடல்கள் சேர்க்கப்பெற்றன. 70 என்ற வரையறையும் இதன் பின்னர் நிறைவு பெறுகிறது. செப்பறை மடத்து ஏடொன்றால் திரு மு. அருணாசலம் அவர்கள் பரிசோதித்து 70 பாடல்கள் எனக்கண்டார் என்று கே. எம். வேங்கடராமையா கூறுவர்.[9]

இந்நூலில், பாக்கள் அகர வரிசையில் அமைந்திருத்தலைக் காணுதல் வேண்டும். இஃது ஆத்திசூடி போன்ற நூல்கள் தோன்றக் காரணமாக இருந்திருக்கும். ஒவ்வொருபாவிலும் ஈங்கோய் மலைப்பெயர் வருகிறது. முதல் மூன்று அடிகள் இயற்கைப்புனைவு கொண்டது. இதில் பாடல் எண். 5 மட்டும் ஒருவிகற்ப வெண்பா; மற்றவை இருவிகற்ப வெண்பா. நக்கீர தேவநாயனார்க்கு இருவிகற்ப வெண்பா நீரோட்டமாக வருகிறது.

நக்கீர தேவநாயனார் மும்மணிக்கோவை நூலொன்றும் கலிப்பாவில் நூலொன்றும் செய்தவர். யாப்புவகையால் இவை விரிவாகக் காணத்தக்கவை. அடுத்து அவை பற்றிக் காண்போம்.

மும்மணிக்கோவை :

மும்மணிக்கோவையின் இலக்கணம் யாது?

நேரிசையாசிரியம், வெண்பா, கட்டளைக்கலித்துறை என்ற மூவகைப் பாக்களையும் கொண்டுவருவதால் இப்பெயர் பெற்றது. வகைக்குப் பத்துப்பத்தாக முப்பது பாடல்களை உடையது. இதன் இலக்கணத்தைக் கீழ்வருமாறு வெண்பாப்பாட்டியல் கூறும்.

... . ஆண்ட கவல்
முன்முறையே வெண்பா கலித்துறைய வந்தாதி
மும்மணிக்கோ வைக்கு முதல்"[10]

பன்னிருபாட்டியல் இன்னும் விளக்கமாக இதன் இலக்கணத்தைப் பேசுகிறது.

"வெள்ளையும் அகவலும் நேரிசை ஆகக்
கலித்துறை வரஅந் தாதி ஆகி
முறைமையின் இயல்வது மும்மணிக் கோவை"[11]

1. மும்மணிக்கோவையில், பாக்களின் வகைகளை வரிசைப் படுத்துங்கால் வெண்பாப் பாட்டியல்.

அ) அகவல் ஆ) வெண்பா இ) கலித்துறை என்ற வரிசையில் பாவகை வரும்; அந்தாதியாக வரும் என்று கூறுகிறது (சூ-13)

2. பன்னிருபாட்டியலோ அ) வெண்பா ஆ) அகவல் இ) கலித்துறை என்ற வரிசையில் வரும், வெண்பாவும் அகவலும் நேரிசையாக வந்து அந்தாதியாக முடியும் என்று கூறும். (சூ. 156) இரண்டு நூலும் வகைக்குப் பத்து என்பதையோ மொத்தம் முப்பதாக வரும் என்பதையோ கூறவில்லை. நவநீதப்பாட்டியல்[12] இவ்வெண்ணிக்கைபற்றிக் கூறுகிறது.

இங்குக் கூறிய இலக்கணப்படி ஆய்வுக்குரிய தொகைநூலில் கண்ட மும்மணிக் கோவைகள் உளவா? எனின் இல்லை; சிற்சில

வேறுபாடுகள் உள. பதினொராம் திருமுறையில் ஏழு மும்மணிக் கோவை நூல்கள் உள.

1. நக்கீர தேவநாயனார் இயற்றிய திருவலஞ்சுழி மும்மணிக் கோவை

2, சேரமான் பெருமாள் நாயனார் செய்த திருவாரூர் மும்மணிக்கோவை

3 இளம்பெருமானடிகள் யாத்த சிவபெருமான் திருமும்மணிக்கோவை

4. அதிராவடிகளின் மூத்தபிள்ளையார் திருமும்மணிக் கோவை

5. பட்டினத்துப்பிள்ளையாரின் திருக்கழுமல மும்மணிக் கோவை

6 அவரே செய்த-திருவிடை மருதூர் மும்மணிக்கோவை

7. நம்பியாண்டார் நம்பி வடித்த ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை.

இந்த ஏழு நூல்களிலும் மூன்றுவகைப் பாக்களும் வரிசை-யுறும்போது அ) அகவல் ஆ) வெண்பா இ) கட்டளைக் கலித்துறை என்றவாறு வருகின்றன. இது வெண்பாப்பாட்டியலில் கண்டமுறை. ஆயின், பன்னிரு பாட்டியலில் கூறிய இலக்கணம் ஒத்து வரவில்லை. இந்நூல் பாவரிசையில் வெண்பாவிற்கு முதலிடம் தருகிறது. மற்றும் அவலும் வெண்பாவும் நேரிசையாக வரும் என்ற புது விளக்கம் தருகிறது. இவ்விதி முற்றுமாக இங்கு வரும் மும்மணிக் கோவைகளில் கடைப்பிடிக்கப்படவில்லை,

1. அதிராவடிகளின் மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை பா. 4, 10, 16, 19 ஆகிய 4 பாடல்கள் இணைக்குறள் ஆசிரியம்.

2. பட்டினத்தாரின் திருக்கழுமலமும்மணிக்கோவையில் பா 1, 4, 7. ஆகிய மூன்றும் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில் 1, 10, 13 ஆகிய மூன்றும் இணைக்குறளாசிரியம்

3. நம்பியாண்டார் நம்பியின் ஆளுடையபிள்ளையார் மும்மணிக்கோயில் பா. 1. நிலைமண்டிலம்.

பா. 4, 7, 10, 13, 16. 19, 22, 25, 28- ஆகிய 9 பாடல்கள் இணைக்குறளாசிரியம்.

ஆகவே நேரிசையாசிரியமாகவரும் என்ற பன்னிருபாட்டியல் விதி பொருந்த வில்லை. ஆயினும் வெண்பாவைப் பொறுத்த மட்டில் அனைவர் வெண்பாவும் நேரிசை வெண்பா.

காலத்தால் முந்திய நக்கீரர், சேரமான் பெருமாள் நாயனார், இளம்பெருமானடிகள் ஆகியோர் நூல்களில் ஆசிரியமும் வெண் பாவும் நேரிசையாகவே உள்ளன.

இனி, எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் 30 என்ற எண்ணிக்கை எல்லாநூலிலும் சரியாக வரவில்லை.

1) நக்கீரர் பாடல்களில் 15-பாடல்களே வந்து மண்டலிந்து முடிகிறது.

2) அதிராவடிகள் பாடல்கள்-23 உள. ஏழு கிடைக்கவில்லை.

3) பட்டினத்துப் பிள்ளையாரின் திருக்கழுமலமும்மணிக் கோவையில் 12 பாடல்களே, இவரது பாடல்கள். பிற பிற்சேர்க்கை.

இவை தவிர ஏனையோர் நூல்களில் 30 பாடல்களைக் கொண்டு மண்டலித்து முடிகின்றன. இக்கோவைகளின் முழு இலக்கணத்தை முத்துவீரியம்[13] நன்கு விளக்குகிறது

இந்நூல் பெயர்பெறும்போது, ஊர்ப்பெயராலோ, பாட்டுடைத் தலைவர் பெயராலோ வரும். திருவாரூர், திருவலம்சுழி திருக்கழுமலம், திருவிடைமருதூர் என இந்நான்கும் ஊர்ப் பெயராலும், சிவபெருமான், —மூத்த பிள்ளையார், ஆளுடைய பிள்ளையார் என ஏனைய மூன்றும் பாட்டுடைத்தலைவர் பெயராலும் பெயர் பெற்றுள்ளன. ஊர்ப்பெயரால் வந்தாலும் அப்பதியில் எழுந்தருளியுள்ள இறைவனைப்பற்றிக் கூறு-வதாகவே இருக்கும். இறைவன் அடியாராகிய ஆளுடைய பிள்ளைக்கும் கோவை பிறந்து. நக்கீரதேவநாயனாரின் திருவலஞ்சுழி மும்மணிக்கோவை பதியால் பெயர்பெற்றுப் பதினைந்து பாடல்களுடன் முடிந்துவிடுகிறது; இது புதுமை:

கலிவெண்பா:

நக்கீரதேவநாயனார் ''போற்றித்திருக்கலிவெண்பா'' என்ற யாப்பைச் செய்கிறார். தொல்காப்பியர் கூறும் நான்கு வகைச் செய்யுளில் கலிப்பாவில் கலிவெண்பாவும் ஒன்று.[14] அகத்துறை நுவலும் சங்கச் செய்யுட்களில் கலியாப்பால் தொகை பெற்ற

நூல் கலித்தொகை. கலித்தொகையில் எட்டுப் பாடல்கள் மட்டுமே கலிவெண்பாவாலானவை.[15] ஆனால், அவை, பதினோராந்திருமுறையில் வரும் கலிவெண்பாவைப்போல் இல்லை; வேறுபடுகின்றன.

அ) கலித்தொகையில் — தனிச்சீர் பெற்று மூன்று எதுகையில் கண்ணிகளாக வந்து ஒருபொருள் நுதலி நீண்ட வரிகளைக் கொண்டு முடியவில்லை. ஆகவே, இவ்வமைப்புப் புதிது என்பதும் சமய காலத்தில்தான் தொடங்குகிறது என்பதுமாம்

ஆ) பதினொராந் திருமுறையில் நான்கு கலிவெண்பாக்கள் உண்டு.

1. நக்கீரர் செய்த போற்றிக் கலிவெண்பா - 45 கண்ணிகள்.
2. சேரமான் பெருமாள் செய்த திருக்கைலாய ஞான உலா-197 கண்ணிகள்.
3. நம்பியாண்டார் நம்பியின் ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை – 143 கண்ணிகள்.
4. அவரே செய்த திருத்தொகை - 65 கண்ணிகள்

இவ்வகையீல் நக்கீரர் முதல் வழிகாட்டி அடுத்து சேரமான் பெருமாள் நாயனார் தொடர்ந்தார். அவரது உலாவே, அதிகக் கண்ணிகளைக் கொண்ட பெரிய பாடல். இக்கலியாப்பை ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆளவில்லை. ஆனால் மாணிக்கவாசகர் சிவபுராணத்தைக் கலிவெண்பாவால் யாத்தாலும், தனிச்சொல் பெற்ற கண்ணிகளாக அதனைச் செய்யவில்லை. இவண், நக்கீரர் முதலான மேற்சொன்ன நால்வரிடமும் கண்ணிகள் பயின்று வருகின்றன. இப்போக்குப் பின்னர் குமர குருபரரிடம் காணப்படுகிறது.

ஆளுடையபிள்ளையார் திருத்தொகை கண்ணிகள் 40 வரை தனிச்சொல் பெற்றும், மேல் வரும் கண்ணிகள் தனிச்சொல் இன்றியும் வந்து ஒருவகைக் கலப்புநிலையில் காணப்படுகிறது. இப்பாடலில் இறுதிவரி நான்கு சீரில் முடிவதும் புதுமை. நக்கீரர் பாடல்கள் இவ்வகையில் சிறிய அளவு கண்ணிகளைக் கொண்டது. (45) இவ்வேறுபாடுகளை நாம் கருத்திற்கொள்ளல் வேண்டும்.

நக்கீர தேவநாயனார் பல்யாப்புப் புலவராயும் பல்வகை இலக்கிய வகைகளைச் செய்தவராயும் மூல இலக்கியம் ஏழு இயற்றியவராயும் விளங்குகிறார்.

ஐயடிகள் காடவர்கோன்

(யாப்பு)

ஐயடிகள் காடவர்கோன், க்ஷேத்திரத்திருவெண்பா அல்லது திருக்கோயில் திருவெண்பா என்ற ஒரே நூல் செய்தவர். பழைய பதிப்புக்களில் திருக்கோயில் திருவெண்பா என்ற பெயரில்லை. இப்பெயர் கழகப்பதிப்பில் மட்டுமே காணப்படுகிறது. இவர் நூலில் இப்பொழுது 24 வெண்பா மட்டுமே காணப்படுகின்றன. மேலும் இதில் பல பாடல்கள் இருந்திருக்கும் என்பது வெள்ளை வாரணனார், கி. வா சகந்நாதன் போன்றோர் கருத்து.

சேத்திரங்களை முதலில் தொகுத்தவர் இவர் என்ற கருத்து உண்டு. தேவார ஆசிரியர்கள் காலத்திலேயே பல பதிகளைப் பாடும் மரபு இருக்கிறது.

1. திருஞானசம்பந்தர் - திருக்ஷேத்திரக்கோவை என்ற பகுதியைப் பாடினார். (பொது)

2. திருநாவுக்கரசர் - க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகம் பாடினார். (பொது)

3. திருநாவுக்கரசர் - அடைவுத்திருத்தாண்டகம் பாடினார். (பொது)

4. சுந்தரர் – திருநாட்டுத் தொகையும், ஊர்த் தொகையும் பாடினார்.

இவற்றில் பல பதிகளை அடுக்கிக்கூறிய முறையைக் காண்கிறோம். இவ்வாசிரியர்களுக்குப்பின் வந்த காடவர்கோன், இவர்களைப் பின்பற்றிப் பதிகளை வரிசைப்படுத்திப் பாடுகிறார். ஆகவே, ஐயடிகள் காடவர்கோன் பதிகளை அடுக்கிப் பாடிய முதல்வர் அல்லர் என்பதாம்.

இவர் பாடல்களில் காஞ்சித்திணைச் செய்திகளே மிகுதி, நிலையாமையை உணர்த்தி இப்பதியில் இருக்கும் இறைவனைச் சேருங்கள் என்பது இவர் ஆளும் உத்தியாகும்.

1. நெஞ்சை விளித்துக் கூறும் பாடல்கள். (பா. 1, 2, 3, 5, 6, 7, 8, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 24)

2. தன்மையில் வைத்துக் கூறும் பாடல்கள். (பா. 4, 9, 10, 22, 23).

இங்ஙனம் கூறுங்கால் :-

1. யாக்கை நிலையாமையைக் கூறும் பாடல்களைக் காணலாம். (பா. 6, 9, 11, 12, 15, 17, 18).
2. இளமை நிலையாமையைப் பேசுவர். (பா. 4, 5, 13).
3. செல்வம் நிலையாமையைக் கூறுவர். (பா. 10, 16).
4. முதுமைத்துயரை மொழிகிறார். (பா. 1, 2, 3, 7, 8, 21, 24).
5. உறவினர் உதவாமையைக் கூறுகிறார். (பா. 14).

இவ்வண்ணம் மனங்கொள்ளும் வகையிற்கூறி, நிலையாமையை வலியுறுத்தி, இறைவன் அடிசேர்க எனக்கூறும் போது பதிகளை வரிசைப்படுத்தியது புதிய போக்காகும்.

இவர், சோழநாட்டுப் பதிகள் இருபதைக் கூறியுள்ளார். குழித்தண்டலை (பா. 9), வளைகுளம் (14). இவை தேவாரத்தில் இல்லாத பதிகள். இவர், நான்கு அடி வெண்பாவிற் கூடப் புராணக்கருத்துக்களை வைத்துள்ளார். அவற்றில் புதிய செய்தி இல்லை.

சேரமான் பெருமாள்

(யாப்பு)

சேரமான் பெருமாள், மூன்று நூல்கள் செய்தார். அந்தாதி-1, மும்மணிக் கோவை-1, உலா-1. இம்மூன்று சிற்றிலக்கியங்களும் (பிரபந்தம்) தனிச் சிறப்புடையன.

இவர் செய்த முதல் நூல் "பொன் வண்ணத்தந்தாதி"யாகும். இரண்டாவது நூல் "திருவாரூர் மும்மணிக் கோவை' யாம் மூன்றாவது நூல் "திருக்கைலாய ஞான உலா."

இவர் ஆண்ட யாப்புக்கள் நான்கு :-

அ)	ஆசிரியப்பா	10
ஆ)	வெண்பா	10
இ)	கட்டளைக் கலித்துறை	110
ஈ)	கலிவெண்பா	1 (197 கண்ணிகள்)

இவரது மொத்தப் பாடல்கள் - 131. இவர் நூல்களின் இறுதியில் பிறர்பாடிச் சேர்ந்தவை-2.

சேரமான், கட்டளைக் கலித்துறை யாப்பில் அந்தாதியைத் தொடங்கியவர். ஆய்வுத் தொகை நூலில் நான்கு கட்டளைக் கலித்துறை அந்தாதிகள் உண்டென முன்னர்க் கண்டோம்.

பட்டினத்தாருக்கும், நம்பியாண்டார் நம்பிக்கும் கட்டளைக் கலித்துறையந்தாதி செய்ய வழிகாட்டியவர் சேரமான் பெருமாள் நாயனாராவார்.

பதினொராம் நூற்றாண்டில் வாழ்ந்த திருவரங்கத்தமுதனாரின் இராமாநுச நூற்றந்தாதி இவ்வகை யாப்பிற்று.

அ) பொன்வண்ணத்தந்தாதியின் சிறப்புக்கூறுகள் :

இந்நூலின் முதற்பாட்டின் முதற்சீரே "பொன்வண்ணம்" எனத்தொடங்குகிறது. சேரரின் தோழர் சுந்தரர், 'திருமழபாடி' பதிகத்தில் 'பொன்னார் மேனியனே' (பா: 1) என்று பாடிய தொடர், இவரைக் கவர்ந்திருக்க வேண்டும். அப்பாடலின் தாக்கத்தால் 'பொன்வண்ணம்' என்று தொடங்குகிறார்.

இம்முதற்சீரே நூலின் பெயராகவும் ஆகிறது. இதுவும் சுந்தரர் நெறியைப் பின்பற்றியதாகும். சுந்தரர் பதிகங்களில் 'முடிப்பது கங்கை' (பொது-3ஆவது) என்று ஒன்று உண்டு. சேரர் இதைப்பின்பற்றுகிறார். இம்முறையைப் பின்பற்றி இவர் கட்குப் பின்வந்த திருமாளிகைத் தேவர், திருவாலியமுதனார் ஆகியோர் தம் பதிகங்கட்கும், பிற்கால ஔவையார் கொன்றை வேந்தன், ஆத்திச்சூடி ஆகிய தம் நூல்களுக்கும் முதற்பாடலின் முதற்சீரால் நூற்பெயரையிட்டனர்.

இந்நூலில் இவ்வாசிரியர் சில இலக்கிய உத்திகளைக் கையாள்கிறார்.

1. அகத்துறைப் பாடல்களில் - தலைவன், தலைவி, தோழி, செவிலி ஆகிய நாடக மாந்தர் கூற்றாக இறைமாட்சியைப் பேசுதல்.
2. படர்க்கையில் உலகோருக்குக் கூறல் (பா. 11, 12, 64, 74, 78, 88).
3. முன்னிலைப்படுத்திக் கூறல் (பா. 14, 66).
4. நெஞ்சுக்குக் கூறுதல் (பா. 13, 17).
5 நாடகமுறையில் கூறல் (பா. 33, 45).
6 உளப்படுத்திக் கூறல் (பா. 23, 24, 26, 43, 89).
7. தன் வரலாறு சுட்டுமாப்போல் கூறல் (பா. 18, 43, 98).

இந்த உத்தி, பயில்வார்க்குச் சுவை பயக்கிறது.

அவையடக்கம், ஒரு நூலின் முதலில் மட்டும் வருதல் முறை. இந்நூலில் முற்பகுதி (பா. 25) பிற்பகுதி (பா. 89). இறுதிப்பா (100) என்றவாறு வருதல் புதுமை.

இந்நூலில் அந்தாதித் தொடையமைய இருபாடல்கள் வருகின்றன (பா. 30, 39).

மும்மூர்த்தியையும் பாடும் ஒரு பாடலில் அவர்தம் பெயர் பதிநிறம்-தார்-ஊர்தி ஆகியவற்றைச் சுட்டித் தசாங்க உறுப்புக் களில் ஐந்து அமையுமாறு பாடியிருப்பது புதுமை (பா. 95). ஒரு நூல் அமைப்பில் மற்றோர் நூல் அமைப்பின் கூறு வந்து விடுகிறது. தசாங்கத்தை அமைத்து முதலில் பாடியவர் மாணிக் கவாசகர். இதன் கூறினை முதலில் தொட்டவர் சேரமான் பெருமான் நாயனார். இவ்விருவருக்கும் பின்வந்த பட்டினத்தார்,

சேரமான் பெருமாள் நாயனார்போல, தசாங்கத்தைத் தனிப் பிரபந்தமாக ஆக்காமல், கோயில் நான் மணிமாலையில் (பா 4 : 9-19) வருமாறு அமைத்தார். இவையெல்லாம் அவ்வவ்வாசிரியரின் தனிக் கூறுகள்.

ஆ) திருவாரூர் மும்மணிக் கோவை :

சேரமான் பெருமாள் நாயனார் இரண்டாவதாகச் செய்த நூல், 'திருவாரூர் மும்மணிக்கோவை'. கோவை இலக்கியத்தின் மூலஇலக்கியம் இது என்பர். 1 காலக்கணிப்புப்படி இவர்க்கும் முந்தியவர் நக்கீர தேவநாயனார் என்பது முன்னர் விளக்கப் பட்டது. நக்கீர தேவ நாயனார் இத்தொகுப்பு நூல் ''திருவலம் சுழி மும்மணிக் கோவை'' என்ற நூல் செய்திருக்கிறார். ஆகவே, அதுவே மூல இலக்கியம். அதனை அடுத்துத் தோன்றியது இக் கோவை எனலாம். மும்மணிக் கோவையின் இலக்கணம் முன்னர் விளக்கப்பட்டது.

திருவாரூர் மும்மணிக் கோவை, 30 அகத்துறைப் பாடல் களைக் கொண்ட அகநூல். நக்கீர தேவ நாயனாரின் திருவலஞ் சுழி மும்மணிக் கோவையின் போக்கை, இவர் பின்பற்றியிருக் கிறார். சேரமான், திருவாரூர் சிவபிரானையும், பிற பதியில் எழுந்தருளியிருக்கும் பிரானையும் தலைவனாகக் கொண்டு பாடுகிறார். இந்நூலின்கண், ஆரூர் பற்றி 14 பாடல்களில் குறிப்புள்ளது. முதற்பாடலிலேயே 'அரிவை பாகத் தண்ணல் ஆரூர்' (வரி 18) என வருகிறது. ஆகவே நூற்பெயர்ப் பொருத்தம் தெரியவரும்.

சேரமான், சுந்தரரைக் காணத் திருவாரூர் வந்தபோது பாடியதிது என்பது மரபுவழிச் செய்தி.

இ) திருக்கைலாய ஞான உலா :

சேரமான் பெருமாள் செய்த மூன்றாவது நூல் திருக்கைலாய ஞான உலா. ''இவருக்கு முன்னர் யாரும் உலா நூல் பாடியிருப்ப தாய்த் தெரியவில்லை. இதனால், இவரே முதன்முதலாக உலா நூல் பாடியவராகச் சான்றோர்களாற் கொள்ளப் பெறுகிறார்'' என்பார், சு. அ. இராமசாமிப் புலவர்[2]

''இதனை ஆதியுலா என்று கூறுவதை நோக்கின், தமிழ் இலக்கிய வகைகளுள் காணப்படும் உலா நூல்களுள் இதுவே மிகத் தொன்மையும் முதன்மையும் வாய்ந்தது என்பது துணியப்

படும்.'' என்பர் ஔவை சு. துரைசாமி பிள்ளையவர்கள். 3 இதனை 'ஆதியந் தவுலா ஆசு பாடிய சேரர்' என அருணகிரியார் புகழ்கிறார். ''சேரனுலா வுடையான் போந்தானுலா'' என்பர் இரட்டைப் புலவர். இந்நூலுக்குத் தெய்வீக உலா, ஞான உலா, உலாப்புறம் என்ற பெயர்களும் உண்டு. இப்பெயர்க் காரணங்களை விளக்கப் போந்த கயப்பாக்கம் சதாசிவ செட்டியார்,

> '' இவ்வுலா மற்றைய வுலாக்கள் யாவும் தோன்றுவதற்கு முன் தோன்றுதலால் 'ஆதியுலா' என்றும், இறைவன் திருவோலக்கங் கொண்டெழுந்தருளியிருக்கும் திருக் கைலாயத் திருமலையில் அவ்வெம் பெருமானது திருமுன்னர் அரங்கேற்றப்படுவதால் 'தெய்வீக வுலா' வென்றும், பசுகரணம் நீக்கிப் பதிகரணம் பெற்ற ஞான வாக்கினையுடையாரால் பாடப் பெற்றதால் 'ஞானவுலா' வென்றும் வழங்கப்பெறும்'' என்பர்.[4]

உலா நூலின் இலக்கணம் யாது?

தொல்காப்பியர்,

> '' ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப
> வழக்கொடு சிவணிய வகைமை யான'' என்றார்.[5]

தலைவன், ஊர்ப்புறத்தே உலாப் போதல் உண்டு. அது வழக்கொடு பொருந்தும் முறையில் அமையும் என்றார்.

தொல்காப்பியர், பருவ மகளிர் எழுவர் பற்றியோ, இன்ன யாப்பில் இவ்வுலா வருதல் வேண்டுமென்றோ கூறினாரல்லர். உரையாசிரியர் இளம்பூராணர், பேதை முதல் பேரிளம் பெண் ஈறாக உள்ள எழுவகைப் பெண்களும் தலைவன் பால் காதல் கொள்வர் என்றும் அவரவர் பருவத்திற்கு ஏற்பவருணனை வரும் என்றும் உரை தந்தார்.[6] இன்ன செய்யுளில் வரும் என்று இளம் பூரணரும் கூறவில்லை.

இச்சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் விளக்கம் தருங்கால், மேலும் இரு புதிய செய்திகளைக் கூறுவாராயினர்.

1. உலாவரும் தலைவன் தேவனாகவும் இருக்கலாம்; மக்கள் தலைவனாகவும் இருக்கலாம்.
2. இவர்பால் காதல் கொள்ளும் ஏழுபருவ மகளிர், கணிகை யராவர்.[7] என்றார்.

ஏழுவகைப் பெண்கள் யார் யார் என்பது பற்றியும் அவரது வயது வரம்பு பற்றியும், கலிவெண்பாவால் இந்நூல் வரும் என்பது பற்றியும் வெண்பாப் பாட்டியல் விரித்துரைக்கிறது.[8] இதே செய்திகளைப் பன்னிருபாட்டியலும் நுவல்கின்றது.[9]

பன்னிரு பாட்டியல் மேலும் ஒரு புதுச் செய்தியைத் தரும். மகளிர் பருவத்தை விவரிப்பதோடு அவர்களது விளையாட்டுக் களையும் (பாவை, சிற்றில், விளையாடல், கிளிக்குச் சொற் பயிற்றல், யாழ்மீட்டல் இவற்றையும்) கூறவேண்டும் எனத் தெரிவிக்கிறது.[10] ஆகவே, உலாவின் இலக்கணம் காலந்தோறும் வளரக்காண்கிறோம். திருக்கயிலாய ஞானவுலா, பாட்டியல் நூல்கள் இலக்கணம் செய்யக் காரணமாயிற்று. இவற்றை உள்ளடக்கி, ஞான உலா உரைகாரர் திருமயிலை சண்முகம் பிள்ளை,

"உலா ஆனது தமிழ் மொழிக்குரிய 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்றாம். தலைவன் வீதி வழியே பவனிவருஞ் சிறப்பைக் கூறுவதாகலின் இது உலா என்னும் பெயரைப்பெற்றது. இப்படி உலா வரும் போது பேதை முதற் பேரிளம் பெண் ஈறாகவுள்ள எழுவகைப் பருவ மகளிர்களும்

அத்தலைவனைக் கண்டு காதல் கொண்டனரென்னும் பொருளை அமைத்து, அவனது குலம், குணம், தொழில் முதலியவற்றைச் சிறப்பித்துக் கலிவெண்பாவால் பாடப்படுவது. இங்கே குறிப்பிடும் மகளிர் உருத்திர கணிகையராவர்"

என விளக்கினர். இதே செய்தியினைச் சற்று விரித்து டாக்டர் ச. வே. சுப்பிரமணியம் அவர்களும் தந்தார்கள்.[11]

"இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு எழும உலா நூல்கள் கடவுள்மாட்டு மானிடப்பெண்டிர் நயந்த பக்கத்தைச் சார்ந்தவை என்பதும், பொதுநிலையில் உலா இலக்கியங்கள் புறத்துறையைச் சார்ந்த பாடாண் திணையுள் பெண்பாற் கைக்கிளைத் துறையின் பாற்படும் என்பதும் அறியத்தக்கன"

என்பார் டாக்டர் ந. வீ. செயராமன்.[12]

இவ்வுலாக்கள் பாட்டுடைத் தலைவனின் ஊர்ப் பெயராலோ, அவனது இயற்பெயரொடு சார்ந்தோ இவ்விரண்டொடும் சேர்ந்தோ வரும்.

சேரமான், பதிப்பெயரால் பெயரிடுகிறார். "ஞான உலா" என்பதால் இதனுள் முன்னம் (உட்குறிப்பு பசு பதியை நாடல்) உண்டு என்பதும், இலக்கிய வடிவம் காமம் கண்ணியதாய் இருப்பினும், குறிப்பு – இறைவனை உயிர்கள் சேர வேண்டும் என்பதுமாம்.

திருவுலா அமைப்பை ஒட்டிய நிலையில் காணப்படும் மற்றொரு நூல், ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை. இதன் ஆசிரியர், நம்பியாண்டார் நம்பியாவார். இது 143 கண்ணிகளால் ஆன கலிவெண்பாவாகும், "பாட்டுடைத் தலைவராகிய திருஞானசம்பந்தப் பிள்ளையாருடைய இயல்பே, பெரிதும் விரித்துரைக்கப் பெற்றுள்ளது. பிள்ளையாரைக் காதலித்த எழுவகைப் பருவத்துப் பெண்களுடைய செய்திகளும் பொது வகையிற் கூறப்பட்டுள்ளதேயன்றித் தனித்தனியே வகுத்துக் கூறப்படவில்லை." என்பார் சு. ஆ. இராமசாமிப் புலவர்.[13] இதற்கு ஏது என்னை? நம்பியாண்டார் நம்பி, துறவியாக விளங்கியிருக்க வேண்டும். அவர் மகளிரைச் சிற்சில இடங்களில் புனைந்துரைத்தாலும், எல்லையிகவா நிலையிலேயே புனைகிறார்.

"பீடுடைய
பேரிளம்பெண் ஈறாகப் பேதை முதலாக
வாரிளங்கொங்கை மடநல்லார் ....
....
....
வாழி வளைசரிய நின்றயர்வார்." (கண்ணி. 119, 125)

என்று பொதுவாகக் கூறி, சிறப்பு வருணனைகளைத் தவிர்க்கிறார். ஆகவே தான் புதிய நிலையில் 'உலாமாலை' என்று பெயரிடுகிறார். மாலை - என்பது 'இயல்பு' என்ற பொருளில் வருதலை துன்பமாலை வஞ்சினமாலை ஆகிய பெயர் வழக்கால் அறியலாம்.[14]

உலாமாலை பற்றிப் பின்வந்த இலக்கண நூல்களும் பேசவில்லை. ஆகவே, இஃது அருகிய வழக்கு என்பதும், நம்பியாண்டார் கண்ட புது உத்தி என்பதுமாம்.

திருக்கயிலாயஞான உலாவின் சிறப்புக் கூறுகள் :

இஃது உலாக்களின் முலநூல். 197 கண்ணிகளையுடைய கலிவெண்பா. இந்நூலினுள் 'கைலாயம்' என்ற சொல்லோ 'ஞானவுலா' என்ற சொல்லோ வரவில்லை. சீரார் சிவலோகந் தன்னுட் சிவபுரத்தில் ஏரார் திருக்கோயில் உள்ளிருப்ப, (ஞான உலா கண்ணி 9) என்றே வருகிறது. கைலாய வருணனையு மில்லை. ஆயினும் திருக்கயிலாயஞானவுலா என்று பெயர் அமைகிறது.

''திருமாலும் நான்முகனும்'' என, மங்கல மொழியால் தொடங்குகிறது. ஆடவர் அணி விசேடங்கள் (16-21) வாச்சிய வகைகள் (44-47) பல தெய்வங்கள் இறைவனுக்கு ஏவல் செய்தல் (22-43). பேதை சிறுசோறு அடுதல் (76), பெதும்பை காமன் உருவரைதல் (95), பூவைக்கு மங்கைப் பருவத்தாள் சொற்பயிற்றல் (106). மடந்தை யாழில் ''மடல்வண்ணம்'' பாடுதல் (112-124) அரிவை வீணையில் இறைவன் மேல் பாட்டிசைத்தல் (141-42) தெரிவை கவறாடும் போதில் இறைவனைக் காண்டல் (166), பேரிளம் பெண் இறைவனைக் குறித்து 'வெண்பாப் பாடல்' (190) என்றவாறு ஏழு பருவப் பெண்களையும் பற்றிப் புனைகிறார்.

ஒவ்வொருவரும் வெவ்வேறு செயல்களில் ஈடுபட்டிருக்கும் போது இறைவன் உலாவரக் கண்டதாகக் கூறியிருப்பது, நல்ல இலக்கிய உத்தியாகும். மகளிரின் பொழுது போக்கும் இங்குக் காட்டப்பட்டன. மாதர்களின் பருவங்கட்கேற்ற உடல் வருணனைகள் இடம் பெறல் இயல்பான புனைவாகும்.

சுண்ணம் நிறைந்த கண்ணாடிக் கிண்ணத்தில், மகளிர் பஞ்சு இட்டுச் சுண்ணத்தை எடுப்பது (74) என்பதால் இவர் காலத்திலேயே கண்ணாடிக் கிண்ணம் புழக்கத்தில் இருந்தது என்பதாம். ஆய்பொதியின் சந்தனம் பாராட்டப்படுகிறது (90). சீகாமரம் என்ற பண் பற்றிய குறிப்பும் வருகிறது (123). காமன் நூல் (85) பற்றியும் மடல்வண்ணம் (124) என்ற இலக்கிய வகை பற்றியும் இந்நூலால் அறியலாம்.

சேரமான், மூன்று நூல்களே செய்திருப்பினும், மூன்றிலும் பல சிறப்புக் கூறுகள் பொதிந்திருக்கக் காணலாம்.

இளம் பெருமானடிகள்

(யாப்பு)

இளம்பெருமானடிகள், ''சிவபெருமான் திருமும்மணிக் கோவை'', என்ற ஒரு நூல் மட்டும் செய்தவர். ஆசிரியப்பா 10 கட்டளைக் கலித்துறை. 10 வெண்பா 10 என்றவாறு இந்நூல் 30 பாடல்களைக் கொண்டு இயல்வது. இதன் இலக்கணங்களை முன்னர்க் கண்டோம். இதில் அகப்பாடல்கள் 5 உள. பாக்கள் கடுநடையுடையன. கற்றவர்க்கு மட்டுமே விளங்கும். இறைவன் பால் உள்ள பொருட்களை நனி பெரிதாய்க் காட்டி, இறைவனின் பேருருவைப் பேசுகிறார் (பா. 1) முரண்பொருள் களை வைத்து நயமாகப் பாடுகிறார். (பா. 4)

இவர் பாடல்களில் ஆசிரியப்பாவில் கூன் அமைத்துப் பாடுதல் ஒரு நெறியாக உள்ளது. (பா. 13)

இம்மும்மணிக் கோவையில் நிலைமண்டிலம், நேரிசை ஆகிய இருவகை ஆசிரியப்பா வருப, இணைக்குறள் ஆசிரியப்பா இல்லை

(அ) நிலைமண்டிலம் 1, 7 (கூன் வருப)

(ஆ) நேரிசை 4, 10, 13, 16, 19, 22, 28

பா. 25இல் ஈற்றடி இருசீராக வருவது புதுமை; மற்றைய அடிகள் நான்கு சீராக உள்ளன.

இவர் கூறும் முக்கிய புராணச் செய்தி:-

1. சிவன் துர்க்கையின் கணவன் (பா. 19)
2. திருமாலை சிவபெருமான் விடையூர்தியாகக் கொண்டவன் (பா 18, 21)
3. சிவபெருமான் இண்டைமாலை உடையவன் (பா. 14)

அதிராவடிகள்

(யாப்பு)

அதிராவடிகள் இந்நூலொன்றே செய்தார். இதில் 7 பாடல்கள் கிடைக்கவில்லை.

1. இவற்றில் நேரிசையாசிரியம் 1, 7, 13, 22.
2. இணைக்குறள் 4, 10, 16, 19. நிலைமண்டிலம் இல்லை பாடல் 22இல் கூன் வருகிறது.

இப்பாடல்கள் சுவையானவை எனக் கூறுதற்கில்லை.

அதிராவடிகள், பிள்ளையாரிடம் மிகுந்த பக்தி உடையவர்

''சேவடி யுகளம் அல்லது யாவையும் இலமினி இரு நிலத்திடையே'' (1).

''எந்தை அல்லது மற்று யாவுள
சிந்தை செய்யும் தேவதை நமக்கே'' (பா. 19)

என்பதாலும் இவரது பத்தியும் கணபதியின் தலைமையும் விளங்கும். மற்றும் பா. 4, 8, 13, 15 ஆகிய பாடல்களிலும் இக் கருத்து ஊடாடுவதைக் காணலாம்.

கணபதி, போதகம், வேழக்கன்று, துளைக்கடவுள், கும்பக் குழவி என்ற சொற்களைப் பிள்ளையாருக்கு ஆள்கிறார். ஆனால் பிள்ளையார் என்ற சொல் இல்லை. கணபதியின் பேருரு அடிமுதல் முடிகாறும் புனையப்படுகிறது. (பா. 22)

பிள்ளைத்தமிழ் உறுப்பாகிய சப்பாணி (பா. 2) செங்கீரை. (பா. 14) ஆகிய பெயர்களை இவர் கூறுதலால் இவர் காலத்திலேயே அவ்விலக்கியங்கள் வளரத் தொடங்கின என்று கூறலாம்.

(1) கணபதி அரக்கரை வென்றமை (2) வியாசர் கூறிய பாரதக் கதையை மேருமலையில் கணபதி வரைந்தமை (3) இறைவன் மூவெயில் எரித்த போது விநாயகர் உதவியமை (4) மாங்கனிபெற முருகன் உலகை வலம் வந்தமை ஆகிய இப் புராணச் செய்திகளை இத்தொகை நூலில் இவர் மட்டும் குறிக்கிறார்.

கபில தேவநாயனார்

(யாப்பு)

கபில தேவநாயனாரின் நூல்கள் மூன்று பதினொராந்திரு முறையில் உள்ளன. பிள்ளையாருக்குத் திருவிரட்டை மணி மாலை ஒன்றும், சிவபெருமானுக்குத் திருவிரட்டை மணிமாலை ஒன்றும், சிவனுக்குத் திருவந்தாதியொன்றும் புனைந்தார். திரு விரட்டை மணிமாலை, அந்தாதி ஆகியவற்றின் இலக்கணம், முன்னர் விளக்கப்பட்டுள்ளன.

இவர், கட்டளைக் கலித் துறையில் 28 பாடல்களும், வெண்பாவில் 129 பாடல்களும் ஆக 157 பாடல்கள் செய்தார்.

பிள்ளையாருக்குத் தனிநூல் செய்தாலும், விநாயகரைச் சிவனுடன் சார்த்திப் பேசுகிறார். சிவபெருமானுக்கு இருநூல்கள் செய்கிறார். ஆதலின், வைதிக மதத்தினர் என்பதும், பிள்ளையார் வழிபாடு தமிழகத்தே சிறந்த பின்னர் வந்தவர், என்பதும் போதரும்.

பிள்ளையாருக்கு, "மூத்த நாயனார்" என்ற பெயர் ஆட்சி உண்டென முதலில் இந்நூல் வழித் தெரிகிறோம். "திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும்" என்ற புகழார்ந்த பாடல் இந்நூலின் முதலில் வருகிறது; "திரு" என்ற மங்கலச் சொல்லில் தொடங்கு கிறது. மற்றைய இரு நூல்களும் இப்படியில்லை.

சிவபெருமான் இரட்டை மணிமாலை இரட்டை வடமாக 40 செய்யுட்களைக் கொண்டதாய் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும். ஆயின், 37 பாடல்களே உள்ளன. 3 கிடைக்கவில்லை என்ற செய்தி, முன்னர் சுட்டப்பட்டது.

சிவபெருமான் அந்தாதியில் முதலடியின் முதற்சீரும் இரண்டாமடியின் முதற்சீரும், தனிச்சீரும் வந்த ஒரு சொல்லாக மீண்டும் வருகின்றது 92 பாடல்களில் இவ்விதி பொருந்துகிறது. எட்டுப் பாடல்களில் தனிச்சீரில் வேறு சொல்லோ, சிறு மாற்றத்துடன் அந்தச் சொல்லோ வருகிறது. (பா. 42, 62, 68, 87, 90, 94, 96, 99). பா. எண். 49 மட்டும் முற்றுகர ஈற்றில் முடிகிறது. முதலடியின் முதல் சீர், இரண்டாம் அடியின் முதற்சீர்,

தனிச்சீர் இவற்றில் ஒரே சொல்வரினும் வெவ்வேறு பொருளில் வரும் இடங்களும், ஒரே பொருளில் வரும் இடங்களும் என இரு திறமாக வருப.

"மாலை ஒருபால் மகிழ்ந்தானை வெண்கொன்றை
மாலை ஒருபால் முடியானை — மாலை
ஒளியானை உத்தமனை உண்ணாஞ் சுண்டற்
கொளியானை ஏத்தி உளம்

(சிவ. தி ந அ பா 2)

இந்தப்பாவில்

மாலை......திருமாலை (முதற்சீர்)
மாலை......பூமாலை (இரண்டாமடியில் முதற்சீர்)
மாலை......மாலைப் பொழுது (தனிச்சீர்)

இங்ஙனமே பா. எண். 61, 58 வருகின்றன.

பாடல்கள் பா. எண். 3, 4, வந்த சொல்லே வரினும் பொருள் மாறுபாடு இல்லை. ஒரு பொருளில் வருகின்றன. சிவபெருமான் அந்தாதியில் 36 தலப்பெயர்களை வைத்துப் பாடுகிறார். இவற்றில் பூம்புகார் (பா 44) முக்கூடல் (பா 50) திருவேங்கடம் (பா. 15) ஆகியவை, தேவார ஆசிரியர்கள் கூறாத பதிகள். எஞ்சிய 33 பதிகள், தேவார ஆசிரியர்கள் கூறிய பதிகள்.

தேவார ஆசிரியர்கள் க்ஷேத்திரக் கோவையாகவும், அடைவு திருத்தாண்டகமாகவும் பாடினர். கபில தேவ நாயனார், இதில் ஒரு புதுமை செய்தார். அகத்துறையமைப்பாடி அப்பாடல்களில் பதிப்பெயர்களை வைத்தார். இஃது இவர் செய்த முதற்புதுமை.

பரண தேவநாயனார்

(யாப்பு)

பரண தேவநாயனார் செய்த ஒரே நூல், சிவபெருமான் திருவந்தாதி, இது 101வெண்பாக்களைக் கொண்டது. இறுதிப் பாடல் பலன் கூறுவது.

அ) தன்மையில் வைத்துக் கூறுதல் பா. 3, 4, 5, 79

ஆ) இறைவனை முன்னிலைப் படுத்திக் கூறுதல் பா. 11, 72, 73, 81

இ) படர்க்கையில் கூறுதல் பா. 2

ஈ) உலகிற்குக் கூறுதல் பா. 1

உ) அகத்துறையாக வைத்து நாடக மாந்தரைப் பேசவிடுதல் பா. 6, 7

ஊ) தன்நெஞ்சிற்குக் கூறுதல் பா. 9, 10, 14, 23, 27

என்றவாறு பாக்களை யாத்துள்ளார்.

இப்பாடல்கள் யாவும், முன்னிரு அடிகள் ஒருவகை யமகமாகவும் பின்னிரு அடிகள் வேறு ஒரு யமகமாகவும் உள்ளன. பொருள் காணுதல் சற்று கடினமாக உள்ளது. ''யமகமாக'' அமைத்தமை இவரது தனிக்கூறு இவற்றைப் பயில் வதால் சொல் அறிவும், தமிழ்க் கல்வியும் பெருகும்.

இவர்பால், மற்று மோர் சிறப்புக்கூறு உள்ளது. இறைவன் உறையும் பதிப் பெயர்களையே சில இடங்களில் சிலேடையாக அமைக்கிறார். இஃது ஒரு சிறப்பு.

திருக்கயிலை (பா. 13) கையிலைவேல். பாசூரான் (பா. 15) பாசம் பொருந்தான் திருக்கோளி (பா 49) குற்றமிலி திருமீச்சூர் (பா 70) திருவடியின்பம் ஈங்கோய்மலை (பா. 96) ஈங்கு ஓயும்படி இப்படிச் சிலேடைப் பொருள்வரப் பாடுகிறார்.

ஐயடிகள் காடவர்கோன், நிலையாமையைக் கூறும்போது பதிப் பெயர்களை அடுக்கினார். கபில தேவநாயனார் அகப் பொருள் பாடல்களைப் பாடும்போது பாடல்களில் பதிப்பெயரை வரிசைப் படுத்தினார். பரணதேவரோ பதிப் பெயர்களைச் சிலேடையாக வைத்துப் பாடுகிறார். ஒருவரில் இருந்து ஒருவர்

இலக்கிய நெறியை வளர்த்திருக்கும் அருமையை ஈண்டு காணுதல் வேண்டும். இவர் 35 தேவாரப் பதிகளைக் குறித்துள்ளார். இவர் கூறும் ஆலத்துறை (39) தேவார ஆசிரியர்கள் கூறாதது. இவர் தேவார ஆசிரியர் கட்குப் பிற் பட்டவர். [1] முற்றுகர ஈற்றில் மூன்று பாடல்கள் வருகின்றன. (பா. 26, 91, 92).

சொல்லாட்சிகள் :

ஆதிவிடங்கா (57), வீதிவிடங்கா (97), மூலட்டத்தானே (87) பரமேட்டி (60), அம்பலவா (45), ஞானச்சுடர் விளக்கு (47), அர்ச்சித்து (11), பரலோகீர் (77) என்ற இவ்வாட்சிகள் இவர், தேவார ஆசிரியர்கட்குப் பின்னர் வந்தவர் என்பதைக் காட்டும்.

நானுடைய மாடே (47), காணீர்கள் (67) என்ற இலக்கண பயில்வுகளும் புதியன. இவை பிற்காலத்தன அன்றோ?

இலக்கியச் சிறப்புக்களைத் தனியாக ஆராயும் அளவு இவர் பாடல்களில் வேறு சிறப்புகள் வெகுவாக இல்லை. ஆதலின் விடுக்கலாம்,

---

பட்டினத்தார்

(யாப்பு)

பட்டினத்தாரின் பாடல்கள் செழும் பாடல்கள்; இவை சங்க இலக்கியம் போல், செறிவும் மிடுக்கும் உடையன. நீண்ட புனைவுகளை உடையவை, இவர் அகலக் கவியாக விளங்கு கிறார்.

ஆகவே, இவர் பாடல்கள் நன்கு பரவவில்லை. பதினொராம் திருமுறையில் இவர் செய்த நூல்கள் ஐந்தாகும்.

1.	கோயில் நான் மணிமாலை	பா. 40
2.	திருக்கழுமல மும்மணிக்கோவை	பா. 12 (கழகப்பதிப்பு)
3.	திருவிடைமருதூர் மும்மணிக்கோவை	பா, 30
4.	திருவேகம்பமுடையார் திருவந்தாதி	பா. 100
5.	திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது	பா 10
	ஆகபாடல்கள்	192

இப்பாடல்களை யாப்பு வகையில் பிரிப்பின் கீழ்க்கண்டவாறு அமையும்,

1.	ஆசிரியம்	34	பாடல்கள்
2.	ஆசிரிய விருத்தம்	10	,,
3.	கட்டளைக் கலித்துறை	124	,,
4.	வெண்பா	24	,,

ஆசிரியப் பாக்களை மிக நீண்ட அளவில் அஃதாவது 81 அடி வரை யாத்துள்ளார். பதினொராந் திருமுறையில் மாலை, கோவை நூலுள்வரும் ஆசிரியப் பாக்களில் நீண்ட பாடல் செய்தவர் இவரே. ஆசிரியப் பாக்களில் எதுகை மோனைகட்கு முக்கிய இடம் கொடுப்பதைவிட, கருத்துகட்கே முதலிடம் கொடுக்கிறார்.

1) கோயில் நான்மணிமாலை :

பதினொராம் திருமுறையில், இஃதொன்றே இவ்வகை இலக்கியமாகும். நான்மணிமாலையின் மூல இலக்கியமாகவுமிது திகழ்கிறது. இதன் இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல்........

"வெண்பா கலித்துறை அகவல் விருத்தம்
நண்பாய் வருவது நான்மணிமாலை.[1]"
"அகவலும் அகவல் விருத்தமும் நாற்பது
அகவலை முன்வைத் தறைவது கடனே."[2]

என்று பேசும். வெண்பாப்பாட்டியலும் இங்ஙனமே மொழியும்.[3]

கோயில் நான்மணிமாலையில் 1) வெண்பா, 2) கட்டளைக் கலித்துறை, 3) ஆசிரியவிருத்தம் (4 ஆசிரியப்பா என்ற வரிசை காணப்படுகிறது. மேற் சுட்டிய இருபாட்டியலின்படி, ஆசிரிய விருத்தம் நான்காம் இடத்தில் வருதல் வேண்டும். ஆனால் இந் நூலில் மூன்றாம் இடத்தில் வருகிறது. கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கண விளக்கம் மட்டும் கோயில் நான்மணி-மாலை அமைப்பைப் பின்பற்றுகிறது.

'வெண்பா கலித்துறை விருத்தம் அகவல்
பின்பேசும் அந்தாதியின் நாற்பது பெறின்
நான்மணி மாலை யாம்என நவில்வர்:"[4]

பாட்டியல் இலக்கண நூல் விதிகட்கு மாறாக இந்நூலில் மூன்றாம் இடத்தில் ஆசிரிய விருத்தம் வருவதொன்றே இது மூல இலக்கியமாகும் என்பதைக் காட்டும். இதனை அடுத்துத் தோன்றிய இவ்வகை இலக்கியங்களில் இத்தகு இடமாற்றம் பெருவரவிற்றாக இருந்திருக்கும் ஆகவே பாட்டியல் நூல்கள் அவ்வரிசையை வலியுறுத்தின. ஆனால் இலக்கண விளக்கம் மட்டும் பட்டினத்தாரின் பெரும்புலமையைக் கருத்துட்கொண்டு அவர்வழியில் இலக்கணம் செப்புகிறது. இது நான்கு வகைப் பாக்களானும் அந்தாதியாக 40 பாடல்களால் வந்து மண்டலித்து முடிகின்றது.

மேலே காட்டிய நான்குவகைப் பாக்களில் ஆசிரிய விருத்தத்-திலும் ஆசிரியப்பாவிலும் விகற்பங்கள் காணப்படுகின்றன.

ஆசிரிய விருத்தத்தில்,

எழுசீர் விருத்தம்	...	1	(பா. 27)
எண்சீர் விருத்தம்	...	5	(பா 3, 7, 19, 31, 35)
பன்னிருசீர் விருத்தம்	...	2	(பா. 15, 23)
பதினாறுசீர் விருத்தம்	...	2	(பா. 11, 39)

இப்பதினாறுசீர் விருத்த யாப்பு நம்பியாண்டார் நம்பிக்கும் அருணகிரியாருக்கும் குமரகுருபரருக்கும், முன்மாதிரியாக இருந்திருக்கும். இவ்வகையில் பட்டினத்தார் வழிகாட்டி. இந் நூலில் மூன்றுவகை ஆசிரியத்தைப் பட்டினத்தார் செய்கிறார்.

1) இணைக்குறள் ஆசிரியம் ... 4 (4, 24, 28, 32)
2) நேரிசை ஆசிரியம் ... 5 (8, 16. 20, 36, 40)
3) நிலைமண்டில ஆசிரியம் ... 1 (10)

இங்கு 40வது பாடல் 53 அடியில் வந்த பெரிய பாடல். இப் பாடல்கள் இறைவனை முன்னிலையிலும், படர்க்கையிலும் வைத்து ஏத்துகின்றன. அகத்துறையில் வைத்துப் பாடும் பாடல்களும் பன்னிரண்டு உள. "தில்லை இடத்துகந்தான் அம்பலத்தே கூத்துகந்தான்" என்று முதல் பாடல் தொடங்குவதாலும், "தில்லைக் கோயில் கொண்ட செல்வர்" என்று (பா.7) வருவ தாலும் "கோயில் நான்மணிமாலை என்ற பெயர் பொருந்துகிறது தில்லைக் கூத்தன் அல்லது தில்லை பற்றிப் பாடல் தோறும் குறிப்பு உள்ளது.

இங்குப் பாடல் 40இல் போற்றித்திருவகவல் போல் 25 போற்றிகள் வருகின்றன. போற்றித் திருவகவலை முதலில் செய்தவர் நக்கீரதேவநாயனார். அவரை அடுத்துச் செய்தவர் மணிவாசகர் இவர்களையொட்டி இம்முறையில் செய்தவர் பட்டினத்தார். இறைவன் சார்புடைய பொருள்களும் போற்றப்படுதலைக் கேட்கிறோம். "ஏறுபோற்றி." "சூலம் போற்றி" என இசைக்கிறார்.

2) திருக்கழுமல மும்மணிக்கோவை :

இது-ஆசிரியம், வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகிய பாக்களால் அந்தாதியாக வந்து 30 பாடல்களைக் கொண்டு முடிவது என்பதை முன்னரும் கண்டோம். அசையாலோ எழுத்தாலோ சீராலோ அந்தாதியாகத் தொடர்கிறது. (1-2; 2-2; 3-4).

திருக்கழுமலம் என்பது சீர்காழியின் 12 பெயர்களில் ஒன்று. ஆசிரியரே, 'முன்னால் நிகழ்ந்த பன்னீருகத்து வேறுவேறு பெயரின் ஊறின் றியன்ற" (10;2) என்று கூறுகிறார், கழுமலம் என்ற பெயர் 6பாக்களில் வருகின்றது (பா-1, 5, 6, 7 8, 9) ஆகவே திருக்கழுமல மும்மணிக்கோவை என்பது அமையும்.

'திருவளர்பவள' என்ற மங்கலச் சொல்லால் தொடங்குகிறார். இவரியற்றிய ஐந்து நூல்களும் மங்கலச் சொல்லில் தொடங்குகின்றன. இதுவும் இவர் வழக்காக உள்ளது. இங்கு அகத்துறைப் பாடல்கள் காணப்படுகின்றன.

இந்நூலில் இணைக்குறள் ஆசிரியம்-8 (1, 4, 7, 13, 16, 19, 25 28)

நேரிசையாசிரியம் –2 (10, 12) வருப.

பிற ஆசிரியம் இல்லை. இதில் பா-28 – 79 அடியுடைய பெரியபாவாம்.

இந்நூல் பற்றி ஒரு முக்கிய செய்தியை மனம்கொள்ளல் வேண்டும். பாடல் 13 முதல் 30 வரையுள்ள 18 பாடல்கள் இடைச் செருகல் என்ற கருத்துண்டு. கீழ்க்கண்ட பதிப்புக்களில் 12 பாடல்களே உள.

1) ஆறுமுகநாவலர் பதிப்பு (மூன்றாம் பதிப்பு)
2) சமாஜப்பதிப்பு (இரண்டாம் பதிப்பு)
3) கழகப்பதிப்பு (1971)

ஆனால், வேறுசிலர் பதிப்பில் 30 பாடல்கள் காணப்படுகின்றன. அவை வருமாறு :

அ) எஸ். வையாபுரிப்பிள்ளை பதிப்பித்த சமாஜப் பதிப்பு (1933)

ஆ) கழகம் வெளியிட்டுள்ள பட்டினத்துப்பிள்ளையார் திருப்பாடல்கள், (1967–முதற்பதிப்பு) (இரண்டு பகுதிகள்)

இ) ஆ. சிங்கார முதலியார் வெளியிட்ட பட்டினத்துப் பிள்ளையார் பிரபந்தத்திரட்டு (நான்காம் பதிப்பு 1934)

ஈ) திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துப் பதிப்பு (1972)

"இச்செய்யுள் 12 முதல் 30 முடிய உள்ளவை பல அச்சுப் பிரதிகளில் கண்டவை. திருச்சிராப்பள்ளித் திருமுறைக்கலைஞர் வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவாரால் எடுத்துக்கொடுக்கப் பெற்றவை" என்று இருப்பது வியப்பாக உள்ளது.[5] முதலில் இம் முப்பது பாடல்களையும், ஆ. சிங்காரவேலு முதலியார் வெளியிட்டார் என்றே தெரிகிறது.[6]

13-30 வரையுள்ள பாடல்களையும் பட்டினத்தாரே செய்ததாகக் கா. சு. பிள்ளையும்[7] ஔவை துரைசாமிபிள்ளையும் கருதுவர்.[8] அனவரதவிநாயகம் பிள்ளையும் இக்கருத்தினரே [9]

ஆனால் க. வெள்ளைவாரணனார் இப்பாடல்களின் சொல்லும், நடையும், கற்பனையும் பிற்காலத்தன என்று காட்டுகிறார்.[10] மு. அருணாசலம் அவர்களும் இக்கருத்தினரே.[11] பட்டினத்தாரின் துறவு மனத்திற்கு ஒவ்வாத கற்பனை உடைய பாடல் ஒன்றும் இங்கு வருகிறது.

'பணமஞ் சரையிருக்கப் பாவையரைச் சும்மா
புணர்கின்றீர் என்று புகலப்-புணர்வார்க்கு
அரைக்காசு தந்தனம் என்றார் புகலியார்மா
வரைக்கா சென்றான் அதற்குமான்.'' (பா-29)

என்ற பாடல் கொச்சையானது; சிலேடையானது. ஆகவே, இது இடைச்செருகல் என்பர் மு. அருணாசலம்.[12]

சந்திரவிம்பம் (பா:19) அன்ன சத்திரம் (பா:28) இந்திரசாலம் (பா 28) குரோதம் மதமாச்சரியம் (பா:16) இரதகுளிகை (பா: 9) ஆகிய சொற்கள் பட்டினத்தார் காலத்தவை அல்ல. கருடதியானம் (பா: 19) ஒப்பனகோபுரம் (பா: 22). இவை பட்டினத்தார் போக்காகப்படவில்லை.

3) திருவிடைமருதூர் மும்மணிக்கோவை:

பட்டினத்தார் இயற்றிய கோவைகள் இரண்டு. அவற்றுள் இஃது ஒன்று மும்மணிக்கோவையின் இலக்கணம் முன்பு காட்டடப்பட்டது.

இவ்வூர் கும்பகோணத்திற்கு வடகிழக்கில் ஐந்துகல் தொலைவில் உள்ளது. சமய குரவர் நால்வர் பாடலையும் பெற்ற தலம்.[13] 30 பாடல்களும் அந்தாதித் தொடையாக வந்து, நிறைவு பெறுகின்றன

' திருவிடை மருத பொருவிடைப்பாக'' (பா.13:26), என்றும் மற்றைய இடங்களிலும் (பா.19: 12; 2: 30; 28: 5) திருவிடை மருதரைப் பற்றி வருவதால் அத்தலத்தில் எழுந்த நூல் என்றறியலாம். பாடல்தோறும் தெய்வப் பெயரோ பதிப்பெயரோ வருகிறது. முதல்பாட்டில் ''மருதிடங்கொண்ட'' எனவரும். தமிழ் நாட்டில் நாவல் மரம் மிக்கிருந்ததை ஒட்டி, 'நாவலம் பெருந்தீவு என்ற பெயர் உண்டு. பூப்பெயரைக்கொண்டு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நிலப்பாகுபாடும் உண்டு. இம்மரபு சமயகாலத்திலும் தொடர்ந்தது. மருதமரம் மிகுந்திருந்தவிடத்தை மருதூர் என்றும் அதனால் அங்கெழுந்தருளிய தெய்வத்திற்கு

மருதீசுவரர் என்றும் பெயர் வந்திருக்க வேண்டும். இச்செய்தி குறிப்பாய் உள்ளது. இறைவியின் பெயர் பெருநலமுலை நாயகி[14] "வருமுலை தாங்கும் திருமார்பு வல்லி"(பா-16 13)என்பது பாடல் இன்று இறைவன் பெயர் மாறியும் அம்மை பெயர் மாறா மலும் இருத்தலை நோக்குக.

இந்நூலில் வெண்பா எண்.2 மட்டும் ஒரு விகற்பம். பிற வெண்பா இருவிகற்பம். முதற்பாடல் மட்டும் இணைக் குறளாசிரியப்பா மற்றைய ஒன்பது பாடலும் (4, 7, 10, 13, 19, 22 25, 28) நேரிசையாசிரியப்பா, பாடல் 19-81 அடியை உடைய நீண்ட பா. இவர் செய்த அகவற்பாவில் இதுவே அதிக அடியை உடையது. மற்றவை இதற்குக் குறைந்துள்ளன. இவண் முதற் பாடல் 'தெய்வத் தாமரை' என்று தொடங்குகிறது. அம்மையப்பர் வடிவை இதைவிட அழகாய் இனியாரும் பாடுதல் அரிது. 66 அடிகளில் இவ்வுருவைப்புனைகின்றார். முதலில் இறைவனின் திருவடியையும் பின்பு இறைவியின் திருவடியையும் கூறுவர். இங்ஙனம் உறழ் முறையில் இடை, ஆகம், திருக்கரம்' திருக்கண், திருமுடி என்ற ஆறு உறுப்புகளை எழிலோவியமாகத் தீட்டுகிறார். இந்நூலில் தத்துவக் கருத்துக்களையும், கற்பனை மாட்சியையும் நன்கு பேசுகிறார்.

4) திருவேகம்பமுடையார் திருவந்தாதி :

தொகுப்பில், இது நாலாவதாக உள்ளது. கட்டளைக் கலித்துறையாலான 100 பாடல்களை அந்தாதியாகக்கொண்டு முடிகிறது. திருக்கச்சி என்றும் காஞ்சி என்றும் வழங்கும் பதியில் எழுந்தருளிய இறைவன் பெயர் திருவேகம்பர்.

எல்லாப் பாடலிலும் ஏகம்பர் அல்லது கம்பர் என்ற சொல் வருகிறது, கச்சி என்ற பெயர் ''கச்சி ஏகம்பனே'' என்று முதற் பாடலிலேயே வருகிறது. ஆனால் பாடல்களில் வேறு பதிப் பெயர்களும் கூறப்படுகின்றன. இறைவன் பெயராக ஏகம்பர் என்றோ கம்பர் என்றோ பாடல் தவறாது வருவதால், பதிப் பெயரைச் சார்த்திப் பெயரிடாமல் ''திருஏகம்பமுடையார் திருவந்தாதி" என இறைவன் பெயரில் பெயரிட்டார். இவரது பிற நூல்கள், பதித்தொடர்பான பெயர் கொண்டவை. இறைவன் பெயரில் நூலாக உள்ளது இஃதொன்றே

திருஞான சம்பந்தரும், அப்பரும், ஐயடிகள் காடவர்கோனும் பதிகளைத் தொகுத்துப் பாடியதுபோலப் பட்டினத்தாரும்

பதிகளை வரிசைப்படுத்தியது ஒரு சிறப்பு. அதிலும், கட்டளைக் கலித்துறையில் ஊர்களை வரிசைப்படுத்தல் எளிதில்லை, அவர்களின் இலக்கியத் தாக்கம் இவற்றில் வருகிறது. இந்நூலில் 68 பதிகளைக் குறித்துள்ளார்.

5) திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது :

'ஒருபா ஒருபஃது-வெண்பா அல்லது அகவல் பத்துவரல் என்பது பன்னிரு பாட்டியல் கருத்து. கலித்துறையை இணைக்கின்றன வெ. பா. இவி. தொ. வி. மு. வீ. பி. தீ என்பன. 'எப்பாட்டேனும் எனப் பொதுப்பட நிற்கிறது சி. பா. சி. பா மு.வீ பி. தீ என்பன அந்தாதி வரல் என்னும் கருத்தை இணைக்கின்றன'' என்பது, டாக்டர் ச. வே. சுப்பிரமணியனார் விளக்கம்.[15]

இஃது ஆசிரியப்பா பத்தால் அந்தாதியாக வருகிறது. ஐங்குறுநூறும், திருக்குறளும், தேவாரப் பதிகங்களும், பத்துப் பாடல்களைக் கொண்டவையாக வந்தாலும், அந்தாதியாக வரவில்லை. ஆசிரியப்பா பத்துக்கொணடு அந்தாதியாக நான்காம் பத்தில் பதிற்றுப்பத்து மட்டும் வருகிறதென்றாலும் ஒருபா ஒருபஃது என்ற வழக்கு அதற்கு இல்லை. அந்தப் பெயரில் முதலில் காணப்படும் இலக்கியம் இதுவே. ஆனாலும் பதிற்றுப்பத்தே முன்னோடி!

இரட்டைமணிமாலை, மும்மணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணிமாலை, ஐம்மணிமாலை, நவமணிமாலை, பல்சந்தமாலை எனப்பல இருத்தலைக் கண்டு, ஒரே பாவகையாலும் அந்தாதி செய்யலாமே என்று கருதி, ஒருபா ஒருபஃது என்பதை யாத்தனர், நவநீதப் பாட்டியலும் சுவாமிநாதமும் தவிர, பிற பாட்டியல் நூல்கள் இப்பாவினைப் பற்றிக் கூறுகின்றன.[16]

'இருநில மடந்தை' என்று மங்கலமாக இந்நூலைத் தொடங்குகிறார். இதில் நேரிசையாசிரியம்-7ம் (பா. 1, 2, 3, 4, 6, 7, 9,) இணைக்குறள்-1 (பா-5) நிலைமண்டலம் – 2ம் (பா. 8, 10) வந்து பத்து அகவல்கள் அந்தாதியாக முடிகின்றன. இதில் 8 ஆவது பாடல் 32 அடிகளுடைய பெரிய பாவாகும்.

முதற்பாவில் ஒற்றிமாநகர் உடையாய் (1) என்று வருகிறது. ஒவ்வொரு பாடலிலும் இக்குறிப்பு உண்டு. ஆகவே, திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது என்ற பெயர் பூண்டது.

பட்டினத்தார் நான்மணிமாலையாகிய மூல இலக்கியம் ஒன்று செய்தார். ஒருபா ஒருபஃதை முதலில் செய்தவரும் இவரே! மும்மணிக்கோவை இரண்டும், அந்தாதி ஒன்றும் ஆக நான்கு வகைச் சிற்றிலக்கியங்களை, இலக்கிய உலகிற்கு நூற்கொடையாகத் தந்தார்.

நம்பியாண்டார் நம்பி

(யாப்பு)

பதினொராந்திருமுறையைத் தொகுத்த இவரே, கவிஞராகத் திகழ்கிறார். பல யாப்புக்களைச் செய்திருக்கிறார். பத்துப் பனுவல் களைப் புனைந்திருக்கிறார். அவை வருமாறு :

1) திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை
2) கோயில் திருப்பண்ணியர் விருத்தம்
3) திருத்தொண்டர் திருவந்தாதி
4) ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி
5) ஆளுடையபிள்ளையார் திருச்சண்பை விருத்தம்
6) ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை
7) ஆளுடையபிள்ளையார் திருவுலாமாலை
8) ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம்
9) ஆளுடையபிள்ளையார் திருத்தொகை
10) திருநாவுக்கரசு தேவர் திருவேகாதச மாலை

இவற்றின் பாடுபொருள்கள் :

விநாயகர்-1
தில்லைநாயகர்–1 (சிவன்)
அறுபத்து மூன்று நாயன்மார்கள்-1
திருஞானசம்பந்தர்–6
திருநாவுக்கரசர்-1

ஆகமேற்கண்ட ஐவரைப்பற்றி 10 நூல்கள் உள. பிரபந்த வகையில் கணக்கிட்டால்,

அ) இரட்டைமணிமாலை-1
ஆ) பண்ணியல்—1
இ) அந்தாதி—2
ஈ) மும்மணிக்கோவை—1
உ) உலாமாலை—1
ஊ) கலம்பகம்-1
எ) வரலாற்றுத்தொகை—1
ஏ) ஏகாதசமாலை—1
ஐ) திருவிருத்தம் (சண்பையர் விருத்தம்).—1

என்றவாறு அமைகின்றன நூல் வகையில் அந்தாதி மட்டுமே இரண்டு. பிறயாவும் வெவ்வேறு பிரபந்த வகையின. ஆகவே, ஆசிரியர், பல நூல்களைப் படைக்க விழைந்தார் என்பது அறியப்பெறும்.

இவர் செய்த பா வகைகள் :

1.	ஆசிரியப்பா	11
2.	ஆசிரியவிருத்தம்	46
3.	கட்டளைக் கலித்துறை	292
4.	வெண்பா	22
5.	கலிவெண்பா	2
6.	பல்வகைப்பா	12
		385

ஆக இவர் தமிழுக்குத் தந்த கொடை 385 பாடல்கள். இத் தொகை நூலிலேயே மிகுந்த அளவு பாடல்களைப் பாடி முதலிடம் பெறும் பாவலர் இவராவர்.

சிறுவயதில் தம் நெஞ்சம் பிணித்து அருள்பாலித்த விநாயகர்க்கு, ஒரு நூல் செய்தார். இது முதல் நூல். அடுத்துத் தம்மை ஏற்றுக் கொண்டு திருமுறை வகுக்க உதவியதில்லை அம்பலவாணர்க்கு ஒருநூல் புனைந்தார். ஏனைய எட்டு நூல்களை அடியவர்க்காகச் செய்தார்

(1) விநாயகர் திருவிரட்டை மணிமாலை :

இது நம்பியாண்டார் பிறந்த ஊரான திருநாரையூரில் எழுந்தருளியிருக்கும் விநாயகர் மேல் பாடப்பெற்றது. இந் நூலில் கண்ட 20 பாடல்களும் அந்தாதியாக உள்ளன. ஒரு பாடலின் சீரோ, எழுத்தோ அடுத்த பாடலில் தொடர்வது அந்தாதி. நம்பியாண்டார், இந்நூலில் சில பாடல்களின் ஒரு சீரையே சிதைத்து எழுத்து அந்தாதியாக்குகிறார்.

"உன்னை வாழ்த்துவனே" (பா. 8) என்று பாடல் முடிவு. அடுத்த பாடல் "வனஞ்சாய" என்று தொடங்கும். இங்கு, முதற்பாட்டின் இறுதிச்சீர் சிதைவுற்று அடுத்த பாடலின் முதலாகிறது. இன்னும் பா. 9-10 - 14 - 15 - 17-18. 18 : 19, ஆகிய பாக்களில் இப்போக்கு உள்ளது.

இவ்விருபது பாடல்களில் ஓசை நயமும் பொருளியையும் அத்துணை சிறப்பாக அமையவில்லை. இது நம்பியாண்டாரின் கன்னிமுயற்சி. இப்பாடல்கள் இருபதிலும் நாரையூர் என்ற

சொல் வருகிறது. விநாயகன் என்ற சொல்லாட்சி (பா: 14; 19) இரு இடங்களில் வருகிறது. மற்றைய பதினெட்டுப் பாடலிலும் விநாயகரைப் பற்றிய குறிப்புச் சொற்களோ பரியாயச் சொற்களோ வருகின்றன. ஆகவே, தலைப்பு நன்கு பொருந்து கிறது.

இங்குக் கணபதியைப் பற்றிக் கூறினாலும் சிவனுக்கு முதன்மை தந்து களிற்று முகத்தானைச் சார்பாக வைத்துப் பேசுவதால், விநாயகரினும் சிவனையே பரம்பொருளாக, நம்பியாண்டார் கொண்டார் என்பதாம்.

"நாரைப் பதியுட் சிவக்களிறே	பா: 4
நாரை யூரான் மகன்	பா: 5; 9
சுரன் மகற்கு	பா: 6
நாரையூர் மன்னு சிவன்மகனே	பா: 10
நாரைப் பதியரன் தன்னைக் கனிதரவே	பா: 8
சிவன்சேய்"	பா: 11

திருமுறைகளைக் காண்பதற்காக இப்பாடல்களைப் பாடி விநாயகரை வழிபட்டார் என்று திருமுறை கண்ட புராணம் கூறும். அதற்கான குறிப்பொன்றும் ஈண்டுக் காணப்பட்டிலது.

நம்பியாண்டார் நம்பி, இளமையில் முதலில் இந்நூலைப் பாடினார் என்பது யாப்பளவில் தெரிகிறது.

(ஆ) கோயில் திருப்பண்ணியர் விருத்தம் :

கோயில் - சிதம்பரம் – என்பது சைவ வழக்கு. தேவாரத்தில் 'கோயில்' பதிகமாக 11 உள. ஆயினும், தில்லை, சிற்றம்பலம், புலியூர் என்ற ஆட்சிகள் தேவாரத்தில் உண்டு. கோயில்-சிதம்பர மாகிய பதி என்றவாறு இல்லை. இதே முறையில் நம்பியாண் டாரும் பாடுகிறார். தில்லை, தில்லைச் சிற்றம்பலம், தில்லை யம்பலம், புலியூர் (பா. 26), பொன்னம்பலம் (பா. 54) என்றே பதியைப் பாடுவார். கோயில் என்று பாவில் வருகிறது. ஆனால் 'பதி' என்ற பொருளில்லாமல் இறைவன் உறையும் இடமாகிய கோயில் என்றே வருகிறது. 'செற்றரு மாமணிக்கோயில் நின்றது" - (பா. 67) என்பது காண்க.

ஆயினும் மரபுபற்றி, ஈண்டுச் சிதம்பரத்தைக் கருதல் தகும். 'திரு' என்ற அடை, மேன்மை, மாட்சியைக் காட்டும். தெய்வப்

பதிகட்குத் 'திரு' அடை உண்டு. திருவாலங்காடு திருவாரூர், திருக்கைலாயம், திருஈங்கோய்மலை, திருவலஞ்சுழி, திருக்கழுமலம், திருவிடைமருதூர், திருவேகம்பம் திருவொற்றியூர், திருநாரையூர் ஆகிய 10 பதிகளின் தொடர்பாக 11ஆம் திருமுறையில் நூல்கள் தோன்றியுள்ளன இவற்றைவிடுத்துத் திரு என்ற அடைபெற்ற நூல்களாக 24 நூல்கள் உள. இரண்டும் சேர்த்துப் பார்த்தால் 40 நூல்களில் 34 நூல்கள் 'திரு' என்ற அடை உடையன. தெய்வத் தொடர்பான நூல்கட்கும் 'திரு' அடை, சமயகாலத்தில் வந்து விட்டது. திருமந்திரம், திருவாசகம் என்று நூல்கட்கு அடை வழங்கியது போல, 'திருமுகப்பாசுரம்' 'திருவிரட்டை மணிமாலை', 'அற்புதத் திருவந்தாதி' என்று யாப்புகளும் அடைபெறலாயின. ஆகவே, 'திருப்பண்ணியர்' விருத்தம் என்பது, யாப்பில் அடைபெற்று வந்த பெயர். விருத்தம் என்பது, இங்குக் கட்டளைக் கலித்துறையை இது பழைய வழக்கு. திருநாவுக்கரசர், நம்மாழ்வார் பாடிய கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் 'திருவிருத்தம்' என்றே வழங்குகின்றன.

இவ்விரு அடியார்களின் பாடல்களில் 'பண்ணியர்' என்ற சொல் இல்லை. இதில் 'பண்ணியர்' என்பது பண்ணோடியைந்த பாடல் என்பதைக் காட்டும் என வெள்ளைவாரணனார் கருதுவர்.[1]

இதற்கு மற்றுமோர் விளக்கம் கூறுதலும் உண்டு. கோயிலில் (சிதம்பரத்தில்) எழுந்தருளியிருக்கிற தில்லைக் கூத்தன் உயிர்கட்குத் திருவைப் பண்ணுகிறவர். அவர் புகழ் பாடுதலால் இப்பெயர் பெற்றது என்பார் திரு சு. அ. இராமசாமிப் புலவர்.[2] வெள்ளைவாரணனாரும் இப்பொருளுக்கு இரண்டாம் இடம் தந்துள்ளார்; இரண்டாம் பொருளே சாலும்.

''தில்லைத் திருக்கோயிலையடைந்து தேவாரத் திருமுறைகளைக் காண விரும்பி, நம்பியாண்டார் இந்நூலால் கூத்தப் பிரானைப் பரவிப் போற்றினார்" என்ற விளக்கத்தை இரு ஆசிரியர்களும் தந்துள்ளனர். திருமுறை கண்ட புராணத்தை வைத்து இது வரையப்பட்டதாகும். நூலுள் இதற்கு அகச் சான்றில்லை. 'நெஞ்சந் திருவடி' எனத் தொடங்கி ''என் நெஞ்சமே'' என மண்டலித்து முடிதலால் 70 பாடல்கள் என்ற அளவினதாகப் பாடினார் என்பதாம்.

திருப்பண்ணியர் விருத்தம் என்ற வகையைப் பாட்டியல் நூல்கள் பேசவில்லை.

(3) திருத்தொண்டர் திருவந்தாதி :

இந்நூல் எழுத்தாலும், சீராலும் அந்தாதியாகி 89 கட்டளைக் கலித்துறையால் வருகிறது. இது மண்டலித்து முடிவதால் இந் நூலின் மொத்தப் பாடல்கள் 89 என்பதாம். இங்ஙனம் வருதற்கு லக்கணவிதி இடந்தருதலைப் பன்னிரு பாட்டியலால் தெரியலாம்.

தேவார நூல்களை அடைவு செய்தபின் இந்நூல் செய்தார் என்று கருத இடமுண்டு. இந்நூலில் வரும் சில அடியார்களின் வரலாறு, இவரது பிற நூல்களிலும் இடம் பெறக் காணலாம்.

இவ்வந்தாதியில் திருநீலகண்டர் (திரு. திரு. அ பா: 1: 83) சுந்தரர் (பா: 8, 16, 23, 32, 40, 48, 57, 63, 69, 77, 86) திருநாவுக்கரசர் (பா: 24; 25) திருஞானசம்பந்தர் (பா: 33; 34) சேரமான் பெருமாள் நாயனார் (44 : 45) கோச்செங்கட்சோழர் (பா: 81, 82) ஆகிய அறுவரில், சுந்தரர் தவிர, மற்றவர்கட்கு இரண்டு பாடல்களும், சுந்தரருக்கு 11 பாடல்களும், பிற அடியார்கட்கு ஆளுக்கொரு பாடலுமாக ஆசிரியர் 89 செய்யுள் செய்திருக்கிறார்.

சுந்தரர், திருத்தொண்டர் தொகையில் அடியார்களை எந்த வரிசையில் கூறினாரோ, அதே வரிசையில் இங்கு நம்பியாண்டார் நம்பி கூறுகிறார். சுந்தரர் 60 அடியார்களையும் தம் பெற்றோர் இருவரையும் சேர்த்து 62 பேரை மட்டும் கூறினார். நம்பியாண்டார்

''கூட்டம்ஒன் பானொ டறுபத்து மூன்று தனிப்பெயரா''

(திரு. திரு. அ. 87) என்று தொகையடியார் ஒன்பது பேரையும் சுந்தரரையும் சேர்த்த 63 என்று கூறியுள்ளார். நாயன்மார்கள் 63 பேர்கள் என்ற எண்ணிக்கையை முதலில் கூறியவர் நம்பி யாண்டார் நம்பியே!

இந்நூலின் மற்றுமோர் சிறப்பு, சுந்தரர் செய்த திருத் தொண்டர் தொகையின் பதிகங்களின் முதற் குறிப்புக்களைக் காட்டும் பாடல் ஒன்று செய்திருப்பதாகும். மேலும், நூற் பயனைக் காட்டும் செய்யுள் ஒன்று செய்திருக்கிறார். இந்த நெறி, இவரது ஏனைய நூல்களில் இல்லை. பயன் காட்டும் செய்யுளைத் தன் நூல்கட்குச் செய்யாமல், தன்னினும் உயர்ந்த அடியாராகிய சுந்தரர் செய்த நூலுக்கு விரிவு செய்தபோது

மட்டும் "காப்பு"ச் செய்யுள் வருகிறது. திருஞான சம்பந்தரின் செல்வாக்கு, இங்குப் பதிந்திருக்கப் பார்க்கிறோம். இப்பாடலை நம்பியாண்டார் நம்பியே செய்தார்.

சில அடியாரிடத்து மிகுந்த பக்தியோடு "நம்" என்றும் "என்" என்றும் அடைமொழிகள் தந்து உறவோடு பேசும் பத்திமையைப் பார்க்கிறோம் ஆகவே, இந்நூல் திருத்தொண்டர் திருவந்தாதி என்ற பெயர்ப் பொருத்தத்துடன் விளங்குகிறது.

(4) ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி :

முக்கட் செல்வர்க்கு மூத்த பிள்ளையார், விநாயகர். இளைய செல்வன் மாமயில் முருகன், அவனை இளையபிள்ளை என்பர். உமையம்மையார் ஞானப் பாலூட்டி அருள் சுரந்ததாலும், உமாபதி ஆட் கொண்டதாலும் திருஞானசம்பந்தர்க்கு 'ஆளுடைய பிள்ளையார்' என்ற பெயர் வந்தது. நம்பியாண்டார், அப்பெயராலேயே ஞானசம்பந்தருக்கு 6 நூல்கள் செய்கிறார். இது 10 கட்டளைக் கலிப்பாக்களைக் கொண்டது. ஆளுடைய பிள்ளையார்பால் கனிந்த அன்பும் பத்தியும் கொண்டவர், நம்பியாண்டார். இந்நூல், திருத்தொண்டர் திருவந்தாதிக்கும் முன்னர்ச் செய்ததாகும். இதனை நம்பியாண்டாரே, "இட்டடி யேன்கொடுத்த அந்தாதி கொண்ட பிரான்அருட் காழியர் கொற்றவனே," (பா: 34) என்று திருத்தொண்டர் திருவந்தாதியில் கூறுவதால் தெரியலாம். ஆயினும், இன்றைய வரிசையில் இது முன்னர் இல்லாமல் திருத்தொண்டர் அந்தாதிக்குப் பின்னர் இருக்கிறது. காரணம் யாது? சமய ஆகம முறையில் விநாயகருக்கு முதலிடமும், பொன்னம்பலருக்கு இரண்டாம் இடமும் வழங்கினர். பாடல் 13:14 சீர்சிதைந்து அந்தாதியாகி வருகிறது. பாடல் 17:18; 19:20 இங்ஙனம் வரும்.

(5) ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம் :

இந்நூல் இத்தொகையில் ஐந்தாமிடத்தில் உள்ளது. திருஞானசம்பந்தரின் முக்கிய வரலாறுகளைத் திருத்தொண்டர் திருவந்தாதியில் கூறியதற்குமேல், இவண் கூடுதலாகக் கூறுவர். இங்குத் திருஞானசம்பந்தரின் ஆறு இன்றியமையா வரலாறுகளை மொழிகிறார். முன்னிரு அடிகளில் சம்பந்தர் வரலாறும், பின்னிரு அடிகளில் திருச்சண்பைப் பதியின் இயற்கை வளம் அல்லது சிறப்பும் புலப்படுமாறு வருதலால் 'ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம்' என்ற பெயர் ஏற்பட்டது.

'திருச்சண்பை' = சீர்காழிக்கோர் பெயர். ''சண்பையர் காவலன் சம்பந்தனே'' என்ற அடி இவண் ''மகுடம்''; இம்மகுடம் பத்துப் பாடலிலும் வரும். இவை, கட்டளைக் கலித்துறைப்பாவாம். முன்னர் கூறியாங்கு ''கோயில் திருப்பண்ணியர் விருத்தம்'' என்ற பாடல்கள் கட்டளைக் கலியாக இருந்தும் 'விருத்தம்' என்று பெயர் பெற்றது போல, இதுவும் திருச்சண்பை விருத்தம்' என்று பெயர் தாங்கியது. இப்பாடல்கள் அந்தாதியாக வரவில்லை

பதினொராவது பாடல் ஒன்று உண்டு. அது முற்கூறிய பத்துப் பாடல்களில் முதற்குறிப்புச் சொற்களைக் காட்டும் நினைவுச் செய்யுளாக அமைந்திருப்பது, இந்நூலின் சிறப்பாகும். இம்மரபைத் திருத்தொண்டர் திருவந்தாதியில் வரும், திருத் தொண்டர் தொகைப் பதிகக் கவிகளின் முதற்குறிப்பிலும் கண்டோம். இப்படி நினைவுச் செய்யுள் செய்வது இவர் பாடலில் வேறு இடத்தில் இல்லை. இத்தகு பாடல்கள், வைணவ இலக்கியங்களில் மிகுந்து காணப்படும்.

6) ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை:

இந்நூலில் வரும் 30 பாடல்களும் சீர்-எழுத்து அந்தாதியாக வந்து மண்டலித்து முடியும். இங்கும் சொல் சிதைந்தே அந்தாதி அமைகிறது.

இப்பாடல்களில், சம்பந்தரைக் கிளவித் தலைவனாகவும், பாட்டுடைத் தலைவனாகவும் கொண்ட அகத்துறைப் பாடல்கள் உள்ளன. இப்பாடல்களில் (அ) சம்பந்தரின் வரலாற்று நிகழ்ச்சி கள் (ஆ) பதிகச் சிறப்புக்கள் (இ) ஞானசம்பந்தரின் திருவடிச் சிறப்பு (ஈ) ஞானசம்பந்தரின் ஏரார் திருவழகு ஆகியவை இசைக்கப்படுகின்றன.

7) ஆளுடையபிள்ளையார் திருவுலாமாலை:

திருவுலாமாலை என்பது புதியபெயர்; பாட்டியலில் காணப் படாதது. 143 கண்ணிகளால் ஆன கலிவெண்பா. வெண்டளை பிழையாத கலிப்பா, ஈற்றடி முச்சீராக வந்துமுடிகிறது.

இந்நூல், உலா இலக்கணத்தில் இருந்து மாறுபட்டது. பேதை முதல் பெதும்பை ஈராக உள்ள மகளிரைத் தொகையாகக் கூறி அவர்கள் பாட்டுடைத் தலைவனை விரும்பினார் எனக் காட்டுகிறார்.

இதன்கண் சில முக்கிய செய்திகள் கூறப்படுகின்றன. தில்லைவாழ் அந்தணர் 'மூவாயிரவர்' என்று தொகை கொடுத்துக் குறிக்கப்படுதல்போல, (1) சீர்காழியில் வாழ்கின்ற அந்தணர்கள் நானூற்றுவர் என்று தொகை எண் கொடுக்கப்பட்டுள்ளது. (2) சீர்காழிக்குரிய பன்னிரு பெயர்களையும் ஒரே இடத்தில் தொகுத்துச் செப்புகிறார். (3) சம்பந்தர் யாத்த சில யாப்புவகை களை ஈண்டு நம்பியாண்டார் குறிக்கிறார்.

8) ஆளுடை யபிள்ளையார் திருக்கலம்பகம் :

11ஆம் திருமுறையில் இதுவொன்றே கலம்பகமாகவுள்ள பிரபந்தம். கலம்பகம் - சிற்றிலக்கிய வகையில் ஒன்று. தமிழ் இலக்கிய வரலாற்றில் இன்று கிடைக்கும் கலம்பக இலக்கியங் களில் நந்திக்கலம்பகம் 9ஆம் நூற்றாண்டில் தோன்றியது. 11 ஆம் நூற்றாண்டில் தோன்றிய கலம்பகம் இதுவே. பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் திருவரங்கக் கலம்பகம் கி. பி 11ஆம் நூற்றாண்டினது. இம் மூன்றும் காலப் பழமை உடையன. இவை கலம்பக அமைப்பை ஒப்பிட்டுப் பார்க்க உதவுவன. 62 கலம்பக நூல்கள் இன்று அச்சில் வந்துள்ளதாகத் தெரி கிறது.[4]

கலம்பக இலக்கணமாக, வெண்பாப்பாட்டியல் மூன்று நூற் பாக்களைத் தரும்.

1. ''வைக்கும் புயம்தவம்வண் டம்மானை பாணமதங்கு
கைக்கிளைசித் தூசல் களிமடக்கூர் - மிக்க மறம்
காலந் தழையிரங்கல் சம்பிரதங் கார்தூது
கோலங் கலம்பகத்தின் கூறு.''[5]

2. ''கூறு மொருபோகு வெண்பாக் கலித்துறைகள்
மாறின் முதலுறுப்பா மன்விருத்தம் - வேறகவல்
வஞ்சித் துறைவிருத்தம் வான்துறைவெண் பாமருட்பா
எஞ்சாக் கலிவினங்கொண் டீட்டு.''[6]

3. ''ஈசற்கு நூறிழிபைந் தையர்க் கிகலாசர்க்
காசற்ற தொண்ணூ றமைச் சருக்காம்.''[7]

பன்னிருபாட்டியல் ஏறத்தாழ இதே செய்திகளைக் குறிப்ப தோடு,[8] சில வேறுபாடுகளை இரு சூத்திரங்களில் இயம்புகிறது.

பாட்டுடைத் தலைவர் இன்ன சாதியினராக இருந்தால் இத்துணைப்பாடல் வருதல் வேண்டும் என்பதில் இருநூல்களும் வேறுபடவில்லை.

வெண்பாப் பாட்டியல் மேலும் சில பாவகைகளையும் குறிக்கும். கலம்பகத்துள் ஆசிரியப்பா. கலியினம், வஞ்சி விருத்தம், மருட்பா வரலாம் என்று கூறும். உறுப்புகளில் இரண்டு நூலும் வேறுபடும். பன்னிரு பாட்டியல் உறுப்புகளை வேறுபடுத்திக் கூறும்.

1. "சொல்லிய கலம்பகம் சொல்லின் ஒருபோகு
முதற்கண் வெண்பாக் கலித்துறை புயமே
அம்மனை ஊசல் யமகம் களி மறம்
சித்துக் காலம் மதங்கி வண்டே
கொண்டல் மருள்சம் பிரதம் வெண்டுறை
தவசு வஞ்சித் துறையே இன்னிசை
புறமேய் அகவல் விருத்தம் எனவரும்
செய்யுட் கலந்துடன் எய்திய அந்தம்
ஆதியாக வரும்என மொழிப." [8]

2. "தேவர்க்கும் முனிவர்க்கும் காவல் அரசர்க்கும்
நூறு தொண்ணூற் றைந்துதொண் ணூறே." [9]

....

என்பது சூத்திரம்.

இவண், வெண்பாப்பாட்டியல் 18 உறுப்புக்களைக் கூறும். ஆயின் பன்னிரு பாட்டியல் 14 உறுப்புக்களையே கூறுகின்றது. இவற்றில் இரண்டு பாட்டியலினும் ஒத்து வருவன 11 உறுப்புக்களே. பன்னிருபாட்டியல் 3 உறுப்புக்களைப் புதிதாகக் கூறும். அவை (அ) யமகம் (ஆ) கொண்டல் (இ) மருள் என்பன. பாடல்கள் வருமாற்றிலும் வேறுபாடு உணடு என்று முன்பு காட்டப்பட்டது. ஆகவே, கலம்பக இலக்கணம், பிற இலக்கணம் போல வரையறுத்துக் காட்டப்படவில்லை என்பதாம்.

அ) ஆளுடையபிள்ளையார் கலம்பகத்தில் மொத்தம் 7 உறுப்புக்களே வருகின்றன.

1. களி 2. சம்பிரதம் 3. மறம் 4. மதங்கியர் 5. மடல் 6. பாண் 7. வலைச்சியர்.

ஆ) பாவகையிலான உறுப்புக்கள் : 1. கைக்கிளைமருட்பா 2. இன்னிசை வெண்பா 3. மடக்கு (யமகம்). இவற்றையும் கூட்டின் 10 உறுப்புக்கள் உண்டு என்பதாம்.

இ) இக் கலம்பகத்தில் வரும் பாவகைகள் வருமாறு:

1. ஒருபோகு கொச்சகக்கலி 2. கட்டளைக் கலித்துறை 3. ஆசிரிய விருத்தங்கள் (6 சீர், 7 சீர், 8 சீர், 10 சீர், 11 சீர், 14 சீர்) 4. கலிவிருத்தம், 5. கலித்துறை, 6. கலித்தாழிசை, 7, நேரிசை ஆசிரியம் 8. ஆசிரியத் துறை, 9 கைக்கிளை மருட்பா, 10. இன்னிசை வெண்பா ஆகிய பாடல் வகைகள் உள. இவற்றின் விவரங்களைப் பின் இணைப்பில் காணலாம்.

நம்பியாண்டார் நம்பி கூறாத உறுப்புக்கள் 9 எனலாம். 1. புயவகுப்பு 2 தூது 3. ஊசல் 4. ஊர் 5. சித்து 6. கையுறை 7 குறம் 8. அம்மானை 9. காலம்.

நம்பியாண்டார் நம்பியின் கலம்பகத்தில் தனித்துக் காணப் படும் உறுப்புக்கள் 6.

1. குறமாதிடம் காதல் மொழி பேசல் (இது குறம் அன்று, குறம் என்பது குறமாது தலைவியிடம் குறிகூறல்)
2. பாணாற்றுப் படை
3. வலைச்சியாரிடம் காதல் பேசல்
4. முல்லைக் கொடியை நோக்கித் தலைவி இரங்கிப் பேசல்
5 அலர் தூற்றுவாரிடம் தோழி புலந்து பேசுதல்
6. ஏறுதழுவினார்க்கு இவள் உரியள் என்று பேசுதல்.

பிற கலம்பக உறுப்பில் திரிந்தோ-சற்றுத் தொடர்புடைய தாகவோ வரும் அகத்துறைகளாக ஆளுடையபிள் ளையார் கலம் பகத்தில் வருவன.

1) தோழி தலைவியிடம் கார் வந்தது. தேரும் வந்தது பா: 14 - கார் உறுப்பில் மாறிவரினும் தொடர்புடையது.
2) தலைவி, கிளியிடம், தலைவன் பெயர் பேச வேண்டல் பா: 26 கிளியைத் தூதாக அனுப்புதலின் வேறுபட்டது. கிளித் தூதின் திரிபு

3) 'தவம்' என்ற சொல் பா: 30 இல் வருதல். 'தவம்' என்ற உறுப்போடு தொடர்பு படுத்தலாம்.

4) தலைவி, தலைவன் செயலைப் பாணனிடம் நகையாடியது. பா: 43. 'பாண்' உறுப்பின் திரிபு.

5) தலைவி, குருகை விளித்துத் தன்னைப் போலத் துயர்ப்படுவதாய்க் கூறி மனம் அழியல் - பா: 45. இது பறவை விடு தூதின் திரிபு.

6) முல்லையை நோக்கித் தோழி பேசல் – பா: 47 கார்' உறுப்போடு தொடர்புடையது.

7) தலைவி தலைவனின் பல செய்கைகளையும் கூறுவதோடு, அவன் தழையோடு வந்தமையையும் தோழியிடம் தலைவி கூறல் பா. 48- இது தழை உறுப்போடு தொடர்புடையது.

இந்த ஏழும், பிற கலம்பக உறுப்புக்களோடு முற்றும் இணங்கி வராவிடினும் திரிபாகித் தொடர்புடையவை. பின்வந்த கலம்பக உறுப்புகட்கு முன்னோடியாக இருந்தவை.

மூன்று கலம்பகங்களையும் ஒப்பிட்டுக் கண்டால் சில வளர்ச்சிகள் தெரிகின்றன. அவற்றைப் பின் இணைப்புப் பட்டியலில் காணலாம்.

உறுப்புக்கள் 8 என்பதில்லை. எல்லாக் கலம்பகங்களிலிருந்தும் 31 உறுப்புக்கள் காணப்படுகின்றன. பன்னிரு பாட்டியல் கூறும் புயம், அம்மானை, ஊசல், வண்டுவிடுதூது, கொண்டல் ஆகிய உறுப்புக்கள் இந்நூலில் இல்லை. மருள் – தவசு – குறிப்பாகக் காட்டப்படுகின்றன.

யாப்புக்களைப் பார்த்தாலும் பாவகை ஒன்றில் இருப்பது போலவே பிறிதொன்றில்லை. பாடு பொருள்களும் பலவாக வருகின்றன. ஆகவே, 'கலம்பகம்' என்பது பல யாப்புக்களும், பல உறுப்புக்களும், பல பாடு பொருள்களும் கலந்துவருவது இதனில் அகத்துறையும் புறத்துறையும் கலக்கும். இஃது ஆசான் நெஞ்சப்படி வரலாம். சிலவே பொதுக் கூறுகளாக இருக்கும். வெண்பாப் பாட்டியல் சூத்திரம் 10, 11 இதனை கூறுகின்றது.

ஆளுடையபிள்ளையாரைத் தெய்வமாகவே, நம்பியாண்டார் நம்பி கருதினார். அப்படியாயின் பாடல் எண்ணிக்கை 100 ஆக இருந்திருத்தல் வேண்டும். முனிவராகக் கொண்டாலும் 95 பாடல்கள் பாடியிருத்தல் வேண்டும். இங்கு 49 பாடல்களே உள.

இது பாட்டியல் இலக்கணங்கட்கு மாறுபட்டது. முதற்பாவின் முதற் சீரும், கடைசிப்பாவின் கடைச் சீரும் எழுத்து அந்தாதியாக வந்து முடிகிறது. சில ஆசிரியர்கள் அந்தாதியாக வரவில்லை என்று எழுதியிருப்பது வியப்பே! ஆயின் பாடல் 41-42க் கிடையே அந்தாதியில்லை என்பது உண்மை. ஆகவே, ஒரு பாடல் விடுபட்டிருக்கிறது; கிடைக்கவில்லை. எனவே, இதில் ஐம்பது பாடல்கள் இருந்திருக்கலாம். 100 பாடல்கள் இருந்து கிடைக்கவில்லை என்பது, சிலர் கருத்து. எழுத்தந்தாதியாக மண்டலித்து முடிதலால் பாடல்கள் 50 ஆகவே இருந்திருக்க வேண்டும்.

பாடல் 36-37க் கிடையே எழுத்து அந்தாதியாக வருகிறது. ஓர் ஆசிரியர் இந்நூலுள் குறம் பாணாற்றுப்படை ஆகிய உறுப்புக்கள் வந்துள்ளன என்று குறித்துள்ளார்.[10] பாணாற்றுப் படையை உறுப்பாக இலக்கண நூல் கூறவில்லை. பாட்டியல்கள் கூறும் ‘குறம்’ அன்று இங்கு வருவது. இந்நூலுள் பாதியளவு அகப்பாடல்கள் உள.

10) ஆளுடையபிள்ளையார் திருத்தொகை:

திருத்தொண்டர் திருவந்தாதிபோல, இது சம்பந்தரின் வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்துக் கூறலின், திருத்தொகை யாயிற்று, அந்நூல் செய்தபின் இதனைச் செய்திருப்பார்.

கலிவெண்பா யாப்பில் 65 அடியில் இப்பா யாப்புற்றிருக் கிறது. 9-16 வரையும், பின்னர் 41-65 வரையிலும் தனிச்சீர் பெறவில்லை. பிற இடங்களில் தனிசீர் வருகிறது. ஈற்று அடி முச்சீராக வராமல் நான்கு சீராக வருகிறது. இந்த அமைப்பு கலிவெண்பாவில் புதிது. இதுவோர் கலப்பு நிலையில் உள்ளது. இப்பாடலின் 23 ஆம் அடியில் ஓர் எழுத்து விடுதல் இருக்கிறது. ஆதலின் தளை சரியாக அமையவில்லை. இங்கு வெள்ளோசை பிழைபடுகிறது.

சம்பந்தரைப்பற்றிய வரலாற்றுச் செய்திகள் யாவும் இங்குக் குறிக்கப்பெறுகின்றன. சம்பந்தர் ஞானப்பாலுண்ட செய்தி முதல், பெருமணத்தில் சோதியில் கலந்தது வரையுள்ள எல்லா வரலாறுகளும் காணப்படுகின்றன. நிகழ்ச்சிகள் முறையாக வராது முன்பின்னாக வரினும், அனைத்தும் இடம்பெறும்.

சம்பந்தரைப் பற்றிய மேலேகண்ட ஆறு நூல்களிலும் வரும் வரலாற்றுச் செய்திகள், திருஞானசம்பந்தர் வரலாற்றைக் கூற, சேக்கிழாருக்குப் பெரிதும் உதவி இருக்கும்.

(10) திருநாவுக்கரசுதேவர் திருவேகாதசமாலை:

இது, திருநாவுக்கரசரைப் பற்றி, நம்பியாண்டார் பாடிய ஒரே நூல். இவர் சுந்தரரைப் பற்றியும் பாடியிருக்கலாம். கிடைக்கவில்லை என்பது ஓர் ஆசிரியர் கருத்து. இதுவே, 11ஆம் திருமுறையில் கடைசிப் பிரபந்தம்.

பதிகங்கள் பத்துப் பாடல்களைக் கொண்டவை அதன் தாக்கம் இங்கு இருக்கலாம். கடைக்காப்புச் செய்யுளைச் சேர்த்தால் பதிகங்களில் (சம்பந்தர்) 11 வரும். இங்கு 11 பாடல்கள் உள. ஏகம் + தசம் = ஏகாதசம் என்பது வடமொழித் தொடர் ஏகாதசமாலை யாப்புப் பற்றிய விதி, எந்தப் பாட்டியலிலும் இல்லை. இந்நூலில் 7 சீர், 8 சீர், 16 சீர் ஆசிரிய விருத்தங்கள் உள. இவை நல்ல சந்தமலி செந்தமிழ்ப் பாக்கள். ஆகவே, நம்பியாண்டார், பல பாடல்கள் எழுதிப் பயின்றபின் இவற்றைப் பாடினார் எனலாம். இப்பதிகம் அந்தாதியாக அமைந்திருக்கிறது. பதிக அமைப்பும் அந்தாதி அமைப்பும் கலந்த கலப்பே இந்த யாப்பு.

திருவேகாதசமாலையில் 8 சீர் விருத்தப் பாடல்கள் மிகுதி (6 பாக்கள்). 16 சீரில் ஒரு பாடல் மட்டுமே உண்டு. மற்றும் 7 சீரில் இரண்டு பா, 12 சீரில் இரண்டு பா உள்ளன. 11 பாவில் அமைந்த இந்நூலோடு 11ஆம் திருமுறை முடிகிறது. இங்கு 11 என்ற எண், இயைபுபட அமைதல் காணத்தகும். இது 11ஆம் திருமுறை, நிறைவு பெறுவதைக் காட்டுதல் கூடும்.[11]

திருநாவுக்கரசரின் சிறந்த வரலாற்று நிகழ்ச்சிகள் இங்குக் குறிக்கப்படும். திருநாவுக்கரசர் 4900 பதிகம் பாடினார் என்ற செய்தி, அவரின் திருத்தொண்டு வாழ்வு. அவரை வழிபட்டால் நேரும் நன்மை, பதிகச் சிறப்பு ஆகிய செய்திகள் இவண் ஓதப்படுகின்றன. சந்தத்தின் பொருட்டுப் பாடல்கள் எல்லாம் வகையுளியாய் அமைந்துள்ளன.

நம்பியாண்டாரின் 10 நூல்களையும் தொகுத்து நோக்கின், இவரது யாப்பு மரபு பற்றிச் சில தெரியவரும். திருவுலாமாலையும், திருவேகாதச மாலையும் புதிய போக்கின. பிற யாப்புகள் பழம் மரபு தழுவியவை. கட்டளைக் கலித்துறையை விருத்தம் என்றே

குறிக்கிறார். திருப்பண்ணியர் விருத்தம் என்பதும் புதிய தலைப்பே. இவரது நூல்களில் அந்தாதி என்ற தலைப்பில் இரு நூல்களே காணப்பட்டாலும் (அ) திருவிரட்டைமணிமாலை (ஆ) திருப்பண்ணியர் விருத்தம் (இ) திருத்தொண்டர் திருவந்தாதி (ஈ) ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி (உ) திருமும்மணிக்கோவை (ஊ) திருக்கலம்பகம் ஆகிய 6 நூல் களும் அந்தாதி யாப்பின.

இவர் வஞ்சிப்பா தவிர வெண்பா ஆசிரியம். கலிப்பா ஆகிய மூவகைப் பாவையும் ஆள்கிறார். ஆனால் வஞ்சிப்பா வின் இனமாகிய வஞ்சித்துறையைப் பாடியிருக்கிறார்.

பிற்காலத்தில் பாடியவை நயம் மிக்கவை. சந்த இன்பம் விழுமியதாய் வரவேண்டுமிடங்களில் வகையுளியைக் கையாள் கிறார் அந்தாதிகளில் சீரைச் சிதைத்து எழுத்தந்தாதியாகவும் பாடுகிறார். இவர் பாக்களில் பத்திச்சுவை ததும்புகிறது.

இவர் பாடல்கள் இத்தொகை நூலில் மொத்தம் 385 என்று முன்பு குறிக்கப்பட்டது. இவற்றில் 292 கட்டளைக்கலித்துறை இதுவே இவர் பாவகையில் முதலிடம் பெறுகின்றது.

சமய காலத்திற்கு முன்பு, கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றிய போது வெண்பா யாப்புச் சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது. சமயகாலத்திற்குப் பின்பு காப்பிய காலத்தில் விருத்தப்பாவிற்குச் சிறப்பிருந்தது. சமய காலத்தில் கி. பி: 9—11ம் நூற்றாண்டில் கட்டளைக்கலித்துறை சிறப்பிடத்தை பெற்றது. இத்தொகை நூலில் மொத்தம் 593 கட்டளைக் கலித்துறைகள் வருகின்றன. இந்த யாப்பே முதலிடம் பெறுகிறது, சமய காலத்தில் விருத்தப் பாக்களும் பரவத்தொடங்கிவிட்டன.

பிறர் பாடிச்சேர்த்த பாடல்கள்

திருமுருகாற்றுப்படை இறுதி வெண்பாக்கள்:

திருமுருகாற்றுப்படையின் இறுதியில், ''குன்றம் எறிந்தாய்'' என்பது முதல் ''நக்கீரர்தாம் உணர்த்த'' என்பது ஈறாகப் பத்து வெண்பாக்கள் உள. இவை நக்கீரர் பாடியவையா? பிறர் பாடியவையா?

(1) தாரவேல், தீரவேல், கோலப்பா, ஒருகைமுகன் தம்பியே, என்ற சொற்கள் இப்பாடல்களில் உள. இவை சங்க நக்கீரர் சொற்களல்ல, 'தீரம்' 'கோலப்பா' — என்பன பிற்கால வழக்கு, ஆனைமுகன் தம்பி, என்ற செய்தி முருகாற்றுப்படையுள் இல்லை. ஆனைமுகனைப் பற்றிய செய்தியே கி. பி. 6ஆம் நூற்றாண்டின் இறுதியில் வருவது. ஆகவே, இவ்வெண்பாக்களைச் சங்க நக்கீரர் செய்ய வில்லை.

(2) திருமுருகாற்றுப்படைக்கு உரையியற்றிய பழைய உரை காரர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் ஆகியோர் இவ் வெண்பாக்கட்கு உரை செய்யவில்லை. ஆகவே, இவ் வுரையாசிரியர்கள் காலத்தில் இவ்வெண்பாக்கள் இல்லை.

(3) இப்பாடல்களின் எண்ணிக்கை பதிப்புக்கள் தோறும் வேறு படும். சுப்பராயச் செட்டியார் பதிப்பில் இருபாடல்களே உள. ஆறுமுக நாவலர், மயிலை செந்தில்வேலு முதலியார் ஆகியோர் பதிப்புக்களில் ஏழு பாடல்களே உள,

(4) டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரும் ஆறுமுக நாவலரும் பதிப்பித்தபோது ''பழைய ஏடுகளில் இவை இல்லை'' என்றுரைத்தனர். பத்துப் பாட்டுடன் இருந்த திருமுரு காற்றுப்படை ஏடுகளில் இல்லாமல், திருமுருகாற்றுப்படை மட்டும் உள்ள புதிய ஏட்டுப் பிரதிகளிலும் அச்சுப் பிரதி களிலுமே இப்பாடல்கள் இருப்பதாய் டாக்டர் உ. வே. சா. குறிப்பர். ஆகவே, இவை பிற்காலத்தன என்பது தெளிவு.

அவ்வாறாயின் எப்போது இப்பாடல்கள் சேர்க்கப்பெற்றன? நச்சினார்க்கினியர் இப்பாடல்களுக்கு உரை செய்யாமையால் அவர் காலத்துக்கு முன்னில்லை. அஃதாவது கி. பி. 14ஆம்

நூற்றாண்டுக்கு முன்பு இவை இல்லை. ஆனால் ''குன்றம் எறிந்தாய்'' என்ற பாடலை நக்கீரர் பாடியதாய்ப் பரங்கிரிப் புராணமும், திருஆலவாயுடையார் திருவிளையாடல் புராணமும் குறிக்கின்றன. இப்புராணங்களிரண்டும் கி. பி. 16ஆம் நூற்றாண்டின, ஆதலின் இப்புராண ஆசிரியர்கள் காலத்துக்கு முன்பு இப்பாடல்கள் சேர்க்கப்பட்டிருக்கும். எனவே, சுமார் 15ஆம் நூற்றாண்டினிறுதியில் சேர்க்கப்பட்டவை எனக் கொண்டாலும் 500 ஆண்டுகட்கு முன்புதான் இவ்வெண்பாக்கள் திருமுருகாற்றுப்படையின் இறுதியில் சேர்க்கப்பெற்றன எனக் கருதலாம்.

நக்கீர தேவநாயனார் நூலின் இறுதி வெண்பாக்கள்:

நக்கீர தேவநாயனாரின் மூன்று நூல்களின் இறுதியில் ஒவ்வொரு வெண்பாப் பாடல் காணப்படும். இவை நக்கீர தேவநாயனாரே செய்தனவா? வேறு புலவர் செய்தனவா?

திருவெழு கூற்றிருக்கையின் இறுதியில் கீழ்வரும் பாடல் உள்ளது.

''பணிந்தேன்நின் பாதம் பரமேட்டி பால்நீ
றணிந்தால வாயில் அமர்ந்தாய்-தணிந்தென்மேல்
மெய்யரிவு தீரப் பணித்தருளு வேதியனே
ஐயுறவொன் றின்றி அமர்ந்து'' - என்பது பாடல்.

திருவழு கூற்றிருக்கை என்பது சித்திரக் கவி. எண்களை அடுக்கி ஏற்றியிறக்கிப் பாடுவது. இப்பாடல் முடிந்ததும் வெண்பாவிற்கு இடமுண்டோ? வெண்பாப் பொருட்கும் சித்திரக்கவிப் பொருட்கும் இயைபு இல்லை. ''உன்னைப் பணிந்தேன். நீறணிந்து ஆலவாயில் அமர்ந்திருக்கிறாய்! என் மெய்யெரிவு தீரப் பணித்தருளு'' என்பது வெண்பாப்பொருள். சித்திரக்கவியில் ஆலவாய் பற்றிப் பேச்சில்லை. மெய்யெரிவு பற்றிக்கூற எந்த இடமுமில்லை. இறைவனின் புகழைப் பாடுகிறாரே தவிரத் தன் வரலாறே பேசவில்லை. பரஞ்சோதியார் திருவிளையாடலில் நக்கீரர் இறைவனுடன் வாதிட்டு மெய்யெரிவு பெற்றார் என்றும், பொற்றாமரையில் வீழ்ந்தார் என்றும் புலவர்கள் வேண்ட, இறைவன் நக்கீரரைக் கரையேற்றினார் என்றும் வருகிறது. அது போழ்து கோபப்பிரசாதம், பெருந்தேவபாணி, எழுகூற்றிக்கை பாடினார் என்றும் பரஞ்சோதியார் கூறுகிறார். இப்பொழுதுள்ள தொகுப்பில் திருவெழுகூற்றிக்கை முன்னும், பெருந்தேவபாணி அடுத்தும், அதன்பின் கோபப் பிரசாதமும் உள.

பெருந்தேவ பாணியில்தான் கூடல் ஆலவாய்க் குழகன் என்றும் வருகிறது. திருவெழுகூற்றிருக்கையில் இப்பதிப்பெயர் இல்லை. ஆகவே, பாடிய பதி, மெய்யெரிவிற்குரிய காரணம் ஆகிய செய்திகளைப் பரஞ்சோதியார் பாடலையொட்டி யாரோ சேர்க்க விரும்பி கி. பி. 16ஆம் நூற்றாண்டின் பின் இப்பாடலைச் சேர்த்திருக்கின்றனர். ஆகவே, இவ்வெண்பாவை நக்கீர தேவ நாயனார் பாடவில்லை.

பெருந்தேவபாணியின் இறுதியில் கீழ்வரும் பாடல் உள்ளது:

''விரைதேன்மற் றெம்பெருமான் வேண்டியது வேண்டா
திகழ்ந்தேன் பிழைத்தேன் அடியேன்-விரைந்ததென்மேல்
சீற்றத்தைத் தீர்த்தருளு தேவாதி தேவனே
ஆற்றவுநீ செய்யும் அருள்.''

பெருந்தேவபாணி, இறைவன் புகழையும் ஆற்றலையும் பாடுவது. இதில் ''கூடல் ஆலவாய்க் குழகன் ஆவதறியா தருந்தமிழ் பழித்தனன்'' என்று ஒரு அடி வருகிறது. இது தன் வரலாறு சுட்டுவது போல் உள்ளது. ஆயின் இதுவும் பொதுச் செய்தியே.

''பழிச்சினன்'' என்ற பாடம் 'பழித்தனன்' என்று வருவதே ''மேற்குறித்த புனைந்துரைக் கதைக்கு இடஞ்செய்து தந்தனரெனக் கருதவேண்டியுளது'' என்று வெள்ளைவாரணனார் குறிப்பதைக் கருதுதல் வேண்டும். பின்னெழுந்த புராணக் கதைகளை நினைவில் கொண்டு 'இகழ்ந்தேன், பிழைத்தேன், சீற்றத்தைத் தீர்த்தருளு' என்ற புதியச் செய்திகளை - பெருந்தேவ பாணியில் இல்லாத செய்திகளை வெண்பாவில் சேர்த்திருக்கின்றனர்.

மு. அருணாசலம் அவர்களும் இவ்வெண்பாக்கள் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டவை எனக் கருதுகிறார்.

திருக்கண்ணப்பதேவர் திருமறத்தின் இறுதியில் கீழ்க்காணும் வெண்பா உள்ளது.

''தத்தையாம் தாய்தந்தை நாகனாம்; தன்பிறப்புப்
பொத்தப்பி நாட்டுடுப்பூர் வேடுவனாம் — தித்திக்கும்
திண்ணப்ப னாஞ்சிறுபேர் செய்தவத்தாற் கானத்திக்
கண்ணப்பனாய் நின்றான் காண்.''

''சிவகதி பெற்றனன் திருக்கண் ணப்பனே''

என நக்கீர தேவநாயனார் ''திருமறத்தில் கூறிய பிறகு, இச்செய்தி களைக் கூற இடமில்லையே? கல்லாட தேவநாயனாரும் தாம் பாடிய மறப் பாடலில் நாடு, ஊர், பெற்றோர் இயற்பெயர் பற்றிக் கூறவில்லை. நக்கீர தேவநாயனாரும் கூறவில்லை இச்செய்திகளை முதன்முதலில் படைத்து மொழிந்தது சேக்கி ழாரே! சேக்கிழார் கூறிய செய்திகளை நக்கீர தேவநாயனார் கூறாததால் இவற்றை விட்டுவிட மனமின்றி, பிற்காலத்தே யாரோ சேர்த்தனர். நக்கீரதேவநாயனார் விரும்பியிருந்தால், பெயர் முதலான செய்திகளைத் திருமறத்தில் கூறியிருப்பர். தனிப்பாட்டில் கூறத் தேவையில்லை. இது சேக்கிழார் கூறிய செய்தி என்பதால் மற்றுமோர் உண்மையும் தெரியவரும். நம்பியாண்டார் நம்பியே இவ்வெண்பாவை இத்தொகுப்பில் சேர்த்திருக்க இயலாது. சேக்கிழார், நம்பிக்குப் பின் வந்தவர். ஆகவே இத்தொகுப்பில் காலந்தோறும் சில பாடல்கள் சேர்க்கப் பட்டன. ஆகவே. இம்மூன்று வெண்பாக்களும் நக்கீர தேவ நாயனார் செய்தவையில்லை.

சேரமான் பெருமாள் நாயனாரின் பொன்வண்ணத்தந்ததாதி யின் இறுதியில் ''அன்றுவெள் ளானையின்'' எனத் தொடங்கும் ஒரு கட்டளைக் கலித்துறைப்பாடல் காணப்படுகிறது.

இங்கு, இருஅடிகளில் சேரர் வரலாறும் உலாப்பாடி அரங் கேற்றிய இடம் பற்றியும் கூறிப்பொன்வண்ணத் திருவந்தாதி ''மன்றி டைஓதுபொன் வண்ணத்தந்தாதி வழக்கிதுவே'' என முடிகிறது. ஆகவே இந்நூல் தில்லை மன்றில் பாடப்பெற்றது என்ற குறிப்பைத் தருவது இதன் முக்கிய நோக்கம். திருஉலாப் பாடிய செய்தி இங்கு வரவேண்டுவதில்லை; ஆயினும் வருகிறது. ஆகவே, இப்பாடல் சேரர் செய்யவில்லை. வையாபுரிப்பிள்ளை யும், இது பிற்காலச் சான்றோர் பாடியது என்று குறிக்கிறார். சேக்கிழாரின் பெரிய புராணத்தைப் படித்த யாரோ அதிற்கண்ட செய்திகள் இவண் இல்லை என்பதால், சேரர் பற்றியும் இந்நூல் எழுந்த பதி பற்றியும், அடுத்துக் கோக்கப்பெற்ற உலா பற்றி யும் ஒரு பாடல் கட்டளைக் கவியில் எழுதிச் சேர்ந்திருக்கிறார். ஆகவே, இப்பாடல் பெரியபுராணம் தோன்றிய பின்னர் அஃதா வது கி. பி. 12ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு சேர்க்கப்பெற்றிருத் தல் வேண்டும்.

சேரர் பாடிய திருக்கயிலாய ஞான உலாவின் இறுதியில் ''பெண்ணீர்மை காமின்'' என்று தொடங்கும் வெண்பா ஒன்று உள்ளது. உலா நூலில் வரும் பெண்டிர்க்கு எச்சரிக்கை விடுவ தாக இப்பாடல் உள்ளது. யாப்பு வகையால் ஞான உலா கலி வெண்பாவாக இருப்பவும், இப்பாடல் வெண்பாவாக உள்ளது. இதிற் சிறப்பேதும் இல்லை. இது சேரர் செய்ததில்லை.

பரண தேவநாயனாரின் சிவபெருமான் திருவந்தாதியின் இறுதியில் ''ஒன்றைப் பரணர் உரைத்தவந்தாதிபல'' என்று தொடங்கும் ஒரு வெண்பா உள்ளது. இது அந்தாதி நூல். 100ஆவது பாட்டுடன் அந்நூல் மண்டலித்து முடிந்துவிடுகிறது. பலன் சொல்லும் வகையில் வேறு யாரோ இவ்வெண்பாவைப் பாடியுள்ளார்.

நம்பியாண்டார் நம்பியின் ஆளுடைய பிள்ளையார் திருவந் தாதியின் இறுதியில் ''பாரகலத் துன்பங் கடந்தமர ராற்பணியும்'' என்ற வெண்பா காணப்படுகிறது. இதில் தோணிபுரத்தலைவ ராம் திருஞான சம்பந்தரின் புகழ் கேட்காத செவியும் நாளும் வீண் என்ற பொருள்பட வருகிறது. இந்நூலில் 100ஆவது கட்ட ளைக் கலிப் பாட்டுடன் பொருள் முற்றிவிடுகிறது. இறுதிப் பாடலோ வெண்பா. இந்நூற் பொருளைச் சொல்லிச் சுவைத்த யாரோ எழுதிச் சேர்த்த பாடல் இது.

நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியின் முன்னர் ''பொன்னி வடகரை'' எனத் தொடங்கும் ஒரு கட் டளைக் கலித்துறைப் பாடல் வருகிறது.

நம்பியாண்டார் நம்பி, 'திருத்தொண்டர் தொகையில்' இருந்து தன் நூலை எப்படி விரித்திருக்கிறார் என்ற விவரத்தை யும் இவர் மறையவர் குலத்தார் என்ற செய்தியையும் நாரையூர் விநாயகரின் அடியார் என்ற செய்தியையும் இப்பாடல் தெரிவிக் கிறது

''சொன்ன மறைகுல நம்பிபொற் பாதத் துணைது ணையே'' என முடிகிறது. நம்பியின் திருவடிகளே துணை என்பதால் நம்பி யாண்டார் எங்ஙனம் செய்திருக்க முடியும்? ஆதலின் இதனை வேறு யாரோ செய்து சேர்த்துள்ளனர் என்பதாம்.

இந்த ஒரு பாடலே, நூலின் முகப்பில் அச்சில் இன்று உள்ளது. மற்றையவை இறுதியில் உள்ளன. இப்பாடலும் சில ஏடுகளில் இறுதியில் காணப்படுவதாக அறிஞர் குறிப்பர்.

சில பதிப்புகளில் பட்டினத்தாரின் 'திருக்கழுமல மும்மணிக் கோவையில்' பாடல் 13 முதல் 30 வரை 18 பாடல்கள் அச்சில் இருப்பதாகவும் அவை பட்டினத்தார் செய்தவை அல்ல எனவும் முன்னர் அங்கு விரித்துரைக்கப்பெற்றது.

ஆகவே, இத்தொகை நூலில் 18 + 18 = 36 பாடல்கள் பிறர் பாடிச் சேர்த்தவை என்று தெரிகிறோம். நக்கீரர் தொடர்பான நூலில் மட்டும் 13 பாடல்கள் பிறர் சேர்த்தவை. மற்றைய புலவர்களின் நூல்களில் 5 பாடல்கள் சேர்க்கப்பெற்றன.

புதிய செய்திகள் கிடைக்கும்போது, அச்செய்திகள் விடுதல் ஆகக்கூடாது என்ற கருத்தில் பின்வந்தசான்றோர் அவற்றையும் பாடிச் சேர்க்கும் மரபு, பதிற்றுப்பத்தின் பதிகத்தில் காணலாம். இந்தப்போக்கை இத்தொகைநூலின் இறுதியிலும் காண்கிறோம். ஆயினும் இவை எக்காலத்தில் எது பற்றிச் சேர்க்கப்பெற்றன. என்ற வரலாற்றுணர்வோடு காணுதல் அறிஞர் கடன்.

பதினொராந் திருமுறையின் இலக்கிய வகைகளும் யாப்பும் - அடிக் குறிப்புக்கள்

சங்க நக்கீரர்

1. அன்பு நெறியே தமிழர் நெறி, பக். 289-90; 302,
2. அன்பு நெறியே தமிழர் நெறி. பக். 290.
3. தொல். பொருள்- புறத்திணை சூ. 30
4. தொல். பொருள், புறத்தணை. சூ, 36.
   நச்சினார்க்கினியர் உரை. ப. 321.
5. தொல். பொருள் புறத்திணை, சூ. 21
6. அன்பு நெறியே தமிழர் நெறி. ப. 79.
7. தொல். பொருள். புறத்திணை. சூ. 36. கணேச ஐயர் பதிப்பு.
8. பத்துப்பாட்டு. உ. வே. சா. பதிப்பு. உரை. ப. 79.
9. பன்னிரு பாட்டியல். சூ 202. கழகம்.
10. மலைபடு கடாம். அடி. 348.

காரைக்காலம்மையார்

1. பன்னிருபாட்டியல். சூத்திரம். 197.
2. ஷை ஷை 151.
3. வச்சனந்திமாலை. சூத்திரம். 36.
4. இலக்கியத்தொகை. யாப்பு. பாட்டியல். ப 26.
5. வச்சனந்திமாலை. சூத்திரம், 9.
6. பன்னிருபாட்டியல். சூத்திரம். 212.
7. காரைக்காலம்மையார் புராணம். பா. 94.
   உரை. சி. கே. சுப்பிரமணிய முதலியார். ப. 934.

நக்கீரதேவநாயனார்

1. பேராசிரியர் உரை. தொல். சூ. 645 ப. 476.
2. யாப்பருங்கல விருத்தியுரை. ஒழிபியல். பக். 410-411.
3. பிற்சேர்க்கை ஷை நக்கீரர் பாடல்.
4. கலித்தொகை. பா. 1 கடவுள் வாழ்த்து.
5. பஞ்சமரபு. ப. 109
6. பன்னிருதிருமுறை வரலாறு. ப. 630

7. தொல். புறத்திணை. சூ. 19.
8. பன்னிருதிருமுறை வரலாறு. ப. 687.
9. பதினொராந்திருமுறை - ஸ்ரீ காசிமடத்துப் பதிப்பு. 1972. முன்னுரை ப. 20.
10. வெண்பாப்பாட்டியல் சூ. 13.
11. பன்னிருபாட்டியல். சூ. 156.
12. நவநீதப்பாட்டியல். சூ, செய்யுள், 11, 12.
13. முத்துவீரியம். யாப்பு சூ. 84,
14. தொல். செய்யுள் சூ. 147
15. கலித்தொகை. பா. 6, 12, 18. 24, 37, 51. 65, 111.

சேரமான் பெருமான் நாயனார்

1. சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வகையும். ப. 118
2. பதினொராந்திருமுறை. கழகம். 1971. ப. 73
3. சைவ இலக்கிய வரலாறு ப. 272.
4. திருக்கைலாய ஞான உலா. கழகம். 1925. ப. 2.
5. தொல் புறத்திணை. சூ. 25.
6. தொல். புறத்திணை. சூ 25. இளம்பூரணர். கழகம். 1953,
7. தொல். புறத்திணை சூ. 585. நச்சர் கணேசஐயர் பதிப்பு. ப. 295
8. வெண்பாப்பாட்டியல். சூ. 26, 27, கழகம். 1969
9. பன்னிருபாட்டியல். சூ 131, 132. கழகம். 1970.
10. ஷை சூ 137. ஷை ஷை
11. இலக்கணத் தொகை-யாப்பு, பாரி நிலையம். 1978. ப, 400.
12. உலா இலக்கியம். ப. 32.
13. பதினொராந்திருமுறை. கழகம். குறிப்புரை. 1972. ப. 366.
14. பன்னிருதிருமுறை வரலாறு. ப. 783.

பரணர்

1. பரணர் - வே. வேங்கடராசுலு ரெட்டியார். ப. 64.

பட்டினத்தார்

1. பன்னிருபாட்டியல். சூ. 153.
2. ஷை சூ. 154.
3. வெண்பாப்பாட்டியல். சூ. 16.

4. இலக்கண விளக்கம். 821
5. பதினொராந்திருமுறை. மடத்துப்பதிப்பு. 1972. ப. 238.
6. தமிழ் இலக்கிய வரலாறு. 10 ஆம் நூற்றாண்டு. 1972. ப. 388.
7. பட்டினத்தார் வரலாறும் நூலாராய்ச்சியும். ப. 49, 59.
8. சைவ இலக்கிய வரலாறு. ப. 382.
9. தமிழ்ப்பெருமக்கள். பக். 197-98.
10. பன்னிருதிருமுறை வரலாறு. தொகுதி. 2. ப. 744.
11. தமிழ் இலக்கிய வரலாறு. 10 ஆம் நூற்றாண்டு. ப 388.
12. ஷை ஷை ப. 390.
13. திருத்தலம்பயணம். ப. 89.
14. ஷை ப. 89.
15. இலக்கணத்தொகை. யாப்பு. ப. 48.
16. சிற்றிலக்கியங்கள் தோற்றமும் வகையும். பின் இணைப்பு. 1 எண். 36

நம்பியாண்டார் நம்பி

1. பன்னிருதிருமுறை வரலாறு. ப. 769.
2. பதினொராந்திருமுறை. கழகம் ப. 305.
3. பன்னிருபாட்டியல். சூ. 212. உரை. ப. 140.
4. சிற்றிலக்கியச் செல்வங்கள். பக். 198-201.
5. வெண்பாப்பாட்டியல். சூ. 10.
6. ஷை சூ. 11.
7. ஷை சூ. 12.
8. பன்னிருபாட்டியல். சூ. 129.
9. ஷை சூ. 130.
10. தமிழ் இலக்கிய வரலாறு. 11 ஆம் நூற்றாண்டு. ப. 327.
11. தமிழ் இலக்கிய வரலாறு, 10 ஆம் நூற்றாண்டு, ப. 291.

பதினொராந் திருமுறை ஆசிரியர்களின் இலக்கியப்போக்கும் புலமைக்கூறுகளும்

நக்கீரதேவநாயனாரின் இலக்கியப்போக்கும் புலமைக்கூறுகளும்

நக்கீர தேவநாயனார், தனக்குமுன் வாழ்ந்த புலவர்களின் இலக்கியச்செல்வங்களைக் கற்றிருக்கிறார். தன்காலத்தில் இருந்த கவிஞர்களின் செந்தமிழ்ப் பாக்களின் நலந்தெரிந்திருக்கிறார். பின்போந்த சொல்லேர் உழவர்களின் கற்பனைக்குத் தாம் ஊற்றாக இருந்திருக்கிறார். ஆகவே, தமிழ் இலக்கிய மரபுகளில் இடையீடு இல்லை, தொடர்ந்து பெருகும் வழியாக்கமும் மொழியாக்கமும் புலப்படுகின்றன. புத்தம்புது நெறிகளும் காணப்படுகின்றன.

"இலக்கியம் என்பது உணர்ச்சி, கற்பனை, கலைகடிவம் இவற்றைத் துறந்து விளங்குதலில்லை." இது குறித்து, வின்செசுட்டர் (Winchester) கூறுவது[1] கீரர் நூல்கட்கு நன்கு பொருந்தும்.

சங்கநூற் பரிச்சி

"சாந்தில் தொடுத்த தீந்தேன் போல" என்பது நற்றிணை.[2] மேற்கூறிய கருத்தை நக்கீர தேவநாயனார்

"சந்தனப்பூம் பைந்தழையைச் செந்தேனில் தோய்த்து"

என்பர் (திருஈங்கோய். 39)

"உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை
இலவ மேறிய கலை மஞ்ஞை
எரிபுகு மகளி ரேய்க்கும்
அரில்படு கள்ளியங் காடிறந் தோரே!"

என்பது ஐங்குறுநூறு.[3] இதே கற்பனையைக் 'கீரர்' அப்படியே பாடுவர்.

"முள்ளார்ந்த வெள்ளிலவம் ஏறி வெறியாது
கள்ளார்ந்த பூப்படியுங் கார்மயில்தான் - ஒள்ளார்
எரிநடுவுட் பெண்கொடியார் ஏய்க்கும்ஈங் கோயே
புரிநெடுநூல் மார்பன் பொருப்பு." (திருஈங்கோய் 66)

கலித்தொகையில் கண்ட கற்பனையைச் சிறிது மாற்றிப் பாடுகிறார், 'கீரர்'.

:'அன்புகொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவும் உரைத்தனரே.'
என்பது கலிப்பாட்டு.[3]

கீரர், தம் பாட்டில் புறவு என்பதை மாற்றிக் களிறு என்று அமைத்துப் புனைகிறார்,

''கலவிக் களிறசைந்த காற்றெங்கும் காணா
திலைகைக்கொண் டேந்திக்கால் வீச-உலவிச் சென்
றொன்பிடிகாற் றேற்றுக்கும்'' (திருஈங்கோய் 25)

என்பது ஒத்த கற்பனையன்றோ?

''தீயினுள் தெறல்நீ, பூவினுள் நாற்றம் நீ
கல்லினுள் மணியும் நீ சொல்லினுள் வாய்மைநீ

என்பது பரிபாடல்[5].

''வேதமும் நீயே வேள்வியும் நீயே
நீதியும் நீயேநிலமன் நீயே!'' என்பது - 'கீரர் வாக்கு

(பெருந்தேவபாணி 50-62)

இங்குப் பரிபாடல் நடை படியப் பார்க்கலாம்.

''..................................... நயமில் ஒருகை
இருகை மால்!
முக்கை முனிவ நாற்கை அண்ணல்!'' என்றவாறு பரிபாடல் திருமாலை ஏத்தும்,[6]

திருக்குறள் பயிற்சி :

1. ''மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்திரா
என்னல்ல தில்லை துணை'' என்பது குறள்.[7]

இக்கருத்தைக் கீரர் ஆள்கிறார்.

''ஞாலத் துயிரெல்லாங் கண்துஞ்சும் நள்ளிருள்கூர்
காலத்தும் துஞ்சாதுன் கண்.'' (கயிலைபாதி.64)

2. ''தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின்''
என்பது குறள்.[8] இக்கருத்தும், 'கீரர்' பாட்டில் வருகிறது.
''கூடி யிருந்து பிறர் செய்யும் குற்றங்கள்
நாடித்தம் குற்றங்கள் நாடாதே'' (கயிலைபாதி. 91)

3\. "மனக்கவலை மாற்றல் அரிது" என்பது குறள்.[9] இதனைக் 'கீரர்' அங்ஙனமே செப்புவர்.

"மனக்கவலை தீர்ப்பான் மலை" (திருஈங்கோய். 27)

ஆகவே, நற்றிணை, ஐங்குறுநூறு, கலி, பரிபாடல் ஆகிய சங்க இலக்கியங்களிலும், திருக்குறளிலும் நக்கீர தேவநாயனார்க் கிருந்த பயிற்சி அறியப்படும்.

தங்காலத்து ஆசிரியர்களின் பாடற்பொருட்களையும் 'கீரர்' ஆண்டிருக்கிறார்.

நக்கீரதேவநாயனார் வாழ்ந்த காலத்தில் தோன்றியது முத்தொள்ளாயிரம்.

"துடியடித் தோற்செவித் தூங்குகைந் நால்வாய்ப்
பிடியேயா னின்னை யிரப்பல்-கடிகமழ்தார்ச்
சாலேக வண்ணனொடு சேரி புகுதலுமெஞ்
சாலேகஞ் சார நட" என்பது முத்தொள்ளாயிரம்.[10]

இந்தக் கற்பனையை 'கீரர்' பாடலிலும் இதே வகையில் காணலாம். இங்கு, பிடிக்குப் பதிலாக ஏறு வருகிறது.

"காரேறு பூஞ்சோலைக் காளத்தி ஆள்வார்தம்
பேரரேறே இத்தெருவே போது" (கயிலைபாதி.78)என்பர்

இங்கு மற்றுமோர் செய்தியை நினைத்தல் வேண்டும். "சமயத்துறையில் வழிபாட்டு உணர்ச்சிக்குப் பழைய காதல் கற்பனைகள் முழுதும் பயன்பட்டு, இலக்கியம் புதிய வடிவம் பெற்று வளரலாயிற்று" என்று டாக்டர் மு. வரதராசனார் மொழி-வதையும் மனங்கொள்ளல் வேண்டும்.[11] இந்நெறியை நக்கீர தேவநாயனார் தொடங்கினார் எனலாம்.

"அள்ளற் பழனத் தரக்காம்பல் வாயவிழ
வெள்ளந்தீப் பட்ட தெனவெரீஇ-புள்ளினந்தங்
கைச்சிறகாற் பார்ப்பொடுக்குங் கவ்வை
நச்சிலைவேற் கோக்கோதை நாடு"

என்பது முத்தொள்ளாயிரம்.[12]

இதே கற்பனையை வைத்துப் பொருள் மாற்றம் செய்து 'கீரர்' திருவீங்கோய்மலை எழுபதில் இருபாடல்கள் பாடுவர்.

(பா. 15 : 55) ஆகவே, நமது காலத்தில் வழக்கில் இருந்த நூற் செய்திகளை நக்கீரதேவநாயனார் நன்கு தெரிந்திருந்தார் என்பதாம்.

நக்கீரதேவநாயனாரின் பாடற்பொருளையும் சொல்லையும், பின்வந்த புலவர்கள் எடுத்திருக்கிறார்கள்.

சுந்தரர் :

'மின்செய்வார் செஞ்சடை''-என்பது கீரர் வாக்கு.
(கயிலைபாதி-5)

''மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை''-என்பது சுந்தரர் பாட்டு.[13]

ஆண்டாள் :

(சிவபிரானின்) ''மையார் மணிமிடறு போற்கருகி'' கார்காலம் வந்தது என்பார் 'கீரர்' (காரெட்டு-2)

'ஊழிமுதல்வ னுருவம்போல் மெய்கறுத்து''- என்பார் ஆண்டாள்.[14] ....' அண்ணல் சடைபோல்

விரவி எழுந்தெங்கும் மின்னி' (காரெட்டு – 1) என்பார் கீரர்.

'' .... பற்பநாபன் கையில் ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து'' என்பார் ஆண்டாள்,[15]

மணிவாசகர் :

கீரரின் சொல்லையும் பொருளையும், திருவாசகத்தில் காணலாம்: கீழ்வரும் அடிகள் அவற்றை நினைவுபடுத்தும்,

அ) 'கருத்துக்குச் சேயையாய்'–கயிலைபாதி.15.

ஆ) நிலையிற் பிறவிநெடுஞ்சுழியிற் பட்டு ௸ 16.

இ) பரிசறியேன் பற்றிலேன் கற்றிலேன் ௸ 49.

ஈ) என்மனத்தில் எப்போது
வைத்திடுநீ வேண்டேன் மற்று — ௸ 99.

கம்பர்:

''உண்டிருந்த தேனை அறுபதங்கள் ஊடிப்போய்ப்
பண்டிருந்த யாழ்முரலப் பைம்பொழில்வாய்-கண்டிருந்த
மாமயில்கள் ஆடி மருங்குவரும் ஈங்கோயே
பூமயிலி தாதை பொருப்பு'' – என்பது கீரர் பாட்டு
(திருவீங்கோய். 10)

இக்கற்பனைப் போக்கை ஒட்டிக் கம்பர் ''தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்க'' என்று பாடுகிறார்.[16]

''காந்தளங் கைத்தலங்கள் களிமஞ்ஞை
கூந்தல் விரித்துடனே கூத்தாட்ச்-சாய்ந்திரங்கி
ஏர்கொன்றை பொன்கொடுக்கும் ஈங்கோயே
செஞ்சடைமேல்

கார்கொன்றை ஏன்றான் கடறு'' (திருவீங்கோய். 31)

என்பது கீரர் பாடல்.

இதனை அப்படியே கம்பர் :

''நன்னெடும் காந்தள் போதின் நறைவிரி கடுக்கை மென்பூந்
துன்னிய கோபத் தோடும் தோன்றிய தோற்றம் தும்பி
இன்னிசை முரல்வ நோக்கி இருநிலை மலர்க்கை ஏந்திப்
பொன்னொடும் காசை ஈட்டிக் கொடுப்பதே போன்ற
தன்றே''

என்றவாறு புனைகின்றார்.[17]

குமரகுருபரர் :

''.. ....முத்தம்
குறவர் சிறார்குடங்கைக் கொண்டு-நறவம்
இளவெயில்தீ யட்டுண்ணும் ஈங்கோயே''

என்பது 'கீரர்' செய்யுள். (திருஈங்கோய். 59)

இதனையொத்த கற்பனையை ''சீக்குஞ் சுடர்தூங் கழல் மணியின்'' என்று தொடங்கும் குமரகுருபரர் பாடலில் கண்டு களிக்கலாம்.[18]

உவமைகள் :

''இருவேறு தனிப்பட்ட பொருள்களில் சில ஒற்றுமைக் கூறுகளைக்கண்டு உவமைப்படுத்தும் தனித்திறன், கவிஞர்கட்கு மட்டுமே கைவந்த கலையாகும்.'' என்பார் லையான்.[16] (Lyon).

இத்தகு எளிய உவமைகளைக் கீரர் இயம்புவர். நாட்டுப்புற மக்கள் கூறும் பழமொழிகளைப் போன்ற உவமைகள் இவர் நூலில் உண்டு.

உலகில் மிகமேலான உயர்ந்த பொருள்களைப் பெற்றாலும் அவை ''சீசீ'' என வெறுத்து ஒதுக்கத்தகும், இறையன் பு

இல்லாதபோது அப்பொருள்கள் சிறவா; சிவன் அன்பே விரும்பத்தகும். இங்கு உயர்ந்த மேலான பொருட்களுக்கு நெற்றியில் இட்ட திலகத்தை உவமைப் படுத்துகின்றார்.

''உலகம் அனைத்தினுக்கும் ஒண்ணுதல்மேல் இட்ட
திலகம் எனப்பெறினுஞ்சீசீ'' (கயிலைபாதி-9)

என்பது பாடல்.

தன்குற்றம் நாடாமல் பிறர்குற்றம் பேசிக் கயிலைநாதன் புகழைப் பேசாமல் வாடியிருப்பது. ஆரமுதம் கிடைத்தும் அதனை நுகராமல் கீரை உணவை அயில்வதொத்தது என்பர்.

''வடகயிலை யேத்தாதே வாழ்ந்திடுவான் வேண்டில்
அடகயில ஆரமுதை விட்டு'' — என்பர். (கயிலைபாதி-91)

மேற்கண்ட உவமைகள் பழமொழிபோல்வன.

மேகம் சிவபெருமானின் ''மையார் மணிமிடறுபோல் கருகி'' (காரெட்டு-2) என்றும் மின்னல் செழுந்தழல் வண்ணம் செஞ்சடை போல் மின்னி (ஷ-7) என்றும் கூறும் உவமைகளை நோக்குக.

சங்க காலத்தில் இயற்கைப் பொருள்கள் மக்கள் உறுப்புகட்கு உவமையாயின. சமய காலத்தில் இறைவனின் உறுப்புக்கள், இயற்கைக்கு உவமையாகின்றன. இம்மாற்ற நிலையைக் காணுதல் வேண்டும்.

உருவக அணி :

உருவகவணியில் சிறந்த பாடலொன்று காணலாம்.

''வினையும் வினையரவின் வெய்ய விடத்தைக்
களையினோ ரானத்தி ஆன்வார் - வளனவில்
திருந்தியசீர் ஈசன் திருநாமம் என்னும்
மருந்தினை நீர் வாயிலே வைத்து - (கயிலை 31)

சிலேடையணி :

(அ) அளைந்து வடுப்படுப்பான் வேண்டி-இளந்தென்றல்
எல்லிப் புகநுழையும் ஈங்கோயே! (திருயீங்கோய். 67)

என்பது பாடல். இரவுக் காலத்தே இளந்தென்றல் வளர்ந்த இளைய மாமரக் கொம்பின் தாதை அளைந்து மாவடுவை உண்டாக்கும் ஈங்கோய்மலை என்று கூறும் இயற்கைப் புனைவில் மற்றுமோர் அகப்பொருட் குறிப்பும் உண்டு.

(ஆ) தலைவி பிச்சைகேட்டுவரும் தலைவனிடம் (இறைவனிடம்) "அருள் தக்கீர்யாது ஊர்" என்றாள். அவர் "மாமறையம் என்றார்". (திருவலம். 8) இங்கு "மாமறையம்" என்பது சிலேடை. மாமறைகளாகிய வேதம் என்றும், மாமறைக் காடாகிய வேதாரணியம் என்றும் பொருள்படும்.

நக்கீரதேவநாயனார் பாடல்களில் சங்கநூற் கருத்துக்களும் திருக்குறளும் நல்லிடம் பெறுகின்றன. இவரிடமிருந்து சுந்தரர், ஆண்டாள், மணிவாசகர், கம்பர் ஆகியோர் கற்பனையையும் சொற்களையும் பெற்றுள்ளனர்.

சிலேடை அணியைச் சிறப்புற இப்புலவர் கையாளுகிறார். புராண உவமைகளை மொழிகிறார். சில பழமொழிகளையும் கூறுகிறார். இவை இவரது சிறப்புக் கூறுகளாம்.

நக்கீரதேவநாயனாரின் இயற்கைப் புனைவுகள் :

நக்கீரதேவநாயனார், இயற்கைகளைப் புனைவதில் சிறந்து விளங்குகிறார். பண்டைய இலக்கியச் சாயல்கள் இப்புனைவுகளில் உள. திருவீங்கோய்மலை எழுபதிலும் காரெட்டிலும் இயற்கைப் புனைவுகள் பெருவரவின.

குறவர்களின் வாழ்க்கை முறையைச் சிறப்புறப் பேசுகிறார். பயிர் மேயவரும் விலங்கைக் கவண் கொண்டு விலக்கல், யானை, மான், பன்றி இவற்றை வேட்டையாடல், யானை பிடித்தல் ஆகியவற்றைப் புனைகிறார்.

குறத்தியர் தினைப் புனங்காவல் செய்தல், கிளிகடிதல், யானைக்கொம்பால் தினைஇடித்தல், வேங்கைமர நிழலில் விளையாடல், அம்மானை ஆடல், தினைமாவும் தேனும் கலந்து சந்தன இலையில் உண்ணல், பரண்மீதிருந்து பாடுதல் என்ற செய்திகளைக் கூறுகிறார்.

யானை, குரங்குகளின் செயலை மிகுதியாகப் பேசுவர். மலைவளம், மலையில் வளரும் செடி, கொடி, மரம், மலர் பற்றியும் சிறப்புறப் புனைகிறார். ஆகவே குறிஞ்சிக்குக் கபிலன் என்பதுபோல, இவரை 'குறிஞ்சிக் கீரர்' எனலாம்.

மக்கள் குணங்களை விலங்கு, பறவைகளிடம் ஏற்றிக் கூறும் இயல்பு, இவர்பால் விளங்கித் தோன்றுவதை இவர்தம் புனைவுகளில் காணலாம். "வெள்ளியில் நாணயம்போல் இயற்கைப்

புனைவில்மனிதப் பிணைவு உயிரோடிக் கிடக்கின்றது'' என்பர் டாக்டர் வ சுப. மாணிக்கனார்,[1] இக்கூற்று, 'கீரர்' பாடல்களுக்குப் பொருந்தும்.

பாயவரும் சிங்கத்தைப் பார்த்த ஆண்யானை, தான் தப்ப நினையாமல், தன் பிடியையும் காத்துச் சிங்கத்தின்பால் உள்ள சினத்தைக் காட்டத் துதிக்கையை விண்நோக்கி நீட்டிப் பிளிறும். (திருஈங்கோய். 4)

கொடுவில் கொலைவேடர் யானையைப் பிடிக்கக் குழி தோண்டிச் சருகு முதலியவற்றால் பள்ளங்களை மூடி இயல்பான இடம்போலச் செய்து வைத்திருப்பர். இக்குழிகளில் வீழ்ந்து விடாமலிருக்க யானை தன் கையில் தண்டூன்றி அவ்விடங்களை ஓர்ந்து பார்க்கும். (திருஈங்கோய். 34) இங்கு மக்கள் இயல்புகளை ஏற்றிப் பேசுவதைப் பார்க்கிறோம்.

பன்றி தன் உணவிற்காக நிலத்தைக் கிண்டிற்று. அப்போது பல்வகைப் பவள மணிகள் வெளிப்பட்டன. அஃது எப்படி யிருந்தது? காடே கதுமெனத் தீப்பற்றியதுபோல் காட்சி தந்தது ஆகவே, யானைக் கூட்டம் உண்மையில் தீப்பிடித்ததாகக் கருதி ஓடின. இவ்வறியாமையை எண்ணி, முல்லைக்கொடியில் பூத்த முல்லை மலர்கள் நகைத்தன. (திருஈங்கோய். 15)

இலவமரம் எங்கும் பூத்துக் குலுங்கிற்று. இது கொள்ளிக் கட்டைபோலக் காட்சி தந்தது. இதைக்கண்ட ஆண்குரங்கு, மரம் தீப்பற்றியதாய்க் கருதி, மூங்கில் தோகையைக் கொண்டு வீசி அணைக்க முயன்றது. (ஷி பா. 17) இப்பாடலின் மூலக் கருத்தை வைத்துக்கொண்டு சிறுவிகற்பத்தோடு வேறு இரு பாடல்கள் இந்நூலில் உண்டு. (ஷி பா. 55, 70).

(நடனமாதின்) கைத்தலம்போல் காந்தள் கை காட்ட' (முத்திரைகள்) மயில் நடனமிட, அழகிய கொன்றைமலர் இக் கலைக் காட்சியைப் பாராட்டிப் பரிசளிப்பதுபோல் பொன்னாகச் சொரியும். (ஷி. 31)

காரெட்டிலும் இயற்கை வருணனை உண்டு. உலகம் நடக் கவும், அறம்பொருள் இன்பம் நிகழவும் மழை வேண்டும். மழை வரவு, இறையருளைக் காட்டும். கார் வருகையைக் கூறுங்கால்- விண்ணில் வரும் இருள், காரின் முழக்கம் மின்னலின் தன்மை, வில்லிடல், காரின் வருகையில் ஏற்படும் விளைவு என்ற இவ்வைந்தையும் புனைகிறார். இவையாவும் இறைவன் உரு வாகவும், கருவியாகவும், செயலாகவுமே காட்சியளிக்கின்றன.

கார், அண்ணலின் சடைபோல் எழுந்து, விரவி மின்னி கைவில்போல் முழங்கும். மையார் மணிமிடறுபோல் கறுத்து, அண்ணல் கைச்சிலையைக் காட்டித் திருக்கழல்போல் ஒலிக்கும். இறைவன் குழற்கடை போன்றும், கொல்களிறு போன்றும் இருண்டு, கார் தோன்றும். இங்கெல்லாம், இயற்கை எழில்பட புனையப்பட்டுள்ளன.

சங்க இலக்கியத்தில் இயற்கைப் புனைவிற்குத் தலையாய இடம் உண்டு.

காதலைப் பாடும்போதும் இயற்கைப் புனைவே முதலிடம் பெறும். முதற்பொருளான இடம், பொழுது, கருப்பொருள் இவற்றிற்கு முதன்மைகொடுத்துப் பாடல்கட்குத் திணை வகுக்கப் படும். ''முதல், கரு, உரிப்பொருள் என்ற மூன்றே - நுவலுங் காலை முறைசிறந் தனவே'' என்பர் தொல்காப்பியர்.[3]

சங்க இலக்கியங்களில் இயற்கைப் பொருள்கள் பற்றிய உவமைகளும் மிகுந்து வரக்காணலாம். புறத்திணை பற்றிய பாடல்களில்கூட ஆங்காங்கே இயற்கைப்புனைவும், இயற்கைப் பொருள்கள் பற்றிய உவமைகளும், பலப்பலவரும். இயற்கைப் புனைவு, பத்திக் காலத்திலும் மங்கவில்லை. 'நக்கீர தேவநாய னார் பாடல்களிலும் திருஞானசம்பந்தர் பாடல்களிலும், சுந்தரர் பாடல்களிலும். இத்தகு இயற்கைப்புனைவுகள் மலிந்துள்ளன. சங்க இலக்கியத்தில் இயற்கைப்புனைவு மக்கள் வாழ்க்கையோடு பொருந்தி வருகிறது. பத்தியிலக்கியத்தில் இயற்கைப்புனைவு, இறைமைக்குப் பின்புலமாக வருகிறது. இம்மாற்றம் நின்று காணத்தகும்.

சமய இலக்கியத்தில் இறைவனுக்கே முதன்மை; இயற்கைப் புனைவிற்கு இரண்டாமிடம்தான். நக்கீரதேவநாயனார் திருஈங் கோய்மலை எழுபதில் மூன்று அடிகள் இயற்கைக்குத் தருகிறார். இறுதியடியும் அதற்குமுன் ஓரிரு சீர்களும் இறைவனுக்குத் தரு கிறார். இறுதியடியை எடுத்துவிட்டால் பொருள் முற்றாது. அவர் நோக்கம், இறையருளைப் பேசுவதுதான். ஆகவே, இங்கு மரபு சற்று மாறி வளர்தலைக் காண்கிறோம். ஐந்துபேர் அறிவும், இறைவனையே கொண்டதால் இம்மாற்றம் நிகழி னும், வருணனைகளை ஆளுதலில் மாற்றமில்லை.

ஆகவே, நக்கீரதேவநாயனார் பாடல்களில் இயற்கைப் புனைவு கனிந்துள்ளது. நம்பியாண்டார் நம்பியின் பாடல்

களில் சிலஅடிகளே இயற்கையைப் பற்றியவை. அவைகூட விரிக்கும் அளவு இல்லை. இவ்விருவரும் கூறிய அளவு, பிறர் பாடல்களில் இயற்கைப்புனைவு இல்லை.

காரைக்கால் அம்மையார் – இலக்கியப்போக்கும் புலமைக் கூறுகளும்:

அம்மையாரின் பெண் மனத்தை, இரு இடங்களில் கண்டு கொள்ளலாம். இயல்பாக மகளிர்க்குப் பொன்னின்மேல் ஆசை. இவர் கவிதைகளில் அது வெளிப்படுகிறது. இறைவன் பொன் னணி பூணாமல் நஞ்சரவம் சூட்டிக்கொண்டது வேண்டுவதில்லை என்பார்.

"பொன்கண்டாற் பூணாதே கோள்நாகம் பூண்டானே
என்கண்டாய் நெஞ்சே இனி" (திரு. இர 45)

இதே கருத்தை அற்புதத் திருவந்தாதியில் மீண்டும் பேசுகிறார்.

"அரவமொன் றாகத்து நீநயந்து பூணேல்
பரவித் தொழுதிரந்தோம் பன்னாள் . . .
....
பொன்னாரம் மற்றொன்று பூண்." (அற்பு. 27)

இங்கெல்லாம் அம்மையாரின் தன்னுணர்வு மிக்கொளிர்வதைக் காணலாம்.

"புலவரின் உணர்ச்சியும் மனநிலையும் கலவாமல் எந்த இலக்கியமும் அமைவதில்லை ... . தன்னுணர்ச்சிப் பாட்டுக்களாகிய (Lyrics) பக்திப் பாட்டுக்கள் கையறு நிலைப் பாட்டுக்கள் முதலியவற்றில் மிகுந்திருக்கும்."

என்பார் டாக்டர் மு. வரதராசனார்.[1] இதனை அம்மையார் பாடல் களில் சிறப்புறக் காண்கிறோம்.

அ) திருநாவுக்கரசர் பின்பற்றுதல் :

அம்மையாரின் கருத்து, சொல், கற்பனை ஆகியவைகளைத் திருநாவுக்கரசு சுவாமிகள் பல இடங்களில் எடுத்து ஆள்கிறார்.

'யானே தவமுடையேன் என்நெஞ்சே நன்னெஞ்சம்" (அற்பு 7) என்பார் அம்மையார் இதனைத் திருநாவுக்கரசர்,

"என்ன மாதவம் செய்தனை நெஞ்சமே"[1அ] – என்றார்.

"உண்டே எனக்கரிய தொன்று"? (அற்பு–10) என்பார் அம்மையார். இது அடியார்கள் சிறப்பை நவின்றது. இதனைத் திருநாவுக்கரசர்,

"அடியார் அடிஅடி யோங்கட்கு அரிய துண்டே"... என்றார். அம்மையார்,

"அறிவிப்பான் தானே"... (அற்பு. 20) எனக்கூறியதை, திருநாவுக்கரசர்,

"காண்பார் யார், கண்ணுதல் காட்டாக் காலே" என்றார்,

"சிந்தையினும் இங்குற்றான் .. (அற்பு. 45) என்றார் அம்மையார்.

"மனத்தகத்தான் தலைமேலோன் வாக்கி னுள்ளான்"[2]
என்றார் திருநாவுக்கரசர்.

"பூமாலை கொண்டு புனைந்தன்பாய்" .. என்பது அற்புதத் திருவந்தாதி (பா. 87).

திருநாவுக்கரசர், "நிலைபெறுமாறு எண்ணுதியேல்" என்ற பாட்டில், "பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடி" என்றார்.[4]

ஆ) சேரமான்பெருமாள் பின்பற்றுதல் :

"காலையே போன்றிலங்கும் மேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு – மாலையின்
தாங்குருவே போலுஞ் சடைக்கற்றை மற்றவர்க்கு
வீங்கிருளே போலும் மிடறு" ..

என்பது அம்மையார் கற்பனை (அற்பு). 65)

இதிற்கண்ட கற்பனையை அடியொட்டி சேரமான் பெருமாள் அப்படியே புனைகிறார்.[5] இப்பாட்டில் இறைவனின் திருமேனி ஒருபகலின் கூறு என்ற கருத்துப்படச் செய்திகள் வருகின்றன. இங்ஙனம் வருதலைச் சற்று மாற்றிச்சேரமான் ஒரு கற்பனை செய்கிறார். தெரிவையாகிய பெண்ணை ஒருநாளின் பல கூறுகட்கு உவமைப்படுத்துதல் இதன் வளர்ச்சியே.[6]

"அண்டம் பெறினும் அதுவேண்டேன்" என்பது (அற்பு.72) அம்மையாரின் வாக்கு. இதனையே, சேரமான் கூறுவாராயினர்

"துறக்கம் புகினும் ......
.... நானிலம்
ஆளினும் நான்மறைசேர்
மையார் மிடற்றான் அடிமற
வாவரம் வேண்டுவனே ...."[7]

கற்பனைச் சிறப்பு :

இறைவன், உமையம்மையாருக்குத் தன் உடலில் ஒருகூறு கொடுத்தமைக்குரிய காரணம் வினவுவார்போன்று புனைந்த பாடல், கற்பனைச் சிறப்பிற்கொரு காட்டாகும்.

"விருப்பினால் நீபிரிய கில்லாயோ வேறா
இருப்பிடமற் றில்லையோ என்னோ - பொருப்பன் மகள்
மஞ்சுபோல் மால்விடையாய் நிற்பிரிந்து வேறிருக்க
அஞ்சுமோ சொல்லாய் அவள் (அற்பு . . 94)

ஊடற்காலத்தே, தலைவன் தலைவியைப் பணிந்தேனும் அவள் ஊடலைத்தணிக்க வேண்டும் என்பது தொல்காப்பியம், (பொருள் சூ. 31) இறைவனேயாயினும் இறைவியைப் பணிந்து ஊடல் தீர்த்ததாக அம்மையார் கூறியது, செந்தமிழ் இலக்கிய மரபைப் பேணுவதாகும்.

"சிலம்படியாள் ஊடலைத்தான் தவிர்ப்பான் வேண்டிச்
சிலம்படிமேற் செவ்வரத்தஞ் சேர்த்தி—நலம்பெற்
றெதிராய செக்கரினும் இக்கோலஞ் செய்தான்
முதிரா மதியான் முடி." (அற்பு. 68)

சிலம்பினைக் காலில் கட்டுதல் வீரர்க்கழகு. சிவபிரான் பெரும் வீரர். ஆகவே அவர் வீரக்கழல் அணிதல் தக்கதே: இதை அம்மையார் அழகுறக்காரணங்காட்டிப் பாடுகிறார்.

"பாம்பும் மதியும் மடமானும் பாய்புலியும்
தாம்பயின்று தாழருவி தூங்குதலால்—ஆம்பொன்
உருவடிவில் ஒங்கொளிசேர் கண்ணுதலான் கோலத்
திருவடியின் மேய சிலம்பு" ... (அற்பு. 67) என்பது நல்ல கற்பனை.

இறைவன் திருவடி எத்தகைய சிறப்புடையது?

"செருக்கினால் வெற்பெடுத்த எத்தனையோ திண்தோள்
அரக்கனையும் முன்னின் றடர்த்த — திருத்தக்க
மாலயனுங் காணா தரற்றி மகிழ்ந்தேத்தக்
காலனையும் வென்றுதைத்த கால்" ... (அற்பு......80) என்பது நல்ல விளக்கம்.

இறைவன் செம்மேனிப் பெம்மான். அவன் திருக்கரமும் செவ்விய ஒளி மிக்கது. ஆனால் அம்மையார். தற்குறிப்பேற்ற மாக ஒரு காரணம் கற்பிக்கிறார்.

''அழலாட, அங்கை சிவந்ததோ? அங்கை
அழகால் அழல்சிவந்த வாறோ — கழலாடப்
பேயாடு'கானிற் பிறங்க அனலேந்தித்
தீயாடு வாய்இதனைச் செப்பு......'' (அற்பு. 98)

ஒரு புலவரின் கற்பனைச் செறிவு புலமைத் திறன் இவற்றைக் காட்டும் அளவுகோல், தன்மை அணியும், தற்குறிப்பேற்ற அணியுமாம். இவை காரைக்கால் அம்மையார்பால் நன்கு அமைந்துள்ளன.

தன்மையணி .. அற்பு......பா, 67. தற்குறிப்பேற்ற அணி .. அற்பு. பா. 32, 36, 38, 66, 68 ஆகிய பாடல்களில் காணலாம்.

உவமை:

அம்மையாரின் பாடல்களில் மிகுந்த அளவு உவமைகள் வருவதாய்க் கூற இயலவில்லை; சிற்சிலவே உண்டு.

அவை கீழ்வருமாறு :-

செஞ்சடையும் நிலவும் விரவியமைக்க....

''பொன்னோடு வெள்ளிப் புரிபுரிந்தாற் போலாவே
தன்னோடே யொப்பான் சடை'' ... (அற்பு. 49)

மாலும் அரனும் இணைந்து தரும் காட்சிக்கு...

''பொற்குன்றும் நீல மணிக்குன்றுந் தாமுடன்
நிற்கின்ற போலும் நெடிது''... (அற்பு. 83)

இறைவனது முக்கண்களின் இயல்பிற்குத்தரும் உவமை:

''நெடிதாய பொங்கெரியும் தண்மதியும் நேரே
கடிதாங் கடுஞ்சுடரும் போலும்'' .. (அற்பு. 84)

இங்ஙனம் உவமைகள் கூறுவர்.

இவர் பாடலில் வழக்குச் சொற்களோ இழிசொற்களோ இல்லை. அகத்துறைப் பாடல்கள் இல்லை. அடியார் பற்றிய குறிப்புக்களும் இல்லை.

கலையுணர்வு:

இயற்றமிழும் இசைத்தமிழும் வல்லாராய் விளங்குவோர் அருகியே உள்ளனர். பரிபாடலில் செய்யுள் செய்தவர் ஒருவ ராகவும் அதற்கு இசை வகுத்தவர் வேறொருவராகவும் இருத்தலை அறிவோம். ஆனால் காரைக்காலம்மையாருக்கு, இசையறிவும் உண்டு. "இயற்றமிழ்ப் பயிற்சியோடு இசையிலும் சிறந்த பயிற்சியுண்டென்பது மூத்த திருப்பதிகங்கள் பண்ணுடன் அமைந்தமையும் திருவாலங்காட்டில் இறைவன் திருநடம்புரியுங் கால் இசைபாடி மகிழ்ந்தார் என்பதும் சான்றாம்" என்ற பண்டிதமணி கதிரேசனாரின் விளக்கம் அறிய வேண்டுவதாம்.[8]

உள்ளாளம் என்ற ஒருவகைப்பாட்டு விகற்பத்தை அம்மையார் கூறுகிறார்.[9] பப்பினை என்பதும் ஓர் இசை வகை என்பார் சு. இராமசாமிப்புலவர்.[10] திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்-1க்குப் பண்நட்டபாடை எனவும், பதிகம்-2க்குப் பண் இந்தளம் என்றும் குறிக்கப்பட்டுள்ளன. துணங்கைக் கூத்தைப் பற்றி ஓர் இடத்தில் பார்க்கிறோம். (மூத்த திரு. ப. பா. 7).

துத்தம், கைக்கிளை, விளரி, தாரம், உழை, இளி, குரல் என்ற ஏழிசைகளின் பெயரை அம்மையார் குறிக்கிறார். 'குரல்' என்பதை இங்கு ஓசை என்பார்.[11] அப்பாட்டில் " பண்கெழுமப் பாடி" என்றதும் காண்க.

சச்சரி, கொக்கரை, தக்கை. தகுணிதம், துந்துபி. தாளம், மத்தளம், கரடிகை. வன்கை, மென்றோல், தமருகம், குடமுழா மொந்தை, என்ற பதின்மூன்றுவகை தோற்கருவிகளைப் பற்றிக் கூறுகிறார். இதன் விளக்கங்களை கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளையவர்கள் தருவர்.[12]

வீணை என்ற நரம்புக் கருவியையும் அப்பாட்டில் சுட்டினார். (மூத்த திரு. ப. பா, 9). யாழ் பற்றிய குறிப்பும் உண்டு. (ஷி பா. 11)

"நட்டம் பேணும் இறைவன்" என்று சிவபெருமானைப் போற்றுமிடத்து நடனம்பற்றிக் கூறுகிறார். (மூத்த திரு. ப. 3)

இத்தகு செய்திகளின் மூலம் அம்மையாரின் கலையுள்ளம் தெரியவரும்.

சேரமான் பெருமாள் நாயனாரின் இலக்கியப்போக்கும் புலமைக் கூறுகளும்:

சேரமான் பெருமாள் நாயனார், சங்க இலக்கியம் கற்றவர்.

''பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலிசூட்டிய பிறங்குநிலை நடுகல்'' —என்பது அகநானூறு,[1]

இதனை இவர்—

''பட்டோர் பெயரும் ஆற்றலும் எழுதி
நட்ட கல்லும் மூதூர் நத்தமும்''
—(திருவாரூர் மு. கோவை பா. 16)

என மொழிவர்.

'...இனியே
புதல்வற் றடுத்த பாலொடு தடைஇ
திதலை அணிந்த தேம்கொள் மென்முலை
நறுஞ் சாந்தணிந்த கேழ்கிளர் அகலம்
வீங்க முயங்கல் யாம்வேண் டினமே
தீம்பால் படுதல் தாம்அஞ்சினரே''[2]

என்பது அகம், இதனைச் சேரர்,

''தலையங் கிளவிப் புதல்வன் தன்னை
உள்ளச் சொரிந்த வெள்ளத் தீம்பால்
உடைய வாகிய தடமென் கொங்கை
வேண்டாது பிரிந்த விரிபுனல் ஊரன்
பூண்தாங் ககலம் புல்குவன் எனப்போய்ப்
பெருமடம் உடையை''—(திரு. மு. கோவை. பா. 22)

என இயம்புகிறார்.

''...................................தம்மில்
கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யும் தம்புதல்வன் தாய்க்கே'' என்பது
குறுந்தொகை.[3]

இதனைச் சேரர்,

"கண்ணடி அணைய நீர்மைப்
பண்ணுடைச் சொல்லியர் தம்பா லேனே," (திரு. மு. கோ. பா. 19) என்றார்.

நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் திருமுருகனின் பன்னிரு கரங்களும், செயல்படுமாற்றைப் புனைகிறார். (திருமுருகு வரி, 105-118) இதை ஒத்த நிலையில் சேரர் சிவபிரானின் எட்டுக் கரங்களும் என்னென்ன வகையில் தொழில் இயற்றுகின்றன என்பதைப் பொன்வண்ணத்தந்தாதியில் (பா. 88) கூறுவர்.

திருக்குறள்

சேரருக்குத் திருக்குறளிலும் நல்ல பயிற்சி இருக்கிறது. திருக்குறளையே கையாண்ட இடத்தைக் காணலாம்; திருக்குறள் கருத்தையும், சொல்லையும் பயன்படுத்துவதையுங் காணலாம்.

1. திருக்குறளை ஆண்ட இடம் மூன்று உளது :

(அ) "இல்லாரை எல்லாரும் எள்குவார் செல்வரை
எல்லாருஞ் செய்வர் சிறப்பென்னும் சொல்லாலே.
(ஞான உலா. 136)

என்பது சேரர் கூற்று. இங்கே திருக்குறளை (கு-752) அப்படியே எடுத்தாள்கிறார்.

(ஆ) "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டோடி கண்ணே உள-என்று பண்டையோர்
கட்டுரையை மேம்படுத்தாள்" என்பது சேரர் வாக்கு.
(ஞான உலா. 173)

இங்கும் திருக்குறளையே அடிமாறாமல் ஆள்கிறார். (கு-1101)

(இ) "ஆண்டின அச்சம் வெகுளி அவா அழுக்காறிங்ஙனே மாண்டான" (பொன். வண்ணம். பா, 99) இது அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்று வரும் குறளை (கு-35) ஆண்டதாகும்.

திருக்குறள் கருத்து

"நோக்கிலும் நோய்நோக்காம் நோக்காள்" (ஞான உலா. 79)

என்பது சேரர் வருணனை. இது, "ஒரு நோக்கு நோய்நோக்கு

ஒன்று அந்நோய் மருந்து'' என்ற குறளின் கருத்தை உள்ளடக்கியது.[4]

''மன்றிடைத் தோன்றிய நெல்லிக்
கனிநிற்ப மானுடர்போய்
ஒன்றெடுத் தோதிப் புகுவர்.
நரகத் துறுகுழியே!'' (பொன்வண்ணம். 74)

என்பது சேரர் செய்யுள். இது ''கனியிருப்பக் காய்கவர்ந்தற்று''[5] என்ற குறட்கருத்தைத் தாங்கியதே!

''மடப்பால் மடந்தை மலரணைச் சேக்கையிற் பாசம்பிரீஇ
இடப்பால் திரியில் வெருவும்." (திருவாரூர் மு. கோவை. 15)

என்பது சேரர் கூற்று. இது புல்லிக் கிடந்தேன் புடை
பெயர்ந்தேன் அவ்வளவில் அள்ளிக்கொள் வற்றே பசப்பு''[6] என்பதின் சாயல்.

சிலம்பு

சேரமான் பெருமாள் நாயனாருக்குச் சிலப்பதிகாரத்திலும் தேர்ச்சியிருக்கிறது.

இளங்கோவடிகள், கோவலனை அறிமுகப்படுத்துங்கால்
''பண்டேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிக்
கண்டேத்தும் செவ்வேள்'' என்று தலைவனை முருகனோடு ஒப்பிட்டார்.[7]

சேரரும், ஒரு தலைவனைப் புனையுங்கால்

''முக்கணான் நான்மறையான்
மன்னுஞ்சேய்போல் ஒருவன் வந்து'' (திருவாரூர்.
மு. கோவை. பா. 11)

என்பர். சமயகாலத்தில் ஆடவர்க்குக் காமனை உவமை கூறுவர். இவர் அப்படிக் கூறாமல், முருகனைக் கூறுவர்.

இளங்கோவடிகள் ''புனைமயிற் சாயற்கும் புண்ணிய முதல்விக்கும்'' என்பர்.[8] ''புனைமயிற் சாயல் பூங்குழல் மடந்தை" என்பர் சேரர். (திருவாரூர் மு. கோவை. பா. 13)

தலைவியின் எழிலுக்குத் தோற்றவை கானகத்தில் காணப் படுவதாயும், அவை தலைவியைத் தடுக்கவில்லை என்றும் சேரர் செப்புவர். (திருவாரூர் மு. கோவை. பா. 16). இது சிலப்பதி காரக் கற்பனையை ஒட்டியதே.[9]

''கண்ணவனை அல்லது காணா, செவிஅவன்
தெண்ணருஞ்சீர் அல்ல திசைகொள்ளா—அண்ணல்
கழலடி அல்லது கைதொழா அஃதான்று'' (ஞான உலா. 187—188

என்பது சேரர் காட்டும் பேரிளம்பெண் பாடும் பாட்டு. இஃது இளங்கோவடிகளின் சிலம்பில், கவுந்தியடிகள் அருகதேவனை ஏத்துங்கால், பாடுவதை நினைப்பிக்கிறது.[10] இதே கற்பனை பொன்வண்ணத்தந்தாதியிலும் உண்டு. (பா. 42)

ஆகவே, சேரர், சிலம்பில் பயிற்சியுடையார் என்பதாம்,

சேரர், பெண்பேயைப்புனைகிற கற்பனை, (பொன் வண்ணம் 75) காரைக்காலம்மையார் வருணிப்பதை ஒத்துள்ளது.[11] இவ் வகையில் இவர் காரைக்காலம்மையாரைப் பின்பற்றியிருக்கிறார். வேறு ஓரிடத்திலும் சேரர் கற்பனையும் அம்மையார் கற்பனையும் ஒத்துள்ளது.

''நானிலம் ஆளினும் நான்மறைசேர்
மையார் மிடற்றான் அடிமற வாவரம் வேண்டுவனே''
(பொன். வண்ணம். 93)

என்பது சேரர் பாட்டு. இதே கருத்தை அம்மையார் பாடுகிறார். இவ்வகையில் இவர் காரைக்காலம்மையாரைப் பின்பற்றியிருக் கிறார்.

சேரமான் கற்பனையைப் பின்வந்த புலவர்கள் ஆளுதல் :

சிந்தாமணி

சிலப்பதிகாரக் காப்பியக் கற்பனை-நடைகளைச் சேரமான் கையாண்டதுபோல சேரமான் கற்பனையைத் திருத்தக்கதேவர் சிந்தாமணிக் காப்பியத்தில் போற்றியிருக்கிறார்.

''ஒரூர் இரண்டகம் காட்டினையால்'' என்ற பழமொழியைச் சேரர் கூறுவர். (பொன். வண்ணம். 73) இதனைச் சிந்தாமணி (ராசிரியர்,

"ஒழிகலிக் காம மேசமு ரிரண்டீஃக மாயிற் றென்றாங்
கழுதகண் ணீர்கண் மைந்த னாவிபோழ்ந் திட்டவன்றே''

என்று பாடுகிறார்.[13]

''மாட நடுவில் மலரார் அமளியே
கூடிய போர்க்கள மாக்குறித்துக்—கேடில்
சிலம்பு பறையாகச் சேயரிக்கண் அம்பா
விலங்கு கொடும்புருவம் வில்லா—நலந்திகழும்
கூழைபின் தாழவளை ஆர்ப்பக் கைபோந்து
கேழ்கிளரும் அல்குலாத் தேருந்திச்—சூழொளிய
கொங்கைமாப் பொங்கக் கொழுநர் மனங்கவர
அங்கம் பொருத்தைசந்த ஆயிழையர்'' (ஞான உலா 62–65)

எனக் கலவிப்போரைப் பற்றி இன்பச்சுவை ததும்பச் சேரமான் பெருமாள் கூறுவர்.

இதே கற்பனையைத் திருத்தக்கதேவர் சேரமானிடமிருந்து பெற்று

''சில்லரிச் சிலம்பின் வள்வார் சிறுபறை கறங்கச் செம்பொன்
அல்குற்றே ரணிந்து கொம்மை முலையெனும் புரவி பூட்டி
நல்லெழி னெடுங்க ணம்பாப் புருவவில் உருவக் கோலிச்
செல்வப்போர்க் காமன்சேனை செம்மனமே லெழுந்த தன்றே.''

என்றவாறு பாடுகிறார்.[14]

இதே கற்பனையைப் பிற்காலத்தில் புகழேந்தி நளவெண்பாவில்

''ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா வேற்படையும்
வாளுமே கண்ணா வதனமதிக் குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு.''

என்றாங்குப் பாடுவதையும் பார்க்கலாம்.

*''எஞ்சாத
பொற்செப் பிரண்டு முகடுமணி அழுத்தி
வைத்தன போல வளர்ந்தேந்தி''* (ஞான உலா. 176)

என்று நகிலைச் சேரர் பாடுகிறார். இக்கற்பனையைத் திருத்தக்க தேவர், அப்படியே எடுத்துக்கொள்கிறார்.

"தாமச்செப் பிளைமுகட்டுத் தண்கதிர் விடுநில
மாமனிதா பித்தனபோன் மனம்பருகு கருங்கண்ண"[16]

என்றார்.

"ஒருகண் எழுதிவிட் டொன்றெழுதா கோடித்
தெருவம் புகுவார், திகைப்பார்" (ஞான உலா. 73)

என்பது சேரர் பாட்டு. இந்த கற்பனையைப் பின்வந்த வில்லி புத்தூரார் சற்று மாற்றி அமைத்துக்கொள்கிறார்.

"ஈர் அடிகளிலும் செம்பஞ்சு எழுதுவார்; எழுதும் முன்னர்
ஓர்அடி எழுதி மின்போல் ஒல்கிவந்து இறைஞ்சுவாரும்"[17]

என்பது, புதுக்கியதொன்றே.

கற்பனைப் புதுமை

கற்பனையில் புதுமை காட்டல், புலவனின் தனிவியல்பைக் காட்டும். சேரர் அப்படிச் சில புது உத்திகளைக் காட்டுவார்.

தலைவியைக் கார் காலமாக உருவகம் செய்வதும் (திருவாரூர் மு. கோவை-1) தலைவிக்குக் காலைப்பொழுது, உச்சிப்பொழுது மாலைப்பொழுது, இராப்பொழுது ஆகிய பொழுதுகளை உரு வகித்துப் பேசுவதும் (ஞான உலா 151-153) புதிய உத்தி, இது பிறர்பால் இதற்குமுன் காணப்படாதது.

குறிஞ்சி, முல்லை நில இயல்புகளையும், இராப்பகல் ஆகிய பொழுதினையும் இறைவன் தன் உருவமேனியில் காட்டு வதாய் வருணிப்பது புதுமை.

"பாட்டு, விதிகட்கு இயைய அமைதல் வேண்டும் ஆயினும்
இதனை இகந்தும் உயர்தல் வேண்டும். விதிகள் பாட்டிற்குச்
சிறகு. அது, பறக்க உதவவேண்டும். இழுத்தல் கூடாது.
உரிமை நோக்கி உயரவிட வேண்டும்"

என்பார் தாகூர்.[18] இஃது இவன் இசைகிறதன்றோ?

"இருளார் மிடற்றால் இராப்பகல்
தன்னார் வரைமறையால்
பொருளார் கமழ்கொன்றை யால்முல்லை
புற்றர வாடுதலால்

தெருளார் மதிவிசும் பால்பெளவந்
தெண்புனல் தாங்குதலால்
அருளாற் பலபல வண்ணமு
மால் அரன் ஆயினனே! (பொன். வண்ணம் 57)

இங்கு, இவரது தமிழ் மரபு அறிந்த செவ்வியும் தெரியவரும். பேரிளம் பெண்ணின் கண்ணைக் கடலாகக் கற்பிதம் செய்து அதற்குக் காரணம் காட்டுவது அழகிது!

"வரிகிடந் தஞ்சனம் ஆடி மணிகள்
உருவம் நடுவுடைய வாகிப்—பெருகிய
தண்ணங் கயலுந் சலஞ்சலமுந் தோற்றுதலால்
வண்ணங் கடலனைய வாட்கண் ணாள்"

(ஞான-உலா-182-83)

என்ற கற்பனை சிறப்பானது.

உவமைகள்

தெய்வப் பாசுரங்கள் பல்கிவிட்ட காலத்தில், புராண உவமைகளும் பெருகிவிட்டன.

"அந்தண் ஆரூர் சிந்தித்து மகிழா
மயரிய மாக்களைப் போலத்
துயர்உழந் தழியக் கண்துயி லாவே!"

(திருவாரூர் மு கோவை. பா. 4)

என்று வருவது, சங்க உவமைகளிலிருந்து மாறுபட்டது. அங்கே பகைவரின் அச்சத்திற்கு வீரம் செறிந்த வேந்தன் செயல் பேசப் படும். இங்கு "ஈசனை நினையாதவர் நெஞ்சம் போல்" என்பது மாற்றம்.

பாலை நிலத்துக் கடுமையைக் கூறுங்கால், "மதனன் தன்னைக் கடைக்கணித்த தீயிற் கடிது" (திருவாரூர் மு. கோவை. பா. 17) என்பது நல்ல கற்பனை. ஆயினும் புராண உவமை செல்வாக்குப் பெற்ற நிலையை இது காட்டுகிறது.

இறைவன் அருளுக்கு ஏங்குவோர் நிலையையும், இறைவனைப் பணியாதார் நிலையையும் உவமையாக்கிக் காட்டுவார்; இது சுவையானது. உவமை மாற்ற நிலையைக் காட்டுவது.

"துள்ளுங் கலைக்கைச் சுடர்வண்
ணனைத்தொழு வார்மனம்போன்
றுள்ளும் உருக" (திருவாரூர் 27) என்பது உடன்பட்டு உவமை.

"சங்கரன் தாள் பணியாது
ஆழ்ந்து கிடந்துநை வார்கிளை
போல்அயர் வேற்கிரங்கி" (திருவாரூர் 30) என்பது எதிர் மறையில் கூறிய உவமை.

வெண்ணீறு அணிந்த சிவபிரானோடு நீலமணி நிகர்க்கும் உமாதேவி சேர்ந்து உமையொருபாகமாக விளங்குதற்கு, ஓர் அரிய உவமை காட்டுவர் சேரர். "வெண்மையான கங்கை ஆறும் கருநிற யமுனை ஆறும் கூடுதலைப் போல" என்ற இவ்வுவமை மிக அழகு.

"ஆடிய நீறது கங்கையுந்
தெண்ணீர் யமுனையுமே
கூடிய கோப்பொத்த தால்உமை
பாகம்எம் கொற்றவர்க்கே!" (பொன்.
வண்ணம் 90)

என்றது காண்க.

காயும் எண்ணெய்யில், நீர்த் துளிபடினும் பொங்கும். பெரு நீர் வீழின் அளவிலாது பொங்கும். தலைவன் செயலால் தலைவியின் உடல் ஆனா இன்பத்தை எய்தி அப்படிப் பொங்கிற்றாம். புது உவமை; பிறர் கூறாத உவமை. சுவையாக இல்லையா?

'திருந்திழைப் பணைத்தோள் தேமொழி மாதே
விருந்தின் அடியேற் கருளுதி யோஎன
முலைமுகம் நோக்கி முறுவலித் திறைஞ்சலின்
நறைகமழ் எண்ணெய்ச் சிறுநுண் துள்ளி
பொங்குபுனல் உற்றது போலஎன்
அங்கம் எல்லாந் தானாயினளே! (திருவாரூர்
மு. கோவை 28)

மேலும் மானிட உணர்ச்சி இவண் கொப்பளிக்கிறது. உணர்ச்சியைக் கற்போர்க்கும் தருவதே கவிதை.

"உணர்ச்சியே கலையின் உயிர்; அதுவே வாழ்வின் அடிப் படை உணர்ச்சியை ஒட்டியே வாழ்க்கையின் மற்ற கூறுகளும் அமையும்"

என்பார் வின்செசுட்டர்.[19] இஃது இவண் பொருந்தும்.

நடையழகு

(i) வினைமுற்று நடையைக் கவிதையில் சிறப்பாகச் சேரர் ஆள்கிறார்.

"அழிகின்ற தாருயிர், ஆகின்ற
தாகுலம்; ஏறிடும்மால்;
இழிகின்ற சங்கம்; இருந்த
முலைமேற் கிடந்தனபீர்."

(பொன். வண்ணம் பா. 52)

மற்றும் பொன். வண்ணம் பா. 54-70, 86, திருவாரூர் பா. 2 இவை வினை முற்றுத்தொடராய் வரும்.

(ii) முற்றுச் சொற்களை அடுக்கி அழகு செய்வர்.

"ஆமென்பார் அன்றென்பார் ஐயுறுவார் கையெறிவார்."

(ஞான உலா 71—194)

(iii) மற்றும், எச்சங்களை ஆண்டும் அழகு செய்வர்.

"கட்டுரைத்துக் கைசோர்ந் தகம்உருகி மெய்வெளுத்து
மட்டிவரும் பூங்கோதை மால்கொண்டாள்."

(ஞான உலா 195)

(iv) உம்மைத் தொகையில் பாடிய பாடலும் உண்டு.

(பொன் வண்ணம் 91)

(v) அந்தாதி

"புண்ணியன் புண்ணியல் வேலையன்
வேலையு நஞ்சன் அங்கக்
கண்ணியன் கண்ணியல் நெற்றியன்
காரணன் கார் இயங்கும்
விண்ணியன் விண்ணியல் பாணியன்
பாணி கொளஉமையாள்
பண்ணியன் பண்ணியல் பாடலன்
ஆடற் பசுபகியே." (பொன். வண்ணம் பா. 30)

இங்கு ஒரே பாடலில் அவ்வடியிலேயே அந்தாதி போன்ற அமைப்பிருப்பது அருமை. இதே போக்கு பொன் வண்ணம், பா. 26–39இல் உண்டு.

(vi) மெல்லின வண்ணம்

''மங்கைகொங் கைத்தடத் திங்குமக்
குங்குமப் பங்க நுங்கி
அங்கமெங் குந்நெகச் சங்கமங்
கைத்தலத் துங்கவர்வான்.'' (பொன், வண்ணம் பா. 32)

என்ற பாடலில் மெல்லின வண்ணம் வருதல் காண்க. இத்தகு யாப்பைச் சம்பந்தரிடம் காணலாம்.

எழுவாய்த தொடரால் அமைந்த பாடல் பொன். வண்ணம் —77
இங்கிதம் மலிந்த பாடல் பொன். வண்ணம் 33, 46
மெய்ப்பாட்டை நன்கு காட்டும் பாடல்;
பொன். வண்ணம் 47

இங்ஙனம் சேரமான் கவிதைகளில் பற்பல நடைகள் உண்டு என்பதாம். சேரமான் பெருமாள் நாயனார் அகம், குறுந்தொகை, திருமுருகாற்றுப்படை ஆகிய சங்க நூற்பொருட்களைப் பாடுகிறார்.

திருக்குறளை அப்படியே ஆள்வது இவரது தனிச்சிறப்பு. சிலப்பதிகாரக் கற்பனைகளைப் பெருமளவு இவர் ஆண்டுள்ளார். பதினொராம் திருமுறையில் பிற ஆசிரியர்கள் சிலப்பதிகாரக் கற்பனைகளை எடுக்கவில்லை. சேரமானிட மிருந்து சிந்தாமணியாசிரியர் சிற்சில கற்பனைகளை வாங்கிப் பயன்படுத்தியிருக்கிறார். இவரது கற்பனையிலும் உவமை களிலும் புதுமைகள் உள.

இங்கிதம் (குறிப்பு) உள்ள பாடல், அகத்துறையில் உள்ளுறை உள்ள பாடல், இவர் நூலில் மட்டும் உண்டு.

வினைமுற்றுநடை, எச்சநடை, உம்மைத்தொகைகளை அடுக்குதல், எழுவாய்த் தொடர்களை அடுக்குதல் ஆகிய போக்கும் இவர் பாடல்களில்தான் மிகுதி. பிறர்பால் இந்த அளவு இல்லை.

கபிலதேவநாயனாரின் இலக்கியப் போக்கும் புலமைக் கூறுகளும்

ஓர் இலக்கியப் புலவனிடம், முன்னோர் மொழியைப் போற்றும் இயல்பு உண்டா? அப்புலவன் கற்பனையைப் பின் வந்த பாவலன் எடுத்துள்ளானா? கற்பனை, உவமை, ஓசை, அணிநலம், இவை கவிஞனிடம் எங்ஙனம் அமைந்துள்ளன? எனக்காண்பது தக்கதே, இவற்றை வைத்துக் கவிஞனின் திறனை அளவிடலாம். கபிலதேவநாயனாரிடம் இவ்வியல்புகள் காணப்படுதலின், அவர் பாடல்களைச் செய்யுட்கள் எனக் கூறுவியலாது. பல பாடல்களில் கவிவளம் பொலியக் காணலாம்

''அவாவெகுளி அச்சங் கழிகாமம்'' என ஒரு பாடலில் நாயனார் கூறுவர். (சிவ. திரு. அந்தாதி. 38).

''அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல்'' எனவரும் திருக்குறளில்[1] பின்னிரு சொல்லைக் கபிலதேவநாயனார் அப்படியே எடுத்திருக்கிறார்.

''வானம் மணிமுகடா மால்வரையே தூணாக
ஆன பெரும்பார் அரங்காக் — கானகத்தில்
அம்மா முழவதிர ஆடும் பொழுதாரூர்
எம்மானுக் கெய்தா திடம்''

(சிவ. திரு. இர. மாலை. பா. 9)

என்பது இவர் பாடல். இதே கற்பனையைப் பொய்கை ஆழ்வார் பாடலில் காண்கிறோம் கபிலதேவநாயனார் பொய்கையாரிடம் இருந்து இதனை எடுத்தார்போலும்,

சிவபிரான் நஞ்சுண்டகாலை, உமையவளின் தாமரைக் திருக்கைகள் காத்தன. அஃது அருமையல்லவா? எனக் கபில தேவநாயனார் கேட்கிறார். (சிவ. திரு. இர. மாலை. பா. 2) இதே கருத்தை அப்படியே பரணதேவநாயனார் தம் சிவபெருமான் திருவந்தாதியில் வைத்துப் பாடுகிறார்[3]

கற்பனை :

இப்புலவர் யமகம் அமைத்துப்பாடுதலில் சிறந்து விளங்கு கிறார். நல்ல கற்பனையும் இணைகிறது. பாடல் சுவை ததும்பு கிறது.

''பலிக்குத் தலையேந்திப் பாரிடங்கள் சூழப்
பலிக்கு மனைப்புகுந்து, பாவாய்—பலிக்குநீ
ஐயமபெய் என்றானுக் கையமபெய் கின்றேன்மேல்
ஐயம்பெய் தான் அநங்கன் ஆய்ந்து.''

(சிவ. திரு, அந்தாதி 27)

ஒருத்தி, தன் தோழியர்கூட்டம் கலங்கக் காமம் எய்தி இறைவனின் தார்வேண்டினாள், இடையர் ஊதும் தீங்குழல் கேட்டு வருந்தினாள். அதனோடு தென்றல், தேய்பிறை சேர்ந்து கொண்டு துன்புறுத்தின, அவள் தீங்குற்று உழந்தாள்.

''ஆயம் அழிய அலர்கொன்றைத் தார்வேண்டி
ஆயம், அழிய-அயர்வேன்மேல்—ஆயன்வாய்த்
தீங்குழலும் தென்றலும் தேய்கோட் டிளம்பிறையும்
தீங்குழலும் என்னையே தேர்ந்து.'' (ஷி பா. 28)

''கண் கண்டவற்றோடு உள்ளம் உணர்ந்தவற்றைக் கூட்டிப் புதியன படைத்தல் கற்பனையின் இயல்பு''

என்பார் லோவுசு.[4] இதனை இங்குக் காண்கிறோம்.
இங்கு ஒரு சொல்லே (யமகமாக) வந்து திரிபால் பொருள் வேறுபடும் சிறப்பைக் காண்கிறோம். ஒரு சொல்லே, வெவ்வேறு பொருளில் திரிந்து வருதலை மற்றோர் சுவையான இடத்தில் கேட்கலாம்.

''தாமரைசேர் நான்முகற்கும் மாற்கும் அறிவரியார்
தாமரைசேர் பாம்பர் சடாமகுடர்—தாமரைசேர்
பாணியார் ....'' (ஷி பா, 78)

இங்கு முதலடியில் முதற்சீரில் வரும் தாமரை மலரைக் குறிக்கும். இரண்டாமடியில் வரும் தாமரைசேர் பாம்பர் என்பதைத் தாம் அரைசேர் பாம்பர் எனப் பிரித்தல் வேண்டும், தனிச்சீரில் வரும் தாமரையை தா + மரை. அதாவது தாவும் மான் எனப் பிரித்துக் கொள்ளல் வேண்டும்

ஒரு சொல் ஒரே பொருளில் வருதலும் உண்டு.
''தாமரைக் கோவும்நன் மாலும்'' எனவரும்,
(சிவ. திரு. இர. மாலை பா. 6)
பாடலில் மூன்று இடங்களில் (இரண்டாம் அடி முதற்சீர் தவிர) தாமரை என்பது மலர் என்ற பொருளில் வருகிறது.

கற்பனையும் ஓசையும் சிறந்த பாடலொன்று பார்க்கலாம்.

''கலைகாமின்: ஏர்காமின்; கைவளைகள் காமின்;
கலைசேர் நுதலிர்நாண் காமின்—கலையாய
பான்மதியான பண்டரங்கன் பாரோம்பு நான்மறையான்
பான்மதியான் போந்தான் பலிக்கு...''
(சிவ. திரு. அந்தாதி பா. 26

உவமை :

இவரிடம் உவமைகள் சிற்சிலவே வருப.

''கொடிறு முரித்தன்ன கூன்தாள் அலவன்''

(சிவ. திருவிர, மாலை 28)

''களிறுண்ட வெள்ளில்போன் றுள்ளம் வெறிது''

(சிவ. அந்தாதி 19)

''—— உலவா
றெழுமதிபோல் வாள்முகத் தீசனார்'' (சிவ. அந்தாதி 71)

இங்கு, ஆடவர் முகத்திற்கு, உவாமதியை உவமைப்படுத்துவது மரபு மாற்றம்,

''கூற்றும் பொருளும்போற் காட்டியென்''

(சிவ. அந்தாதி 84)

இவ்வுவமைகள் மனந்தங்கும் இயல்பின. இங்ஙனம் கபில தேவநாயனார் சிறிய பாடல்களில் சிறந்த கற்பனை சொல் நயம்படப் பாடுதலைக் காண்க,

பட்டினத்தாரின் இலக்கியப் போக்கும் புலமைக் கூறுகளும்:

இலக்கியம் ஒரு காட்டாற்று வெள்ளம். அதில் பழைய வெள்ளம் புதிய வெள்ளம் எல்லாம் வரும். இலக்கியத்திலும் பழைய கற்பனை-புதிய கற்பனை எல்லாம் இடைமடுக்கப் பெறும். பாடும் புலவரின் அறிவுத்திறன், கல்விப் பழக்கம், புலமையாழம் இவற்றிற்கு ஏற்பப் பாடல் வடிவமும், கவிதை யழகும் சிறந்தினிது விளங்கும், பட்டினத்தார் கல்வியறிவு மிக்க வராகவும் கற்பனை நலம் கனிந்தவராகவும் விளங்குகிறார் ஆகவே, இவர் கவிதைகள் அகலக்கவியாக மிளிர்கின்றன. சொற்சிதைவுகள் இல்லை. 'இழும்' என்ற விழுமிய சொற்கள் பொலன் காசுகள் போல உருண்டோடி வருகின்றன. பட்டினத் தாரின் பாடல்கள் கற்பனை விரிவும், முற்றிய பத்திமையும் கொண்டவை. வெண்பாக்களும் இயல்பாக உள்ளன, எதுகை மோனைக்காக இவர் ஏங்கவில்லை. அடியெதுகையை அமைத்துக்கொண்டு மேலே செல்கிறார். நக்கீர தேவருக்கு அடுத்த நிலையில் பட்டினத்தாரிடந்தான் இலக்கியச் செவ்வி இனிதின் இயன்றிருக்கிறது,

''மனித உணர்ச்சிகளை இலக்கிய வடிவில் பாடஞ்செய்து வைக்கிறான் புலவன், விலைமதிப்பில்லா இவ்விலக்கியப் பாடங்களை-உணர்ச்சி திரட்சிகளை ஒவ்வொருவரும் அறிந்துகொள்வது மனிதப்பேறாகும்.''

என்பார் டாக்டர் வ. சுப. மாணிக்கனார்.[1] மக்கட் சமுதாயத் துக்குத் தேவையான பலதிற உணர்ச்சிகளை அறிஞர் கூறி யாங்குப் பட்டினத்தார் பரக்கப் பேசுகிறார்.

சங்க இலக்கியம்:

நீலக்கடல் மிசைச் செங்கதிரோன் தோற்றம் காட்டுவது போல முருகன் மயில்மீது அமர்ந்து வருவான் என்பார் சங்க நக்கீரர்.[2] இந்தக் கருத்தை வாங்கிப் பட்டினத்தார் சிவபிரானுக் காக்குகிறார், கற்பனையை மேலும் கூட்டுகிறார். 'ஆயிரம் கதிரவன் வந்ததுபோல' என்பர்.

''பாய்திரைப் பரவை மீமிசை முகிழ்த்த
அலைகதிர்ப் பரிதி ஆயிரம் தொகுத்த
வரன்முறை திரியாது மலர்மிசை இருந்தெனக்
கதிர்விடு நின்முகம் காண்தொறும் காண்தொறும்.''

(திருக்கழு—1 : 4-7)

என்ற கருத்து நக்கீரர்பால் பெற்றது,

பன்மையைக் குறிக்கச் சங்க காலத்தில் ஆற்றுமணலைக் கூறுவர். ஒருவரைப் பலகாலம் வாழி என்று வாழ்த்துங்கால் ''நன்னீர்ப் பஃறுளி மணலிலும்'' பலவாக வாழ்க என வாழ்த்துவர்.[3] பட்டினத்தார் இதே உவமையை வேறு ஒரு இடத்தில் பொருத்துகிறார்.

''போவதும் வருவதும் நிகழ்வதும் ஆகித்
தெண்ணீர் ஞாலத்துத் திரண்ட மணலினும்
எண்ணில் கோடி எனைப்பல வாகி''

(திருக்கழு-10 ; 19-21)

என்பர்.

கண்ணுதற் கடவுளைப் போற்றிசைக்கும்போது,

''நாத்தழும் பிருக்க நவிற்றின் அல்லது
ஏத்துதற் குரியோர் யார்இரு நிலத்தே!''

(திருவொற்றி 10 ; 26-27)

என்றார். இது கபிலர் புறநானூற்றில் பாடிய ஒரு பாடலின் கருத்தையும் சொல்லையுங் கொண்டது.

"நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த"

என்பதை நினைவூட்டும்,[4]

இங்ஙனம், சங்கச் செய்யுளின் கருத்தையும் சொல்லையும் பட்டினத்தார் ஆள்கிறார்.

திருக்குறள் :

பட்டினத்தாருக்குத் திருக்குறளில் விருப்பம் உண்டெனத் தெரிகின்றது- திருக்குறளின் கருத்து, சொல்-கற்பனைகளை இவரும் எடுத்தாள்கிறார்.

அம்மையப்பர் உருவைப் புனையும்போது, உமையம்மையாரின் திருப்பாதப்போதைப் பாராட்டுகிறார். அதுபோழ்து,

"பஞ்சியும் அனிச்சமும் எஞ்ச எஞ்சாத
திருவொடும் பொலியும் ஒருபால்"
(திருவிடை. 1 15–16)

என்றார். இஃது, அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர் அடிக்கு; நெருஞ்சிப் பழம்" என்ற குறளை அடியொட்டியது[5] தூவிக்கு' ஈடாகப் பஞ்சைக் கூறுகிறார்.

பத்தர்கள், மருதப்பனை எப்படியெல்லாம் ஏத்துகிறார்கள்? "கண்ணென்றும் நந்நமக்கோர் காப்பென்றும் கற்றிருக்கும் எண்ணென்றும் மூல எழுத்தென்றும்" பேசுவார்கள்.
(திருவொற்றி. 5:1)

இது கல்விக்குச் சொல்லிய திருக்குறலின் கருத்தையும் சொல்லையும் பின்பற்றியதாகும்.[5]

நீத்தார் பெருமையை கூறும்போது,
"சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு"[6]

என்றார் திருவள்ளுவர். இக்குறளின் முதல் அடியை அப்படியே ஆள்கின்றார் பட்டினத்தார்.

"சுவையொளி ஊறோசை நாற்றம் தோற்றம்
என்றிவை முதலா விளங்குவ எல்லாம்"
(திருவொற்றி. 9:23-24)

என்பர். இப்படிப் பல குறட் கருத்துக்களும் சொற்களும் விரவி வருகின்றன.

திருவாசகம் :

திருவாசகம், திருக்கோவையாரில் பட்டினத்தாருக்குப் பயிற்சியும் பத்தியும் உண்டு.

'கற்போலும் கடிய மனத்தையும் கனிபோலக் கனியச் செய்து இறைவன் தன்னை ஆட்கொண்டதாக' மணிவாசகர் கூறுவர். 'கல்லை மென்கனி யாக்கும் விச்சை' என்பர்.[7] இக் கருத்தினைப் பட்டினத்தார்,

''களிவந்து அமுதூறிக் கல்மனத்தை எல்லாம்
கசியும் படிசெய்து கண்டறிவார்.'' (கோயில். நா. 3:1-2)

என்று இயம்பினார்.

''ஆமாறுன் திருவடிக்கே யகங்குழையே அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன்''

என்பது திருவாசகம்[8] இக்கருத்தையும் நடையையும் உள்ள டக்கிப் பட்டினத்தார் பாடுகிறார்.

''நாமத்தி னால்எந்தன் நாத்திருந்தேன் தேன்நறை மாமலர்சேர்
தாமத்தி னால்உன் சரண்பணி யேன்சார்வ தென்கொடுநான்.''
(கோயில். நா:14)

என்பர். தலை முதலாய உறுப்புக்கள் இறைவனை வணங்கும் கருவி கரணங்களாக இலங்க வேண்டும் என்பது பட்டினத்தார் ஆசை. இதனை 14 வரிகளில் பாடுகிறார்.(கோயில் நா. 24:4-18).

மாணிக்கவாசகர்,

''சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்க ளார
வந்த னையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை.''[9]

என்று பாடிய கருத்தைப் பட்டினத்தார் வாங்கிப் பெருக்கிப் பாடுகிறார்.

தீயில் விழும் விட்டில் போல, 'சின்மொழியாரில்' வீழ்கின்ற இயல்பை மணிவாசகர் கூறுவர்.[10] இதே உவமையை அடிகளும் அறைகுவர்.

''மின்னுபு விளக்கத்து விட்டில் போலவும்

....

உறுவ துணராச் செறிவுழிச் சேர்ந்தனை'' (கோயில்.28:25)

என்று காட்சியில் வரும் அழிவைக் காட்டுகிறார்.

''கன்றை நினைந்தெழு தாயென வந்த கணக்கது வாகாதே!" என்பது திருவாசகம்[11]

''கறவை நினைந்த கன்றென இரங்கி'' (கோயில். நா: 28:35) என்பது பட்டினத்தார் வாக்கு.

கோயில் நான்மணிமாலை (பா. 40-27); திருவெற்றியூர் ஒருபா ஒருபஃது. (பா-10) இரண்டும் போற்றிகளைக் கொண்டு இயன்றன. இவை திருவாசகத்தில் உள்ள போற்றித் திரு அகவலைப் போன்றவை.

விரிசடைக் கடவுளை நோக்கி,

''நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே!',

என்று மாணிக்கவாசகர் இரங்குவர்.[12] இதனைப் பட்டினத்து அடிகள்,

''நின்னுல கனைத்தும் நன்மை தீமை
ஆனவை நின்செய லாதலின்
நானே அமையும் நலமில் வழிக்கே!'' (திருவிடை. 28:63-65) என்பர்.

திருக்கோவையார் பாடல் கருத்து அல்லது துறை ஒற்றுமையைப் பட்டியலில் பின் இணைப்பில் காண்க. இங்ஙனம் மணிவாசகரின் வாக்கும் போக்கும் பட்டினத்தாரிடம் நன்கு பதிந்திருந்தலைக் காணலாம்.

பிற இலக்கிய ஆசிரியர் செல்வாக்கு :

காரைக்காலம்மையார், விரிசடைக்கடவுளின் திருநடனச் சிறப்பை:

''அடிபேரிற் பாதாளம் பேரும் அடிகள்
குடிபேரின் மாமுகடு பேரும் - கடகம்
மறிந்தாடு கைபேரில் வான்திசைகள் பேரும்
அறிந்தாடும் ஆற்றா தரங்கு'' எனப் புனைவர்.[13]

இதனையொத்த கற்பனையை நக்கீர தேவநாயனாரும் நவில்கின்றார்.[14] இந்த வருணனையைப் பட்டினத்தாரும் ஈண்டுச் செய்கிறார். (கோயில். நா: 6)

''பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்
பரமனையே பாடுவா ரடியார்க்கு மடியேன்"

என்றெல்லாம் சுந்தரர், தான் தொண்டர்க்குத் தொண்டராய் விளங்குவதைப் பகர்ந்தார்.[15]

அடிகள்,

''தொண்டர்தொண் டர்க்குத் தொழும்பாய்த்
திரியத் தொடங்கினனே!'' (கோயில் : 38)

என்று கூறி உவக்கிறார்.

பழமொழிகள் :

'காலால் இட்ட வேலையைத் தலையால் செய்வேன்' என்பது பழமொழி. இதனை அடிகள்,

"அத்தநின் தாளின்ஏவல் தலையின் இயற்றி
வழிவழி வந்த மரபினம்."

என்று இசைக்கிறார். (கோயில். 24 : 2)

''எள்ளுக்குத் தக்க எண்ணெய்" என்பது பழமொழி. இதனைப் பட்டினத்தார்,

''எள்ளுக் கெண்ணெய் போலத் தள்ளாது
பொருளின் அளவைக்குப் போகம்விற் றுண்ணும்
அருளில் மடந்தையர்" - என வேசியரை ஏசுகிறார்.

(திருவிடை. 7 : 18)

''இளங்கன்று பயமறியாது'' என்பது பழமொழி.

இதனைக் காமதேனுவின் கன்று பயமின்றித் திரிதல் போலத் திரியமாட்டாத பாவிகள் என்று விரிப்பார். ''தேவர் ஆவின் கன்றெனத் திரியாப் பாவிகள்" (திருவிடை : 30)

"பசி ருசி அறியாது,'' ''தவித்த வாய்க்குத் தண்ணீர் உதவாதவன்,'' ''வெயிலின் அருமை நிழலில் தெரியும்,'' என்பன பழமொழிகள். இப்பழமொழிகளின் கருத்துக்களைமட்டும் நினைவில் கொண்டு, அடிகள் இவற்றைப் பயன்படுத்துகிறார்.

பசியிருந்தும் புசியாமை—நீர் இருந்தும் நீர் வேட்கையைப் போக்கிக் கொள்ளாமை-நிழல் இருந்தும் வெயிலின் கொடுமை-யைப் போக்கிக்கொள்ளாமை அவ்வப் பொருட்களின் குற்றமன்று. வருந்துவானின் குற்றம். அதுபோல் இறைவன் அருள் சுரக்கக் காத்திருந்தும் மனிதன் (அடிகள்) தக்கவாறு பயன்படுத்திக் கொள்ளவில்லை என்றவிடத்து இப்பழமொழிகளின் கருத்து இடம்பெறக் காணலாம். (திருவிடை 16:30-43). ‘தானேதளர்வான் மேல் பாரம் ஏற்றல்’ என்பது ஒரு பழமொழி. இதையும் அடிகள் ஆள்கிறார் (திருவிடை. 15).

உருவகம் :

‘உவமையை அடக்கிச் செறித்து அமுக்கினால் அஃது உருவகமாக ஆகும்.’’ என்பார் இரைட்லி.[16] இத்தகு உருவகங் களைப் பட்டினத்தார் சிறந்த முறையில் ஆள்கிறார், பூசையி-யற்றும் முறையை இவர் உருவகித்த நலம் பற்றி (திருக்கழுமலம்: 4: 1—13) முன்பே கண்டோம். கோயில் நான்மணிமாலையில், உடலை நாவாயாக உருவகிக்கின்றார். (ஷி 16:1–13) திருவொற்றியூர் ஒருபா ஒருபஃதில் உடலைக் கடலாக உருவகிப்பதைப் பார்க்கலாம்.

“ .... தூரா ஆக்கை
மெய்வளி ஐயொடு பித்தொன்றாக
ஐவகை நெடுங்காற் றாங்குடன் அடிப்ப
நரையெனும் நுரையே நாடொறும் வெளுப்ப
திசையுடைத் தோலே செழுந்திரை யாகக்
கூடிய குருதி நீரினுள் நிறைந்து
மூடிய இருமல் ஓசையின் முழங்கிச்
சுடுபசி வெகுளிச் சுறவினம் எறியக்
குடரெனும் அரவக்கூட்டம்வந் தொலிப்ப
ஊன்தடி எலும்பின் உள்திடல் அடைந்து
தோன்றிய பல்பிணிப் பின்னகம் சுழலக்
கால்கையின் நரம்பே கண்ட மாக
மேதகு நிணமே மெய்ச்சா லாக
முழக்குடைத் துளையே முகங்க ளாக
வழுக்குடை மூக்கா றோதம்வந் தொலிப்ப
இப்பரி சியற்றிய உடலிருங் கடலுள்.’’

(திருவொற்றி 8:3-17) என்பது பாடல்.

இங்ஙனமே, மேலே காட்டிய மற்ற பாடல்களையும் நீண்ட உருவகமாக்கிப்பாடுவர்.

உவமை

துறவறத்தில் ஈடுபட்டு இறையன்பிற்கு ஆளாகித் தொண்டராய் வாழ்வாரின் வாழ்க்கையையும், உலகியல் இன்பங் களைப்பெற எவ்வித செயலையும் செய்து புல்லிய வாழ்வில் ஈடுபடும் பிறர் வாழ்க்கையையும் ஒப்பிட்டால் வியப்பாக உள்ளது. நீர்நிலையில் விலங்குகளின் குளம்பு மறையும் அளவு உள்ள நீரும் 'நீர்' என்று அழைக்கப்படுகிறது பிரளய காலத்தில் பொங்கும் கடல் நீரும் 'நீர்' எனப்படும். இது பொதுவகையால் ஒன்றாய் இருந்தாலும், அளவின் இயல்பால் பெருத்த வேறுபாடு இருத்தல்போல அளப்பரிய வேறுபாடு தொண்டர் வாழ்க்கைக்கும் கீழோர் வாழ்க்கைக்கும் உண்டு என்றார். (திருவிடை மருதூர். 7) இஃது அழகிய உவமை.

இறைவனின் மெய்யருள் நாட்டம் வாய்ப்பதற்குமுன் உலகியல் பொருள்கள் உண்மையாகப்படும். அருள் வந்ததும் இவையாவும் பொய் என்று உணரநேரும். இதனை அடிகள் எழிலார் உவமையால் இயம்பினார். மலை என்றும், மரம் என்றும் புறவு என்றும் புள் என்றும் ஓவிய விகற்பங்களை ஓவியப் புலவன் சுவரில் வரைகிறான். அவற்றைக் கண்ணாரக்கண்டு உண்மை என்று சுவைத்து மகிழ்கிறோம். ஆனால் ஓவியம் வரைந்த சுவரைத் தடவிப் பார்த்தால் வேறுபாடுகள் இல்லை; யாவும் ஒன்றாய்விடும். அதுபோல் ஆண்டவன் அருள் வாய்த்ததும் உலகியல் பொருள்கள் பொய்யாகிவிடும் என உவமம் கூறுவர். (திருக்கழு-10: 30-34)

இயற்கைப் பொருள்களை இறைவனின் உறுப்புகட்கு உவமையாகக்கூறவேண்டிய இடத்தில் அங்ஙனம் கூறமால் அவனது உறுப்பேயாம் என்று கூறுவது புதுமையும் அழகியதுமாம்.

> "மின்னின் பிறக்கம் துன்னும்நின் சடையே!
> மன்னிய அண்டம்நின் சென்னியின் வடிவே
> பாவகன் பரிதி பனிமதி தன்னொடும்
> மூவகைச் சுடரும்நின் நுதல்நேர் நாட்டம்,"

(திருவொற்றியூர். 1:5-8)

செம்பொருளாம் சிவபெருமானின் திருவருட்கு எல்லோரும் ஒருபடித்தாய் உரியராவர். துறவியர்க்கு ஒரு வகையாகவும் இல்லத்தாருக்கு ஒரு வகையாகவும் கருணை காட்டுவதில்லை.

எல்லோர்க்கும் ஒரு நிகராகவே அன்பு காட்டுவான். இதற்கு ஓர் உவமை காட்டுவர். விண்ணை நோக்கி ஒருவன் முயன்று ஓங்கிக் கல்லை எறிகிறான். வலியில்லாதவன் ஒருவனும் எறிகிறான். இருவர் வீசிய கல்லும், நிலம் நோக்கி விழும்போது ஒருபடித் தாகத்தானே விழும்? அது போல துறவிக்கும் இல்லறத்தானுக் கும் ஒரே வகையில் இறைவன் அருள் சுரப்பான் என்றார். (திருவிடை 19; 78-81). இங்ஙனம் சிறந்த உவமைதனை ஆளுகிறார்.

பட்டினத்தாரிடம் சங்க நூற்கருத்தும், திருக்குறட் பொருளும் உண்டு. திருவாசகப் பொருளையும் கற்பனையையும் பெருமளவு ஆள்கிறார். திருக்கோவையாரின் கருத்தும் துறையும் இவர் பாடலில் வரும். காரைக்காலம்மையார், சுந்தரரின் இலக்கியப் போக்கும் இவரிடம் பதிந்ததுண்டு.

நக்கீரதேவ நாயனாரைவிட, மிகுந்த அளவு பழமொழி களைச் சீரிய வகையில் இவர் கூறுகிறார். இவரது உவமைகள் ஆரமுதாய் இனிக்கின்றன; மிகச் சிறப்பான புது உவமைகளாய் உள்ளன. மிக நீண்ட அடிகளில் உவமை கூறுதல் இவரது நெறியாம்.

இவரளவு உருவகத்தைப் பிறர் ஆளவில்லை, நீண்ட உருவகங்களைக் கூறுதல் இவரது சிறப்பியல்பாம்.

நம்பியாண்டார் நம்பியின் இலக்கியப் போக்கும் புலமைக் கூறுகளும் :

நம்பியாண்டார் நம்பி, சமய உண்மைகளையும் பாடு பொருளாகக் கொண்டுள்ளார். கற்பனையும் புனைவும் இவர் பாடல்களில் சிறந்துள்ளன. அனுபவம் ஏறஏறக் கவிப் பண்பு சிறக்கக் காணலாம். முன்னோர் கற்பனைகளை நம்பியாண்டார் தழுவிக் கொள்கிறார்.

சங்க இலக்கியம் :

சங்க இலக்கியங்களில் தலைவியின் இளமை நலத்திற்கும் எழில் நலத்திற்கும் நகர்களை உவமையாகக் கூறுதல் பரந்து பட்ட வழக்காறாகும். இப்புலவரும் இதனைப் பின்பற்றுகிறார்.

" மாமதில் சண்பை நகரன்ன பேரமைத்தோள்
திருந்திழை......." (ஆ. பி. திரு. அ. 9)

"ஞானசம் பந்தன் புறவ மன்ன
விற்பா நுதலிதன் மென்முலை இன்னிளம் செல்வி."

—(ஷை-30)

இந்நூலில் பா. 10, 34, 36, 56 ஆம் பாடல்களில் இம்மரபைக் காணலாம். மாணிக்கவாசகரின் திருக்கோவையாரில் இதனை யொத்த கற்பனை மிகுதி. பின்வந்த நம்பியாண்டார் இதனைப் பின்பற்றுகிறார்.

திருக்குறளாட்சி :

திருக்குறளின் நடையும் கற்பனையும் எவரையும் கவரும் இயல்பின. காப்பியப் புலவர்களும் சிற்றிலக்கியம் செய்தோரும் குறளை எடுத்தாண்டுள்ளனர். சமயக் குரவர்களும் குறளைக் கையாண்டனர். நம்பியாண்டாரும் குறட்கருத்தைக் கூறுகிறார்.

ஆளுடையபிள்ளையார் பாடலை, விரும்பினார்க்கல்லது 'நெடும்பிற விக்கடல் நீந்துவ தறிதே!" (ஆ பி. மு. கோவை. 1) என்பர் நம்பியாண்டார். இது, இறைவனடி சேராதார் 'பிறவிப் 'பெருங்கடல் நீந்துவர், நீந்தார் என்ற குறட்கருத்தை அடியொற்றியது.[1]

"தேன்தலை ஆன்பா லதுகலந் தாலன்ன சீரனை" கோயில். திரு. ப. வி. 64) என்று நம்பியாண்டார் இறைவனைப் பாடுகிறார். இது "பாலொடு தேன் கலந் தற்றே" என்ற குறட்கருத்தைத் தாங்கியதன்றோ?[2]

பிற இலக்கியம் :

"ஞானசம்பந்தரை வீதியில் உலாவரக் கண்ட மகளிர், "வெல்களிற்றை மெள்ள நடவென்று வேண்டுவார்" (திருவுலா மாலை 127) என்பர்.

இது,

"எலாஅ மடப்பிடியே யெங்கூடற் கோமான்
புலாஅல் நெடுநல்வேல் மாறன் ... உலாஅங்கால்
பைய நடக்கவுந் தேற்றாயால்!"

என்ற முத்தொள்ளாயிரத் தலைவி பேச்சின் சாயலன்றோ?[3]

உலாமாலை மகளிர், களிற்றை வேண்டுவர். முத்தொள்ளா யிரத் தலைவி பிடியை வேண்டுவள். ஆயின் கற்பனை ஒன்றே.

திருவுலாமாலையிலே மற்றுமோர் இடத்தில்,

"அங்கோல் வளை இழக்கப் போவது நின்னுடைய
செங்கோன்மை யோஎன்று செப்புவார்" (கண்ணி 132-133)

என்று வரும், அடிகளும், முத்தொள்ளாயிரப் பாடலின் கருத்தை ஒட்டியதே.

"அங்கோ லாளிவளையே கொல்லாதோ மற்றவன்
செங்கோன்மை செந்நின்ற வாறு"

என்பது காணலாம்.[4]

திருவாசகம்

"பயில்கின் றிலேன் நின் திறத்திரு நாமம் பனிமலர்த்தார்
முயல்கின் றிலேன் உன் திருவடிக் கேஅப்ப முன்னு
தில்லை."

(கோயில். ப. வி. 4)

இதே கருத்தையும் நடையையும் திருவாசகத்தில் காணலாம்.

"இருந்துநல மலர்புனையேன் ஏத்தேன்நாத் தழும்பேறப்
பொருந்தியபொற் சிலைகுனித்தாய் அருளமுதம்
புரியாயேல்"

(திருச்சதகம் 13) என்றும்,

"பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமானின் திருக்கோயில் தூகேன்மெழுகேன்
கூத்தாடேன்.',

என்றும் கூறுமிடத்துக் காணலாம்.[5]

'தில்லையான் அருளில்லையானால் வானத்தரசும் வேண்டா; கீழ்ஏழ் நரகமும் நல்கும்' என்ற நம்பியாண்டார் வாக்கு, (கோயில். ப. பா. 23) திருவாசகக் கருத்தை உள்ளடக்கியதே!

"கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு, குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லால்நர கம்புகினும்
எள்ளேன் திரு வருளாலே யிருக்கப் பெறினிறைவா."

(திருவாசகம்)

"பெற்றது கொண்டு பிழையே பெருக்கி சுருங்குமன்பின்"[7]
என்ற மணிவாசகர் வாக்கை, நம்பியாண்டார்

"பிழையா யினவே பெருக்கிநின் பெய்கழற் கன்புதன்னில்
நுழையாத சிந்தையி னேனை" (கோயில். ப வி. 34) என்று எடுத்து ஆள்கின்றார்.

''வேண்டும் வேண்டும் மெய்யடியார் உள்ளே விரும்பி
யெனையருளால்
ஆண்டா யடியேன் இடர்களைந்த அமுதே!''

என்பது திருவாசகம்.[8] இதன் கருத்தை நம்பியாண்டார்,

''என்னையும் மெய்ம்மையின் தன்னடியார் தரத்தருவான்'' (கோயில். ப. வி. 41) என மொழிகுவர்.

கோயில். திரு. ப. விருத்தப்பா. 39, 46, 48, 55, 64 ஆகிய பாடல்களின் கருத்து சொல். இவை திருவாசகத்தில் வருகின்றன. திருக்கோவையார்க் கருத்தும், துறையும் ஆளுடையபிள்ளையார் திருவந்தாதியில் வருகின்றன. ஆகவே, 'நம்பியாண்டார் மாணிக்க வாசகரின் நூலை ஓதி உணர்ந்து கையாண்டார் என்பதும், நம்பியே. திருவாசகத்தை எட்டாம் திருமுறை'யாக வகுத்தார் என்பதும் போதரும்.

கற்பனை :

நம்பியாண்டார், தம்கற்பனையையும் புனைதிறத்தையும், ஒரே அடியிற்கூடக் காட்டிவிடுகிறார்.

தலைவியின் கண்கள் நீண்டு புடை பெயர்ந்து ஒளிர்கின்றன; தலைவனையும் கவர்கின்றன. இங்குத் தலைவியின் கண்ணழகைக் கவினைக் கட்டுரைக்கிறான் தலைவன்.

''காதின் அளவும் மிளிர்கய லோசொல்லு காரிகையே!''
(ஆ. பி. திரு. அ. 17)

இதே புனைவு மற்றுமோர் இடத்தில் வருகிறது.

''காதின் அளவு வந்து மீளும் கருங்கண்ணி''
(ஆ. பி. திரு. அ. 62)

மகளிர் நகிலுக்குத் தாமரையை உவமை கூறல் இயற்கையானது. இது பரந்துபட்ட கவிமரபு நம்பியாண்டார் இயல்பாக இவ்வுவமையை ஆள்கிறார்.

நீர்நிலையில் தாமரைகள் நிவந்து காணப்படுகின்றன. பல தாமரை மொட்டுகள் காடாக மண்டி உள்ளன. பல மொட்டுள்ளும் எந்த இரண்டும் தலைவியின் கவின்முலைக்கு நிகராக இல்லை. நிறத்தாலும் வடிவாலும் ஒவ்வாமை கண்டு அத்தாமரைக்காடே வருந்திற்றாம். ஒரு அடியில் இங்ஙனம் கூறி விடுகிறார்.

"பொற்றா மரைக்கா வருந்தும் திரள்கொங்கை மங்கையை"
(ஆ. பி. திரு. மு, கோவை 30)

ஆனைமுகத்தவன் வடிவுச் சிறப்பை வருணிப்பது அழகிது:-

"முகத்தது கை யந்தக் கையது மூக்கந்த மூக்கதனின்
அகத்தது வாய்அந்த வாயது போலும் அடுமருப்பே"
(திரு. நா. வி. இ. மணிமாலை 6)

இதனையொத்த நடை, சிறுபாணாற்றுப்படையில் வரக் காணலாம்.[9]

சமணர் நீராடாதவர்கள், ஆகவே கழுவாத உடலை உடையவர்கள் கவுணியர் தீபன்-கனல், புனல் வாதத்தால் மதுரையில் இவர்களை வென்றார். அதனால் அவர்கள் உடல் கழுவில் ஏறின. இதனை ஒரே அடியில் அழகுற முரண் தொடையால் அமைக்கிறார்.

"பறித்தலைக்குண்டர் தங்கள் கழுவா உடலம் கழுவின்"
(ஆ. பி. திரு. அ. 287) என்ற ஆட்சி மாட்சியுடையது

ஒரே சொல்லையே பலபொருள்படப் பயன்படுத்தும் திறமும் இவர்பால் உண்டு.

"வளைபடு தண்கடற் கொச்சை வயவன் மலர்க்கழற்கே
வளைபடு நீண்முடி வார்புன லூரன்நன் நீரிலங்கு
வளைபடு கண்ணியர் தம்பொதுத் தம்பலம் நாறுமிந்த
வளைபடு கிங்கிணிக்கால் மைந்தன்!"
(ஆ. பி. திரு. அ. 89)

ஈண்டு எதுகையில் ஒரேசொல் வருகிறது. ஆயின் வெவ்வேறு பொருளில் வருதல் காணலாம்.

முதலடிமுதற்சீர் 'வளைபடு' என்பதற்குச் 'சங்குபொருந்திய' என்பது பொருள். இரண்டாமடி முதற்சீர் 'வளைபடு' என்பது 'வணங்குகின்ற' என்று பொருள்படும். மூன்றாமடியில் வரும் 'வளைபடு' என்பது 'வகையுளியாக' உள்ளது. நீரில்அம் 'குவளைபடு' என்பது அங்ஙனம் வந்தது. ஈண்டு குவளை மலரைக் குறித்தது. நான்காம் அடியில் 'வளைபடு' என்பது 'வளைகின்ற' எனும் பொருளது. இங்ஙனம் சிறப்புறச் சொற்களைப் பயன்படுத்துகிறார். "வந்த ஒலியே மீண்டும்

மீண்டும் வந்து சிறக்குமானால், ஒலிநயம் யாப்பு இரண்டும் சிறத்தல் உறுதி'' என்பார் ரிச்சர்டு.[10] இது நம்பியாண்டார் நம்பிக்கும் பொருந்தும்.

ஒரே சொல்லையே மீண்டும் மீண்டும் அடுக்கிச் சொற் பொருள் பின்வருநிலை அணிபடப் பாடியுள்ளார்.

''கார்முழக்கம் மற்றைக் கடல்முழக்கும் மேற்கலந்த
சீர்முழக்கம் எங்கும் செவிடுபடப் பார்விளங்கு''

(ஆ. பி. திருவுலாமாலை. அடி 52)

மரபு மாற்றம் :

உலாப்போந்த திருஞானசம்பந்தரின் திருமார்பில் அணி செய்யும் தாமரை மாலையைப் பெறப் பெண்டிர் விரும்பினர். அஃது எளிதாகக் கிட்டவில்லை. மகளிர் காதல் வேகத்தால் அணிநலன்கள், ஆடை, நாண் ஆகியவற்றைத் தோற்றார்கள். தோற்றவர்கள், எப்படியும் வெல்ல வேண்டும் என்று கருதிப் போர் தொடுத்தார்கள் போர் செய்தற்குரிய காரணத்தையும் கற்பித்தார்கள் திருமார்பில் உள்ள மாலையை அவர் தாராராயின் வலிந்தேனும் 'நாம் கொள்வோம்' என்று அக் காமன்படை துணிந்ததாம்.

''ஒண்கலையும் நாணும் உடைத்துகிலும் தோற்றவர்கள்
வண்கமலத் தார்வலிந்து கோடுமெனப்-பண்பின்
வடிக்கண் மலர்வாளி வார்புருவ வில்மேல்
தொடுத்ததரம் தொண்டை துடிப்பப்-பொடித்தமுலைக்
காசைக் கருங்குழலார் காதற் கவுணியன்பால்
பூசற் கமைத்து புறப்படுவார்.''

(ஆ. பி. திரு. மாலை 128-131)

ஈண்டு மகளிர் நாணிழந்து தாரினை வலிந்து கொள்ளப் புறப்பட்டனர் எனக் காட்டுதலும் பெண்டிர்போருக்கு எழுதலும் கவி மரபிற்கு ஒவ்வாது. இத்தகு கற்பனைகள் சங்கக் கற்பனை யோடு மாறுபட்டதே! ஆயின், உலாப்பிரபந்தம் தோன்றிய காலத்தில் இப்புனைவுகள் வந்து விட்டன. திருக்கைலாய ஞான உலாவிலும் இத்தகு கற்பனை வருகிறது. (அடி, 62-67). இது பற்றியே உரையாசிரியர் நச்சினார்க்கினியர் இவர்களைப் பரத்தையர் என்றார்.[11]

நம்பியாண்டார் நம்பி முற்றுத் தொடர்களைச் சிலபோது ஆண்டு ஓசை சிறக்கச் செய்கிறார்.

"தைவார் நலனழிவார் நாணோடு பூணிழப்பார்
மெய்வாடு வார்வெதுள்வார் வெய்துயிர்ப்பார்"

(ஆ. பி திரு. மாலை 139)

மேலும் இவர் 'வகையுளி'யை மிகுதியாகப் பயன்படுத்தி ஓசை கெழுமச் செய்கிறார்.

"புலனொ டாடித் திரிம னத்தவர் பொறிசெய் காமத் துரிச
டக்கிய
புனித நேசத் தொடுத மங்கையர் புணர்வி னாலுற்
றுரைசெ யடங்குர்
சுலவு சூலைப் பிணிகெடுத்தொளிர் சுடுவெ ணீறிட் டமண
கற்றிய
துணிவி னான்மூப் புர மெரித் தவர் சுழலி லேபட் டிடுத
வத்தினர்.

(திருவேகாதசமாலை 1)

இவ்வியல்பு இவரது எல்லா நூலிலும் ஆங்காங்கே காணப்படுகிறது.

"ஒலிநயம் இல்லாமல், புலவரின் உணர்ச்சியனுபவம் பாட்டின்
சொற்களில் வாழுதல் இல்லை"

என்பார் ஆபர்குரோம்பை [18] ஆகவே ஓசைக்காக வகையுளியாக இவர் பாடுகிறார்.

நம்பியாண்டார் நம்பி, சங்கநூல், திருக்குறள், முத்தொள்ளாயிரம் ஆகிய இலக்கியங்களைக் கற்றவர். இவற்றின் செல்வாக்கு இவரது நூல்களில் படிந்துள்ளது. திருவாசகத்தாக்கம் இவர் பாடல்களில் நன்கு பதிந்துள்ளது.

கற்பனைச் சிறப்பு, சொல்லாட்சிச் சிறப்பு, ஓசைநயம், மரபு மாற்றங்கள், பல்வகைநூல் செய்யும் திறன், இவற்றை இவரிடம் காண்கிறோம்.

வகையுளியாகப் பாடுவதும் செந்தமிழை உவந்து உயர்த்திப் பாடுவதும் இவரது சிறப்புக் கூறுகளாகும். இவற்றை இத்தொகை நூலில் பிற ஆசிரியரிடம் காணவியலாது.

நம்பியாண்டாரின் தமிழ்ப்பற்று

அடைமொழிகள், ஒரு பொருளின் இயல்பைக் காட்ட வருவன. தமிழ் மொழியில் அடைமொழிகள், ஊன்றிப் பார்கக வேண்டுவனவாகும். தமிழ்நாடு, தமிழரசு, தமிழ்க்கவி, தமிழ் மொழி இவற்றில் நம்பியாண்டார் மிகுந்த பற்றுடையவர்.

''இருந்தமிழ் நாட்டிடை'' (திரு. திரு. அ. 26) என்று நாடு ஏத்தப்படுதல் காணலாம்.

''எழிற் சங்கம் வைத்த பெருந்தமிழ் மீனவன்'' (திரு. திரு. அ. 26) என்று சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த அரிய செயலைக் கூறித் தமிழரசனை (மீனவனை)ப் பாராட்டுகிறார். மற்றும் சங்கம் இருந்தமையை

''பொய்ம்மை யில்லாத் தமிழ்ச்சங்கம்'' (திரு. திரு. அ. 49)
என்று கூறுவர்.

'நாவுக் கரையர் பிரான் தன் அருந்தமிழே'' (திரு. திரு. அ. 25)

''செந்தமிழ் பாடிப் படர்புனலில்'' (திரு. திரு. அ. 32)

''முழுத்தமிழின் படிமன்று வேதத்தின் சொற்படி யேபர
விட்டென்உச் சியடிமன்று'' (திரு திரு. அ. 36)

என்ற இடங்களில் தமிழ்க்கவி சிறப்பிக்கப்படுதலைக் காணலாம்

''வண்டமிழ்க்கே இனமாத் தனது பெயரிடப் பெற்றவன்''
(திரு. திரு. அ. 36); 76

''இருஞ்செந்தமிழ்'' (ஆ. பி. திரு. அ. 21)

''வீறதே றுந்தமி ழால்வழி கண்டவன்.'' (ஆ. பி. திரு. ச.வி.5)

''தண டமிழ்க் குண்டாசனி'' (ஷை 7) மும்மணிக் கோவை-1

''பூண்தமிழாகரன்'' (ஆ. பி. திரு. அ. 79)

''தீந்தமிழோர் கண்ணெனை ஓங்கும் கவுணியர்''
(ஆ. பி. திரு. அ. 27)

''செந்தமிழாகரன்'' (ஆ. பி. திரு. அ. 70, 79, 93, 96, 97, 98)

'' அரனடி பரவும் தமிழ்ச்சுவை அறியாத தமபங்களை''
(ஆ. பி. மும்மணிக் கோவை-4)

''சம்பந்தன் தன்மாலை, ''ஞானத் தமிழ் ' (மும்மணிக்
கோவை-11)

''ஒண்முத் தமிழ் பயந்தான் ஊர்'' (ஷெ. 23)

''முத்தமிழின் செஞ்சொற் பொருள்பயந்த சிங்கம்''

(திருவுலாமாலை. வரி. 66)

' வளமலி தமிழிசை வடகலை மறைவல !'' - கலம்பகம் (ஒரு பொரு. பா. 3)

''அறிவாகி இன்பம் செய் தமிழ்வாதில்'' (கலம்பகம். 8)

' தமிழ்க்கடல்'' கவுணிய நற்குல திலகன்'' (கலம்பகம். 17)

''பாலேறிய மதுரைத்தமிழ் விரகன்'' (கலம்பகம்: 21)

''பயன்நிலவு ஞானத்தமிழ் விரகன் (கலம்பகம்: 24)

''வீற தார்தமிழ் விரகன்'' (கலம்பகம். 27)

''என்புனை தமிழ்கொண் டிரங்கி'' (கலம்பகம். 37)

மேற்கூறிய அடைமொழிகளால், தமிழின் மாட்சியும் நம்பியாண்டார் காட்சியில் தமிழ் உயர்ந்திருக்கும் மேன்மையும் நன்கு விளங்கும். இங்கு, தமிழ்-இயல், இசை, நாடகமாகி, முத்தமிழாய் இருப்பதையும், அறிவாகி இன்பம் செய்வதையும் மெய்ப் பொருளாம் இறையைக் காட்டும் 'ஞானத்தமிழாய்' விளங்கு வதையும், மதுரைச் சங்கத்தில் வீற்றிருந்து 'மதுரைத் தமிழாயும்' 'வளமலி தமிழிசை' கொண்டு விளங்குவதையும், எதையும் வென்றும் வீறு ஏறும் தமிழாய் நிகரின்றி நிற்பதையும் நம்பியாண்டார் நீளப் பேசுகிறார்.

தமிழ்க் கவியின் ஆற்றல் இவையென நம்பியாண்டார் நம்பி கூறும் இரு பாடல்கள் (ஆ. பி. திரு. அ. பா. 91; திரு. திரு. அ. 25) ஓதி இன்புறத்தக்கன.

நக்கீர தேவநாயனார் இலக்கியப் போக்கும் புலமைக் கூறுகளும்

அடிக்குறிப்புக்கள்

நக்கீர தேவநாயனார் :

1 Some principles of Literary Criticism. p. 61 - Winchester.
2 நற்றிணை பா. 1 : 4
3 ஐங்குறுநூறு தனிப் பாடல் 3 உ. வே. சா. பதிப்பு 1949.
4 கலித் தொகை 11 : 12–13.
5 பரி பாடல் 3 : 63-64.
6 ஷை 3 : 35-40
7 திருக்குறள் 1168
8 ஷை 436
9 ஷை 7
10 முத்தொள்ளாயிரம் பா. 50 மர்ரே
11 இலக்கிய மரபு ப. 194 டாக்டர் மு. வரதராசனார்
12 முத்தொள்ளாயிரம் 110
13 சுந்தரர் தேவாரம் - திருமழபாடிப் பதிகம் 1
14 திருப்பாவை 4 ஆண்டாள்
15 ஷை ஷை
16 இராமாயணம், நாட்டுப்படலம் பா. 4
17 ஷை கிட்கந்தா. கார் காலப்படலம் பா. 30
18 மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் பா. 24
19 The discovery of poetry - p. 167 Lyon

நக்கீர தேவநாயனார் இயற்கைப் புனைவு :

1 இலக்கிய விளக்கம் ப. 4 1972 டாக்டர் வ. சுப. மாணிக்கனார்
2 தொல் அக. சூ. 3 இளம்பூரணர்

காரைக் காலம்மையார் :

1 இலக்கிய மரபு ப. 31 டாக்டர் மு. வரதராசனார்
1அ திருச்சேறை, குறுந்தொகை பா. 2
2 திருக்காளத்தித் தாண்டகம் பா. 4
3 அங்கமாலை பா. 11

4 திருவாரூர்த் திருத்தாண்டகம் 3
5 பொன், வண்ணம் பா. 26
6 திரு கை. ஞான உலா. கண்ணி. 151 - 156
7 பொன். வண்ணம் பா. 98
8 காரைக்காலம்மையார் - திருமுறை - கரந்தைக் கவியரசு உரை. 1942 முன்னுரை ப. 7
9 மூத்ததிருப்பதிகம் 1, ஸ்ரீ காசிமடத்துப் பதிப்பு 2 - குறிப்புரை
10 ஷை ஷை கழகம். மூத்ததிருப்பதிகம். 4 உரை.
11 மூத்த திருப்பதிகம். 1 பா. 9
12 கரந்தைக் கவியரசு உரை. பா. 9 ப. 9

சேரமான் பெருமாள் நாயனார் :

1 அகநானூறு பா. 131
2 ஷை பா. 26
3 குறுந்தொகை பா. 8
4 திருக்குறள் 1091
5 ஷை பா. 100
6 ஷை பா. 1187
7 சிலப்பதிகாரம் - மங்கல - வரி. 37-40 டாக்டர் வ. சுப. மாணிக்கனார்
8 ஷை காடுகாண் 1732 ஷை பதிப்பு
9 ஷை மனையறம் 121-129 ஷை
10 ஷை நாடுகாண் 1460-1470 ஷை
11 மூத்ததிருப்பதிகம், காரைக்காலம்மையார் 1
12 அற்புதத்திருவந்தாதி பா. 72
13 சிந்தாமணி பா. 2087
14 சிந்தாமணி கோவிந்தை 458
15 நளவெண்பா பா. 20 மர்ரே
16 சிந்தாமணி, நாமகள் 171
17 வில்லிபாரதம், இராசசூயம் 73 மர்ரே
18 Sadhana - pp. 98-99 R. Tagore
19 Principles of Literary Criticism. p-48 Winchester

கபிலர் :

1 திருக்குறள் 35
2 இயற்பா. 1 பொய்கையாழ்வார்
3 சிவபெருமான் திருவந்தாதி பா. 25 கபில தேவர்
4 Convention and Revolt in Poetry pp-10 Lowes.

பட்டினத்தார் :

1 இலக்கிய விளக்கம் ப. 1. டாக்டர் வ. சுப. மாணிக்கனார்.
2 திருமுருகாற்றுப்படை அடி 1–3.
3 புறநானூறு பா. 9, 11.
4 புறநானூறு 10–11.
5 திருக்குறள் 1120.
5அ திருக்குறள் 392
6 திருக்குறள் 27.
7 திருவாசகம். திருச்சதகம் பா. 94.
8 ஷ ஷ பா. 14.
9 ஷ ஷ பா. 26.
10 திருவாசகம்-நீத்தல் விண்ணப்பம் 5.
11 ஷ திருப்படையாட்சி பா. 2.
12 ஷ குழைத்தபத்து-7.
13 அற்புதத்திருவந்தாதி பா. 77.
14 கயிலை பாதி-காளத்திபாதி பா. 88.
15 சுந்தரர்-திருத்தொண்டர் தொகை 1, 10.
16 Poetry and ordinary Reader. p. 64. Ridley

நம்பியாண்டார் :

1 திருக்குறள் 10.
2 ஷ 1121.
3 முத்தொள்ளாயிரம் 51. சேதுரகுநாதன் பதிப்பு.
4 ஷ 93. ஷ
5 திருவாசகம்-திருச்சதகம் 14.
6 ஷ திருச்சதகம் 2.
7 ஷ நீத்தல்வண்ணப்பம் 23.
8 ஷ பிரார்த்தனைப்பத்து 4.
9 சிறுபாணாற்றுப்படை வரி 15–29.
10 Principles of Literary criticism. p. 134-Richards
11 தொல். புறத்திணை சூ. 31.
12 Principles of Literary criticism p. 42-Abercrombie

பதினொராந் திருமுறையில் அகத்திணை

பதினொராந் திருமுறையில் அகத்திணை.

தமிழ் இலக்கியத்தில் அகத்திணை இதயத்தை ஒத்த சிறப்புடையது. அகத்திணையைத் துறந்த பெருங்காப்பியமோ சிற்றிலக்கியமோ இல்லை. பரணி போன்ற புறத்திணை இலக்கியத்திற்கூட அகம் உண்டு. பக்தி இலக்கியம் தோன்றிய காலத்திலும் அகத்திணை, ஒரு நல்லிடம் பெற்றமையை ஒரு முறை படிப்போரும் உணரலாம்

பதினொராந்திருமுறையில், பெண்பாற் கைக்கிளைப் பாடல்கள் பெரும்இடம் பெற்றுள்ளன. சங்க இலக்கியத்தில் வரும் அகத்துறைகள், பதினொராந்திருமுறையில் வருகின்றன. சங்க இலக்கியத்தில் இல்லாத துறைகள் வருகின்றன. மாணிக்க வாசகர் கூறிய துறைகளை வாங்கி இத்தொகை நூலாசிரியர்கள் பாடிய துறைகள் உண்டு. முன்னோர் கூறிய துறைகளில் சிறிது மாற்றம் செய்து புகுத்திய துறைகளும் உள. இத்தொகை நூலாசிரியர்கள் அந்நூல்களில் அறவே இல்லாத புதிய துறைகளாகக் கண்டுரைத்த துறைகளையும் காணலாம்.

நக்கீர தேவநாயனார், சேரமான் பெருமாள் நாயனார், கபில தேவநாயனார், பரணதேவநாயனார், இளம்பெருமானடிகள், பட்டினத்தார், நம்பியாண்டார் நம்பி, ஆகிய இவ்வெழுவரும் இத்தொகை நூலில் அகம்பாடிய புலவர்கள் ஆவர்.

இத்தொகை நூலின்கண்வரும் 1420 பாடல்களில் அகத்திணைப் பாடல்கள் 332. ஆண்டிருக்கும் துறைகள் 204. இவண் உள்ள 40 நூல்களுள் 17 பனுவல்களில் அகத்துறைப் பாடல்களைக் கற்கிறோம்.

அகத்திணைப் பாடல்கள் 98 பாடி முதலிடம் பெறுபவர் நம்பியாண்டார் நம்பி. 78 பாடல்களைப் பாடி இரண்டாமிடத்தைப் பெறுபவர். சேரமான் பெருமாளாவார். 74 பாடல்களைப் பாடி மூன்றாம் இடத்தில் நிற்பவர் பட்டினத்தார் என அறியலாம்.

புதிய துறைகளை நாட்டியவர்கள்-பட்டினத்தாரும், நம்பியாண்டாருமாவர். 33 பாடல்கட்கு எந்த அச்சுப் புத்தகங்களிலும் துறை காட்டப்படவில்லை, ஈண்டு அவற்றைக்கண்டு கட்டுரையாளர் காட்டியிருப்பதைப் பின் இணைப்பில் காணலாம்.

கீழ்வரும் நூல்களில் அகத்திணைப் பாடல்கள் உண்டு எனத் தெரிதல் வேண்டும். (1) திருவலஞ்சுழி மும்மணிக்கோவை (2) கயிலைபாதி காளத்திபாதி (3) திருவாரூர் மும்மணிக் கோவை (4) திருக்கயிலாய ஞானவுலா (5) பொன்வண்ணத் தந்தாதி (6) கோயில் நான்மணிமாலை (7) திருவேகம்ப முடையார் திருவந்தாதி (8) திருவிடைமருதூர் மும்மணிக் கோவை (9) திருக்கழுமல மும்மணிக்கோவை (10) ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி (11) ஆளுடையபிள்ளையார் திருக் கலம்பகம் (12) ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை (13) கோயில் திருப்பண்ணியர் விருத்தம் (14) சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை (15) சிவபெருமான் திருவந்தாதி (கபிலர்) (16) சிவபெருமான் திருமும்மணிக்கோவை (17) சிவபெருமான் திருவந்தாதி (பரணர்).

இந்நூல்களுள் பரணர் பாடிய திருவந்தாதியில்தான் 62 பாடல்கள்அகம்பற்றி மிகுந்த அளவு வந்து முதலில் நிற்கிறது. ஆயின் சுவை ததும்புவதாகச் கூற இயலாது அடுத்த நிலையில் பட்டினத்தாரின் திருவேகம்பமுடையார் திருவந்தாதியில் 57 பாடல்கள் அகமாக உள்ளன.

தொல்காப்பியர் காலத்தில் கைக்கிளைப் பாடாண்பாட்டு இருந்ததோடன்றித் தெய்வங்களோடு தொடர்புடைய கைக்கிளைப் பாடாண்பாட்டும் இருந்திருக்கின்றன. ஆகவே' அவர் “காமப்பகுதி கடவுளும் வரையார் ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்” என்று விதி செய்தார்.[1] ஆனால் இளம்பூரணர், நச்சினார்க்கினியர் போன்றோர் தம் உரையில், புறப்பொருள் வெண்பாமாலைப் பாடலையே சான்றாகக் காட்டினர். இது பிற்காலப் பாடல். மானிடர், தெய்வத்திடம் காதல் கொண்டதாக வரும் அகத்துறைப் பாடல்களைப் பாடாண் கைக்கிளையில் நாம் அடக்க வேண்டும். “முன்னம் அவனுடைய] நாமம் கேட்டாள்” என்ற திருநாவுக்கரசர் பாடலையும் திருஞான சம்பந்தரின் சில பாடல்களையும்[2] பத்தித் துறையில் 'முதலில் கிடைக்கும் அகத்துறைப் பாடல்கள் என்பதாகக் கூறிவருகிறோம், இது பொருந்துமாறில்லை. தொல்காப்பியர் காலத்திலேயே இப்படிப்பட்ட பாடல்கள் இருந்தன அவை கிடைக்கவில்லை இடைக்காலத்தும் இத்தகு பாடல்கள் இருந்தன. இத்தொகுதி யுள் கிடைக்கும் அகத்துறைப் பாடல்களுள் நக்கீரதேவநாயனார் பாடல்களும், சேரமான் பெருமாள் நாயனார் பாடல்களும் காலப் பழமை உடையவை எனினும் இவற்றை உரையாசிரியர்கள்

காட்டவில்லை. இவர்களைப் பின்பற்றிப் பிற ஆசிரியர்கள் பத்தி நிலையில் பாடும்போது இம்மரபைப் போற்றினர், தத்துவக் கருத்துக்கள் பெருகியகாலை, இந்த அகத்துறைப் பாடல்கட்கு உள்ளுறை கற்பித்து விரிவுரை செய்தனர்.

மணிவாசகரின் திருக்கோவையாரை அகத்துறைப் பாடல்களாக மட்டும் கொள்ளாமல், மெய்ப்பொருள் உண்மைகள் இருப்பதாய் விளக்கியிருக்கிறார்கள். இது சைவர்கள் கண்டது; நம்மாழ்வார் பாடல்கட்கு வியாக்யானம் செய்தவர்கள், இகபர செய்திகளை எல்லாப் பாடல்கட்குமே தந்து விளக்கம் செய்திருக்கிறார்கள். இது வைணவர்கள் தொண்டு. இத்தகு விளக்கந் தான் புதுமையே தவிர, தெய்வத்திடம் மானிடர் காதல் கொண்டதாகப் பாடுவது தொல்காப்பிய நெறியேயாம்.

பாட்டுடைத் தலைவர்களைப் பற்றித் திருக்கோவையார், பாண்டிக்கோவை, தஞ்சைவாணன் கோவை முதலியவற்றில் கேட்கிறோம். பின்வந்த இலக்கணிகள், பாட்டுடைத் தலைவன், கிளவித்தலைவன் எனப் பிரித்து வளர்த்திருக்கிறார்கள். இவ்வமைப்பின் கூறுகளும், சங்க இலக்கியங்களில் இலைமறை காய்மறையாய்' விளங்குகின்றன. 'பாரியின் தண்கயம் போல் குளிர்ந்த தலைவி,'' என்ற இடங்களில் வரும் பாரியைப் பற்றிய செய்தி, ஒருமுறையில் பார்த்தால் பாட்டுடைத்தலைவனைக் குறிப்பது போலாம். சங்க அகப்பாடல்களில் உவமை முகமாக வரும் தலைவர்களைப் பற்றிய செய்திகள், பிற்காலப் பாட்டுடைத் தலைவனைப் பற்றி மொழிவதோடு ஒக்கும். ஆகவே, பாட்டுடைத் தலைவர்பற்றிய கருத்து முன்னரே கிளைத்து விட்டது எனலாம்.

தெய்வத்திடம் காதல் கொண்டதாகப் பாடிய அகத்துறைப் பாடல்களை நக்கீரதேவநாயனார் பாடுகிறார்.

நக்கீரதேவநாயனார் பாடும் அகப்பாடல்கள் :

நக்கீரதேவநாயனாரின் 9 நூல்களுள், திருவலஞ்சுழி மும்மணிக்கோவை 15 பாடலும் அகப்பாடல். கயிலைபாதி காளத்திபாதியந்தாதி என்ற நூலில் 100 பாடலில் 28 பாடல்கள் அகத்துறையுடையன. ஆக இருநூல்களில் 43 அகப்பாடல்கள் உள.

காதல் பாடல்களைக் கவிஞனே, தன்னுணர்ச்சிப் பாடல்களாகப் பாடினால், பல்திற உணர்ச்சி வகைகளைக் காட்ட

இயலாது சுவை குன்றும். ஆகவே, கவிஞர்கள் சில பாத்திரங்களைப் படைக்கின்றனர். இதனால் உணர்ச்சிக் கூறுகள் வேறு படும். பலவகையான மனநிலைகளைக் காட்ட வழி ஏற்படும். ஆகவே பாத்திரங்களும், கூற்று வகைகளும் பலவாக ஆயின.

கீழ்க்கண்ட கூற்று வகைகளைக் கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி நூலில் காணலாம். நாடகமுறையில் கூறுதல் இலக்கிய உத்தியன்றோ? அகத்துறைக் கூற்றுக்கள் அத்தகையன.

1. மகளைப் பிரிந்த நற்றாய் இரங்குவது–(கயிலைபாதி–பா. 27 34, 35, 58).
2. துயர்தீர்க்க முந்தும் செவிலி கூற்று–(கயிலைபாதி–பா. 36 59)
3. தோழி கவன்று பேசுதல் (ஷை 28, 41).
4. தலைவியே தன் மையலையும் துயரையும் மனந்திறந்து பேசுதல் (ஷை 29, 42, 45, 62-65, 69, 75-80, 82, 90, 94, 95.).

இனிய அகப்பாடல் கருத்துக்களை இனிக் காணலாம். செவிலி பேசுகிறாள். "இவள் மால் கொண்டிருக்கிறாள்" மயக்கம் தீர மூன்று காரியம் செய்யவேண்டும். (சிவபெருமான்) பூசும் திருநீற்றை இப்பெண்ணுக்குப் பூசுங்கள். இவளுக்குக் காளத்தி மலையைக் காட்டுங்கள்; கமழ்கொன்றைமாலையும் (சிவன் சூடியது) சூட்டுங்கள். இவளுக்கு நல்லது செய்யக் கருத்தாயின் இவற்றை இயற்றுங்கள் என்கிறாள். (கயி-பா 36).

தலைவியே ஓரிடத்துக் கேட்கிறாள். "ஐயன்மீர்! நும்குண இயல்பு நன்றாக இருக்கிறது. உம்மை உணரும்போது உருத் தெரியக் காட்டவில்லை. (கனவில் உருக்கண்டு விழித்தபோது இல்லை) ஆயின் நீர் என்னுடன் கலந்தபோதோ ஆரமுது போல் இனிக்கிறது; விழித்தால் ஆள் இல்லை" - என்ற பாடல் திட்ப நுட்பம் செறிந்ததாகும். இறைவனை மெய்ம்மையாக உணரத் தொடங்கிவிட்டால், பெயர்-உரு (நாமரூபம்) தெரிவதில்லை. முத்தியின்பத்தில் கலந்துவிட்டால் சாவாமூவாத் தன்மை பெற்று உவக்கிறோம் என்ற பொருளும் இங்குக் கிடைக்கிறது. ஆகவே இப்பாடல் சிலேடை வெண்பா (கயிலை-பா-45).

அகத்துறைப் பாடல்களில் தலைவியோ, தலைவனோ சில இயற்கைப் பொருட்களை விளித்துப் பேசித் தம் காதல் நிறைவேற உதவுமாறு வேண்டும் ஒரு மரபு உண்டு. இது குறித்துத் தொல்காப்பியம் பேசும்.[3] இதனைக் 'காமம் மிக்க கழிபடர்கிளவி'

என்பர் பிற்காலத்தார். இது, சங்க இலக்கியம் தொட்டுச் சமய இலக்கியம் வரை தொடரக் காணலாம். இம்மரபு இவ்வாசிரியரிடமும் உண்டு.

நெஞ்சு, சிறுகிளி, மடக்குருகு, இருங்கடல், இளமதி, ஒளிவண்டு, போரேறு, குயிற்பிள்ளை இவற்றைப் பார்த்துத் தனக்கு எவ்வகையிலேனும் உதவுமாறு தலைவி வேண்டுகிறாள். இப்பாடல்களில் வந்த சில பொருள்களை வைத்து நம்மாழ்வார், ஆண்டாள், மாணிக்கவாசகர் ஆகியோர் பத்துப் பாடல்கள் பாடித்தம் கைக்கிளைக் காதலைக் காட்டுகின்றனர். இவ்வாசிரியர்கள் காலத்தால் பிற்பட்டவர்களாதலின், இவர்கள் பாடல்கட்கு நக்கீரதேவநாயனார் முன்னோடியாகிறார். இங்குப் போரேற்றை விளித்துப் பேசுவது புதுமை.

தூதுப் பொருள்களைப் போக்கும் போது, மற்றுமோர் செய்தி உண்டு. "நீ தலைவனிடம் தூது சென்று பேசிக் காதலைத் தெரிவித்துவிட்டு அதற்குச் சான்றாக அவன் மாலையை வாங்கிவா" எனத் தலைவி அடையாளமாலை கேட்பாள். தூது இலக்கணத்தில் இதுவுமொரு பகுதி ஆகும். இதனையொத்த பாடலொன்று இங்குண்டு. 'காமந்தான் மீதூர நைவாட்குன் கார்கொன்றைத் தாமந்தா மற்றிவளைச் சார்ந்து". (கயி-பா. 59).

திருவலஞ்சுழி மும்மணிக்கோவை :

மேற்கண்ட நூலில் 15 பாடல்களும் அகத்துறைப் பாடல்களே! இப்பாடல்களில் கிளவித் தலைவன், பாட்டுடைத் தலைவன் ஆகிய இருவகையினரையும் காணலாம். கூற்று வகையாகப் பார்த்தால் ஐவகையினர் கூற்று இவண் உண்டு.

(1)	தலைவன் கூற்று	பா. 6, 9, 10
(2)	பாங்கன் கூற்று	பா. 4
(3)	தலைவி கூற்று	பா. 8, 11, 13
(4)	தோழிகூற்று	பா. 5, 7, 14
(5)	கண்டோர் கூற்று	பா. 12

இந்நூலில் வரும் துறைகள் பண்டைய இலக்கியங்களில் கண்டவையே; இவற்றில் புதுமையில்லை 'காமம் மிக்க கழிபடர் கிளவி' என்ற துறையை இவர் அழகாக ஆள்கிறார். பாடுவகைகளை நோக்குங்கால் நக்கீரதேவநாயனார் அகத்துறை அறிவு முற்றிய அறிஞர் என்பது போதரும்.

சேரமான் பெருமான் பாடும் அகப்பாடல்கள் :

அகத்துறைச் செய்திகளையும் மாபுகளையும் சேரமான் சிறந்த முறையில் ஆள்கிறார். திருவாரூர் மும்மணிக்கோவை முப்பது பாடல்களும் அகத்துறைப் பாடல்களே! திருக்கைலாய ஞான உலா, பெண்பாற் கைக்கிளைப் பாடாண்பாட்டாக வருவது- 1 பொன்வண்ணத்தந்தாதி 100 பாடல்களில் 47 பாடல் கள் அகப்பாடல்கள்; ஆகவே இதில் ஏறத்தாழ பாதி அகப் பாடல்களாக உள்ளன. ஆக, இவர் பாடிய அகப்பாடல்கள் மொத்தம் 30+1+47=78 ஆகும். இவர் செய்த மூன்று நூல்களில் இரண்டு முழு அகமாகவும், ஒன்று பாதி அகச் சார்பாகவும் உள்ளன.

திருவாரூர் மும்மணிக் கோவையில் தோழி கூற்றுக்களே மிகுதி-(13) தலைவி கூற்று அடுத்த நிலையில் உள்ளது (8). செவிலி கூற்று ஐந்தும் தலைவன் கூற்று மூன்றும், கண்டோர் கூற்று ஒன்றும் ஆக முப்பது பாடல்கள் உள.

தலைவன் பரத்தையர்பால் பிரிந்தபோது பேசியதாக 5 துறை கள் வரும். ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு மாற்றம் செய்து கூற்றுக் களைக் காட்டுகிறார், ஆசிரியர். பொன்வண்ணத்தாந்தியில் தலைவி கூற்று 21ம், செவிலி கூற்று 18ம், தோழி கூற்று 8ம் ஆக 47 பாடல்கள் உள. பிறர் கூற்று இல்லை. இங்குத் தலைவி கூற்றே மிகுதி. இறைவனாகிய தலைவன்பால் காதல் கொண்ட தலைவியின் பேச்சும், அவளது நிலையைக் கூறி இரங்கும் செவிலி பேச்சும், தோழி பேச்சும் நாடக முறையில் இடம் பெற்றன. இவை மரபு வழிப்பட்ட கூற்றுக்களே;

தலைவன் அருள் செய்யவில்லை. தலைவிக்கு உள்ளக் கொதிப்பு ஏற்படுகிறது. பெண் மனம் ஊடல் கொள்ளின் என்னாகும்? கீழ்க்கண்டவாறு பேசுகிறாள் :-

‘கடிமலர்க் கொன்றை தரினும்புல்
  லேன்; கலை சாரஒட்டேன்;
முடிமலர் தீண்டின், முனிவன்;
  முலைதொடு மேற்கெடுவன்;
அடிமலர் ‘வானவர்’ ஏத்தநின்
  றாய்க்கழ கல்லஎன்பன்
தொடிமலரித் தோள்தொடு மேல்திரு
  வாணை தொடங்குவனே’ (பொன்வண்-63)

தோழி, தலைவியின் ஏக்கத்தைக் கண்டாள். தலைவனின் ஏற்றமிகு வீரச் செயல்களையும், தலைவிக்கு இவன் செய்யும் முரண் செயலையும் நினைந்தாள். தலைவன் தக்கவாறு அருள் செய்யாமையை எண்ணித் தலைவனை நோக்கிக் கூறத் தொடங்குகிறாள்.

இறைவனே தலைவனாய்க் காட்டப்படுதலால் புராணச் செய்திகள் (வீரச்செயல்கள்) அடுக்கப்படுகின்றன.

''தறித்தாய் அயன்தலை, சாய்த்தாய்
சலந்தர னைத்தழலாப்
பொறித்தாய் அனங்கனைச் சுட்டாய்
புரம்புன லுஞ்சடைமேற்
செறித்தாய்க் கிவைபுகழ் ஆகின்ற
கண்டிவன் சில்வ ளையும்
பறித்தாய்க் கிதுபழி ஆகுங்கொ
லாம் என்று பாவிப்பனே'' (பொன்வண்-81)

என்றாள். 'இந்த அழிவு வேலைகள் அருளால் நிகழ்ந்தவை. நீ, இவள் பொருட்டு அருள் காட்டாமல் அவளையே அழிக்கிறாய். உன் சிறப்பிற்கு இஃது ஏலாது'' என்பது கருத்து. அருள் வீரம்-அழிவு இவற்றை இணைத்துப் பேசுவது அழகிது

திருவாரூர் மும்மணிக்கோவையில் ஒரு பாடல்; இதுவே முதற் பாடல். கார்ப்பருவம் கண்டு ஆற்றாளாய தலைவியைத் தோழி கண்டு கவல்வது.

கார்மேகம் மழையைப் பொழிந்தது. தலைவியின் காதணி மின்னலை ஒத்து விளங்க, புருவம் வானவில்லாய் வளைய, சிவந்தவாய்-இந்திர கோபப் பூச்சியைக் காட்ட, கைகளாகிய காந்தள் மலர, பல்லாம் முல்லை அரும்ப கூந்தலும் தேமலும் கொன்றை காட்ட, மேனி-மயிலின் சாயல் காட்ட, ஆற்றாளாய்ப் பெருமூச்சாம் ஊதைக் காற்றை வெளிப்படுத்திக் கண்ணீராம் பெருமழை பொழிந்து மார்பணியாம் மணி, பொன், வயிரம், அகில், சந்தனம், ஆகியவற்றைக் கண்ணீர் மழை அடித்து ஈர்ந்துவர, முலையாம் மலைமுகட்டில் பட்டு இழிதர கார்ப் பருவத்தின் தோற்றத்தைத் தலைவி காட்டினாள். (திருவாரூர். மு. கோவை, 1) என்ற இக்கற்பனை புதிது; மிக அழிகிது.

உள்ளுறை :

சங்க இலக்கிய மரபைத் தழுவிச் சேரமான், உள்ளுறை வைத்து ஒரு பாடல் பாடுகிறார். பதினொராந்திருமுறையில் உள்ளுறை வைத்து ஒரு பாடல் பாடுகிறார். பதினொந்திரு முறையில் உள்ளுறை உள்ள பாடல் இதுவொன்றே.

பரத்தையிற் பிரிந்த தலைவனுக்குப் பாணன், வாயிலாக வருகிறான். அது கண்டு தோழி வெகுண்டு மொழிகிறாள்.

''பாண! கருவுற்ற தன்பெடை, கருவுயிர்க்கும் காலம் கருதிச் சேவல் அதற்கான இடத்தை வகுக்கவிரும்பி, அன்பால் பெடையைப் பல்கால் தழுவி, அரிதிற் பிரிந்து, கரும்பின் நுண்டோடுகளைக் கவர்ந்துவரும் நீர் நாடன், நம் தலைவன், அவர்க்கு நீயோ, பார்வை விலங்காகவும், பரத்தையரைப் பிடிக்கும் வலையாகவும் விளங்குகிறாய். வஞ்சகம் பேசி. கள்ளனைப் போல விழித்து என்னைக் கைதொழுது என் வாயிலில் நிற்கிறாய், தலைவனோ கண்ணாடி முன் பாவை போல, தன்னியல்பின்றி, பரத்தையர் கருத்து வழி ஒழுகுகிறான். ஆகவே, நின் பொய்மொழிகளை ஏற்கமாட்டேன்'' என்றாள்.

''மனைஉறை குருவி வளைவாய்ச் சேவல்
சினைமுதிர் பேடைச் செவ்வி நோக்கி
ஈனில் இழைக்க வேண்டி ஆனா
அன்பு பொறைகூர மேன்மேல் முயங்கிக்
கண்ணுடைக் கரும்பின் நுண்தோடு கவரும்
பெருவளந் தழீஇய பீடுசால் கிடக்கை
வருபுன லூரன் பார்வை யாகி''

— (திருவாரூர் மு. கோவை : 19)

என்ற இப்பாடல் அடிகளில் உள்ளுறை அமைந்திருக்கிறது. கருவுற்ற பெடையைச் சேவற்குருவி, தழுவி, கருவுயிர்க்க அறை முதலியன சமைக்க முயன்று நுண்டோடு கொணர்தல்போல, தலைவன் மனையில் தங்கி கடமைகளை ஆற்றாமல் புறவொழுக்கத்தால் துன்பம் தருகிறானே என்ற உட்குறிப்பும் (தொனிப் பொருளும்) ஈண்டு இருக்கிறதன்றோ?

மேலும் இப்பாடலில் இருவேறு குறுந்தொகைப் பாடல்களின் சாயல்கள் படிந்திருக்கக் காணலாம்.[4]

பட்டினத்தார் பாடும் அகப்பாடல்கள் :

பட்டினத்தார் எழுதிய நூல்கள் ஐந்தில், ஒரு பா ஒருபஃது தவிர, மற்றைய நானகு நூல்களிலும் அகத்துறைப் பாடல்கள் உள.

(1)	திருவேகம்பமுடையார் திருவந்தாதியில் வரும் பாடல்கள்	57
(2)	கோயில் நான்மணியில் வரும் பாடல்கள்	12
(3)	திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில்வரும் பாடல்கள்	3
(4)	திருக்கழுமலமும்மணிக்கோவையில் வரும் பாடல்கள்	2
	ஆக பாடல்கள்	74

இவரது 210 பாடல்களில் 74 பாடல்கள் அகத்துறை உடையவை. இவற்றில் வந்துள்ள துறைகள் 55. புதிய துறைகள் என்று கூறத்தக்கன 9. இவை, துறை வளர்ச்சியைக் காட்டும். இலக்கியங்களில், காவியங்களில் கண்ட செய்திகளை அகத்துறையாக ஆக்கிய அருமை, இவரிடம் உண்டு.

காவல் புனத்தைப் பிரியும் தலைவி, கிளி, புனம் இவற்றிடம் விடைபெறுவதாய் இவர் கூறுகிறார். (திருவேகம்-24). சங்க இலக்கியங்களில் பாவை, பந்து இவற்றுடன் புலம்புவதாய் வருந்துறையின் வேறு படிமே இது. தலைவன் வறும்புனங் கண்டு வருந்தியது ஒரு துறை (ஷ 25). தலைவன் இறந்தபின்னர் (கோப்பெருஞ்சோழன்) வறிய அரண்மனையைக் கண்டு இரவலரும் புலவர்களும் வருந்துகிறார்கள். அதன சாயல மேலே கண்ட துறையில் இல்லையா? அது புறம்; இஃது அகம்

தலைவன், பொழில் முதலியன நோக்கித் "தலைவி சென்ற இடத்தைக் கூறுக" என்பது ஒரு துறை (ஷ 26). கம்பர் காவியத்தில் சீதையைப் பிரிந்த இராமன் மரம், பொழில். மான் இவற்றை விளித்து வினவுவது இதனை ஒத்தது. இதற்கு முந்திய அகப்பாடல்களிலோ கோவை நூல்களிலோ இத்தகு துறையில்லை. செவிலி, தோழியிடம் கூறித் தலைவியின் நிலைமையைத் தலைவன்பால் உணர்த்தக் கூறியது. (ஷ-31) புதுமையாகும்; இது மரபு மாற்றமுமாகும்.

சுவைப் பாடல் சில வருமாறு:

தலைவியின் எழில் நலங்களைத் தலைவன் கீழ்க்கண்டவாறு பாராட்டுகிறான்.

"கலவ மயில னார்சுருள்கரிய குழலி னார்குயில்
கருது மொழியி னார்கடை நெடிய விழியி னாரிதழ்
இலவில் அழகி யாரிடை கொடியின வடிவி னார்வடி
வெழுதும அருமை யாரென திதய முழுதும ஆள்வரே!
(கோயில் நான். 23)

இங்கு விழுமிய ஓசையும் புனைவும் விருந்தாய் அமையக் காணலாம்.

தலைவியின் இளநலத்தையும் செவ்வியையும் சிந்தை செய்கிறான், தலைவன்.

"...... .. — மருத
வனத்தன்னம அன்னவரைப்
பூமேல அணிந்து பிழைக்கச்செய் தார்ஒரு பொட்டுமிட்டார்
தாமே தளர்பவ ரைப்பாரம் ஏற்றுதல் தக்கதன்றே!"
(திருவிடை மு. கோவை பா 15)

"தலைவிக்கு இடை உண்டு என்பது உண்மை. பிறை நுதலில் பொட்டும் இட்டுப் பூவும் சூட்டினால் இப்பாரம் அவள் தளிர் இடையைத் தளர்விக்குமன்றோ? இயல்பாகத் தளர்ந்தார் மாட்டு, மேலும் பாரம் வைத்தல், பிழைக்கச் செய்வார் செயலாகுமா? அந்த அன்னம் போல்வாள் பிழைப்பாள் கொல்லோ?" என்றான் தலைவன். 'பூவும் பொட்டும் கூடப் பாரம்' என்றது நனிநயம்.

தலைவியிடம் தோழி பேசுகிறாள். உன் காதல் சரிதானா? இரு மகளிரை முன்னர் காதலித்தவன். இனி உனக்கும் அவன் பால் இடம் உண்டா? நகைச்சுவைப் படப் பேசுகிறாள்.

"சடைமேல் ஒருத்தி சமைந்திருப்ப மேனிப்
புடைமேல் ஒருத்தி பொலிய-இடையேபோய்ச்
சங்கே கலைய மருதற்குத் தான்கொடுப்ப
தெங்கே இருக்க இவள்?"
(திருவிடை மு. கோவை-24)

தலைவி, தலைவனோடு உடன்போக்கில் அயலூர் சென்று விடுகிறாள். செவிலி சுரத்திடைத் தேடிச் செல்லுங்கால், வேறு ஒரு காதல் இணை, எதிர்ப்படுகிறது. தன்மகளைப் பற்றியும் அவள் காதலனைப் பற்றியும் அவர்களிடம் வினவுகிறாள். அத்தலைமகன் 'இறைவன் ஊரும் காளையை ஒத்த தலைவனை

நான் கண்டேன். மற்றவரைப்பற்றி (பெண்மகளைப்பற்றி) என் காதலியாகிய மான் நோக்கியைக் கேளுங்கள்' என்றான். கண்ணெச்சிலும் கருத்து எச்சிலும்பட நோக்காத கற்பினன் அத் தலைவன் என்று பேசியது மிக அருமை

''துணையொத்த கோவையும் போலெழில் பேதையும்
தோன்றலுமன்
இணையொத்த கொங்கையொ டேஒத்த காதலோ டேகினரே
அணையத்தர் ஏறொத்த காளையைக் கண்டனம்
மற்றவரேல்
பிணையொத்த நோகதடைப் பெண்ணிவள் தன்னொடும்
பேசுமினே!
(திருஏகம்பர்-73)

இதனையொத்த கருத்தமை பாடல் திருக்கோவையாரிலும் உண்டு. ஆகவே, தனக்குமுன் வாழ்ந்த மாணிக்கவாசகரின் கற்பனையை வாங்கிப் பாடுகிறார், பட்டினத்தார்.

நம்பியாண்டார் நம்பி பாடும் அகப்பாடல்கள் :

நம்பியாண்டார் நம்பி பாடிய 383 பாடல்களில், 98 பாடல்கள் அகத்துறையாம். 65 பாடல்கட்கு அச்சுப் புத்தகங்களில் துறைகள் உள. மேலும் இவரது 33 பாடல்கட்குத் துறைகாட்ட இயலும். அப்பாடல்களுக்குத் துறையமைத்திருப்பதைப் பின்னிணைப்பில் காணலாம்.

நம்பியாண்டார் நம்பியின் நான்கு நூல்களில், அகத்துறைப் பாடல்கள் வருகின்றன.

1.	ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி பாடல்கள்	100இல்	48
2.	ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம் பாடல்கள்	49இல்	28
3.	ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை பாடல்கள்	30இல்	16
4.	கோயில் திருப்பண்ணியர் விருத்தம் பாடல்கள்	70இல்	6
	ஆக பாடல்கள்		98

நம்பியாண்டார் நம்பியின் சுவைப் பாடல்கள் சில நுகரலாம்.

தலைவனைப் பிரிந்த தலைவி, தன் நெஞ்சுக்குக் கூறுகிறாள். 'காமன் ஒருகணை மட்டுமன்று; ஐங்கணைகளும் ஏவுகிறான்; அந்திமாலையும் வந்தது; அன்றிலும் அலறுகிறது. தென்றலும் அடர்கிறது. இவையாவும் துயர்ப்படுத்த என் நெஞ்சம் என் தலைவன் பின்னே (திருஞான சம்பந்தரிடம்) செல்கிறது. ஏன் தெரியுமா? அன்று ஒரு பெண்ணின் பொருட்டு (திருமருகலில் ஒருவணிகனுடன்) உடன்போக்கு மேற்கொண்ட பெண்ணின் நஞ்சைத் தவிர்த்தவன். ஆகவே இனி நெஞ்சம் இடருறத் தேவையில்லை. 'நெஞ்சமிங் கென்னோ இனியின்புறுகின்றதே!'' (ஆ. பி. திரு. அ: 33) என்றாள். ஒரு பெண்ணுக்காக இரங்கி முன்னர்ச் சாவைத் தவிர்த்தவன். இப்பொழுது நான் சாவாமல் காப்பான் எனப் பேதைப்பெண் பேசுவது சுவையன்றோ?

தலைவி, தன் காதல் மிகுபெருநோயால் முலையிடைப் பொற்சுணங்கு பூண்டாள். கையில் அணிந்த வெள்ளிய சங்கு வளையலை இழந்தாள். பொன் கொண்டு-வெள்ளி இழந்தாள். இது நல்ல வணிகமே! இவ்வடியில் நகைச்சுவை பொதுளப் பேசுகிறாள்-செவிலி.

" ..... கற்றாங்
குறைத்தசம் பந்தனென்னா
முலையிடைப் பொன்கொண்டு சங்கிழந்
தாள்என்தன் மொய்குழலே" (ஆ. பி. திரு. அ 37)

இதே கருத்தை, மேலும் மெருகு ஊட்டி வேறுவகையில் தேன்சுவைக்கனியாக மற்றொரு நூலில் பாடுகிறார்.

"பொங்கொளி மார்பில் தங்கிய திருநீறு
ஆதரித் திறைஞ்சிய பேதையர் கையில்
வெள்வளை வாங்கிச் செம்பொன் கொடுத்தலின்
பிள்ளையாரவது தெரிந்தது பிறர்க்கே''

(ஆ. பி. திரு. மு கோவை-10)

இங்கு, ஈற்றடி மிகுநயமாக அமைந்துள்ளது. வெள்வளையலை, வாங்கி யாராவது பொன்னைக் கொடுப்பார்களா? நீர் ஏமாந்து விட்டீர். பிள்ளையாக (சம்பந்தப்பிள்ளையார்) இருப்பது யாவர்க்கும் தெரிந்து விட்டது! என்ற இடத்துப் 'பிள்ளை' என்ற சொல்லை நயமாக ஆள்கிறார்.

களவில் கூடி மகிழ்ந்த தலைவியை இற்செறித்து விடுகிறார்கள். தலைவன், தானும் தலைவியும் பயின்று மகிழ்ந்த இடங்களைக் காண்கிறான். நினைவோடை (Flash Back) நிலையில் பழம் நினைவுகள் மனத்திரையில் எழப் புலம்புகிறான்.

"இழைகெழு மென்முலை இதழிமென் மலர்கொயத்
தழைவர ஒசித்த தடம்பொழில் இதுவே. காமர்
சுனைகுடைந் தேறித் துகிலது புனைய நின்று
எனையுங் கண்டு வெள்கிடம் இதுவே, தினைதொறும்
பாய்கிளி இரியப் பையந் தேறி
ஆய்வென் றிருக்கும் அணிப்பரண் இதுவே, ஈதே
இன்புறு சிறுசொல் அவைபல இயற்றி
அன்புசெய் தென்னை ஆட்கொளும் இடமே
....
....
நலங்கலந் தோங்கும் விலங்கலின் மாட்டுப்
பூம்புனம் அதனில் காம்பன தோளி
பஞ்சில் திருந்தடி நோவப் போய்எனை
வஞ்சித் திருநத மணியறை இதுவே."

(ஆ பி. திரு. மு. கோவை. 16)

தலைவி மலர்கொய்த தடம்பொழில், நீராடித் துகில்புனைய நின்று தலைவனையும் கண்டு நாணிய இடம், கிளிகடிந்தபரண், இருவரும் அன்புமொழி பேசிப் பயின்ற இடம்; தலைவனை ஏமாற்றி ஒளிந்திருந்த பளிங்கு அறை ஆகிய இடங்கள், இப்போது வெறிச்சோடிக் கிடக்கின்றன எனத் தலைவன் மொழிகிறான். பல இடங்களையும் இயைத்து அவை வறியனவாய் இருத்தலைச் சுட்டிக் காட்டுதல் காண்க.

காவலிடத்தே தலைவியைக் கண்ட தலைவன், தலைவியின் எழில் நலத்தை நெஞ்சுக்குக் கூறிப் பாராட்டுகிறான். இகழ்வது போல, வஞ்சப் புகழ்ச்சியாகப் புகழ்கிறான்.

"இவள் தினைப்புனக் காவல் நன்றாயிருக்கிறதே! இவள் காவல் செய்தால், தினை எப்படி விளையும்?

மயில் தன் சாயலை இவள் பால் காண்பதால், இவ்விடம் விட்டு நீங்காது. தன் பேச்சை இவளிடம் கேட்பதால், கிளியும் பிரியாது. தன் விழியை இவளிடம் காண்பதால் இன்மான் ஏகாது.

இவை யாவும் ஆண்டுப் புனத்தே இருப்பதால் (பயிரை உணவாகக்கொள்ளும் ஆதலின்) தினை யாங்ஙனம் விளையும்?'' (ஆ. பி. திரு. மு. கோவை: 27) என்று தலைவன் கேட்கும் வினாவில் நயம் களிநடனம் புரியவில்லையா?

தலைவியைக் கண்ட தலைவன், அவள் எழில் கண்டு மருள்கிறான். காழி நாட்டு மறை அணங்கோ? 'தாமரை அல்லித் தவிசிடை வளர்ந்த' இலக்குமியோ? உருப்பசியோ? மதனன் கொடியோ? ஆரணியத்து அருந்தெய்வமோ? என்று ஐயப் படுகிறான். பின் வண்டமர்குழலும், கெண்டைக் கண்ணும், வஞ்சி மருங்கும் கிஞ்சுக வாயும், ஓவியர்க்கு முன் மாதிரியாக அமையும் உருவும் கண்டு தெளிகிறான். (ஆ. பி. திரு. மு. கோவை: 28)

இங்கு – காட்சி, ஐயம் தெளிதல் ஆகிய துறைகள் ஒரு சேர அமைக்கப்படுதலையும் காணலாம். பல பொருள்களையும் இங்ஙனம் தொகுத்துக் கூறுதல் இவரது அகத்துறை நெறியாகக் காணப்படுகிறது.

காதல் கொண்ட தலைவி, தலைவன் அணிந்திருக்கும் மாலையைப் பெற விரும்புகிறாள். (ஆ. பி. திரு. க. 19) 'தார் நினைந்தயர்தல்'— சங்ககால இலக்கியங்களில் இல்லை. இறைவனைக் கலந்து மகிழத் தலைவிக்கு வாய்ப்பில்லை. மானிடர் இறைவனை மருவ ஒல்லுமோ? ஆகவே அவன் அளித்த தாரையேனும் பெற்று மேனியில் சூடினால் அவனைக் கலந்ததை யொக்கும் எனக்கருதித் தார் தருக என வேண்டுவாராயினர். இம் மரபு, தூது இலக்கியத்தில் இன்றியமையாத இடம் பெறக் காணலாம்.

அகத்துறையை நெஞ்சுநிறையும் வகையில் பாடிச் சிறப்பிப் பவர், நம்பியாண்டார் நம்பி. இவரது அகத்துறை அறிவு வானளாவியது.

புதுத்துறைகள் :

கவிஞனின் கற்பனைப் புதுமையால், இலக்கியம் மலர்ச்சியும் வளர்ச்சியும் அடைகின்றது.

கீழ்வரும் துறைகள் சங்க இலக்கியத்தில் இல்லாதவை. புதுக் கற்பனை கொண்டவை.

1. தலைவனது உருவெளிகண்டு வருந்தும் தலைவிக்குத் தோழி கூறுவது. (திருவேக. தி. அ. 9)

2. காவல் கழிந்து செல்லும் தலைவி கிளி, புனம், இவற்றிடம் விடைகொண்டு தலைவனுக்குக் கூறுமாறு இயம்பியது. (திருவேக. அ. பா 24)

3. தலைவன் பொழில் முதலியன நோக்கித் தலைவி சென்ற இடத்தைக் கூறுக என்றது. (ஷை பா. 26)

4. தோழி, தலைமகளது வரவு கூறிச் செவிலியின் வழிச் செலவைத் தடுத்துக் கூறியது. (ஷை ஷை பா. 74)

5. கூதிர் கண்டு நற்றாய் இரங்கியது. (கோயில் நா. மாலை 22)

6. செவிலி, தன் மகள் குறையைத் தலைவனிடம் உணர்த்துமாறு தோழிக்குக் கூறியது. (ஷை ஷை பா. 31).

7. தலைவனைக் கண்ட அளவில் மகளிர் நிறையழிவர் என உலாக் கண்டாள் ஒருத்தி கூறியது. (திருவிடை ம. மு. கோவை பா. 11).

8. கொன்றை மாலையை விரும்பிய தலைவிக்குத் தோழி கூறியது. (கோயில் நா. மாலை 18).

9 தலைவி, தலைவன் ஊர்ந்து வந்த ஆனேற்றைப் பார்த்துக் கூறியது. (ஷை ஷை பா. 37).

இவ்வொன்பதும் பட்டினத்தார் படைத்து மொழிந்தவை.

1. தோழியிடம் தலைவன் பன்றி வினாதல் (ஆ. பி. திரு. அ. பா. 55)

2. செவிலி, புறாவிடம் பேசியது. (ஆ. பி. மு. கோவை பா. 22)

3. தலைவனிடம் தார்வேண்டும் தலைவி தன்னை மெலிவிக்கும் பொருள்களைத் தொகுத்துக் கூறுதல். (ஆ. பி. மு. கோவை பா. 19).

4. தலைவி கிளியிடம் தலைவன் பெயர் கூறவேண்டுதல் (ஷை ஷை பா. 26).

5. பிறைகண்டுகலங்கிய தலைவி, தோழியை நோக்கிக் கூறுதல். (ஆ. பி. திரு. அ. பா. 53).

6. தலைவி கூடல் இழைத்தல் குறித்துத் தோழி கூறல். (ஷை ஷை பா 87)

இந்த ஆறு துறைகளையும் நம்பியாண்டார் நம்பி கூறுகிறார.

இவை சங்க இலக்கியத்தில் காணப்படாதவை.

திருக்கோவையாரில் இருந்து எடுத்தோ மாற்றியோ கூறிய துறைகள்

மாணிக்கவாசகரின் திருக்கோவையாரிலிருந்து எடுத்தோ திரித்தோ உள்ள துறைகள் சில உண்டு.

1. தலைவன் மான் வினவி வந்தானாக ஆயத்தார் கூறியது. (திருவேக. திரு. அ. பா 14) 'கலைமான் வினாவுதல்' என்ற அளவில் இதனைத்திருக்கோவையார் கூறும் பா. 53.

2. பிறைகண்டு கலங்கிய தலைவி தோழியை நோக்கிக் கூறல். (ஆ. பி. திரு அ. பா, 53). இது திருக்கோவையார் கூறும் 'பிறைதொழுகென்றல்' என்பதன் திரிபு. (பா. 67).

3. ஏறுதழுவினோர்க்கு இவள் என முரசு முழங்கிற்று எனல்' (ஆ. பி. திரு. அ. 27). இது 'ஏறுகோள் கூறி வரைவு கடாதல்' என்ற திருக்கோவையார் துறை சிறிது மாறிவந்தது (பா. 136).

4. செவிலி புறாவிடம் பேசியது. (ஆ. பி. திரு. அ. 22) இது 'புறவொடு புலத்தல்' என்ற திருக்கோவையார் துறையோடு ஒத்தது (பா. 240).

5. கூடல் இழைத்தல் பற்றித் தோழி பேசுவதாகக்கூறல். (ஆ.பி. திரு, அ. பா. 87).

6. செவிலி, புணர்ந்துடன் வருவோரை வினாதல் என்பது துறை (திருவேக. திரு. அ 73).

சங்க இலக்கியத்தில் 'கண்டோரை வினாதல்' என்பதன் திரிபு இது இதனை இங்குக் கண்டாங்கு முதலில் ஆண்டவர் மாணிக்கவாசகர். திருக்கோவையாரில் இத்துறை அப்படியே உள்ளது (பா. 244)

7. ''முரசு முழங்கக்கண்டு ஆயத்தார் வருந்தியது' என்பது துறை (திருவேக. திரு அ. பா. 19).

மணமுரசு கேட்டு மகிழ்ந்துரைத்தல் (திருக்கோவையார் பா. 296) என்பது மணிவாசகர் கூறியது. இது எதிர்மறையில் வைத்துப் பேசியது.

8. செவிலி, சுவடு கண்டு வருந்தியது. (திருவேக திரு. அ. பா.71 செவிலி, கதிரவனை வேண்டல் (ஷி ஷி திரு. பா. 72) என்பன

இத்தொகை நூலில் கண்டவை. இவற்றை அப்படியே மணிவாசகரிலிருந்து எடுக்கிறார். (பா. 228, 232) இத்தகு கற்பனை சங்க இலக்கியத்திலும் ஓரளவு உண்டு.

9. தோழிதலைவியின் உரு எழுதரிதென ஏந்தலை விலக்கல் என்பது இத்தொகை நூலில் கண்டது. (ஆ. பி. திரு. அ. பா. 35).

இது திருக்கோவையாரில் வரும் ''அவயவமெழுத லரிதென விலக்கல்'' என்பதை ஒட்டிய கற்பனையே (பா 79)

இங்ஙனம், துறைகள் மணிவாசகர் கூறியவற்றில் இருந்து சிறிது மாற்றியோ மாறாமலோ வருதலைக்காண்கிறோம். ஆகவே, துறையைப் பொறுத்த அளவில் சங்க இலக்கியத்திற்கும் இடைப் பட்ட பாலமாகத் திருக்கோவையார் மிளர்வதையும் அதை வைத்துப் பின்வந்த இத்தொகைநூல் ஆசிரியர்கள் வளர்த்திருக்கும் நெறியையும் உணரலாம்.

பதினொராந்திருமுறையில் அகத்திணை-அடிக்குறிப்புகள்

1 தொல், பொருள், புறத்திணை சூ. 23

2 திருநாவுக்கரசர்-திருவாரூர்த்திருத்தாண்டகம். பா. 7. திருஞானசம்பந்தர். திருத்தோணிபுரம். 1—10 பாடல்கள் பக் 70—71. ஸ்ரீகாசிமடப் பதிப்பு

3 தொல். பொருள். செய்யுள். சூ. 192

4 குறுந்தொகை 85:1-7.
ஷை 8:16-18.

சமயக்கருத்துக்கள்

பதினொராந்திருமுறையில் தெய்வங்கள்-புராணங்கள்

சங்க நக்கீரர் பாடலில், வேண்டும் அளவு தெய்வங்களைப் பற்றியும் புராணங்களைப் பற்றியும் தெரிகிறோம். சிறப்பாக முருகனைப் பற்றிய சீரிய செய்திகளைப் நிரம்பத்தருகிறார்.

திருமுருகாற்றுப்படையில் முருகனைப பற்றிய செய்திகள் :
முருகன் பெயர்கள் :

சேஎய் அலவர்பயந்த ஆலஅமர் செல்வன் (ஆறுமுகன்) (255) ஆல்கெழுகடவுட்புதல்வன் (256) மலைமகள் மகன் (252) கொற்றவை (காளி) சிறுவன் (259) பழையோள் குழவி 259) வானோர் தானைத் தலைவன் (தேவசேனாபதி (261) நூலறி புலவன் (261) குறிஞ்சிக் கிழவன் (267) புலவர் ஏறு (தமிழ்த் தெய்வம்) (268) முருகன் (269) நெடுவேள் (273) எனப் பன்னிரண்டு பெயர்கள் குறிக்கப்படுகின்றன.

முருகன்-ஆறுமுகமும் பன்னிருகையும் கொண்டவன் (90-118) வள்ளி, தெய்வயானை கணவன், வேற்படையுடையவன். தகர், மயில், யானை, இவற்றை ஊர்தியாய் உடையவன். கோழி, மயில் ஆகியவற்றைக் கொடியாய் உயர்த்தியவன். செங்கடம்பையும் செங்காந்தளையும் மாலையாய் அணிந்தவன் தினையையும், மறியையும் படையலாய்ப் பெறுபவன். ஆறு எழுத்து அருமறை உடையவன் (சரவணபவ).

1. புராணவரலாறுகள் :

(அ) ஆறுமுகன் பிறப்பு :

இமயச் சாரலில் நீலப்பைஞ்சுனையில் (சரவணப் பொய்கை) விசும்பு, வளி, தீ, நீர், நிலமாகிய பஞ்ச பூதத் தெய்வங்களுள் ஒருவனாக தீக்கடவுள், உருத்திரனிடமிருந்து விந்தைவாங்கிக் கார்த்திகை மாதரிடம் வழங்க, அவ்வறுவரும் விருப்புடன் பெற்றவன் ஆறுமுகன் (252-55).

"அறுவர் பயந்த" என்ற தொடர்க்கு நச்சினார்க்கினியர், "அருந்ததியொழிந்த அறுவராலே பெறப்பட்ட ஆறுவடிவு பொருந்திய செல்வ" என்று காட்டுவர்.[1] பழைய உரைகாரர், கார்த்திகை மகளிர் கதையைக் கூறுவர்.[2] இவ்விரு கருத்துக் களையும் சிறு வேறுபாடுகளுடன் பரிபாடல் கூறுகிறது[3]

(ஆ) அயன்சாபம் பெறல் :

தாமரையில் தோன்றிய அயன், தன்தலைமைத் தொழிலை விட்டு, முருகன் சாபத்தால் மண்ணிடைப் பிறந்து உழந்த தாகவும், அதனை நீக்குவான் வேண்டி திருமால், முக்கண்ணான் இந்திரன், முப்பத்து மூன்று தேவர், பதினெண்கணங்களும் உறு குறை நீக்கி அயனைப் பெறுமுறையால் முருகன் சந்நிதியான ஆவினன்குடி வந்தனர் என்றும் நக்கீரர் கூறுவர் (151-174). ஈண்டுச் சாபம் யாது என்பது பற்றியோ, சிறை செய்த காரணம் பற்றியோ கூறினாரில்லை.

பிரம்மாவிடம் பிரணவப் பொருள் யாது எனக் கேட்ட செய்தியோ, சிறைசெய்த செய்தியோ இங்கு இல்லை. மாங்கனியின் பொருட்டு, விநாயகருடன் இகலி, ஆண்டியாக ஆவினன் குடி வந்த செய்தியும் இங்குக் குறிக்கப்படவில்லை. மாறாக தேவசேனையுடன் ஆவினன் குடியில் விளங்குவதாய் நக்கீரர் கூறுகிறார் (175).

(இ) பிறகதைகள் :

தேவசேனையின் கணவனாக விளங்குவதையும் (6) குறவர் மடமகள் வள்ளியுடன் நகையாடுவதையும் (102) கூறுவர். கடலில் இலை, கவடு முதலியன கீழாகவும், வேர்மேலாகவும் விளங்கிய மாமரவடிவினனான அவுணனை வெட்டி வீழ்த்திய வீரன், சூரபதுமனை வென்றவன் (57-61, 46) என்ற செய்தியும் பேசப்படுகிறது.

2. திருமால் :

பாம்பும் படுக்கையும், புள்ளணி (கருடன்) கொடியும் உடையவன் (150-51).

3. அயன் :

(திருமாலுடைய) திருவுந்தித் தாமரையில் தோன்றி, ஊழிகள் தோறும் தம் படைப்புத் தொழிலில் சிறந்தவன்.

4. இந்திரன் :

ஆயிரம் கண்ணுடையோன், நூறுபல் வேள்வி முடித்துப் பகைவரை வென்றவன். நான்கு மருப்புடைய யானையில் (ஐராவதம்) இவர்பவன் (155-159).

5. பிறதெய்வங்கள் :

மற்றும் பலர்புகழ் ஞாயிறு, நகர்காக்கும் நாற்பெரும் தெய்வம், முப்பத்துமூன்று தேவர், திருமகள், ஆகியோர் பற்றிய குறிப்பும் உண்டு.

நக்கீரதேவநாயனார் கூறும் தெய்வங்கள்-புராணக் கதைகள் :

''இந்திய தரிசனங்களின் வரலாற்றையும் சமயக்கோட்பாடு களையும் அறிவதற்குப் புராணங்கள் மிகப் பயனுடையன. இந்திய நாகரீகத்தின் கருவூலம் புராணங்களே,'' என்பார் நடராசன்.[1] இது 11ஆம் திருமுறைக்கும் பொருந்தும். இவண், பல புராணக்கதைகளை அறிகிறோம்.

சிவன் :

நக்கீரதேவநாயனார் சிவபெருமானை ஏத்துகிறவர், யாண்டும் கண்ணுதலோன் மாட்சியே பேசுகிறவர். சிவபெருமானின் உரு, வலி, தெறல், பெருமை, தலைமை, முழுமுதலாகும் தன்மை-இவற்றைப் பரக்கப் பேசுகிறார். இவர் காலத்தால் முற்பட்ட வராதலின் இவர்கூறும் செய்திகளைக் கண்டால், பின்வருவோர் அடுத்து மொழிந்து எடுத்து விரிக்கும் கதைகள் தெரியவரும்.

(அ) சிவன் வடிவு :

சிவன் மின்னார்செஞ்சடையான் (கயிலை-பா–51) முடியில் கங்கையை அணிந்தோன் (கயிலை பா–29) இளமதிசூடி (ஷ 21) பாம்பணியும் (ஷ 2) எலும்புமாலையும் (ஷ 30) பூண்டோன். புலித்தோல் ஆடை (ஷ 94) கரிஉரி ஆடை போர்த்தியோன் (ஷ 29). கீளுடை பூண்டோன் (ஷ 12) வெண்ணீற்றான் (ஷ 36 94) வெள்ளேறுடையான் (ஷ 76); பூதப்படையான் (ஷ 65) சூலப்படையான் (ஷ 57) கனல், மான் (ஷ 87) மழு (ஷ 58) கையில் உடையான்.

மங்கைசேர் இடப்பாகன் (ஷ6) கயிலையிருந்து பெண்பாகன் (கயிலை பா–1) இச்செய்திகளைக் கயிலை பாதி–காளத்தி பாதி–நூலால் அறியலாம்,

ஆ) சிவனியல்பு :

சிவபிரான் பரமயோகி-(பெரு. தேவ. 3) தூப நுண்ணிய அறிவினன் (ஷ 5) பரமேச்சுவரன் (ஷ 18) விபூதிப்பையினன் (ஷ 29) ஆலைவாய்த் தலைவன் (ஷ 64) மயானத்தில் நடன மிடுபவன் (கயிலை 30) கூத்தாடல் மேவியவன் (கயிலை 61-68)

இ) அருஞ்செயல்கள்:

கடுவிடம் உண்டு அமரரைக் காத்தவன் (கயிலை. பா-8) அரணம் மூன்று அழித்தோன் (கயிலை பா-4) அயன், அரி காணாதவன் (ஷி 89) அரக்கன் (இராவணன்) வலி அழித்தவன் (ஷி 83) காலனைக் காய்ந்தவன் (ஷி 33), மன்மதனை அழித்தவன் (ஷி 68). இவை கயிலை பாதி காளத்தி பாதி நூலில் கண்ட செய்திகள்.

ஈ) புராணக் கதைகள்:

ஈங்கோய்மலை எழுபதில் கீழ்வரும் புராணக்கதைகள் சிறப்புச் செய்திகளாகும்.

1. மேருமலையை வில்லாக வளைத்தவன் (பா 2). 2. நான்கு மறைகளைப் படைத்தவன் (பா.19). 3. ஆலின் கீழ் அமர்ந்து வேதம் உரைத்தோன் (பா. 22).

திருவெழுகூற்றிருக்கையில் வரும் புராணக்கதைகளில் முக்கிய குறிப்பு:

1. யாழில் இசையை இசைத்தவன் (அடி-29).2. அறுவகைச் சமயம் வகுத்தவன் (அடி-41) 3. நால்வகை இலக்கணம் தந்தவன். (அடி-39).

போற்றிக்கலி வெண்பாவில் வரும் முக்கிய புராணக்கதைக் குறிப்பு வருமாறு:

1. முயலகனை மிதித்தவன் (கண்ணி. 11)
2. தானவர்கட்குத் குறளை கூறிய அயன் தலையை வெட்டியவன் (கண்ணி. 19)
3. நாமகள் மூக்கை அரிந்தவன் (கண்ணி. 25)
4. முருகனைச் சேனாபதியாக்கியவன். (கண்ணி 31, 32).

கோயப் பிரசாதத்தில் கூறப்படும் இன்றியமையாப் புராணக் கதைகள் வருமாறு:

1. திருமாலுக்குச் சக்கரம் வழங்கியமை (அடி-3)
2. நந்தீசுவரருக்கு நெற்றிக் கண்ணும் நீள்புயம் நான்கும் வழங்கியமை (21-22) (இது புதிது)
3. கதிரவன் பற்களைத் தகர்த்தமை (27)
4. தீக்கடவுளின் கரதலம் காய்ந்தமை (30) இது புதிது
5. குபேரனுக்கு நன்நகர் ஈந்தமை (34)
6. தாருகனைக் கொல்லக் காளியைப் படைத்தமை (37) இது புதிது

2. திருமால்

திருமாலின் வாமனாவதாரம் (போற்றி கண்ணி 9) கேழல் அவதாரம் (போற்றி கண்ணி 3) நரசிம்ம அவதாரம் (ஈங்கோய் 16, 18) ஆகிய அவதாரங்களை மொழிகிறார். பார்த்தனோடு கயிலை சென்று பாசுபதம் பெற உதவியதைக் குறிப்பதால் (போற்றி 40-41) பாரதக் கதை நிகழ்ச்சி கூறியதாக ஆகிறது. ஆகவே கிருட்டிணாவதாரம் சுட்டியதாம். இங்ஙனம் திருமாலின் நான்கு அவதாரம் கூறப்படும். சலந்திரனைக் கொல்லக் கண்ணிடந்திட்டுச் சிவனைப் பூசித்த செய்தி வருகிறது (போற்றி 23-24) காமனுக்குத் தந்தை (போற்றி 9) சிவபிரானின் திருவடி காணாமல் திகைத்தமை (கயிலை 89) இவற்றை இயம்புவர்.

(3) அயன் :

பிர்மாவின் ஐந்து முகத்தில் மேல்முகம் (அதோமுகம்) பற்றித் திருகி அக்கபாலத்தில் சிவன் பிச்சை ஏற்றது (திருவெழு. வரி. 16) சிவனின் திருமுடி காணாமல் அயன் திகைத்தது ஆகிய செய்திகளை அறிகிறோம். (போற்றி. 4-5).

(4) பிற தெய்வங்கள் :

காலன், அநங்கன், புத்தேளிர், முருகன், குபேரன், நாமகள், காளி, நந்தி தேவர், கருடன் ஆகியோர் பற்றிய குறிப்பு நக்கீர தேவநாயனுர் நூல்களில் உண்டு.

காரைக்காலம்மையார் கூறும் தெய்வங்கள் புராணங்கள் :

தெய்வங்கள் :

காரைக்கால் அம்மையார் நூல்களின் வழி, கீழ்வரும் தெய்வங்களைப் பற்றிய செய்திகளை அறியலாம்.

நடராசர் (மூத்த திரு. ப. I:-4) நான்முகன் (அற்பு 18; 19) உலகளந்தமால் (அற்பு 41) திருமால் (அற்பு 19, 52, 54) கூற்றுவன் (திருவிரட்டை 12) அமரர் (அற்பு 55) மன்மதன் (அற்பு 89).

சில நம்பிக்கை அவர் காலத்திருந்திருக்கின்றன.

உலகம் ஏழு உண்டு. (அற்பு 97) ஐந்தலைப் பாம்பு உண்டு. (அற்பு 99) வேதம் உண்டு. (அற்பு. 8).

புராணச்செய்தி :

அம்மையார் கூறும் புராணச் செய்திகளில் புதியன இரண்டு

(அ) இறைவன் சடையில் வன்னி மலர் சூடுகிறவன் (திருவிர, பா. 7)

(ஆ) இறைவன் பன்றிக் கொம்பை மார்பில் அணிபவன் (அற்பு 38). இவர் கூறும் புராணச் செய்திகள் அளவாகவே உள்ளன.

சேரமான் பெருமாள் நாயனார் கூறும் தெய்வங்கள் புராணங்கள் :

(அ) சிவபிரான்:

இடப்பாகத்தில் திருமாலை உடையவன் (பொன் 6). ஆரணன் (பொன் 18) பசுபதி (30) குராமலர் சூடுகிறவன் (68) நடன மூர்த்தி (86) எண்டோள் சிவன் (88)

(ஆ) சிவனின் பல திரு உரு :

1. சங்கர நாராயணன் வடிவத்தைக் கூறுகிறார் (பொன் 6) இது அரிய குறிப்பு. பின்வந்த சைவ சமயக் கவிஞர்கள் இப்படிப் பாடவில்லை. இவரிடம் சமயப் பொறை இருந்ததால் பிற தெய்வங்களை இகழாமல் இப்படிக் கூறிச் சமய ஒருமையைக் காட்டுகிறார். சமயப் பொறையைப் பட்டினத்தாரிடங் காணலாம்.

2. அம்மையப்பர் (அர்த்தநாரீசுவரர்) வடிவைப் பாடுகிறார். (பொன். 65; 90). பின்வந்த பட்டினத்தார் இவ்வடிவைப் பெரிதும் போற்றி விரிவாகப் பேசுகிறார் இவ்வகையில் சேரர் வழிகாட்டி.

3. நடராசர் வடிவைப் புனைதல் அழகு (பொன். பா. 86)

4. அட்டமூர்த்தி பற்றி இவர் பாடலில் அறிகிறோம். (பொ. பா. 15)

மும்மூர்த்திகளின் பெயர், பதி, நிறம், தார், ஊர்தி, இவை வரிசையாக ஒரு பாடலில் குறிக்கப் படுகின்றன (பொன். 95).

பூமங்கை (திருமகள்—கல்வி. 11) நாமங்கை (11) கைலையில் நந்திமாகாளர் (கண்ணி. 22) வசுக்கள் "இருக்கு" உரைத்தல் (22) ஏழு இருடிகள் (27) பன்னிரு ஆதித்தர் (24) நாரதர் "மகதி" என்னும் யாழ் வாசித்தல் (24) அங்கி, யமன் (25) நிருதி, வருணன் (26) வாயு, சோமன் (27) ஆகியோர் பற்றிய குறிப்புக் கள் உண்டு.

சிறுதெய்வங்கள் :

திருக்கைலாய ஞானவுலாவில் பல சிறுதெய்வங்கள்-தேவர் கள் பற்றிக் குறிக்கிறார்.

அச்சுவினிகள் (28) உருத்திரர்கள், குபேரன் (29) சேனாபதி (36) இந்திரன் (36) அயன் அன்னம் மேல் வருதல் (37) மால் கருடன் மேல்வரல் (37) கருப்புவில்லான் காமன் (38–40) "கதக் காரி வாமன் புரவிமேல் வருதல்" (ஐயனார்) (40) விநாயகன் (41) சத்தமாதர் (42) காளி சிங்க ஊர்தியாள் (42) விச்சாதரர், இயக்கர், கின்னரர், கிம்புருடர், அச்சாரணர், அசுரர் (43) வாலகிலியராகிய முனிவர் (50) வாமான ஈசன் (58) ஆகியோரைப் பற்றியும் அவர்கள் இறைவனைக் காண ஈண்டிய மரபு பற்றியும் குறிக்கிறார். பெயரளவிலே இவர்கள் சுட்டப்படுவர்.

பட்டினத்தார் கூறும் தெய்வங்கள் – புராணங்கள்

சிவபெருமான் :

கைலாய வாணன்: கௌரிநாயகன் (திருவிடை 28:9) மரகதச் செல்வியை ஒரு கூறில் உடையவன் (திருக்கழு 1:2) வேதம் நான்காகவும் விழுப்பெரும் முனிவராகவும் விளங்குபவன் கோயில் நா: 12:40) இமையா நாட்டத்தொருபெருங் கடவுள் (கோயில் 36:8) சுருதியும் தொடராச் சுருதி நாயகன் (திருவிடை 7 : 40) அக்குமணி அணிந்து, தவள நீறுபூசி பவளவெற்பென விளங்குபவன் (திருவிடை. 1 : 24–27) சுடர்முகம் ஐந்து (அதோ முகம்) உடையவன் (திருவிடை 10 : 19).

அம்மையப்பர் :

திருக்கழுமல மும்மணிக்கோவை முதற் பாடல், அம்மை யப்பர் வடிவை 64 அடியில் வனப்புற வரைகிறது. இவ்வடிவைத் தேவார திருவாசக ஆசிரியர்கள் கூறியிருப்பினும் இத்துணை விரிவாகக் கூறியவர், பட்டினத்தாரே. இவ்வடிவைச் சுருங்கிய வகையிலும் வருணிக்கிறார்.

" ஒருபால் தோடும் ஒருபால் குழையும்
இருபாற்பட்ட மேனி எந்தை"–(கோவில். நா. 36 ; 4-5)

" செல்வச் சிலம்பு மெல்லென மிழற்ற
அமையாக் காட்சி இமையக்
கொழுந்தையும் உடனே கொண்டிங்கு
எழுந்தருளத் தகும் " - (திருக்கழு. 4 : 23-26)

தேவாரம் திருவாசகம் எழுந்த காலத்தில், அம்மைக்குத் தனியாகத் துதி நூல் தோன்றவில்லை. இறைவனைச் சார்த்தியே அம்மை பேசப்படுவாள்.

" வருமுலை தாங்கும் திருமார்பு வல்லி
வையம் ஏழும் பன்முறை ஈன்ற
ஐய திருவயிற் றம்மைப் பிராட்டி
மறப்பருஞ் செய்கை அறப்பெருஞ் செல்வி
எமையா ளுடைய உமையாள் நங்கை
கடவுட் கற்பின் மடவரல் கொழுந !"
(திருவிடை 16 : 13-18)

என்றவிடத்தும், இறைவனைச் சார்த்தியே இறைவி போற்றப் படுகிறாள்.

நடராசர் :

" நடமாடி ஏழுலகம் உய்யக்கொண்ட நாயகரே !" (கோயில் நா. மாலை. 7) என்று நடராசர் வடிவைப் பேசுகிறார். இக்கூத்தன் ஆடும் ஆட்டத்தின் பஞ்ச கிருத்தியச் செயலை மற்றுமோர் இடத்தில் விளக்குகிறார். (திருஏகம்பம். 46)

கணபதி :

பவளமால்வரைபோல்வான்; பணைக்கையோன்; எண்டோள் தாழ்ந்த செவி உடையன் (திருவிடை 16:19-20)

குமரன் :

சேவற் கொடியுடையான்; மலை துளைபடுத்தகொலைவேல் உடையான்; அமரர்களைக் காத்தவன் (திருவிடை 16:21-23) மயில் ஊர்தி உடையவன் (திருஏகம்பம்–49) சேய், (திருக்கழு-11) கந்தன் என்ற பெயரினன் (திருவிடை–19;4).

திருமால் :

பிரமன்தாதை; (கோயில் - நா : 22 : 2-3) துழாய்மாலை யுடையவன் (ஷ25) கொண்டல் வண்ணத்தன் (ஷ 38) வலம்புரிச் சங்கு தாங்குபவன் (திருவிடை 1 : 5-6). 'ஊரகம்' 'பாடகம்' என்ற பதியில் உறைபவன்-இது புதிய அரிய குறிப்பு (திருஏகம்பம்-83).

பிற தெய்வங்கள் :

அனங்கன் (கோயில் நா. மாலை 11 : 7; 31 : 3; 35 : 2) கூற்றம் (கோயில் நா. மாலை 32 : 8) (திருவிடை 16 : 28) பிரமன் (கோயில் நா. மாலை 22) திருக்கழு 2) தேவர்-(திருவிடை 16:30) மாகாளி (திருஏகம்பம்-84), கலைமடந்தை, இலக்குமி, உருத்திரன், இந்திரன். அருக்கர்பன்னிருவர், சந்திரன், செந்தீக் கடவுள், நிருதி, இயமன், வருணன், வாயு, குபேரன், அட்டவசுக்கள், இவர்களைப்பற்றிப் பட்டினத்தார் குறிப் பிடுகிறார். (திருவிடை : 28 : 16-26).

இங்ஙனம் சிறு தெய்வங்களைச் சேரமானும் பட்டினத்தாரும் மிகுந்த அளவு கூறியுள்ளனர்.

புராணக் குறிப்புகள் :

புராணக் குறிப்புக்களில் பட்டினத்தார் கூறும் புராணக் கதைகளைக் காணலாம்.

சிவபிரான் பொய்தீர் 'விரையாக்கலி' எனும் ஆணை யுடையான் (கோயில் நா. 4 : 13) ஆயிரம் மருப்புடைய வெண்ணிற யானையைச் சிவன் உடையவன் (ஷ 4, 15) முயலகன் நைந்து நரலச் சிவன் ஆடுபவன் (ஷ 11) சிவனின் இடப்பாகத்தில் திருமால் சக்தியாக இருக்கிறான் என்பது அரிய குறிப்பு. (கோயில் 18) நரசிங்கமூர்த்தியை வென்றவன் (புள்ளாய் நின்று) - (கோயில் நா. 40) இதுவும் அரிய செய்தி. தாருகனைக் கொன்றவள் காளி (திருவிடை-28).

ஊழியில் பெருவெள்ளம் வந்தபோது தோணியப்பர் பிரளய விடங்கராய் விளங்கினார் காஞ்சியில் உமையம்மையார், இறைவனைப் பூசித்தபோது, ஆற்றில் வெள்ளம் மிகுந்துவர, உமையாள் துடித்து, சிவலிங்கத் திருமேனியைத் தழுவ, அதில் நகில் சுவடும் வளைச் சுவடும் பதிந்தன என்று திருவேகம்ப முடையார் திருவந்தாதியில் கச்சிப்பதிக்கு உரிய கதையாக இருத்தலின் சிறப்பாய்க் குறிக்கிறார். (ஷ 11, 82, 85).

அம்மை 32 அறமும் வளர்ப்பவளாகக் கூறுதலும், பதிவரலாறோடு தொடர்புடையது. (பா 82) இராவணன் (சீதையோடு தென்னிலங்கை செல்லுங்கால்) செலவைத் தடுக்கும் கொடிகளையுடைய திருக்கச்சி என்பது (திருஏகம்ப-75) புதுமை சிவபிரானின் நெற்றிக் கண்ணில் பிறந்தவள் பிராட்டி என்பது (ஷை 84) புதுமை.

புராணக்கதைகள் மிகுந்த அளவு கோயில் நான்மணிமாலையிலும், அடுத்த நிலையில் திருவிடைமருதூர் மும்மணிக்கோவையிலும் வருகின்றன.

நம்பியாண்டார் நம்பி கூறும் தெய்வங்கள் — புராணங்கள் :

விநாயகர் :

பெயர்கள் : கணபதி (திரு. நா. வி. பா. 15) விநாயகர் (ஷை 14; 19) ஐங்கரத்தான் (ஷை 11; 20) சிவக்களிறு (ஷை 4) ஒருகொம்பன் (ஷை 2) கரிவதனன் (ஷை 10) முக்கண் அரசு; அத்திமுகம் (ஷை 1) என்ற பெயர்களை நம்பியாண்டார் ஆள்கிறார்.

இயல்புகள் :

அடுமருப்பினன் (6), பெருச்சாளி ஊர்தி உடையவன் (4), செந்தீ வண்ணன் (5), கையில் மாங்கனி, கொம்பு, அண்டம், பாசம், மழு உடையவன் (17).

புராணம் :

'இமையவள் தான் பெற்ற யானை' (12) என்றும், 'நாரையூர் மன்னும் சிவன் மகன் (10) என்றும், குமரற்கு முன்னவன் (18) என்றும் நம்பியாண்டார் கூறுவர்.

தந்தையை வணங்கி மாங்கனியைப் பெற்றுக் கொண்டவன் விநாயகன் என்ற கதையை இருமுறை கூறியுள்ளார் (3: 8).

விநாயகன் தன் கொம்பொன்றையே படையாகக் கொண்டு (கசமுகாசுரனை) சூரனைக் கொன்றவன் என்ற கதையும் ர்ந்துள்ளார் (2).

முருகன் :

குமரன் (திரு. நா. வி. 8; 14); (திரு. திரு. அ. 56), முருகன் (திரு. திரு. அ. 63) வள்ளிகணவன் (திரு. நா. வி. 3) என்ற பெயர்களை ஆள்கிறார். சக்தி வேலைத் தடக்கையில் உடையவன் (திரு. திரு. அ. 56) பகைத்து எழுந்த வேடர் சுற்றம் படுத்தவன் (திரு. திரு. அ. 63) மாங்கனி பெற உலகை வலம் வந்தவன் (திரு. நா. வி. 8) என்று இருகதைகளைக் குறிக்கிறார்.

சத்தி தந்த வேலை உடையவன் என்பதும், கனிபெற உலகை வலம் வந்தான் என்பதும் சங்க இலக்கியத்தில் இல்லை.

திருமால் :

திருமால் (கோயில். திரு. ப. வி. 8; 15; 16) சனார்த்தனன் (திரு. நா. வி. 13) நாரணன் (திரு. நா. வி. 13) மாயவன் (கோயில். திரு. வி. 8; 9) அரி (கோயில். திரு. ப. வி. 7; திரு. திரு. அ. 80; மும்மணி-2) வாசவன் (கோயில். திரு. ப. வி. 56) விண்டு (கோயில் திரு. ப. வி. 49) கண்ணன் (கோயில். திரு. ப. வி. 16) ஆகிய பெயர்களைச் சுட்டுகிறார்.

வராக அவதாரம் (கோயில். திரு. ப. வி. 18); நரசிங்க அவதாரம் (கோயில். ப. வி. 27; 36) கண்ணன் அவதாரம் (கோயில். திரு. ப. வி. 8; 9; 16) ஆகிய மூன்று அவதாரங்கள் பேசப்படுகின்றன.

விளாமரத்தின் மேல் கன்றினை எறிந்தது (கோயில். திரு. ப. வி. 45; 49) பிரகலாதனுக்காக இரணியனை வதைக்க நரசிங்க மாக வந்தது (கோயில். திரு. ப வி. 27; 36) ஆகிய கதைகளை நம்பியாண்டார் கூறுவர். மற்றும் உலகம் உண்டமை (கோயில் திரு ப. வி. 8) முந்நீரில் துயிலல் (கோயில். திரு. ப. வி. 9) கண்ணன் அவதாரத்தில் மருதமரத்திடை கட்டுண்டமை (ஷி-9) கூறப்படும்.

வேதமுதல்வன் தந்தை (கோயில். திரு. ப. வி. 7) காமனின் தாதை (கோயில். திரு. ப. வி. 19; 44; 61) என்ற செய்திகளும், சங்கினைக் கையில் தரித்தவன் (கோயில். திரு. ப. வி. 19) ஆழி வட்டம் தாங்கியவன் (கோயில். திரு ப. வி. 44), புள்ளேறு கிறவன் (கோயில். திரு. ப. வி. 61) என்ற விவரங்களும் இவர் பாடலில் கிடைக்கின்றன.

திருமால், சிவனை வணங்கி, தாமரை மலருடன் தன் கண்மலரையும் வைத்துப் படைத்துச் சக்கரப்படை பெற்ற கதையை நம்பியாண்டார் இருமுறை இயம்புவர்.

கண்ணனாம் கரியவன், விசயனுடன் திருக்கயிலை மலைக்குத் தலையால் நடந்து சென்று, சிவனை வணங்கி வேற்படையாம் சரங்கொண்டான் என்று (கோயில். திரு ப. வி. 45) நம்பியாண்டார் கூறும் கதை புதுமையானது.

நரசிம்மமாக வந்த போது விட்டுணுவின் சினத்தை சிவன் சரப (மூர்த்தி)ப் பறவையாக வந்து தணித்தார் என்ற கதையையும் இருமுறை இசைப்பார். (கோயில். திரு. ப. வி. 27; 36). இக்கதையினைச் சமய குரவர்கள் கூறவில்லை என்பது நோக்கத்தகும்; ஆனால் பட்டினத்தார் கூறியுள்ளார்.

முக்கட் செல்வர்க்குத் திருமால், ஏவுகொள் ஏர் விடையாய் இருந்தார் என்பர். (கோயில். திரு. ப. வி. 28) இதனைச் சேரமானும் புகன்றார்.

திருமாலைப் பற்றிய செய்திகளை நம்பியாண்டார், வேறு எவரினும் மிகுதியாகவே தருகிறார். அவை அரிய செய்திகளை! எனினும் இக்கதைகளால் சிவனின் தலைமையும் பரத்துவமும் பரக்கப் பேசப்படும். தத்தம் தெய்வத்தை ஏத்தியும் பிற தெய்வத்தை மதியாமலும் பேசும் நெறி 8ஆம் 9ஆம் நூற்றாண்டிலேயே இருந்தது. நம்மாழ்வார், மணிவாசகர் பாக்களில் இம்மரபு புகுந்துவிட்டது. அது நம்பியாண்டார் காலத்திலும் தொடரப் பார்க்கிறோம்.

சிவன் :

சிவன் (திரு. நா. இர, மாலை 4, 10) அரன் (ஷி 8) ஈசன் (ஆ. பி. திரு. அ. 41) அப்பன் (ஆ பி. திரு. தொகைவரி. 6) முக்கன் அரசு (திரு. நா. இர. மாலை. 1) கூத்தன்; தில்லைவாணன் (கோயில். திரு ப வி. 11) சுந்தரக்கூத்தன் (ஷி 13) தென்தில்லைப் பரம் (ஷி 17) உமைகோன் (திரு. திரு அ. 2.) கண்ணுதல் விண்ணவன் (கலம்பகம் 1-அராகம்) தாணுவரன் (கலம்பகம் 24) என்ற சொற்களால் சிவபெருமானை நம்பியாண்டார் நம்பி குறிப்பிடுகிறார்.

உரு

சிவன், 'அம்பவள வண்ணன்' (கோயில். திரு ப. வி. 1) மின்புன் மிளிர் சடையுடையான் (ஷ 2) கார்நிறக் கண்டன் (கோயில் திரு. ப. வி. 58) இடப்பால் தழலும் வலப்பால் தமருகமும் உடையான் (கோயில். திரு. ப. வி. 63) வேதமறிக் கரத்தான் (திரு. திரு அ. 3) கரி உரி உடையான் (கோயில். திரு ப. வி 35) எண்டோள் உடையான் (திரு. திரு. அ. 74; கோயில். திரு. ப. வி. 53).

கூத்தன்

....

''தழல்படு பொன்னகல் ஏந்தித் தமருகம் தாடித் தமைத்து
எழில்பட வீசிக் கரமெறி நீர்த்தில்லை அம்பலத்தே
குழல்படு சொல்வழி ஆடுவர் யாவர்க்கும் கூத்தினையே!''

(கோயில் திரு. ப. வி, 10) என்பதால் கூத்தன் வடிவு இவண் கூறல் காண்க.

"(கண்டேன்) எடுத்த கழலும் கனலும் கவித்தகையும்
ஒண்டேன் மொழியினை நோக்கிய நோக்கும் ஒளிநகையும்
வண்டேன் மலர்த்தில்லை யம்பலத் தாடும் மணியினையே!

(கோயில். தி. ப. வி. 14) இதுவும் கூத்தன் திருவுருவைக் காட்டும்.

மாதொருபாகன் :

கங்கை வலம் இடம்பூவலம் குண்டலம் தோடி டப்பால்
தங்கும் கரவலம் வெம்மழு வீயிடம் பாந்தள் வலம்
சங்கம் இடம்வலம் தோலிடம் ஆடை வலமக்கிடம்
அங்கஞ் சரியம் பலவன் வலன்காண் இடமணங்கே

(கோயில். திரு. ப. வி. 50) இப்பாடல் மாதொருபாகன் (அர்த்த நாரீசுவர) உருவைத் தெளிவாய்க் காட்டும்.

இயல்பு :

சிவன் சென்னியில் ஊமத்த மலர் வைத்தவன் (திரு. திரு. அ. 72) சுடலைப் பொடியும், என்பும், தலையும் கோத்த மாலையும்' மென்தோளில் மயிர்க்கயிறும் (பஞ்சவடி) கையில் மூவிலை

வேலும் உடைய மாவிரதி கோலம் பூண்டவன் (கோயில். திரு. ப வி. 6) வலன்ஏர் ஏற்றுக் கொடியுடையான் (கோயில். திரு. ப. வி. 17; 42; திரு. திரு. அ. 68) (கலம்பகம் 34) என்று சிவபெருமானின் இயல்புகளை விவரிக்கிறார்.

அயன் :

வேதமுதல்வன் (கோயில், திரு. ப. வி 7) நான்முகன் (ஆ. பி மு. கோவை. 2; 5) என்று அழைக்கப்படுவன். சிவன் திரிபுரம் எரித்தபோது சாரதியாக இருந்தவன் (கோயில். திரு. ப. வி. 28). விட்டுணுமைந்தன் (கோயில் ப. வி. 7) முத்தீயில் அகப்பையால் நெய்யிட்டு வேள்ளி புரிபவன் (ஆ. பி. திரு. மு. கோவை 16 : 10–13).

பிற தெய்வங்கள் :

ஆழிவட்டம் தரித்தவன் (திருமால்) மகன் காமன் (கோயில். திரு. ப. வி 44) சத்தியம்மை (திரு. திரு. அ 56); கதிரவன் மகன் நமன் (திரு. நா. வீ. 9) தக்கன், தானவர், இந்திரன் (கோயில். திரு. ப. வி 19) செல்வத்தரசி இலக்குமி (ஆ. பி திரு. மு. கோவை 28; 10; 35; 53; கலம்பகம் 37) இவர்களைப் பற்றியும் குறிப்பிடுகிறார் நம்பியாண்டார்.

தெய்வங்கள் - புராணங்கள்

அடிக்குறிப்புக்கள்

சங்க நக்கீரர்

1 பத்துப்பாட்டு உரை-நச்சர்-உ வே சா. பதிப்பு. 1956. ப. 71,
2 பழைய உரைகாரர். அடி-255.
3 பரிபாடல். 5: 22-50.
ஷை 8: 127.

நக்கீரதேவநாயனார்

1 வடமொழி இலக்கியவரலாறு-1979. ப. 144. நவாலியூர் நடராஜன்.

II பதினொராந்திருமுறையில் அடியார்கள்

கண்ணப்பர் வரலாறு :

(நக்கீரதேவநாயனார் - கல்லாடர் - சேக்கிழார் கூறும் வேறுபாடுகளுடன்)

சைவத்தில், கண்ணப்பர் வரலாறு தலையாயது. கண்ணப்பரைப் பற்றிச் சமயாச்சாரியர்கள் நால்வரும் கூறுவர். இத்திருமுறையில் நக்கீரதேவநாயனாரும், கல்லாட தேவநாயனாரும் கண்ணப்பர் வரலாற்றைப் பாடியுள்ளனர். பட்டினத்தாரும் கூறியுள்ளார். சாத்திர நூல்களில் திருக்களிற்றுப்படியார் இவரைப் பற்றிப் பேசும்.[1] பத்திக்காப்பியமாம் திருத்தொண்டர் புராணத்தில், சேக்கிழார் மிகவிரித்து 186 விருத்தத்தில் பாடுகிறார், இங்ஙனம் விரித்துப் பாடுவதற்கு நக்கீர தேவநாயனார் பாடலும். கல்லாட தேவநாயனார் பாடலும் துணைபுரிந்துள்ளன. ஈண்டு ஒன்றினின்றும் ஒன்று எங்ஙனம் விரிகிறது என்பதை ஒப்பிட்டு பார்க்கலாம்.

> ''திருக்கண் ணப்பன் செய்தவத் திறத்து
> விருப்புடைத் தம்ப விரி கடல் உலகே''-

எனக் கண்ணப்பர் செயலைத் தவமாகவே கீரர் கூறுவர். பாடலின் தொடக்கமே இங்ஙனம் வருகிறது. இப்பாடல் 158 அடிகளைக் கொண்டது. மற்றும் இப்பாடலில் கீழ்க்காணும் செய்திகள் வருப :

1. பாட்டில் கானவர் குலம் மட்டும் கூறல். (தாய், தந்தையர், ஊர், நாடு. பெயரில்லை.)

2. கண்ணப்பர், முன்பே மலைமகள் பங்கனை அறிந்தவராகவும் பொற்பாத மலரினை வணங்கித் தொழுதபின்பே உணவு உண்ணும் பழக்கத்தினர் என்றும் புதியாய்க் கூறல்.

3. வேட்டையில், பணியாளர் யாரும் துணை போகவில்லை. வேட்டைநாய் தொடரச் சென்றார் என்பது புதுமை.

4. வேட்டையாடப்படும் விலங்கு யாது என்று குறிக்கவில்லை.

5. சிக்கிய விலங்கின் ஊனைக் கண்ணப்பர் தானே அறுத்துத் தானே தீக்கடை கோலில் தீயுண்டாக்கிக் காய்ச்சினார்.

6. ''திருக்காளத்தி எய்திய சிவற்கு'' என்பது இவர் வாக்கு. இங்குக் ''குடுமித் தேவர்'' என்ற பெயர் இல்லை.

7. ''வழிபடக் கடவ மறையோன்'' என்றார் (அந்தணர் பெயர் இல்லை)

8 மறையோர் செய்த பூசை; 'ஆகம பூசை'. இதனை விரிவாய்க் கூறுகிறார். 'திருந்த முத்திரை சிறப்பொடும் காட்டி மந்திரம் எண்ணி'' என்பதால் இது ஆகம பூசையாம். இச்செய்தி களைச் சேக்கிழார் ஒரே செய்யுளில் ஒரே அடியில் முடித்து விடுகிறார். (செ. 135).

9. மறையவர் செய்த பூசையைக் கண்ணப்பர் செருப்படியால் மாற்றினார் என்பர் கீரர். (இதனைச் சேக்கிழார் விட்டு விடுகிறார்)

10. கண்ணப்பர் செய்த பூசை நாளையோ. மறையவர் கனவில் தோன்றிய நாளையோ இவர் கணக்கிட்டுக் கூறவில்லை. (சேக்கிழார் 5ஆம் நாள் இரவில் கனவில் தோன்றியதாக விரித்துக் கூறல். பா. 166)

11. சிவபெருமான் மறையவர் கனவில் தோன்றியபோது, சிவ பெருமானின் உருவக் காட்சியை விரிவாக விளக்குகிறார். இறைவனின் பிறையணி, சடைமுடி, கறைமிடறு, கையில் கனல், தடக்கையில் மழு, நெற்றிக்கண், நெற்றியில் நிறை நீறு, ஒற்றைமால்விடை, இவற்றோடு உமையொரு பாகனாகக் கனவில் வந்ததாய் இவர் கூறுவர். (சேக்கிழார், ''மின்றி கழுஞ் சடைமவுலி வேதியர்தாம் எழுந்தருளி'' பா. 156 என்று ஒரே அடியில் சுருக்கி விடுகிறார்).

12. ஈண்டு, சிவபெருமான் மறையவர் கனவில் தோன்றிக் கூறிய மொழிகள் வருமாறு :

அ) வேடனை 'மாதவன்' என்று கூறுவர்.

ஆ) அவன் இயங்கிய இடமும் முனிவர் வாழ் இடம்.

இ) செருப்படி, விருப்புடையது.

ஈ) அவன் வாயே பொற்குடம்.

உ) வாயில் உள்ள நீர், கங்கை நீர்.

ஊ) புனலிலிடு மாமணி, அவனது நிரைப்பல்

எ) அதற்கீடு தூமலர், அவனது நாவே

ஏ) மீசையாம் புன்மயிர், தர்ப்பையினும் இனிது

ஐ) அவன் தலை தாங்கிய சருகிலை, கற்பகத்தவர்.

ஒ) இட்ட இறைச்சி ''நன்மாதவர் இட்ட நெய்பால் அவியே"

என விளக்கிக் கூறல். இவற்றுள் சேக்கிழார் நீக்கியும் சிலவற்றை விரித்தும் செய்யுள் செய்வர். (சேக்கிழார் 156 – 162).

இ, ஈ, உ, ஐ, ஒ என்றவற்றில் கூறிய செய்திகளைச் சேக்கிழார் கூறினும், சற்று விரித்து விளக்கி ஒவ்வொரு பாடல் செய்கிறார்.

அ, ஆ, ஊ, எ, ஏ என்றவற்றில் உள்ள செய்திகளைச் சேக்கிழார் கூறவில்லை

13. அந்தணரை இறைவன் 'அருச்சனை செய்தாங்கிரு' என்பர் கீரர். (அந்தணரைத் தன் பின்புறம் இருவென இறைவன் கூறவில்லை).

14. '' திருக்காளத்தியுள் ளப்பன்
திருமேனியின் மூன்று கண்ணாய்
ஆங்கொரு கணணிலும் உதிரம்
ஒழியா தொழுக இருந்தனனாக.

(126 – 129)க் காட்டுவார் 'கீரர்'.

(சேக்கிழார் மூன்று கண்பற்றிக் கூறவில்லை; இருகண் என்றும் கூறுவர் (பா. 180).

15. '' அத்தனுக் கடுத்ததென் அத்தனுக் கடுத்ததென் " என்ற நக்கீர தேவநாயனார் வாக்கை சேக்கிழார் அப்படியே ஆளல். பா : 174).

16. ஒரு கண்ணில் குருதி நின்றதும் கண்ணப்பர் தாமே "மற்றைக் கண்ணிலும் வடிக்கணை மடுத்து" என்றார் கீரர். இரு கண்ணிலும் குருதி வந்ததாய் அவர் கூறவில்லை. (சேக்கிழார் கீரர் வாக்கை உட்கொண்டு விரிக்கிறார்).

17. கண்ணப்பர் மற்றக் கண்ணையும் இடந்து அப்ப முயன்ற போது. "நில்லுகண்ணப்ப! நில்லுகண்ணப்ப! என்று மூன்றுமுறை கூறிச் சிவலிங்க வடிவிலிருந்து கைதோன்றிக் கண்ணப்பர் கையை அம்பொடும் அகப்படுத்தது" என்றார் கீரர். (சேக்கிழார், இதனை அப்படியே கூறுவர். சிவலிங்க வடிவம் என்பது மட்டுமில்லை).

18. பிறகு, வானவர் மலர் பொழிந்தனர். வளையொலி, படகம், துந்துமி கறங்கின. முனிவர் ஏத்தினர். "சிவகதி பெற்றனன் திருக்கண் ணப்பனே" என முடிக்கிறார், கீரர். (சேக்கிழாரோ வானவர் என்றதை விரித்து நான்முகன் முதலாயுள்ள வானவர் என்பர். பல்லியங்கறங்கியதை விட்டு விடுகிறார். மறைகள் ஆர்ப்ப எனச் சேர்க்கிறார். செ. 185.)

இந்நூலுள் கல்லாட தேவநாயனார் கூறும் திருக்கண்ணப்பர் வரலாற்றையும் உடன் காணல் வேண்டும்: அது 38 அடிகள் ஆசிரியப்பா; செய்திகள் வருமாறு :

1. பன்றி வேட்டைக்குப் போனதாய்ச் சுட்டல் (கீரர் கூறவில்லை; சேக்கிழார் கூறல்.)
2. "கானப் பேருறை கண்ணுதல்" என கல்லாட தேவநாயனார் கூறல். (இப்பெயரை இருவரும் கூறாமை)
3. "முக்கண் அப்பனுக் கொருகண்ணில் உதிரம்
   செக்கி ணத்திடை இழிதர-எனக் கல்லாட
   தேவநாயனார் கூறல்
4. கோசரி என்று மறையவர் பெயர் கூறல்.
5. "ஒருகை யாலும் இருகை பிடித்து
   ஒல்லை நம்புண ஒழிந்தது பாராய்
   நல்லை நல்லை எனப் பெறும்"

என்று கூறல். "இருகை பிடித்து" என்பது புதிய செய்தி. சிவலிங்கம் முதலிய உருவம் கூறவில்லை. கண்ணப்பரே கடவுள் நிலை எய்தி, "கருவேட் டுழல் வினை காரியம் தடுப்பார்" என்று ஏத்திப் போற்றல்.

இனிச் சேக்கிழார் புதியனவாகச் சில சேர்த்துக் கூறியன பற்றிச் சிந்திக்கலாம்.

1. பொத்தப்பி நாடு - உடுப்பியூர், பெற்றோர் - நாகன், தந்தை, எனல். தேவராட்டி நாணன், காடன் பற்றிக் கூறல்: சேக்கிழார் மட்டுமே இவ்விவரங்களைத் தருகிறார்.
2. பொன்முகலி ஆறு ஓடும் மலை எனச் சேக்கிழார் கூறல்.
3. நீர் வேட்கையால் மலைப்பக்கம் போனதாகவும் நாணன் கூறக் குடுமித் தேவரைப் பற்றிக் கண்ணப்பர் அறிய நேர்ந்ததாயும் கூறல்.
4. கண்ணப்பர் காடனைத் தீக்கடையக் கூறல்.
5. தொடுத்த அம்புடன் கண்ணப்பர் இறைவனுக்கு இரவில் காவல் காத்தல்
6. மறுவேட்டை பற்றிக்கூறி அதில் மான், கலை, மரை, கடமை ஆகிய விலங்குகளை வேட்டையாடியதாய்க் கூறல். இறைச்சியில் தேனும் சேர்த்து இறைவற்குப் படைக்கக் கொண்டு வருதல்
7. நாகன், தேவராட்டியுடன் வந்து கண்ணப்பரை அழைத்துப் போக முயன்று தோல்வி கண்டு திரும்புதல்
8. சிவகோசரியார் 5ம் நாள் இரவு கனவு கண்டது.
9. ஆறாம் நாள் காலை, கண்ணப்பர் வேட்டை முடித்துத் திரும்புங்கால், தீய சகுனங்கண்டது
10. முதலில் வலக்கண்ணில் குருதி வந்தமை.
11. இறைவர்க்குத் துயர் செய்தது விலங்கோ வேடுவரோ எனக் கண்ணப்பர் தேடியதாய்க் கூறல்.
12. இறைவன் இடக்கண்ணிலும் குருதி வரச் செய்தமை கூறல்
13. இறைவன், கண்ணப்பரை 'நீ நமக்கு வலப்பக்கம் நில்' என்றார் எனக் கூறல்.

இவை சேக்கிழார் படைத்து மொழிந்தவை; காவியப் போக்கிற்கு ஏற்பக் கூட்டியும் குறைத்தும் புதியனவாய்ச் சேர்த்தும் ஆக்கியவை.

ஆகவே, சேக்கிழாரின் விரிவிற்கு நக்கீர தேவநாயனார் பாடலும், கல்லாட தேவநாயனார் பாடலும் துணை நின்றன என்பதாம்.

நக்கீர தேவநாயனார் கூறும் அடியார்கள்

1 கண்ணப்ப தேவர் - காளத்தியின் சிறப்பைக் கூறும்போது தலபுராணச் செய்திபோலக் கூறுதல் (கயிலை பா 12) (போற்றி 42–44) கண்ணப்ப தேவர் திருமறம் - முழுநூல்.

2. சண்டிசுரருக்கு அருளியது : கயிலை பா. 31, போற்றி 20-21.
3. மார்க்கண்டேயருக்கு அருளியது, கயிலை. பா. 33; போற்றி 6–7 ஷை 33.
4. சாக்கிய நாயனார்க்கருளியது கோபப்பிர. 17-18.
5, பிருங்கி முனிவர்க்கு அருளியது. ஷை 28. திருவெழு 46.
6. புலிக்காலன் மகன் உபமன்யுவிற்கு அருளியது: கயிலை பா. 81.
7. இராவணனுக்கு வாள் அருளியது. தேவபாணி. 46–47.

இங்குக் கூறிய இறையடியார்கள் யாவரும் தேவார ஆசிரியர்கட்கும் முந்தியவர்கள் என்பதை நினைதல் வேண்டும்.

பட்டினத்தார் கூறும் அடியார்கள் :

பட்டினத்தார், அடியார் சிலரின் வரலாறுகளைக் கூறி மகிழ்கிறார். ஒருபா ஒருபஃது தவிர, ஏனைய நான்குநூல்களிலும் இத்தகு வரலாறுகள் வருகின்றன. தேவார ஆசிரியர் காலத்திற்கும் முன்பு வாழ்ந்த சிவபத்தர்களைப் பற்றியும் குறிக்கிறார்,

''மூன்றுகோடி ஆன்ற முனிவரும்
வசிட்டனும் கபிலனும் அகத்தியன் தானும்
தும்புரு நாரதர் என்றிரு திறத்தரும்.''

(திருவிடை 28 : 27–29)

என்று அடியார்களைச் சுட்டுவர்.

'மலையத்து அகத்தியன் அர்ச்சிக்கா'' என்று மற்றுமோர் இடத்திலும் குறிக்கிறார். (திருவேகம்ப 56).

சாக்கிய நாயனாரைப் பற்றி ஓரிடத்துப் பகர்கிறார்:

''கல்லால் எறிந்த பொல்லாப் புத்தன்
நின் நினைந்தெறிந்த அதனால்
அன்னவன் தனக்கும் அருள்பிழைத் தின்றே.''

(திருவிடை 25 : 31-34)

சண்டிசுரருக்கருளியது இரு முறை குறிக்கப்படுகிறது.

திருவேகம்பமுடையார் அந்தாதியிலும் இக் குறிப்புண்டு (பா : 48). மேலும்,

''தாதையை எறிந்த வேதியச் சிறுவற்குப்
பரிகலம் கொடுத்த திருவுளம் போற்றி''- என்பார்.

(கோயில் நா: 40 : 27-28)

இதேபாட்டில் சிறுத்தொண்டநாயனார், மாவலிச் சக்கரவர்த்தி ஆகிய இருவர் பற்றியும் குறிப்பு வருகிறது.

''நின்முதல் வழிபடத் தன்மகன் தடிந்த
தொண்டர் மனையில் உண்டல் போற்றி
வெண்ணெய் உண்ண எண்ணுபு வந்து
நந்தா விளக்கை நுந்துபு பெயர்த்த
தாவுபுல் எலிக்கு மூவுல காள
நொய்தினில் அளித்த கைவளம் போற்றி''

(40 : 29—34)

என்று வருதல் காண்க. மேற்கூறிய இவ்விருவரைப்பற்றியும் தேவார ஆசிரியர்கள் கூறியுள்ளனர். தில்லை மூவாயிரவர்களும் சிவனடியார் என்பதை அடிகள் கூறுகிறார். (திருவேகம். பா. 47) சம்பந்தரும், சுந்தரரும் மூவாயிர ஊரைப் பற்றிக் கூறுவர்.

திருக்கழுமல மும்மணிக்கோவையின் முதற்பாட்டில், திருஞான சம்பந்தர் வரலாற்றைக் குறிக்கிறார்.

''தாதையொடு வந்த வேதியச் சிறுவன்
தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த
அன்னா யோவென் றழைப்பமுன் னின்று
ஞான போனகத் தருள் அட்டிக் குழைத்த
ஆனாத் திரளை அவன்வயின் அருள
அந்தணன் முனிந்து தந்தார் யாரென
அவனைக் காட்டுவன் அப்ப! வானரர்
தோஒ டுடைய செவியன் என்று
பீஇடுடைய பெம்மான் என்றும்''

''கையில் சுட்டிக் காட்ட
ஐயநீ வெளிப்பட் டருளினை ஆங்கே''

(திருக்கழுமலம். 1. 23 : 33)

என்ற பாடலில் திருஞானசம்பந்தர் வரலாற்றையும், இறைவன் எளிவந்த பிரானாய்த் தோன்றும் அருமையையும், சம்பந்தர் பாடிய முதற் பாடலின் முதல் அடியையும், கூறியிருப்பது சிறப்பாகும்

திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில் பாடல் 28 இல் அடி 10 முதல் 55 அடி வரையில் 30 பேர்களை - தெய்வங்கள் உட்பட அடியார்களாகக் குறிக்கிறார்.

மக்களில் அடியாராக அவர் சுட்டுவது (1) தேவார ஆசிரியர் மூவர் 2) பெருந்துறைப்பிள்ளையாகிய மணிவாசகர். (3) சிவவாக்கியர். (4) வரகுண பாண்டியர் ஆகிய அறுவரைச் சுட்டுகிறார்.

"வித்தகப் பாடல் முத்திறத் தடியரும்
திருந்திய அன்பின் பெருந்துறைப் பிள்ளையும்
அத்தகு செல்வத் தவமதித் தருளிய
சித்தமார் சிவ வாக்கிய தேவரும்"

(திருவிடை. 28 : 30-34)

என்று உரைக்கிறார்.

வரகுண பாண்டியரின் வரலாற்றைமிக விரிவாக 21 அடிகளில் கூறுகிறார்.

1. கள்ளன் ஒருவன் நீறுபூசியிருப்ப, அவனைச் சிவனடியாராக் கொண்டு விடுதலை செய்தவர். 2 ஊளையிட்ட நரிகட்குச் சிவனைப் பாடியதாய்க்கொண்டு போர்வை நல்கியவர். (உடாஅ போராஅ ஆயினும், படாம் ஈத்த பேகன் நினைவு வருகிறது). 3 தவளை அரற்ற அவற்றிற்கு நீரில் காசும் பொன்னும் (உணவும்) வழங்கியவர். 4. இறைவனுக்குரிய திருமஞ்சன எள்ளை உண்டவனைக் காவலர்கொண்டு வந்தபோது, அரசன் பிழையேன் செய்தனை என்று வினவ. "அடுத்த பிறவியில் சிவத்தொண்டாற்றும் மாடாவேன் அதனால்" என்று விடைபகர, அரசர் அவன் வாயில் இருந்த எள்ளையும் வெறுக்காமல் தாம் பாதி உண்டவர். 5, திருவிடை மருதூரின் புறத்தே ஒரு மண்டை ஓடு கிடப்ப, அதை வணங்கித் தாமும் அங்ஙனமாக விரும்பியமை. 6. கோயில் முற்றத்து நாயின் கழிவுப் பொருள் கிடப்பத் தாமே எடுத்துத் தூய்மையாக்கியவர். 7. வேம்பின் விதைகள் கீழே விழ்ந்தபோது, அவற்றைச் சிவலிங்கமாகக் கருதி வெறுந்தரையில் கிடத்தல் ஆகாதென விதானம் அமைக்க ஆணை போக்கியவர். 8. அரிய பொருள்களை இறைவனுக்கு நிவேதனமாய் வழங்குதல் உண்டு என்ற முறைமையில் தம் அழகிய மனைவியையும் இறைவர்க்குக் கொடுத்தவர்- 'புரிகுழல் தேவியைப் பரிவுடன் கொடுத்த பெரிய அன்பின் வரகுணதேவர்,' (28:35-55) என்று வாயார மனமாரப் போற்றி மெய்சிலிர்க்கிறார். இவ்வரலாறு வேறு இடங்களில் கேட்கப்படுதல் இல்லை. கொடை மடம், படை மடம் போல், இது பத்தி மடம். ஆக, பட்டினத்தார் கூறும் அடியார்கள் - 13 பேராவார் வசிட்டன், கபிலன், அகத்தியன், தும்புரு, நாரதர், சாக்கிய நாயனார், சண்டிசுரர்,

மாவலி தில்லை மூவாயிரவர், திருஞானசம்பந்தர், மணிவாசகர், சிவவாக்கியர், வரகுணபாண்டியன், ஆகியோராவர்.

நம்பியாண்டார் நம்பி கூறும் அடியார்கள் :

திருஞானசம்பந்தர் :

திருஞானசம்பந்தப் பெருமானின் வாழ்க்கை வரலாற்றைப் பதிகச் சிறப்பைப் பெரும்பாலும், ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி, ஆளுடையபிள்ளையார் மும்மணிக்கோவை, திருவுலாமாலை, ஆளுடையபிள்ளையார் திருத்தொகை ஆகிய நான்கு நூல்களில் மிகுதியாகவும் ஏனைய இருநூல்களில் அடுத்த நிலையிலும் நம்பியாண்டார் நம்பி கூறியிருக்கிறார். உலாமாலை, திருத்தொகையில் நிரம்பிய அளவில் வரலாறு மொழிகுவர். இவற்றில் கூறிய வரலாறுகளைக் காண்போம்.

வரலாறு :

திருஞானசம்பந்தர் வரலாற்றில் இரு செய்திகள் மிகச் சிறப்பான இடம் பெறுபவை :

''கிளிவந்த சொல்லிபொற் கிண்ணத்தின்
ஞான அமிர்தளித்த
அளிவந்த பூங்குஞ் சியின் சொற்
சிறுக்கன்'' (ஆ. பி. திரு. அ. 73)

என்பர். நம்பியாண்டார் நம்பி பாராட்டும் வரலாறு, சீகாழியில் சம்பந்தர் பசித்து அழுதபோது மாதொருபாகர் உமாபதியாகத் தோன்றி, மலையரையன் மடப்பாவையைப் பாலூட்டுமாறு பணிக்க, அம்மை, பொற்கிண்ணத்தில் அறிவாகிய பாலை வார்த்தளித்தாள் என்பதொன்று. இதில் நம்பியாண்டார் நம்பி வெகுவாக ஈடுபடுகிறார். இச்செய்தியை ஆறு நூல்களிலும் 13க்கும் குறையாத இடங்களில் குறிப்பிடுகிறார்.

மற்றொன்று, பாண்டிய நாட்டில் சமண சமயம் பரவாமல் தடுத்துச் சமணர்களை வென்ற செய்தி. சமணர் கழுவேறிய செயதியை ''அமண் கணங்கழு ஏற்றிக் கருவிடம் தீர்த்து (ஆ.பி. திரு அந்தாதி 39) ''அமனைப் பண்ணைக் கழுவின் நுதிவைத்து'' (98) என்று கூறுவர். இச்செய்தி 10க்கும் மேற்பட்ட இடங்களில் வருகின்றது. வேறு 15 இடங்களில் அமணர்களை அழித்தவன் அல்லது வென்றவன் என்றவாறு பேசுகிறார். ஆகவே மிகுந்த அளவு பேசப்படும் வரலாறிதுவே. இவ்விரண்டும் நம்பியாண்டார் நம்பிக்கு மிக இன்றியமையாச் செய்திகளாகப் படுகின்றன.

அகச்சான்றுகள் :

ஞானப்பால் உண்டபின் உமையையும் சிவனையும் தன் தாதைக்குச் சம்பந்தர் காட்டிய வியத்தகு செயலை நம்பி யாண்டார் 7க்கும் குறையாத இடங்களில் சுட்டுகிறார். இச் செய்தியை ஞானசம்பந்தரே தமது திருப்பிரமபுரம் பதிகத்தில் பாடுகிறார்.

"போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்"

என்பது சம்பந்தர் பாடல்.[2] ஆகவே, இந்த அகச்சான்றைக் கண்டே இவ்வரலாற்றினை நம்பியாண்டார் நம்பி குறிப்பிடுகிறார்.

சம்பந்தர் பாடல் ஒவ்வொரு பதிகத்திலும் 10ஆம் பாடல் சமணரைப் பழிக்கும் வகையில் இருக்கிறது மேலும் சம்பந்தர் பாடலிலேயே சமணரை அழிக்க விரும்பிய செய்தி தெரிவிக்கப் பட்டுள்ளது.

'வேட்டு வேள்விசெய் யாஅமண் கையரை
ஒட்டி வாதுசெயத் திரு வுள்ளமே''

''ஓதி யோத்த றியாஅமண் ஆதரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
ஆதி யேதிரு ஆலவா யண்ணலே
நீதி யாக நினைந்தருள் செய்திடே''

— என்பதால்

இது பற்றி யறியலாம்.[3] மற்றும் திரு ஆலவாய்ப் பதிகத்தில் நாலடி மேல்வைப்புப் பதிகத்திலும் இச்செய்தியைக் கேட் கிறோம், 'வாதில் வென்று அழிக்கத் திருவுள்ளம்' என்ற மேல் அடியை நோக்குக.[4] ஆயினும் கனல் வாதம், புனல் வாதம் நிகழ்ந்ததற்குச் சம்பந்தர் பாடலில் சான்றிருப்பினும், சம்பந்தர் சமணரைக் கழுவேற்றினார் என்பதற்கு அவர் பாடலில் அகச் சான்றில்லை. சம்பந்தர் விதித்த போட்டி விதிப்படி அமணர் தோற்றதும் தாமே கழுவேறியிருப்பர் அல்லது அரசன் கழுவேற் றியிருப்பான். இதனை நம்பியாண்டாரே திருத்தொண்டர் திருவந்தாதியில்......'' கடற்காழி யர்பெரு மாற்கெதிராய் ஆர்த்த அமணர் அழிந்தது கண்டுமற்றாங்கவரைக் கூர்த்த கழுவின் நுதிவைத்த பஞ்சவன் (திரு. திரு. அ. 60) என்று உரைத்தார். ஆனால் மிகப்பல இடங்களில் உபசார வழக்கு பற்றிச்

சம்பந்தர் கழுவேற்றினார் என்றும் நம்பியாண்டார் நம்பி கூறுகிறார். சம்பந்தர் பாடலில் சமணரைக் கழுவேற்றியதற்குரிய தடையம் இல்லை. அமணர் வலி தொலையச் செய்தார் என்பதே உண்மை.

சம்பந்தர் வாழ்க்கையில் கேட்கப்படும் வேறு வரலாறுகள் யாவை?

திருமருகலில், விடநாகம் தீண்டி, ஒரு வணிககுல மணி இறந்தான். உடன் சென்ற பெண், அவனை இழந்து துயர்ப் பட்டாள்; அரற்றினாள். இவளது துன்பம் நீங்குமாறு திருஞான சம்பந்தர் பாடல்பாடி, அவனைப் பிழைக்கச் செய்து அம்மகளின் கண்ணீர் துடைத்தார். இவ்வரலாறு 10 இடங்களில் நம்பி யாண்டார் நம்பியால் சுட்டப்படுகின்றது. இதுவும் நம்பியாண்டா ருக்குப் பிடித்த வரலாறு இதைப் பற்றியும் திருஞான சம்பந்தர் தம் திருமருகல் பதிகத்தில் ''எந்தாய் தகுமோ இவள் ஏசறவே'' ''நெறியார் குழலி நிறை நீக்கினையே'' என்றெல்லாம் தாமே வருந்தி, ''சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்'' என்று தொடங்கும் பதிகப்பாடலால் வழிபட்டு உயிர்ப்பித்தார் என்ற அகச்சான்றால் அறியலாம்.[5]

அடுத்து மிகுதியான அளவில் நம்பியாண்டார் நம்பி ஆளும் கதை, திருமறைக் காட்டில் கதவம் அடைப்பித்தது. இதனை ஏழு இடங்களில் மொழிகுவர். இச்செய்தி ஆறு நூற்களிலும் காணப் படுகிறது. ''சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்'' எனத் தொடங்கும் ஞானசம்பந்தரின் திருமறைக் காட்டுப் பதிகத்தால் (2ஆம் திருமுறை : 1) இதனை அறியலாம். ஆகவே இதற்கும் அகச்சான்றுண்டென்பதாம்.

சிவன் அருள் ஆணைப்படி அந்தணர்கள் திருஞான சம்பந்தருக்குத் திரு அரத்துறையில் முத்துச் சிவிகை அளித்தனர். இது குறித்துச் சம்பந்தர் பாடலில் நேரடியாக எக் குறிப்புமில்லை. திரு அரத்துறைப் பதிகத்தில் இறைவனை ஏத்திப் போற்றும் சிறப்பே உள்ளது. நம்பியாண்டார் நம்பி, இவ்வரலாறு தெரிநது மூன்று நூல்களில் ஆறு இடங்களில் குறித்துள்ளார்.

(1) திருஞானசம்பந்தர் திருவீழிமிழலையில் படிக்காசு பெற்றமை.

(2) கொள்ளம்புதூரில் தம் கவியாற்றலால் ஓடம் இயங்கச் செய்தமை.

(3) யாழ்ப்பாணர் தம் யாழில் சம்பந்தரின் பாடலைப் பாட இயலாதவாறு யாழ்முரி பாடியமை.

ஆகிய வரலாறு ஒவ்வொன்றையும் ஆறு இடங்களில் நம்பி யாண்டார் நம்பி செப்பியுள்ளார். இவற்றைச் சம்பந்தர் முறையே, திருவீழிமிழலைப் பதிகத்தில் "வாசி தீரவே காசுநல்குவீர்" என்று தொடங்கும் பதிகத்தாலும்[6] திருக்கொள்ளம்புதூர்ப் பதிகத் தாலும் மொழிந்துள்ளார்.[7]

"மாதர் மடப்பிடியும்" எனத் தொடங்கும் தருமபுரம் பற்றிய பதிகம் யாழ்முரிப்பாடல் என்று கூறுவர்.[8] திருநீலகண்ட யாழ்ப் பாணர் யாழ்முரி பற்றிய வரலாறு வழிவழிச் செய்தியாக அறியப் பட்டு நம்பியாண்டார் நம்பியால் இயம்பப்படுகிறது. இதுபற்றி, சம்பந்தர் பாடலில் அகச்சான்று நேரேயில்லை.

திருஞானசம்பந்தர், நாளும் இன்னிசையால் தமிழ் வளர்ப் பதை இறைவன் விரும்பித் திருக்கோலக்காவில் பொற்றாளம் வழங்கினார். சம்பந்தர் தம் தாதையார் வேள்வி செய்ய விழைந்த போது இறைவன்பால் வேண்டி, திருவாவடுதுறையில், பொற்கிழி பெற்றுத் தந்தைக்குக் கொடுத்தார். சமணரோடு மதுரையில் புனல்வாதம் செய்த காலை வைகையில் ஏடு இட, அது எதிர் சென்று வென்றது. இவ்வரலாறுகள் ஒவ்வொன்றும் 5 முறை ஓதப்பட்டுள்ளன.

இவை நம்பியாண்டார் நம்பியின் எல்லா நூல்களிலும் கூறப் படவில்லை.

இவற்றைப் பற்றிச் சம்பந்தர் பாடலில் அகச்சான்றுண்டா? என்று காண்டல் வேண்டும்.

பொற்றாளம் பெற்றமைக்கு அகச்சான்று பாடலில் இல்லை. குறிப்பாகவும் செய்தியில்லை. ஆனால் இச்செய்தியைச் சுந்தரர் கூறுகிறார்.[9] நம்பியாண்டார் நம்பியும் இவ்வரலாறு தெரிந்து குறிக்கிறார். (ஆ. பி. திரு. அ. 82) அவர் காலத்தில் இது நன்கு வழங்கி இருத்தல் வேண்டும்.

திருவாவடுதுறையில் தந்தைக்காகப் பொற்கிழி வேண்டிய செய்தி சம்பந்தர் பாடலில் குறிப்பாய் வருகிறது. திருவாவடு துறைப் பதிகத்தில்,

"இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடு துறை யரனே!"

என்று வருகிறது.[10]

வைகையில் ஏடு ஏறிய வரலாற்றிற்குச் சம்பந்தர் பாடலில் அகச்சான்றுள்ளது. ''வாழ்க அந்தணர் வானவர்'' எனத் தொடங்கும் பதிகப்பாடலில்,

''தெற்றென்று தெய்வந் தெளியார் கரைக்கோலைத்
தெண்ணீப் பற்றின்றிப் பாங்கெதிர் வினூரவும்.''

என்று வரும்.[11]

ஞானசம்பந்தர் திருநீல நக்கரின் சிறந்த அன்பர்; நண்பர் என்பது திருஞானசம்பந்தர் பதிகத்தால் அறியலாம்.[12] திரு முருகனை, சம்பந்தர் பாடியுள்ளார்.[13] திருப்புகலூர் வர்த்த மானீச் சரப் பாடலில் முருகநாயனாரைக் குறிப்பிடுகிறார். இச் செய்திகளை நம்பியாண்டார் 5 இடங்கட்கும் குறையாத நிலையில் பேசுகிறார். ஆகவே, இதற்கு அகச்சான்றுள்ளது என்பதாம்.

மதுரையில் சமணரை வெல்லுதற் பொருட்டுத் தாம் பாடிய ''போகமார்ந்த பூண்முலையாள்'' என்று தொடங்கும் பாட்டினை எழுதி ஏட்டைத் தீயில் இட, அது வெந்து சாம்பலாகாமல் பச்சைப்பசும் பாடலாக ஒளிர்ந்தது. இதனைச் சம்பந்தர் தமது திருநள்ளாற்றுப் பதிகக் கடைக்காப்புச் செய்யுளில் ''கொற்றவன் எதிரிடை யெரியினி லிடயிவை கூறிய சொற்றெரி யொருபதும் அறிபவர் துயரிலர் தூயரே'' என்று பாடுவதால் அறியலாம்.[14] இவ்வரலாற்றுச் செய்தியை நம்பியாண்டார் 5 இடங்களுக்கும் குறையாமல் கூறுகிறார்.

ஓர் அன்பர்க்காகத் திருவோத்தூரில் ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கிய செய்தியைச் சம்பந்தர் தம்திருவோத்தூர்ப் பதிகக் கடைகாப்பில் பாடியருளினார்.[15] இச்செய்தியினை நம்பியாண்டார் நான்கிற்கும் குறையாத இடங்களில் காட்டியுள்ளார்.

ஆளுடையபிள்ளையார் திருத்தொகையில், கீழ்வரும் வரலாறுகள் இயம்பப் பட்டுள்ளன. (1) தென்னவன் நாட்டில் திருநீறுபாலித்தமை (வரி. 20). இது சமணரை வென்றமையைக் குறிக்கும் (2) பாலையும் நெய்தலும் பாடியமை (வரி. 16) இது பாலையை நெய்தலாக்கிய வரலாறாகும். (3) கொல்லி மழவன் மகளின் நோய் நீக்கிய வரலாறு (வரி 31) வெய்யவிடம் மேவி இறந்த மடமகளை வா வென்றழைத்த அதிசயம் (பூம்பாவை கதை) (வரி. 35-38) (4) சமணர் இடு தீ பாண்டியனைப்

பற்றியமை (வரி 48-51) ஆகிய வரலாறுகளை வேறு இடங்களில் நம்பியாண்டார் கூறவில்லை. திருத்தொகையில் மட்டும் வருகின்றன.

மழவன் மகளின் நோய் நீக்கிய செய்தி திருப்பாச்சிலாச் சிரமப் பதிகத்தில் குறிப்பாய்ச் சம்பந்தர் கூறியுள்ளார்.[16] பூம்பாவை வரலாறும் குறிப்பாய்ச் சம்பந்தர் திருமயிலாப்பூர் பதிகத்தே கூறினார்.[17]

அமணர் இடு தீ பாண்டியனைப் பற்றிய செய்தியைச் சம்பந்தர் பதிகத்தில் கூறியுள்ளார். "பொய்யராம் அமணர் கொளுவுஞ்சுடர் பையவே சென்று பாண்டியற்காகவே" என்பது சம்பந்தர் வாக்கு.[18] ஆகவே இவ்வரலாறுகளுக்கு அகச்சான்றுண்டு என்பதாம்.

நனிபள்ளியில் பாலையை நெய்தல் ஆக்கிய செய்தியை 3 இடங்களில் நம்பியாண்டார் கூறுவர். திருநனி பள்ளிப் பதிகத்தில் குறிப்பால் இச்செய்தி வரினும்[19] சேக்கிழார் இதனைக் கூறவில்லை. நம்பியாண்டார் நம்பி குறிக்கிறார்.

கொங்கு நாட்டில் அடியார்களை வருத்திய பனியால் வந்த சுரநோயைச் சம்பந்தர் நீக்கினார் என்ற செய்தியை இரு இடங்களில் நம்பியாண்டார் மொழிந்தார். சம்பந்தர் பாட்டில் அகச்சான்று இதற்கில்லை. வழிவழிக் கேட்டறிந்து நம்பியாண்டார் கூறினார்.

நம்பியாண்டார் புகலியர்கோன் புகலூரில் போனகம் பெற்றார் என்று கூறுவர். (ஆ பி. திரு. அ. பா. 40). இதுபற்றி விளக்கமாகப் பிற பாடலிலும் சம்பந்தர் பாடலிலும் இல்லை.

பெருமணநல்லூரில் சம்பந்தர் தம் பெற்றோருடன் சோதியிற் கலந்த செய்தியை நம்பியாண்டார் நம்பி 3 இடங்களில் கூறுகிறார். இச்செய்தி திருநல்லூர்ப் பெருமணம் கடைக்காப்பால் அறியலாம்.[20]

மேலேகண்ட வரலாறுகளைத் தொகுத்துக்காணுங்கால், திருஞானசம்பந்தர் குறிப்பாகவோ-வெளிப்படையாகவோ தமது பாடலில் குறிக்காது விடுத்த வரலாறுகள் 7 எனலாம்.

(1) சமணரைக் கழுவேற்றியமை (2) முத்துச்சிவிகை பெற்றமை (3) யாழ் முரிபாடித் திருநீலகண்டரின் யாழ் முரித்தமை

(4) பொற்றாளம் பெற்றமை (5) நனிபள்ளியில் பாலையை நெய் தலாக்கப் பாடியமை (6) கொங்குநாட்டில் பனியால் வந்த நோய் அடியாரை வருத்தாமல் காத்தமை. (7) புகலூரில் போனகம் உண்டமை - இவற்றைப் பற்றிச் சம்பந்தர் குறிப்புக்கள் தரா விடினும், நம்பியாண்டார் நம்பி தெளிவாக இவற்றைக் குறிக்கிறார். ஆகவே, நம்பியாண்டார் நம்பி காலத்தில் பதிகம் எழுந்த சூழல்கள் நன்கு தெரிந்திருந்தன என்பதாம். ஆகவே, நம்பியாண்டார் நம்பி கூடுதலாய் வரலாறுகளை விளக்கம் செய்திருக்கிறார் என்று தெரிகிறோம்.

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும், திருத்தலங்களை ஒன்றாய் இருந்து பரவிய செய்திகளோ, திருவாய்மூரில் திருவாய் மூர் அப்பன் ஆடிய அழகு கண்டு சம்பந்தர் பரவிப் பாடிய நிகழ்ச்சியோ, நம்பியாண்டாரால் எக்காரணம் பற்றியோ குறிக்கப் படவில்லை.

இத்தகு இறையருட் செயல்கள் வெறும் கதைகளில்லை. இந்நாளிலும் இத்தகு வியத்தகு செயல்களைக் காட்டி இறை யுண்மையை நிலைநாட்டுவார் உளர். பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபா போன்றோர் இப்படி நிகழ்த்துவதை இந்நூலாசிரியர் கண்டிருக்கிறார்.

நம்பியாண்டார் நம்பியின் குரு :

நம்பியாண்டார் நம்பி, திருஞானசம்பந்தரைத் தம் ஞான குருவாகக் கொண்டார் ஆகவேதான். அவரைப் பற்றி 6 நூல்கள் எழுதினார்.

"யாம் வாழ அமணர் வலி தொலைய ஐயன் பிரம புரத்தற்கு" (திரு. திரு அ. பா. 33) என்று ஞானசம்பந்தரைப் பற்றிக் குறிப் பிடும் முதற்பாடலில் முதலில் கூறுகிறார்.

"யானைமிசை இவர்ந்து செல்லும் அரச வாழ்க்கை வாய்ப் பினும் தமிழாகரனையல்லால் வேறு ஒருவரைப் பாடமாட்டேன்"- (ஆ பி. அ. பா: 79) என்ற இடத்து நம்பியாண்டாரின் பக்தி வெளிப்படும்.

தன்குரு என்பதைக் கலம்பகத்தில் தெளிவாகக் கூறி விடுகிறார்.

"..................ஞானமுணர்
பரமகுரு நாதன்மிகு பரசமய கோளரியே"

(ஆ. பி. திருக்கலம்பகம் பா: 24) என்பர்

"கூற தாகமெய் யடிமை தான்எனை
உடைய கொச்சையர் அதிபதி" (ஆ. பி. க. 27)

".........புகலி நாதன்
துன்னு ஞானத் தெம்பிரான்மெய்" (ஆ. பி. க. 29)

என்ற இவ்விடங்களிலும் இச்செய்தி அறியப்படும்.

திருஞானசம்பந்தர் திருவடிச்சிறப்பு :

வழிவழியாய் வரும் பிறவித்துயரைத் திருஞானசம்பந்தர் இணையடிகள் மிகக்கெடுத்து நிற்கும் வல்லபம் உடையன (ஆ. பி. கலம்பகம். 49; 36) "தொழ நினைத்தாலே தொடரும் இரு வினைத்துயர் போகும்"........

"........கழும லப்பதி நாதன் இயலுடைக்கழல் தொழநினைப்ப வரிருவினைத் துயர்போமே" (ஆ. பி. க. 18)

என்ற இடங்களில் இணை அடிகளின் இறைமையைக் காட்டுவார். இச்செய்தியை உடன்பாட்டு வாய்ப்பாட்டில் கூறியவர் 'சம்பிரதம்' பாடும்போது நயமாக எதிர்மறையிலும் கூறுகிறார்.

"கவுணிய நற்குல திலகன் இணைக்கழல்
தொழுது வழுத்திய பிறரொரு வர்க்குறு
துயர்வரு விப்பனி கரியதொர் விச்சையே"

(ஆ. பி. க. 17)

எனப் பகர்வது மிகச் சிறப்பாக விளங்குகிறது.

சைவ சிகாமணியின் பொன்னடிகள், அடியவர்களின் பூசைக்குரியனவாய் சங்கப் புலவர் பாடற் பொருளாய், இருள்-வறுமை ஒழிக்கும் திறல் மிக்கனவாய் இருப்பன என்று போற்றுகிறார். இங்குச் சம்பந்தரின் திருவடிமாட்சியை நம்பியாண்டார் நம்பி நன்கு விளக்கி உள்ளார்.

"என்றும் அடியவர் உள்ளத் திருப்பன, இவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித் துதிப்பன நலல சங்கத்
தொன்றும் புலவர்கள் யாப்புக் குரியன, ஒண்கலியை
பொன்றும் கவுணியன் சைவ சிகாமணி பொன்னடியே!"

(ஆ. பி. திரு. மு. கோவை-3)

பதிகச் சிறப்பு :

திருஞானசம்பந்தர், தமது பக்தி மிகுதியால் இறைவனைப் பாடிப் பல பதிகம் செய்தார். 1600 பதிகங்கள் என்பது நம்பியாண்டார் கூற்று. இவை சித்தாந்த நுட்பம் மிக்கவை. உயிர்கள் அறியும் பொருட்டுச் சம்பந்தர் தந்தவை. அரன் கழல் மேல் அணியாக இருப்பவை; சுந்தரமார் தமிழ் விரகன் தந்த பதிகங்கள்.

" அறிதரு நுண்பொருள் சேர்பதி கம்பரன் கழல்மேல்
அணிதரு சுந்தர மார்தமிழ் விரகன் "

(ஆ. பி. கலம்பகம். 45) என்று இசைக்கிறார். இன்னும்......

" பெறுபயன் மிகப்புவியுள் அருளுவன; பிற்றைமுறை
பெருநெறி அளிப்பன; பல் பிறவியை ஒழிச்சுவன;
உறுதுயர் அழிப்பனமுன் உமைதிரு வருட்பெருக
உடையன; நதிப்புனலின் எதிர்பஃறி உய்த்தன; புன்
நறுமுறு குறைச்சமனை நிரைகழு நிறுத்தியன;
நனிகத வடைத்தனது னருவிடம் அகற்றியன;
துறுபொழில் மதிற்புறவ முதுபதிமன் ஒப்பரிய
தொழில்பல மிகுத்ததமிழ் விரகன் கவித்தொகையே! "

(ஆ. பி. கலம்பகம். 35)

என இவ்வதிசயங்களை விளைவித்தனவாகச் சம்பந்தரின் கவிமாட்சியைப் பாராட்டுகிறார். மேலும் இம்மை மறுமைப் பயன்களைத் தரும். பிறவியை ஒழிக்கும் திருவடிகள் என்று காட்டுவது நோக்கத்தகும். சம்பந்தர் பாடல்களை இறைவன் மகிழ்ந்து ஏற்றவை என்று செப்புவது சிறப்பு. தமது மும்மணிக் கோவையிலும்.

" பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனும் தோற்றோணி கண்டீர் - நிறையுலகில்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ் " (ஆ. பி. திரு. மு. கோவை. 11)

என்பதால் பதிக மாண்பும் பயனும் நன்கு அறியப்படும். இக் கோவையின் முதற் பாடலிலும் இக்கருத்துண்டு.

பதிகத்தால் விளைத்த அதிசய மாட்சிகளைத் தொகுத்து நம்பியாண்டார் திருவுலாமாலையில் (கண்ணி 75-85) தந்திருப்பவை நாத்தழும் பேறப்பாடிப் போற்றத்தக்கவை.

திருஞான சம்பந்தர்க்கு நம்பியாண்டார் நம்பி தந்த அடைமொழிகள் :

திருஞானசம்பந்தர்க்கு நம்பியாண்டார் தரும் அடைமொழி கள் பல்வகைச் சிறப்பின. அவை நான்கு வகையாக அமையும்.

1. வரலாறுணர்த்துவன. 2. தமிழ் அல்லது பதிகத்தோடு தொடர்புடையன. 3 சமணரை வென்றமையைச் சுட்டுவன. 4. சம்பந்தரின் இயல்புகளைக் காட்டுவன.

(1) அ கவுணியர் தீபன் – ஆ. பி. திரு. அ. 3.
ஆ. மலைமகள் புதல்வன் ஆ. பி. மு. கோவை–1
இ. சைவசிகாமணி - கலம்பகம் 37; ஆ. பி. திரு. ச. வி 9., ஆ. பி கோவை–3 இவை முதல்வகையின.

(2) அ. தண்டமிழ்க்குண்டாசனி – கலம்பகம் 37; ஆ. பி. திரு. ச வி, 7;
ஆ. தண்டமிழ்விரகன் - ஆ. பி. திரு. மு. கோவை-1.
இ. வண்டமிழ் விரகன் - மும்மணிக் கோவை-25.
ஈ. குழலியல் இன்கவி ஞானசம்பந்தன்- ஆ. பி. திரு. அ. 38
உ செஞ்சொற் பொருள் பயத்த சிங்கம் – திரு. உ. மாலை; 66 இவை இரண்டாம் வகையின.

(3) அ. அமணர்க்குக்காலன் - மும்மணிக்கோவை–6
ஆ. அருகாசனி - ஆ. பி. திரு. அ. 65
இ. பரசமயகோளரி - ஷி - 54

(4) அ. பந்தவினை அறுக்கும்கண் – ஆ. பி. திரு. அ. 98.
ஆ. சம்பந்தமாமுனி - கலம்பகம்-26.
இ. பண்டிதர் இன்பம் - கலம்பகம்–37.
ஈ. குலதீப சுபசரிதன்–ஆ. பி. கலம்பகம்-34.

சம்பந்தர் மாட்டு, நம்பியாண்டார் நம்பி காட்டும் குன்றா அன்பையும் குறையாப் பத்தியையும் இவ் அடைமொழிகள் காட்டும்.

ஆ) திருநாவுக்கரசர் :

நம்பியாண்டார் நம்பியின் 'திருநாவுக்கரசு தேவர் திருவேகா தசமாலை' என்ற நூலின் 11 பாடல்களில் கண்ட செய்தி வருமாறு:

1 தமக்கையாரின் கூட்டுறவால் புறச் சமயத்திலிருந்து சைவம் புகுந்தவர். 2 சூலைநோயால் பிணிப்புண்டு வெண்ணீறு இட்டு, நோய்மாறி அமண் சமயம் விடுத்தவர்.

செய்தவம் மிக்கவர் (பா: 1 : 3) உழவாரப்படை கையில் உடையவர் (பா 2) சிவனைக் குருவாகக் கொண்டவர் (பா 2) ஊர்வசி முதலிய அரம்பையர் மயக்கிய போதும் அவர்களின் வாசியை நீக்கிய தூசில் மனத்தர் (பா : 2) ஆகவே, பொறி செய் காமத் துரிசடக்கிய புனிதர். கடலில் எட்டுணையும் துயர்ப் படாமல் கல்துணையால் மிதந்த சீலர் (பா : 6) 700 பதிகங்கள் பாடியவர்; பதிகமே எழு நூறு பகருமா கவியோகி (பா 7) இவ்வாறு நற்பதிக நிதியாக விளங்கியவர். "அமணர் செய் வாதைகள் பரமகாரணவீசன் அருளினால் வென்றவர்" 'திருநாவி னெங்கள் அரசு'- என்று நம்பியாண்டார் புகழ்கிறார். "வழிமுழு தாள் அரசுதன் அடியிணை மலர்கள், தாயினும் நல் கருணையை உடையன" என்பது நம்பியாண்டார் நம்பியின் வாக்கு. திருநாவுக் கரசர் அமிர்தச் சிவயோகியாகவும், நற்பதிகக் கவியோகியாகவும் விளங்கியதைச் சுட்டுகிறார்.

இ) சுந்தரமூர்த்தி நாயனார் :

இவர்க்குத் தனியாக நம்பியாண்டார் நம்பி நூலெதுவும் செய்யவில்லை. ஆயினும் முக்கிய வரலாற்றுச் செய்திகள் யாவும் அடங்குமாறு திருத்தொண்டர் திருவந்தாதியில் 11 பாடல்களில் பாடுகிறார். சுந்தரர் பாடிய திருத்தொண்டர் திருத்தொகை ஒவ் வொரு பாடலிலும் வரும் அடியார்களை, நம்பியாண்டார் நம்பி பாடி முடித்ததும் அடுத்த பாடலில் கண்ட அடியாரைப் பற்றிப் பாடுமுன் சுந்தரரைப்பற்றி மீண்டும் பாடும் நெறியை நம்பி யாண்டார் நம்பி கடைப்பிடிக்கிறார். இவ்வாறு 11 பாடல்களில் சுந்தரர் வரலாறு கூறப்படுகிறது. அவற்றில் கண்ட செய்திகள் வருமாறு:

1) இறைவன் பழ ஆவணங் காட்டிச் சுந்தரரை (திருவெண் ணெய் நல்லூரில்) அடிமை கொண்டார். (திரு. திரு. அ. 8)

2) 'அருட்டுறை (திருவெண்ணெய் நல்லூர்க் கோயில்) ஆட்பட் டேன். இனிப் பிறபொருட்டுறை ஆளாகேன்." என்ற நாவலூராரின் அடிமைத் திறத்தை, இறைவனும் ஏற்றார். (ஷி பா : 16)

3) உடற்புகரால் (மேகநோய்) வாடி வருந்திய சுந்தரர், திருத் துருத்தி நாயகரை வணங்கி உடல் நலம் பெற்ற அருட்டிறம் உடையவர். (ஷி 23)

4) படர்புனலில் சிந்திப்பரியன சேவடி பெற்றவர்' வன் தொண்டன் என்ற பெயரினர் (ஷி 32).

5) இறைவன் அருளே துணையாகச் சங்கிலியை மணந்தவர், திருவாரூரன் என்ற பெயரார் (ஷி 40).

6) சேரமான் பெருமாள் நாயனார் கயிலாயம் போக-பந்தி இவுளி முந்தித் தர அது போது தென்நாவலர் பெருமான் (சுந்தரர்) வீரக்கடகரியில் சென்றார். (ஷி 45)

7) திருவாரூரான் திருமுடியில் ஏற்றும் தன்மையன நம்பி யாரூரரின் திருப்பாடல்கள் (ஷி 48).

8) தென்புகலூர் அரன்பால் செம்பொன் கொள்ள வல்லவர். நாட்டியத்தான்குடி மாணிக்க வண்ணனுக்குப் பேரன்பர்; (ஷி 57) (நாட்டியத்தான் குடியில் செங்கல்லைப் பொன் னாக்கிய நிகழ்ச்சியைக் குறிப்பது).

9) அ. மதுர கவியால், ''அவிநாசியைப்'' பாடி, முதலை உண்ட பாலனை மீட்டவர்:

ஆ. வேடர் சுற்றும் படுத்தார்.

இ. திருமுருகன் பூண்டி இறைவனைப் போற்றியவர் வன் தொண்டனாகிய மாதவர் (ஷி 63).

10) ஒற்றியூர் உறைப் புண்ணியனின் பாதமலர் நோகச் சங்கிலி பால் தூதாக்கிக் காதலியாகக் கொண்டு, இவ்வியனுலகம் நகு வழக்கைக் கண்ட நாவலூர் அரசன் (ஷி பா 69)

11) திருமுதுகுன்றில் செந்தமிழ்பாடி இறைவன் அருளிய (பன்னீராயிரம்) பொன்னை அங்குக் கொள்ளாது, திருவாரூர்க் குளத்தில் மாற்றுமாறாமல் பெற்ற புகழ்த் திருவாரூரன் (ஷி பா: 70-77)

12) வடகயிலையை, ஞான ஆரூரரும் சேரர் பெருமானும் உடம் பொடும் புக்கார். இவர்களைத் தவிரப் பெருந்தவ அடியார் கூட்டத்து இப்பேறு பெற்றார் யாவர்? (ஷி பா: 86). இதிற் கண்ட செய்தியை மூன்று இடங்களில் குறிக்கிறார். (திரு.திரு. அ. பா: 45; 86; கோயில். திரு ப வி 31).

இவை திருத்தொண்டர் திருவந்தாதியிற் கண்ட செய்திகள்.

ஆரூரரும், சேரமான் பெருமாள் நாயனாரும் கரியிலும் பரியிலும் கயிலை சென்ற கதையைக் கோயில் பண்ணியர் விருத்தத்திலும் (பா: 31) செப்புவர்.

மற்றும் நம்பியாண்டார் நம்பி கீழ்க்கண்ட சுந்தரர் வரலாறுகளைக் குறிக்கவில்லை-குறிப்பும் இல்லை.

1) குண்டையூர்க் கிழார் கொடுத்த நெல்லைச் சுந்தரர் இறைவனைப் பாடிப் பரவையார் இல்லத்தில் சேர்ப்பித்தது.

2) கோட்புலி நாயனார், தம் பெண்மக்கள் இருவரையும் சுந்தரர்க்கு அடிப்படுத்தியபோது சுந்தரர் அவர்களைத் தம் மக்களாக ஏற்றருளியது.

3) சுந்தரர் இரு கண்பார்வையும் இழந்து வருந்தி இறைவனைப் பாடி ஊன்றுகோல் பெற்றுப் பின் முழுப் பார்வையும் வரப் பெற்றது.

4) இறைவனிடம் குருகாவூரில் பொதி சோறு பெற்றமை.

5) இறைவன் திருவதிகையில் திருவடி சூட்டியமை - ஆகிய வரலாறுகள் காணப்பட வில்லை. நம்பியாண்டார் நம்பி தாம் பாடிய 11 பாடல்களில் இவற்றைக்கூற வாய்ப்பில்லை என்று கருதலாம்.

(ஈ) மற்றைய அடியவர்கள் :

திருத்தொண்டர் திருவந்தாதியில் நம்பியாண்டார் நம்பி பெரிதும் மதித்துப் புகழும் அடியார்கள் சிலர் உளர்.

1) "குலத்திற் கிராதன் நம் கண்ணப்பனாம்"-திரு. திரு. அ. 11

2) ஆயவன் ஆனாயன் என்னை உவந்தாண் டருளினனே." 15

3) "எங்கள் பிரான் .... திங்கள் ஊரினில் வேதியின் அப்பூதியே ஷை பா. 29

4) என் உச்சி அடி மன்ன வைத்த பிரான்மூல னாகின்ற அங்கணனே. ஷை பா. 36

5) சிவன்நிய மம்தலை நின்றதொல் சீர்நம் சிறப்புலியே. ஷை பா. 42.

6) "பக்திக்கடல்ஐ யடிகளா கின்றநம் பல்லவனே." ஷி பா. 56 புகழ்ச்சோழர் வரலாறும் (திரு. திரு. அ. 50) கோச்செங்கட் சோழர் வரலாறும் (திரு. திரு. அ. 81; 82) ஈண்டுக் கூறியுள்ளமை நோக்கற்பாலன.

இவ்வடியார்களைத் தம்மோடு உளப்படுத்தி உயர்த்திப் பேசும் பத்திமையின் முற்றிய நிலையை இங்குக் காணலாம். இவ்விடங்களில் பக்திக்குமுன் சாதிகட்கு இடனில்லை என்பதும் நீள நினையத்தகும்.

அ) இத்திருவந்தாதியில் கூற இடனில்லா உயர்பத்தர்களைக் கோயில் பண்ணியர் விருத்தத்தில் கூறியிருக்கிறார்.

1. சேந்தனார் பா: 26
2. வீரணக்குடிப் பெண் பா: 29
3. திருவாரூர் சிவபாத்தியன் (மாணிக்கவாசகர்) பா: 58
4. வரகுணன் பா 62

ஆ) திருத்தொண்டர் திருவந்தாதியில் கூறிய அடியார்களில் சிலரைக் கோயில் பண்ணியர் விருத்தத்திலும், பிற இடத்தும், மீண்டும் கூறித் தம் பத்தியையும் அவ்வடியார்களின் உயர் வையும் காட்டியிருக்கிறார்.

1. கண்ணப்பர்-கோ. திரு. ப. வி. 20; 40; 68-திரு. திரு. அ. 11
2. சுந்தரரும் கழறிற்றறிவாரும் கயிலாயம் போனமை-31; திரு. திரு. அ. 45; 86
3. சாக்கியநாயனார்-கோயில் ப. திரு. வி. 32; 68; திரு. திரு அ. 41
4. கலயநாயனார்-கோயில் ப. திரு வி. 40; திரு திரு அ. 12
5. அதிபத்தர் - " " 40; திரு. திரு அ. 52
6. கலிக்காமர் - " " 54

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியில் சில அடியார்கள் பற்றிக் குறிக்கிறார்: (1) திருநாளைப் போவார் பா. 37 (2) நீலநக்கர், முருகன்-பா: 71 (3) சிறுத் தொண்டர் பா. 72

இவ்வடியார்களின் பத்தி வாழ்க்கை, நம்பியாண்டார் நம்பியைப் பெரிதும் பிணித்தன. இவர்கள் சுந்தரர் காலத்திற்கு முன்பு இருந்தவர்கள்-திருத்தொண்டர் தொகையில் பாடப் பெற்றமை சான்று. (அ) பிரிவில் உள்ளோர் சுந்தரருக்குப்பின் வாழ்ந்த பத்தர்கள். ஆகவே, நம்பியாண்டார் நம்பி இவர்களைக் கோயில் பண்ணியர் விருத்தத்தில் வைத்துப் பாடினார். நம்பி யாண்டார் நம்பி இங்கு வரலாற்றுணர்ச்சியோடு பாடுதல் காண்க,

பதினொராந்திருமுறையில் அடியார்கள் அடிகுறிப்புக்கள்

1 திருக்களிற்றுப்படியார். பா. 52.

2 திருஞானசம்பந்தர். திருப்பிரம்புரம். 3:2.

3 " 3ஆம் திருமுறை. பா. 4. மடத்துப் பதிப்பு

4 " 3:1

5 " திருமருகல் பதிகம். பா. 2 ஷ 10

6 " திருவீழி மிழலைப் பதிகம்

7 " திருக்கொள்ளம்புத்தூர் பதிகம்

8 " திருத்தருமபுரம் ப. 354. மடத்துப் பதிப்பு

9 " திருக்கோலக்கா பதிகம் 8

10 " திருவாவடுதுறைப் பதிகம் 26. ப. 319 மடத்துப் பதிப்பு

11 " பொது-திருப்பாசுரம் 1. ப. 737 மடத்துப் பதிப்பு

12 " திருச்சாத்தமங்கை பதிகம் பா. 11

13 " திருப்புகலூர் வர்த்தமானீச்சரம் பதிகம் 60 பா. 4

14 " திருநள்ளாற்றுப் பதிகம். கடைக்காப்பு பா. 11

15 " திருவோத்தூர்ப் பதிகம். கடைக்காப்பு பா. 11

16 " திருப்பாச்சிலாச்சிரமப் பதிகம் பா. 1

17 " திருமைலாப்பூர் பதிகம் பக். 692-694 மடத்துப் பதிப்பு

18 " திருஆலவாய் பதிகம் 1. ப. 551 மடத்துப் பதிப்பு.

19 " திருப்பள்ளி பதிகம். 33. 1-10

20 " நல்லூர்ப்பெருமணம்-கடைக்காப்புச் செய்யுள்-பதிகம் 5. 3ஆம் திருமுறை

III பதினொராந்திருமுறையில் தத்துவம்

முன்னுரை :

இந்தியத்தத்துவங்கட்கு மூலம், வேதமும் உபநிடதமுமாகும். சமயாச்சாரியார்கள் நால்வரும் சைவசமயத் தத்துவங்கள் பலவற்றைத் தம் நூல்களில் விளம்பியுள்ளனர். இவர்கட்கு முன்வாழ்ந்த நக்கீர தேவநாயனார், மற்றும் பதினொராந் திருமுறைக் கவிஞர்கள், தம் நூல்களில் பற்பல தத்துவங்களைச் சுட்டியுள்ளனர். நிரம்பிய அளவில் இக்கருத்துக்களை வழங்கிய வர்கள் - நக்கீரதேவநாயனார், காரைக்கால் அம்மையார், சேரமான் பெருமாள், பட்டினத்தார், நம்பியாண்டார் நம்பி, ஆகிய ஐவருமாவர். சைவசித்தாந்தக் கோட்பாடுகளைப் பெருமளவு பேசியவர்கள் - நக்கீரதேவநாயனார், காரைக்காலம் மையார், பட்டினத்தார் ஆகிய மூவருமாவர்.

சங்க நக்கீரர், திருமுருகாற்றுப்படையில், பின்வருவோர் விரித்துக் கொள்ளும் வகையில், சிற்சில சைவசமயதத்துவங் களைப் பொறித்துள்ளார். அடுத்து இவற்றையெல்லாம் விரிவாகவும் விளக்கமாகவும் சான்றுகளோடு காணலாம்.

சங்க நக்கீரர் கூறும் தத்துவங்கள் :

சங்க நக்கீரர், பல தத்துவங்களைக் கூறுகிறார்.

சைவ சித்தாந்தத்தில் இறைவன் ஒருவனே, மாயை கலவாத மயங்காத அறிவினன். அஃதாவது இறைவன் தூய அறிவினன் என்பர். நக்கீரர் இதனை 'மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப் பல்கதிர் விரிந்தன்று ஒரு முகம்' என்றார் (அடி 91-92)

இறைவன் திருவடிப்பேறும், முத்தியடைதலும் வேறன்று என்பது சைவ சித்தாந்தம். திருவடியடைதல் என்பது வீடுபேறு அடைதல் என்பதாம். இதனை "சேவடி படரும் செம்மல் உள்ளம்"-(62) என முருகாற்றுப்படை மொழியும். "நின்னடி உள்ளி வந்தனென்" (27) என்பதும் அது.

மயக்க அறிவினரான மக்கள், மயங்கா அறிவினனான இறைவனை, அவன் அருளினாலன்றி அறிய முடியாது என்பது

தத்துவம். இது, 'நின்னளந்து அறிதல் மன்னுயிர்க் கருமையின்' (279) என்று இங்குக் கூறப்பட்டது.

இறைவழிபாட்டால் பயன் உண்டு. இது, 'வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட' (248-49) என்ற அடியால் அறியவரும். அடியாரை இறைவன் தாங்குவான் என்பதை 'அலந்தோர்க்கு அளிக்கும் பொன்பூண் சேஎய்' (271). 'நசை நர்க்கார்த்தும் இசை பேராள' (271) என்ற அடிகளால் அறியலாம்.

முருகனின் பேருருவையும் (விசுவரூபம்) அவன் அடியார் பொருட்டு, எளியனாய் முன்வரும் இயல்புகளையும் 'மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி (292) என்பதால் தெரியலாம். முருகனின் தலைமையையும் (பரம்பொருள்) (173-174) எங்கும் கரந்துறைவதையும் 'உலகத்து ஒரு நீ ஆகித்தோன்ற' என்ற அடி பேசுகிறது. (294) காமம் வெகுளி, மயக்கம் விட்டவரே, இறைகாட்சிக்குரியவர் என்ற செய்தியும் குறிக்கப்படுகிறது. (131-34).

தத்துவப் பொருள்களை இங்ஙனம் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே, சங்க நக்கீரர் தம் திருமுருகாற்றுப்படையில் கூறியுள்ளார்.

நக்கீர தேவநாயனார் கூறும் தத்துவங்கள் :

முன்னுரை :

சங்க காலத்தில் பிறப்பு, இறப்பு, நல்வினை, தீவினை, மேலுலகம் கூற்றுவனால் வரும் வேதனை, இவை பற்றிய எண்ணங்கள் இருந்தன. பிறப்பு, இறப்பு, நல்லூழ், தீயூழ் இவற்றை, இறையருளால் மாற்றிக் கொள்ளலாம் என்ற நிலை சங்க காலத்தில் மிகுதியாகக் காணப்படவில்லை. பரிபாடலில் வேண்டுதல்கள் உண்டு. திருக்குறளில் இடையறா முயற்சியால் ஊழை வெல்லலாம் என்றும் கேட்கிறோம். கி.பி. 5-14 ஆம் நூற்றுண்டு வரையில் உள்ள சமயகாலத்தில் இறையருளைப் பெறுதலால் இவற்றை மாற்றலாம் என்ற கொள்கை உருவானது. வள்ளுவரை அடுத்து வந்த நூலாசிரியர்கள் இக்கோட்பாடுகளை விரித்தும் விளக்கியும் வைத்தனர். அவையே தத்துவமாக (மெய்ப்பொருளாக) ஆயின.

(அ) அடியார் மாண்பு :

அடியார் பற்றிய தத்துவங்களைக் 'கீரர்' பேசுகிறார்.

அடியாரும் மதிப்பிற்குரியவர் என்பர் திருமூலர்.[1] அடியாரும் சிவனும் ஒன்றே என்பது சிவஞான போதம்.[2] "காளத்தி ஆள்வாரின அடியாரைப் பேணாதவர் எச்சிறப்புடையர் ஆயினும் 'சீசீ' என இகழத்தக்கவர்" (கயிலை. பா. 10) என்பா 'கீரர்'. ஆகவே இவர் காலத்தில் அடியார் பெருமை பேணிய சீரிய நிலை வந்து விட்டது. நக்கீர தேவநாயனார் இறை அடியாரையும் இறைவன் போல கொண்டு, கண்ணப்பர்க்குத் திருமறம் என்ற நூலும் செய்தார். இவரைப் பின்பற்றிக் கல்லாட தேவநாய னாரும் கண்ணப்பருக்கு நூல் செய்தார். நம்பியாண்டார் நம்பி யும் அடியார் வழிபாட்டை வற்புறுத்தினர். சேக்கிழார் காலத்தில் இவ்வழிபாடு போற்றப்பட்டது. ஆகவே பினவந்த மெய்கண்ட தேவநாயனாரும், உயயவந்த தேவரும் விதியாகப் பாடினர்.

தலைசிறந்த சிவனடியார்கள் பாசத்தைவிட்டு இறைவன் பாதத்தில் நேசம் வைப்பார் (கயிலை. 17) சிவனது சீலங்களை ஏத்தி நிற்பர் (கயிலை. 20) சிவநாமங்களைத் தொழுதேத்துவர் (கயிலை 11) 'வென்றைந்துங் காமாதி வேரறுத்து மெல்லவே ஒனற' நினைவர் (கயிலை. 87) 'யாம்'-என்ற ஆணவ மூலமல நீக்கமே இறைவனைச் சேரும் அறிவு என அறிவர் (கயிலை. 73)

ஆ) இறைத்தத்துவம்:

இறைவன் பலவாகவும் ஒன்றாகவும் உணர்தற்கு அரிதாகவும் இருக்கிறான். (கயிலை. 7) இறைவன் படைப்பும் மறைப்புமாகிய இருதொழில்களைச் செய்கிறான். (கயிலை. 46). இறைவன் எல்லாப் பொருளிலும் உடனாயும் வேறாயும் இருக்குமியல்பு பேசப்படுகிறது (கயிலை. 47) யானென்று தானென்றிரண்டில்லை எனபதனை, "யானென்றுங் கொண்டிருப்பன்" (கயிலை 55) என்ற பாடல் அகப்பொருளாய் இருப்பினும் சுத்தாத்வைதக் கொள்கையைக் காட்டுவதாயும் கருதலாம்,

இறைவன் ஆறு அங்கம், நான்மறையாக விளங்குகிறான் (திரு. வா. மு கோவை 9) அறுவகைச் சமய நெறியையும் இவனே வகுத்தான் (திரு. வெ. கூ. பா. 61) விண்முதற்பூதம் ஐந்தாயும் (ஷி) புத்தியும் முத்தியாயும் (ஷி) விளங்குகிறான்.

இறைவன், "ஓங்காரப் பொருளாய்" விளங்குவதைத் திருமந்திரம் பேசும்- (செ. 951) நக்கீரதேவநாயனார் "ஓங்காரம் அன்னதென நின்றான் மலை" என்று கூறுவர். (திருஈங்கோய். 1) "ஓங்காரமாய் நின்ற மெய்யா" என்பர் மணிவாசகர். ஓங்காரம் என்ற சொல்லை இத்தொகைநூலில் வேறு ஆசிரியர் எவரும் குறிக்கவில்லை.

ஐந்தெழுத்தே சிவன் என்பார் திருமூலர்[4] உய்யவந்த தேவநாயனாரும், மெய்கண்ட தேவரும் இங்ஙனம் பேசிவர்.

ஐந்தெழுத்துப் பெருமையை,

"அஞ்செழுத்தும் அருமறைகள்- அஞ்செழுத்தும் கற்க இறை அணித்தாகும்." எனவும் மொழிவர் (கயிலை. 40) கீரர். ஐந்தெழுத்துண்மையைத் தேவார ஆசிரியர் மூவரும் பாடினர். பஞ்சாக்கரத் திருப்பதிகம், நமச்சிவாயத் திருப்பதிகம் இவற்றில் திருஞானசம்பந்தரும், நமச்சிவாயத் திருப்பதிகத்தில் திருநாவுக்கரசரும், சுந்தரமூர்த்தியாரும் பாடியருளினர்.

இறைவனே இரக்கங்காரணமாய் மக்கட்கு அருளக் குருவடிவு தாங்கி வருவதாய்த்திருமூலர் கூறுவர்.[5] திருக்களிற்றுப்படியாராலும் இவ்வுண்மை விளங்கும்[6] திருவுந்தியாரும், "நாதனு மானானென் றுந்தீபற" என்று கூறும்.[7] சிவஞானபோதத்திலும், "தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு' என்று நவிலப்படும்.[8] இச்செய்தியை இவ்வாசிரியரும் "வானோர் குருவருட்குன் றாய்நின்றான்" (திருஈங்கோய். 57) என்ற பகுதியில் அழுத்தமாய்க் கூறுவர்.

மணிவாசகரும், 'குருமணி தன் தாள் வாழ்க' என்றும் (சிவபுரா. 3) "நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி என்றும்" (சிவபுரா. 51) கூறுவர்.

இறைவன் உலகிற்கு அம்மையப்பராய் விளங்கி உயிர்கட்கு அருள்வதாய்ப் பகர்வது சைவ சித்தாந்தம். இதனையும் திருமூலர் திருவாய் மலர்ந்தருளினர்.[9] அம்மையே அப்பா ஒப்பிலாமணியே (திருவாச. 536) என்று மணிவாசகரும் மொழிகுவர். "அம்மை யப்பரே உலகுக் கம்மையப்பர்' என்பது திருக்களிற்றுப் படியார்.[10] இதனை நக்கீர தேவநாயனார், "மாதைப் புரிந்திடத்துக் கொண்டான் (திருஈங்கோய். 62) என்றார்.

எல்லாக் கடவுளுமாக மும்மூர்த்தியாக இறைவன் விளங்கு கிறான். இக்கருத்தை, ''அலரோன் நெடுமால் அமரர்கோன் மற்றும் பலராய்ப் படைத்துக்காத் தாண்டு,'' (கயிலை. 67) என்பர் கீரர்.

தீர்த்தச் சிறப்பைச் சைவ சித்தாந்தம் பேசும். இதனை, நக்கீர தேவநாயனார் ''செறிகின்ற தீவினைகள் எல்லாம் பொன் முகலி ஆடுதலும் போம்'' (கயிலை. 74) என்று கூறுவர். இதே கருத்தை, இறைவனை உயர்த்திப் பேசும் போது, ''தீர்த்தமும் நீயே'' (பெருந்தேவபாணி 56) என்று கூறுவர். தீர்த்தச் சிறப்பை திருமூலர் கூறுவர்.[11]

இறையருள் ஒருவர்பால் பழுத்துப் பதிவதைச் சத்திநி பாதம் என்பர். இக்கருத்தையும் நக்கீர தேவநாயனார் ''ஈங்கேவா என்றருளி என்மனத்தில் எப்போதும் நீங்கமால் நீவந்து நின்றாலும்" (கயிலை. 96) என்பதாக உணர்த்தினார்.

இ) வாழ்வியல் தத்துவங்கள்:

துயரங்களுள் பொறுக்கொண்ணுத் துயரம், உயிர் பிரியும் போது எழும் வாதனை. இதனை 'கூற்றம் குடைந்துநும் கண்ணுள்ளே யார்க்கும்' (கயிலை, 3) என்று நக்கீரதேவநாயனார் மொழிகுவர். இளமையும் யாக்கையும் நிலையாமை உடையன. காயங்கொண் டாடல் கணக்கன்று; 'காயமே நிற்பதன் றாதலால்' கயிலை 56) என்பர், அறிவைச் சென்ற இடத்தால் செலவிட்டு ஐம்பொறிவழிச் செலுத்தல் இறையுணர்விற்குத்தடை (கயிலை. 19) என்பார், 'ஐம்புல வேடரில்' அயர்ந்தனை என்பது சிவஞான போதம் (சூ8) இறைவன் பல பிறவியை பக்குவப் படுத்தத்தருகிறான், அது பாசத்தின் விளைவு என்று கூறப்படும். கயிலை 16; திருஈங்கோய். 6, 9, 13-பிற) போந்தேறக் கைதாராய் இப்பாசத்தைவிட்டு (கயிலை. 16) என்பார். 'பாசம் ஒருவத தண்ணிழலாம் பதி' என்பது சிவஞான போதம் (சூ. 9) இப்பாசம் மாற்றிப் பிறவி எடுத்து இறைவன் கருணையைப் பெறுதல் வேண்டும்.

ஐம்பொறி ஆற்றலை அவிப்பது எப்படி? 'ஓரைந்தெழுத்தும் ஓதல் வேண்டும். ''தீய பிறவிநோய் தீர்க்கும் தூய மாமருந்து ஐந்தெழுத்தேயாம்" (கயிலை. 39) என்பர்.

திருமூலர், நக்கீரதேவநாயனாருக்கு முந்தியவர். இவரை யொட்டி கி. பி. 6 ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவர் நக்கீர தேவநாயனார். ஆகவே, இங்குக் கூறிய சித்தாந்தக் கருத்துக்களைப் பின்வந்த தேவார ஆசிரியர், மணிவாசகர், திருவுந்தியார்-ஆசிரியர், திருக்களிற்றுப் படியார் ஆசிரியர், சிவஞானபோத ஆசிரியர், ஆகியோர்கள் வாங்கி மேலும் செம்மை செய்து விரித்துரைத்தனர் என்பதாம்

காரைக்காலம்மையார் கூறும் தத்துவங்கள்:

காரைக்காலம்மையார் பெண்பாலராய் இருந்தும் சைவ சித்தாந்த தத்துவங்களை நன்னர் மொழிந்தவர். சமணர், பெண்டிருக்கு முத்தி இல்லை என்றனர். சைவத்தில் இவர், இறைவனை மூன்று நூல்களால் வழிபட்டு இறைவனின் திருவடி நீழலில் என்றும் இருந்து பதமுத்தி பெற்ற பேற்றினர் இச்செய்திகளை திரு. வி. க. சிறப்பாக விளக்கியிருத்தல் அறியத்தகும்.[1] அத்தகு ஞானப்பெண்டிர் செப்பிய சீரிய தத்துவங்களை இருவகையிற் காணலாம்.

அ) இறைத்தத்துவம்:

ஈசன் இல்லாத பொருள் எதுவும் இல்லை, (திரு. விர. 7, 16). இறைவன். பிறவாமல் காக்கும் பிரான் (திரு. விர.2). அவன் வேதத்திற்கு ஆதியான் (திரு. விர. 8). உலகை ஆட்டுவிப்பது, இறை அருளே. (அற்பு 9) இறைவன் அருள் வாய்த்தால் வினை உண்டாக்கும் பிறவிக்கடலை நீந்தலாம். (அற்பு. 16) அவனே கால தத்துவமாய் உள்ளான் (அற்பு 65). அவனே வேறாகவும் ஏகமாகவும் நிற்பவன் (அற்பு. 92).

இறைவன் அயனாகவும் அரியாகவும் அரனாகவும் இருந்து, படைத்தல், காத்தல், அழித்தல், ஆகிய முத்தொழில்களை இயற்றுகிறான். இம்மூவரும் ஒருவரே. செயற்பாட்டால் வேறு படுவர் என மொழிந்து சமய சமரசம் காண முற்படுகிறார், அம்மையார். இஃது அரிய கருத்தாம். "ஈருரிவை மூவுருவம் போர்த்துகந்த அம்மான் என்றது சிறந்த கருத்து.[2] இதனையே, சித்தியார், "தேவர் மூவராய் நின்றது ஓரார்." என்றார்.[3]

அம்மையார் இறைவனுக்கு ஓதிய தத்துவங்களைப் பின்னர் வந்த பெரியவர்கள் எடுத்துப் பாராட்டிப் பாடினர்.

அ) "இறைவனே எவ்வுயிரும் தோற்றுவிப்பான்தோற்றி
இறைவனே ஈண்டிரக்கம் செய்வான்-இறைவனே
எந்தாய் எனவிரங்கும் எங்கள்மேல் வெந்துயரம்
வந்தால் அதுமாற்று வான்." (அற்பு. 5)

என்பார் அம்மையார். இப்பாடற் கருத்தையே சித்தியாரில் காணலாம்.[4]

ஆ) "அருளே உலகெலாம் ஆள்விப்பது ஈசன்" (அற்பு. 9) என்பது அம்மையார் வாக்கு. இதனையே சித்தியார்,

"பழிப்புஒழி பந்தம் வீடு; பார்த்திடில் அருளே எல்லாம்" என்றது.[5]

இ) "அறிவானும் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே........அறிகின்ற
மெய்ப்பொருளும் தானே விரிசுடர்பார் ஆகாயம்
அப்பொருளும் தானே அவன்." (அற்பு. 20)

என்பார் அம்மையார். ஒன்றாய் வேறாய் உடனாய் இறைவன் இருப்பதை இது காட்டும். இதனையே சிவஞான சித்தியார்,

"உலகுஎலாம் ஆகி வேறு ஆய் உடனும்ஆய் ஒளியாய் ஓங்கி" என்று தொடங்கும் பாட்டில் கூறுவதாயிற்று.[6]

இறைவன் அட்ட மூர்த்தியாய் விளங்குவதை அம்மையார் அற்புதத்திருவந்தாதியில் (21) சுட்டுகிறார். இதனைத் தேவார ஆசிரியர்கள் அனைவரும் கூறுவர். இதனைச் சேரமான் பெருமாளும் தம் பாடலில் குறிக்கிறார்.[7] பட்டினத்தார் அட்டமூர்த்தம் பற்றி அறைகுவர்.[8]

இறைவன் திருப்பெயர்களைச் சொல்லாதார் கூட்டத்தை விட்டொழிக்க வேண்டும் என்பது அம்மையார் திருமொழி. (அற்பு. 40) இதனையே, பின்வந்த சிவஞான சித்தியார் உடன் பாட்டு வகையில் விரித்துரைக்கும்,

"திரிமலங்கள் அறுத்து ஈசன் நேசரொடும் செறிந்திட்டு
அங்கு அவர்தம் திருவேடம் ஆலயங்கள் எல்லாம்
அரனெனவே தொழுது இறைஞ்சி ஆடிப்பாடி."[9]

— என்பது சித்தியார்

எவர் எச்சீலத்தாராய்—எவ்வித வழிபாடுகள் இயற்றினாலும் அவர்கள் விரும்பும் தேவாக இருந்து, அருள் சுரப்பவர் "நீலமணி மிடற்றன்" என்பார் அம்மையார். உலகின் எத்தெய்வமும் சிவனே என்பது அவரது அதிராக்கொள்கை.

"எக்கோலத் தெவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத் தவ்வுருவே ஆம்" (அற்பு. 33) என்றார்.

இவ்வினிய கருத்து, திருநாவுக்கரசரைக் கவர்ந்தது. அவர்,

"ஆரொருவர் உள்குவார் உள்ளத் துள்ளே அவ்வுருவாய்
நிற்கின்ற அருளுந் தோன்றும்" என்றார்.[10]

இவர்கட்குப் பின்வந்த சேரமான் பெருமாள் நாயனார் இதே கருத்தை அப்படியே வாங்கிக்கொண்டு கூறி மகிழ்கிறார்.

"எவ்வுருவில் யாரொருவர் உள்குவார் உள்ளத்துள்
அவ்வுருவாய்த் தோன்றி அருள்கொடுப்பான்"[11]

இவர்கட்கெல்லாம் பின்னர் வந்த அருள்நந்தி சிவாச்சாரியார் இக் கருத்தை சிவஞான சித்தியாரில் இங்ஙனமே ஆள்கிறார்.

"யாதொரு தெய்வம் கண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவார்." [12]

ஆகவே, அம்மையாரின் கருத்து, பின்வந்தவர்கள் வளர்த்துப் பேச இடந்தந்தது.

இறைவனின் பேருருவை அம்மையார் மிகச் சுவைத்து,

"அடிபேரிற் பாதாளம் பேரும்" என்று தொடங்கும் பாடலில் பாடுவர்.[13] இதே கருத்தை உருவகப்படுத்திச் சேரமான் பெருமாள் கூறுவதும் நயமானது. பட்டினத்தார், அம்மையாரின் கற்பனையை ஒட்டி இறைவன் பேருருவைப் பாடுகிறார்.[14]

இறைவன் காட்ட நாம் காண்கிறோம். அவன் அருளால் நாம் அவற்றை உணர்கிறோம். இதனை அம்மையார்,

"பண்புணர மாட்டேன்நான் நீயே பணித்துக்காண்"
(அற்பு. 59) என்றார். இதனையே, சிவஞானபோதம்,

"காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரண் கழல் செலும்,"[15]

— என்று பகரும்

இச்செய்தியைப் பின்னர் வந்த சுப்பிரமணிய பாரதியார் எழில்பட விரித்துரைக்கிறார்.

''நின்கண்ணுற் புவியெல்லாம் நீயெனவே
நான்கண்டு நிறைவு கொண்டு.''

என்று மொழிவது காண்க.[16]

அடியார் தத்துவம்:

அடியார் பற்றிய தத்துவங்களை அம்மையார் இயம்புகிறார். ஐந்தெழுத்தைக் கூறும் அடியார், இறைவன் கழல் காண்பார். (திரு. இரட்டை, 10)

''ஐந்தெழுத்து மந்திரத்தைப் பற்றி முதன் முதலில் குறிப்பிடும் தமிழ்நூல், சிலப்பதிகாரமாகும்,'' என்பார் டாக்டர் சித்தலிங்கம்.[17] இது குறித்து அடுத்துவந்த அம்மையார் சுட்டுவது அருமை தொல்வினைகள் உண்டு (சஞ்சிதம்); இறைவனிடம் பத்தி செய்து... அதாவது பூவால் பூசை செய்வது தொல்வினையை நீக்கிக் கொள்ளலாம்.

''ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றேயென் உள்ளத்தின் உள்ளடைந்தேன்-ஒன்றேகாண்.''
(அற்பு. 11)

என்ற பகுதியால், அடியார் இறைவனை நினைதல், சித்தத்தில் ஒருக்கம் அடைதல் என்ற நிலைகளை எய்தலாம் என்பார். இப் பகுதி ஞானயோகங்களைக் குறிக்கும்.

வினையை நற்செயல்களால் அடலாம். (அற்பு 7) இறைவனை உள்நினைந்து ஒழுகும் திறம் எளிய வழி (அற்பு 88) என்ற தத்துவங்களை அம்மையார் திருப்பாடல்களில் காணலாம்.

சேரமான் பெருமான் நாயனார் கூறும் தத்துவங்கள் :-

அ) இறைத்தத்துவம் :

கன்மத் தொடர்பில்லாமல் பிறப்பவன் இறைவன்; தன்னைத் தானே தோற்றுவித்துக் கொள்வான். ஆகவே, அவன் 'சுயம்பு, என்பர். இதனைச் சேரர், ''பிறவாதே தோன்றினான்.'' (திரு ஞானவுலா-கண்ணி. 2) என்பர். அவன், ஞானக்கடல்; ஓதாமல்

உணர்ந்தவன். ஆகவே, காணாதே காண்பவன்' ஷை. 2) துறவாமலே யாக்கையை நீக்கியவன். பரிக்கிரக சத்தியே வடிவமாக வுடையவன். (ஷை உரை பக். 1 கண்ணி-2 சண்முகம் பிள்ளை உரை) என்பார் உரைகாரர். இறைவன் இயற்கை உணர்வினன்; அணுவிற்கணுவாய் இருப்பவன் (ஷை 4)

"அரியாகிக் காப்பான்; அயனாய்ப் படைப்பான்
அரனாய் அழிப்பவனுந் தானே-பரனாய்"

(ஷை 5) விளங்குபவன்

ஆகவே, முத்தொழில் பற்றி மூவராய் விளங்கினும் அவன் ஒருவனே! அவன் ஒருவனே எல்லா வடிவமாயுமிருக்கிறான் (ஷை 7-8) நக்கீர தேவநாயனார், அம்மையார், பட்டினத்தார். ஆகியோரும் இதனைக் கூறினர்.

"ஒன்று முதல் எட்டாவது கண்ணி வரை இறைவனது சொருப தடத்த இலக்கணங்கள் கூறப்பட்டன" என்று கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார் கூறுவதும் அறியத்தகும் [1]

பிற்காலத்தார் 36 சமய தத்துவங்களை விரிப்பதை அறிவோம்.[2] சேரர்-காலத்தத்துவம், ஒலித்தத்துவம் குண தத்துவம் ஆகியவை பற்றிக் கூறுவர். (ஷை 49-50) மெய்கண்டார் முதலியோர் விரித்துப் பேசியவற்றிற்கு மூலப்பொருள்கள் இங்கிருந்தலை நோக்கலாம். இறைவன் அட்ட மூர்த்தியாய் விளக்குபவன். (பொன். 15)

இறைவன் அட்ட மூர்த்தியாய் விளங்குவதைத் திருமூலரும்[3], பட்டினத்தாரும்,[4] பின்வந்த திருவுந்தியார் ஆசிரியரும்[5] பேசுவர்.

(ஆ) பக்தர்கள் பற்றிய செய்திகள் :

பக்தர்கள் இறைவனை எப்படிப் பணிந்தேத்த வேண்டும்?

" பணிபாதம்; பாடிசை-ஆடிசையாகப், பனிமலரால்
அணிபதங் கன்பற் கொளப்பனை அத்தவற் கேஅடிமை
துணிபதங் காமுறுதல்" வேண்டும்.

(பொன் வண்ணம். பா. 10)

கரதலம், கம்ப அட்டாங்கம் அடிபணிதல் பற்றி ஓர் இடத்தில் உரைப்பார் (பொன் வண்ணம். 11) அட்டாங்கம் நிலம் படியத் தொழும் வணக்கத்தை இத்திருமுறையில் பிறர் கூறவில்லை.

அடியார் வானுலகம் பெறுவர் என்றும். அடியாரல்லார் பிச்சை எடுப்பர் என்றும் மொழிவர். (பொன் வண்ணம். 12) உடல் பெற்ற பயன், ''பிரான்கழல் சேர்தல்'' (ஷை. 13) என்பர் இது குறட் கருத்தைக் கொண்டதன்றோ?[6] தீவினை உடையாரும் தீவினை கழியப் பெறலாம். எப்போது? அவர் திருந்திய போது என்பது இவர் உட்கோள் (ஷை 17) அடியார் பொடிபூசி (திருநீறு) நின்றால் இறைவன் அருகொன்றி அருள்வான் (ஷை 21).

அடியார்களை இறைவன் தொட்டு அருள்புரிதல் உண்டு. ''சோதி என் பால் கொள்ள உற்றுநின் றேற்கின்று தொட்டிது தான் நீதி'' என்றான். (பா. 22) என்பார். இது ஸ்பரிச தீட்சையாம்.

சேரர் கீழ்வரும் பாடலில் சரியை கிரியை பற்றிய குறிப்பு வருமாறு பாடுகிறார்.

'' கூறுமின் ஈசனைச் செய்ம்மின்குற் றேவல்; குனிர்மின் கண்கள்;
தேறுமின் சித்தம்; தெளிமின் சிவனைச் செறுமின் செற்றம்;
ஆறுமின் வேட்கை; அறுமின் அவலம்; இவைநெறியா
ஏறுமின் வானத்திருமின் விருந்தாய் இமையவர்க்கே!''

(பொன் வண்ணம். 70

அடியார்கள், ''மனம், சொல், செய்கை பிழையாது இறைவர்க்குக் குற்றேவல் செய்தல் வேண்டும்" (பொன். 88) திரிகரண சுத்தியே, இறைவனிடம் இட்டுச் செல்லும் என்ற இக்குறிப்புச் சிறப்பான தாகும்.

(இ) உலகியல் தத்துவம் :

ஐம்பொறிகள் இராப்பகல் நம் வாழ்க்கையைச் செத்தித் தின்கின்றன என்பதில் புலனடக்கத் தவவாழ்வுக் குறிப்புண்டு. (பொன் வண்ணம் 18) ''பஞ்சேந்திரக் குஞ்சரம் அழிக்கும்'' என்பதும், அதுவே. (பொன் வண்ணம். 23) 'வருகின்ற மூப்பொடு தீப்பிணிக் கூற்றம் வைகலும்'' நம்மை அழிக்கும் (ஷை 21) என்ற இடத்தும் நிலையாமைக் குறிப்புண்டு. இத்தகு தத்துவங்களைச் சேரர் பேசுகிறார். ''இவற்றைப் பாடியவர்கள் அறிவாற்றலில் சிறந்த தத்துவ ஞானிகளேயாயினும் அறிவால்

குறைந்த சாதாரண மக்களை மனத்துட் கொண்டிருந்தமையின் அன்பு நெறியையே பெரிதும் போற்றிக் கூறினர்.'' என்பார் திரு அ. ச. ஞானசம்பந்தன் இதனைச் சேரர் பாடலில் மேலே கண்டோம்.[7]

கபில தேவ நாயனார் கூறும் தத்துவங்கள் :

கணபதியைப் பற்றிப் பாடியவர்களில் கபிலதேவநாயனாரும் ஒருவர். கணபதியை ''அமரர் படைத்தான்'' என்றும் (மூத்த. வி. திரு. இர மாலை. 13), ''கணபதியை வேந்தா உடைத்தமரர் விண்'' (ஷ 18) என்றும், 'விநாயகனே விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம்'' (ஷ 4) என்றும், பேசும்போது விநாயகருக்கு முதன்மை தருவது விளங்குகிறது. ஆயினும், அட்டமூர்த்தமாய் விளங்கிக் கோகர்ணத்தில் எழுந்தருளி யிருப்பவன் சிவபெருமான் எனக் குறித்தலால் (சிவ. அந்தாதி. பா 79). சிவனே, தலைமைக் கடவுள் என்றும் கருதுகிறார். இவர் சிவபெருமானுக்கு இரு நூல்கள் எழுதியதும் அதனாலன்றோ?

விநாயகன் வெவ்வினையை அறுத்து, ஆசையையும் அறுப்பவன் (பா. 4) விநாயகனை வணங்கியோர் திருமகள் அருள் பெற்றுச் செல்வராய்த் திகழ்வர். (பா. 20).

சடையானைச் சாராதார், பிறவிக்கடலைக் கடத்தல் இல்லை. (சிவ. திரு இர. மாலை. 5) சிவன் மும்மூர்த்தியாய் விளங்குபவன் (ஷ. 22)

சிவபிரான் உருத்திராக்கம் அணிபவன் (சிவ. அந்தி. 4) இறைவன் விண்ணாய், நீராய், பகலோனாய், மதியாய், காலங் களாய், ஊழியாய் விளங்குகிறான். (சிவ. அந்தாதி 79). இறை வனுக்கு ''ஆயிரத்தெண் பேருண்டு'' (ஷ 81)

மும்மலங்களைத்தடுத்து ஐம்பொறியடக்குதலை ''உயிராய மூன்றொடுக்கி ஐந்தடக்கி'' எனக்கபிலர் மொழிகுவர். (சிவ அந்தாதி 82)

பரணதேவநாயனார் கூறும் தத்துவம் :

பரணதேவநாயனார் தத்துவங்களைத் தெரிவிக்கிறார். இறைவன் சாவா மூவாப் பெரியன் (பா. 7) பெண், ஆண், அலி

என்ற பேச்சுக்கடந்த பொருள் (9) இறைவன் ஐந்து திருமுகங் களைக்கொண்டவன் (பா. 61) இவர் திரு ஐந்தெழுத்து ஓதுதலை இரு இடத்துப் பேசுவர் (பா. 29, 100) திருநீறு பூசுதலையும் கூறுவர். (பா. 29) 'திருவைந்தெழுத்து ஓதி உற்று உணர்வாருடன் கூடுக' அஃதாவது அடியாருடன் கூடுக என்பதும் அவர் ஆணை மொழி. (100)

பட்டினத்தார் கூறும் தத்துவக் கருத்துக்கள்

(அ) இறைத்தத்துவம் :

"இறைவட்டத்தில் வாழும் கவிஞர்கள், தம் தம் அனுபவம்' என்னும்போது அவர்கள் ஞான அனுபவத்தையே குறிப்பிட வேண்டும். அவர்கள் தனிவாழ்க்கை நிகழ்ச்சிகளல்ல" என்பார், டாக்டர் ப. அருணாசலம். பட்டினத்தார் எதையும் காட்சியாகக் காணுகிறார். இவரது பாடல்களில் சித்தாந்தக் கருத்துக்கள் பொதுளுகின்றன.[1]

சிவபெருமான் மறைதந்த வாயான்; மறைகட்கு அப்பாற் பட்டவன் ("ஆரணம் தொடராப் பூரணி" திருவிடை 4:9) சொற் பொருள் கடந்த சோதி. அப்பாலாய் இருப்பவன். அஃதாவது உருவ இலக்கணத்திற்கு (ஸ்வரூபலட்சணம்) உட்படாதவன்.

திருமூலருக்குப் பின்னும் திருக்கடவூர் உய்யவந்த தேவருக்கு முன்னும் தோன்றிய பட்டினத்தார்,

> "தம்மை மறந்து நின்னை நினைப்பவர்
> செம்மை மனத்தினும் தில்லைமன் றினும் நடம்
> ஆடும் அம்பல வாண!"
>
> (கோயில். நா. மாலை. 4:2-4)

என்பர். ஈண்டுத் 'தம்மை மறந்து நின்னை நினைப்பவர்' என்ற தொடரையும் கருதல் வேண்டும். 'தம்மை மறத்தல்' என்பது 'யான் எனது என்னும் செருக்கறுத்தல்' இறையருட்பார்வை பதியும்போது 'சத்திநி பாதம் வருங்கால் இவையுறும். இந்த ஆன்ம தெரிசனம் கிடைத்தால், பதி தெரிசனம் வாய்க்கும். இவ்வியல்புகளை ஈண்டு விளக்குதல் காண்க.

உலகின் தோற்றமும், விரிவும், நிலைபேறும், அழிவும், பிறவும் இறைவன் ஆணையாம் (சங்கற்பம்) இஃதின்றேல் பிறப்பும் இயக்கமும் பிறவும் இல்லை. இதனை அடிகள்;

"நின்னருள் ஆணை வைப்பிற் காணொணா அணுவும்
வானுற நிமிர்ந்து காட்டும்
கானில்வால் நுளம்பும் கருடனா தலினே."

(ஷ 4:24-26)

என்றார். உயிர்க்கு மலபரிபாகம் வரும்போது (வினை அறும் போது) இறைவன் கருணை காட்டத் திருவுளம் பற்றுவான். குருவடிவாக வந்து, தீமை போக்கி, தீட்சை நல்கி, காத்தருள் வான். இதனைப் பட்டினத்தார்,

"திருவுள்ள மாகிஎன்
தீமையெல் லாம் அறுத்துத்
தானே புகுந்தடி யேன்மனத்
தேவந்து சந்திக்கவே" (கோயில் நா. 10)

இங்கு,

'தானே புகுந்தடி யேன் மனத் தேவந்து' என்றமை ஊன்றிக் காணத்தகும். அவனாக மனம் கருதவேண்டுமே தவிர நாம் ஏதும் செய்ய இயலாது. 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்ற மணிவாசகர் கருத்தை இவண் வாங்கிப் பட்டினத்தார் பாடுகிறார்.

உலகம் தோன்றுவதும் விரிவதும் ஒடுங்குவதும் இறைவன் பால்; இதை அழகான உவமையால் விளக்குகிறார். இறைவன் செயற்கு, கடல் அலையை உவமையாகத் திருவொற்றியூர் ஒருபா ஒருபஃதில் (பா. 4:7-14) கூறுவர்.

இறைவன் உலகின் எல்லாமாகப் பரவி இருப்பதையும் (வியாபித்திருத்தல்) உயிர்கள் ஆணவ மலத்தில் சிக்குண்டு கிடக்குங்கால் காணமாட்டாமல் தவிப்பதையும் குறிக்கிறார்.

"தெரிவுறில்
உண்டாய்த் தோன்றுவ யாவையும் நீயே
கண்டனை அவை; அவைநினைக் காணா; அதுதான்
நின்வயின் மறைந்தோய் அல்லை; உன்னை
மாயாய் மன்னினை நீயே! வாழி
மன்னியும் சிறுமையிற் கரந்தோய் அல்லை
பெருமையிற் பெரியோய் பெயர்த்தும் நீயே!"

(கோயில் நா. ம. மாலை 32. 22-28)

உலகில் என்றும் உள்பொருள்கள் மூன்று, 1. உயிர், 2. உலகம், 3. கடவுள். இது சைவ சித்தாந்தத்தில் முப்பொருள் உண்மை என்று கூறப்படும். இவை நிலையானவை உலகில் உயிர்களின் பருவுடலில் மாற்றம் நிகழினும் உலகப் பொருள்கள் உண்டு. இவ்வுண்மையினை அடிகள்,

''ஆயினும் பிறவும் என்னதும் பிறரதும்
ஆவனபலவும் அழிவன பலவும்
போவதும் வருவதும் நிகழ்வதும் ஆகித்
தெண்ணீர் ஞாலத்துக திரண்ட மணலினும்
எண்ணில் கோடி எனைப்பல வாகி.''

(பா. திருக்கழு 10 16-20)

என்றும், இறைவன், இவற்றை ஆண்டு, செயற்படுத்துவதை

''ஆக்குதி அழித்தி ஆன பல்பொருள்
நீக்குதி தொகுத்தி நீங்குதி அடைதி''

(திருவொற்றி 7:18-19)

என்றும், இறைவன் வியாபகத்தன்மையை,

''மெய்யினை இறந்த மெய்யினை ஆயினும்
வையகம் முழுதும் நின் வடிவெனப்படுமே.'' (ஷ 3-4)

எனவும் கூறுவர்.

இறைவன் உலகில் ஆணாய்ப் பெண்ணாய் உயர்திணையாய், அஃறிணையாய், எல்லாமாய் விளங்குகிறான் என்பதனை வேறு வாய்பாட்டால் கூறுவதுண்டு.

''அது அவன் அவன்என நின்றமை யார்க்கும்
பொதுநிலை யான்என உணர்த்திய பொருளே.''

(திருவொற்றி 6:5-6)

என்று முதன் முதலில் கூறியவர் பட்டினத்தார்.

இந்த அடியை, மெய்கண்டார் அப்படியே முறைமாற்றி அவன் அவள் அதுவெனும் அவை மூவினைமையின்'' என்று தன் சிவஞான போதத்தைத் தொடங்குகிறார்.[2] மெய்கண்டாருக்கு அடி எடுத்துக் கொடுத்தவர் பட்டினத்தார்.

உலகப் பொருள்களில் இறைவன் ஒன்றாய், உடனாய் வேறாய் இருந்து இயங்குகிறான். சைவ சித்தாந்தத்தில் இதுவும் இன்றியமையாதது. இதனையடிகள்-

'செய்வினை உலகில் செய்வோய் எனினும்
அவ்வினைப் பயன் நீ அணுகா அமைமையும்''
(திருவொற்றி 5:5-6)

''உருவினும் உணர்வினும் உயர்வினும் பணியினும்
திருவினும் திறலினும் செய்தொழில் வகையினும
வெவ்வே றாகி வினையொடும் பிரியாது
ஒவ்வாப் பன்மையுள் மற்றவர் ஒழுக்கம்
மன்னிய வேலையுள் வான்திரை போல
நின்னிடை எழுந்து நின்னிடை ஆகியும்
பெருகியும் சுருங்கியும் பெயர்ந்தும் தோன்றியும்
விரவியும் வேறாய் நின்றனை விளங்கும்."
(திருவொற்றி 4:3-10)

என்பதால் விளங்கும்.

இறைவன் எட்டுமூர்த்தியாய் (அட்டமூர்த்தி) விளங்குகிறான். சைவசித்தாந்தத்தில் இஃது ஒரு கோட்பாடு.

'எண்வகை மூர்த்தி என்பதிவ் வுலகினில்
உண்மை யான்''

என்று அடிகள் இயம்புவர். (திருவொற்றி. 6:13 ஷி 1:25)

இறைவன் ஒருவனே; பல சமயத்தார்களும் தத்தமக்கு ஏற்ற வாறு இறைவனைப் பெயரிட்டழைப்பார். ஆறு சமயத்துக் கடவுளாகவும் புறச் சமயக் கடவுளாகவும் சிவபிரான் இருப்பார் என்பர் பட்டினத்தார். இது சமயப் பொதுமையை நிறுவ முயல்வதாம் சைவ சமயத்தின் உட்சமயத் தெய்வங்களும் சிவபெருமானின் கூறே! புறச் சமயத் தெய்வங்கூட சிவனேதான் என்று கூறுவது புரட்சியான கருத்தாகும்.

பிற சைவ அன்பர்கள், புத்தரையும் சமணரையும் வெறுத்து ஒதுக்கிய நிலையில் பட்டினத்தார்.

''ஆதி என்றும் அசோகினன் என்றும்
போதியிற் பொலிந்த புராணன் என்றும்
இன்னவை முதலாத் தாமறி அளவையின்
மன்னிய நூலின் பன்மையுள் மயங்கிப்
பிணங்கு மாந்தர் பெற்றிமை நோக்கி
அணங்கிய அவ்வவா கவ்வவை ஆகி
அடைபறறிய பளிங்கு போலும்
ஒற்றி மாநகர் உடையோய் உருவே!'' என்பர்
(திருவொற்றி 2.9-16)

"வேறு சமயத்தைச் சார்ந்தவர்களாயினும் இறை வழிபாடு செய்பவர்கள் தொண்டர்களே ஆவர்" என்று டாக்டர் டி. பி. சித்தலிங்கம் விளக்குவதை இங்கு கருதுதல் வேண்டும்.[2அ]

சமய நூல்களில் உயிர், சார்ந்ததன் வண்ணமாயிருத்தலுக்குப் பளிங்கை உவமை கூறுதல் வழக்கு. இங்குப் பளிங்கு உவமையாதல் காண்க. ஆகவே, பின்வந்த ஆசிரியர்கட்குச் சாத்திர நூற்கருத்துக்களைப் பட்டினத்தார் வழங்கியிருக்கிறார்.

மேலும்,

"மற்றும் அருவமும் உருவமும் ஆனாய் என்றும்

....

உளனே என்றும் இலனே என்றும்." (திருவொற்றி 2:5;7)

"எப்பொரு ளாயினும் இங்குள தாமெனின்
அப்பொருள் உனக்கே அவயவம் ஆதலின்." (ஷை 3—4)

என்றும் வரும் அடிகளில் உலகமும் உலகப் பொருள்களும் இறைவனே என்ற சித்தாந்தக் கருத்துக்களைக் காண்கிறோம். இறைவன் கைக்கொண்டுள்ள ஒவ்வொரு பொருளும் ஒரு தத்துவத்தைக் காட்டுவதாகப் பட்டினத்தார் விளக்குவது அருமையும் புதுமையுமாகும். (திருவொற்றி: 5:7:17). இங்ஙனம் பிற ஆசிரியர்கள் இந்நூற்றொகையில் விளக்கவில்லை.

காலதத்துவத்தைக் கடந்தவர் கடவுள் என்பது ஒரு தத்துவம். இதனை

"மூலமும் நடுவும் முடிவும் இகந்து
காலம் மூன்றையும் கடந்த கடவுள்" (திருவிடை 22:3-4)

என்றார். இங்ஙனம் இறைத் தத்துவம் பலவற்றை இயம்புகிறார், பட்டினத்தார்.

சைவ வழிபாட்டில் சித்தாந்த தத்துவம்:

தேவாதி தேவனை எய்த நான்கு வழிமுறைகளைக் கடைப்பிடிக்கலாம்.

1) உடலால் உதவுதல் சரியை (புறத்தொழிலால் வழிபடல்) 2) புறத்தொழிலாலும் அகத்தொழிலாலும் வழிபடுதில் கிரியை அகத்தொழிலால் வழிபடல் யோகம். அறிவால் வழிபடுதல் ஞானம்.[3] இதனையே வேறுவகையாகவும் விளக்குதல் உண்டு.

சரியை-அடிமைத்திறம் (தாசமார்க்கம்) கிரியை-கடமையைச் செய்தல் (சற்புத்திர மார்க்கம்) யோகம்-(சகமார்க்கம்)-ஞானம்—(சன்மார்க்கம்) சமயாச்சாரியார் நால்வரும் இந்நான்கு நெறிகட்கு எடுத்துக்காட்டாகச் சொல்லப் பெறுவர்.[4] சரியை, கிரியை, யோகம், ஞானம் - இவற்றை முறையே சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்று தமிழ்ப்படுத்துவர் ப. இராமநாதபிள்ளை.[5] இந்நான்கு நெறிகளைப் பற்றியும் பட்டினத்தார் ஆங்காங்கு குறித்துள்ளார்.

அ) சீலம் (சரியை)

''அறுகு சாத்திநின் தமர்பெயர் எழுதி (கோவிலில் 4:21)
அறுகு சாத்தும் குறிப்பு இவர் மட்டுமே கூறுகிறார்.

''பத்தி யடியவர் பச்சிலை இடினும்
முத்தி கொடுத்து முன்னின் றருளி''
(திருவிடை: 1:7-8) என்றும்

''நொச்சி யாயினும் கரந்தை யாயினும்
பச்சிலை யிட்டுப் பரவுந் தொண்டர்.'' (திருவிடை 19:9-10)

என்றும் கூறுமிடங்கள் சரியை பற்றியவை.

(ஆ) நோன்பு (கிரியை)

'இயன்றதோர் பொழுதின் இட்டது மலராச்
சொன்னது மந்திரமாக' (திருககழுமலம்-7:26-27) என்றும்

''அன்புகொடு மெழுகி அருள் விளக்கேற்றித்
துன்ப இருளைத் துரந்து முன்புறம்
மெய்யெனும் விதானம விரித்து நொய்ய
கீழ்மையில தொடர்ந்து கிடந்தஎன் சிந்தைப்
பாழறை உனக்குப் பள்ளியறை யாக்கிச்
சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவிசு
எந்தைநீ இருக்க இட்டனன்'' (திருக்கழு 4:7-13) என்றும்,

''மொழிவதுன் ஐந்தெழுத் தவைஎம் சிந்தையிற் கிடத்தி
. நனவே போல நாடொறும் பழகிக்
கனவிலும் நவிற்றும் காதலேம்'' (கோயில். நா. 24:4-6)
என்றும்

''மதியில் நெஞ்சத்தை வரைந்து நிதியென
அருத்திசெய் திடுவ அருத்திர சாதனம்-
காலையும் மாலையும் கால்பெயர்ந் திடுவதன் ஆலயம்
(ஷை 24: 9-11)

வலம்வருதற்கே-என்றும் வருவன, கிரியையைக் குறிக்கும்.

இ) செறிவு: (யோகம்)

"அறுத்தைவர் தீமையும் தீர்த்துச்செவ் வேமனத்தை ஒருக்கும் ஒருக்கத்தின் உள்ளே முளைக்கின்ற ஒண்சுடரே! (திருவிடை மும்மணி. 24) என்றது யோகம் பற்றியது.

(ஈ) அறிவு (ஞானம்)

அ) "பூசின மாசாம்; புணர்ந்தன பிரியும்;
நிறைந்தன குறையும்; உயர்ந்தன பணியும்;
பிறந்தன இறக்கும்; பெரியன சிறுக்கும்
....;
....
மாய வாழ்க்கையை மதித்துக் காயத்தைக்
கல்லினும் வலிதாக் கருதிப் பொலலாத்
தன்மையர் இழிவு சார்ந்தனை." (கோயில்.நா.28:5-19)

ஐம்பொறிகளால் மக்கள் அழிவதை இதேபாட்டால் அடி 23–30 இல் கூறுவர்.

ஆ) நினைப்பினும் கடிதே இளமை நீக்கம்;
அதனினும் கடிதே மூப்பின் தொடர்ச்சி;
அதனினும் கடிதே கதுமென மரணம்"
(கோயில். நா 32:5-8) என்றும்

இ) தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்
மாயப் படலம் கீறித்தூய
ஞான நாட்டம் பெறறபின் யானும்
நின்பெருந் தன்மையும் கண்டேன் காண்டலும்
என்னையுங் கண்டேன்; பிறரையும் கண்டேன்
நின்னிலை அனைத்தையும் கண்டேன்
(திருவிடை. 13: 28-33) என்றும்,

"கட்டிய நீயே அவிழ்க்கின் அல்லது
எட்டனையாயினும யான் அவிழ்க் கறியேன்"
(திருவொற்றி.9: 15-16)

என்றும், குறிப்பன, ஞான மார்க்கம் பற்றியவை.

இ) பிற தத்துவங்கள்:

தொண்டரும் இறைவனே!

சிவனின் தொண்டரையும் சிவனாகவே கொண்டு வணங்கிப் போற்றும் புதிய நெறியைத் திருமூலர் கூறுகிறார்.[6] இதனை வரலாற்றில் வைத்துத் திருத்தொண்டர் தொகையில் சுந்தரர் "அடியார்க்கும் அடியேன்" என்று பணிந்து போற்றினார். இந்த நெறியைப் பல இடங்களில் பட்டினத்தார் கூறுகிறார்.

"அம்பலத்தான் தொண்டர்க் கேவல் செய்து
கடைகொண்ட பிச்சை கொண் டுண்டிங்கு
வாழ்தல் களிப்புடைத்தே." (கோயில் நா. 2) என்றார்.

மற்றுமோர் இடத்தில்,

"தொண்டர் தொண்டர்க்குத் தொழும்பாய்த் திரியத்
தொடங்கினனே" (கோயில் 38.7-8) என்றும்

"நின்சீர் அடியார் தம்மூர் அடியார்க்கு
அடிமை பூண்டு." (திருவிடை. மரு.7:60-61) என்றும் கூறுவர்.

இறைவனிடம் தன்னை ஒப்புக்கொடுத்துவிட்டு அடிமைத் திறம் பூணும் சரணாகதி தத்துவத்தையும் பட்டினத்தார் பேசுகிறார்.

"ஒன்றநின் அடிக்கே ஒருங்குடன் வைத்து
நின்றனன் தமியேன்; நின்னடி அல்லது
சார்வுமற் றின்மையின்." (திருவொற்றி. 9:25-27)

"நின்னை அடைந்த அடியார் அடியார்க்கு என்னையும் அடிமையாகக் கொண்டே" என்று கூறுவர்.

(திருவிடை. 22 : 50-52)

மற்றுமோரிடத்தில் இறைவனை விரும்பும் அடியார், பாத துளியைத் தன் தலைமேல் தாங்க விரும்புவதாய் மொழிவது பணிவின் எல்லையையும் பத்தியின் எல்லையையும் காட்டும்.

..............."ஏகம்பனே என் றுகந்தவர்தாள்
தளிதரு தூளி என்றன்தலை மேல்வைத்த தன்மை பெற்றே"

(திரு ஏகம்பர் 4)

இதே கருத்தைக் குலசேகர ஆழ்வாரும் மொழிகுவர்.[7] பத்தர்களைப் போற்றும் நிலைக்கு இஃது அரிய காட்டாகும்.

நம்பியாண்டார் கூறும் தத்துவங்கள்

இறைத்தத்துவம் :

"இந்து சமயத்தில் தோன்றிய பேரடியார்கள் பலரும் தங்கள் தங்கள் தாய்மொழிகளிலேயே தங்கள் தங்கள் அனுபவத்தை வெளிப்படுத்திப் போந்தனர்," என்று டாக்டர் ப. அருணாசலனார் கூறுவது இவண் கருதத்தகும். நம்பியாண்டாருக்கு இது பெரிதும் பொருந்தும்.[1]

இறைவன் ஒன்றாய், வேறாய், உடனாய் இருந்து அருள் தருபவன் என்பது சைவ சித்தாந்தம்.[2] வேறாக இருக்கும் அப்பதி-மலம் நீங்கிய அடியார் உள்ளத்தும், உறைபவன். "மெய்ம்மை உன்னும் விரும்படியார் அகத்தான்" (திரு நா. வி. திரு. இ. ம. மாலை-2).

இறைவன் உயிர்கட்குத் தலைவன் என்பதையும் அவனைப் பணிந்தால் பண்டை வல்வினை நீங்கும் என்பதையும் "பவனைப் பணியுமின் நும்பண்டை வல்வினை பற்றறவே." (திரு. நா. வி. திரு இ. ம. மாலை. 66) என்னும் அடியால் புலப் படுத்துவர்.

இறைவன் உருவற்ற நிலையில் ஒலி உருவில் (தூல வடிவில்) இருப்பான். அவ்வொலி வடிவே ஐந்தெழுத்து 'நமசிவாய' என்பது. இதுவே வேதத்தின் உட்பொருள். இதனை நம்பியாண் டார் திருத்தொண்டர் திருவந்தாதியில் "வேதப் பொருள் அஞ்செழுத்தும் விளம்பியல் லால்மொழியான் (திரு திரு. அ. பா. 39) என்பர்.

நம்பியாண்டாருக்குமுன், திருமூலரும் "சிவசிவ என்கிலர் தீவினையாளர்"[3] "அஞ்செழுத் தாலே அமர்ந்தபஞ்சாக்கரம்" என்றும்,[4] அறைதலால் அறியலாம் 'பஞ்சாக்கரம்பயில் நாவினன்' (திரு. திரு. அ 18) என்று முருக நாயனாரை நம்பியாண்டார் ஏத்துவர்.

முக்தி :

இறைவன் திருவடிப் பேற்றை அடைதல்-'முத்தி' என்பது சைவ சித்தாந்தம், முத்தி-பதமுத்தி, பரமுத்தி என இருவகை. பதமுத்தி, மேலான சிவலோகப் பதவிகளைப் பெறுதல். பரமுத்தி, மிக மிக உயர்ந்தது. அதுவே இறைவன் திருவடிக்கீழ் உறைதல். திருவடிப்பேறே வேண்டப்படுவது. இதனையே, திருமூலர்,

"திருவடி யேசிவ மாவது நேரில்
திருவடி யேசிவ லோகஞ்சித் திக்கில்
திருவடி யேசெல கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே''.

என்றார் [5] இக்கருத்தினை நம்பியாண்டார்.

"சிவ லோகம் எய்தி நம்பன் கழற் கீழ் இருந்தோன்" கோச் செங்கட்சோழன் (திரு. திரு. அ. 82) என்றார்.

"மத்தம் வைத்தான் திருப் பாத
கமல மலரிணைக் கீழ்ச்
சித்தம்வைத் தாரெனபர் வீடுபே
றெய்திய செல்வர்களே." (திரு. திரு. அ. 72)

என்று தொகையடியார்களாகிய 'சித்தத்தைச் சிவன்பாலே வைத்தவர்களைக் கூறுங்கால் முத்தியடையாதலாகிய வீடுபேற்றை நன்கு தெளிவுபடுத்துகிறார், நம்பியாண்டார்.

குரு :

குரு முகமாகத் தத்துவங்களை உணர்தல் வேண்டும். குருவே, ஞானத்தை உணர்ந்து உணர்த்துபவர்.

'மூவாப் பசுபாச மாற்றியே முத்திப்பால்
யாவையும் நல்குங் குருபரன் அன்புற்றே!''[6]

என்றும், "சித்தம் இறையே சிவகுருவாமே" என்றும் திருமூலர் கூறுவர்.[7]

சிவனே, குருவாக வந்து ஆட்கொள்வர் என்பதைத் திருநாவுக்கரசர் வரலாற்றில் வைத்து நம்பியாண்டார் பேசுகிறார்.

"குருவாகக் கொடுசிவன் அடிசூடத் தரித்தவர்'' (திருவே. த. மாலை, பா. 2) என்றார்.

அடியார் இயல்பு :

திருவெண்ணீற்றைத் திரிபுண்டரமாக அணிதல் உண்டு. இறைவனே இவ்வாறணிந்திருந்தான் (திரு. திரு. அ. 7, 38) அடியார்கள் "பூதியும், சாதனமும்" (உருத்திராக்கம்) அணிந்து,

பொலிவார்ந்த உருவினராய் இருந்தார்கள் (திரு. திரு. அ. 42) அடியார் அக்குமணியணிதல் உண்டு. (ஷ 42) அல்லும் பகலும் உருத்திர செபத்தை அடியார் செய்வார். அடியார்கள் பத்தர்களின் குழுவில் கூடுதல் இன்றியமையாதது (ஷ 52). சைவ அடியார்களின் திருவடிகளை நீரால் விளக்கி, அதனைத் தம் தலைமேல் தெளிதது வழிபாடியற்றும் முறை பற்றிக் (திருத்தொண்டர் திருவந்தாதியில்) குறிக்கிறார். (பா. 53)

அடியார் செய்யும் வழிபாடு :

மனமொழி மெய்யால் இறைவனை ஏத்தி நம் கருவி கரணங்களைச் சிவகரணங்களாக ஆக்குதல் வேண்டும். (கோயில் திரு. ப. வி. 22) அன்பில்லாமல் வெறும் சடங்குவழி ஆகமபூசை பயனில்லை. அன்புப்பூசையே பயன் நல்கும். (கண்ணப்பர், கலையர், அதிபத்தர்) & (கோயில் திரு. ப. வி. 40). இத்தகு அரிய தத்துவங்களை நம்பியாண்டார் நவில்கிறார்.

பின்னுரை :

மேலே கூறிய செய்திகளின் திரட்சியை ஈண்டுக் காண்போம்.

நக்கீர தேவநாயனார், அடியாரை இறைவனாகக் கொண்டு வழிபடும் முறையை முதலில் காட்டினார். இதையடுத்து இக்கருத்தை வலியுறுத்தியவர் பட்டினத்தாராவார். ஓங்கார ஒலி வடிவைக் கூறியவரும் நக்கீரதேவ நாயனாரே! ஒலி உரு 'நமசிவாயா' என்பதை நம்பியாண்டாரும் செப்புவர். குரு வடிவாக இறைவன் எழுந்தருளி உயிர்களைக் கரைசேர்ப்பான் என்ற கருத்தை முதலில் சொன்னவர் நக்கீரதேவநாயனார். இக்கருத்தைப் பட்டினத்தார், நம்பியாண்டார் இருவரும் வழிமொழிந்தனர். தொழில் பற்றி முத்தேவராகச் சொன்னாலும் மூன்று தேவராகவும் இருப்பது சிவபெருமானே என்பார் நக்கீர தேவநாயனார். இதனை, காரைக்காலம்மையார், சேரமான் பெருமாள் பட்டினத்தார், ஆகிய மூவருமே இயம்பினர்.

'யான்-தான்'-என்ற இரண்டற்ற சுத்தாத்வைதக் கொள்கை-அறுசமயத்தையும் சிவனே வகுத்தான், சிவன் அம்மையப்பராக எழுந்தருளி உலகைப் புரக்கிறான் என்பதையும், தீர்த்தங்களின் சிறப்பு, பிறவித்துயரை ஐந்தெழுத்து ஓதி நீக்கலாம் என்பதையும் நக்கீரதேவநாயனார் நவின்றார்.

காரைக்காலம்மையார், எல்லாம் இறையருளால் நிகழ்கின்றது. இறைவன் ஒன்றாய் வேறாய் உடனாய் இருந்து செயற்படுவான் என்று மொழிவர். இக்கருத்தைப் பட்டினத்தார், நம்பியாண்டார் இருவரும் அடுத்துக் கூறினர்.

தோற்றிக்காத்து அழிப்பவன் சிவனே! இறையருளே உலகை ஆள்வது; ஆட்டுவிப்பது; யார் யார் எத்தெய்வத்தை வணங்கினாலும் அத்தெய்வமாக எழுந்தருள்வது சிவபெருமானே! இறைவன் காட்டக்கண்டு உலகம் அறிவு பெறுகிறது- என்ற கருத்துக்களை அம்மையார் நவில்கிறார். மற்றும் யோகம் ஐந்தெழுத்து மந்திரம் குறித்தும் குறிப்பிடுவார்.

சேரமான் பெருமாள் இறைவன், கன்ம மலமில்லாதவன், ஆகவே 'சுயம்பு'. முத்தொழிலும் செய்பவன் சிவனே என்பார். மற்றும் இறைவனின் சொரூப தட இலக்கணம், ஒலி குண தத்துவம் அட்டமூர்த்தம்-அட்டாங்க வணக்கம், சரியை-கிரியை வழிபாடு ஆகிய செய்திகளைக் குறித்துள்ளார்.

பட்டினத்தார் - சிவபெருமான் மறைகட்கும் எட்டாதவன் சொல்லில் அடங்காதவன், இறைவனின் சங்கற்பமே உலகம் உருவாகக் காரணம். ஒன்றாய் வேறாய் உடனாய் இறைவன் விளங்கல், குருவாக வந்து அருளல், அறுசமயத்துக்கும் புறச் சமயங்கட்குங்கூட சிவனே தலைவனாய் விளங்கல்-தொண்டரும் இறைவனாய் எண்ணத்தக்கவர் என்பது, உயிர்கள் ஆணவ மலத்தில் சிக்கி இறைகாட்சியை இழக்கும் என்பது, உயிர்களுக் கருளவேண்டிய இறைவன் பல உடல்தந்தும் பல பிறவி தந்தும் அருளுகிறான் என்பது சரியை, கிரியை, ஞான யோக வழிபாடுகளைப் பற்றிய கருத்துக்கள் ஆகிய இத்தகு செய்தி களைப் பட்டினத்தார் நன்கு எடுத்து மொழிந்துள்ளார்.

நம்பியாண்டார், ஒலி உருவமான 'நமசிவாயா' என்பதே வேதப் பொருள். பஞ்சாக்கரம் பயில்வார் துறக்கம் நண்ணுவர்.

இறைவன் ஒன்றாய் - வேறாய் - உடனாய் - விளங்குபவன். இறைவன் ஒருவனே; அவன் குருவாக வந்தருளுவான் என்ற செய்திகளைத் தருவார். மற்றும் திருவடியே, முத்தி-வீடுபேறாம் என்ற செய்தியை இவர் மட்டுமே சுட்டுவர் அடியார் குழுவில் இருத்தல் இன்றியமையாதது என்பதை வலியுறுத்துவர். மக்கள் சுரணம். சிவகரணமாக விளங்க வேண்டும் என்றும் கூறுவர். திரிபுண்டரிகம் சாத்தல், அக்குமணி அணிதல் பற்றிய குறிப்பை இவர் தருவார்.

இங்ஙனம், பின்னர் வந்த பதினான்கு சாத்திர நூல்களில் கண்டுள்ள செய்திகட்கு வித்து, மேலே கண்ட ஐந்து அருளாளர் நூல்களில் பாவிப் பரவிக் கிடக்கின்றன என்பதும் இவற்றைப் பெருக்கியும் விரித்தும் சாத்திர நூல்களைப் பின் வந்தோர் செய்தனர் என்பதும் நன்கு அறிய வேண்டுவனவாம்.

பதினொராந்திருமுறையில் தத்துவம்

அடிக்குறிப்புக்கள்

நக்கீர தேவநாயனார் :

1. திருமந்திரம் 1871
2. சிவஞானபோதம் சூ. 12
3. திருமந்திரம் 2703, 2704
4. திருக்களிற்றுப்படியார் 27
5. திருமந்திரம் 1581
6. திருக்களிற்றுப்படியார் 1, 6, 7
7. திருவுந்தியார் பா. 4
8. சிவஞான போதம் சூ. 8
9. திருமந்திரம் 282
10. திருக்களிற்றுப்படியார் 1
11. திருமந்திரம் 512.

காரைக்காலம்மையார் :

1. காரைக்காலம்மையார் திருமுறை – 1947 முன்னுரை-4
2. காரைக்காலம்மையார் திருமுறை திருவிரட்டை பா 16 (உமை, முருகன், தான் 19)
3. சித்தியார் பா. 69
4. ஷை 53, 57
5. ஷை 57
6. ஷை 91
7. பொன் வண்ணம் 15
8. திருவொற்றியூர் 6 13, 1, 25
9. சித்தியார் பா 322
10. திருப்பூவணம் தாண்டகம் 11
11. திருக். கை. ஞான உலா கண்ணி 7
12. சித்தியார் 115
13. பொன் வண்ணம் 19
14. கோயில் நான் மாலை 6
15. சிவஞானபோதம் சூ. 11
16. பாரதியார்-கோவிந்தன் பாட்டு 3
17. சைவசமயத் தோற்றமும் வளர்ச்சியும் ப. 15.

டாக்டர் டி. பி. சித்தலிங்கம்

சேரமான் பெருமான் நாயனார் :

1. அற்புதத்திருவந்தாதி - குறிப்புரை ப. 21 கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார்.
2. தமிழர் சமயம், ப. 160 கா. சு. பிள்ளை
3 திருமந்திரம் 917
4. பட்டினத்தார் திருவொற்றியூர் 6, 15
5. திருவுந்தியார் பா. 24
6. திருக்குறள் 9
7. தெய்வத்தமிழ்-ப - 179 அ. ச. ஞானசம்பந்தன்.

பட்டினத்தார் :

1. பத்தி இலக்கியம் ப. 98 – டாக்டர் ப. அருணாசலம்
2. சிவஞான போதம் சூ 1
2 அ சைவசமயத் தோற்றமும் வளர்ச்சியும் ப. 36 டாக்டர் டி. பி சித்தலிங்கம்.
3. சைவ சமயம் ப. 91 மு. அருணாசலம்
4. ௸ ப. 96
5. பன்னிருதிருமுறை பெருந்திரட்டு ப. 15. ப இராமநாதப்பிள்ளை.
6. திருமந்திரம் 1871
7. தேட்டருந்திறல் 2

நம்பியாண்டார் நம்பி :

1. பத்தி இலக்கியம் ப. 171. டாக்டர் ப. அருணாசலம்
2. திருக்களிற்றுப்படியார் சூ. 1
3. திருமந்திரம் 2716
4. ௸ 934
5 ௸ 138
6. ௸ 1677
7. ௸ 1573.

முடிவுரை

பதினொராந்திருமுறை 1420 பாடல்களைக் கொண்ட ஆழ் கடல். அதில் முக்குளித்து முயன்று முடிவாம் முத்துக்களைத் திரட்ட முனைந்ததன் பயன் வருமாறு:-

1. இத்தொகை நூலை, கால முறைப்படி பார்த்து, ஆசிரியர் வரிசையில் மாற்றம் செய்யப்பெற்றுள்ளது. இப்பகுப்பே எல்லா இயல்களிலும் ஒடிக்கிடப்பதால் ஆசிரியர்களின் கற்பனை வளர்ச்சியும் கருத்து வளர்ச்சியும் முறைப்படத் தெரிய வரும்.
2. இத்தொகைநூலின் ஆசிரியர்களில்சிலர், சங்கப்புலவர் பெயர் பெறினும், இவர்கள் வேறானவர்களே!
3. பற்பல அகச்சான்றால், சங்க நக்கீரரே, திருமுருகாற்றுப் படையைச் செய்தார் என்பது நிறுவப்பெற்றுள்ளது.
4. இத்தொகை நூலில், திருமுருகாற்றுப்படை தவிர,பிற பிரபந்தகங்களைச் செய்தவர் "நக்கீர தேவநாயனார்." நக்கீர தேவநாயனாரின் காலம் கி. பி. 6ஆம் நூற்றாண்டு என இலக்கியச்சான்றால் நிறுவப்பெற்றுள்ளது.
5. பதினொராந் திருமுறைப்பட்டினத்தாரின் வரலாறு இது தான் என மூன்று பட்டினத்தாரின் வரலாறும் ஒப்பீடு செய்து தெளிவுறுத்தி இருக்கிறது.
6. நம்பியாண்டார் ஏழு திருமுறைகளே தொகுத்தார் என்பார் கருத்தை மறுத்து, பதினொரு திருமுறைகளை-யும் இவரே தொகுத்தார் என நிறுவப்பெற்றுள்ளது.
7. காரைக்காலம்மையாரின் திருவிரட்டை மணிமாலை 'பாட்டியல் இலக்கணப்படியோ'-பன்னிரு பாட்டியல் இலக்கணப்படியோ இல்லை. மற்றபுலவர்கள் செய்தவை பன்னிருபாட்டியல்படி உள்ளன. இதுவே அம்மையாரின் காலப் பழமையைக் காட்டும்.
8. அம்மையாரின் அற்புதத் திருவந்தாதியில் இருபாடல்கள் செப்பலோசையில் பிழைபடுப. பிற ஆசிரியர்களின் பாடல்களில் வரும் வழுஉக்களும் சுட்டப்படுப.
9. மும்மணிக்கோவையின் இலக்கணம்-வெண்பாப் பாட்டியலில் படிகாணப்படுகிறது. எனினும் இதில்வரும் அகவற்பாக்கள் நேரிசையாக இல்லை. பலரும்பல

வீதமாகச் செய்தமைக்கு அவ்வவ்வாசிரியரின் தனித் தன்மை காரணமாகும்.

எனினும் நக்கீரர், சேரமான் பாடல்கள் இவ் விலக்கணப்படியே அமைகின்றது. ஆகவே அவர்கள் பாடல்களே இலக்கண விதி செய்ய வெண்பாப்பாட்டி-யலுக்கு மூலமாம். மேலும் இவர்களில் நக்கீர-தேவநாயனார் காலத்தால் முற்பட்டவர் என்பதற்கு இதுவும் காரணமாகும்

10. தசாங்க அமைப்பை முதலில் தொட்டவர், சேரமான் பெருமாள் ஆவார். ஒருநூலில் மற்றொரு நூலின் அமைப்பைக் கலப்பதையும் இவரே செய்தார். பட்டினத்தாரின் கோயில் நான்மணி மாலையிலும் இவ்வமைப்பு உண்டு.

11. பட்டினத்தாரின் கோயில் நான்மணி மாலை, வெண்பாப் பாட்டியலுக்கு மாறாக வருதலையும், பட்டினத்தார் பாடலைத்தழுவி இலக்கண விளக்கம் இருத்தலையும் நோக்குதல் வேண்டும்.

12. தனிச்சொல்பெற்ற கண்ணிகளைக் கொண்ட கலிப்பா, சமய காலத்தே புதிதாகப் பிறந்தது. சங்ககாலத்தே இல்லாதது. இந்த யாப்பை நக்கீர தேவநாயனார் முதலில் செய்தார்.

13. நம்பியாண்டார், தம் கலம்பகத்தில் சில புதிய உறுப்புக்-களைச் சேர்த்தார். பிற கலம்பகங்களில்வரும் அகத் துறைகளைச் சற்றே திரித்தும் புதுக்கியும் செய்தார். கலம்பக உறுப்புக்கள் 8 என்பதில்லை. 30-க்கும் மேற் பட்ட உறுப்புக்கள் கலம்பகங்களில் காணப்படும்.

14. 12 சீர், 14 சீர்-விருத்தப்பாக்களை முதலில்பட்டினத்தார் செய்தார். மற்றும் இவர் எல்லாப்பாக்களையும் மங்கல மொழிகளில் தொடங்குகிறார். 16-சீர் விருத்தப்பாவை, நம்பியாண்டார் முதலில் செய்தார்.

15. சமயகாலத்தில், கட்டளைக் கலிப்பா பேரிடம் பெறுதலை நோக்குதல் வேண்டும்.

16. இத்தொகை நூல் ஆசிரியர்களிடம் சங்கநூற் பயிற்சி, திருக்குறள் ஆட்சி, பழமொழியில் விருப்பம், ஆகியவை காணப்படும். உவமை வருமளவு இவர்கள்பால் உருவகம் மிகுந்து வரவில்லை. சேரமானிடம் சிலப்பதி-காரப்பயில்வு வருதலைக் காணல் வேண்டும்.

17. அகத்திணைப் பாடல்கள், இந்நூலில் நல்லிடம் பெறும் நான்கில் ஒருபங்கு பாடல்கள் அகத்திணைப்பாடல்களே.

18. சங்க காலத்தே அகத்திணைப்பாடல்களில் உள்ளுறை வைத்துப்பாடுதலைக் காணலாம். இப்போக்கே சமய காலத்தே அகத்திணையில் மெய்ப்பொருள் உள்ளுறை காண வழிகாட்டி ஆயிற்று.

19 தெய்வத்திடம் மானிடர் காட்டும் காதல், தொல்காப்பியத்தின்படி கைக்கிளைப் பாடாண் பாட்டாகும். இவ்வகையில் முதலில் இத்தகு பாடல்பாடியவர் நக்கீர தேவ நாயனாரே!

20. சங்க காலத்தே இல்லாத புதிய துறைகள் 15-இத்தொகை நூலில் உண்டு.

21. 33-பாடல்கட்கு அச்சுப்புத்தகங்களில் துறை காட்டப் பெறாதிருத்தலைக் கட்டுரையாளர் கண்டு காட்டி யிருக்கிறார்.

22. இறைவனுக்கும்- தலைவிக்கும் பொழுதுகளை உவமை யாக்கல், சேரமானின் புதிய போக்காம்.

23. கண்ணப்பர், சம்பந்தர், சுந்தரர்-வரலாறுகளை ஒப்பாய்வு செய்திருத்தலைக் காண்க.

24. இறையடியாரை இறைவனாகக் கருதுதல், குருவின் சிறப்பு, சரியை, கிரியை, முதலானவற்றைப் பட்டினத்தார் குறிக்கிறார். பட்டினத்தார் சமயப் பொறையாளர். சமயம், தத்துவம் பற்றிய செய்திகள் பேரளவு திரட்டப் பெற்றுள்ளன.

25. பல்வகை அட்டவணைகளைக் காணலாம். இலக்கணக் குறிப்பு-அணிவகைகள் இவற்றிற்கும் அட்டவணை உண்டு. இவை இத்தொகை நூலின் மாட்சியையும், ஆராய்ச்சியின் போக்கையும் புலப்படுத்தும்.

இத்தொகை நூற்பாடல்கள், இறைப்பாடல்களாக இருப்பினும் வெறும் புராணங்கள் இல்லை. பசியையும் ஆற்றி, ஊட்டமும் தரும் உணவுபோல், இவை இலக்கிய நலம் கனிந்தவை; சுவை தருபவை என்பதை ஆய்வு புலப்படுத்தும்.

இந்த ஆய்வை மேற்கொண்டபோது மேலும் ஆராய இடனுண்டு என்று தெரிந்தது.

அ) மொழி வல்லார்கள் சமய நூல்களைத் திறம்பட ஆராய்ந்தால், தமிழ் மொழியில் ஏற்பட்ட மாற்றங்கள் திரிபுகள் நன்கு தெளிவாகும். சம்பந்தர், திருநாவுக்கரசர், நக்கீரர் இவர்களின் நூல்கள் இவ்வகையில் ஆராயப்படலாம்.

ஆ) புராண வரலாறுகள். சங்ககாலத்தும் காணப்படுப. அவற்றில்பல சமய நூல்களிலும் வருகின்றன. எனினும் பல புதிய கதைகளும் புராண வரலாறுகளும் உண்டு, புதியன அந்தந்த இடங்களில் சுட்டப்பெற்றுள்ளன. இன்னும் சங்ககாலந்தொட்டு சமயகாலம் வரை எந்தெந்தப் புராணங்கள் எங்ஙனம் வளர்ந்தன-திரிந்தன வடமொழிக்கதைக்கும் தமிழ்மொழிக்கதைக்கும் உள்ள வேறுபாடுகள்-என்ன? வளர்ச்சிகள் - என்ன? என்று நன்கு கண்டு கணிக்கப்பெறல் வேண்டும்.

இ) அகத்திணைத் துறைகட்குச் சங்க நூல்கள் முதல் பிற்காலக் கோவைகள் வரை தொடர் ஆய்வு மேற்கொண்டு ஒருபட்டியல் தொகுத்தல் வேண்டும்.

இத்தொகைநூலைக் கட்டுரையாளர் இயன்றவரை ஆராய்ந்திருப்பினும், வேறுவகையாகப் பார்க்கவும் இடன் உண்டு என்பதைக் கட்டுரையாளர் பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகிறார்.

பின்னிணைப்பு

1) பதினொராந்திருமுறை ஆசிரியர்களின் காலவேறுபாடுகள்

2) பாடல் தொகைகள் (காசிமடத்துப் பதிப்புப்படி)

3) சிற்றிலக்கிய வகைகள் பாடப்பெற்றோர்-பாவகைகள்

4) பிறர் பாடிச்சேர்த்த பாடல்கள்

5) குறைப்பாடல்கள்

6) பாடவேறுபாடுகள்

7) அகத்துறைகள்

8) அணிகள்

9) இலக்கணக் குறிப்புக்களும் சொல்லாட்சிகளும்

10) பதினொராந்திருமுறையில் வரும் சிவனடியார்கள்

11) பதினொராந்திருமுறையில் வரும் பதிகள்

12) பதினொராந்திருமுறையில் வரும் முதல் சிற்றிலக்கிய வகைகள்

13) கலம்பக உறுப்புக்களின் ஒப்பீடு.

14) முக்கிய புராணக்கதைகள்

15) துணை நூற்பட்டியல்

பதினொராந்திருமுறை ஆசிரியர்களின் காலவேறுபாடுகள்

1. காரைக்காலம்மையார்

காலம்	ஆசிரியர் நூல்பெயர்	பக்கம்
கி. பி. 4 அல்லது கி. பி. 5	1. க. வெள்ளைவாரணனார், பன்னிருதிருமுறை வரலாறு தொகுதி 2	529
	2. டாக்டர் கே. கே. பிள்ளை, தமிழக வரலாறு-மக்களும் பண்பாடும்	224
	3. அ. ச. ஞானசம்பந்தன், தெய்வத்தமிழ்	64
கி. பி 5-6	1. சதாசிவ பண்டாரத்தார், தமிழ் இலக்கிய வரலாறு கி. பி. 250-600	76
	2. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, 10 ஆம் நூற்றாண்டு	289
	3. கா. சு. பிள்ளை, இலக்கிய வரலாறு	341
கி. பி. 6	1. டாக்டர் மு. கோவிந்தசாமி, இலக்கியத் தோற்றம்	104
	2. டாக்டர் மு. வ., தமிழ் இலக்கிய வரலாறு	93; 95
	3. டாக்டர் இராசமாணிக்கனார், சைவ சமய வளர்ச்சி	57
	4. ந. ச். கந்தையா, தமிழ் இலக்கிய அகராதி	11

2 நக்கீரர்

(திருமுருகாற்றுப்படைதந்த நக்கீரர்)

சங்க காலம்	1. க. வெள்ளைவாரணனார், பன்னிருதிருமுறை வரலாறு II	625
	2. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு 10ஆம் நூற்றாண்டு	299

3. டாக்டர் மு. வ., தமிழ் இலக்கிய வரலாறு 50
4. கலைக்களஞ்சியம் தொகுதி 6 64
5. ந. சி. கந்தையா, தமிழ் இலக்கிய அகராதி 86

கி. பி. 300க்குப்பின் 600க்கு முன் — 1. டாக்டர் இராசமாணிக்கனார், தமிழ் மொழி வரலாறு 257

3. நக்கீரதேவநாயனார்

கி. பி. 9 — 1. க. வெள்ளைவாரணனார், பன்னிருதிருமுறை வரலாறு II 629
கி. பி. 10 — 2. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, 10ஆம் நூற்றாண்டு 203
கி. பி. 13 — 3. ஔவை சு. துரைசாமிபிள்ளை, சைவ இலக்கிய வரலாறு 34

இரு நக்கீரரும் ஒருவரே என்ற கருத்தினர் பாலூர் கண்ணப்ப முதலியார்.

4. ஐயடிகள் காடவர்கோன்

கி. பி. 6 — 1. கா. சு. பிள்ளை, இலக்கிய வரலாறு 343
2. டாக்டர் இராசமாணிக்கனார், சைவ சமய வளர்ச்சி 53
3. டாக்டர் மு. கோவிந்தசாமி, இலக்கியத் தோற்றம் 133

கி. பி. 7ஆம் நூற்றாண்டு — 1. க. வெள்ளைவாரணனார். பன்னிருதிருமுறை வரலாறு 550
2. ஔவை சு. துரைசாமிபிள்ளை, சைவ இலக்கிய வரலாறு 33, 182

கி. பி. 8ஆம் நூற்றாண்டு 1. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு 10ஆம் நூற்றாண்டு 35

ஜபி. 9ஆம் நூற்றாண்டு 1. ந. சி. கந்தையா, தமிழ் இலக்கிய அகராதி

5. சேரமான் பெருமான் நாயனார்

கி. பி. 670-710	1. க. வெள்ளைவாரணனார், பன்னிருதிருமுறை வரலாறு	556
.கி பி. 8ஆம் நூற்றாண்டு	1. கா. சு. பிள்ளை, இலக்கிய வரலாறு	343
	2. டாக்டர் மு. வ. தமிழ் இலக்கிய வரலாறு	103
	3. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு 10ஆம் நூற்றாண்டு	289, 35
கி. பி. 9ஆம் நூற்றாண்டு	1. ந. சி. கந்தையா, தமிழ் இலக்கிய அகராதி	78
	2. கே. எஸ். சீனிவாசபிள்ளை, தமிழ் வரலாறு	87
	3. டி. ஏ. கோபிநாதராயர். செந்தமிழ்த்தொகுதி 3	
	4. சி. வி. நாராயண அய்யர். Origin and Early History of Saivism in South India.	445
	5. சுந்தரர் தேவாரம். ஸ்ரீ காசிமடத்துப் பதிப்பு-முன்னுரை	206

6. இளம்பெருமானடிகள்

கி. பி. 6ஆம் நூற்றாண்டு	1. கா. சு. பிள்ளை, இலக்கிய வரலாறு	342
	2. கலைக்களஞ்சியம், தொகுதி 2	141
கி. பி. 8ஆம் நூற்றாண்டு	1. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, 10ஆம் நூற்றாண்டு	360
கி. பி. 9 இறுதி 10இன் பிற்பட்டகம்	1. பன்னிருதிருமுறை வரலாறு	714

7. அதிராவடிகள்

கி. பி. 6ஆம் நூற்றாண்டு	1. கா. சு. பிள்ளை, இலக்கிய வரலாறு	342
	2. ந. சி. கந்தையா, தமிழ் இலக்கிய அகராதி	158
கி. பி. 8ஆம் நூற்றாண்டு	1. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, 10ஆம் நூற்றாண்டு	360
கி. பி. 9-10ம் நூற்றாண்டு	1. க. வெள்ளைவாரணனார், பன்னிருதிருமுறை வரலாறு	714

8. கபிலதேவநாயனார்

கி. பி. 6ஆம் நூற்றாண்டு	1. கா. சு. பிள்ளை, தமிழ் இலக்கிய வரலாறு	342
	2. டாக்டர் மு. கோவிந்தசாமி, இலக்கியத்தோற்றம்	101
கி. பி. 9ஆம் நூற்றாண்டு	1. க. வெள்ளைவாரணனார், பன்னிருதிருமுறை வரலாறு	699-700
	2. டாக்டர் இராசமாணிக்கனார், சைவசமய வளர்ச்சி	63
கி. பி. 10ஆம் நூற்றாண்டு	1. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு 10ஆம் நூற்றாண்டு	293
கி. பி. 11ஆம் நூற்றாண்டு	1. ந. சி. கந்தையா, தமிழ் இலக்கிய அகராதி	

9. பரணதேவநாயனார்

கி. பி. 7ஆம் நூற்றாண்டு	டாக்டர். இராசமாணிக்கனார், சைவசமய வளர்ச்சி	65
கி. பி. 9ஆம் நூற்றாண்டு இறுதி	க. வெள்ளைவாரணனார், பன்னிருதிருமுறை வரலாறு	704
கி.பி. 10ஆம் நூற்றாண்டு	மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, 10ஆம் நூற்றாண்டு	293
கி.பி. 13ஆம் நூற்றாண்டு	ஔவை சு. துரைசாமிபிள்ளை, சைவ இலக்கிய வரலாறு	34

10. கல்லாட தேவதாயனார்

கி. பி. 6ஆம் நூற்றாண்டு	1. கா. சு. பிள்ளை, இலக்கிய வரலாறு	341
	2. டாக்டர் மு கோவிந்தசாமி, இலக்கியத் தோற்றம்	101
	3. கலைக்களஞ்சியம், தொகுதி, 3	292
கி.பி. 9ஆம் நூற்றாண்டுக் குப்பின்	1. டாக்டர் இராசமாணிக்கனார், சைவ சமய வளர்ச்சி	66
கி.பி. 9ஆம் நூற்றாண்டுக் குப்பின்	1. சு. வெள்ளைவாரணனார், பன்னிரு திருமுறை வரலாறு	693
	2. ந. சி. கந்தையா, தமிழ் இலக்கிய அகராதி	25
கி.பி. 10ஆம் நூற்றாண்டு	மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, 10ஆம் நூற்றாண்டு	293
கி.பி. 13ஆம் நூற்றாண்டு	ஔவை சு. துரைசாமிபிள்ளை, சைவ இலக்கிய வரலாறு	34

11. பட்டினத்தார்

கி. பி. 9ஆம் நூற்றாண்டு	ஔவை சு. துரைசாமிபிள்ளை, சைவ இலக்கிய வரலாறு	375-376
கி. பி. 9ஆம் நூற்றாண்டு இறுதி	1. க. வெள்ளைவாரணனார், பன்னிரு திருமுறை வரலாறு	735
	2. கா. சு. பிள்ளை, பட்டினத்தடிகள் வரலாறும் நூலாராய்ச்சியும்	3
கி.பி. 10ஆம் நூற்றாண்டு	1. டாக்டர் மு. கோவிந்தசாமி, இலக்கியத் தோற்றம்	169
	2. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, 10ஆம் நூற்றாண்டு	293
	3. எஸ். அனவரதவிநாயகம்பிள்ளை, தமிழ்ப் பெருமக்கள்	194
	4. ந. சி. கந்தையா, தமிழ் இலக்கிய அகராதி	39
	5. கலைக்களஞ்சியம், தொகுதி-6	659

	6. பேராசிரியர் மு. அருணாசலம்பிள்ளை, ஸ்ரீகாசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம் நூற்றாண்டு விழா மலர்	234
கி.பி. 10ஆம் நூற்றாண்டு அல்லது 11ஆம் ”	டாக்டர் மு. வ. தமிழ் இலக்கிய வரலாறு	190

12. நம்பியாண்டார் நம்பி

கி. பி. 9ஆம் நூற்றாண்டு இறுதி	1. க. வெள்ளைவாரணனார், பன்னிரு திருமுறை வரலாறு	766
	2. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் சரித்திரம் 1ஆம் பகுதி	30
கி.பி. 10ஆம் நூற்றாண்டு தொடக்கம்.	ஷை ஷை இலக்கிய ஆராய்ச்சியும் கல்வெட்டுக்களும்	32
கி.பி. 10ஆம் நூற்றாண்டு	1. கா. சு பிள்ளை, இலக்கிய வரலாறு	345
	2. ஔவை சு. துரைசாமிபிள்ளை, சைவ இலக்கிய வரலாறு	33
	3. டாக்டர் மு. கோவிந்தசாமி, இலக்கியத் தோற்றம்	159
	4. ந. சி. கந்தையா, தமிழ் இலக்கிய அகராதி	40
	5. டாக்டர் இராசமாணிக்கம், சேக்கிழார்	22-23
கி.பி. 11ஆம் நூற்றாண்டு	1. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, 10ஆம் நூற்றாண்டு	293
	2. எஸ். அனவரத விநாயகம்பிள்ளை, தமிழ்ப் பெருமக்கள்	194
	3. டாக்டர் மு வ. தமிழ் இலக்கிய வரலாறு	138
	4. கலைக்களஞ்சியம், தொகுதி, 6	292

பதினொராந்திருமுறையில் மொத்தப் பாடல்கள்
(திருப்பனந்தாள் காசி மடத்துப் பதிப்பின்படி)

1.	திருமுகப் பாசுரம்	1
2.	திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் (காரைக்காலம்மையார்)	11
3.	திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் (காரைக்காலம்மையார்)	11
4.	திருவிரட்டைமணிமாலை ”	20
5.	அற்புதத்திருவந்தாதி ”	101
6.	க்ஷேத்திரத் திருவெண்பா (ஐயடிகள் காடவர்கோன்)	24
7.	பொன்வண்ணத்தந்தாதி (சேரமான்)	100
	” ” இறுதிப்பாட்டு	1
8.	திருவாரூர் மும்மணிக் கோவை (சேரமான்)	30
9.	திருக்கைலாயஞான உலா (சேரமான்)	1
	” ஷை இறுதிப் பாட்டு	1
10.	கயிலைபாதி-காளத்திபாதி அந்தாதி (நக்கீர தேவநாயனார்)	100
11.	திருவீங்கோய்மலை எழுபது ”	70
12.	திருவலஞ்சுழி மும்மணிக் கோவை ”	15
13.	திருவெழுகூற்றிருக்கை ”	1
	” இறுதிப்பாட்டு ”	1
14.	பெருந்தேவபாணி ”	1
	” இறுதிப்பாட்டு ”	1
15.	கோபப்பிரசாதம் ”	1
16.	காரெட்டு ”	1
17.	போற்றிக் கலிவெண்பா ”	1
18.	திருமுருகாற்றுப் படை (நக்கீரர்)	1
	” இறுதிப்பாட்டு கீழ்வெண்பா	10
19.	திருக்கண்ணப்பதேவர் திருமறம் (நக்கீர தேவநாயனார்)	1
	” இறுதிப்பாட்டு கீழ்வெண்பா	1
20.	” (கல்லாட தேவநாயனார்)	1
21.	மூத்தநாயனார் திரு இரட்டை மணிமாலை (கபில தேவநாயனார்)	20
22.	சிவபெருமான் திரு இரட்டை மணிமாலை ”	37

23. சிவபெருமான் திருவந்தாதி ” 100
24. ” (பரண தேவநாயனார்) 100
” இறுதிவெண்பா கீழ்ப்பாட்டு 1
25. சிவபெருமான் திருமும்மணிக் கோவை (இளம் பெருமானடிகள்) 30
26. மூத்தபிள்ளையார் திருமும்மணிக் கோவை (அதிராவடிகள்) 23
27. கோயில் நான் மணிமாலை (பட்டினத்துப்பிள்ளையார்) 40
28. திருக்கழுமலமும்மணிக் கோவை (பட்டினத்துப் பிள்ளையார்) 30
29. திருவிடைமருதூர் மும்மணிக் கோவை ” 30
30. திரு ஏகம்பமுடையார் திருவந்தாதி ” 100
31. திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது ” 10
32. விநாயகர் திரு இரட்டை மணிமாலை (நம்பியாண்டார்) 20
33. கோயில் திருப்பண்ணியர் விருத்தம் ” 70
34. திருத்தொண்டர் திருவந்தாதி (நம்பியாண்டார்) 89
ஷெயில் முன் உள்ள பாடல் 1
35. ஆளுடை பிள்ளையார் திருவந்தாதி (நம்பியாண்டார்) 100
ஷெயில் இறுதி வெண்பா - கீழ்ப்பாட்டு 1
36 ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம் (நம்பியாண்டார்) 11
37. ஷெ திருமும்மணிக் கோவை ” 30
38. ஷெ திருவுலாமாலை ” 1
39. ஷெ திருக்கலம்பகம் ” 49
40. ஷெ திருத்தொகை ” 1
41. திருநாவுக்கரசர் திருவேகாதசமாலை ” 11

ஆக மொத்த பாடல்கள் 1420

ஆசிரியர்களும் அவர்கள் பாடிய பாடல்களின் வகையும் - தொகையும்

1. திருவாலவாயுடையார் (ஆசிரியப்பா) 1
2. காரைக்காலம்மையார்
அ) ஆசிரிய விருத்தம் 22

	ஆ) கட்டளைக் கலித்துறை	10	
	இ) வெண்பா	1[illegible]1	143
3. ஐயடிகள் காடவர்கோன் - (வெண்பா)			24
4. சேரமான் பெருமாள் நாயனார்			
	அ) ஆசிரியப்பா	10	
	ஆ) கட்டளைக் கலித்துறை	110	
	இ) ஷெயில் இறுதிப்பா	1	
	ஈ) வெண்பா	10	
	உ) இறுதி வெண்பா	1	
	ஊ) கலிவெண்பா (197 கண்ணி)	1	131+2
5. நக்கீரர்			
	அ) ஆசிரியப்பா	1	
	ஆ) இறுதிவெண்பா	10	
6. நக்கீர தேவநாயனார்			
	அ) ஆசிரியப்பா	9	
	ஆ) கட்டளைக் கலித்துறை	5	
	இ) வெண்பா	183	
	ஈ) இறுதிவெண்பாக்கள்	3	
	உ) கலி-வெண்பா	1	193+3
7. கல்லாட தேவநாயனார்			
	அ) ஆசிரியப்பா	1	
8. கபில தேவநாயனார்			
	அ) கட்டளைக் கலித்துறை	28	
	ஆ) வெண்பா	129	157
9. பரண தேவநாயனார்			
	அ) வெண்பா	100	
	ஆ) இறுதி வெண்பா	1	100+1
10. இளம் பெருமானடிகள்			
	அ) ஆசிரியப்பா	10	
	ஆ) கட்டளைக் கலிப்பா	10	
	இ) வெண்பா	10	30
11. அதிராவடிகள்			
	அ) ஆசிரியப்பா	8	
	ஆ) கட்டளைக் கலித்துறை	7	
	இ) வெண்பா	8	23
12. பட்டினத்துப் பிள்ளையார்			
	அ) ஆசிரியப்பா	34	

ஆ)	ஆசிரிய விருத்தம்	10	
இ)	கட்டளைக் கலித்துறை	124	
ஈ)	வெண்பா	24	192+18

13. நம்பியாண்டார் நம்பி

அ)	ஆசிரியப்பா	11	
ஆ)	ஆசிரிய விருத்தம்	46	
இ)	கட்டளைக் கலித்துறை	292	
ஈ)	இறுதியில் கலித்துறை	1	
	முன் உள்ள கலித்துறை	1	
உ)	வெண்பா	22	
ஊ)	இறுதி வெண்பா	1	
எ)	கலிவெண்பா	2	
ஏ)	பல்வகைப் பாடல்கள்	9	382+3

2) பதிப்புவாரியாகப் பதினொராந்திருமுறைப் பாடல் எண்ணிக்கை

1.	காசிமடத்துப் பதிப்புப்படி	1402+18=1420
2.	சைவசித்தாந்தப் பதிப்புக் கழகப் பதிப்புப்படி	1402
3.	சமாச பதிப்புப்படி	1407
4.	நாவலர் பதிப்புப்படி	1386

சிற்றிலக்கிய வகைகள் :

1) அந்தாதி (8)

1. காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதி (வெண்பா) 101
2. சேரமான் பெருமாளின் பொன்வண்ணத்தந்தாதி (கட்டளைக் கலித்துறை) 101
3. நக்கீர தேவநாயனாரின் கயிலைபாதி காளத்தி பாதி அந்தாதி (வெண்பா) 100
4. கபில தேவநாயனாரின் சிவபெருமான் திருவந்தாதி (வெண்பா) 100
5. பரண தேவநாயனாரின் சிவபெருமான் திருவந்தாதி (வெண்பா) 101
6. பட்டினத்துப் பிள்ளையார் திருவேகம்பமுடையார் திருவந்தாதி (கட்டளைக் கலித்துறை) 100

7. நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி (கட்டளைக் கலித்துறை) 89

8. ஷெ யாரின் ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி (கட்டளைக் கலித்துறை) 100

(மேற்கூறியவற்றில் வெண்பா யாப்பு: 4
கட்டளைக் கலித்துறை யாப்பு: 4)

2) மும்மணிக் கோவை (7)

1. சேரமான் பெருமாள் நாயனாரின் திருவாரூர் மும்மணிக் கோவை (ஆசிரியம்-வெண்பா-கட்டளை) 30

2. நக்கீர தேவநாயனாரின் திருவலஞ்சுழி 15

3. இளம் பெருமானடிகளின் சிவபெருமான் திருமும்மணிக்கோவை 30

4. அதிராவடிகளின் மூத்த பிள்ளையார் " 23

5. பட்டினத்துப் பிள்ளையாரின் திருக்கழுமலமும்மணிக் கோவை 30

6. பட்டினத்துப் பிள்ளையாரின் திருவிடைமருதூர் மும்மணிக் கோவை 30

7. நம்பியாண்டார் நம்பியின் ஆளுடைய பிள்ளையார் மும்மணிக் கோவை 30

3) இரட்டை மணிமாலை (4)

1. காரைக்காலம்மையாரின் திருவிரட்டை மணிமாலை (கட்டளை + வெண்பா) 20

2. கபிலதேவரின் மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை (கட்டளை + வெண்பா) 20

3. கபிலதேவரின் சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை (வெண்பா + கட்டளை) 37

4. நம்பியாண்டார் நம்பியின் விநாயகர் திருவிரட்டை மணிமாலை (வெண்பா + கட்டளை) 20

4) நான்மணிமாலை-1

1. பட்டினத்துப் பிள்ளையாரின் கோயில் நான்மணிமாலை 40

5) பிறவகைச் சிற்றிலக்கியங்கள்

1. ஆற்றுப்படை 1
2. அ. உலா 1
3. (ஆ.) உலாமாலை 1
4. எட்டு 1

5.	எழுகூற்றிருக்கை	1	15.	பெருந்தேவபாணி	1
6.	எழுபது	1	16.	மறம்	2
7.	ஏகாதசமாலை	1	17.	விருத்தம்	2
8.	ஒருபா ஒருபஃது	1	18	வெண்பா	1
9	கலம்பகம்	1	19.	நான்மணிமாலை	1
10.	கலிவெண்பா	1	20.	இரட்டைமணிமாலை	4
11.	கோபப்பிரசாதம்	1	21.	மும்மணிக்கோவை	7
12	திருமுகப்பாசுரம் (சீட்டுக்கவி)	1	22.	அந்தாதி	8
13.	தொகை	1			
14.	பதிகம்	2			

மொத்த சிற்றிலக்கியங்கள் 41

பாடப் பெற்றோர்

அ) விநாயகரைப் பற்றியவை: (3)

1. மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை-கபில தேவநாயனார்
2. மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை-அதிராவடிகள்
3. திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை-நம்பி யாண்டார் நம்பி.

ஆ) முருகன் பற்றியது (1)

1. திருமுருகாற்றுப்படை-நக்கீரர்

இ) சிவபெருமான் பற்றியவை (26)

1. திருவாலங்காட்டு மூத்த பதிகம்-1
2. „ -2
3. திருவிரட்டைமணிமாலை
4. அற்புதத்திருவந்தாதி
5. க்ஷேத்திர திருவெண்பா
6. பொன்வண்ணத் தந்தாதி
7. திருவாரூர் மும்மணிக்கோவை
8. திருக்கைலாய ஞான உலா
9. கயிலைபாதி காளத்திபாதி
10. திருவீங்கோய்மலை எழுபது

11. திருவலஞ்சுழி மும்மணிக்கோவை
12. திருவெழுகூற்றிருக்கை
13. பெருந்தேவபாணி
14. கோபப்பிரசாதம்
15. காரெட்டு
16. போற்றித்திருக்கலிவெண்பா
17. சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை
18. சிவபொருமான் திருவந்தாதி (2)
19. சிவபெருமான் திருமும்மணிக்கோவை
20. கோயில் நான்மணிமாலை
21. திருக்கழுமல மும்மணிக்கோவை
22. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை
23. திருவேகம்பமுடையார் திருவந்தாதி
24. திருவொற்றியூர் ஒருபா ஒரு பஃது
25. கோயில் திருப்பண்ணியர் விருத்தம்

ஈ) அடியார் பற்றியவை (11)

1.	திருஞானசம்பந்தரைப் பற்றியவை	6
2.	திருநாவுக்கரசர்	1
3.	கண்ணப்ப தேவநாயனார்	2
4.	சேரமான் பெருமாளைத் தலைவராக	1 (திருமுகப்பாசுரம்)
5.	திருத்தொண்டர்களைப் பற்றியது	1
	ஆக	11

14 நூல்கள் ஊர்ப் பெயரில் தொடர்புடையனவாய்த் தலைப்புப் பெயர் பெறல்: 27 நூல்கள். வேறு காரணத்தால் பெயர் பெற்றவை.

பாவகைகள் விளக்கம்

(அ) ஆசிரியப்பா

1.	திருமுகப்பாசுரம்	1
2.	திருவாரூர் மும்மணிக்கோவை	10
3.	திருவலஞ்சுழி மும்மணிக்கோவை	5
4.	திருவெழுகூற்றிருக்கை	1
5.	பெருந்தேவபாணி	1
6.	கோபப்பிரசாதம்	1

7.	திருமுருகாற்றுப்படை (அடி 317)	1
8.	திருக்கண்ணப்பதேவர் திருமறம் (நக்கீரதேவநாயனார்)	1
9.	" (கல்லாட தேவநயானார்)	1
10.	சிவபெருமான் திருமும்மணிக்கோவை	10
11.	மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை	8
12.	கோயில் நான்மணிமாலை	10
13.	திருக்கழுமல மும்மணிக்கோவை	10
14.	திருவிடைமருதூர் மும்மணிக்கோவை	10
15.	திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது	10
16	ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை	10
17.	நம்பியாண்டார் நம்பி திருக்கலம்பகம்	1
	ஆக	91

ஆ) ஆசிரிய விருத்தம்

1.	8 சீர் விருத்தம் மூத்ததிருப்பதிகம் (காரைக்கால் அம்மையார்) 11	22
2.	6 சீர் " ,, 11	
3.	6 சீர் " கோயில் நான்மணிமாலை (பட்டினத்தார்)	10
4.	8 சீர் விருத்தம் - ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம் (நம்பியாண்டார்)	17
5.	7 சீர் விருத்தம் "	4
6.	12 சீர் " "	5
7.	10 சீர் " "	3
8.	6 சீர் " •	5
9.	14 சீர் " ,,	1
	திருநாவுக்கரசு தேவர் திருவேகாதசமாலை (நம்பியாண்டார்)	
10.	16 சீர் விருத்தம் (பா:1)	1
11.	8 சீர் விருத்தம் (பா 2, 3, 5, 6, 7, 9)	6
12.	7 சீர் விருத்தம் (பா:11, 4)	2
13.	12 சீர் விருத்தம் (பா:8. 10)	2
	ஆக	78

இ) கட்டளைக் கலித்துறை

1.	திருவிரட்டைமணிமாலை	10
2.	பொன்வண்ணத்தந்தாதி	100
	ஷெயில் இறுதிப்பாட்டு	1

3.	திருவாரூர் மும்மணிக்கோவை	10
4.	திருவலஞ்சுழி மும்மணிக்கோவை	5
5	மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை	10
6.	சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை	18
7.	சிவபெருமான் திருமும்மணிக்கோவை	10
8.	மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை	7
9.	கோயில் நான்மணிமாலை	10
10.	திருக்கழுமல மும்மணிக்கோவை	10
11.	திருவிடைமருதூர் மும்மணிக்கோவை	10
12.	திருஏகம்பமுடையார் திருவந்தாதி	100
13.	திருநாரையூர் விநாயகர் திருவிரட்டைமணிமாலை	10
14.	கோயில் திருப்பண்ணியர் விருத்தம்	70
15.	திருத்தொண்டர் திருவந்தாதியில் உள்ள முதற்பாட்டு	1
16.	திருத்தொண்டர் திருவந்தாதி	89
17.	ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி	100
18	,, திருச்சண்பை விருத்தம்	11
19.	,, திருமும்மணிக்கோவை	10
20.	,, திருக்கலம்பகம்	1
	ஆக	593

ஈ) வெண்பா

1.	திருவிரட்டைமணிமாலை	10
2.	அற்புதத் திருவந்தாதி	101
3.	க்ஷேத்திரத் திருவெண்பா	24
4.	திருவாரூர் மும்மணிக்கோவை	10
5.	திருக்கைலாய ஞானவுலா இறுதி வெண்பா	1
6.	கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி	100
7.	திருவீங்கோய்மலை எழுபது	70
8.	திருவலஞ்சுழி மும்மணிக்கோவை	5
9.	திருவெழுகூற்றிருக்கை இறுதி வெண்பா	1
10.	பெருந்தேவபாணி இறுதி வெண்பா	1
11.	காரெட்டு	8
12.	திருமுருகாற்றுப் படை இறுதி வெண்பா	10
13.	திருக்கண்ணப்ப தேவர் திருமறம் இறுதி வெண்பா	1
14.	மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை	10
15.	சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை	19
16.	சிவபெருமான் திருவந்தாதி	100

17.	சிவபெருமான் திருவந்தாதி பரண தேவநாயனார்	100
	ஷெயில் இறுதி வெண்பா	1
18.	சிவபெருமான் திருமும்மணிக்கோவை	10
19.	மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை	8
20.	கோயில் நான் மணிமாலை	10
21.	திருக்கழுமல மும்மணிக்கோவை	10
22.	திருவிடைமருதூர் மும்மணிக்கோவை	10
23.	திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை	10
24.	ஆளுடைபிள்ளையார் திருவந்தாதி இறுதி வெண்பா	1
25.	ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை	10
26.	ஷெ திருக்கலம்பகம்	1
	ஆக	642

உ) கலிவெண்பா :

1.	திருக்கைலாய ஞானஉலா	1
2.	போற்றிக்கலி வெண்பா	1
3,	ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை	1
4.	ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை	1
		4

ஊ) பல்வகைப்பா :

1.	ஒருபோகு கொச்சகம்	- கலம்பகம்	4
2.	வஞ்சித்துறை	"	2
3.	கட்டளைக் கலிப்பா	"	1
4.	கலித்தாழிசை	"	1
5.	கலிவிருத்தம்	"	3
6.	ஆசிரியத்துறை	"	1
		ஆக	12

பிறர் பாடிச் சேர்த்த பாடல்கள்

1. சங்க நக்கீரரின் திருமுருகாற்றுப் படை - இறுதியில் உள்ள வெண்பா 10
2 நக்கீர தேவநாயனாரின் திருவெழுகூற்றிருக்கையின் இறுதியில் உள்ள வெண்பா 1
3. ஷ ஷ பெருந்தேவபாணியின் ஷ ஷ 1
4. ஷ ஷ திருக்கண்ணப்ப தேவர் திருமறம் ஷ 1
5. சேரமான் பெருமாளின் பொன்வண்ணத்தந்தாதியின் கட்டளைக் கலித்துறை 1
6. சேரமான் பெருமாளின் திருக்கயிலாய ஞானவுலா இறுதியில் உள்ள வெண்பா 1
7. பரண தேவநாயனாரின் சிவபெருமான் திருவந்தாதி இறுதியில் உள்ள வெண்பா 1
8. நம்பியாண்டார் நம்பியின் ஆளுடையபிள்ளையார் திருவந்தாதியின் இறுதியில் உள்ள வெண்பா 1
9. ஷ ஷ யாரின் திருத்தொண்டர் திருவந்தாதியின் முன் உள்ள கட்டளைக் கலித்துறை 1

18

10. பட்டினத்தாரின் திருக்கழுமல மும்மணிக்கோவையில் பாடல் 13-30 வரை 18

ஆக மொத்தப் பாடல்கள் 36

பதினொராந்திருமுறைப் பாடல்களில் குறைப்பாடல்கள் - சிதைந்த பாடல்கள்

அ) குறைப்பாடல்கள் விவரம் (கழகப்பதிப்புப்படி)

1. சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை — கபில தேவர் — 40 பாடலுக்கு 3. பாடல்கள் குறைவு
2. மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை — அதிரவடிகள் — 30 பாடலுக்கு 7 பாடல்கள் குறைவு
3. திருக்கழுமல மும்மணிக்கோவை - பட்டினத்தார் 30 பாடலுக்கு 18 பாடல்கள் குறைவு
4. திருக்கோவையில் திருவெண்பா (க்ஷேத்திரத்திருவெண்பா) குறைப் பாடல்களின் எண் அறுதியிட இயலவில்லை. ஆயின் குறைவு உண்டு.

(திருக்கழுமல மும்மணிக்கோவை தவிர, பிற விவரம் காசிமடத்துப் பதிப்புப்படியும் ஒத்துள்ளன. ஷ பதிப்பில் திருக்கழுமல மும்மணிக்கோவையில் 18 பாடல்கள் கூடுதலாக உள. ஆயின் இந்நூலில் 12 பாடல்கள் தாம், நாவலர் பதிப்பிலும், கழகப்பதிப்பிலும் சமாஜப்பதிப்பிலும் உள).

ஆ) சிதைந்த பாடல்கள் (கழகப்பதிப்பில் உள்ளபடி)

1. சிவபெருமான் திருவந்தாதி-பரணதேவர் வெண்பா எண் 5. அடி 3 முழுதும்
2. " " " எண் 14 அடி 1 முழுதும்
3. " " " எண் 42 அடி 3 இல் 4ஆம் சீர்
4. ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி பா எண் 9 அடி 4 இல் 2 சீர் இல்லை

5. ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம் பா எண் 36 அடி 6 இல் 5ஆம் சீர் இல்லை

6. திருநாவுக்கரசுதேவர் திருவேகாதசமாலை பா எண் 6 அடி 6இல் 3, 4 ஆம் சீர் இல்லை

---

1. ஆறுமுக நாவலர் பதிப்புப்படி பாடல்களின் சிதைவு எண் வேறுபாடு (துந்துபி வருடம்)

1. திருவீங்கோய்மலை எழுபது-பாடல் 48 இல் - 3 அடிகள் இல்லை
   " " பாடல்கள் 49முதல் 61வரை 13 பாடல்கள் இல்லை.
   " " பாடல் 62ல் முதல் அடி இல்லை.

2. திருமுருகாற்றுப்படையில் இறுதிவெண்பாவில் முதல் 7பாடல் களே உண்டு. ''காக்கக்கடவிய'' முதல் ''நக்கீரர்தாம் உரைத்த'' வரையில் உள்ள மூன்று செய்யுள்கள் இல்லை.

3. சிவபெருமான் திருவந்தாதியில் (கபிலர்) பாடல் 12ல் முதல் அடியில் ஒரு சீர் இல்லை,
   ஷை யில் பாடல் 62ல் 2ஆம் அடியில்லை.

4. சிவபெருமான் திருவந்தாதியில் (பரணர்) பா. 5இல் 3அடி யில்லை.
   ஷை யில் பா. 14இல் முதல் அடியில்லை.

5. மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை பா, 24-30 வரை 7 பாடல்கள் இல்லை.

6. திருக்கழுமும்மணிக்கோவைவில் முதல் 12 பாடல்களே உள்ளன (கழகம் 12 பாடல்களே) 13 முதல் – 30 வரை இல்லை.

7. ஆளுடையபிள்ளையார் திருவந்தாதியில் பா 9இல் கடைசி அடியில் 2 சீர் இல்லை.
   ஷை யில் பா. 11 இல் கடைசி அடியில் 1 சீர் இல்லை.

2. எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் பதிப்பித்த சமாஜ பதிப்புப்படி குறைப் பாடல்கள் (1933).

1. திருவீங்கோய்மலை எழுபது. பா 48 இல் 3 அடி இல்லை
ஷை யில் பா 49 முதல் 61 வரை இல்லை.
ஷை யில் பா 62 இல் முதல் அடியில்லை

2. சிவபெருமான் திருவந்தாதி (பரணர்) பா. 5ல் 3ஆம் அடியில்லை.
ஷை யில் பா. 14 இல் முதல் அடியில்லை.

3. முத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை. பா. 24 முதல் 30 வரை இல்லை.

4. திருநாவுக்கரசுதேவர் திருவேகாதசமாலையில் பா. 6இல் அடி 6 இல் 2 சீர் இல்லை

5. ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி. பா. 9இல் 4இல் இரு சீர் இல்லை.

6. ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம் பா. 36இல் அடி 6 இல் 5 சீர் இல்லை.

திருமுருகாற்றுப்படை பாடவேறுபாடு

வரி. எண்.		முதற்பாடம்	இரண்டாம் பாடம்
16		நிரைத்த	நிறைத்த
38		வென்றடுவிறல்	வேன்றடுவிறல்
42		மரம்பயில் அடுக்கம்	மரன்பயி...... .....
55		வென்றடு	வேன்றடு
63		புலபிரிந்துறையுஞ் தின்னிசை	புலபிரிந்துறையும் தின்னசை√
14		மாயிரு	மாயிருள்
12	(5 ஆவது)	யிலையுட னறும்பூ	யிலையுடை நறும்பூ
26	(5 ஆவது)	இகல்வேல் ஏந்தி	ளியல வேந்தி √
2	(6 ஆவது)	வயிற்புட நிறீஇ	வயிற்படநிறீஇ
9	(6 ஆவது)	பொதியினும்	பொதியிலும்
10	(6 ஆவது)	மாண்டலைக்கொடி	ஆண்டலைக்கொடி √
16	,,	விரை இத்தூ	விரை இய

34	,,	முந்துநீ கண்டுழி	முந்து நீ கண்டுழி
		முகனமர்ந்தேத்தி	முகமலர்ந்தேத்த
53	,,	நசையினர்க்	நசையுநர்
59	,,	குரிசிலுமென	குரிசிலென
62	,,	வந்தனனின்னொடு	வந்தனென் பாடம் (17)

திரு அ. மஹாதேவ செட்டியார் அவர்களால் உரை எழுதி, கோ. வடிவேலுச்செட்டியார் பார்வையிட்டது. √ இக்குறியிட்ட பாடங்கள் நோக்கத்தக்கன. பிறவற்றில் பொருள் வேறுபாடில்லை.

காரைக்காலம்மையார் நூல்களில் பாட வேறுபாடுகள்

அ) ஸ்ரீ காசிமடத்துப்பதிப்பு - திரு. டி. எம். குமரகுருபரன் பிள்ளை பதித்திருப்பது: 1957 இல் கண்டாறு:

1. திருவிரட்டை மணிமாலையில் உள்ள வேறுபாடு:

செய்யுள் எண்.	அடி	முதற்பாடம்	இரண்டாம் பாடம்
5	3	களிவாய்	கனிவார்
8	3	மாய்ப்புக்கு	மாப்புக்கு

2. அற்புதத்-திருவந்தாதியில்

செய்யுள் எண்.	அடி	முதற்பாடம்	இரண்டாம் பாடம்
26	4	தோன்றும்	வைத்த
29	4	கண்ட	கண்டார்
34	1	அறியாமே	அறியாவே
34	1	உள்கி	உள்ளி
75	1	ஊடாட	ஊடால
84	4	முக்கண்ணாங்	முக்கணா
89	2	சிந்தையினில்	சின்தனையிற்
96	4	மறைத்து	மதித்து

ஆ) திரு. வி. க. காட்டும் பாடவேறுபாடு

1. மூத்ததிருப்-பதிகம்.	4	5	குணாலமிட்டு	குளாளமிட்டு
2 இரட்டை-மணிமாலை	20	1	வாழா துலந்தக்கால்	வாழ்வார் உலந்தக்கால்
3. அற்புதத் திருவந்தாதி	11	2	உள்ளடைந் தேன்	உள்ளடைத் தேன்

இ) திரு சி கே. சுப்பிரமணிய முதலியார் காட்டும் பாட வேறுபாடு :

1. அற்புதத் திருவந்தாதி	16	1	இறைவன்றாள்	இறைவனருள்
	34	1	அறியாமே	அறியாவே
	43	2	யென்றிரந்து	என்றறிந்து
	54	4	பாகத்தான்	பாதத்தான்
	67	2	தூங்குதலால்	தாங்குதலால்
	71	4	முக்கண்ணாய்கண்	முக்கண்ணாய் காண்

அகத்துறைகள்

நக்கீரதேவ நாயனாரின் திருவலஞ்சுழி மும்மணிக் கோவையில் அகத்துறைகள்

1. பாங்கனைத் தலைவன் வியத்தல் பா. 4
2. தோழி கூற்று பா. 5, 14
3. தலைவன் கார்வரவு கண்டு பாங்கனொடு கூறல் பா. 6
4. இரவுக்குறிவரும் தலைவனைத் தோழி வாரல் என விலக்கல் பா. 7
5. தலைவி கூற்று 8, 11
6 தலைவன், தலைவியின் இயல்பினை இவ்விடத்து இவ் வண்ணமிருந்தது எனல் பா. 9
7. தலைவன் கூற்று 10
8. உடன்போக்கில் கண்டோர் செவிலிக்கு உரைத்தல் பா. 12
9. தலைவி, பாணனை நோக்கி வெகுண்டு கூறியது 13

சேரமான் பெருமாளின் பொன்வண்ணத்தந்தாதியில் அகத் துறைகள்

1. தலைவி கூற்று. பா.	1, 2, 7. 8, 9. 10, 20, 22. 33, 36, 44, 46. 53, 61, 62, 63, 78, 83, 84, 85, 91	
	ஆக	21
2. செவிலி கூற்று. பா	34, 38 48, 49, 51, 54, 55, 56, 58, 69, 73, 76, 79, 80, 81, 82, 87, 97.	
	ஆக	18
3. தோழி கூற்று. பா.	3, 16, 27, 31, 32, 37 45, 59.	
	ஆக	8
	ஆக மொத்தம்	47

சேரமான் பெருமாள் நாயனாரின் திருவாரூர் மும்மணிக் கோவையில் அகத்துறைகள்

1 தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலையைத் தோழி கூறியது பா 1

2 கார்ப்பருவம் கண்டு ஆற்றாளாய், தலைவி நிலையைத் தோழி கூறியது பா. 2, 3

3 வேந்தற்கு உற்றுழி உதவப் பிரிந்த தலைமகனின் பிரிவைக் கருதி, தலைவி பேசுதல் பா. 4

4 கார்ப்பருவம் கண்டு தலைவி ஆற்றாளாய்க் கூறியது பா. 5

5 கார்ப்பருவம் கண்டு திரும்பிய தலைமகனின் தேரைப் பார்த்து உவக்கும் தலைவி நிலையைத் தோழி கூறல் பா. 6

6 வரும் வழி ஏதத்திற்கு வருந்தினாள் தலைவி, எனத் தோழி கூறியது பா 7

7 களிறு வந்ததா எனத் தலைவன் வினாவியது பா. 8

8 (பா. 7, 8இல் காசி மடத்துப் பதிப்பில் துறைகள் பிழையாக உள்ளன. இடம் மாறிக்கிடக்கின்றன)

8 தோழி இரவு வருக என வேண்டியது பா. 9

9 தலைவனுடன் தலைவிக்கு நிகழ்ந்த மெய்யுறு புணர்ச்சியைத் தோழி குறிப்பால் உணரல் பா. 10

10 தோழி, தலைவியின் குறிப்பறிய முயலுதல் பா. 11, 12

11 தலைமகள் தலைமகனோடு உடன் சென்றாளாகச் செவிலி கவன்று மொழிதல் பா. 13

12 உடன்போன தலைவியைச் செவிலி வாழ்த்தல் பா. 14

13 தலைவனோடு உடன்போன தலைவியின் மென்மையை எண்ணிச் செவிலி இரங்கல் பா. 15. 18

14 உடன்போன தலைவியை எண்ணிச் செவிலி குரவொடும் புலம்பல் பா. 16

15 சுரத்திடை கண்டோர் கூறியது பா. 17

16 பரத்தையிற் பிரிந்த தலைவனுக்காகத் தூது வந்த பாணனைத் தோழி வெகுண்டுரைத்தது பா. 19

17 பரத்தையிற் பிரிந்த தலைவனுக்குத் தூதாகிய பாணனைக் கடிந்து தலைவி கூறியது பா. 20

18 புறத்தொழுக்கம் ஒழுகிய தலைவன் தலைவியைப் பணிந்த போது தலைவி கூறியது பா. 21

19 தலைவன் பரத்தையர்பால் பிரிந்தானாகத் தலைவி, நெஞ்சுக்குக் கூறியது பா. 22

20 தலைவனைப் பிரிந்த தலைவி கூற்று 23

21 பரத்தையர் பிரிந்த தலைவனை வெகுண்டு, தோழி தலைவியிடம் பேசல் 24

22 களவில் தலைவன் வந்து நிற்பதைத் தோழி தலைவிக்குக் கூறியது 25, 27

23 தலைவி புள்ளொலிக்கு இரங்கல் பா. 26

24 தலைவியின் மடமையையும் காதலையும், தலைவன் கூறி உவத்தல் பா. 28

25 தலைவன் கூற்று 29

26 தலைவி கடலோடு புலம்பல் பா. 30

கூற்று வகைகள்

(அ)	தோழி கூற்று	பா.	1, 2 3. 6, 7 9, 10 11, 12 19, 24, 25, 27	ஆக	13
(ஆ)	செவிலி கூற்று	பா.	13, 14, 15, 16, 18	ஆக	5
(இ)	தலைவி கூற்று	பா.	45, 20, 21, 22, 23, 26, 30	ஆக	8
(ஈ)	தலைவன் கூற்று	பா.	8 28, 29	ஆக	3
(உ)	கண்டோர்கூற்று	பா.	17	ஆக	1

இந்நூலில் பா. 1, 2, 3, 15 ஆகிய நான்கு பாடல்கட்குக் குறிப்புரைகாரர்கள் துறை காட்டவில்லை. இங்குக் குறிப்பிடப் பட்டுள்ளது.

பட்டினத்தார் ஆண்டுள்ள அகத்துறைகள்

(1) திருவேகம்பமுடையார் திருவந்தாதி

1 தலைவனது உருவெளி கண்டு வருந்தத் தலைவிக்குத் தோழி கூறியது பா. 9

2 தலைவன் வேறுபாடு கண்டுவினாய பாங்கற்கு ஏது கூறியது (அல்லது தலைவியைக் காமுற்ற தலைவன், தலைவி நலம் புகழ்ந்ததுமாம்) பா. 10

3 தோழி, 'ஒருவர் யானை வினாவி வந்தார்' எனக் கூறித் தலைவியின் குறிப்புணர்ந்தது பா. 11

4 தோழி, தலைவியின் மேனி வேறுபாட்டால் அணங் கெனக் கூறியது பா. 12

5 தலைவன், மான்வினவினனாக, எம்தொழில் தினைப்புனங்காத்தல் எனத் தோழி கூறியது. (அஃதாவது எதிர்மொழி கொடுத்தல்) பா. 13

4) திருக்கழுமல மும்மணிக்கோவை :

1 தோழி அறத்தொடு நிற்றல் பா. 9

2 தலைவனைப் பிரிந்த தலைவி கார்காலம் முதலியன கண்டு வருந்திக் கூறியது பா. 15

3 தோழி வெறிவிலக்கிக் கூறியது (கழகப்புத்தகத்தில் இத்துறை பா : 17ல் இருப்பது பிழை அந்தப்பா அகத்துறையில்லை) பா. 18

4 தலைவியின் ஆற்றாமை கண்ட தோழி, அன்னத்தைத் தூதுவிடுத்துக் கூறியது (புதிய கூறு) பா. 20

5 அந்தி கண்டு ஆற்றாத் தலைவியது நிலைமை நோக்கித் தோழி கூறியது பா. 23

6 தோழி, தலைவனிடம் பிரியா வரம் வேண்டல் பா. 26

7 தலைவனும் தலைவியும் உரையாடியதைச் சிறைப் புறமாக இருந்த தோழி கேட்டு அதனைத் தலைவியிடம் கூறி நகையாடியது (புதிய கூறு) பா. 29

8 செவிலி கூற்று பா. 11

9 தலைவி கூற்று பா. 17

10 தோழி அல்லது செவிலி கூற்று பா. 24

திருக்கோவையார் செய்யுட் கருத்துக்களை - துறைகளைப் பட்டினத்தார் ஆண்டமை :

திருவேகம்பமுடையார் திருவந்தாதி செய்யுள்	துறை யொற்றுமை	திருக்கோவையார் செய்யுள்
11	”	52
14	”	53
16	”	61
17	”	151
18	”	148
19	”	297
20	”	161
25	”	146
54	”	104
66	”	228; 132
67	”	202
68	”	230
69	”	216
70	”	200
71	”	237

72	„	232
73	„	244
76	„	221
91	„	136
95	„	157
97	„	295

இங்ஙனம் 22 பாடல்கள் திருக்கோவையார் கருத்திற்கிசைய வரும்.

நம்பியாண்டார் கூறியுள்ள துறைகள் :

கோயில் திருப்பண்ணியர் விருத்தம் :

1 தன் காதலுக்குக் காரணமான தலைவன் உருவைத் தலைவி தோழியிடம் கூறி அறத்தொடு நிற்றல்-நெஞ்சுக்குக் கூறியது எனினும் ஆம். பா. 6
2 தோழி தலைவியின் துயர்தீர்க்கும் நெறி கூறி அறத்தொடு நிற்றல் பா. 11
3 தலைவி கூற்று பா. 11
4 தலைவி தலைவனைக் காணாது மயங்கிப் பேசியது 13
5 தலைவி துயர்கூறித் தோழி வருந்தல் 51

ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி :

1 தலைவி கூற்று பா. 3, 9 10
2 தோழி தலைவனுக்கு நொதுமலர் வரைவுணர்த்தல் 10
3 பருவங்கண்டு இரங்குதல் 12
4 தலைவன் பாங்கனுக்குத் தலைவியின் இயல், இடங்கூறல் 19
5 தோழி தலைவிக்குக் கூறல் 23
6 செவிலி கூற்று 37
7 தலைவியை இற்செறிப்பர் எனத் தோழி தலைவனிடம் கூறல் 29
8 தோழி, தலைவியின் உரு எழுதரிதென ஏந்தலை விலக்கல் 35
9 தோழி கூற்று 45; 46
10 தலைவன் ஊர் அணித்து எனல் 47
11 இடைச்சுரத்துப்படை கண்டு தலைவன் கூறல் 51
12 தோழி தலைவனை இரவு வருதலை விலக்கல் 52
13 பிறைகண்டு கலங்கிய தலைவி, தோழியை நோக்கிக் கூறல் 53

14 தோழி தலைவனை நகுதல் 56
15 தோழி அறத்தொடு நிற்றல் 57
16 தலைவன் தோழியிடம் பன்றி வினாதல் 55
17 முறுவற் குறிப்புணர்தல் 62
18 பருவங்கண்டு தலைவர் வருவரெனத் தோழி கூறியது 63
19 பாங்கன் தலைவனை வியத்தல் 64
20 தலைவன், தலைவியைப் புகழ்தல் 65
21 தோழி தலைவி நிலைகண்டு இரங்கல் 67
22 தோழி அறத்தொடு நிற்றல் 69
23 களிறு தரு புணர்ச்சி 70
24 தலைவன் தலைமகளை ஆயத்துய்த்தல் 78
25 தலைவன் தலைவியின் கண் நயந்துரைத்தல் 81
26 பொருள் வயிற்பிரிய எண்ணிய நெஞ்சிற்குத் தலைவன் கூறியது 84
27 செவிலி, அருநெறி கருதி வருந்திக் கூறல் 86
28 தோழி, கூடல் இழைத்தல் பற்றிக் கூறல் 87
29 தலைவன் கூற்று 92
30 செவிலிக்குக் கண்டோர் கூறியது 93
31 தலைவி கூற்று 96

ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக் கோவை :

1 களிறுதரு புணர்ச்சி கூறித் தோழி அறத் தொடுநிற்றல் 7
2 தோழி, தலைவனை இரவுக்குறி வருதலை விலக்கியது 13
3 இற்செறிக்கப்பட்ட தலைவி குறியிடம் வாரா தொழியத் தலைவன் வறிய இடங்கண்டு வாடியது 16
4 தோழி தலைவனை நகுதல் 17
5 கார்காலத்தில் தலைவன் பிழையாது வந்தனன் எனத் தோழி செப்பியது 16
6 தலைவி, புனத்திடம் பேசியது 20
7 இற்செறிக்கப்பட்ட தலைவி நிலையை உணர்ந்து வறிய புனம் கண்டு இரங்கல் 21
8 செவிலி, புறவொடு கூறல் 22
9 இடைச் சுரத்துக் கண்டோர் கூறுதல் 29

ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம் :

1 குறமாதிடம் மொழி கூறுமாறு தலைவன் வேண்டல் பா. 4

2 தோழி, தலைவனை இரவுக்குறி விலக்கல் 6
3 மகட்போக்கிய செவிலி இரங்கல் 7
4 தோழி, களிறு தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல் 8
5 தலைவி, பொழுது கண்டு இரங்குதல் 12
6 தலைவி கடலோடு மொழிதல் 12
7 தோழி, தலைவியிடம் காரும் வந்தது தேரும் வந்தது எனத் தெருட்டல் 14
8 தலைவன், தலைவியைப் பாங்கனிடம் புகழல் 15
9 அலர்தூற்றும் பெண்டிரைத் தோழி முனிந்துரைத்தல் 16
10 தலைவனின தார் வேண்டுந் தலைவி தன்னை மெலிவிக்கும் பொருள்களைக் கூறல் 19
11 தோழி அறத்தொடு நிற்றல் 22
12 இடைச்சுரத்துக் கண்டோர் விலக்கல் 25
13 ஏறுதழுவினோர்க்கு இவள் உரியள் என முரசு முழங்குதல் 27
14 பருவங்கண்டு தோழி கூறல் 28
15 பொருள்வயிற் பிரியக் கருதிய நெஞ்சிற்குத் தலைவன் கூறியது 29
16 தலைவி, பாணனை இகழ்தல் 31
17 தலைவன், தலைவியைப் புகழ்தல் (மதங்கி) 32 33
18 பாணனை நோக்கித் தலைவி கூறியது 43

அச்சு நூல்களில் குறிக்க – விடுத்த அகத்துறைகள்
(கட்டுரையாளர் கண்டுரைத்தவை)

''கோயில் பண்ணியர் விருத்தம்''

1 தலைவன் உருவைப் புகழ்ந்து தோழியிடம் அறத்தொடு நிற்றல் பா. 6
2 தோழி, தலைவியின் துயர்தீர்க்கும் நெறி கூறி அறத்தொடு நிற்றல் பா. 11
3 தலைவி கூற்று பா. 12
4 தலைவி, தலைவனைக் காணாது மயங்கிப் பேசல் பா. 13
5 தலைவன் பேர்கேட்ட அளவில் தலைவி, சங்குவளை தோற்றாள் எனத் தோழி கூறல், பா:21; 43
6 தலைவியின் துயர்கூறித் தோழி வருந்தல், பா. 51

ஆக பாடல்கள் (6)

ஆளுடைப்பிள்ளையார் திருவந்தாதி

1 தலைவி கூற்று பா. 4, 7, 11

2 குருகிடம் தலைவி பேசல், காம மிக்க கழிபடர் கிளவி, 8
3 கண்டோர் செவிலிக்கு உரைத்தது பா. 14
4 சுரத்திடைச் செவ்லி இரங்கல், 25
5 பருவங்கண்டு செவிலி இரங்கல், 27
6 செவிலி கூற்று, 28
7 தலைவன் தலைவியின் கண்களைப் புகழ்தல், 30
8 தலைவி, துயர்ப்படுத்தும் பொருட்களைக் காட்டி நெஞ்சுக்குக் கூறி வருந்தும் காம மிக்க கழிபடர் கிளவி, 33
9 நற்றாய், சுரம் தணியுமாறு வேண்டல், 38
10 தலைவி ஆற்றாளாய்ப பேசல், 44
11 கார்ப்பருவம் கண்டு தலைவி இரங்கல், 59
12 தோழி, கூடல் இழைத்தல் பற்றிக் கூறல், 89

ஆக பாடல்கள், (12)

ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை

1 தோழி அல்லது செவிலி, தலைவியின் ஆற்றாமை கூறியது, 10
2 சுரத்திடைப்போன தலைவிக்காகச் செவிலி வருந்துதல், 15
3 தலைவன் சிறைப்புறத்தானாகத் தோழி இரவுக்குறி விலக்கியது, 19
4 தலைவி, குருகை விளித்துக் கூறியது, 25
5 தலைவன், தலைவியின் எழில்நலம் பாராட்டல், 27
6 தலைவியின் வடிவு, எழுதரிதெனத் தலைவன் தன் நெஞ்சுக்குக் கூறியது, 28
7 தோழி, நிலவை விளித்துத் தலைவியை வாட்டியமை கூறல். 30

ஆக பாடல்கள் (7)

ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்

1 செவிலி அல்லது தோழி கூற்று, 20
2 தலைவி, கிளியிடம் தலைவன பேர்கூற வேண்டுதல், 26
3 தலைவி எழில் நலத்தைத் தலைவன் பாராட்டிப் பேசுதல், 30
4 வலைச்சியாரைப் புகழல், 34
5 தலைவன், தலைவியை அணங்கல்லள் மகளே எனத் தெளிதல், 42
6 குருகிடம் தலைவி, தலைவன் பிரிவைக் கூறி வருந்துதல், 45
7 முலலைக் கொடியை நோக்கித் தலைவி பேசல், 47
8 தலைவனின் குறிப்பறிந்தது அவன் தழை ஏற்பிக்க வருதலைத் தலைவி தோழியிடம் கூறல், 48

ஆகத்துறைகள் (8)

மொத்தம் 6+12+7+8=33

(அ) தலைவன், மடலேறுவேன் என மொழிதல்-கைக் கிளைக்காதல், பா. 13 (தலைவன் வரவைத் தோழிக்கு உரைத்தல்-என்று மடத்துப் பதிப்பிலும், கழகப் பதிப்பிலும் அச்சில் இருப்பது பிழை)

(ஆ) தோழி தலைவியிடம் 'கார்' வந்தது என்று கூறித் தேரும் வந்தது எனத் தெருட்டல், பா. 14

கபில தேவநாயனார்

கபில தேவநாயனார் 157 பாடல்களைப் பாடினார். அவற்றில் 65 பாடல்கள் அகத்துறையுடையன. சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி ஆகிய இரு நூல்களில் அகப்பாடல்கள் உண்டு. கூற்று வகைகளைக் கீழே காண்க.

1 தலைவி கூற்று: சிவபெருமான் திரு. விர. ம. மாலை, பா. 25, 29

2 செவிலி கூற்று: சிவபெருமான் திரு. விர. ம. மாலை, பா. 33

சிவபெருமான் திருவந்தாதியில் வரும் கூற்றுக்கள்

1	தலைவி கூற்று	பா.	5, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 19, 20, 23, 26, 28, 30, 31, 33, 34, 35, 39, 47, 48, 50, 53, 54, 58, 60, 61, 63, 66, 67, 68, 70, 71, 72, 73, 74, 75, 76, 77, 78, 80, 81, 87, 88, 89, 93, 94, 95, 96
2	தலைவன் கூற்று	பா.	16
3	செவிலி கூற்று	பா.	21, 22, 33, 40, 46
4	தோழி கூற்று	பா.	21, 25, 51, 52
5	கண்டவர் கூற்று	பா.	64, 97

இளம் பெருமானடிகள்

சிவபெருமான் திருமும்மணிக்கோவையில் அகப்பாடல்கள் பாடுகிறார். 30 பாடல்களில் 5 பாடல்கள் அகம்.

1	தோழி கூற்று	பா.	சிவ. திரு. மு. கோவை, பா. 8
2	தலைவி கூற்று	பா.	ஷை ஷை பா. 23, 26, 27, 30

பரணர்

தாம் செய்த சிவபெருமான் திருவந்தாதியில் அகப்பாடல்களைப் பாடியுள்ளார் மொததப் பாடல்கள் 14

1	தோழி கூற்று	பா	6, 16, 30, 31
2	தலைவன் கூற்று	பா.	7, 15, 19. 45, 50, 84, 85
3	கண்டோர் கூற்று	பா.	36
4	செவிலி கூற்று	பா.	43, 46

அணிகள்

1. காரைக்காலம்மையார் நூல்களில் அணிகள் :

அ) வஞ்சப்புகழ்ச்சி அணி அற்பு. 17, 19
ஆ) மயக்கவணி ,, 48,
இ) உயர்வு நவிற்சியணி ,, 55. 100
ஈ) சொற்பின்வருநிலை அணி திரு. விர. ம மாலை 10, 14
உ) சொற்பொருள் பின்வருநிலையணி அற்பு 11, 12, 45, 62, 66
ஊ) முற்றுமோனை ,, 2, 17
எ) சிலேடை ,, 75

2. நக்கீர தேவநாயனார் நூல்களில் அணிகள் :

அ) முரண்டொடை திருவீங்கோய் 20
ஆ) அந்தாதித்தொடை, அந்தாதியில் பெயராக ஒரு அடியில் வந்தது அடுத்த அடியில் வினையாலனையும் பெயராகவோ, எச்சமாகவோ வருதல் கயிலைபாதி. பா. 47. 44, 52, 53, (வினை எச்சம்) 46-47 பாவாக வருதல்.
இ) முற்றுமோனை. கயிலைபாதி 96 97
ஈ) சொற்பொருட் பின்வரு நிலையணி. ஷை 46, 52
உ) எண்களை அடுக்கிப்பாடல். திருவலஞ்சுழி. 9.

3. சேரமான் பெருமாள் நூல்களில் அணிகள் :

அ) உருவகம் : ஞான உலா. 60-62 87, 88, 101-103. திருவாரூர். 4, பொன்வண்ணம். 41
ஆ) சொற்பின்வருநிலை அணி. 98-99, 109-110, பொன்வண்ணம் 1, 39. 77, 92

இ) நிரல்நிரையணி. 113-117 பொன்வண்ணம். 36, 95

ஈ) சிலேடையணி. ஞான உலா 133-135, 60-62.
முரண் அணி. ஷி 9, 29.

4. பட்டினத்தார் நூல்களில் அணிகள் :

அ) எதிர் நிரல்நிறை அணி திருவிடை 19-51
ஆ) முரண் அணி: திருக்கழு 7 : 6, திருவிடை 22, 1-2
இ) அடுக்கு . . கோயில் நா. 12 : 12
ஈ) எண்ணலங்காரம். திருவெற்றியூர். 1 : 24-27
உ) அடியெதுகை. கோயில். 12, 21-25. 35-40.
பாடல் 36 முழுதும்.
ஊ) ஒரு சொல்லே பல பொருளில் வருதல்.
திருவேகம்பம். 18.

5. நம்பியாண்டார் நம்பியின் நூல்களில் அணிகள் :

அ) அடுக்கு. கோயில். திரு ப. வி. 13, கலம்பகம். 37
ஆ) முரண். திருநாரை 2, திரு. திரு. 85,
கோயில். திரு. ப. வி. 38
இ) நிரல்நிறையணி. கோயில். திரு. ப. வி. 56, 50
ஈ) சிலேடை. திருநாரை, 1
உ) அந்தாதி. ,, 6
ஊ) எண்ணலங்காரம் ,, 12. ஆ. பி. மு. கோவை. 1
எ) உருவகம். திரு. திரு. அ. 61, ஏகா. 4
ஏ) அடியெதுகை. ஆ. பி. கோவை 7. ஏகாத. 6
ஐ) வேற்றுமையணி. ஆ. பி. திரு. அ. 16
ஒ) ஏகதேச உருவகம். கோயில். திரு. ப. வி. 15.

இலக்கணக் குறிப்புக்களும் சொல்லாட்சிகளும்

நக்கீர தேவநாயனாரும் நம்பியாண்டார் நம்பியும் சில வழக்குச் சொற்களை ஆள்கிறார்கள்.

நக்கீர தேவநாயனார் கீழ்வரும் பேச்சுமொழிகளைக் கையாள்கிறார்.

மோந்து (கயிலை. 79)
கிறிப்பட்டார் (ஷி 12)
கீளாடை (ஷி 12)
சாத்தி (அணிந்து ஷி 36)
வள்ளவட்டம் (ஈங்கோய். 47)
சருவாரி (திருவலம். 7)

இவை மக்கள் பேச்சு வழக்கில் இருந்து, இவர் இலக்கியத்தில் ஏறியவை.

இவர் சில ஒலிக்குறிப்புச் சொற்களையும் பயன்படுத்துகிறார். சலன்சலனென்றங் கழல்கள் (கயிலை. 61) நெடுநெடென (திருவீங்கோய், 7) நெறநெற இறுதர (கோபப்பிர 24).

கீழ்வரும் பேச்சு மொழிகளை நம்பியாண்டார் நம்பி தழுவியுள்ளார்

நெல்லல்கள் (திரு. நா. 11)
கையாங்கிலோ (கோயில். திரு. ப. வி. 12)
துலுக்குகின்றீர் (ஆ. பி, திரு. உலா. 66)
திலுப்பி (ஆ. பி. திரு. உலா. 105)
சிறுக்கன் (ஆ. பி. திரு. அ. 78)
கிறியால் (கலம்பகம். 7)

கீழ்வரும் இலக்கணக் குறிப்புக்களும் கருத்தில் நிறுத்த வேண்டுவன.

நக்கீர தேவநாயனார் நூல்களில் பின்வரும் இலக்கண அமைப்புக்கள் காணப்படுகின்றன.

அ) இகர விகுதி வினைமுதலைக் காட்டுதல்
திங்கள் முடிசூடி (கயிலை. 50) பிறைசூடி (கயிலை. 59)

ஆ) "வானீற்று வினையெச்சம் வருதல்
என்செய்வான் (கயிலை.51) வாழ்ந்திடுவான் (கயிலை, 91

இ) தன்மையொருமை வினை முற்றில் "அன்" விகுதி வருதல்
கொண்டிருப்பன் (கயிலை. 55) இருப்பன் யான்
(கயிலை. 65)

ஈ) "ஐ" விகுதி முன்னிலை யொருமைக் குறிப்பு வினை யாலணையும் பெயராகக் காணப்படும்.

சூலபாணியை. நீலகண்டனை மயானத்தாடியை (பெருந்தேவபாணி)

உ) உயர்திணையில் "கள்" விகுதி.
கொம்பன்னீர்கள் (திருவலம்சுழி. 12)
குறத்தியர்கள் (திருவீங்கோய். 40)

ஊ) வினையில் பன்மைமேல் பன்மை விகுதி வருதல்
வருவனகள் கண்டு (திருவீங்கோய். 62)

காரைககாலம்மையார் நூல்களிலும் சில முக்கிய இலக்கணக் குறிப்புகள் உண்டு.

அ) உரைக்கப் படுவதும் ஒன்றுண்டு (திருவிர 7) செயப்பாட்டு வினையை ஆளல்.

ஆ) இறைக்கின்ற (திருவிர.7) "கின்ற" நிகழ்கால இடைநிலை வருதல். சுமக்கின்ற (ஷை 19) ஷை ஷை

இ) மனக்கினிய (அற்பு. 10) அத்துச்சாரியை இன்றி வருதல்

ஈ) நினைந்திருந்தேன் (அற்பு. 11) "இரு"—துணைவினை வருதல்

உ) தவிர்ப்பான் வேண்டி (அற்பு. 68) 'பான்" ஈற்று வினை எச்சம்.

ஊ) அற்றே (அற்பு. 87) "அன்றே" என்ற பொருளில் வருதல். வலித்தல்.

பட்டினத்தார் பாடல்களில் சில இலக்கணக் குறிப்புக்கள் வருப.

அ) வேண்டுபு (கோயில். 12 கலங்குபு (ஷை 16) 'செய்பு' வினை எச்ச வாய்பாடு (திருக்கழு. 10)

ஆ) காண்தொறும். (திருக்கழு. 10) இடைச்சொல்லை ஆள்தல்

இ) ரிஷி என்ற சொல்லை "இருடி" எனத் தமிழ்ப்படுத்தி ஆளல் (திருவிடை. 13:24)

ஈ) வழுவழுத்து (திருவிடை. 13:5) ஒலிக்குறிப்புச்சொல் வருதல்.

உ) பதைபதை (திருடை. 22) அடுக்கு வருதல்.

நம்பியாண்டார் நம்பியின் நூல்களில் பின்வரும் இலக்கணக் குறிப்புக்கள் உண்டு.

அ) விரும்பும் அடியார் > விரும்படியார். தொகுத்தல் விகாரம் (திரு. நா. 2)

அ) தவத்தை உடையவன் > தவணை (கோயில் திரு. ப வி. 66)

இ) உனதுஉள்ளத்து > நுனதுள்ளத்து (கலம்பகம். 37.14)

ஈ) திருவடிகளே > திருவடிக்களே - தோன்றல் ஏகாதசம். 1

உ) வைத்த தமிழ் > வைத்தன தமிழ் (ஷை-11-2) (தோன்றல்)

இங்ஙனம் சில அரிய இலக்கணக் குறிப்புக்களை இத்தொகை நூலிற் காணலாம்.

பதினோராந்திருமுறையில் வரும் சிவனடியார்கள்

	அடியார் பெயர்	ஆசிரியர்	பாடல்
1.	கண்ணப்பர்	நக்கீரதேவநாயனார்	திருக்கண்ணப்ப தேவர் திருமறம்
2.	சண்டேசுரர்	,,	கயிலை பா 31
3.	மார்க்கண்டேயர்	,,	,, பா. 33
4.	சாக்கியநாயனார்	,,	கோபபிர. 17-18
5.	பிருங்கி முனிவர்	,,	,, 28
6.	உபமன்யு	,,	கயிலை. 81
7.	வசிட்டன், கபிலன், அகத்தியன், தும்புரு நாரதர்	பட்டினத்தார்	திருவிடை 28:28-29
	சாக்கியர்	,,	,, 25:31-34
	சண்டேசுரர்	,,	திருவேகம்ப. 48
8.	மாவலி சக்ரவர்த்தி	,,	கோயில் 40
9.	சிறுத்தொண்டர்	,,	,, 40
10.	தில்லைமூவாயிரவர்	,,	திருவேகம்ப 47
11.	திருஞானசம்பந்தர்	நம்பியாண்டார்நம்பி	திருக்கழு மல மும. கோவை 1
12.	திருநாவுக்கரசர்	,,	திருஏகாதசமாலை
13.	சுந்தரமூர்த்திநாயனார்	,,	திரு. திரு. அ. 8.
14.	சேரமான் பெருமாள் நாயனார்	,,	கோயில் திரு. ப. வி. 31
15.	சேந்தனார்	,,	,, ப. திரு. வி. 26
16.	வீரணக்குடிப்பெண்	,,	,, ,, 29
17.	திருவாரூர் சிவபாத்தியன் (மாணிக்கவாசகர்)	,,	,, ,, 58
18.	வரகுணன்	,,	,, ,, 62
19.	கண்ணப்பர் சாக்கிய நாயனார்	,,	,, ,, 20
20.	கலய நாயனார்	,,	,, ,, 32
21.	அதிபத்தர்	,,	,, ,, 40
22.	கலிக்காமர்	,,	,, ,, 40
23.	திருநாளைப்போவார்	,,	,, ,, 54
24.	நீலநக்கர்	,,	ஆ. பி. திரு. அ. 37
25.	முருகநாயனார்	,,	,, ,, 71
	சிறுத்தொண்டர்	,,	,, ,, 72

பதிகள்

ஐயடிகள் காடவர்கோன் க்ஷேத்திரத்திருவெண்பாவில் வரும் பதிகள்:

கபிலதேவநாயனாரின் சிவபெருமான் திருவிரட்டை மணிமாலையில் வரும் பதிகள்:

பரணதேவநாயனாரின் சிவபெருமான் அந்தாதியில் வரும் பதிகள் :

பட்டினத்தாரின் திருவேகம்பமுடையார் திருவந்தாதியில் வரும் பதிகள்:

பட்டினத்தார் கூறும் பதிகள்:

நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியில் வரும் பதிகள்:

சண்பை (ஆ பி.திரு. உலா)	57	கொச்சை	58
காழி	57	பூந்தராய்	57
சிரபுரம்	57	வெங்குருகு	58

நம்பியாண்டார் நம்பியின் ஆளுடையபிள்ளையார் திருத்தொகையில் வரும் பதிகள்

காழி	அடி 9	திருவோத்தூர்	28
வீழிமிழலை	" 11	கொள்ளம்பூதூர்	30
திருவாவடுதுறை	" 18	கொச்சை (நகர்)	41
மருகல்	" 21	பெருமணநல்லூர்	64
தென்கோலக்கா	" 22	ஆமூர் (திருவேகாதசமாலை)	4
மறைக்காடு	" 26		

தேவாரத்தில் இல்லாத 11ஆம் திருமுறையில் வரும் பதிகள்

எண்.		ஆசிரியர்	நூல்	பா. எண்
1.	குழித்தண்டலை	ஐயடிகள்	க்ஷேத்திரத்திரு வெண்பா	9
2.	வளைகுளம்	”	”	14
3.	திருவேங்கடம்	கபிலதேவர்	சிவ இர. ம. மாலை	15
4.	பூம்புகார்	கபிலதேவர்	சிவ. அந்தாதி	44
5.	முக்கூடல்	கபிலதேவர்	சிவ. அந்தாதி	50
	,,	பட்டினத்தார்	திருவே. க. திரு. அந்தாதி	65
6.	ஆலத்துறை	பரணதேவர்	சிவ. அந்தாதி	39
7.	திருநியமம்	பட்டினத்தார்	திரு. வே. க. திரு. அ.	61
8.	வில்வலம்	,,	,	64
9.	திருக்காரிக்கரை	,,	,,	65

தேவாரத்தில் இல்லாத 11ஆம் திருமுறையில் வரும் மலைப் பெயர்

1.	பொதிக மலை	பட்டினத்தார்	திரு ஏக. அந்தாதி	56
2.	திருகூட மலை	,,	,,	57
3.	மந்திர மலை	,,	,,	58
4.	கருங்குன்றம், வெண்ணெய்மலை, நீலமலை, கழுகுமலை.	,,	,,	59

பதினொராந்திருமுறையில் வரும் முதல் சிற்றிலக்கிய வகைகள்

வரிசை எண்	இலக்கிய வகை	நூற்பெயர்	ஆசிரியர்	காலம்
1	சீட்டுக்கவி	திருமுகப்பாசுரம்	ஆலவாயுடையார்	கி. பி. 8ஆம் நூற்றாண்டு
2	பதிகங்கள்	திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்-1 ஷ்டி 2	காரைக்காலம்மையார்	கி. பி 5ஆம் நூற்றாண்டு
3	இரட்டை மணிமாலை	திருவிரட்டை மணிமாலை	காரைக்காலம்மையார்	கி. பி. 5ஆம் நூற்றாண்டு
4	அ) அந்தாதி	அற்புதத்திருவந்தாதி (வெண்பா)	காரைக்காலம்மையார்	கி. பி. 5 ஆம் நூற்றாண்டு
	ஆ) அந்தாதி	பொன்வண்ணத்தந்தாதி (கட்டளைக்கலி)	சேரமான்பெருமாள் நாயனார்	கி. பி. 8அம் நூற்றாண்டு
	இ) அந்தாதி	இருபதிகளை இணைத்துப்பாடல் கயிலைபாதி-காளத்திபாதி	நக்கீரதேவநாயனார்	கி. பி. 6ஆம் நூற்றாண்டு
5	மும்மணிக்கோவை	திருவலஞ்சுழி மும்மணிக்கோவை	நக்கீரதேவநாயனார்	கி. பி 6ஆம் நூற்றாண்டு
6	உலா	திருக்கைலாய ஞானஉலா	சேரமான்பெருமாள் நாயனார்	கி. பி. 8ஆம் நூற்றாண்டு
7	* எழுபது	திருவீங்கோய்மலை எழுபது	நக்கீரதேவநாயனார்	கி. பி. 6ஆம் நூற்றாண்டு

8	திருவெழுகூற்றிருக்கை	திருவெழுகூற்றிருக்கை	நக்கீரதேவநாயனார்	கி. பி. 6ஆம் நூற்றாண்டு
9	தேவபாணி	பெருந்தேவபாணி	நக்கீரதேவநாயனார்	கி. பி. 6ஆம் நூற்றாண்டு
10	* கோபப்பிரசாதம்	கோபப்பிரசாதம்	நக்கீரதேவநாயனார்	கி பி. 6 ஆம் நூற்றாண்டு
11	* கார்எட்டு	கார்எட்டு	நக்கீரதேவநாயனார்	கி. பி. 6ஆம் நூற்றாண்டு
12	போற்றிக்கலி	போற்றிக்கலி வெண்பா	நக்கீரதேவநாயனார்	கி பி. 6 ஆம் நூற்றாண்டு
13	ஆற்றுப்படை	திருமுருகாற்றுப்படை	நக்கீரர்	கி. பி. 2ஆம் நூற்றாண்டு
14	மறம்	திருமறம்	நக்கீரதேவநாயனார்	கி பி 6ஆம் நூற்றாண்டு
15	நான்மணிமாலை	கோயில் நான்மணிமாலை	பட்டினத்தார்	கி பி. 10ஆம் நூற்றாண்டு
16	ஒருபா ஒருபஃது	திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது	பட்டினத்தார்	கி பி. 10 ஆம் நூற்றாண்டு
17	* உலாமாலை	ஆளுடையபிள்ளையார் திருவுலாமாலை	நம்பியாண்டார்நம்பி	கி.பி. 0ஆம் நூற்றாண்டு இறுதி
18	* ஏகாதசமாலை	திருஏகாதசமாலை	நம்பியாண்டார்நம்பி	கி பி. 10ஆம் நூற்றாண்டு

* இக்குறியிட்ட 5 இலக்கியவகை பற்றிப் பாட்டியல் இலக்கண நூல்களில் குறிப்பில்லை. இத்தொகையில் 21-பிரபந்தங்கள் உள; இவற்றில் முதல் இலக்கியங்கள்-19 என்பதாம்.

வரிசை எண்	உறுப்புக்கள்	நந்திக்கலம்பக உறுப்புக்கள்	திருவரங்கக்கலம்பக உறுப்புக்கள்	ஆளுடையபிள்ளையார் கலம்பக உறுப்புக்கள்
1	ஒரு போகு	உண்டு	உண்டு	உண்டு
2	வெண்பா	உண்டு	உண்டு	உண்டு
3	கட்டளைக்கலி	உண்டு	உண்டு	உண்டு
4	குருகு விடுதூது	உண்டு	உண்டு	குருகுடன் இறங்கல்
5	புயவகுப்பு	உண்டு	உண்டு	இல்லை
6	வாடைக்குத் தலைவி இரங்கல்	உண்டு	உண்டு	வாடைக்கு அஞ்சல்
7	தோழி, கார் வரவு கூறல்	உண்டு	உண்டு	உண்டு
8	மடல்	உண்டு	இல்லை	உண்டு
9	தலைவிமாலை பெறாமல் வருந்தல்	உண்டு	உண்டு	அந்திக்கு வருந்தல்
10	பாண்	உண்டு	உண்டு	உண்டு
11	ஊசல்	உண்டு	உண்டு	இல்லை
12	காலம்	உண்டு	கால மயக்கு	உண்டு

13 தழையைப் புகழ்தல்	உண்டு	தழை	உண்டு
14 சம்பிரதம்	உண்டு	உண்டு	உண்டு
15 மதங்கியார்	உண்டு	மதங்கு	உண்டு
16 மறம்	உண்டு	உண்டு	உண்டு
17 புள்ளோடு இரங்கல்	உண்டு	உண்டு	கிளியோடு இரங்கல்
18 நிலவைப் பழித்தல்	உண்டு	இல்லை	உண்டு
19 மடக்கு	இல்லை	உண்டு	உண்டு
20 ஊர்	உண்டு	உண்டு	இல்லை
21 சித்து	இல்லை	உண்டு	இல்லை
22 கைக்கிளை	உண்டு	உண்டு	உண்டு
23 கையுறைமுத்தம்	இல்லை	உண்டு	இல்லை
24 களி	இல்லை	உண்டு	உண்டு
25 குறம்	இல்லை	உண்டு	இல்லை
26 மேகவிடுதூது	உண்டு	உண்டு	இல்லை
27 தவம்	இல்லை	உண்டு	உண்டு
28 அம்மானை	இல்லை	உண்டு	இல்லை

பதினொராந்திருமுறையில் வரும் முக்கிய புராணக் கதைகள்

1 சிவபெருமான் மதியைச் சடைமேல் தாங்கல்
2 சிவபெருமான் திரிபுரம் எரித்தவன்
3 ஆலாலம் உண்ட கண்டத்தான்
4 மங்கையைப்பங்கில் உடையவன்
5 அனல் ஏந்தி ஆடுகின்றவன்
6 அயன், மால் காணாதவன்
7 இறைவன் மறைதந்தவன்
8 கூற்றுவனை உதைத்தவன்
9 திருமால் நான்முகன் காணாத உருவினன்
10 அருச்சுனனுக்குப்பாசுபதம் ஈந்தவன்
11 உமையை இடப்பாகமாகக் கொண்டவன்
12 காமனைக் கடிந்தவன்
3 தக்கன் வேள்வி அழித்தவன்
14 பிரமன் சிரங்கொய்தவன்
15 பகலவன் பற்களைத் தகர்த்தவன்
16 இராவணன் கைலை எடுத்தபோது விரல் நசுங்கச் செய்தவன்
17 சலந்திரனைக் கொன்றவன்
18 பெருவிடையான்
19 நெற்றிக்கண்ணன்
20 சண்டேசுவரர்க்காகத் தந்தையைக் கடிந்தவன்
21 கபாலத்தில் பலி ஏற்பவன்
22 இடப்பாகத்தில் திருமாலைக்கொண்டவன்
23 கல்லாலின் கீழ் இருந்தவன்
24 அக்குமணி ஆரம் பூண்டவன்
25 சாமகானம் பாடுகிறவன்
26 திருமாலுக்குச் சக்கரம் வழங்கியவன்
27 ஐந்துமுகம் உடையவன்

28 சுடுகாட்டில் ஆடுபவன்

29 திருமாலே சிவனுக்கு விடையாக உள்ளான்

30 துர்க்கை கணவன்

31 கணபதி, அரக்கனை வென்றவன்

32 கணபதி மேருமலையில் பாரதக்கதையை எழுதியவன்

33 மாங்கனிபெற, முருகன் உலகை வலம்வந்தான்

34 இறைவன் எண் தோளான்

35 திருமாலின் தங்கை, உமை

36 விடையைக் கொடியாக உடையவன் சிவன்

37 முயலகன் வருந்த சிவன் ஆடியது

38 சிவன் நரசிங்கமூர்த்தியைச் சிம்புளாய் இருந்து வெல்லல்

39 திருமால் சிவனுக்கு ஏறாக இருத்தல்

40 சிவபெருமான் அர்த்தநாரீசுவரவடிவு உடையவன்

41 திருமாலின் வராக அவதாரம்

42 சிவனுக்கு அயன் சாரதியாக வருதல்

துணைநூற் பட்டியல்

(தேர்ந்தெடுக்கப் பெற்ற அகரநிரல்)

தமிழ் நூல்கள்:

1 அரவிந்தன், மு. வை, உரையாசிரியர்கள், மணிவாசகர் நூலகம், சிதம்பரம் 1968.

2 அருணாசல முதலியார், உ., (உ. ஆ.), அற்புதத் திருவந்தாதி திருவிரட்டை மணிமாலை, சாது அச்சுக்கூடம், சென்னை - 1930.

3 அருணாசலம், ப., பக்தி இலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1935.

4 அருணாசலம், மு., சைவசமயம், பாரதி நிலையம், சென்னை 1969.

5 அருணாசலம், மு., தமிழ் இலக்கிய வரலாறு, 9, 11, 12, 14 15-ஆம் நூற்றாண்டு, காந்திவித்தியாலயம், திருச்சிற்றம்பலம்

6 அனவரதவிநாயகம் பிள்ளை, எஸ். தமிழ்ப்பெருமக்கள், எம் ஆதி அண்டு கம்பெனி, சென்னை, 1921.

7 ஆறுமுக நாவலர், (ப.ஆ.)., திருமுருகாற்றுப்படை, சென்னை

8 இராகவையங்கார், மு., சாஸனத் தமிழ்க்கவி சரிதம் 1958.

9 இராசமாணிக்கனார். மா., சைவசமய வளர்ச்சி, பாரி நிலையம் சென்னை, 1972.

10 இராசமாணிக்கனார், மா., தமிழ் இலக்கண இலக்கிய கால ஆராய்ச்சி, ஔவை நூலகம், சென்னை-1

11 இராசமாணிக்கனார், மா., பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சென்னைப் பல்கலைக் கழகம். 1970.

12 இராமசாமிப் புலவர், சு. ஆ., (உ. ஆ.) பதினொராந்திரு-முறை, கழகம், சென்னை, 1971.

13 இராமநாதன், அரு, (ப. ஆ) சித்தர் பாடல்கள், பிரேமா பிரசுரம், சென்னை, 1968.

14 இராமலிங்கத் தம்பிரான், (உ. ஆ.) வெண்பாப்பாட்டியலும் வரையறுத்த பாட்டியலும், கழகம், சென்னை, 1969

15 கந்தையா பிள்ளை, ந.சி., தமிழ் இலக்கிய அகராதி, கழகம், சென்னை-1, 1952.

16 கலியாணசுந்தரனார், திரு. வி. (உ.ஆ.) காரைக்காலம்மை-யார் திருமுறை, பாலன் பதிப்புக் கழகம், சென்னை, 1947

17 கோவிந்தராசமுதலியார், கா. ர., (உ.ஆ.) பன்னிருபாட்டியல் கழகம், சென்னை-1, 1970

18 கோவிந்தன், கா., சங்கத்தமிழ்ப் புலவர் வரிசை, கழகம் சென்னை-1 1954.

19 சதாசிவ செட்டியார், கயப்பாக்கம், (உ. ஆ.) திருக்கைலாய ஞானஉலா, கழகம். சென்னை-1, 1925.

20 சதாசிவப் பண்டாரத்தார், டி. வி. இலக்கிய ஆராய்ச்சியும் கல்வெட்டுக்களும் தொல்காப்பியர் நூலகம், சென்னை-14, 1961.

21 சதாசிவப் பண்டாரத்தார், தமிழ்இக்கிய வரலாறு கி. பி. 250 கி. பி. 600, அ. ப. கழகம், 1950,

22 சாமிநாததேசிகர், (உ. ஆ.) மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, கலாரத்தினாகரம் அச்சுக்கூடம், சென்னை, 1976

23 சாமிநாதையர், உ. வே. சா. பத்துப்பாட்டு, நச்சர் உரை, சென்னை, 1956.

24 சுப்பிரமணிய ஐயர், ஏ.வி., தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, பாரி நிலையம், சென்னை, 1977.

25 சுப்பிரமணிய பிள்ளை, கா., இலக்கிய வரலாறு, கழகம், சென்னை 1953

26 சுப்பிரமணிய பிள்ளை, கா., (உ. ஆ.) திருமுருகாற்றுப்படை -கந்தா கலிவெண்பா, வெ பெரி பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியார் வெளியீடு, பாகனேரி, 1940.

27 சுப்பிரமணிய பிள்ளை, கா., பட்டினத்தடிகள் வரலாறும் நூலாராய்ச்சியும், சென்னை, 1973.

28 சுப்பிரமணிய முதலியார், சி. கே., காரைக்காலம்மையார் புராணமும் அருணூல்களும், கோவைத் தமிழ்ச் சங்கம், கோவை. 1958.

29 சுப்பிரமணியன், ச. வே. இலக்கணத் தொகை யாப்பு பாட்டியல், சென்னை, 1978

30 செயராமன், ந. வீ., உலா இலக்கியங்கள், மணிவாசகர் நூலகம். சிதம்பரம், 1966.

31 செயராமன், ந. வீ , சிற்றிலக்கியச் செல்வங்கள், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1966.

32 சேதுரகுநாதன், (ப. ஆ.) முத்தொள்ளாயிரம், கழகம், சென்னை, 1952.

33 சைவசித்தாந்த மகாசமாஜம், பதினொராந்திருமுறை, சென்னை, 1933

34 சைவசித்தாந்த மகாசமாஜம். சிவஞான சித்தியார், சென்னை, 1973.

35 சொக்கலிங்கன், இராய. திருத்தலப் பயணம், அழகப்பா அறநிலையம், காரைக்குடி, 1966

36 சோமசுந்தரனார், பொ. வே. (உ. ஆ.) பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடல்கள், கழகம், சென்னை.

37 சோமலெ, செட்டிநாடும் செந்தமிழும், பாரிநிலையம், சென்னை, 1960.

38 தண்டபாணி தேசிகர், ச., நக்கீரர், அ. ப. க. 1973.

39 தருமபுர ஆதீனம், திருவாசகம், தருமபுரம், 1949.

40 திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருவுந்தியார், சென்னை, 1967.

41 திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பதினொராந்திருமுறை, சென்னை, 1971.

42 திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் பன்னிரு பாட்டியல், சென்னை, 1970.

43 திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், தொல்காப்பியம் (பேராசிரியம்), சென்னை, 1959.

44 திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், முத்துவீரியம், சென்னை.

45 திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம், அம்மையார் திருமுறை, ஸ்ரீ வைகுண்டம், 1957.

46 திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம், திருமந்திரம், ஸ்ரீவைகுண்டம், 1976.

47 திருப்பனந்தாள், ஸ்ரீகாசிமடம், திருமுறைகண்ட புராணம், ஸ்ரீவைகுண்டம், 1950.

48 துரைசாமிப் பிள்ளை, ஔவை. சு., சைவ இலக்கிய வரலாறு அ. ப. க. சிதம்பரம், 1958.

49 துரைசாமிப் பிள்ளை, ஔவை, சு., தமிழ் நாவலர் சரிதை, கழகம், சென்னை, 1949.

50 தூரன், பெ., (ப. ஆ.) கலைக்களஞ்சியம், தொகுதி-3, & 6, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை.

51 தெய்வசிகாமணிக் கவுண்டர், (ப. ஆ.), பஞ்சமரபு, ஈரோடு, 1973.

52 நடராஜன், நவாலியூர், வடமொழி இலக்கிய வரலாறு. சங்கீதா பதிப்பகம், சென்னை, 1979.

53 பாரதி பிரசுராலயம், பாரதியார் நூல்கள், சென்னை, 1940.

54 மகாதேவ யோகியார் அ, (ப ஆ) பட்டினத்தடிகள் திருப் பாடல் திரட்டு, ந. இரத்தின நாயக்கர் அன் சன்ஸ், சென்னை.

55 மர்ரே அன் கம்பெனி, கல்லாடம், சென்னை, 1957.

56 மாணிக்கம். வ சுப, இலக்கிய விளக்கம், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1972.

57 முத்துச்சண்முகன், நிர்மலாமோகன், சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வகையும், முத்து பதிப்பகம் மதுரை 1979.

58 வடிவேலுச்செட்டியார் கோ., (ப.ஆ) திருமுருகாற்றுப்படை பரி. உரை, 1924.

59 வடிவேலு முதலியார், தி, (ப ஆ) திருவெண்காட்டடிகள் புராணம் என்னும் பட்டினத்துப் பிள்ளையார் புராணமூலம், சென்னை 1915

60 வரதராசன் மு., இலக்கிய மரபு, பாரிநிலையம், சென்னை, 1960.

61 வரதராசன், மு., தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அகாதெமி, புதுதில்லி, 1972.

62 வெள்ளைவாரணன், க., பன்னிரு திருமுறை வரலாறு முதற் பகுதி, அ ப க. சிதம்பரம், 1962.

63 வெள்ளைவாரணன், க. பன்னிருதிருமுறை வரலாறு, இரண்டாவது பகுதி, அ. ப. க., சிதம்பரம், 1969.

64 வேங்கடசாமி நாட்டார், ந. மு., கபிலர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், 1936.

65 வேங்கடராஜுலு ரெட்டியார், கபிலர், மதறாஸ் யுனிவர் சிட்டி, சென்னை, 1936.

66 வேங்கடாசலம்பிள்ளை, ஆர். (உ. ஆ.), காரைக்காலம்மை யார் திருமுறை, பெ. ராம. சித. சிதம்பரம் செட்டியார் வெளியீடு, நச்சாந்துபட்டி, 1942.

67 வையாபுரிப் பிள்ளை, எஸ்., இலக்கிய தீபம். பாரி நிலையம், சென்னை, 1955.

68 ஜகந்நாதன். கி. வா. திருமுருகாற்றுப்படைவிளக்கம், அமுத நிலையம், சென்னை-1973.

இதழ்கள் :

மதுரைத் தமிழ்ச் சங்கம், செந்தமிழ் தொகுதி-3, மதுரை.
மதுரைத் தமிழ்ச் சங்கம், செந்தமிழ் தொகுதி-15, மதுரை.

II. ஆங்கில நூல்கள்

1	Abercrombie,	Principles of Literary Criticism.
2.	Lowes,	Convention and Revolt in Poetry.
3.	Narayana Iyer, C. V.	Origin and Early History of Saivaism In South India.
4.	Richards,	Principles of Literary Criticism.
5.	Ridley,	Poetry and Ordinary Reader
6.	Tagore, Rabindranath,	Sadhana
7.	Winchester.	Some Principles of Literary Criticism

நூற்பொருள் தொடர்பாக வெளியாகி உள்ள நூல்கள்

1 இராமநாதப்பிள்ளை. ப (உரை) பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடல்கள் (முதற்பகுதி) கழகம் 1967

2 இராமலிங்கம், ந. (குறி) அற்புதத்திருவந்தாதி, காரைக்கால், 1967.

3 கண்ணன் அடிகள், ச. (கூற்றுப்படையுடைக்கும்) திருமுருகாற்றுப்படை, அன்புநெறிக்கழகம், மதுரை.

4 கண்ணப்ப முதலியார், பாலூர், பொய்யடிமையில்லாத புலவர் யார்? வி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ், சென்னை 1958,

5 ஷை ஷை திருஈங்கோய் மலை எழுபது (விளக்கம்) தமிழ்ப் புத்தகாலயம், சென்னை-14 1967

6 கல்லையா, க. சி. நமது பண்பாடு-''காரைக்காலம்மையார்''-தமிழ்ப் புத்தகாலயம் சென்னை, 1973.

7 கோதண்டபாணிப் பிள்ளை, கு. திருமுருகாற்றுப்படைத் திறன், கழகம், சென்னை, 1972.

8 கோபாலகிருஷ்ண பிள்ளை, ஸி. (நாகை) நக்கீரர், லலிதா விலாஸ புத்தகசாலை, 1915.

9 கோவிந்தசாமி, மு. ஔவையாரும் நக்கீரரும், பாரிநிலையம், சென்னை. 1968.

10 சகந்நாதன் கி. வா. வழிகாட்டி, அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை, 1947.

11 சாமி. முரா. நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படை, மூவர் பதிப்பகம், காரைக்குடி, 1966.

12 சாமி. சிதம்பரம், பட்டினத்தார் – தாயுமானவர் பாடல் பெருமை, இலக்கிய நிலையம், சென்னை - 24.

13 சொக்கலிங்கஞ் செட்டியார், அ சொ. (பதி) பட்டினத்தார் பாடல்கள் (குறிப்புடன்) இலவச வெளியீடு காரைக்குடி. 1980.

14 சோமசுந்தரனார். பொ வெ. (உரை) பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடல்கள், 2ஆம் தொகுதி. கழகம். 1967.

15 பட்டுச்சாமி ஓதுவார். தி. - அம்மையார் அற்புதத்திருவந்தாதி.

16 வேங்கடராமையா, கே. எம். அம்மையார் அற்புதத்திருவந்தாதி, ஸ்ரீ காசிமடத்துப் பதிப்பு. 1949.



பேராசிரியர் வெ. சு. அழகப்பனார் காரைக்குடி சுப்பிரமணியன் செட்டியார் - கண்ணம்மை ஆச்சிக்கு மகனாக 10-1-1934ல் தோன்றியவர். தாயாரின் தாலாட்டே தம் தமிழ் நடைக்கு ஊற்றமென நினைப்பவர்.

காரைக்குடி மீ. சு. உயர்நிலைப் பள்ளியும், அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் இவர் பயின்ற கல்விக் கோயில்கள். "புறநானூற்றில் அரசியல் சமுதாய வாழ்வு" என்ற ஆய்விற்காக எம். லிட். பட்டம் பெற்றவர் இந்நூல் பி. எச்டி., பட்ட ஆய்வாகும். இவர்தம் தமிழ்ப்பணி சமய ஈடுபாட்டிற்காகக் குன்றக்குடி அடிகளாரவர்கள் 'தமிழாகரர்' என்ற பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரி முதல்வராக ஒன்பது ஆண்டுகள், தேவகோட்டை சேவுகன் அண்ணாமலை கல்லூரி விரிவுரையாளராக ஓராண்டு, அழகப்பா கல்லூரி விரிவுரையாளராக, பேராசிரியராகத் தொடர்ந்து பதினைந்து ஆண்டுகள் பணியாற்றிய இவர், எம். பில்., பி. எச்டி., ஆய்வாளர்க்கு வழி காட்டியாக விளங்குகிறார். இப்பொழுது அழகப்பா பல்கலைக் கழகத்தில் பணிபுரிகிறார். இயல்பான நகைச்சுவையுணர்வு, கல்விச் சிந்தனை, ஆய்வு நோக்கு, கவிதை மனம், இவர்தம் சிறப்பியல்புகள்.

சென்னைப் பல்கலைக் கழக ஆளவை மன்றம், தமிழகப் புலவர் குழு, அண்ணாமலைப் பல்கலைக் கழகக்கீழைக் கலைத்துறைப்புலம் ஆகியவற்றில் உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். பல பல்கலைக் கழகங்களில் கல்வித் தொடர்புடையவர்.

'சிலம்பின் முதல் ஒலி' 'சமயக் கட்டுரை மாலை' என்னும் நூல்கள் இவர்தம் புலமைக்குச் சான்றுபகர்வன.

இவர் தம் தமிழ்ப்பணி வளர்வதாக!.

பேராசிரியர், கா. முருகப்பன்,
தமிழ்த்துறை,
அழகப்பா அரசு கலைக்கல்லூரி,
காரைக்குடி.